

இறைவன் விரும்பும்

இனிய இல்லறம்

‘வீடு ஞானத்தினால் கட்டப்பட்டு
விவேகத்தினால் நிலைநிறுத்தப்படும்’ (நீதி.4:13).

டாக்டர் T. P. சாமுவேல் ஸ்டுவர்ட்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

இறைவன் விரும்பும்
இனிய இல்லறம்

Dr. T. P. சாமுவேல் ஸ்ரூவர்ட்

B.Sc.; B.D.; CAIIB; D. Min.

"இறைவன் விரும்பும் இனிய இல்லறம்"

ஆசிரியர் – அறிவர் T. P. சாமுவேல் ஸ்டுவர்ட்

பதிப்புரிமை © ஆசிரியருக்கே உரியது

All rights reserved. No part of this publication may be reproduced or transmitted in any form or by any mean-graphic, electronic, or mechanical, including photo copying, recording, or information storage and retrieval systems-without written permission from the publisher.

முதல் பதிப்பு 2008
2000 பிரதிகள்

Published by:

'BIBLE FAITH MINISTRY'
No.24G,
Nandagopalapuram West,
Tuticorin - 628 002.
Tamilnadu,
India.

E-mail : tpsstuart@gmail.com

Printed by : BERACHAH PRINT SERVICE, Madurai - 625 006.
e-mail : berechahprintservice@gmail.com

இனிது இனிது இல்லறம் இனிது

(By T. P. சாமுவேல் ஸ்டுவர்ட்)

இனிது இனிது மானுட வாழ்க்கை இனிது, அதனிலும்
இனிது, இசைவுடனமைந்த இனிய இல்லறம்.

வாய்த்த இல்லறம், இன்புற இனிதாயமைவதும், அதுவே
பொய்த்த கனவாய் பொசுங்கிப்போவதும், அவரவர் செயலால்.

இனிது இனிது மக்கட் பேறு இனிது, அதனிலும்
இனிது, நல்வழி வாழும் நல்மக்கள்.

ஊட்டி வளர்த்த ஆசைமக்கள் நல்லோராவதும், அவர்களே
ஈட்டியாய் மாறி இதயந்தகர்ப்பதும், ஈன்றோர் வளர்ப்பால்.

இனிது இனிது இறைவேண்டல் இனிது, அதனிலும்
இனிது, இல்லத்தில் இணைந்து புரியும் இறைவழிபாடு.

இணைந்து இறைஞ்சும் இல்லத்தின் மக்கள் இன்பமாய்
இணைந்தேயிருப்பர் இறையருளால், என்றென்றுமே.

அர்ப்பணம்

கனிதரும்
திராட்சைக் கொடிபோல்
எங்களுடைய வீட்டை இனிய
இல்லமாக்கிக்கொண்டிருக்கும்
என்னுடைய அன்பு மனைவி
திருமதி சுதந்திரகுமாரிக்கு

ஆசிரியர்

பொருளடக்கம்

ஆசியுரை : பேராயர், தூத்துக்குடி–நாசரேத் திருமண்டலம் vii

வாழ்த்துரை : கன்மலை பத்திரிக்கை ஆசிரியர் viii

என்னுரை x

புகுமுன் ஒரு வார்த்தை xiv

1. இறைவனே குடும்ப அமைப்பின் நிறுவனர் 1
2. இதயங்கள் இணையும் இல்லம் 9
3. மனிதன் தன் வாழ்க்கையில் சந்திக்கும் மூன்று குடும்பங்கள் 15
4. இந்த இரகசியம் பெரியது 23
5. ஒருவருக்கொருவர் அடிமைகள் 33
6. குடும்பத் தலைவரின் தகுதிகள் 43
7. கணவருக்குச் சில ஆலோசனைகள் 51
8. பெண் வாழும் மூன்று பாத்திரங்கள் 61
9. இல்லத்தை ஆளும் இல்லாள் (மனைவி) 69
10. கணவன் வீட்டில் வாழப்போகும் பெண்ணே! 79
11. மகிழ்ச்சியான இல்லறம் 93
12. மகிழ்ச்சியான இல்லத்தின் ஐந்து ஆதார வார்த்தைகள் 101
13. ஆரோக்கிமான குடும்பத்திற்கு ஏழு வழிகள் 107
14. குடும்ப உறவை முறிக்கும் அபாயங்கள் 117
15. குடும்ப உறவை முறியாமல் காக்கும் உபாயங்கள் 129
16. வாழ்க்கையின் நோக்கமென்ன? 135
17. குடும்ப வரவு செலவு – 1 143
18. குடும்ப வரவு செலவு – 2 151

19. குடும்ப வரவு செலவு – 3 155

20. குடும்ப வரவு செலவு – 4 (வீட்டைக் கட்டிப்பார்) 159

21. முதிர் வயதுள்ள பெற்றோரைக் கனம் பண்ணுங்கள் 165

22. முதுமையை எதிர்பாருங்கள் – எதிர்கொள்ளுங்கள் 177

23. குழந்தை வளர்ப்பு – 1 (அடிப்படை விதிகள்) 189

24. குழந்தை வளர்ப்பு – 2 (கரணம் தப்பினால் மரணம்) 199

25. குழந்தை வளர்ப்பு – 3 (உள்ளத்தை காயப்படுத்த வேண்டாம்) 205

26. பொறுப்பான பெற்றோர் – (ஒழுக்கம்) 215

27. பெற்றோரின் பொறுப்பு – (கோபம்) 221

28. குழந்தைக் கொடுமை (Child Abuse) 229

29. பெற்றோர்கள் அறிய வேண்டிய உளவியல் –1 (குழந்தைகளின் மனநிலை) 237

30. பெற்றோர்கள் அறிய வேண்டிய உளவியல் –2 (இளமையின் இயல்புகள்–Adolescence) 245

31. பெற்றோர்களுக்குச் சில ஆலோசனைகள் 251

32. வயதுவந்த வாழ்க்கைக்கு உங்கள் பிள்ளைகளை ஆயத்தப்படுத்துங்கள் (Preparing your children for adulthood) 259

33. வாலிபர்களுக்குச் சில ஆலோசனைகள் 267

34. வாகனங்களும் பிள்ளைகளும் 283

35. கணினியும் பிள்ளைகளும் 289

36. மொபைல் போன்களும் பிள்ளைகளும் (Mobile / Cellular Phones) 297

முடிவுரை 305

வெற்றியான இல்லற வாழ்க்கைக்கு 30 ஆலோசனைகள் 313

✞

Jesus, the humble suffering servant is the powerful conquering king and Judge

Church of South India

THOOTHUKUDI - NAZARETH DIOCESE

The. Rt. Rev. Dr. J.A.D. Jebachandran, B.Sc.,M.A.,B.D.,D.D.,

Bishop in Thoothukudi - Nazareth Diocese
Chairman - TND Institutions
Chairman & Manager - TND Colleges

Bishop's House
111/32 T, State Bank Colony
Thoothukudi - 628 002

Office Ph : 0461 - 2345430
Resi Ph : 0461 - 6536555
Fax : 0461 - 2346911
Mobile : 9443615257
E.mail : bishoptnd@dataone.in

ஆசியுரை

அறிவர் **T. P.** சாமுவேல் ஸ்டூவர்ட் எழுதியுள்ள **"இறைவன் விரும்பும் இனிய இல்லறம்"** என்ற புத்தகத்திற்கு ஆசியுரை வழங்கு வதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

கடவுளே, 'குடும்பம்' என்ற அமைப்பை உருவாக்கியவர். இப்புத்தக ஆசிரியர், சிறந்த குடும்பமாகத் திகழ்வதற்கு வேண்டிய ஆலோசனை களையும், குடும்ப அங்கத்தினர்கள் ஒவ்வொருவரின் கடமைகளையும் திருமறைவாயிலாக உணர்த்துகிறார்.

ஆசிரியர் தனது முப்பத்தைந்து ஆண்டுகால இல்லற வாழ்க்கை அனுபவங்களையும், பல்வேறு நூல்களின் கருத்துக் களையும் திருமறை அடிப்படையில் ஒன்றிணைத்துச் சிறப்பாக எழுதியுள்ள "இறைவன் விரும்பும் இனிய இல்லறம்" என்ற இப்புத்தகம் மகிழ்ச்சியை அளிக்கிறது; இனிய இல்லற வாழ்விற்கு வேண்டிய மேலான ஆலோசனைகளை வழங்கியிருப்பது பாராட்டிற்குரியது. மேலும் இப்புத்தகம் இக் காலத்திற்கு மிகவும் இன்றியமையாததாகும்.

இப்புத்தகத்தை எழுதுவதற்கும், வெளியிடுவதற்கும் ஆசிரியர் எடுத்துக்கொண்டுள்ள முயற்சிகளைப் பாராட்டுகிறேன். ஆசிரியர் தொடர்ந்து அனேக புத்தகங்கள் வெளியிட ஆண்டவர் உதவி செய்வாராக. இப்புத்தகத்தை யாவரும் வாங்கிப் படித்துப் பயனடைவீர்களாக.

> *"கணவர் தம் தாய் தந்தையை விட்டுவிட்டு தம் மனைவி யுடன் ஒன்றித்திருப்பார், இருவரும் ஒரே உடலாயிருப் பார்கள்"* எபேசியர் **5:31.**

பேராயர்
தூத்துக்குடி – நாசரேத் திருமண்டலம்

"விடுதலை நிலையில் வாழ்வதற்கென அழைக்கப்பட்டீர்கள்...அன்பினால் ஒருவருக்கொருவர் தொண்டு செய்யுங்கள்" கலா.5:13.

You are called to be free ... Let love make you serve one another (Gal

வாழ்த்துரை

Rev. P. செல்லத்துரை
ஆசிரியர்,
"கன்மலை"

அன்னை தெரசா நகர்
தூத்துக்குடி.
15.05.2008

"இறைவன் விரும்பும் இனிய இல்லறம்" என்ற சிறந்த புத்தகத்தைப் படித்திடும் பாக்கியம் பெற்றவர்களை வாழ்த்திடுவதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

இப்புத்தகத்தை எழுதிய **Dr. T. P.** சாமுவேல் ஸ்டுவர்ட் அவர்களை வாழ்த்திட எனக்குக் கிடைத்த வாய்ப்புக்காக இறைவனுக்கு நன்றி சொல்கிறேன்

இப்புத்தகத்தில் இடம்பெற்றுள்ள கட்டுரைகளில் பெரும்பகுதி "குடும்ப நலம்" என்ற தலைப்பில் "கன்மலை" இதழில் வெளிவந்து வாசகர்களின் பாரட்டைப் பெற்றவை. இப்போது கூடுதல் விளக்கங்களுடன் விரிவாகப் புத்தக வடிவில் வெளி வந்துள்ளது.

கன்மலை இதழின் ஆசிரியராக இக்கட்டுரைகளை வாசித்தவன்; இப்பொழுது புத்தக வடிவில் வார்த்தை வார்த்தையாக ஆழ்ந்து வாசித்தவன்; எனவே ஆசிரியரை வாழ்த்தாமல் இருக்க முடியாது. இப்புத்தகத்தை வாசிப்பவர்களையும் வாழ்த்தாமல் இருக்கமுடியாது.

"படிப்பாளிதான் ஒரு படைப்பாளியாக முடியும்" இவ்வார்த்தை, இந்நூல் ஆசிரியரைப் பொருத்தவரை முற்றிலும் உண்மை. இப் புத்தகத்தில் எடுத்தாளப்பட்டுள்ள மேற்கோள்களும் மற்றும் எடுத்துக்காட்டுகளும் இதற்குச் சான்று.

ஆசிரியர், வங்கியில் அதிகாரியாகப் பணியாற்றியவர்; இறையியல் கற்றவர். இவர் இப்புத்தகத்தை இளமையில் எழுதவில்லை; வாழ்க்கை அனுபவம் பெற்ற முதுமையில்தான் இதனை எழுதியுள்ளார்.

எந்த வயதினருக்கும் பயன்படும் கட்டுரைகள் இப்புத்தகத்தில் உண்டு; எல்லா வயதினருக்குப் இந்நூல் பயன்படும்; எந்தப் பின்னணியத்தில் வாழ்வோருக்கும் இப்புத்தகம் பயன்படும்.

சமையல் கலை, விளயாட்டுக் கலை, தையல் கலை, தோட்டக் கலை சார்ந்த புத்தகங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன அல்லவா? அதுபோன்று இப்புத்தகம் 'வாழ்க்கைக் கலை" சார்ந்த புத்தகமாகும்.

எனவே, இப்புத்தகம் உங்கள் முன்னடியிலேயே கையேடாக இருக்கட்டும்.

தினமும் எடுத்து வாசியுங்கள்!

வாழ்க்கையைப் பயிற்சி செய்யுங்கள்!

இப்புத்தகத்தை வாசிப்பவர்களின் வாழ்க்கை "இறைவன் விரும்பும் இனிய இல்லறமாக" அமைந்திட வாழ்த்துகிறேன்.

இறை ஆசியுடன் இன்னும் பலப் புத்தகங்களைப் படைத்திட, இப்புத்தகத்தின் படைப்பாளரை வாழ்த்துகிறேன்.

ஜெபத்துடன்
பொ. செல்லத்துரை.

என்னுரை

Dr.T. P. சாமுவேல் ஸ்டுவர்ட்
B.Sc; B.D; CAIIB; D.Min.
24G, நந்தகோபாலபுரம் மேற்கு
தூத்துக்குடி – **628 002.**

தொலைபேசி : **0461–2329865**
செல் : **94864–53864**
இ–மெயில் : tpsstuart@gmail.com

இந்தப் புத்தகத்தை வாங்கியது ஒரு செலவு அல்ல;
இது நீங்கள் செய்துள்ள பயனுள்ள முதலீடு
இது உங்களுடைய வாழ்க்கையையே மாற்றும்.

இன்றைய புத்தகச் சந்தையில் (Book Market) ஒவ்வொரு நாளும் பல்லாயிரக்கணகான புத்தகங்கள் பல மொழிகளிலும் வந்து குவிந்த வண்ணமிருக்கின்றன. அனுதினமும் மலைபோல் குவியும் புத்தகங்களிலிருந்து எதை எடுப்பது – எதை விடுப்பது என்ற மலைப்பு அனைவருக்கும் வருவது சகஜம்தான். எல்லோராலும் எல்லாப் புத்தகங்களையும் காசுகொடுத்து வாங்குவது கடினம்தான். அப்படியே வாங்கினாலும் அத்தனையையும் படிக்க ஆயுசு போதாது.

சில புத்தகங்களை வாங்கிய பின்னர், காசைக்–கரியாக்கி ஏன்தான் வாங்கினோமோ என்று அங்கலாய்ப்போம். அந்தப் புத்தகங்கள் நமக்குப் பிடிக்காமலோ, அல்லது நாம் படிக்காமலோ வீட்டில் இடத்தை அடைத்துக்கொண்டிருக்கும். அப்படியானால் எந்த அடிப்படையில் புத்தகங்களைத் தெரிவுசெய்து வாங்கலாம்?

எந்த ஒரு புத்தகத்திலும், நம்முடைய வாழ்க்கைக்கு அவசியமான ஏதாவது ஒரு விஷயத்தையாகிலும் கற்றுக் கொண்டோமேயானால், அந்த புத்தகத்திற்குக் கொடுத்த கிரையம், நமது வாழ்க்கைக்குச் செய்த முதலீடு என்று கருதி மகிழலாம்.

இந்தப் புத்தகத்தில் நம்முடைய அன்றாட குடும்ப வாழ்க்கைக்குப் பயன்படும் பல விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. நான் ஆழ்ந்து ஆய்ந்து தொகுத்து வழங்கியுள்ள கருத்துக்கள், குறிப்புகள், எடுத்துக்காட்டுகள், மேற்கோள்கள் உங்களுடைய வாழ்க்கைக் கண்ணோட்டத்தையே மாற்றக் கூடியவை என்று நான் தைரியமாகக் கூறுவேன். ஏனென்றால், இந்த கட்டுரைகளை எழுதும்பொழுது நான் கற்றுக்கொண்டவைகள் அதிகம்.

இந்தக் கட்டுரைகளை எழுதுகையில், நான் பிறருக்கு ஆலோசனை வழங்கினேன் என்பதைவிட, நான் அதிகமாகக் கற்றுகொண்டேன் என்பதுதான் உண்மை. மற்றவர்களுக்கு ஆலோசனைகள் வழங்க முயலும்பொழுதுதான் என்னுடைய பலவீனங்களைப் புரிந்துகொண்டேன்; என்னுடைய அறியாமை களைத் தெரிந்து கொண்டேன். நான் எந்த அளவிற்குக் குறைவுள்ளவனாக இருந்திருக்கிறேன் என்பதை உணர்ந்து கொண்டேன். நான் எப்படியெல்லாம் இன்னும் சிறந்த மகனாக, சிறந்த கணவனாக, சிறந்த தந்தையாக, சிறந்த குடும்பத் தலைவனாக இருந்திருக்கலாம் என்பதை விளங்கிக்கொண்டேன்.

இதனை எழுதுவதற்கு, எனது 35 ஆண்டு குடும்ப வாழ்க்கை அனுபவங்களும், நான் படித்த புத்தகங்களும் – கட்டுரைகளும், எல்லாவற்றிற்கும் மேலாக பரிசுத்த வேதாகமும், கர்த்தர் எனக்கு அளித்த ஞானமும் எனக்கு உறுதுணையாக இருந்தன.

இதைப் படிக்கும் வாசகர்கள், இதிலுள்ள ஆலோசனைகளைக் கைக்கொண்டு, நான் பெற்றுள்ள பயன்களைவிட அதிகப் பயன்களைப் பெறுவார்களானால், கர்த்தர் என்னைச் சரியான கருவியாகப் பயன்படுத்தியிருக்கிறார் என்று நான் மகிழ்வேன்; நான் செய்த தவறுகளை செய்யாமலும், நான் தடுக்கி விழுந்த கற்களில் தடுக்கி விழாமலும் இருந்தால் இப்புத்தகத்தை எழுதிய நோக்கம் நிறைவேறியதாகப் பொருள்கொண்டு கர்த்தரைத் துதிப்பேன்.

திருமண பந்தத்தில் இணையவிருக்கும் எந்த ஒரு இளைஞனும் தனக்குச் சகல சௌபாக்கியங்களும், அழகுமுள்ள குணவதியான மனைவி அமையவேண்டுமென்றுதான் விரும்புகிறான். அதைப் போலவே இளம் பெண்ணும் சகலவிதத்திலும் சிறந்துவிளங்கும் வசதியுள்ள அன்பான இளைஞனே தனக்கு மணமகனாக வரவேண்டுமென்றுதான் கனவு காண்கிறாள்.

இவர்களுடைய இந்த விருப்பங்களும் கனவுகளும் நிறை வேறுவது சாத்தியமா?

எந்த ஆணானாலும் சரி, எந்தப் பெண்ணானாலும் சரி, பரிபூரணமானவர்கள் என்று யாருமே இவ்வுலகில் இல்லை; கணவனாக இருந்தாலும் சரி அல்லது மனைவியாக இருந்தாலும் சரி, மகனாக–மகளாக இருந்தாலும் சரி, சகோதர–சகோதரியாக இருந்தாலும் சரி, பெற்றோர்களாக – மாமன்–மாமியாராக இருந்தாலும் சரி – இந்த உலகில் யாருமே நிறைவுள்ளவர்கள் அல்ல என்பதைப் புரிந்துகொள்ளுங்கள் (No one is perfect in this world). இதுதான் உண்மை – கசப்பான உண்மை – நிஜமான நிஜம்.

எல்லோரும் ஏதாவதொரு வகையில் குறைவு உள்ளவர்கள் தான். இந்த நிதர்சனமான உண்மையை உணர்ந்து கொள்ளாத ஆணுக்கும் பெண்ணுக்கும் வாழ்க்கையில் ஏமாற்றமே மிஞ்சும்;

மகிழ்ச்சி கானல் நீராயிருக்கும். முரண்பாடான கருத்துக்களுள்ள போதும், புரிந்துணர்ந்தலுடன்கூடிய உடன்பாட்டுடன் வாழும் வாழ்க்கையே இன்பம் பயக்கும்.

ஆகவே, உங்கள் குடும்பத்திலுள்ளவர்களை அவர்களுடைய குறைகளைக் கடந்து நேசியுங்கள்; நீங்கள், அவர்களைக் குறைவுள்ளவர்கள் என்று கருதினாலும் பரவாயில்லை, அவர்களை நேசியுங்கள். அவர்களுடைய குறையை நிவிர்த்திசெய்ய முயலுங்கள்; ஆனால், அவர்களை நேசிப்பதில் நீங்கள் குறை வைக்காதீர்கள். இந்த விதியை உங்கள் குடும்பத்தில் அமுல்படுத்தினால், உங்கள் குடும்பம் மகிழ்ச்சியாக இருக்கும்; உங்கள் இல்லறம் இனிதாக இருக்கும் – இல்லம் இனிக்கும்.

திருமறையில் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் சகோதரர் யாக்கோபு தனது நிருபத்தில் என்ன எழுதியுள்ளார் என்று வாசியுங்கள்: **"நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரண ராயும், நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமை யானது பூரண கிரியை செய்யக்கடவது. உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாருக்கும் சம்பூரண மாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்து கொள்ளாத வருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்"** (யாக்.1:4,5).

ஞானத்தில் மட்டுமல்ல, நீங்கள் எதில் குறைவுள்ளவர்களாக இருந்தாலும் கர்த்தரிடம் கேளுங்கள். **"கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்"** (மத்.7:7) என்பது ஆண்டவரின் வாக்கல்லவா? பூரண சம்பூரணரான அவர் தமது சம்பூரணத்தி லிருந்து நீங்கள் வேண்டுவதை உங்களுக்குக் கொடுத்து உங்களை நிறைவுள்ளவர்களாக மாற்றுவார்.

இல்லறத்தைக் குறித்த அனைத்தையும் ஒரு புத்தகத்தில் அடக்குவது இயலாத காரியம். ஆயினும் இச்சிறிய நூலில் நமது நடைமுறை வாழ்க்கைக்கு அவசியமான சில பரிமாணங்களை அறிந்துகொள்ள முயற்சிப்போம்.

இப்புத்தகத்திற்கு அன்புடன் ஆசியுரை வழங்கியுள்ள தூத்துக்குடி–நாசரேத் திருமண்டலப் பேராயர் **Rt.Rev.J.A.D.** ஜெபச்சந்திரன் அவர்களுக்கு என் இயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அவர்களுடை தலைமையின்கீழ் தூத்துக்குடி–நாசரேத் திருமண்டலம் இறைப்பணியில் சிகரங்களைத் தொடவும், நிர்வாகத்தில் எடுத்துக்காட்டாயிருக்கவும் இறைமைந்தன் இயேசு கிறிஸ்துவின் ஆசி என்றும் அவர்களுக்குத் துணைநிற்பதாக.

கடந்த ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாகக் **கன்மலைப் பத்திரிக்கையில்** தொடந்து வெளிவந்த கட்டுரைகள்தான் இப்பொழுது புத்தகவடிவில் உருப்பெற்றுள்ளது.

இந்த ஆலோசனைக் கட்டுரைகளை எழுத என்னை உற்சாகப்படுத்தி, தொடர்ந்து தனது பத்திரிக்கையிலே பிரசுரித்து வந்த "கன்மலை" ஆசிரியர் **Rev. P.** செல்லதுரை அவர்களுக்கு எனது இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் புத்தகத்திலுள்ள கட்டுரைகளிலிருந்து உங்களுடைய வாழ்க்கைக்கு பயன்படும் ஏதாவது ஆசீர்வாதமான விஷயங்களைக் கற்றுக்கொண்டீர்களானால், அதற்குரிய பெருமையும் மகிமையும் என் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மலர் பாதங்களுக்கே காணிக்கையாவதாக.

கிறிஸ்துவில், உங்கள் சகோதரன்
T. P. சாமுவேல் ஸ்டுவர்ட்

புகுமுன் ஒரு வார்த்தை

இன்றைய நாட்களில், இறைவனுக்கு விரோதமான கருத்துக்கள் பரவலாகப் பரவியுள்ளன. மனிதன் இறைப் படைப்பல்லவென்றும்; பரிணாமரீதியாகக் குரங்கிலிருந்து வந்தவன் என்றும் கல்விக் கூடங்களில் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. இந்த வாதத்தினால் குரங்குகளின் உள்ளங்கள் உடைந்ததுபோனதுபோல் கற்பனையாக எழுதப்பட்ட ஆங்கிலக் கவிதையைத் தமிழாக்கம் செய்துகொடுத்துள்ளேன். இதை ஆங்கிலத்தில் எழுதியவர் யாரென்று தெரியவில்லை.

மந்தியிலிருந்து மனிதனா?
மறுக்கும் மந்திகள்

அந்தி வேளையில் மந்திகள் மூன்று தென்னந் தோப்பில்
சந்தித்தன. அவை சிந்திய மொழிகளைச் செவிமடுப்பீர் சற்றே:
ஒரு மந்தி தன்னிரு சகாக்களிடம் – “கேளுங்கள், என்
இரு அன்பர்காள், மானுடர் செப்பிய செய்தியொன்று கேட்டேன் –
மனிதர்கள் நமது வழித்தோன்றல்களாம்! – துளியும் மெய்யில்லை;
ஏனிந்த எண்ணம்; நமக்கன்றோ இது இழுக்கு” – என்றதாம்.

சான்ற மனையாள் உறவை முறித்த மந்தி நம்மிடையில்லை.
ஈன்ற செல்வங்களை இரக்கச் செய்யும் ஈனர்கள் இங்கில்லை.
பெற்ற சிறார்களைப் பரிதவிக்கவிட்டுச்செல்லும் மந்தித் தாயினை
சற்றேனும் நம்மிடை கண்பதரிது; மயக்கும் குடிபோதையும்– மாய
சிற்றின்பத்திற்காய் ஒருவருடனொருவர் சோரம்போதலும்,
பெற்றோரறியாப் பிள்ளைப் பேறும் நம்மிடையுண்டோ?

நீங்கள் இதுவரை கேளா காரியம் இன்னும் உரைப்பேன் கேளீர்:
நாம் பழுத்த பழமரத்தைச் சுற்றி என்றும் இட்டதில்லை வேலி.
நல்ல பழங்களைக் கெட்டுவிட என்றும் நாம் விட்டதில்லை.
இல்லாத எளியோர் பறித்துண்ண என்றும் நாம் தடுத்ததில்லை.
நாம் மரத்தைச் சுற்றி வேலியிடாதது ஏனென்றறிவீரோ?, பசித்தவன்
நம்மிடம் திருட நாமே தூண்டாதிருக்கத்தான் – புரிவீர் நன்று.

மந்திகள் என்றும் மறந்தும் செய்யா மற்றதும் கூறுவேன்:
அந்தி சாய்ந்தபின் சந்தில் அலைந்து ஈனகம் புரிவதில்லை;
மாற்றான் உயிர் மாய்க்க நம்மவர் மறந்தும் தொட்டதில்லை
என்றும் துப்பாக்கி, குண்டாந்தடி, கூர்கத்தி ஆயுதங்கள்.
மானிடன் கைப்பிடி மண்ணில் பிறந்ததே மெய்யான மெய்
மானுடம் நம்மின் வழித்தோன்றல் என்பது மெய்யான பொய்.

இறைவனே இப்பிரபஞ்சத்தையும், இவ்வுலகையும், அதிலுள்ள அனைத்தையும் (*தாவரங்கள் பறவைகள், மிருகங்கள், சமுத்திரத்தின் மச்சங்கள், மனிதன்*) யாவையும் படைத்தவர் என்பதைத் திருமறைத் தெளிவாகக் கூறுகிறது.

> "தேவனுடைய ஆவியானவர் என்னை உண்டாக்கினார்; சர்வ வல்லவருடைய சுவாசம் எனக்கு உயிர் கொடுத்தது" (யோபு 33:4).

> "உம்முடைய கரங்கள் என்னை உண்டாக்கி என்னை உருவாக்கிற்று" (சங்.119:73).

> "என் கருவை உம்முடைய கண்கள் கண்டது; என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும் உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தது" (சங்.139:16).

மனிதனை மண்ணிலிருந்து இறைவன் படைத்தார் என்பதையும் திருமறை திட்டவட்டமாகக் கூறுகிறது.

> "தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவ ஆத்துமாவானான்" (ஆதி.2:7).

> "களிமண்போல என்னை உருவாக்கினீர் என்பதையும், என்னைத் திரும்பத் தூளாகப்போகப்பண்ணுவீர் என்பதையும் நினைத்தருளும்" (யோபு 10:9)

> "மண்ணோடுகளுக்கொத்த ஓடாயிருந்தும், தன்னை உருவாக்கினவரோடே வழக்காடுகிறவனுக்கய்யோ!" (ஏசா. 45:9).

> "நீர் எங்களுடைய பிதா, நாங்கள் களிமண்; நீர் எங்களை உருவாக்குகிறவர், நாங்கள் அனைவரும் உமது கரத்தின் கிரியை(கள்)" (ஏசா.64:8).

மண்ணிலுள்ள கூறுகள் (Components) அனைத்தும் மனித உடலிலே காணப்படுகிறது என்பதை இன்றைய அறிவியலும் ஏற்றுக்கொள்கிறது.

திருமறையிலேயே அதிகமான எதிர்ப்பையும், தாக்குதல்களையும் சந்தித்த–சந்தித்துக்கொண்டிருக்கும் நிகழ்ச்சி இறைவனின் படைப்பின் செயல்தான்; அதிலும் முக்கியமாக மானுடப் படைப்புதான்.

சார்லஸ் டார்வின் (Charles Darwin) உயிர்களின் தோற்றம் குறித்து தன்னுடைய பரிணாமக் கொள்கையை (Evolution Theory) வெளியிட்ட பின்னர் படைப்பைக் குறித்த தாக்குதல்கள் அதிகமாயிற்று

1982ம் ஆண்டு நவம்பர் மாத *Reader's Digest* பத்திரிக்கையிலே, 'பூமியில் உயிரினங்களின் எப்படித் தோன்றியது' என்ற ஒரு கட்டுரை வெளிவந்தது. அதில் அமெரிக்க நாசா விண்வெளி ஆராய்ச்சி நிறுவன விஞ்ஞானிகள் கூறியுள்ளபடி – மனிதனை உருவாக்கத் தேவைப்படும் மூலகங்கள் களிமண்ணிலே காண்படுகின்றன என்று கூறிவிட்டு, இறுதியாக, **"உயிரினப் படைப்புகள் குறித்துத் திருமறை விவரிக்கும் விவரங்களைத் தவறென்று தள்ளுவதற்கில்லை"** என்று கூறுகிறது (According to scientists at NASA Research Center, the ingredients needed to form a human being are found in **clay**. In conclusion, the article said, ***"The Biblical scenario for the creation of life turns out to be not off the mark*** (*Reader's Digest*, November, 1982 issue p.116, article: **How Life on Earth Began**).

ஆகையால், இறைவனே இவ்வுலகத்தையும் மானுடத்தையும் படைத்து – காத்து – வழிநடத்தி வருபவர் என்கிற ஏற்புடை தளத்திலிருந்து தொடர்ந்தால்தான், இந்த நூல் உங்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும்.

குறிப்பு

இப்புத்தகத்திலுள்ள ஒவ்வொரு அத்தியாயமும் தன்னில்தானே முழுமையானவையாகும். ஆகையால் ஒவ்வொரு அத்தியாயத்தையும் வரிசையாகத்தான் வாசிக்கவேண்டுமென்று அவசியமில்லை. பிடித்த எந்த அத்தியாயத்தையும் எடுத்து வாசித்து விளங்கிக்கொள்ளத்தகுந்தாற்போல் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

1

இறைவனே குடும்ப அமைப்பின் நிறுவனர்

"புருசன் தன் தகப்பனையும் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான். அவர்கள் (கணவன்–மனைவி) இருவரும் ஒரே மாம்சமாய் இருப்பார்கள்" (ஆதியாகமம் 2:24).

கற்பனையின் வீச்சைத் தாண்டி விரிந்து பரந்துகிடக்கும் இந்த பிரபஞ்சத்தில், சூரியனைச் சுற்றி வலம் வந்துகொண்டிருக்கும் கிரகங்களிலொன்றான பூமி என்னும் கோளில் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம், இங்கு என்ன செய்துகொண்டிருக்கிறோம்?

இந்த உலகில் நாம் எதற்காக வாழ்ந்துகொண்டிருக்கிறோம்?

இவ்வுலகில் நாம் ஏன் பிறந்தோம்?

ஏன் வாழ்கிறோம்? ஏன் இறக்கிறோம்?

பிறக்கு முன்பு நாம் இருந்தோமா?

இறந்த பின்பு நாம் என்னாவோம்?

விடை தெரியவில்லையா?

பாதகமில்லை.

இவ்வினாக்களுக்கு விடைதேடித்தான் பல முனிவர்களும், ஞானிகளும் வேதாந்திகளும், சிந்தாந்திகளும் இவ்வுலக வாழ்வினைத் துறந்து, கானகம் ஏகி கடுந்தவம் புரிந்தார்கள்.

அவர்கள் விடைகண்டார்களா?

அதுதான் இல்லை. "கண்டிலேன்" என்றுதான் கதறினார்கள்.

"கண்டேன்" என்று கூறியவர்கள்கூட "விண்டிலேன்" என்று விடைகூற மறுத்தனர் – மறைத்தனர்.

ஆனால் ஒருசில காரியங்கள் நமது மானுட அறிவிற்கு எட்டுகின்றன.

நாம் வாழும் இந்த உலகம் அற்புதமானது..

மனித உயிர் விலையேறப்பெற்றது.

மனித வாழ்க்கை ஒப்பற்றது.

குடும்ப அமைப்பு இணையற்றது.

இல்வாழ்க்கை இனிதானது.

ஆனால் எல்லோருக்கும் இல்வாழ்க்கை இனிக்கிறதா?

இல்லையென்றுதான் சொல்லவேண்டும்.

சிலருக்கு துன்பமே வாழ்க்கையாக இருப்பதேன்?

பல காரணங்களை அடுக்கலாம்.

சுயநலம் – ஆசைகள் – பேராசைகள் – அளவிற்கு மீறிய எதிர்பார்ப்புக்கள் – திருப்தியின்மை – பொறுப்பின்மை – பொறுமையின்மை – மற்றவர்களுடன் ஒப்பிடுதல் – வாயினால் வம்பை வாங்குதல் – உண்மையாக இல்லாதிருத்தல் – ஆடம்பரங்கள் – பிறருடன் ஒத்துப்போகாத குணம் – ஒழுக்கமின்மை – கட்டுப்பாடற்ற பழக்கவழக்கங்கள் – கட்டுப்பாடற்ற உணர்ச்சிகள் (கோபம், குரோதம், காமம்) – ஒவ்வாத தாம்பத்தியம். தான்தோன்றித் தனமாக வளர்ந்துவிட்ட பிள்ளைகள் – வரவிற்கு மீறிய அல்லது வரம்பிற்கு மீறிய செலவுகள் – வீண் பெருமைகள் – காலத்தை வீணாக்கல் – நோய்கள் – தாழ்வு மனப்பான்மை அல்லது உயர்வு மனப்பான்மை – இப்படியாக அடுக்கிக்கொண்டே போகலாம்.

ஆனால், எல்லாவற்றிகும் மேலான காரணம், இறைவன் என்னும் கற்பாறையின்மேல் இல்லறம் கட்டப்படாதிருப்பதே; இவ்வுலக வாழ்க்கையில் அடிக்கும் புயலுக்கும், மழைக்கும் இல்வாழ்க்கை தாக்குப்பிடிக்க வேண்டுமானால் உங்கள் இல்லறம் கிறிஸ்து என்னும் கற்பாறையின் கட்டப்படவேண்டும்.

கன்மலைமீது அஸ்திபாரமிட்டு வீட்டைக் கட்டியவனே புத்திசாலி என்று இயேசு கூறுகிறார் (மத்.7:24–25). “அந்தக் கன்மலை கிறிஸ்துவே” (1 கொரி.10:4).

குடும்பம் – உன்னத கண்டுபிடிப்பு

மனிதனின் வளமான நல்வாழ்விற்காக இவ்வுலகில் கண்டுபிடிக்கப்பட்ட அனைத்துக் கண்டுபிடிப்புக்களிலுமே ஈடற்ற கண்டுபிடிப்பாகக் (Greatest Invention) கருதப்படுவது “குடும்ப அமைப்புதான்”. இப்பேருண்மையை அகிலமனைத்திலுமுள்ள அனைத்து சமூகச் சிந்தனையாளர்களுமே ஏகமனதாக எற்றுக் கொண்டுள்ளனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த அமெரிக்க அரசியல் வாதியும், சொற்பொழிளருமான ராபர்ட் ஜி. இங்கர்சால் (Robert

G. Ingersoll) என்பவர் பிரசித்திபெற்ற நாத்திகவாதி; இறை நம்பிக்கையற்ற அவரும் இல்லறம் புனிதமானது என்றே கூறுகிறார்,

> "மனித வாழ்க்கையின் மிக முக்கியமான பழக்கங்களில் மிகச் சிறந்ததும் புனிதமானதுமாக இருப்பது திருமண பந்தம்தான்" – இங்கர்சால்.

எதனால் குடும்ப அமைப்பிற்கு இத்தனை சிறப்பு?

ஏனென்றால், இந்த அமைப்பை மனிதன் கண்டுபிடிக்கவில்லை. இந்தக் கண்டுபிடிப்பிற்கு மூலவனாகத் திகழ்வது இறைவனே; இறைவனே குடும்ப அமைப்பின் நிறுவனர் (Family Unit is the greatest invention ever made for the benefit of humankind. It is greatest, because the inventor thereof is God, the Almighty). திருமண உறவை மனிதன் பாவத்தில் வீழ்வதற்கு முன்பே இறைவன் நிறுவிவிட்டார்.

தமிழ் மக்கள் குடும்ப வாழ்க்கையை அறமாகக் கருதினார்கள். ஆகையால்தான் இல்வாழ்க்கையைத் தமிழில் இல்லறம் (இல் + அறம்) என்று அழைத்தார்கள். ('இல்' என்றால் வீடு – 'அறம்' என்றால் நல்லொழுக்கம்). அறத்திலெல்லாம் உயர்ந்த அறமாக இல்லறத்தைத் தமிழ் மக்கள் கருதியதால், "இல்லற மல்லது நல்லற மன்று" (ஔவையார் – கொன்றைவேந்தன்) என்று உலகிற்கு பறைசாற்றினார்கள். வள்ளுவரும், "அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை" (குறள்49) என்றுரைக்கிறார்.

மானுடத்தைப் படைத்த இறைவன்தான் குடும்ப பந்தத்தையும் நிறுவினார்; கர்த்தரே மானுட கூட்டிணக்க வாழ்க்கை அமைப்பின் கர்த்தா (God, the Creator instituted the Family-Relationship for Man; He is the Author of Fellowship-Life-Style).

மானுடப் படைப்பில் இறைவன்

முக்காலமும் அறிந்து எக்காலமும் வாழும் இறைவன், ஆதியையும் அந்தத்தையும் அறிந்த சர்வ ஞானி. ஈற்றினைத் தோற்றத்திலே அறிந்த முழுமுதல் முதல்வன். இப்பிரபஞ்சத்திலுள்ள அனைத்தினையும் படைத்து, இவ்வுலகின் வரலாற்றை இறுதி விளைவினை நோக்கி இயக்கிக் கொண்டிருக்கும் இயக்குனர்.

கட்புலன் கடந்த நுண்ணிய அணுவிலும், கற்பனைக்கப்பால் பரந்து விரிந்து நிற்கும் விண்ணிலுமுள்ள ஒழுங்கினை நோக்குங்கால், அவற்றின் காரணர் ஒரு மாபெரும் படைப்பாளி (Creator) என்பதும், அவர் தொலைநோக்குப் பார்வையுள்ள தலைசிறந்த ஒரு திட்ட வல்லுனர் (a great Planner of Long-range-vision) என்பதும் தெளிவுறத் தெரிகிறது.

'காரணமின்றி காரியமில்லை – காரியமின்றி காரண மில்லை' என்பர் ஆன்றோர். படைப்பின் கர்த்தாவான இறைவன்

நோக்கமின்றி செலாற்றுபவரல்ல. ஏதோ ஓர் உன்னத நோக்கத்துடனேயே மனிதன் படைக்கப்பட்டுள்ளான் என்பது நிச்சயம். படைப்பின் நோக்கத்தை நம்மால் உய்த்துணர்தல் இயலாதெனினும், படைத்தவர் படைப்பின் காரணத்தை அறிவார். இக்கருத்தைத்தான் திருமறையில், **"உலகத்தோற்ற முதல் தேவனுக்கு தம்முடைய கிரியைகளெல்லாம் தெரிந்திருக்கிறது"** (அப்.15:18) என யாக்கோபு இயம்புகிறார்.

நாம், நம்முடைய அன்னையின் கருவறையில் கருவாகி, ஊனுருவாய் உருவாகி இவ்வுலகில் பிறப்பிக்கப்படும் முன்பே, நம்மைப் படைத்த படைப்பின் கர்த்தர் நம்மை அறிந்திருக்கிறார்.

திருமறை, **"இருக்கிறவன் தோன்று முன்னரே பெயரிடப் பட்டிருக்கிறான்"** (பிர.6:10) என்று கூறுகிறது. **"என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும் உருவேற்படும் நாட்களும் உமது புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது"** (சங்.139:16) எனத் தாவீது அரசன் உரைக்கின்றார்.

எனவே, நாம் இப்பூவுலகில் பிறந்து வாழ்ந்து கொண்டிருப்பது எதிர்பாராது நிகழ்ந்துவிட்ட நிகழ்வு அல்ல; இப்பூவுலகில் மனுவுருக்கொண்டு அவதரிக்கும் ஒவ்வொரு உயிரும் இறைவனின் அனாதித் தீர்மானத்தின் நிறைவேறுதலேயாகும்.

மானுட படைப்பு

மனிதன் இறைவனின் கைவண்ணத்தால் களிமண்ணிலிருந்து உருவாக்கப்பட்டவன் (Man is the workmanship of God). மனிதன் தன்னக்குறித்து தன்னைப் படைத்தவரிடம் கூறுவதாக ஏசாயா எழுதியுள்ள வார்த்தைகளைப் படியுங்கள்.

"இப்பொழுதும், கர்த்தாவே, நீர் எங்களுடைய பிதா; நாங்கள் களிமண்; நீர் எங்களை உருவாக்குகிறவர்; நாங்கள் அனைவரும் உமது கரத்தின் கிரியை(கள்)" (ஏசா.64:8)

அனைத்தையும் படைத்த பரமன், உச்சக்கட்டமாக (Climax) மனிதனைத் தனிச் சிறப்பான தகுதியுடன் படைத்தார். **"இறைவன் மானுடத்தை தனது சாயலாகப் படைத்தார்"** (ஆதி.1:27). ஏனைய தமது **"படைப்புகளை ஆளும்"** (ஆதி.1:28) அதிகாரத்தையும் மனிதனுக்களித்தார் எனத் திருமறை கூறுகிறது.

கர்த்தர், மானுட சரீரத்தை மண்ணிலிருந்து உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவனுடைய நாசியிலே ஊதி, அவனை ஜீவாத்துமாவாக்கினார் (ஆதி.2:7). ஆகையால்தான் மனிதன் படைப்புகளிலெல்லாம் தலைசிறந்த படைப்பாக இருக்கிறான். இறைவன் மனிதனை எப்படிப் படைத்திருக்கிறார் என்று இன்னும் தெளிவாகச் சங்கீதக்காரன் கூறுகிறான்.

"நீர் அவனைத் தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர்; மகிமையாலும் கனத்தாலும் அவனை முடிசூட்டினீர். உம்முடைய கரத்தின் கிரியைகளின்மேல் அவனுக்கு ஆளுகைதந்து, சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர்" (சங்.8:5–6).

இறைவன் படைத்த படைப்புகளில், மனிதன் அதியற்புதப் படைப்பு. மனிதன் மற்ற உயிரினங்களைவிட மேம்பட்டவன் – உயர்ந்தவன். மனிதன், இறை–படைப்பின் மகுடம் (Man is the Crown of God's Creation). மனிதன், இறைப்படைப்புகளிலேயே அதிக நுணுக்கமும், நுட்பமும் நிறைந்த அரும்படைப்பு (Man is the masterpiece of God's creation).

உடலால் விலங்கினங்களுடன் ஒத்திருந்தாலும் (Animal Kingdom), தன்னுடைய சிந்திக்கும் திறனால், பேசும் திறனால் மனிதன் விலங்கினங்களினின்றும் வேறுபடுகிறான். மனிதன் ஆறறிவுள்ளவன் (Six Senses) என்பதை அனைவருமே ஒப்புக்கொள்கின்றனர்.

பழந்தமிழ் இலக்கிய நூலான "தொல்காப்பியத்தில் – பொருளதிகாரத்திலுள்ள மரபியலில்" இந்தக் கருத்து மிகவும் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது.

ஒன்றறி வதுவே உற்றறி வதுவே (Touching sense)
இரண்டறி வதுவே அதனொடு நாவே (Tasting sesnse)
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே (Smelling sense)
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே (Seeing sense)
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே (Hearing sense)
ஆறறி வதுவே அவற்றோடு மனனே (Thinking sense)
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே. –

– (தொல்காப்பியம் – பாடல் 571).

தொடர்ந்து அடுத்த பாடலில் தொல்காப்பியம் மேலும் கூறுகிறது:

புல்லும் மரனும் ஓரறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.
நந்தும் முறளும் ஈரறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.
சிதலும் எறும்பும் மூவறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.
நண்டும் தும்பியும் நான்கறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.
மாவும் மாக்களும் ஐயறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.

மக்கள் தாமே ஆறறி வுயிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.

– (தொல்காப்பியம் – பாடல் 572).

மனிதனைத் தவிர வேறு எந்த படைப்பிற்கும் ஆறாவது அறிவை இறைவன் அருளவில்லை. ஆறாவது அறிவு என்றால் என்ன?

மனிதனுக்கு மட்டுமே வாய்க்கப்பெற்ற; இந்த ஆறாவது அறிவை மூன்றுவிதமாகப் பிரிக்கலாம்.

1. பகுத்தறிவு – நன்மை எது, தீமை எது எனப் பகுத்து + அறியும் + அறிவு.
2. பேசும் திறன் – தனது உள்ளத்திலுள்ளவைகளை பிறர் புரிந்துகொள்ளத் தக்கவிதமாய், தன் எண்ணங்களைக் குரல்வளை–ஒலியால் வெளிப்படுத்தும் ஆற்றல்.
3. கற்பனை – தனது எண்ணத்திலேயே பலவற்றைச் சிந்திக்கும் ஆற்றல் – திட்டமிடும் ஆற்றல்.

மனிதப் படைப்பில் நுணுக்கத்துடனும் – நுட்பத்துடனும் செயலாற்றிய இறைவன், மானுட வாழ்க்கையையும் திட்டமிட்டு – நெறிப்படுத்தி, 'குடும்பம்' என்ற கூட்டமைப்பை உருவாக்கியுள்ளார்.

இறைத் திட்டம்

படைப்பில் திட்டமிட்டுச் செயல்பட்ட இறைவன், மனுவிற்காக இல்லறத்தைத் திட்டமிட்டு ஈந்துள்ளார். மானுடத்தைப் படைத்த படைப்பின் கர்த்தர், தங்களுக்குள் நெருங்கிய உறவை உருவாக்கும் இல்லற பந்தத்தை நிறுவினார்.

மனிதன் தனிமையாக இருப்பதற்காகப் படைக்கப்படவில்லை.

மனிதன் தனியாக இருப்பதை இறைவனும் விரும்பவில்லை. "மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல" (ஆதி.2:18) என்றுதான் படைப்பின் கர்த்தர் பகருகிறார். மனிதனுக்கு 'ஏற்ற துணையை' (ஆதி.2:18) ஏதேனிலே ஏற்படுத்தின பின்னரே இறைவனுடைய படைப்பின் செயல் நிறைவுறுகிறது. மனிதன் தனியாயிராது, மற்றொருவருடன் இணைந்து வாழ்வதிலுள்ள அனுகூலங்களைத் திருமறை தெளிவாகவே இயம்புகிறது

"ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம்; அவர்களுடைய பிரயாசத்தினால் அவர்களுக்கு நல்ல பலனுண்டாகும். ஒருவன் விழுந்தால் அவன் உடனாளி அவனைத் தூக்கிவிடுவான், ஒண்டியாயிருந்து விழுகிறவனுக்கு ஐயோ, அவனைத் தூக்கிவிடத் துணையில்லையே. இரண்டு பேராய் படுத்துக்கொண்டிருந்தால் அவர்களுக்குச்

சூடுண்டாகும், ஒண்டியாயி ருக்கிறவனுக்குச் சூடுண்டாவது எப்படி? ஒருவனை யாதாமொருவன் மேற்கொள்ள வந்தால் இருவரும் அவனுக்கு எதிர்த்து நிற்கலாம்; முப்பிரிநூல் சீக்கிரம் அறாது" (பிர.4:9–12).

மனிதன் சமுதாயம் சார்ந்தவன் (Man is a social being). பிற மனிதர்களுடன் கூடிவாழ்வதே மானுடப் படைப்பின் நோக்கம். உறவுகளுடன் வாழவே மனிதன் வடிவமைக்கப்பட்டுள்ளான் ஆகையால்தான், "இதோ, சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணு கிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது" (சங்.133:1) எனத் திருமறை கூறுகிறது.

ஒரு நல்ல குடும்பம் ஏதோ தற்செயலாக நடந்துவிடும் சமாச்சாரமல்ல (A good family does not just happen). தங்கள் குடும்பம் இவ்வுலகில் நல்ல குடும்பமாகத் திகழ்வதற்காக கணவனும் மனைவியும் சிரத்தை எடுத்துக்கொள்ளவேண்டும்; இறைவனிடம் ஜெபிக்கவேண்டும்; ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்க வேண்டும்; அதற்காகத் திட்டமிட்டுச் செயலாற்றவேண்டும்.

இவ்வுலகையும், மனிதனையும் படைக்கத் திட்டமிட்டுச் செயலாற்றிய இறைவன், இன்றும் திட்டத்துடனேயே செயலாற்றிக் கொண்டிருக்கிறார். இறைவனே திட்டமிட்டுச் செயலாற்றும்போது, அவர் படைப்பாகிய நாமும் நமது வாழ்க்கையை, மிக முக்கியமாக குடும்ப வாழ்க்கையைத் திட்டமிட்டு நடத்துவது எத்தனை முக்கியமானது?

நிறைவுரை

ஒரு கிறிஸ்தவ விசுவாசி **"உலகத்திற்கு வெளிச்சமாக"** (மத்5:14) இருக்கவேண்டும்.

கிறிஸ்தவக் குடும்பம், **"குன்றின் மேல் ஏற்றப்பட்ட விளக்காக"** ஒளிரவேண்டும் (The Christian Home is a lamp set on a hill to give light to the world). உங்களுடைய கிறிஸ்தவ–இல்லற–வாழ்க்கையினால் பரலோகத்திலிருக்கிற பிதா மகிமைப் படும்படியாக, உலகத்தார் மத்தியில் **'உங்களுடைய வெளிச்சம் பிரகாசிக்கவேண்டும்'** (மத்.5:16).

குடும்பம் என்பது 'கர்த்தரின் தோட்டம்' என்றும், மானுட ஜீவன்கள் வளருவதற்காக இறைவன் நிறுவிய 'குழந்தைகள் காப்பகம்' என்றும் கூறுவார்கள் (Home is the garden of the Lord, a nursery for human lives to grow in). பெற்றோர்கள், இறைவனின் பிரதிநிதிகளாய், குழந்தைகளைப் பொறுப்புடன் பராமரித்து வளர்க்கவேண்டும்.

இப்பூலோக வாழ்க்கைக்குப் பின் அவர்கள் நித்தியத்திற்குப் பங்காளிகளாகும்படியாக ஆவிக்குரிய ஜீவியத்தில் குழந்தைகளை நித்திய வாழ்க்கைக்கு (Eternal life) ஆயத்தப்படுத்தவேண்டும்.

மனித நலனுக்காகக் கண்டுபிடிக்கப்பட்ட கண்டுபிடிப்புக்களிலே குடும்ப அமைப்பிற்கு ஈடானது வேறில்லை; குடும்ப அமைப்பிற்கு மாற்றும் வேறில்லை (There is no better invention or an alternative to a family).

எந்த நாடாயிருந்தாலும் சரி, அது மேலை நாடாயிருந்தாலும் சரி, கீழை நாடாக இருந்தாலும் சரி, குடும்பத்திற்கிணையானது வேறெதுவுமில்லை (East or West, Home is the best).

ஒரு சமுதாயம் மாற வேண்டுமென்றால், முதலாவது தனி மனிதன் மாற வேண்டும். தனிமனிதனால் உருவாவதே சமுதாயம். அதேவேளையில் ஒருவனைச் சுற்றியுள்ள சமுதாயமே தனி மனிதனை உருவாக்குகிறது. சமுதாயத்தின் அடிப்படை அமைப்பு (Basic Unit) குடும்பமாகும். அவ்வாறெனில் குடும்பமே தனி மனிதனை உருவாக்குகிற முதற்களமாக (Primary Ground) இருக்கிறது.

மானுட வரலாற்றைக் கண்ணோக்கினால், அனைத்து நலமான சமுதாயத்திற்கும் (Thriving society), நாட்டிற்கும், அரசிற்கும், பேரரசுகளுக்கும், சிறந்த குடும்ப அமைப்புகளே அடிப்படையாக இருந்திருக்கின்றன.

எங்கெல்லாம் – எப்பொழுதெல்லாம் குடும்ப அமைப்புகள் சிதைந்தனவோ, அப்பொழுதெல்லாம் எத்தகைய மானுட அமைப்பாக இருந்தாலும் சரி, அவைகள் அழிவையே தழுவியிருக்கின்றன.

“குடும்ப அமைப்பு எதை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறதோ, அதை நோக்கியே நாடு பயணிக்கிறது, அதைப் போலவே நாம் வாழும் உலகும் பயணித்துக் கொண்டிருக்கிறது” என்று போப்பாண்டவர் இரண்டாம் ஜாண் பால் கூறுவதில்தான் எத்தனை உண்மை! (As the family goes, so goes the nation and so goes the whole world in which we live” —**Pope John Paul II**).

2

இதயங்கள் இணையும் இல்லம்

கர்த்தர் வீட்டைக் (குடும்பத்தைக்) கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா – (சங்கீதம் 127:1).

"The three sweetest words in English language are: Mother, Home and Heaven"

– என ஆங்கிலத்தில் கூறுவர்.

ஆங்கிலத்தில் மட்டுமல்ல, உலகின் எந்த மொழியிலுமே, 'அம்மா, வீடு, சுவர்க்கம்' என்ற மூன்று வார்த்தைகளுமே இனிமையும், இன்பமுமானவைகளே. இம்மூன்று வார்த்தைகளுமே 'இல்லம்' என்னும் நடுவார்த்தையை மையமாகக் கொண்டே சுழல்கின்றன. அம்மா– என்றவுடன் நமது இல்லம் தான் நம் எண்ண அலைகளிலே நிழலாடுகின்றது.

சுவர்க்கம் அல்லது மோட்சம் என்பது நமது பூலோக வாழ்க்கைக்குப் பின்பு வாழப் போகும் நித்திய வீடாகும். தமிழ் மொழியில் வீடு என்பதற்கு மோட்சம் அல்லது சுவர்க்கம் எனவும் பொருளுண்டு

வீடும்–இல்லமும் (House-Home)

"வீடு – இல்லம்" (House - Home) என்ற இரு சொற்களுக்கும் பெரும் வேறுபாடுண்டு. **வீடு** (House) என்பது கல், மண், மரம், செங்கல், இரும்புபோன்ற ஜடப்பொருள்களிலான உயிரற்ற கட்டிடமாகும். ஆனால், **இல்லம்** (Home) என்பது உயிரோட்டமுள்ள மனிதர்கள் கூட்டமைப்பாக வாழுமிடம். இரத்த சம்பந்த உறவுடையோர் (Blood-relatives) குழுமி வாழும் கூட்டமைப்பையே 'குடும்பம்' (Family or Household) என அழைக்கிறோம்.

ஆங்கிலத்தில் ஒரு பழமொழியுண்டு: "Walls make a house, Hearts make a HOME' என்பார்கள். அதாவது, **"சுவர்களால் ஒரு வீடு உருவாகிறது, இதயங்களால் ஓர் இல்லம் உருவாகிறது"** என்று அதற்குப் பொருள். எத்தனை உண்மையான வார்த்தைகள்!

குடும்ப அமைப்பு

மானுட வரலாற்றிலேயே குடும்ப அமைப்புதான் மிகத்–தொன்மையானதாகும் (Oldest human institution). நாடு, சமுதாயம், திருச்சபை போன்ற பெருங் கூட்டமைப்புகளின் முதல் வட்டம் (First circle) குடும்ப அமைப்பேயாகும். குடும்பம் என்பது, திருச்சபை என்னும் பெரிய குடும்பத்தின் ஒரு அங்கமாகும் (A Christian family is the part of the greater family, the Church).

மானிட சமுதாயத்தின் அடிப்படை கூட்டுக்குழு அல்லது பிரிவு (Basic unit) குடும்ப அமைப்புதான். இக்குடும்ப அமைப்பின் நிறுவனர் (Founder) இறைவனே.

படைப்பு வரலாற்றில் இறைவன் (தேவன்),

முதல்நாள் வெளிச்சத்தை உண்டாக்கினார், **அது நல்லது** என்று கண்டார் (ஆதி.1:3–4).

இரண்டாம்நாள் ஆகாய விரிவை உண்டாக்கினார் – நல்லது–கெட்டது என்று எதுவும் கூறாமல் புதிரான–மௌனம் காத்தார் (ஆதி.1:6–8).

மூன்றாம்நாள் பூமியில் புல்–பூண்டு–தாவரங்களை உண்டாக்கினார் – **அது நல்லது** என்று கண்டார் (ஆதி.1:11–12).

நான்காம்நாள் சூரியன் – சந்திரன்–நட்சத்திரங்கள் யாவையும் உண்டாக்கினார் – **அது நல்லது** என்று கண்டார் (ஆதி.1:14–18).

ஐந்தாம்நாள் கடலின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும் உண்டாக்கினார் – **அது நல்லது** என்று கண்டார் (ஆதி.1:20–21).

ஆறாம்நாள் முதலாவது மிருகங்களைப் படைத்தார் – அது நல்லது என்று கண்டார் (ஆதி.1:24–25); அதே நாளில் அடுத்த படியாக மனிதனைத் தனது சாயலின்படி படைத்தார் (ஆதி.1:26–27) மனிதனைப் படைத்த பின்னர் இறைவன் *(இரண்டாம் நாளைப் போலவே)* மறுமுறையும் நல்லதென்றும் – கெட்டதென்றும் கூறாமல் அமைதிகாத்தார். பின்னர், மனிதனைத் தனியாகப் படைத்தது 'நல்லதல்ல' (ஆதி.2:18) என்று கூறுகிறார். எனவே முதல் மனிதனான ஆதாமின் உடலிலிருந்தே முதல் மனுஷியான ஏவாளைப் படைத்தார். இவ்வண் ஆண்–பெண் அடங்கிய முதல் குடும்ப அமைப்பை – இல்லற வாழ்க்கையை – இறைவனே ஏற்படுத்தி அதனை ஆசீர்வதித்தார்.

மானுடம் இறைவனால் உருவாக்கப்பட்ட பிறகு தோன்றிய பல்வேறு மானுட அமைப்புகளில், குடும்பத்திற்கிணையான அல்லது அதைவிடச் சிறந்த மானுட அமைப்பு வேறேதுமில்லை; அதற்கு மாற்று அமைப்பும் இதுவரையில் தோன்றவுமில்லை; குடும்ப அமைப்பில்தான் இறைவனின் மானுட படைப்பு முழுமையுறுகிறது. இல்லற வாழ்க்கையில்தான் ஓர் ஆணோ அல்லது பெண்ணோ மானிட – வாழ்வின் நிறைவினைப் பெற்றிட இயலும்.

குடும்ப அமைப்பின் தேவை

விலங்கினங்களின் குட்டிகள் பிறந்த சில மணி நேரத்திலேயே நடக்க ஆரம்பித்துவிடுகின்றன; ஒரு குட்டி தன்னுடைய தாயின் மடுவை நோக்கிச்சென்று பால் அருந்தத்தொடங்கிவிடுகிறது. ஆனால் மனிதக் குழந்தையின் நிலையோ பரிதாபமானது. பிறரின் உதவியின்றி மனிதக் குழந்தை வாழ்வது சாத்தியமில்லை. ஆகையால், மானுடக் குழந்தைகள் வளருவதற்கு குடும்ப அமைப்பு அவசியமாயிருக்கிறது.

கீதாஞ்சலி பிரசாத் என்பவர் இந்திய குடும்ப அமைப்பின் சிறப்பைக் குறித்து எழுதியுள்ள தனது புத்தகத்தில், **"நாம் போக வேண்டிய இடம் வேறேதுமில்லையென்றால், நாம் வீட்டிற்குத் தான் போகிறோம்"** என்பதைத்தான் முதல் வார்த்தையாக எழுதுகிறார் ("Home is where we go when we run out of places to go to" - the first line of Gitanjali Prasad's *The Great Indian Family*).

மானுட வாழ்வில் குடும்ப அமைப்பு ஏன் முக்கியமான அங்கமாகக் கருதப்படுகிறது?

i. மானுட வம்சம் தொடரவும் குழந்தைகளைப் பெறவும், வளர்க்கவும் பாதுகாக்கவும் (to bear, protect and rear) குடும்ப அமைப்பு இன்றியமையாயது.

ii. மனிதர்களின் அடிப்படைத் தேவைகளைப் (Basic needs - உணவு, உடை, உறைவிடம்) பூர்த்தி செய்யும் இடம் இல்லந்தான்.

iii. குடும்பத்தில், குடும்ப உறுப்பினர்கள், குடும்பத்தின் பொறுப்புக்களையும் அதிகாரங்களையும் பகிர்ந்து (Share responsibilities and powers) பணியாற்றுகிறார்கள்.

iv. மனுமக்கள் தங்கள் இன்பத்தையும், துன்பத்தையும், வெற்றியையும், தோல்வியையும், இரகசியங்களையும் உண்மையாகவே பகிர்ந்து கொள்ளும் வடிகால் குடும்பமே யாகும்.

v. குடும்பத்தில்தான் பாசாங்கற்ற பாசமும், மெய்யான பரிவும், எதிர்பார்ப்பற்ற அன்பும் கிட்டுகிறது.

vi. தனிமை தவிர்த்து உறவுகளுடன் ஐக்கியமாக வாழ உதவுமிடம் வீடே (House is a place of fellowship and relationship)

vii. இன்ன குடும்பத்தைச் சேர்ந்தவன் என்று அடையாளம் காட்டுவது குடும்ப அமைப்பே (Family gives a sense of belonging).

viii. குடும்பத்தில்தான் கனவுகளும், நம்பிக்கைகளும், உடமை களும், நினைவுகளும், சிரிப்பும், ஆழ்ந்த சிந்தையும், மகிழ்ச்சியும் பகிர்ந்துகொள்ளப்படுகிறது (A family shares things like dreams, hopes, possessions, memories, smiles, frowns and gladness).

ix. குடும்பம் என்பது புயலுக்குப் புகலிடம்; வாழ்கையின் அலைகள் புரண்டு வருகையில் ஒதுங்கி இளைப்பாறு வதற்குத் தோழமையுள்ள துறைமுகம் (A family is shelter from the storm, a friendly port when the waves of life become too wild).

x. ஒரு குடும்பத்தில் வாழும் எந்த மனிதனும் தனியான வனல்ல. அவன் குடும்பமென்னும் ஐக்கிய அமைப்பில், உறவுகளுடன் வாழ்பவன். அவன் தனிமரமல்ல; தோப்பிலுள்ள மரம் (No person is ever alone who is a member of a family; he lives in loving fellowship).

xi. குடும்பம் என்னும் அமைப்பில்தான், அன்பென்னும் இறையுணர்வு மனிதனில் விதைக்கப்பட்டு, பண்படுத்தி வளர்க்கப்படுகிறது (The godly character of love is sowed and bred in the Family).

xii. வெளியுலகைச் சந்திப்பதற்குப் பயிற்றுவிக்கப்பட, மனிதர்களுக்கு இறைவன் கிருபையாக அருளியுள்ள மழலையர் பள்ளி குடும்பந்தான் (Family is the nursery of man).

அனைத்து மானுட அமைப்புகளுக்கும் ஆதாரம் குடும்ப அமைப்பே

திருச்சபை என்னும் கூட்டமைப்பு (Institution) குடும்பங்களில் தான் பிறந்தது.

திருச்சபையின் பிஞ்சுப் பருவத்தில் விசுவாசிகள் இல்லங்களில் கூடிதான் இறைவேண்டல் ஏறெடுத்தனர் (Prayed).

ஆபிரகாம் என்னும் ஒரு தனி மனிதனின் குடும்பத்திலிருந்து தான், இறைவன் ஒரு நாட்டையே உண்டாக்கினார். குடும்ப உறவின் வழியில்தான் இறைவன் செயல்படுகின்றார் (God works through families).

இறைமைந்தன் இயேசு இவ்வுலகிற்கு வருகைதர விழைந்த பொழுது, ஆதாமைப்போல் முழுமனிதனாக வர எத்தனிக்கவில்லை. அவர் ஒரு குடும்பத்தில் குழந்தையாகப் பிறக்கவே திருவுளம் கொண்டார். மரியாள் என்று அழைக்கப்படும் மானுடத் தாயின் வயிற்றில் கருவாக உருவானார்; சிசுவாகப் பிறந்தார்; பிற மனிதர்களைப்போலவே உலகில் வளர்ந்தார்.

இறைமைந்தன் இயேசு மனிதனாக வந்து – குடும்பத்தில் வாழ்ந்தே இறைச் சித்தத்தை நிறைவேற்றினார். இளமையில், ஒரு நல்ல குடும்பத்தில் வளரும் பிறபிள்ளைகளைப் போலவே, இறைமைந்தன் இயேசுவும் தமது உலகப் பெற்றோருக்குக் 'கீழ்ப்படிந்திருந்தார்' (லூக்.2:51).

இறைமைந்தன் ஒரு குடும்பத்தில் வாழ்ந்து, உலகப் பெற்றோர்க்கு கீழ்ப்படிந்து குடும்ப அமைப்பின் மாண்பினை மானிடர்களுக்கு எடுத்துக் காட்டினார். இயேசு , தமது பூலோக வாழ்க்கையில், தமது சொற்களினாலும் – செயல்களினாலும் குடும்ப அமைப்பை உறுதிப்படுத்தினார் (Approved).

இயேசு, தமது குடும்பத்தை நேசித்தார். இயேசு, குடும்பத்திற்கு ஆற்றவேண்டிய கடமைகளை, தமது இறைப்பணிகளின் மத்தியிலும் குறைவற நிறைவேற்றினார்.

மனுமக்களைப் பாவத்திலிருந்து மீட்பதற்காகச் சிலுவையில் துயருறும்பொழுதுகூட, இயேசு தமது முதிர்வயதான தாய்க்கு இவ்வுலகில் பாதுகாவல் அளித்துச் செல்லுவதற்குக் கவன முள்ளவராக இருந்தார் (யோவா.19:26–27).

தமது பணிக்காலத்தைத் துவக்க இன்னமும் காலமுள்ளது என்று இயேசு கருதினாலும், தமது தாயின் விருப்பத்திற்கிணங்கக் கானா ஊர் கலியாணத்தில் அற்புதம் செய்தார்; தண்ணீரைத் திராட்சை இரசமாக மாற்றினார்; தாயின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தார் (யோவா.2:2–8).

நிறைவுரை

"குடும்பம் என்னும் மானுட அமைப்பு, பாசமென்னும் பசையால் ஒட்டப்பட்டு, பரஸ்பர மரியாதை என்னும் சிமிண்டி னால் கட்டப்பட்ட உறவுவாகும்." என்று ருடுயார்ட் கிப்பிலிங் கூறுகிறார் (A family is a clan held together with the glue of love and the cement of mutual respect - **Rudyard Kipling**). குடும்பம் என்னும் முதல் வட்டங்கள் எங்கே சீராக, நலமாக இருக்கிறதோ, அங்கேதான் மற்ற பெரிய வட்டங்களான – ஊரும், நாடும், உலகும், திருச்சபையும் – ஏனைய மானுட அமைப்புகளும் சீராக இயங்க இயலும். குடும்பம் சீராக இயங்கவேண்டுமென்றால், அந்தக் குடும்பம் இறைவார்த்தையின் அடிப்படையில் கட்டப்பட்டு வாழுகிற குடும்பமாக இருக்கவேண்டும்.

இறைவார்த்தை ஒரு வீட்டின் அடிப்படையாக அமையாதவரை, அவ்வீட்டில் கிறிஸ்தவ குடும்பத்திற்குரிய இன்சுவையை ருசிக்க இயலாது (We will never have a Christian home with all its sweetness, until the Word of God becomes its foundation).

இந்த இல்வாழ்க்கை சூட்சமத்தை முறையாகச் சரியான படி, உரியமுறையில் புரித்துகொள்ளாத பலர் தங்களுடைய வாழ்க்கையையும், குடும்பத்தையும் நரகமாக்கிக் கொண்டிருக் கிறார்கள்.

இறைவார்த்தையை அடிப்படையாகக்கொண்டு இல்லறத்தைத் திட்டமிட்டு வழிநடத்திச் செல்லவேண்டும். இறைவனும் திட்டமிட்டே செயலாற்றிக் கொண்டிருக்கிறார். ஆகையால் மனிதர்களாகிய நாமும் இல்லற வாழ்க்கையின் தெவிட்டாத இன்பத்தைத் துய்த்திட, குடும்பத்தைத் திட்டமிட்டு வழிநடத்திச் செல்லவேண்டும்.

திட்டமிட்டு வழிநடக்கும் குடும்பமே, தெவிட்டாத இன்பத்தை நல்கிடும் என்பதை மறவாதீர்.

3

மனிதன் தன் வாழ்க்கையில் சந்திக்கும் மூன்று குடும்பங்கள்

தேவன் தனிமையானவர்களுக்கு வீடு–வாசல் ஏற்படுத்தி ... விடுதலையாக்குகிறார் – (சங்கீதம் 68:6).

இந்திய பாரம்பரிய வழக்கத்தின்படி, ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தங்கள் வாழ்நாளில் பெரும்பாலும் மூன்று வகையான குடும்பங்களில் வாழ்வது வழக்காற்றிலுள்ளது. அவை என்னென்ன?

1. **கீழ்ப்படிதலின் காலம்** – குழந்தைப் பருவமும், இளமைப் பருவமும் பெற்றோர்களின் தலைமையின் கீழ் அடங்கி வாழும் காலமாகும்.
2. **பொறுப்பின் காலம்** – தானே குடும்பத்தின் தலைவனாக – தலைவியாக இருந்து குடும்பத்தை நிர்வகிக்கும் காலமாகும்.
3. **விட்டுக்கொடுக்கும் காலம்** – பெரியவர்களான தனது பிள்ளைகளிடம் தலைமையை விட்டுக்கொடுத்துவிட்டு, அவர்கள் இவ்வுலகில் வாழும் திறமையை ரசித்துக் கொண்டு, தேவைப்பட்டால், மறுபடியும் கூறுகிறேன்; தேவைப்பட்டால், அறிவுரை வழங்கிக்கொண்டு வாழும் காலம்.

1. தலைமையின் கீழ் (Under the Leadership)

மானுடக் குழந்தை, பிறந்ததிலிருந்து திருமணமாகும் வரை பெற்றோரின் கையில் அடங்கி வாழும் காலத்தில், முதலாம் வகைக் குடும்பத்தில் வாழ்கிறது. ஒவ்வொரு குடும்பத்திலும் பிறக்கின்ற பிள்ளைகள் முதலாவது தங்கள் தங்கள் வீட்டில்தான் முதன்முதலாக உலகைக் கற்றுக்கொள்ள ஆரம்பிக்கிறார்கள்.

எந்த நாடாக இருப்பினும், ஒரு குழந்தைக்கு குடும்பமே மழலையர் பள்ளி (Family is the nursery of the nation). குடும்ப அங்கத்தினர்களின் சொற்கள், செயல்கள் யாவும் அக்குடும்பத்தில் வளரும் குழந்தைகளிடம் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

'குடும்பம் நடத்துவது எப்படி?' எனக் கற்றுத்தரும் கல்விக் கூடங்கள் நம் சமுதாயத்தில் இல்லை. பெரும்பாலும் பெற்றோர்களே பிள்ளைகளின் முன்மாதிரியாக இருக்கிறார்கள் (Invariably, Parents are the Role Models to their Children).

பிள்ளைகளின் ஆரம்ப ஆசான்கள் பெற்றோர்களே. எனவே தான், "தாயைப் போல பிள்ளை, நுலைப் போல சேலை" என்றும், 'தந்தை எவ்வழி, தனையன் அவ்வழி' எனவும் கூறுவது வழக்காற்றிலுள்ளது. ஆங்கிலத்திலே, "Chip of the old block" எனக் கூறுவார்கள். குடும்பம் நடத்தும் கலையைப் பிள்ளைகள் கற்றுக்கொள்ளுமிடம் குடும்பமே.

இந்த முதல்வகைக் குடும்பத்தில்தான், பிள்ளைகள் கீழ்ப் படிதலைக் கற்றுக்கொள்கிறார்கள். கீழ்ப்படியத் தெரியாதவனுக்கு, கட்டளையிடும் தகுதியில்லை (One who does not know how to obey, has no moral right to command). அவனுக்குத் தலைமை ஏற்கும் தகுதியுமில்லை.

இறைமைந்தன் இயேசுவே இவ்வுலகில் பெற்றோர்களுக்குக் கீழ்படிந்து, மனுமக்களுக்கு மிகச் சிறந்த முன்மாதிரியை ஏற்படுத்திச் சென்றிருக்கிறார். "**இயேசு நாசரேத்தூரில். பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார்**" (லூக்.2:51). கீழ்ப்படிதலுள்ள மக்களைப் பெற்ற பெற்றோர்களே இவ்வுலகில் மகிழ்ச்சியுள்ள பெற்றோர்கள். "**சொல்மாறா மகப் பெற்றோர் துயர் துறந்தார்**' என்று **கம்பர்** கூறுகிறார். ஔவையாரும், "**ஏவா மக்கள் மூவா மருந்து**" எனக் கூறுவதும் இதே கருத்தில்தான்.

மானிட வாழ்க்கையில் குழந்தைகளாக – வாலிபர்களாக முதல் வகைக் குடும்பத்தில், பெற்றோர்களுக்கு அடங்கி வாழும் கால கட்டத்தைக் **கீழ்ப்படிதலின் காலம்** (Period of Discipline) எனக் குறிப்பிடலாம்.

2. தலைமை ஏற்பு (Accepting the Leadership)

இரண்டாம்வகைக் குடும்பம் திருமண உறவினால் உருவாகிறது. திருமணத்தினால் இணையும் ஆணும் பெண்ணும் இல்லறம் என்னும் பந்தத்தில் நுழைகிறார்கள். அவர்கள் இருவரும் அக்குடும்பத்தின் தலைவன் தலைவியாகப் பொறுப்பேற்கிறார்கள்.

இக்காலக்கட்டம்தான் மனித வாழ்க்கையின் அதிமுக்கியமான, பொறுப்புமிக்க காலம். ஒவ்வொரு தனி மனிதனுடைய வாழ்க்கையின் வெற்றியையும், தோல்வியையும் நிர்ணயம் செய்யும் காலம் இதுவே.

இக்காலக்கட்டத்தில்தான் தலைவன்– தலைவியாக *(பெற்றோராக)* வாழ்க்கையில் பல்வேறுசவால்களை எதிர்கொள்ள வேண்டிய துள்ளது.

i. பொருளாதாரத் தன்னிறைவு

குடும்பத்தை நடத்துவதற்குத் தேவையான பொருளீட்டுதல் உலகிலுள்ள அனைத்துப்.பெற்றோர்களுக்கு முன் நிற்கும் முதல் சவால். பணபற்றாக்குறைதான் பல குடும்பங்களிலுமுள்ள பெரும் பிரச்சனை. வரவுக்குள் செலவு செய்வதும், வருங்காலத்திற்கு சேமித்தலும் பெற்றோரின் கடமை. பணபரிபாலனத் திறமையின்றி வரம்புக்குமீறி செலவுசெய்து வட்டிக்கு வாங்கி வாடுவோர் கணக்கிலடங்கார் (Lack of Funds Management Technic is the major cause of tension in the family).

ii. குழந்தைகளுக்கு அந்தஸ்து:

பெற்றுவிட்டால் மட்டும் பெற்றோர்களாகிவிட முடியாது. அவர்களைப் பொறுப்புடன் வளர்த்து, கல்வியூட்டி சமுதாயத்தில் அவர்களுக்குரிய சமுதாய அந்தஸ்த்தைப் பெற்றுத்தரவல்ல பெற்றோராயிருத்தல் வேண்டும் (Providing Social Status for your Children). உங்கள் குழந்தைகள், உங்களின் வருங்கால சந்ததியினர்; அவர்கள் முன்னேற்றமே உங்கள் வெற்றி.

iii. இன்பமான இல்லம்:

குடும்பத்தின் உறுப்பினர்கள் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கு ஏற்ற இடமாக உங்கள் இல்லம் இருக்கவேண்டும் (Let your Home be a Happy place to Live). வெளியிலிருப்பதைவிட வீட்டிலிருப்பது மனதிற்கு மகிழ்ச்சியான நேரமாக குடும்ப உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் கருதும்படியான சூழலை குடும்பத்தில் உருவாக்குவது பெற்றோர்களின் பெரும் பொறுப்பு.

iv. இயேசுவின் அறிமுகம்:

பிள்ளைகளின் ஆவிக்குரிய வாழ்க்கையில் பெற்றோருக்குப் பெரும்பங்குண்டு. உரிய காலத்தில், உரிய வகையில் பிள்ளகளுக்கு இயேசுவை அறிமுகப்படுத்துவது பெற்றோர்களின் கடமையாகும் (Introduce Jesus, at the appropriate time). உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையும் உங்கள் பிள்ளைகளைப் பெரிதும் பாதிக்கும் என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

v. முன்மாதிரி:

பிள்ளைகளின் பிஞ்சுப் பருவத்தில் அவர்களோடு ஒட்டி உறவாடும் பிரதான நபர்கள் பெற்றோர்தான். பெற்றோர்களின் நடவடிக்கைகள் பிள்ளைகளிலே பெரும்பாதிப்பை ஏற்படுத்தும். பெற்றோர்களைப் பார்த்துதான் பிள்ளைகள் உலகைக் கற்கிறார்கள்.

ஆகையால் பிள்ளைகள் முன்னே அவர்கள் பின்பற்றத்தக்க முன்மாதிரியான (Be a Role-Model to your Children) மனிதர்களாய் வாழ்வது பெற்றோரின் பெருங்கடமை.

vi. நம்பிக்கைக்குரியவர்கள்:

குழந்தைகள் பெற்றோரை முற்றிலும் நம்பும் மனதுடையவர்கள். எனவே, பிள்ளைகளின் நம்பிக்கைக்குரிய பெற்றோராய்த் திகழ்தல் பெற்றோர்கள் மேல் விழுந்த கடமை (Be a parent to be believed). பிள்ளைகள் தங்கள் பலவீனங்களையும், இரகசியங்களையும் பகிர்ந்து கொள்ளத்தக்க நம்பிக்கையைப் பெற்ற பெற்றோராயிருத்தல் வேண்டும்.

vii. தன்னம்பிக்கையூட்டப்பட்டவர்கள்:

எதிர்காலத்தில் வாழ்க்கையிலெழும் பிரச்சனைகளை உறுதியுடன் எதிர்கொள்ளத்தக்க மனோநிலை எய்தும் வண்ணம், தன்னம்பிக்கை கொண்டவர்களாகப் பிள்ளைகளை வளர்ப்பது பெற்றோர்களுக்குரிய கடமை (Infuse confidence to face up critical situations in life). சுருங்கச் சொல்லின் குடும்பத்தை சாட்சியான கிறிஸ்தவக் குடும்பமாக – மோட்சத்தின் முன்ருசியை அனுபவிக்கும் குடும்பமாக அமைத்தல், இல்லத்தின் தலைவர்–தலைவியின் தலையாய கடமை. *(இவைகளைக் குறித்து பின்வரும் அத்தியாயங்களில் விரிவாகக் காண்போம்).*

மனித வாழ்க்கையின் சவால்கள் நிறைந்த இந்த காலக் கட்டத்தை **'பொறுப்பின் காலம்'** எனக் கூறலாம் (Period of Responsibilities)

3. தலைமையிலிருந்து விலகல்
(Relinquishing the Leadership)

இந்திய குடும்ப அமைப்பில், கூட்டுக்குடும்ப வாழ்க்கை (Joint Family System) முறைமைதான் உலகின் அனைத்து நாடுகளையும் கவர்ந்த சிறப்பம்சம். ஏனைய நாடுகளில், வயது முதிர்ந்த பெற்றோரைத் தங்கள் வாழ்க்கையில் மீதியுள்ள இறுதி நாட்களை முதியோர் இல்லங்களில் (Home for the Aged) கழிக்கும்படி விட்டு விடுகின்றனர்.

ஆனால் பெற்றோரைத் தங்களுடன் இறுதிவரை வைத்துத் தாங்கும் மனோபாவம் ஆசியக் கண்ட மக்களிடம், குறிப்பாக இந்தியர்களிடம் சிறப்பாக காணப்படுகிறது. பண்டைய நாட்களில் தங்களுடைய முதிர்வயதில், வீடு–மனை–சொத்துக்களைப் பிள்ளைகளிடம் ஒப்படைத்து விட்டு இறைத் தலங்கள் செல்வதும், கானகம் ஏகி வனவாசம் புரிதலும் (வனப்பிரஸ்த்தம்) வழக்கத்தி லிருந்தது.

பிள்ளைகள் தலைமை ஏற்கும் தகுதி வந்தவுடன், தாங்கள் செலுத்திய குடும்பத் தலைமையையும், அதிகாரத்தையும் பெற்ற பிள்ளைகளிடம் ஒப்படைத்துவிட்டு ஒதுங்குதல் நலம் பயக்கும். அதிகார அந்தஸ்த்தை விட்டுவிடுதல் அவ்வளவு எளிதன்று. ஆனால் விட்டுக் கொடுப்பதற்குத்தான் அதிக மனோபலமும், மனமுதிர்ச்சியும் தேவை (It needs more maturity and courage to relinquish power and position, willingly).

பிள்ளைகளுக்கு வயது ஏறஏற, பிள்ளைகளுடைய வாழ்க்கையில் தங்கள் பங்கு குறைந்துகொண்டே வருகிறது என்ற உண்மையை பெற்றோர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் (From a particular point of time, the parents play a minor role in the life of their children). அவர்களுடைய வாழ்க்கையை அவர்களே வாழப் பிள்ளைகளை அனுமதியுங்கள்.

கார் ஓட்டுநர் தனது இருக்கையில் இருக்கும்பொழுது, பின்னாலிருந்து வேறொருவர் காரை ஓட்டுவது சாத்தியமா? உங்கள் பிள்ளைகள் தங்கள் வாழ்க்கையை தலைமையேற்று வாழும்பொழுது நீங்கள் அவர்களுடைய ‘பின்னிருக்கை ஓட்டுநராக’ இருக்காதீர்கள் (Don’t be a Back-seat driver).

ஒரு குடும்பத் தலைவனுடைய இறுதி வெற்றி, அவனுக்குப் பின்னும் அவனுடைய குடும்பத்தை (சந்ததியை) திறமையாக நடத்திச்செல்லும் திறமையான மக்களை இந்த உலகில் விட்டுச்செல்வதுதான்.

நீங்கள் பயிற்றுவித்த ‘குடும்பப் பாடத்தை’ உங்கள் கண் முன்னே, உங்கள் பிள்ளைகள் தலைமையேற்று வெற்றியுடன் செயல் படுத்துவதைக் நீங்கள் காண்பதைவிட உங்களுக்கு வேறென்ன மகிழ்ச்சி இருக்க முடியும்? ஒருவேளை பிள்ளைகள் தடம் புரண்டாலோ, நெறிபிறழ்ந்தாலோ, திசை மாறினாலோ அறிவுறுத்தி ஆலோசன வழங்க வாய்ப்புள்ளதல்லவா?

நீங்கள் இவ்வுலகில் உயிருடன் இருக்கும்பொழுதே, பிள்ளை களைக் குடும்பம் நடத்தப் பயிற்றுவிக்கவில்லையென்றால், உங்கள் காலத்திற்குப்பின் குடும்பத் தலைமை ஏற்கும் உங்கள் பிள்ளைகள், அனுபவத்துடன் கூடிய உங்கள் ஆலோசனையைப் பெறும் அரிய வாய்ப்பை இழந்துபோவார்கள். அவர்களுக்குத் தேவையான காலத்தில் கிடைக்கவேண்டிய உங்களுடைய அனுபவமும் அறிவுரையும் உங்களுடன் மறைந்துவிட்டிருக்கும்.

அதிகார போதையை இறக்கி வைக்க இயலாமல், தலைமையைப் பிள்ளைகளிடம் விட்டுக் கொடுக்க முடியாமல் தவிப்போர் பலர். தலைமை இழந்தால், உடல் தளர்ந்த இறுதி நாட்களில் பிள்ளைகள் தங்களைக் கவனிக்காது தவிக்கவிட்டு விடுவார்களோ என்ற அச்சம் பல பெற்றோர்களுக்கு இருக்கிறது. உங்கள் நம்பிக்கையும், அவநம்பிக்கையும் பிள்ளைகளுடன் உங்களுக்குள்ள உறவையே பறைசாற்றுகிறது.

சுருங்க கூறின், தலைமையை இழக்கத் தயங்குகிறவர்கள், மோட்சம் போன்றிருக்க வேண்டிய இன்பமான குடும்ப வாழ்க்கையை நரகமாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

மனித வாழ்வின் இந்த காலக்கட்டத்தை **'விட்டுக் கொடுக்கும் காலம்'** எனலாம் (Period of Handing over).

வாழ்வாதாரத்தை இழக்கவேண்டாம்

தலைமையை விட்டுக் கொடுங்கள் என்றுதான் சொன்னேன். அதற்காக, முதிர்வயதில் உங்களைத் தற்காத்துக் கொள்வதற்காக வைத்திருக்கும் சேமிப்பை அப்படியே பிள்ளைகளிடம் தாரை வார்த்துவிட்டு, அனுதினமும் அவர்களிடம் கையேந்தி நிற்க வேண்டுமென்று கூறவில்லை.

தலைமையை விட்டுக் கொடுக்கச் சொல்வதால், உங்கள் தன்மானத்தையோ (Dignity) **அல்லது உங்கள் சுயாதீன** (Independent) **வாழ்கைக்குரிய பொருளாதார ஆதாரத்தையோ** (Source) **இழந்துவிடச் சொல்லவில்லை.** அநாவசியமாக பிள்ளைகளின் தனிப்பட்ட குடும்ப வாழ்க்கையில் மூக்கை நுழைத்து அவர்களை வெறுப்பேற்றாதீர்கள் என்றுதான் கூறுகிறேன்.

சில சமயங்களில், உங்கள் பிள்ளைகள் பணத்திற்காகக் கஷ்டப்படலாம்; அப்பொழுதுகூட உங்கள் முதிர்வயது காலத் திற்காகச் சேமித்து வைத்துள்ள சேமிப்பைக் கொடுப்பதைத் தவிருங்கள் என்றுதான் நான் ஆலோசனை வழங்குவேன்.

ஒருவேளை என்னுடைய ஆலோசனை கசப்பாகவும், கடின மாகவும் தோன்றலாம். நான் வங்கி அதிகாரியாக இருந்த அனுபவத்தினால் இவற்றை எழுதுகிறேன். வங்கி வாசலிலேயே ஓய்வுபெற்ற பெற்றோர்களின் கரத்திலுள்ள ஓய்வூதிப் பணத்தைப் வலுக்கட்டாயமாகப் பறித்துச்செல்லும் பிள்ளைகளை அதிகம் கண்டிருப்பதால் இந்த ஆலோசனையை வழங்கவேண்டியதாயிற்று.

வேறோரு கோணத்தில், பிள்ளைகளுக்கு நீங்கள் கொடுக்காமல் இருப்பது அவர்களுடைய நன்மைக்காக என்பதை உணருங்கள். நீங்கள் கஷ்டப்படாமலா உலகை எதிர்கொண்டு இவ்வளவு தூரம் வாழ்க்கையில் பயணித்துள்ளீர்கள்?

நீங்கள் எந்நாளும் சாசுவதமாக அவர்களோடிருந்து அவர் களுடைய பணக்கஷ்டத்தைத் தீர்த்துக்கொண்டேயிருக்க முடியுமா?

உங்களுடைய காலத்திற்குப் பின்னால், நீங்கள் இல்லாமல், அதாவது உங்களுடைய பணமில்லாமல்தானே இவ்வுலகை அவர்கள் எதிர்கொள்ளவேண்டும்?

உங்களுக்குக் கிட்டிய அனுபவம், உங்களுக்குப் பின்னும் வாழப்போகும் உங்களுடைய பிள்ளைகளுக்கும் கிடைக்க வேண்டாமா?

அவர்களையும் இவ்வுலகில் வாழ்க்கையை எதிர்த்துப் போராட அனுமதியுங்கள் — பயிற்றுவியுங்கள். உங்கள் வாழ்வாதாரத் தேவையைவிட அதிகமான பணம் உங்களிடமிருந்தால் கொடுக்கலாம் — உதவலாம். ஆனால் குடியிருக்கும் வீட்டை உங்கள் காலத்திலேயே கொடுப்பது உசிதமல்ல.

என்னுடைய கூற்றைத் தவறாகப் பொருள்கொள்ளவேண்டாம் — புரிந்துகொள்ளவேண்டாம். பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் பிரச்சனையை உருவாக்குவது எனது நோக்கமல்ல. பெற்றோர்களிடம் சொத்துக்கள் இருந்தால், உபரியாகக் கையிருப்பு இருந்தால் நல்ல சுயநினைவுடன் — சுயபலத்துடன் இருக்கும்பொழுதே பாரபட்சமின்றிப் பிரித்துக்கொடுக்கலாம்.

எல்லாற்றையும் கொடுத்துவிட்டுத் தெருவில் நிற்காதீர்கள் என்றுதான் எச்சரிக்கிறேன். உங்கள் பிள்ளைகள் தங்கள் ஆடம்பரச் செலவுகளுக்கு உங்களுடைய சேமிப்பை உறிஞ்சிவிட அனுமதிக்காதீர்கள் என்றுதான் நான் கூறுகிறேன்; முதிர் வயதில் உங்களுடைய சேமிப்பையும் தாரைவார்த்துவிட்டு நிராதரவாக இப்பரந்த உலகில் தவிக்காதீர்கள் என்றுதான் கூறுகிறேன்.

கையில் தாராளமாக இருந்தும் பிள்ளைகளுக்குக் கொடுக்காமல் புதையல்காக்கும் பூதமாக இருந்தால், கிழவன்—கிழவி எப்போது மண்டையைப்போடுவார்கள் என்று உங்கள் பிள்ளைகள் ஏங்க—எதிர்பார்க்கத் துவங்கிவிடுவார்கள்.

"பெற்றமனம் பித்து பிள்ளைமனம் கல்லு" என்று தமிழிலொரு பழமொழியுண்டு. பெற்றுவிட்டதால், பிள்ளைகளெல்லாம் பெற்றோர்களுக்கு அடங்கியிருப்பார்கள் என்று எதிர்பார்ப்பது அறிவுடைமையாகாது.

நீங்கள் எவ்வளவுதான் பாசமூட்டி வளர்த்தாலும் உங்கள் பிள்ளைகள் உங்கள் எதிர்பார்ப்பின்படி பின்னால் இருப்பார்கள் என்று எதிர்பார்க்காதீர்கள். ஒருவேளை உங்கள் எதிர்பார்ப்பின்படி பிள்ளைகள் அமையப்பெற்றிருந்தீர்களானால் கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

சிலவேளைகளில், உங்களுடைய பிள்ளைகள் உங்களுக்கு உதவ விரும்பியும், முடியாத குடும்பச் சூழ்நிலை இருக்கலாம். அல்லது பொருளாதார பற்றாக்குறையினால் உதவ முடியாமலிருக்கலாம். உங்களுடைய ஆண்பிள்ளைகள் உதவுவதை அவர்களுடைய மனைவிகள் தடுக்கலாம், உங்களுடைய மகள்கள் உதவுவதற்கு அவர்களுடைய கணவர்கள் இடையூறாக இருக்கலாம்.

ஆகையால்தான் 'வெற்றிவேற்கை' என்ற நூலிலுள்ள தமிழ் பாடல், "பெற்றோர் எல்லாம் பிள்ளைகள் அல்லர்; உற்றோர் எல்லாம் உறவினர் அல்லர்" என்று கூறுகிறது.

பிள்ளைகள் தாங்கள் வளர்ந்த பின்னும் பணிவுடனிருப்பதும், பணிவிடைபுரிவதும் உங்களிடையை நிலவும் பாசப் பிணைப்பினை பொறுத்ததே. இல்லத்தை இன்பமயமாக்குவது குடும்பத்திலுள்ள உறுப்பினர்களிடையை உள்ள அன்பு கலந்த உறவே.

நிறைவுரை

இல்வாழ்க்கையின் அடித்தளம் அன்பு என்பதைத் திருவள்ளுவரும் தெளிவுபட இயம்புகிறார்..

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல் வாழ்க்கை
பண்பும் பயனும் அது"

– (திருக்குறள்– இல்வாழ்க்கை – அதிகாரம் 5).

(பொருள்: அன்புடனும், நல்நெறியுடனும் நடத்தும் குடும்ப வாழ்க்கையே அக்குடும்பத்தினருக்குப் புகழும், பெருமையும் சேர்க்கும்).

கிறிஸ்து முன்மாதிரியாக நடந்துகாட்டிய இந்த அன்புதான் ஒரு கிறிஸ்தவக் குடும்பத்தில் நிலவவேண்டிய நிறைவான அன்பாகும். குடும்பத்தில் **"நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூரக் கடனாளிகளாயிருக்கிறோம்"** (1 யோவா.4:11) என்பதை மறவாதீர்கள்.

பெற்றோர்களிடம் பிள்ளைகளும், பிள்ளைகளிடம் பெற்றோர்களும், எதிர்பார்ப்பு இல்லாத அன்புடனிருந்தால், அந்தக் குடும்பத்தில் இன்பம் தழைத்தோங்கும்.

4

இந்த இரகசியம் பெரியது

"இதினிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்து, இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள். இந்த இரகசியம் பெரியது" (எபேசியர் 5:31–32).

மானுடம், படைப்பின் அடிப்படையில் ஆண்,பெண் என்னும் இருபாலாரால் ஆனது (God has created humans in two genders - Man and Woman; therefore, humanity is duality in nature). ஆணினம் மட்டுமோ அல்லது பெண்ணினம் மட்டுமோ மானுடத்தின் மெய்யான பிரதிநிதியாய் இருத்தல் இயலாது. இருவரும் சேர்ந்ததுதான் மானுடம்.

திருமறை, **"கர்த்தருக்குள் ஸ்திரீ இல்லாமல் புருஷனு மில்லை, புருஷனில்லாமல் ஸ்திரீயுமில்லை" (1 கொரி.11:1)** என்று கூறுகிறது. பெண்ணின் படைப்பிற்குப் பின்னரே படைப்பு நிறைவுறு கிறது (Woman was the finishing grace of God's Creation).

ஒன்றின்றிப் பிறிதொன்றில்லை

ஆணும், பெண்ணும் ஒரேயொரு முழு உருண்டையின் இரு பாதிகள் போன்றவர்கள் (The man and woman are the hemisphere of a whole sphere); ஒரே இதயத்தின் இரு பக்கங்களுக்குக்கூட ஒப்பிடலாம் (Two sides a single heart).

இஞ்ஞாலத்தின் இயக்கம், ஆணால் மட்டுமோ அல்லது பெண்ணால் மட்டுமோ நடைபெறுவது சாத்தியமில்லை; ஒன்றின்றி மற்றொன்றில்லை. மானுடம் தொடரவும், இப்பூவுலகு இயங்கவும், ஆண்–பெண் இருபாலாரும் ஒருவருக்கொருவர் இன்றியமை யாதவர்கள் (Man and woman are indispensible to each other, for the world to go on).

ஆண் (ஆதாம்) முதலாவது படைக்கப்பட்டிருந்தாலும், ஆதாமின் படைப்புடன் மானுடப்படைப்பு முழுமையுறவில்லை என்பதை இறைவன் உணர்ந்திருந்தார் (God recognized that man by him-self was not complete). ஆகையால்தான், **"மனிதன் (ஆண்) தனியாயிருப்பது நல்லதல்ல"** (ஆதி.2:18) என்று கூறுகிறார். மானுடப்படைப்பு முழுமையுறவும், மிருகங்கள் பறவைகளிடமிருந்து பெற்றுக்கொள்ள இயலாத தோழமை கிட்டவும், மற்ற படைப்புகளிடம் பகிர்ந்துகொள்ள முடியாத அன்பைப் பகிர்ந்துகொள்ளவும் பெண் (ஏவாள்) படைக்கப்பட்டாள்.

மானுடத்தின் பால்–பாகுபாடு (Gender difference) உடற் கூற்றின்படி வேறுபடினும், ஒன்றுக்கொன்று முரணானதல்ல; ஒன்றிலில்லாத் தகுதியைப் பிறிதொன்று பூர்த்திசெய்கிறது. (Each one is complementing each other).

மானுடத்தின் அனைத்து தகுதிகளையும், சிறப்புக்களையும் இறைவன் ஒரே பாலுக்கு (sex) வழங்கி விடவில்லை. மனித உடற்கூற்று அமைப்பின்படி ஆண்–பெண் இருபாலாருமே தங்களுக்கென சில தனித் தகுதிகளைப் (சிறப்புத் தகுதிகளை) பெற்றுள்ளனர். எடுத்துக்காட்டாக, குழந்தை பெற்று பால் கொடுக்கத்தக்க உடலமைப்பைப் பெண்கள் பெற்றுள்ளனர். கடின வேலைக்குத் தகுதியான உடல்வாகினை ஆண்கள் பெற்றுள்ளனர்.

ஆண்–பெண் இருபாலாரும் இணைந்து செயலாற்றுவதே இறை எதிர்பார்ப்பு. இங்ஙனம் இருபாலாரும் இணைந்து செயல்பட இறைவன் தோற்றுவித்த அமைப்பே இல்லறமாகும்.

இணைந்த உறவு

குடும்ப அமைப்பு திருமணம் என்னும் பந்தத்தினால் உருவாகிறது. வாலிப வயது வந்த ஒரு ஆணும்–ஒரு பெண்ணும் திருமணம் என்னும் ஒழுங்கினால் இணைக்கப்பட்டு, இல்லறம் என்னும் இரத்தசம்பந்த உறவுடனமைந்த கூட்டமைப்பை உருவாக்குகின்றனர். இக்குடும்ப அமைப்பினைத் தோற்றுவித்தவர் இறைவனே. ஆதிப்பிதா ஆதாமும் மனுமக்களின் தாய் ஏவாளும் ஏதேனிலே இறைவனால் இல்லறத்தில் முதலாவது இணைக்கப் பட்டனர். இதுவே மனுக்குல மண உறவின் ஆரம்பம்.

ஒரு ஆணும் – ஒரு பெண்ணும் திருமணம் செய்து கொள்ளவது ஒன்றும் கடினமான காரியமில்லை. காலங்காலமாக அனுதினமும் ஆயிரக்கணக்கானோர் இதைத்தான் இவ்வுலகில் செய்து கொண்டிருக்கிறார்கள். திருமண வைபவம் என்பது இருவருடைய (மணமகன்–மணமகள்) குணங்களையும் ஒரே நாளில் மாற்றிப்போடும் மாய வித்தையல்ல.

திருமண நாளிற்கு அடுத்த நாள் யாரும் ஒரு புதிய நபராக உருமாறிப்போவதில்லை. ஆனால், திருமணத்தில் இணைந்த இருவரிடையே ஒரு நல்ல இல்லறம் உருவாக இருவரும் மாறவேண்டும். அப்படியானால் என்னென்ன செய்ய வேண்டும்?

திருமணத்திற்குப் பிறகு இருவரும் இணைந்து நல்லதொரு இல்லறத்தை உருவாக்குவதற்குத் திட்டமிடவேண்டும், முயற்சி எடுக்கவேண்டும், தன்னலம் துறக்கவேண்டும், ஒருவ்ரை யொருவர் புரிந்துகொள்ளவேண்டும், இறைவனின் உறுதுணையை நாடவேண்டும்.

'இக்குடும்ப அமைப்பினை நிர்வகிப்பது எங்ஙனம்?' எனக் கற்பிக்கும் கல்விக்கூடங்களோ அல்லது பயிற்சி நிலையங்களோ நம் சமுதாய அரங்கினில் யாதுமில்லை. நீச்சல் தெரியாதவன் கிணற்றில் குதித்து நீச்சல் கற்றுக்கொள்வது முயலுவதுபோல, மனுமக்களும் மணம்முடித்த பின்னர் இல்லறம் நடத்தும் கலையை முட்டி–மோதித் (By trial and error method) தாங்கள் கற்றுக்கொண்ட வழிகளைப் பின்பற்ற விழைகின்றனர். இம்முறையில் சிலர் வெல்கின்றனர், பலர் வீழ்கின்றனர்.

கலங்கவைத்த கருத்தாய்வு

அமெரிக்க நாட்டிலுள்ள ஒரு பிரபல ஆங்கில நாளேடு மணமான தம்பதியர்களிடம் ஒரு கருத்தாய்வு நடத்தியது. அவ்வாய்வில் கேட்கப்பட்ட கேள்வி இதுதான்:–

"நீங்கள் இப்போது வாழ்ந்துகொண்டிருக்கும் வாழ்க்கையை மறுபடியும் வாழ இறைவன் உங்களுக்கு ஒரு வாய்ப்பினை வழங்கினால், நீங்கள் அவ்வமயம் இப்போது உங்களுக்குள்ள வாழ்க்கைத் துணையையே மறுபடியும் தெரிவுசெய்துகொண்டு வாழ்வீர்களா?"

கருத்தாய்வின் கண்டுபிடிப்பு அதிர்ச்சியளிப்பதாக இருந்தது. 80%–க்கும் மேலானோர், "மாட்டோம்" எனத் தெளிவாகப் பதிலளித்திருந்தனர்.

நீங்கள் மணமான ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ இருந்தால், அந்த நாளேட்டின் கருத்தாய்வுக் கேள்விக்கு உங்கள் பதிலென்ன?

இந்தியாவில் நமது கலாச்சார பாரம்பரியப் பண்பாட்டினால், 'எதிர்மறை பதில்' ஒருவேளை குறைந்த விழுக்காடாக (Percentage) இருக்கலாம். எனினும், நம்நாட்டில் பெரும்பாலான தம்பதியர்கள் தங்கள் துணைவர்களுடன் வாழ்கிறார்கள் என்பதைவிட, தங்கள் துணைவர்களைச் சகித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் அதிர்ச்சிகலந்த உண்மை.

உலகளாவிய கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொண்ட இந்தியப் பிரதிநிதியைப் பார்த்து வேறொரு நாட்டுப் பிரதிநிதி, "பெற்றோர் களால் தெரிவு செய்யப்பட்ட, முன்பின் தெரியாத /அறியாத நபரை உங்கள் வாழ்க்கைத் துணையாக ஏற்றுக்கொண்டு எப்படி வாழ்கிறீர்கள்?" என்று கேட்டார்.

அதற்கு இந்தியப் பிரதிநிதி கூறினார், "நாம் இவ்வுலகில் பிறக்கும்பொழுது, நம் தாய் தந்தையரையோ அல்லது நம் சகோதர சகோதரிகளையோ தெரிவுசெய்துகொண்டு பிறப்பதில்லை. ஆனாலும், நம்மைப் பெற்ற பெற்றோர் களுடனும், உடன்பிறந்த உடன்பிறப்புகளுடனும் சேர்ந்து வாழ்கிறோம். அவர்களிடம் அன்பு செலுத்தி வாழ்கிறோம். அதைப்போல்தான் பெற்றோர்கள் பார்த்து மணமுடித்து வைக்கும் முன்னறிமுகமில்லாத வாழ்க்கைத் துணையுடனும் அன்புசெலுத்தி ஒன்று சேர்ந்து வாழ்கிறோம்" – என்றுரைத்தார்.

இந்த பதிலைச் சரியான பதிலென்று கூறமுடியாவிட்டாலும், இது புத்திசாலித்தனமான பதில் என்பதை மறுப்பதற்கில்லை. இத்தகைய தத்துவார்த்தப்போக்கு இந்தியத் தம்பதியரிடம் இருந்தாலும், பல தம்பதியர்கள் துன்பங்களைச் சகித்துக்கொணடு வாய்மூடி மௌனிகளாய் தங்கள் வாழ்நாட்களைக் கடத்திக்கொண்டிருக் கிறார்கள் என்பதுதான் உண்மை.

பல தம்பதியினர், ஒரே வீட்டில் ஒரே குடும்பமாக உடலளவில் வாழ்ந்தாலும், மனதளவில் அந்நியப்பட்டு, ஒரே கூரையின் கீழ்வாழும் அன்னியர்களாய் (strangers under one roof) தங்கள் வாழ்நாளைக் கடத்திக்கொண்டிருக்கின்றனர். இதற்குக் காரணமென்ன?

பல தம்பதியினர் தங்கள் திருமண உறவின் நோக்கமென்ன அல்லது தங்கள் இல்லற வாழ்வின் குறிக்கோள் என்ன என்பதை அறியாமல் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

அனுகூலங்களும் – அனுகூலமின்மைகளும் (Advantages and Disadvantages)

மணமுடிப்பதில் அனுகூலங்களுமுண்டு, அனுகூல மின்மைகளும் உண்டு. எடுத்துக்காட்டாக, மணமாகாத ஆண், தனிமையுள்ள வனாகவும் (Loneliness), பிறருடைய தன்னலமற்ற அன்பைப் (தாய்–தந்தை தவிர) பெறாதவனாகவும் இருக்கிறான்; ஆனாலும், சுதந்திரமாகவும், பிறரைக்குறித்துக் கவலையற்றவனாகவும், தன்னிடமுள்ள எதையும் பிறரோடு பங்கிட அவசியமற்றவனாகவும் இருக்கிறான்.

வாழ்க்கை என்பது பெரும்பாலும் ஒரு வியாபாரமாகத்தான் இருக்கிறது. வாழ்க்கையில் ஒன்றைக் கிரையமாகக் கொடுத்து அல்லது இழந்துதான் வேறொன்றைப் பெறவேண்டியதாக

இருக்கிறது. திருமணத்திலும் இதே நிலைதான். சிலவற்றை இழக்கத் தியாகிக்க வேண்டும். அப்பொழுதுதான் இல்லறம் வெற்றிபெறும்.

திருமணத்திற்குப் பின் அவனுக்குச் சுதந்திரம் குறைகிறது. தனக்குள்ளவைகளையெல்லாம் தன் மனைவியுடனும், பிள்ளைகளுடனும் பகிர்ந்து கொள்ளவேண்டியதிருக்கிறது. அவளும் அதுபோல் தன்மேல் தனக்குள்ள அன்பைவிட மனைவியிடமும், பிள்ளைகளிடமும் அதிக அன்பை செலுத்த வேண்டியதிருக்கிறது.

திருமணம் என்பது கடைக்குப் போய்ச் சாமான் வாங்குவது போல அல்ல. பிடித்தால் வைத்துக்கொள்ளலாம்; நாளைக்குப் பிடிக்காவிட்டால் கடைச் சாக்கை தூக்கி எறிந்துவிடலாம். திருமண உறவினால் வந்த வாழ்க்கைத் துணையை அப்படித் தூக்கியெறிய இயலாது. திருமணம் என்பது வாழ்க்கையில் ஒருமுறை மட்டுமே நடக்கும் (நடக்கவேண்டிய) நிகழ்ச்சி. திருமண வாழ்க்கை கண்டிப்பாக வெற்றியடைந்தே தீரவேண்டும்.

திருமணத்தில் இணையும் இல்லறத்தில், கொடுத்தால்தான் பெற்றுக்கொள்ள முடியும்; உங்களிடமுள்ளதை இழந்தால்தான் வெற்றிபெற முடியும். கொடுக்கவும் – இழக்கவும் தயாராக இருக்கிறீர்களா?

இல்லறத்தின் நோக்கம்

இல்லற வாழ்வின் நோக்கம் என்ன என்பதற்குப் பலரும் பலவகையான பதிலைக் காரணங்களாகக் கூறக்கூடும்.

i. கணவன் மனைவியாக வாழவிழையும் ஆணும் பெண்ணும் தங்கள் உறவை சட்டப்படிச் செல்லத்தக்க உறவாக்கிக் கொள்ளுவதற்காகவும், சமுதாயப் பார்வையில் முறையான உறவை உருவாக்கிக்கொள்வதற்காகவும் இல்லறத்தில் இணைகின்றனர் (To legalise the arrangement).

ii. தங்களின் வாழ்க்கைக்குப் பின்னும் தங்கள் வம்சம் தொடர்வதற்கு வாரிசுகளை இவ்வுலகில் உருவாக்குவதற்காக (To continue the generation).

iii. பிள்ளைகளைப் பெற்று வளர்ப்பதற்குரிய பொறுப்புக்களைப் பகிர்ந்து கொள்ளுவதற்காக (To share the responsibility in rearing the children).

iv. ஒருவரையொருவர் கவனித்துக்கொள்ளுவதற்காக (To take care of each other / To lookafter each other).

v. சமுதாய அந்தஸ்த்தைப் பெறுவதற்காக (To enjoy social status).

vi. சமுதாய பாதுகாப்பிற்காக (For social security).

vii. தனிமையைத் தவிர்த்து, தோழமையுடன் கூடிய கூட்டு வாழ்க்கை வாழ்வதற்காக (To avoid loneliness and to enjoy companionship).

இவைகளுடன் இன்னும் பல காரணங்களையும் சேர்த்து நீங்கள் சொல்லக்கூடும். எல்லாம் சரிதான். ஆனால் இவைகள் எல்லா வற்றிற்கும் மேலாக, இறைவன் இல்லற வாழ்க்கையை ஏற்படுத்திய தின் நோக்கம் ஒன்றுண்டு. அந்த நோக்கமென்ன?

இறைவனின் நோக்கம்

ஆதாமைப் படைத்த பின்னர் மானுடப் படைப்பில் இறைவனுக்கு நிறைவு உண்டாகவில்லை. மானுடத்தை ஆண்-பெண்ணாக உண்டாக்கி அவர்களுக்குள் இல்லற உறவைத் தோற்றுவித்த பின்னரே இறைவன் தனது படைப்பில் திருப்தியுற்றார்.

சாதாரணமாக உலகத்தார், திருமணமான தம்பதியரை "ஈருடல் – ஒருயிர்" என்றுதான் கூறுவார்கள். ஆனால் கிறிஸ்தவம், திருணமான தம்பதியரை நேர் எதிராக (உல்டாவாக) வர்ணிக்கிறது. திருமணமான தம்பதியரை "ஈருயிர் – ஒருடல்" என்று திருமறை வாயிலாகக் கர்த்தர் அறிவுறுத்துகிறார்.

இல்லறத்தில் இணைக்கப்பட்டதினிமித்தம், 'புருஷன் தன் தகப்பனையும் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாக இருப்பார்கள்' (ஆதி. 2:24).

இல்லறத்தினால் இணைந்த கணவனும் மனைவியும் இருவரும் இருவரல்ல, ஒருவரே. திருமணம் என்னும் வைபவத்தில், இரண்டு உயிர்கள் பயபக்தியான அர்ப்பணிப்புடன் ஒன்றாக (ஒரே மாம்சமாக) இணைகின்றன (Marriage is the solemn dedication of two lives to be blended into ONE flesh).

இதற்கு எடுத்துக்காட்டு கூறுவதானால் 'ஒட்டு மரத்திற்கு' ஒப்பிடலாம். ஒரு மாமரத்தின் ஒரு கிளையை வெட்டி பிறிதோர் மாமரத்தின் கிளையுடன் இணைத்து, அவை இரண்டும் சேர்ந்து பிறிதோர் மாமரம் உருவாகிறது. இதை Organic Unity என்று கூறுவார்கள்.

ஈருடலாயிருப்பினும் கணவன்-மனைவி இருவரும் ஒரே மாம்சமே. இதுதான் மானுடப் படைப்பின் இறை நோக்கம் – இறை இரகசியம். இறைமைந்தன் இயேசு கிறிஸ்து, மனுமைந்தனாக இவ்வுலகில் வாழ்ந்தபொழுது, இவ்விறை இரகசியத்தை உறுதி செய்துள்ளார் (The institution of Family Unit has been approved by Jesus Christ).

"இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான்.

அவர்கள் ஒரே மாம்சமா யிருப்பார்கள் ....இப்படி இருக்கிற படியினால், அவர்கள் இருவராயிராமல் ஒரே மாம்சமாயிருக் கிறார்கள்" (மத்.19:5, 6; மாற்.10:7,8; எபே.5:31).

இவ்வுறவு மானுட ஞானம் புரிந்துகொள்ளும் எல்லையைக் கடந்த இறை இரகசியம் (This secret transands human understading). புனித பவுல், **"இந்த இரகசியம் பெரியது"** எனக் கூறுகிறார். (எபே.5:32).

திருமறை அடிப்படையில், இரு உயிர்கள் / உடல்கள் ஒன்றாய்க் கலந்து ஒரே சரீரமாக இணைவது இலகுவான காரியமல்ல (The blending of two lives into one is never a smooth operation). இந்த இரசவாதக் கலவையை உருவாக்கும் செயல்முறையில் பலவகையான இடர்பாடுகளை – பிரச்சனைகளைச் சந்திக்கத்தான் வேண்டும். இரு உயிர்கள் – உடல்கள் ஒன்றாகக் கலப்பது கடினமான அனுபவம்தான்

வெற்றியான இல்லறத்தை உருவாக்க கணவன் மனைவி இருவருமே அதிகம் சிரமங்களெடுத்து பாடுபடத்தான்வேணடும். ஆகையால்தான் பவுலடியார், **"ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர் பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். இவை எல்லாவற்றின்பேலும், பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள்"** (கொலொ.3:13,14) என்று கூறுகிறார்.

எனவே, நமக்குள்ளும், நம்முடைய வாழ்க்கையின் மூலமாகவும் கிரியைபுரியும் இறையன்பிற்கு (The love of God working in and through our lives) நாம் இசைந்து நடந்தால்தான், இல்லறத்தில் இணைந்த தம்பதியர்களிடையே ஈருடல் ஒருடலாக இணைகின்ற மகிழ்ச்சியான அற்புத அனுபவம் (happy blending of our two lives into one) நிகழ முடியும்.

உறவுடமை.

திருமண பந்தத்தால் இணைக்கப்பட்ட ஆணையும் பெண்ணையும் **'வாழ்க்கைக் கூட்டாளிகள்'** (Life Partners) எனக்குறிப்பிடுவர். இவ்வண் பலர் இயம்புவதுபோல், தாம்பத்தியத் தில் இணைந்த தம்பதியர்களிடையே நிலவுவது கூட்டுடமை (Partnership) மட்டுமல்ல, அதையும் கடந்து, அவர்களிடையே மிளிர்வது **உறவுடமை** (Relationship). திருமணத்தில் இணையும் ஆணும்–பெண்ணும் ஒருவருக்கொருவர் கூட்டாளிகளாக மட்டு மல்ல, வாழ்க்கை முழுவதும் நீடிக்கும் உறவையும் இருவருக்கும் ஏற்படுத்துகிறது (Marriage does not creat just partnership, but a life-long relationship).

உறவுகள் தானே ஏற்படுவதில்லை, உறவுகள் உருவாக்கப் படுகின்றான (Relationships are not just formed, but have to be forged). இந்த உறவை உருவாக்கும் தலையாய பணி கணவன் மனைவி இருவருக்கும் உண்டு.

குடும்ப உறவிற்கு ஆண்டவர் அடிப்படையாக இருக்கவேண்டும் என்பது உண்மைதான். ஆனால் கணவன்–மனைவி இருவருடைய ஒத்துழைப்பும் இல்லையென்றால் ஆண்டவர் என்ன செய்ய இயலும்? இல்லற உறவில் ஆண்டவர் மூன்றாம் நபர்தான் (God is the only third party in a marriage that can make it work).

குடும்ப உறவு மனித அறிவின் எல்லை கடந்த புரியாப் பதிர். இது இறை ஆதீனத்தின் 'இறை இரகசியம்.' Marital relationship is a Unique Union and a Mystical Relationship. பவுலடியார், இவ்வுறவை (கணவன் – மனைவி / மணமகன் – மணமகள்), விசுவாசிகளுக்கும், கிறிஸ்துவுக்குமுள்ள உறவுடன் ஒப்பிடுகின்றார் (எபே.5:23).

மானுட உறவில் கணவன் மனைவி உறவைவிட நெருக்கமான அல்லது அந்தரங்கமான உறவு இவ்வுலகில் வேறொன்றுமில்லை. இவ்வுறவு, அனைத்து உறவுகளையும் கடந்த அந்தரங்க உறவு.

இப்பேருண்மையை விளங்கிக் கொண்டு இல்லறத்தில் ஈடுபடும் தம்பதினரின் வாழ்க்கை, ஏனையத் தம்பதியினரின் வாழ்க்கையை விடச் சிறப்புற்றுத் தனித்துவத்துடன் விளங்குமென்பதில் ஐயமில்லை (If the married-couples could grasp this secret and hold on to it, their marital-life shall never be the same).

நிறைவுரை

உங்கள் இல்வாழ்க்கை, பார்ப்போர் மெச்ச, பார்போற்றும் இல்லறமாக இருக்க வேண்டுமானால், குடும்ப அங்கத்தினர்கள் அனைவரும் பொறுப்புடன் இருக்கவேண்டும் – பாசப்பிணைப்புடன் இருக்கவேண்டும் – வீட்டு அலுவல்களைத் தங்களுக்குள் பகிர்ந்து கொள்ளவேண்டும்.

குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் அன்பென்னும் பாசக் கயிற்றினால் கட்டப்பட்டவர்களாக, தங்கள் தங்கள் குடும்ப கடைமைகளை உணர்ந்து செயலாற்றினால், இல்வாழ்க்கை இனிய அனுபவமாக அமையும்.

எப்படிப்பட்ட குடும்பத்தின் உறுப்பினர்கள் இவ்வுலகில் மகிழ்ச்சியாக இருப்பார்கள்?

எக்குடும்பத்தில் மற்றவர் நற்குணத்தைக்
காணும் பண்பு இருக்கிறதோ,

எக்குடும்பத்தில் எவர் செயலையும்
மேலோட்டமாக முடிவு செய்யாமல்,

அவர் செயலிலுள்ள உண்மையைக்
காண விழைகிறார்களோ,

எக்குடும்பத்தில் எவரும் எரிச்சலடையாமல்
பொறுமை காத்து நடக்கிறார்களோ,

எக்குடும்பத்தில் எவரையும் தவறாகப்
புரிந்துகொள்வதைக் தவிர்க்கிறார்களோ,

எக்குடும்பத்தில் மற்றவரின் குறைகளைக் காண்பதில்
மகிழாது அவருடைய நற்குணத்தைக் காண
முயல்கிறார்களோ,

எக்குடும்பத்தில் ஒருவர் மற்றவருக்குத்
தன்னலமின்றி உதவிகள் புரிகிறார்களோ

எக்குடும்பத்தில் தீயவைகளைப் பேசுவதில்
மகிழாதிருக்கிறார்களோ,

எக்குடும்பத்தில், மற்றவரிடத்தில்
நல்லன–அல்லவற்றை மறக்கிறார்களோ,

எக்குடும்பத்தில் தீமைகள் நன்மைகளால்
மேற்கொள்ளப்படுகின்றனவோ,

அக்குடும்பத்தில் வாழும் பண்புநிறை
மக்கள் அனைவருமே மோட்சத்தின்
மகிழ்ச்சியை ருசிப்பர்கள் என்றென்றுமே.

"கிறிஸ்தவ வாழ்க்கையின் உண்மையான சவால் ஆலயத்
தில் (திருச்சபையில்) இல்லை, வீட்டில்தான் இருக்கிறது... ....
நம்முடைய கிறிஸ்தவ அனுபவம் நம்முடைய குடும்ப உறவு
களில் வெளிப்படவேண்டும்" என்று Chuck Smith தனது
"Christian Fanily Relationship" என்ற நூலிலே கூறுகிறார் (The
true test of Christianity isn't in the Church but in the home .....
Our Christian experience should find its expression within our
home relationships).

"வீட்டை மனிதர்கள் தங்களுடைய கரங்களினால் கட்டு
கிறார்கள்; ஆனால் இல்லத்தை தங்களுடைய இதயங்களினால்
கட்டுகிறர்கள்" (A house is built by human hands, but a home
is built by human hearts). குடும்பத்திலுள்ள உறுப்பினர்கள்
அனைவரும் தங்களுடைய இதயங்களால் ஒருவரிலொருவர்
கட்டுண்டிருப்பதே இனிய இல்லறம்.

"கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் ரசித்துப் பார்த்துக்கொண்டிருப்பதில் உண்மையான அன்பில்லை. இருவரும் ஒருமித்து ஒரே திசையில் நோக்குவதில்தான் அன்பு இருக்கிறது" என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும் (Love does not consist in gazing at each other, but in looking together in the same direction).

"ஒரு சிறந்த இல்லறத்தைத் தவிர, அதிக இனிமையானதும், நட்புள்ளதும் அல்லது கவர்ச்சியானதுமான தோழமை அல்லது கூட்டுறவு வேறொன்றுமில்லை" என்று மார்ட்டின் லுத்தர் கூறுவது உண்மையான வார்த்தைகளன்றோ? (There is no more lovely, friendly or charming relationship, communion or company, than a good marriage - ***Martin Luther***).

5

ஒருவருக்கொருவர் அடிமைகள்

இறை பயத்துடன் ஒருவருக்கொருவர் (அடிமையாயிருங்கள்) கீழ்ப்படிந்திருங்கள் (எபேசியர் 5:21).

'ஒரு குடும்பத்தில், கணவன்–மனைவி இருவரில் யார் பெரியவர்?'

இக்கேள்வி தொன்றுதொட்டு இன்றுவரை மானிடரிடையே நின்று நிலவி வரும் கேள்வியாயிருப்பினும், இன்றைய சமுதாயச் சூழலில் இதன் தாக்கம் சற்று மிகையாகவேயுள்ளது. 'பெண் விடுதலை' (Woman Liberation), 'ஆணாதிக்கம்' (Male Chauvinism) என்னும் வார்த்தை ஜாலங்களினால், தவறான உபதேசங்கள், ஆண்கள் மத்தியிலும், பெண்கள் மத்தியிலும் பரிவர்த்தனை செய்யப்பட்டுக்கொண்டிருக்கின்றன

'ஆணும் பெண்ணும் சரிசமமானதால், பெண் தன்னை எந்த ஆளுகைக்கும் உட்படுத்திக்கொள்ள அவசியமில்லை'–என்ற எண்ணத்தை மனைவியர் உள்ளத்திலே விதைக்கிறார்கள். அதே போன்று கணவர்களும், 'தாங்கள் பெண்களைவிட உயர்வானவர்களென்றும், மனைவியர்கள் தங்களுக்கு அடங்கிப் பணிசெய்வதைத் தவிர வேறு மார்க்கமில்லை' எனவும் கருதுகின்றனர்.

குடும்பத்தில் கணவன்–மனைவியின் நிலைகுறித்து இவ்விரு பாலாரும் கொண்டுள்ள அனுமானங்கள் எத்துணை தவறான கருத்துக்கள்! – எத்துணை விபரீத போதனைகள்!

இறைவன் விரும்பும் நோக்கங்கள்

"கணவனும் மனைவியும் (1), வாழ்விலும் – தாழ்விலும் ஒருவருக்கொருவர் தங்கள் (2). வாழ்நாள் முழுவதும், (3). தோழமையும், (4). உதவியும், (5). ஆறுதலும் அளிக்கும்படி ....."

இந்த வார்த்தைகளை எல்லாக் கிறிஸ்தவத் திருமண ஆராதனைகளிலும் கேட்டிருப்பீர்கள். இந்த வார்த்தைகளில் மணவாழ்க்கையின் நோக்கங்கள் தெளிவுறுத்தப்பட்டுள்ளன.

1. வாழ்விலும் தாழ்விலும்

வாழ்க்கை வளமாக இருக்கும்பொழுது நண்பர்களும், உறவுகளும் உங்களைச் சுற்றி வருவார்கள். வாழ்க்கையின் சோதனையான காலங்களில் (பணகஷ்டம், வறுமை, வியாதி), உங்களிடம் உண்மையான அன்புகொண்டவர்கள் மட்டுமே தோள்கொடுத்து துணையாக அருகில் இருப்பார்கள். இப்படிப்பட்ட காலங்களில்தான் கணவன்–மனைவியிடையேயுள்ள தோழமையின் வலிமை சோதிக்கப்படுகிறது.

2. வாழ்நாள் முழுவதும்

கணவன் மனைவியிடையே ஏற்படும் தோழமையும் – உதவியும் – ஆறுதலும் ஒரு குறிப்பிட்ட சமயத்திற்கோ – அல்லது குறிப்பிட்ட காலக்கட்டத்திற்கோ மட்டும் உரித்தானதல்ல. அந்தப் பந்தம் வாழ்நாள் முழுவதும் – மரணம் பிரிக்கும் வரைக்கும் தொடரும் உறவாகும்.

3. தோழமை

ஆணுக்கும் – பெண்ணுக்கும் இல்லற வாழ்க்கைக்கு வெளியே கிடைக்காத மிக ஆழமான, அந்தரங்கமான நட்புறவை (தோழமையை) ஒருவரிலொருவர் பரஸ்பரம் செலுத்துவதற்காகவே திருமணத்தில் இணைக்கப்படுகின்றனர்.

4. உதவி

மனித வாழ்க்கை என்பது ஒருவரிலொருவர் சார்ந்த வாழ்க்கையாகும். எந்த நபரும் தனக்கு நம்பிக்கையுள்ள ஒருவரில் சார்ந்து வாழவே முனைவார்கள். திருமணத்தில் இணையும் ஆணும் –பெண்ணும், தங்கள் சுயநலம் விடுத்து ஒருவரிலொருவர் சார்ந்து வாழ முழுமையான நம்பிக்கைக்குப் பாத்திரமுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

5. ஆறுதல்

வாழ்க்கைப்பாதையில், ஆணும் – பெண்ணும் சந்திக்கும் இடர் பாடுகளையும் – இன்னல்களையும் கடக்கவேண்டிய தருணங்களில், மற்றவர் சோர்ந்துபோகாமல் ஒருவருக்கொருவர் ஆறுதலாகவும் தேறுதலாகவும் இருந்து, ஒருவர் பாரத்தையொருவர் மற்றவர் பகிர்ந்து–சுமந்து இல்லற வாழ்க்கையை இழுத்துச் செல்லவேண்டும்.

பரஸ்பர அக்கறை

இனிமையான இல்லற வாழ்க்கையில் அனுபவம்கொண்ட முதியவர் ஒருவர், **“நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கவேண்டு மென்று விரும்பினால், திருமணம் செய்துகொள்ளாதீர்கள்.”**

என்று கூறினார் (If you want to be happy, don't get married). அவர் அவ்வண் கூறியதின் பொருளென்ன?

அவர் ஒன்றும் இல்லற வாழ்க்கையின் எதிரி இல்லை. அப்படியானால் அவர் கூறிய கருத்தின் பொருளென்ன?

திருமணத்தால் இணைக்கப்பட்டு இல்லறத்தில் நுழையும் தம்பதியர்கள் இருவரும் தனக்குத்தானே இன்புற விழையாமல், தன்னுடன் திருமண பந்தத்தினால் இணைக்கப்பட்டுள்ள தன் துணைக்கு வாழ்நாள் முழுவதும் மகிழ்வளிப்பதனையே தங்கள் கருத்தாய்க் கொண்டிருத்தல்வேண்டும்—என்பதுதான் அவர் கூற்றின் பொருளாகும்..

மணவாழ்வின் மகிழ்ச்சி சுயநலமுள்ள (selfish) மகிழ்வல்ல; அது சுயநலமற்ற (selfless) அல்லது சுயம் துறந்த (sacrificial) மகிழ்வாகும் (The happiness in marriage is not selfish-happiness, but a selfless / sacrificial happiness).

சுயநலத்திற்கு நல்லதொரு எடுத்துக்காட்டு குழந்தைகள்தான். தனக்கு வேண்டுமென்று அடம்பிடிக்கும் குழந்தைகளை அன்றாடம் வாழ்க்கையில் பார்த்துக்கொண்டுதானிருக்கிறோம். வயது வளரவளர சுயநலம் குறைந்துகொண்டே வரவேண்டும். மனித வளர்ச்சி என்பது உடல் வளர்ச்சிமட்டுமல்ல; அது உடல் (Physical), உள்ளம் (Mental), உணர்வு (Emotinal), அறிவு (Intellectual) யாவையும் உள்ளடக்கியதாகும்.

ஒரு குழந்தை விளையட்டுச் சாமான்கள் வைத்து விளையாடிக் கொண்டிருக்கும் வேளையில், அதனுடைய சுயநல உள்ளம் எப்படியெல்லாம் முரண்டுபிடிக்கும் என்பதை எடுத்துக்காட்டும் விதமாக, ஒரு குழந்தையே பேசுகிறதுபோலுள்ள பத்து வாசகங்களை, ஒரு ஆங்கில நூலிருந்து மொழிமாற்றம் செய்துகொடுத்துள்ளேன்.

1. எனக்குப் பிடித்தால், அது என்னுடையது.
2. என் கையிலிருந்தால், அது என்னுடையது.
3. உன்னிடமிருந்து நான் எடுத்துக்கொண்டால், அது என்னுடையது
4. கொஞ்ச நேரத்திற்கு முன்னால் அதை நான் வைத்திருந்தால், அது என்னுடையது.
5. அது என்னுடையதாக இருந்தால், எந்த விதத்திலும் அது உன்னுடையதல்ல.
6. நான் விளையாடுக்கொண்டிருந்தால், என்னைச் சுற்றிக்கிடக்கும் அத்தனையும் என்னுடையதுதான்.
7. என்னிடமிருப்பது போலவே வேறு எதுவும் இருந்தால், அதுவும் என்னுடையதுதான்.
8. நான் முதலாவது பார்த்தால், அது என்னுடையதுதான்.

9. சேர்ந்து நாம் விளையாடும்பொழுது நீ எதையாவது விட்டு விட்டால், அது தானாகவே எனக்குச் சொந்தமாகி விடுகிறாது.
10. ஒருவேளை, ஏதாவது உடைந்துபோனால், அது மட்டும் உன்னுடையது.

ஒரு குழந்தையின் முதிர்ச்சியற்ற மனநிலை இப்படித்தான் இருக்கும். கண்டதெல்லாம் தன்னுடையது – தனக்கு வேணடும் என்று அடம் பிடிக்கும். இந்த மனநிலை தொடர்ந்தால், உடலளவில் நீங்கள் முதிர்ச்சியடைந்திருந்தாலும், உள்ளத்தில் முதிர்ச்சியுறாத – வளர்ச்சியடையாத குழந்தையாகவே இருந்துகொண்டிருக்கிறிர்கள் என்று பொருள்.

ஒரு மனிதனுடைய மனமுதிர்ச்சியைக் கணிக்கும் அளவுகோல் அவனிடமுள்ள சுயநலத்தின் விகிதாச்சாரம் எவ்வளவு குறைந்திருக் கிறது என்பதைப் பொறுத்ததுதான்.

ஆங்கிலத்திலே ஒரு பழமொழியுண்டு. "Scratch an adult and you'll find a child" என்பார்கள். அதாவது **"வயதுமுதிர்ந்தவரைக் கிளறிப்பார்த்தால் அவரிலே ஒரு குழந்தையைக் காண்பீர்கள்"** என்பதுதான் அதன் பொருள்.

ஆகையால், எல்லோருமே ஓரளவிற்கு சுயநலமுள்ளவர்கள் என்பதை மறுப்பதற்கில்லைதான். முற்றிலும் சுயநலமற்ற மனிதர் களைக் காண்பது அரிதிலும் அரிது. ஆனால், சுயநலமில்லாமைதான் முதிர்ச்சியின் அடிப்படை (Maturity is basically unselfishness). எனவே, ஒரு குடும்பத்தில் சுயநலத்திற்கு இடமேயில்லை; அங்கு பொதுநலம் நிலவினால்தான் மகிழ்ச்சி என்னும் மலர் மலர்ந்து மணம் பரப்பும்.

கணவன் மனைவி இருவரும் ஒரே சரீரமாயிருத்தலால், அவர்கள் தங்களுக்குள் பரஸ்பர மகிழ்வு (Mutual Happiness) நிரந்தரமாய் நிலைத்திட/ நிலவிட, சுயநலமற்றவர்களாக இருக்க மனமார்ந்த முயற்சிகள் மேற்கொள்ளுதல் தம்பதியர்கள் இருவர் மேலும் விழுந்த கடமையாகும்.

சரீரத்தின் ஒரு பகுதி மகிழ்வுடனும், ஏனைய பகுதிகள் துக்கத்துடனும் இருத்தல் இயலுமோ?

பரஸ்பர சேவை

"திருமணம் என்ற பந்தத்தினால் இணைந்த இல்லற அமைப்பு– ஒரு தலைவன், ஒரு தலைவி, இரு (அடிமைகள்) பணியாளர்களடங்கிய இருநபர் கூட்டமைப்பு"– என்று ஒரு அறிஞர் உரைத்தார் (Marriage is the state or condition of a community consisting of a Master, a Mistress and two Slaves, makingin all, two. - ***Ambrose Bierce***).

அதாவது, **1 (தலைவன்) + 1 (தலைவி) + 2 (அடிமைகள்) = 2** (நபர்கள்). இக்கணக்குச் சரியா?

1 (தலைவன்) + 1 (தலைவி) + 2 (அடிமைகள்) = 4 (நபர்கள்) அல்லவா?

கூட்டுத் தொகை 2 எப்படிச் சரியாகும்? கணக்கில் தவறா?

இல்லை, அறிஞர் கூற்று சரிதான். எப்படி?

கணவன் மனைவி இருவரும் குடும்பத்தின் தலைவன் தலைவி மட்டுமல்ல, அவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் பரஸ்பர பணியாளர்கள் (அடிமைகள் – வேலைக்காரர்கள்).

அப்படியானால் கணக்கு (1 x 1) + (1 x 1) = 2 என்று இருக்க வேண்டும். இவ்வுண்மையை உணர்ந்துதான் பவுலடியார், **"இறை பயத்துடன் ஒருவருக்கொருவர் (அடிமையாயிருங்கள்) கீழ்ப் படிந்திருங்கள்"** (எபே.5:21) என நவில்கிறார்.

தம்பதியர் இருவரும் ஒருவருக்கொருவர் பரஸ்பர பணிசெய்து அன்பு செலுத்துவதே இறை நோக்கம். உடலாலும், உள்ளத்தாலும், ஆவியினாலும் ஒருவரிலொருவர் அக்கறைகொண்டு பரஸ்பர சேவை புரிவதே இனிய இல்வாழ்வின் இரகசியம்.

திருவள்ளுவர், மனைவியை **"வாழ்க்கைத் துணை"** என்ற அருமையான – புதுமையான பெயரால் அழைக்கிறார் (அதிகாரம் 6 – வாழ்க்கைத் துணைநலம்). அப்படியானால் கணவனை "வாழ்க்கைத் துணைவன்" என்று அழைக்கலாமல்லவா? கணவனும் – மனைவியும் ஒருவருக்கொருவர் துணைவர்களாவர்.

'தன்னலம் துறந்த அன்பே' தம்பதியர் இருவரிடையே ஊடாடும் பிணைப்புக் கயிறு. இறுதிவரை தொடரும் நிலையான இல்லற உறவிற்கு இருவரிடையேயுள்ள **'தன்னலமற்ற பரஸ்பர அர்ப்பணமே'** அடிப்படை அம்சம்.

இருவரிலொருவர் மரணத்தால் பிரிக்கப்படும்வரை தொடரும் முழுமையான அல்லது பரிபூரண இல்லற உறவில், கணவன்–மனைவி இருவரிடையே மட்டுமே நிகழத்தக்க பால்பியலூக்க உறவு இல்லறத்தின் ஒரு பகுதி மட்டுமே (The sex-relatioship in a married life is but one part of their total relationship).

இல்வாழ்க்கையின் வெற்றி இரகசியத்தை 'பெர்னற் பிரிக்னர்' என்பவர் கூறுவதைக் கேளுங்கள். **"இல்வாழ்க்கையின் வெற்றி சரியான வாழ்க்கைத் துணையைத் தெரிவு செய்வதால்மட்டும் கிட்டுவதில்லை; தான் சரியான வாழ்க்கைத் துணையாக இருப்பதில்தான் அடங்கியிருக்கிறது"** என்று கூறுகிறார் (Success in marriage does not come merely through finding the right mate, but through being the right mate –Barnett Brickner).

எத்தனை அற்புதமான வார்த்தைகள்!

சரிநிகர் சமம்

கணவன் குடும்பத்தின் தலைவனாக இருப்பதினால், தான் வானளாவிய அதிகாரம் படைத்தவன் என்றும், மனைவியும் ஏனைய குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் தன் ஆணைக்குக் கட்டுப் பட்டவர்களென்றும், தனக்கு மரியாதை கொடுப்பதும், பணிவிடை செய்வதும் அவர்கள் கடமையென்றும் கருதும் நிலையுள்ளது. இக்கருத்தோட்டம் சரிதானா?

ஒரு தலைவனுக்குரிய தகுதியென இறை மைந்தன் இயேசு கூறுவது யாது?

"உங்களில் எவனாகிலும் முதன்மையாக இருக்க விரும் பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாய் இருக்கக் கடவன்" (மத்.20:27) எனக் கூறுகிறார்.

இறைவன் திருமுன் ஆண்–பெண் என்றோ, அல்லது கணவன்–மனைவி என்றோ பேதமில்லை. இருவரும் சமமானவர்களே.

ஆகையால்தான் பவுலடியார், **"கிறிஸ்துவிற்குள்ளாக ..... கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டவர்களில் .... ஆணென்றும் பெண்ணென்றுமில்லை. (அனைவரும்) கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறார்கள்"** (கலாத்.3:27,28) என்று எழுதுகிறார்.

இறைவனுடைய பார்வையில் ஆணும் பெணும் ஒன்றுதான். எனினும், இருவரும் ஒருவருக்கொருவர் பணியாளர்கள் (Servents). கணவன் மனைவிக்கு எஜமானன் அல்ல. ஆனால், ஒரு மனைவிக்குத் தலை கணவனே. **'புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்"** (எபேசியர் 5:23) என்று பவுலடியார் சந்தேகத்திற்கு இடமின்றி இயம்புகிறார்.

உடலின் எவ்வுறுப்பிற்காவது ஊறுவிழையின், அதனைத் தலை உணராதிருக்கக் கூடுமோ?

கணவன் மனைவி உறவில் 'யார் பெரியவர் – யார் சிறியவர்' என்ற பேச்சிற்கே இடமிலை; இருவருமே சரிசமந்தான்.

குடும்பத்தில் மனைவியின் நிலை
(Role of Wife in the Family)

ஆங்கிலத்திலே ஒரு பழமொழியுண்டு. "Wife is a Knife to cut short One's Life." அதற்கு, **'மனைவி, கணவனின் ஆயுட் காலத்தை நறுக்கிக் குறைக்கும் கத்தி'** என்று பொருள்.

ஆங்கிலத்தில் மனைவியை Better-half (கணவனின்–நற்பாதி) என்று அழைப்பார்கள். வாய்த்த மனைவி 'சிறந்த பாதி' **(Better-half)** ஆக இல்லாமல் 'கசப்பான பாதி' **(Bitter-half)**ஆக இருந்தால், அவள் கணவனின் ஆயுட்காலத்தைக் குறைக்கும் கத்தியாகத்தான் அமைவாள். மனைவி கணவனுக்கு அனுசரணையாக இல்லை

யென்றால், மன உளைச்சலினாலும், உடல் நோயினாலும் அவனுடைய ஆயுட்காலம் குறைந்து போகும்' என்பதுதான் இதன் பொருள்.

'கணவன் மனைவி இருவரும் சரிசமமானவர்கள்' என்பதுதான் திருமறையின் நிலைப்பாடு. ஆனால் இக்கருத்தைச் சிலர் தவறாகப் புரிந்துகொள்ளுவதால், சிலவேளைகளில் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தும் தன்மையுள்ளதாக அமைந்து விடுவதுமுண்டு.

'கணவன் மனைவி இருவரும் சரிசமமானவர்கள்' என்ற கருத்தினைக் கூறுவதனால், மனவியரை கணவருக்குக் கீழ்ப் படியாதிருக்கவோ அல்லது கணவரிடம் மரியாதையின்மையுடன் நடக்கவோ ஊக்குவிக்க முயலவில்லை.

அவ்வண்ணமே, கணவர்கள் தங்களுடைய குடும்பத் தலைமையை மனைவியர்களிடம் தாரைவார்க்கத் தூண்டவோ அல்லது கணவர்களை மட்டந்தட்டும் மனைவியர்களின் செயல் களை நியாயப்படுத்தவோ முயலவில்லை.

கணவன் மனைவி இருவரும் சரிசமமானவர்களாயிருப் பினும், சரிசமத்தில் முதன்மையானவர் கணவனே (Husband is the first among equals). கணவன் – மனைவி – இருவரில் கணவன் 'முதன்மையானவர்' என்றுதான் கூறினேன், ஆனால், அவன் அடக்கியாளும் எஜமானன் அல்ல. கணவன் முதன்மையானவன் என்பதைத் திருமறையும் தெளிவாக்குகிறது.

"ஒவ்வொரு சபைக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறா ரென்றும், ஸ்திரிக்குப் புருஷன் தலையாயிருக்கிறாரென்றும், கிறிஸ்துவுக்கு தேவன் தலையாயிருக்கிறாரென்றும் நீங்கள் அறியவேண்டுமென்று விரும்புகிறேன்" (1 கொரி.11:3).

"கிறிஸ்து சபைக்கு தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான். அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார்" (எபே.5:23).

மனைவியும் கணவனின் ஆளுமையை ஏற்றுக்கொண்டு, அவனுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்பதையும் திருமறை விளக்குகிறது.

"ஆகையால் சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறது போல, மனைவிகளும் தங்கள் சொந்த புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலும் கீழ்ப்படிந்திருக்கவேண்டும்" (எபே.5:24).

"மனைவிகளே, கர்த்தருக்கேற்கும்படி உங்கள் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள்" (கொலொ.3:18).

"...பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷரிடத்திலும், தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும், தங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிகிறவர்களுமாயிருக்கும்படி...." (தீத்து 2:4,5).

"மனைவிகளே, உங்கள் சொந்த புருஷர்களுக்குக் கீழ்ப் படிந்திருங்கள்" (1 பேதுரு 3:1).

கணவன் (குடும்பத் தலைவன்) மனைவிக்குத் தலை.

குடும்பத் தலைவனே சமுதாயத்திற்கு குடும்பத்தை அடையாளம் காட்டும் முகம் (The husband is the head to the wife and the face to the society). குடும்பத்தின் அங்கத்தினர்கள் அனைவரும், குடும்பத் தலைவனுடனான உறவு முறையினால்தான் சமுதாயத் திலுள்ள ஏனையோரால் அடையாளம் காணப்படுகிறார்கள். இவள் இன்னாரின் மனைவி, இவன் இன்னாரின் மகன், இவள் இன்னாரின் மகள் எனத்தான் இவ்வுலகில் இனம் கண்டுகொள்ளப்படுகிறார்கள்.

ஆகையால், குடும்பத்தின் மதிப்பிலும், மரியாதையிலும், நன்மையிலும், மகிழ்ச்சியிலும் கணவனுக்குப் பிரதான பொறுப் புண்டு. குடும்பத்தின் உலகியல் சார்ந்த முன்னேற்றத்திலும் (Material well-being), ஆவிக்குரிய வளர்ச்சியிலும் (Spiritual growth) கருத்தாயிருத்தல் குடும்பத் தலைவனுக்குத் தவிர்க்க இயலாத கடமையாகும்.

நிறைவுரை

சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யம் என்று பெயர்பெற்ற பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பேரரசியாக 63 ஆண்டுகள் கோலோச் சியவர் விக்டோரியா மகாராணியாவார் (Queen Victoria). அவருடைய கணவர் பிரின்ஸ் அல்பர்ட் (Prince Albert). இருவரும் மிகவும் அன்னியோன்யமான தம்பதியர்கள்.

ஒருமுறை மகாராணி, அவருடைய கணவர் இருந்த அறைக்குச் சென்றார். கதவு மூடியிருந்ததால் அறைக் கதவைத் தட்டினார்.

உள்ளேயிருந்த பிரின்ஸ் ஆல்பர்ட, "யாரது?" என்று கேட்டார்.

"மகாராணி வந்திருக்கிறேன்" என்று விக்டோரியா கூறினார். அல்பர்ட் கதவைத் திறக்கவில்லை.

மூன்று முறை விக்டோரியா, "நான் மகாராணி வந்திருக்கிறேன்" என்று கூறியும் அல்பர்ட் கதவைத் திறக்கவில்லை.

இறுதியில், "நான் உங்கள் மனைவி விக்டோரியா வந்திருக் கிறேன்" என்று கூறியவுடன் அல்பர்ட் கதவைத் திறந்தார்.

"என்னுடைய அறைக்கு என் மனைவிதான் வரமுடியும்; மகாராணியைச் சந்திப்பதாக இருந்தால் நான்தான் மகாராணியிடம் செல்லவேண்டும்" என்று கூறினார்.

குடும்பத்தில் மனைவி மனைவியாக இருக்கவேண்டும், கணவன் கணவனாக இருக்கவேண்டும். அவரவர்கள் தங்களுடைய பாத்திரமறிந்து செயல்பட்டால்தான் இல்லறம் நல்லறமாக இருக்கும். (Every member of the family should play their role responsibly).

இறைவன் பெண்ணை மனிதனுடைய மாம்சத்திலிருந்தே (ஆதி.2:22) உருவாக்கியதால் அவள் மனிதனுக்குச் சமமானவள். பெண்ணின்றி மனிதன் பூரணமானவனல்ல (ஆதி.2:18); பெண்ணைப் படைத்து ஆணோடு குடும்பமாக இணைத்த பின்பே மானுடப் படைப்பு நிறைவுற்றது.

கணவன் மனைவி இருவரும் ஒரே சரீரத்திலிருந்து பிரிந்து இரண்டாய் நிற்கும் ஈருயிர்கள். திருமண பந்தத்தின்லால் ஈருயிர்கள் ஒருடலாகிறது *(ஒரே மாம்சமாகிறது)*. இந்த இறை–இரகசிய உறவு மானிட ஞானங்கடந்த புதிராயிருக்கிறது.

புகழ் பெற்ற திருமறை விரிவுரையாளர் மத்தேயு ஹென்றி, ஏவாள் படைக்கப்பட்டதைக் குறித்து விவரிக்கும் விளக்கவுரை வரிகளைப் படியுங்கள்.

“ஆணை ஆளும்படிக்கு, ஏவாள் மனிதனின் தலையிலிருந்து படைக்கப்படவில்லை; அல்லது அவளை ஆண் தனது காலில்போட்டு மிதிக்கும்படிக்கு, அவனுடைய காலி லிருந்தும் அவள் படைக்கப்படவில்லை; அவள் ஆணுக்குச் சரிசமானமாக இருக்கும்படிக்கும், அவனுடைய காக்கும் கரங்களின் பாதுகாப்பைப்பெறும்படிக்கும், அவனுடைய இதயத்தின் அருகிலிருந்து அவனுடைய அன்பைப் பெறும் படிக்கும், ஆணினுடைய (சரீரத்தின் நடுப்பகுதியான) விலாவி லிருந்து ஏவாளைக் கர்த்தர் படைத்தார்’ என்று கூறுகிறார் (“Eve was made by God not out of His head to rule over Him, nor out of His feet to be trampled upon by Him, but out of His side to be equal with Him, under His arm to be protected, and near His heart to be loved” — ***Matthew Henry***).

மகாகவி பாரதியார் தனது ‘புதுமைப் பெண்’ என்ற கவிதையில் என்ன கூறுகிறார் என்று பாருங்களேன்.

“ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கி இவ்வையகம் தழைக்குமாம்.”

கிரேக்கத் தத்துவங்களும், ரோம – யூத கலாச்சாரங்களும் கணவன்–மனைவி இருவரிடையே நிலவவேண்டிய பரஸ்பர கடமைகளை (Reciprocal obligation) வலியுறுத்தவில்லை. கணவன் மனைவியின்மீது பூரண அதிகாரமுள்ள ஏஜமானனாக இருந்தான். மனைவி உயிரற்ற ஜடப்பொருளைப்போலவே (Chattel) கருதப் பட்டாள். அவளுக்கென்று எந்த உரிமையும் கிடையாது. ஆனால், கிறிஸ்தவ சமய ஒழுக்கவியல் (Ethic) பரஸ்பர கடமைகளை வலியுறுத்துகிறது.

மனைவிக்குக் கணவன் ஆற்றவேண்டிய கடமைகளையும், மனைவி கணவனுக்கு ஆற்றவேண்டிய கடமைகளையும், பெற்றோர்

களுக்குப் பிள்ளைகள் செய்யவேண்டிய கடமைகளையும், பிள்ளைகளுக்குப் பெற்றோர்கள் செய்யவேண்டிய கடமைகளையும் கிறிஸ்தவத் திருமறை தெளிவாகவே வரையறுக்கிறது – வலியுறுத்துகிறது (எபேசி.5:22–6:4: கொலோ. 3:18–20).

இல்லாளாக – இல்லத்தின் அரசியாக ஒரு மனைவி, கணவனையும் உள்ளடக்கிய ஒரு குடும்பத்தை எப்படி ஆளலாம் – கணவனைய்யும் எப்படி மேற்கொள்ளலாம் என்கிற இரகசியத்தை ஸ்பர்ஜன் இப்படிக் கூறுகிறார்: **"கீழ்ப்படிதலுள்ள மனைவி தனது கணவனை ஆளுகிறாள்; (அதாவது) கணவன் தனது மனைவியின் அன்பினால் மேற்கொள்ளப்பட்டுவிடுகிறான்"** (An obedient wife commands her husband; by her love the good man is conquered – ***Spurgeon***).

இருவரும் படைப்பால் சரிநிகர் சமமாயினும், மனைவி என்பவள் கணவனின் ஆளுகைக்குக் கட்டுப்பட்டவளே. குடும்பத்தின் லௌகீக தேவைகளையும், ஆன்மீக தேவைகளையும் பூர்த்தி செய்வது கணவனின் தலையாய கடமை.

"அந்தப்படியே, ஸ்திரீகளும் நல்லொழுக்கமுள்ளவர்களும், அவதூறு பண்ணாதவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், எல்லாவற்றிலேயும் உண்மையுள்ளவர்களுமாயிருக்க வேண்டும்" (1 தீமோத்.3:11).

6

குடும்பத் தலைவரின் தகுதிகள்

கர்த்தருக்குப் பயந்து அவர் வழிகளில் நடக்கிறவன் (குடும்பத் தலைவன்) எவனோ அவன் பாக்கியவான் (சங்.128:1).

குடும்பத்தைத் தலைமையேற்று நடத்துவது எளிதானதல்ல. குடும்பத்தைப் பொருளாதாரத்திலும், சமுதாயத்திலும், ஆன்மீகத்திலும் உயர்த்துவது குடும்பத் தலைவரின் கடமை. இதற்குக் கடின உழைப்பு, நீடிய பொறுமை, இறைத் துணை யாவும் தேவை.

இவ்வுலகமென்னும் கடலில், குடும்பம் என்னும் கப்பலுக்கு தலைமை ஏற்றுச் சீராக நடத்தும் பொறுப்பு கணவனைச் (குடும்பத் தலைவன்) சார்ந்தது. எனவேதான் இல்லறத்தைச் "சம்சார சாகரம்" என்பர் (சாகரம் என்றால் கடல் எனப் பொருள்). குடும்பம் என்னும் கப்பல் தரை தட்டாமல், விபத்திற்குள்ளாகாமல் வழிநடத்தும் பெரும் பொறுப்பு குடும்பத் தலைவனுக்குண்டு.

வேடிக்கையான சீனப் பழமொழியொன்று உண்டு: **"ஒரு சிறிய மீனைச் சமைப்பதைப்போலப் பக்குவமாகக் குடும்பத்தில் அதிகாரம் செலுத்தவேண்டும்"** (Govern a family as you would cook a small fish very gently - *Chinese proverb*) என்பதுதான் அந்தப் பழமொழி. கரண்டியை முரட்டுத்தனமாக மீன்குழம்பில் கிண்டினால் மீன் சிதைந்துபோகும். அதுபோல்தான் குடும்பமும். பிரச்சனைகளைக் கவனத்துடன் கையாளவேண்டும்.

"ஒரு நல்ல தந்தை தன் குடும்பத்திற்குச் செய்யவேண்டிய அடிப்படைக் காரியங்கள்: குடும்பத்திற்குத் தேவையான யாவற்றையும் கொடுக்கவேண்டும், குடும்பத்தைப் பாதுகாக்கவேண்டும்; குடும்பத்திற்கு ஆவிக்குரிய காரியங்களிலும்– ஒழுக்கத்திலும் வழிகாட்டியாக இருக்கவேண்டும்" (A good father does these basic things: provides for his family, protects his family, and gives spiritual and moral guidance - *David Blankenhorn).*

இருவகைத் தலைவர்கள் (கணவர்கள்)

குடும்பத் தலைவர்களை (கணவர்களை) பெரும்பாலும் இருவகை உச்ச எல்லைக்கோட்டுக்குள் (Two extremes) வறையறுக்கலாம்.

முதல் வகை:

பொறுப்பற்ற குடும்பத் தலைவர் (கணவர்) – Abdicator

இவ்வகைக் கணவர் சமுதாயத்தின் பார்வையில் (in the eyes of the society) மட்டும் குடும்பத் தலைவர்.

இவர்தான், சமூக/ தேசிய சட்டத்தின்படி குடும்பத்தின் முதல்வர். குடும்ப அட்டையில் இவர் பெயர்தான் முதற்பெயர்.

குடும்பத்திற்கு உணவளிப்பவர் இவர்தான் (Bread winner of the family). குடும்பத்தின் பொருளாதாரத் தேவைகளுக்காக உழைப்பவர் இவரே.

ஆனாலும் குடும்பக் காரியங்களில் பட்டும் படாமலும் இருப்பவர்; குடும்பத்திலுள்ள யார் என்ன செய்தாலும் கண்டுகொள்ளாதவர்.

இவர் குடும்பத்தில் உறுப்பினராய் ஏற்றுக்கொள்ளப் பட்டிருப்பதின் முக்கிய காரணம், குடும்பம் நடைபெறுவதற்கு இவர் அளிக்கும் நிதியுதவிதான். பொருளாதாரத் தேவையைப் பூர்த்தி செய்வதுடன் குடும்பத்தில் தன் கடமை / வேலை முடிந்ததென்ற முடிவுடன், குடும்பத்தில் நடக்கும் வேறெதையுமே கண்டு கொள்ளாதவர்.

பிள்ளைகளை வளர்ப்பதிலோ, படிக்க வைப்பதிலோ, ஏனைய குடும்பக் காரியங்களிலோ அக்கறையோ, ஆர்வமோ அல்லது ஈடுபாடோ கொள்ளாதவர். எனினும், குடும்பத்திலிருந்து ஒதுங்கிக் கொண்டு தனியே வாழ்பவரல்ல. அவரும் வீட்டிலேயே மற்றவர்களைப் போலவே உண்டு உறங்கி ஒரே கூரையின் கீழ் வாழும் உயிருள்ள ஜீவன்களிலொருவர். அவர் வழியில் எவரும் தலையிடாதவரை, வேறு எதிலும் தலையிடாதவர்.

குடும்பம் வாழத் தான் நிதியளிப்பதால், வீட்டிலுள்ள அனைத்துப் பொருட்களையும் (Radio, TV, Refrigerator, Heater etc.) தாராளமாகப் பயன்படுத்தவும், அவ்வீட்டில் தங்கி வசிக்கவும் தனக்குத் தடையேதுமில்லை எனக் கருதுபவர்.

உணர்ச்சிப்பூர்வமாக மனத்தளவில் குடும்பத்துடன் ஒன்று படாமல், குடும்பத் தலைவர் ஒதுங்கி நின்றால், குடும்ப அமைப்பில் தலைமையிடம் வெற்றிடமாக (Leadership Vaccum) உள்ளது என்று பொருள்.

இவ்வண், இருந்தும்–இல்லாப் பயனற்ற தலைமையைப் பெற்றுள்ள சூழலில் அக்குடும்பத்தின் கதி என்ன?

பொறுப்பற்ற குடும்பத் தலைமை அமையப் பெற்ற குடும்பத்தில், மனைவி (குடும்பத் தலைவி) தலைமைப் பொறுப்பேற்று குடும்பத்தை நிர்வகிப்பது தவிர்க்க இயலாததாகிவிடுகிறது. உலகின் பார்வையில் கணவன் தலைவனாக இருந்தாலும், உண்மைத் தலைமை மனைவியின் கரத்திலேயே அமைகிறது.

இயல்பான சூழலில், அரியணைக்குப் பின்னிருந்து அதிகாரம் செலுத்தும் மன்னவி (Power behind the throne), இத்தகைய அசாதாரணச் சூழலில், குடும்பத்தின் பொறுப்பினைத் தானே ஏற்றுச் செயலாற்றி, குடும்பத்தை வீழ்ச்சியினின்றும் காக்கவேண்டிய கட்டாயச் சூழலுக்குத் தள்ளப்படுகிறார்.

இதற்கு மாறாக, ஒரு குடும்பத்தில் மனைவியும் பொறுப்பின்றி இருப்பின், அக்குடும்பத்தின் நிலைமை பரிதாபத்திற்குரியது. அத்தகைய குடும்பத்தில் யாரும் யாரையும் கண்டு கொள்வதில்லை (Nobody cares nobody). **"போன மாட்டைத் தேடுவாரும் இல்லை; வந்த மாட்டைக் கட்டுவாரும் இல்லை"** என்ற பழமொழிக்கொப்ப அந்தக் குடும்பத்தில் எல்லோரும் பொறுப்பின்றி இருப்பார்கள்.

அக்குடும்ப உறுப்பினர்கள் வீட்டில் (Home) வாழ்கிறார்கள் என்பதைவிட, விடுதியில் (Lodge) வசிக்கிறார்கள் என்பதே சாலப் பொருத்தம். அவர்களுக்கு கண்டதே காட்சி, கொண்டதே கோலம். ***Laissez faire*** is the rule of the family (கண்டிப்பதற்கும், வழிநடத்துவதற்கும் யாருமின்றி தான்தோன்றித்தனமாக வாழும் குடும்பம்). அவர்கள் ஒரே வீட்டில் வாழ்ந்தாலும், **"ஒரு கூரையின் கீழ் வாழும் அன்னியர்களாய் இருக்கிறார்கள்"** (They are living as strangers under one roof).

இஸ்ரவேலர்கள், கர்த்தர் உவந்தளித்த கானானுக்கு வந்த பின்னரும், அவர்கள் இன்னலில் துன்புற்றுகொண்டிருக்கக் காரணம் அவர்களிடமிருந்த ஒழுங்கின்மைதான். ஏனென்றால் ஒழுங்கை நிர்வகிக்கும் தலைவன் அவர்களிடையே இல்லாதிருந்தார்கள்.

"அந்த நாட்களிலே இஸ்ரவேலில் ராஜா இல்லை; அவனவன் தன்தன் பார்வைக்கு சரிப்போனபடி செய்தான்" – (நியா.**21:25**).

ஒழுக்கத்தைக் குடும்பத்தில் நிர்வகிக்கத் தெரியாத தலைவனுள்ள குடும்பத்தின் நிலையும் அப்படித்தான் இருக்கும். இத்தகைய குடும்பத்தில் அன்பும், ஐக்கியமும் (தோழமையும்), இறைப் பயமும் காண இயலாத அரிதான பொருள்களாக இருக்கும் (Love, God-fearing and companionship would be rare commodities in such families).

விளக்கக் கதை

பொறுப்பற்ற தலைமையுள்ள வீட்டில் என்ன நடக்கும் என்பதை விளக்க ஒரு சிறிய கதையைக் கூறுகிறேன் இது நான்கு பேரைப்பற்றிய கதை. அவர்களுடைய பெயர்கள் திருவாளர்கள் 1. ஒவ்வொருவர் (Everybody), 2. யாராவதொருவர் (Somebody), 3. எவரோவொருவர் (Anybody), 4. ஒருவருமில்லை (Nobody).

ஒரு முக்கியமான வேலையை முடிக்க வேண்டியதிருந்தது.

எவரோவொருவர் கண்டிப்பாகச் செய்துவிடுவார் என்று ஒவ்வொருவர்(ரும்) கருதினார்கள். யாராவதொருவர் செய்திருக் கலாம்தான், ஆனால் செய்தவர் ஒருவருமில்லை; அதனால் யாராவதொருவருக்குக் கோபம், ஏனெனில் அது ஒவ்வொரு வர்(ரும்) செய்யவேண்டிய வேலை. ஒவ்வோருவர் நினைத்தார், எவரோவொருவர் அந்த வேலையைச் செய்வாரென்று. ஆனால் இப்படி ஒவ்வோருவர்(ரும்) செய்யாதிருப்பார்(கள்) என்று எதிர்பார்த் தோர் ஒருவருமில்லை எவரோவொருவர் செய்திருக்கக்கூடிய வேலையைச் செய்ய ஒருவருமில்லை, இறுதியில் ஒவ்வொருவர்(ரும்), யாராவதொருவர் மீது குற்றஞ்சாட்டிக்கொண்டிருந்தனர்.

(என்ன! தலை சுற்றுகிறதா? இந்தக் கதையின் ஆங்கில மூலம், இந்த கட்டுரையின் முடிவில் கொடுக்கப்பட்டுள்ளது).

இரண்டாம் வகை:

ஏதேச்சதிகாரக் குடும்பத் தலைவர் (கணவர்) – Autocrat

இவ்விரண்டாம் வகைக் குடும்பத்தின் தலைவர் (கணவர் அல்லது தகப்பனார்), தலைவராக மட்டுமல்ல, ஒரு எஜமானர்போல செயல்படுகிறார் (Dad is the Boss).

அவர் வாயிலிருந்து புறப்படும் வார்த்தைகள் அவ்வீட்டின் எழுதப்படாத சட்டங்கள். (His words are unwritten Laws in the family).

இவர் உணர்ச்சிவயப்பட்டாலோ, எரிச்சலூட்டப்பட்டாலோ அல்லது அவரின் எதிர்பார்ப்பிற்கு எதிர்மறை நிகழ்வுகள் நேரிட்டாலோ, அவர் ஒரு கொடுங்கோலனாகவோ அல்லது சர்வாதிகாரியாகவோ (Dictator or tyrant) காட்சியளிக்கிறார்.

இவர்களை முற்றிலுமாக குறை கூறுதல் முறையன்று. ஏனெனில், பெரும்பாலான சர்வாதிகாரிகள், தங்களுடைய நேர்மையான குடிமக்களை நேசிப்பவர்களாகவே இருந்திருக்கின்றனர். (Autocrates do love their loyal subjects). தங்களுக்கு கட்டுப்பட்டு நடக்கும் குடும்ப உறுப்பினரின் நலனிலும், அவர்கள் முன்னேற்றத் திலும் முழு அக்கறையுடன் செயல்படுவார்கள்.

இவ்வகைக் குடும்பத் தலைவர்கள், குடும்பத்தின் வரவு—செலவுகளைப் பற்றியோ, வீடு—வாசல்களைத் தெரிவு செய்வது குறித்தோ, மற்றைய பொருட்களை வாங்குவது—விற்பது பற்றியோ குடும்பத்திலுள்ள யாரிடமும் எந்த அனுமதி பெறவோ, ஆலோசனை கேட்கவோ அல்லது கலந்தாலோசிக்கவோ முயலுவதில்லை. எனினுமிவர்கள், தங்கள் குடும்ப கௌரவத்தைக் காப்பதிலும், குடும்ப முன்னேற்றத்திலும் அக்கறையுடன் செயல்படுவார்கள்.

இவ்வகைக் குடும்பத்தில், தலைமைத் தகுதிக்கோ அல்லது திறமைக்கோ குறைவில்லை. ஆயினும், இத்தகைய தலைவர்கள் தங்கள் எதேச்சதிகாரப் போக்கினை விடுத்து, குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்களின் உணர்வுகளுக்கும், உரிமைகளுக்கும் மதிப்புக் கொடுத்து செயலாற்றின், இவர்கள் மிகச்சிறந்த குடும்பத் தலைவர்களாயிருப்பார்கள்.

இவ்வண், எல்லாக் கணவர்களும் / குடும்பத் தலைவர்களும், பெரும்பாலும், 'பொறுப்பற்ற தலைவர்' மற்றும் 'எதேச்சதிகாரத் தலைவர்' என்ற இரு உச்ச எல்கைக்குள் (Two extremes) அடங்குவார்கள். இவ்விரு உச்ச எல்கைகளையும் விடுத்து, சமநிலைத் குடும்பத் தலைவனாக (Balanced House-Head) இருத்தலே விரும்பத்தக்க குடும்பத் தலைவரின் தகுதியாகும்.

உகந்த குடும்பத் தலைவர்
(Expedient Head of the Family)

இருதுருவங்களையும் விடுத்து சமநிலையுள்ள குடும்பத் தலைவனே விரும்பத்தகுந்தது. அத்தகைய குடும்பத் தலைவனாகத் திகழ்வது எவ்வண்?

1. மனைவியும், ஏனைய குடும்ப உறுப்பினர்களும் தன்னைப் போலவே உணர்ச்சியுள்ள மனித ஜென்மங்கள்தான் என்பதை கவனத்தில்கொண்டு ஒழுகவேண்டும். அவர்கள், குடும்பத்திலுள்ள மற்றவர்களையும் மனிதர்களாக மதிக்க வேண்டும் (The wife and children are human beings, just like you, with feelings; and they have the right to expect honourable treatment from you).
2. தன்னைப் போலவே, மற்ற குடும்ப உறுப்பினர்களுக்கும் மூளையுண்டு; எனவே அவர்களுக்கும் அறிவுண்டு என்பதை உணர்ந்து செயல்படவேண்டும் (The other members of the family are also human beings, with brain, knowledge and intelligence).
3. உங்கள் மனைவியும், பிள்ளைகளும், உங்களுடைய தலைமையினை ஏற்று, உங்கள் ஆணையைப் பின்பற்றி நடக்க ஆவலுடன் – சித்தமாயுள்ளார்கள் என்பதை உணர

வேண்டும் (The wife and children long for direction under your Leadership).

4. உங்கள் மனைவி உங்களுடன் எப்பொழுதும் தகவல்–தொடர்புடனிருக்கவும், குடும்பக் காரியங்களைக் குறித்து கலந்தோசித்து முடிவுகள் எடுக்கவும் விரும்புகிறாள் என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும் (Your wife always longs for your communication).

5. ஒட்டுமொத்த குடும்பமும் உங்களுடைய ஆவிக்குரிய தலைமையை எதிர்நோக்கியுள்ளது என்பதை நீங்கள் புரிந்து கொள்ளவேண்டும் (The whole family eagerly expects your Spiritual Leadership to them).

6. உங்கள் மனைவி, உங்களுடைய சொத்து–பணத்திற்கு மேலாக, உங்கள் அன்பை– கவனிப்பை, விரும்புகிறாள் என்பதை எண்ணத்தில் பதிக்கவேண்டும் (Your wife needs just not your wealth and money, but your love and care).

7. கணவன் மனைவி இருவரிடையேயுள்ள ஆழமான உறவில் மூன்றாம் நபர் ஒருக்காலும் இடையொட்டாதிருக்க விழிப்புடனிருக்கவேண்டும் (In their deep life of understanding, the husband and wife should be careful in not allowing the interference of third persons).

8. உங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கிடையேயுள்ள உறவில் உருவான மகிழ்வான ஐக்கியம் (தோழமை), அருளார்ந்த இறைவன் ஈந்த ஈகை (கொடை) என்பதால், எஞ்ஞான்றும் இறை–நன்றியுடன் இருக்கவேண்டும் (Be thankful to Almighty, for the happy reationship in the family is the Gift of God).

9. உங்கள் குடும்ப உறுப்பினர்களிடையேயுள்ள உறவின் நெருக்கமும், தோழமையும் ஒருவருக்கொருவர் மகிழ்வூட்டுவதாக எப்பொழுதும் இருக்கவேண்டும் (Your family members should love each others relationship and comanionship).

10. உங்கள் குடும்ப உறுப்பினர்களிடையே ஊடுருவி நிற்கும் உறவு, என்றென்றும் அன்பெனும் பாசக்கயிற்றினால் பிணைக்கப்பட்டிருக்குமாறு பார்த்துக்கொள்ளவேண்டும் (Love should be the binding force among your family-members).

நிறைவுரை

பொறுப்பற்ற அல்லது எதேச்சதிகாரக் கணவனாகவோ அல்லது குடும்பத் தலைவனாகவோ இருப்பின், அக்குடும்ப உறுப்பினர்கள் உடலளவில் ஒரு கூரையின் (வீடு) கீழ் வாழ்ந்தாலும், மனத்தளவில் தனித் தனி தீவுகளாய் வாழும் நிலையிலுள்ளார்கள்.

பெரும்பாலான குடும்பத் தகராறுகளுக்குக் காரணங்கள் என்ன?

மனைவியை நேசிக்கவேண்டிய அளவிற்கு கணவன் நேசிப்பதில்லை; மனைவியும் கணவனை நேசிக்கவேண்டிய அளவிற்கு நேசிப்பதில்லை. பெரும்பாலான குடும்பங்களில் தம்பதியர்கள் இருவருமே தன்னைத்தானே நேசித்துக்கொண்டு, தான் நேசிக்கப்பட வேண்டுமென்று (முதிர்ச்சியற்ற குழந்தைகளைப் போல) அடம்பிடிக்கிறார்கள்.

கணவன்–மனைவியிடையேயுள்ள அன்பு, தன்னை ஒறுக்கும் அன்பு; ஒருவர் மற்றவர் நலனைக் கருத்திலிருத்திச் செயல்படும் அன்பு. இந்த இடத்தில் கல்லூரியில் படித்த தமிழிலக்கியப் பாடலொன்று நினைவிற்கு வருகிறது.

"இனிநிழல் இன்மையால் வருந்திய மடப்பிணைக்குத்
தன்நிழலைக் கொடுத்தளிக்கும் கலை" – (கலித்தொகை).

'காட்டிலே இரு மான்கள் வெயிலிலே வெகுதொலைவு ஓடிக் களைத்து நின்றன. அந்த இடத்தில் ஒதுங்கி நிற்க நிழல்தரும் மரமோ செடியோ இல்லை. ஆகையால், ஆண் கலைமான் வெயிலில் நின்றுகொண்டு, தன்னுடைய நிழலைத் தனது துணைவியான பெண் கலைமானுக்கு அளித்ததாம்.'

ஆங்கிலத்தில் ஒரு பழமொழியுண்டு: "Love begets love; hatred begets hatred." இதன் பொருள், "அன்பு அன்பைப் பிறப்பிக்கும், வெறுப்பு வெறுப்பைப் பிறப்பிக்கும்" என்பதுதான்.

இயற்கை நியதியின்படி,

ஒன்றைக் கொடுத்தால்தான் ஒன்றைப் பெறமுடியும்.

அன்பைக் கொடுங்கள் – அன்பைப் பெறுங்கள்.
பாசத்தைக் கொடுங்கள் – பாசத்தைப் பெறுங்கள்.
நேசியுங்கள்; அப்பொழுது நேசிக்கப்படுவீர்கள்

நீங்கள் எதைப்பெற விரும்புகிறீர்களோ,
அதை மற்றவர்களுக்கு நீங்களும் கொடுங்கள்.

முயன்றுதான் பாருங்களேன்!

தன்னலம் துறந்து பிறர் நலம் பேணுங்கள்; அப்பொழுது மற்றவர்களும் உங்கள் நலனில் பிறர் அக்கறை கொள்வார்கள்.

எனவே, குடும்பத் தலைவர்களே! உங்கள் குடும்பத்தினர்கள், **ஒரே கூரையின் கீழ் வாழ்கிற அன்னியர்களாகவோ அல்லது கூட்டத்தின் மத்தியில் தனிமைப்படுத்தப்பட்ட நபர்களாகவோ வாழும் தண்டனையைத் தவிருங்கள்** (Avoid living a life of "Lonely-in-the-crowd"). நம் ஆண்டவர் இயேசு, "**தனக்குத் தானே விரோதமாய் பிரிந்திருக்கிற ... எந்த வீடும் நிலைநிற்க மாட்டாது**" (மத்.12:25) என்று கூறுகிறார்.

உடலாலும் உள்ளத்தாலும் உங்கள் குடும்பத்துடன் ஒருமித்து அன்பு நிறைந்த வாழ்க்கையை வாழுங்கள்.

"உங்கள் அன்பு மாயமற்றதாக இருப்பதாக" (ரோம.12:9).

தியாக சிந்தையுடன் 'உங்கள் சரீரத்தைச் சுட்டெரிக்கக் கொடுத்தாலும், உங்களில் அன்பு இல்லையென்றால் எந்தப் பிரயோஜனமும் இல்லை' என்பதே பவுலடியாரின் கூற்று (1 கொரி.13:5).

*

A Little Story

This is a story about four people named **Everybody, Somebody, Anybody,** and **Nobody.** There was an important job to be done and **Everybody** was sure that **Somebody** would do it. **Anybody** could have done it, but **Nobody** did it. **Somebody** got angry about that because it was **Everybody's** job. **Everybody** thought **Anybody** could do it, but **Nobody** realized that **Everybody** wouldn't do it. It ended up that **Everybody** blamed **Somebody** when **Nobody** did what **Anybody** could have done. – Source - Unknown

7

கணவருக்குச் சில ஆலோசனைகள்

புருஷர்களே உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள். (எபேசியர் 5:25)

"திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன" (Marriages are made in heaven) என்று கூறுவார்கள். ஆனால், திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்டாலும், திருமணத்தால் ஏற்பட்ட அந்தப் பந்தத்தைக் கட்டிக்காத்து, இவ்வுலகில் வாழும் வாழ்நாள் முழுவதும் வழிநடத்திச் செல்லும் பொறுப்பு கணவனுக்குண்டு (Even if marriages are made in heaven, man has to be responsible for the maintenance thereof).

பவுல் எபேசியர் நிருபத்தில், "புருஷர்களே உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்" (எபேசியர் 5:25) என்று கூறுகிறார்.

மனைவியிடம் அன்புகூருவதற்கு அளவுகோல் என்ன? அந்த அளவுகோல், ஒவ்வொருவருக்கும் அவரவர் புரிந்துகொண்டபடி வேறுபடலாம். ஆனால் இதைக் குறித்த சந்தேகம் எழக்கூடாது என்பதற்காவே பவுலடியார் அன்புகூருவதற்கான அளவுகோலை எபேசியர் 5:28–ல் கொடுத்துள்ளார்.

"புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்த சரீரங்களாகப் பாவித்து அவர்களில் அன்புகூரவேண்டும். தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்னில்தானே அன்புகூருகிறான்."

இதைவிட அற்புதமாகக் கணவன்–மனைவி உறவை விளக்கக் கூடிய வார்த்தைகளோ, ஒப்பீடுகளோ அல்லது உவமானமோ வேறு எதுவும் இருக்க இயலாது.

பேதுரு அடிகளார், புருஷர்களுக்குக் கூறும் அறிவுரையைக் கேளுங்கள்: **“புருஷர்களே, மனைவியானவள் பெலவீனமான பாண்டமாக இருக்கிறபடியினால், உங்கள் ஜெபங்களுக்குத் தடை வராதபடிக்கு, நீங்கள் விவேகத்தோடு அவர்களுடனே வாழ்ந்து, உங்களுடனேகூட அவர்களும் நித்திய ஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களானபடியினால், அவர்களுக்குச் செய்யவேண்டிய கனத்தைச் செய்யுங்கள்”** (1 பேது.3:7).

உடலில் கலந்த உடல்

தனது உடலை நேசிக்காதவன் யார்? ஒவ்வொருவரும் தங்களுடைய உடலை நேசிப்பதால்தான் எல்லோருமே தங்களுடைய உடலை ஆரோக்கியமாகவும் அழகாகவும் வைத்திருக்க விரும்பு கின்றனர். தனது உடலுக்கு எந்த நோயும் – ஆபத்தும் வரக்கூடாது என்றுதான் எல்லோருமே விரும்புகிறார்கள்.

தனது உடலில் தானே வலியையோ அல்லது காயத்தையோ உண்டாக்கி ஊறுவிளைவித்துக்கொள்ளுகிறவர்கள் எவரேனும் உண்டோ? “திருமண பந்தத்தினால் இணைந்த மனைவி, கணவனின் சரீரத்தில் இணைந்து ஒன்றானவள்” என்றுரைக்கிறது திருமறை. **“புருஷன் ..... மனைவியோடே இசைந்திருப்பான். அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாக இருப்பார்கள்”** (ஆதி. 2:24). எனவேதான் ஆங்கில மொழியில் மனவியைக் **“கணவனின் நற்பாதி”** (Better-half) என்று கூறுவார்கள்.

கிரேக்க தத்துவ ஞானி **பிளேட்டோ** ‘திருமணத்தைப்பற்றி’ (On Marriage) என்ற தன்னுடைய கட்டுரையில், **“ஒவ்வொரு ஆணும் பாதி நபர்தான், அவர்கள் தாங்கள் தொலைத்துவிட்ட மறு பாதியைத் தேடிக்கொண்ட வாழ்கிறார்கள்”** என்று கூறுகிறார் (An individual is only half a person and spends his life looking for his missing half - ***Plato***).

தனது உடலை மட்டுமல்ல, தனது **“உடலில் கலந்த உடலாக”** இருக்கும் மனைவியின் உடலுக்கும் எந்தவித ஊறுமின்றி காப்பது கணவர்கள் மீது விழுந்த கடமையாக இருக்கிறது. தனது உடலைப் பேணுவது போலவே மனைவியையும் பராமரிக்கவேண்டும்.

கணவன் மனைவி உறவு, உடலையும் தாண்டி உணர்வு களையும் உள்ளடக்கியதாகும். மனைவியின் உடலை மட்டுமல்ல, உணர்வுகளையும் காயப்படுத்தக்கூடாது. உங்கள் அம்மாவையும் அக்கா–தங்கைகளையும் திருப்திபடுத்துவதற்காக மனைவியைப் புண்படுத்தவேண்டாம்; புறக்கணிக்கவேண்டாம்; கொடுமைப் படுத்தவேண்டாம்.

அதற்காகப் பசப்பும் பாசாங்குமுள்ள மனைவியிடம் சரணடைந்து, அவளின் குற்றேவல்களுக்குத் துணைபோகும்

முதுகெலும்பற்ற கணவனாக இருங்கள் என்று நான் கூறவரவில்லை. மனைவியிடம் அன்பு செலுத்துங்கள் என்றுதான் கூறுகிறேன்; அடிமையாக மாறுங்கள் என்று கூறவில்லை.

மனைவியை அடிமையைப் போல் நடத்தவேண்டாம்; நீங்களும் மனைவிக்கு அடிமையாகவேண்டாம் என்றுதான் கூறுகிறேன் (Don't treat your wife a slave, nor you be a slave to her).

மனைவிக்கு மரியாதை கொடுங்கள்

"மனைவிக்கு மரியாதையா?" என்று புருவத்தை உயர்த்த வேண்டாம். சமுதாயத்தில் உங்களுக்கு அடுத்த மரியாதை உங்கள் மனைவிக்குக் கிடைக்கவேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். நீங்களே மதிக்காத நபரிடம் பிறர் மரியாதை செலுத்த வேண்டுமென்று எப்படி எதிர்பார்க்க முடியும்?

மனைவியை அடிப்பது ஆம்பளைத்தனமில்லை; அது கணவனின் இயலாமையின் வெளிப்பாடு; தனது கோபத்தைத் தணித்துக்கொள்ள முற்படும் வடிகால். தன்னை அடிப்பவனிடம் ஒரு பெண் அன்பு செலுத்தவேண்டும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்? உங்கள் இரத்தத்தின் சூடு தணியும்பொழுது, அன்புடன் உங்களைக் கவனிக்க ஆளின்றி, இவ்வுலகிலேயே நரகத்தை அனுபவிக்கும் நிலை ஏற்படலாம்.

பொது இடங்களில் அல்லது உறவினர்கள் மத்தியில் மனைவியை "வாடி– போடி – அடியே" என்றெல்லாம் அழைப்பது நாகரீகமற்ற செயல். இதனாலெல்லாம் உங்களுடைய ஆம்பளைத்தனமாக அங்கீகரிக்கப்படுவதில்லை. மனைவியை எப்படி வைத்திருக்கிறான் – எப்படி நடத்துகிறான் என்பதில்தான் ஒரு கணவனுக்கு சமுதாயத்தில் மரியாதை கிடைக்கிறது.

பிறர் மத்தியில் மனைவியைக் கேலிசெய்வதும் – கிண்டல் புரிவதும் தவறான செயல். உங்கள் செயல்கள் மனைவியின் மனதில் காயத்தை ஏற்படுத்தும் – உங்கள் மீதுள்ள அன்பை வற்றச்செய்யும்.

மற்றவர்களிடம் தன்னுடைய மனைவியைப்பற்றிக் குறை கூறும் போக்கும் தவறானது. கருத்து வேறுபாடுகளை இருவரும் பொறுமையாக அமர்ந்து பேசித் தீர்த்துக்கொள்ளவதே நிரந்தரமான தீர்வாக இருக்கும்.

மனைவியை ஆயத்தப்படுத்துங்கள்
(Prepare your wife to live in your absence)

மனிதனுடைய ஆயுட்காலம் அநித்தியம். ஒருமனிதனுக்கு இறையழைப்பு (God's Call) எப்போது வேண்டுமென்றாலும் இருக்கலாம். உங்களுடைய காலத்திற்குப் பின்னும் வாழும் நிலை உங்கள் மனைவிக்கு ஏற்பட்டால், அவரை நிர்க்கதியாக இந்தப் பரந்த

உலகில் விட்டுவிட்டுச் சென்றுவிடாதீர்கள். உறவினர்கள் ஒருவாரம் உடன் அழுதால் அதிகம். அதன்பின்பு அவரவர்களுக்கு அவரவர் வேலை.

உதவி செய்ய வருபவர்கள், ஆயுட்காப்பிட்டுத் தொகை, வங்கி இருப்பு இவைகளைப் பார்த்தால் தங்களுக்கும் அதில் பங்கு கிடைக்காதா என்று ஆசைப்படுவார்கள்; இல்லையென்றால் அவர்களுடைய அவசரப் பணத் தேவைக்கு உங்கள் மனைவி யிடம்தான் வந்து நிற்பார்கள். அவர்கள் உதவி செய்ததை எண்ணி மறுக்க இயலாமல் உங்கள் மனைவி தவிப்பார்கள். ஆகையால் உங்களுடைய காலத்திற்குப் பின்பு, உங்களுடைய ஆயுட்காப்பீட்டுத் தொகையை எடுப்பது எப்படி, வங்கியிலுள்ள கணக்கைத் தன்பெயரில் மாற்றுவது எப்படி என்பதை அவர்களுக்குப் பேச்சுவாக்கில் கற்றுக்கொடுங்கள்.

முடிந்தவரை எல்லா வங்கிக் கணக்குகளிலும், உங்களுடைய மனைவியின் பெயரையும் சேர்த்துக்கொள்ளுங்கள். இல்லை யென்றால் Nomination Facility–யைப் பயன்படுத்துங்கள். இதனால் உங்களுடைய பணத்தை உரியவர்களுக்கு வழங்குவது வங்கிக்கும் சுலபமாக இருக்கும். வக்கீல்–கோர்ட் என்று அலைந்து கொண்டிருக்கவேண்டாம்.

'என்னுடைய மனைவியை என்னுடைய பிள்ளைகள் கவனித்துக் கொள்வார்கள்' என்று ஒருவேளை நீங்கள் கூறலாம். அப்படி அன்பான பிள்ளைகளை நீங்கள் ஆசீர்வாதமாகப் பெற்றிருந் தால்கூட, எந்நிலையிலும் உங்களுடைய மனைவியைப் பிள்ளைகள் பாரமாகக் கருதாதபடிக்கு, அவர்களுக்கு வாழ்வாதாரத்தை அளித்துச் செல்வது உங்களுடைய கடமை என்பதை மறவாதீர்கள்.

உங்கள் காலத்திற்குப் பின்பும் உங்களுடைய அன்பு உங்கள் மனைவிக்குக் கிடைத்துக்கொண்டிருக்கவேண்டும். பல கணவர்கள் முன்னேற் பாடாக எதுவும் செய்யாமற்போவதால் அநேக பிள்ளைகள் சொத்தை யெல்லாம் பங்குபோட்டுக்கொண்டுவிட்டு தாயை தவிக்கவிட்டு விடுகிறார்கள்.

மனைவியிடம் அன்பு செலுத்துங்கள்

மணந்த மனைவியிடம் அன்பு செலுத்துவதை உங்கள் குடும்பத்தினர் அனைவரும் – உங்கள் பெற்றோர்கள் உள்பட – விரும்புகிறார்கள். முதிர்ச்சியற்ற பெற்றோர்கள்தான், தங்கள் மகன் அவனுடைய மனைவிக்குமேல் தங்களிடம் அன்பு செலுத்த வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள்.

ஒரு குடும்பத்தலைவன் தன்னுடைய பிள்ளைகளுக்குச் செய்யக்கூடிய மிகப்பெரிய காரியம் அவர்களை ஈன்றெடுத்த தாயிடம், அதாவது தன்னுடைய மனைவியிடம், அன்பு

செலுத்துவதுதான் (The most important thing a father can do for his children is to love their mother).

மனைவியை வெறுத்து குழப்பமான குடும்பத்தை மகன் உருவாக்க வேண்டுமென்று, மகனிடம் உண்மையான அன்பு செலுத்தும் எந்தத் தாய்–தந்தையும் விரும்பமாட்டார்கள்.

அதுபோலவே, மனைவியிடம் நீங்கள் செலுத்தும் அன்பைச் சாதகமாகப் பயன்படுத்தி உங்கள் பெற்றோரையும்–உற்றோரையும் வெறுக்கச் செய்ய எந்த நல்ல மனைவியும் முயலமாட்டாள். கணவனிடமும், கணவனின் உறவுகளிடமும் அன்புசெலுத்தும்படி தன் மகளுக்குக் கற்றுக்கொடுக்கும் தாய்–தந்தைதான் மகளுக்கு நன்மையானவைகளைக் கற்றுக்கொடுக்கிறார்கள்.

கணவனைக் "கைக்குள் போட்டுக்கொள்ளுமாறு" போதிக்கும் தாய் தன் மகளுக்கு விரோதியாக இருக்கிறாள். விதையை விதைத்தால், விதைத்த விதைக்கேற்ப நிலத்தில் பலன் கிடைக்கும். தினையை விதைத்தால் தினையை அறுவடை செய்யலாம். வினையை விதைத்தால் வினையைத்தான் அறுவடை செய்தாக வேண்டும். நெரிஞ்சில் (முட்செடி) விதைக்கப்பட்ட உள்ளத்தில் நெரிஞ்சில்தான் நிறைந்திருக்கும். பின்னாளில் விதைத்தவனின் காலையே நெரிஞ்சில் பதம்பார்க்கும்.

மனைவிடம் அன்பு செலுத்துகிறேன் என்ற சாக்கில் மற்ற உறவுகளைப் பகைக்காதீர்கள் – வெறுக்காதீர்கள். உறவுகள் இறைவனால் அருளப்பட்டவைகள். ஆனால் எந்த உறவுகளும் உங்களைப் பகடைக்காயாக்கி உருட்டி விளையாட அனுமதிக்காதீர்கள்.

மனைவியை நேசிக்கும் அதே வேளையில், உங்களுடைய தாய்–தந்தை–தமையன்–தமக்கை போன்ற உறவுகளையும் நேசியுங்கள். மனைவியை நேசிப்பதால் மற்றவர்களைப் பகைக்கவேண்டுமென்று பொருளல்ல.

இரண்டு வகையான உறவுகளையும் சரியாகச் சமநிலைப் படுத்துவது சிலவேளைகளில் சிரமமாகத்தான் இருக்கும் (It can be a struggle to find the proper balance). ஆனால், இந்த முதிர்ச்சியான இல்வாழ்க்கை உறவைத்தான் கிறிஸ்து தன்னுடைய பிள்ளைகளிடம் எதிர்பார்க்கிறார்.

நீங்கள் நீங்களாகவே இருங்கள். குழம்பும்பொழுது இறைவன் சன்னிதியில் மண்டியிட்டு தெளிவு பெறுங்கள். உண்மையான இறைவேண்டலுக்கு செவிமடுக்க இறைவன் ஆயத்தமாகவே இருக்கிறார்.

(குணசாலியான) மனைவியைக் கண்டடைகிறவன் நன்மையானதைக் கண்டடைகிறான். கர்த்தரால் தயையும் பெற்றுக் கொள்கிறான் (நீதிமொழிகள் 18:22).

மனைவியிடம் அன்பாயிருப்பதை வெளிப்படுத்துவது எப்படி?

அன்றாடம் உங்களுடைய மனைவியிடம் அன்பை வெளிப்படுத்த பத்து ஆலோசனைகளை கூறியுள்ளேன். இது நிறைவான அறுதிப்பட்டியலல்ல. அனுபவத்தில் உங்களுக்கு இன்னமும் அதிக வழிகளை அறிந்திருப்பீர்கள் – அறிந்துகொள்வீர்கள்.

அன்றாடம் மனைவியிடம் அன்புசெலுத்த பத்து வழிகள்

1. பிறந்த நாளிலும் – திருமண நாளிலும்தான் மனைவிக்கு பரிசு கொடுக்கவேண்டுமென்று பிடிவாதம் பிடிக்காதீர்கள். பிறந்த நாள் இல்லாவிட்டால்கூட சிறுசிறு வெகுமதிகளை அவ்வப்பொழுது கொடுக்கலாம்; விலை உயர்ந்ததாக இருக்கவேண்டிய அவசிய மில்லை – அது ஒருமுழம் மல்லிகைப் பூவாகவோ அல்லது ஒரு ரோஜாப்பூவாகவோகூட இருக்கலாம். இப்படிப்பட்ட உங்கள் செயல்கள், நீங்கள் தனியாக வெளியே செல்லும்பொழுதும் உங்கள் மனைவியின் நினைவு உங்களுக்கு இருக்கிறது என்பதை வெளிப்படுத்துகிறது.

2. சிலவேளைகளில் உங்கள் மனைவி அவசியமின்றி சஞ்சலப்படுவதாக உங்களுக்குத் தோன்றலாம். அப்படி அவசியமில்லாமல் உங்கள் மனைவி கவலைப்பட்டால்கூட, அவருக்கு ஆறுதல் கூறுங்கள், அனுசரணையாக இருங்கள்; அவருடைய கவலை தேவையற்றது என்று நீங்கள் கருதினாலும், உங்கள் மனைவியைப் பொறுத்தவரை அது உண்மையான கவலை என்பதை மனதில்கொள்ளுங்கள்.

3. உங்கள் மனைவிக்கு ஒரு பிரச்சனை ஏற்பட்டால், அதை தீர்த்துவைக்கும்படி அவர்கள் உங்களிடம் நேரடியாக வாய்விட்டுக் கேட்காமல் இருக்கலாம்; ஆனாலும் அவர் கூறும் பிரச்சனையைக் காதுகொடுத்துக் கவனமாகக் கேளுங்கள். அந்தப் பிரச்சனையைச் சமாளிக்க அவர் தனியாகக் கஷ்டப்படப்போவதில்லை என்பதையும், நீங்கள் அவருடன் உறுதுணையாக இருக்கிறீர்கள் என்பதையும் அவருக்கு உணர்த்துங்கள்.

4. நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பதுபோலவே, உங்கள் மனைவியையும் மகிழ்ச்சியாக இருக்கச் செய்யுங்கள். உங்களைப் போலவே நீங்கள் அவரை நேசிப்பதால், உங்கள் செயல்கள் யாவும் அவருக்கும் மகிழ்ச்சி கொடுப்பதாக இருக்கவேண்டும். மனைவிக்கு நீங்கள் செய்வது எதுவும் பிரதிபலனை எதிர்பார்த்துச் செய்வதில்லை. நீங்கள் பிரதிபலனை எதிர்பார்த்து மனைவிக்கு ஏதேனும் செய்தால், உங்கள் சிந்தனை ஆரோக்கியமாக இல்லை என்றே பொருள்; உங்கள் இல்லற உறவும் கண்டிப்பாக ஆரோக்கியமாக இருக்காது. உடல் சுகத்தை மனதில்வைத்து மனைவிக்கு ஏதாவது செய்தால், அந்த பலவீனமே உங்களை அடிமைப்படுத்தும் எத்தனமாக மாறிவிடும். ஜாக்கிரதை.

5. உங்கள் மனைவி முக்கியமாகக் கருதும் உறவுகளை நீங்களும் முக்கியமாகக் கருதுங்கள். உங்கள் மனைவி நல்லசில உறவுகளில் தொடர்புகொண்டு வேரூன்றி நிற்க முயலுகையில், நீங்கள் உங்கள் மனைவிக்கு அனுசரணையாக வேரூன்றி நில்லுங்கள் – உதவுங்கள். தவிர்க்கப்படவேண்டிய கேடான மனித உறவுகள் என்று நீங்கள் கருதினால், மனைவியிடம் வெளிப் படையாகவே பேசி, அந்த உறவுகளைத் தவிர்க்கச் செய்யுங்கள்.

6. மற்ற பெண்களுடன் கலந்துறவாட அனுமதியுங்கள்; அப்பொழுதுதான் பெண்களால்மட்டுமே சாதிக்கக்கூடிய விஷயங் களை அவரால் புரிந்துகொள்ளமுடியும்; தாழ்வு மனப்பான்மை அகன்று, பெண்மையின் பெருமையை அவர்களால் அறிந்துகொள்ள இயலும். நான் இங்கே புறங்கூறும் – புறணிகூறும் பெண்களைப் பற்றிக் கூறவில்லை.

7. நீங்கள் வீட்டைவிட்டு வெளியில் செல்லும்பொழுது, வீட்டிற்கு ஏதாவது வாங்கிவரவேண்டுமா என்று கேட்டு வாங்கிவாருங்கள். உங்கள் மனவி வெளியே செல்லும்பொழுது, அவர் திரும்பி வருவதற்குள் எந்த வேலையையாவது முடித்து வைக்க வேண்டுமா என்று கேட்டு முடிந்தவரை செய்துவையுங்கள்.

8. உங்கள் மனைவி முன்னேற முயற்சிக்குப்பொழுது நீங்கள் அதற்கு ஆதரவாகவும், அனுசரணையாகவும் இருங்கள். ஆனால் குறிப்பிட்ட முன்னேற்றத்தை அவர்கள் அடைந்தால்தான் நீங்கள் அவரிடம் அதிகமாக அன்பு செலுத்துவீர்கள் என்ற எண்ணத்தை ஏற்படுத்திவிடாதீர்கள். அவர்கள் அந்த முன்னேற்றத்தை அடைந்தாலும் அடையாவிட்டாலும் உங்கள் அன்பு அவர்களுக்கு என்றென்றும் இருக்கிறது என்று அவர்கள் உணரும்படி நடந்து கொள்ளுங்கள்.

9. நீங்கள் உங்கள் மனைவியைத் தொடும்பொழுதெல்லாம் உடலின்பத்திற்காக– மட்டும்தான் என்ற நிலையை உருவாக்கி விடாதீர்கள். உங்களுடைய இச்சையைத் தணித்துக் கொள்ளு வதற்காக மட்டுமே அவர்களைத் தொடுகிறீர்கள் என்று அவர்களை எண்ணவைத்துவிடாதீர்கள். பல நேரங்களில், உங்கள் தொடுதலில், அணைப்பில், அரவணைப்பில் உங்கள் அன்பையும், உங்கள் பாதுகாப்பையும், உங்கள் பாசத்தையும் அவர்கள் உணரவேண்டும் (Your wife needs to know that there are times when you are holding them because you love them and not because you are looking forward to your own pleasure).

10. உங்கள் மனவிக்காக ஜெபியுங்கள். அவர்கள் தங்களுடைய தனிப்பட்ட ஆவிக்குரிய வாழ்க்கையில் ஆண்டவரிடம் உறவு கொண்டிருக்க நீங்கள் எப்படி உதவவேண்டும் என்று கேளுங்கள். உங்களால் முடிந்தவரை அவர்களுடைய பக்தி வாழ்க்கைக்கு

உதவியாக இருங்கள் – (ஆலயத்திற்கு / ஆவிக்குரிய கூட்டங்களுக்கு அழைத்துச் செல்லுதல், ஆவிக்குரிய புத்தகங்கள் வாங்கிக்கொடுத்தல் போன்றவைகள்).

ஏற்கனவே கூறியதுபோல், இந்தப் பட்டியல் அறுதிப் பட்டியல் அல்ல; நீங்கள் வேறு பல வழிமுறைகளைக் கைக்கொண்டு அன்பு செலுத்தி, உங்களுடைய மனைவியுடன் மகிழ்ச்சியான இல்லறம் நடத்திக்கொண்டிருந்தால் அந்தத் தொடருங்கள்.

நிறைவுரை

இந்தச் சந்தர்ப்பத்தில், எப்போதோ படித்த ஒரு கதை என் நினைவிற்கு வருகிறது. வாழ்க்கையில் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த ஒரு மனிதன், தன்னுடைய துன்பத்தைப் போக்கும்படி இறைவனிடம் இறைவேண்டல் (Prayer) ஏறெடுத்தான்.

இறைவனும் அந்த மனிதனின் வேண்டுதலுக்குச் செவி சாய்த்துத் திடீரென்று எதிர்பாராதவிதமாக அவன் முன் தோன்றினார். இறைவன் அந்த மனிதனுக்கு மூன்று வரங்களை அளித்தார். "இந்த வரங்களின்படி நீ எதைக்கேட்டாலும் அது உனக்குக் கிடைக்கும். ஒவ்வொரு வரத்தையும் ஒருமுறைதான் பயன்படுத்த முடியும்." என்று கூறிவிட்டு மறைந்துவிட்டார்.

எதைக் கேட்பது என்று யோசித்தான். இப்போதுள்ளதைவிட மிகவும் அழகான மனைவி தனக்கு இருக்கவேண்டும் நினைத்தான். அப்படியானால் இப்பொழுது இருக்கும் தன்னுடைய மனைவியை எப்படித் தலைமுழுகுவது என்று சங்கடப்பட்டான்

கடைசியில் ஒரு முடிவெடுத்து, தன்னுடைய மனைவி சாகவேண்டுமென்று கூறி முதலாவது வரத்தை உபயோகித்தான். மனைவி மரித்துப்போனாள். அடக்கத்திற்கு அவனுடைய இனஜன பந்துக்கள் யாவரும் வீட்டில் கூடிவிட்டார்கள். வந்திருந்த உறவினர்கள், அவனுடைய மனைவியின் அருமை பெருமைகளையும், நற்குணங்களையும் கூறிச் சிலாகித்தார்கள்.

இவைகளைக் கேட்ட அந்த மனிதன், 'தன்னுடைய மனைவி இவ்வளவு நல்லவளா?' என்று ஆச்சரியப்பட்டுப்போனான். இவ்வளவு நல்ல மனைவியின் அருமையை அறியாமல் தவறு செய்துவிட்டோமே என்று வருந்தினான். இவளைவிட நல்ல மனைவி அமைவது கடினம் என்று முடிவெடுத்து அடுத்த வரத்தைப் பயன்படுத்தி தனது மனைவியை உயிருடன் எழுப்பிவிட்டான்.

இப்பொழுது இறைவன் அந்த மனிதன் முன்னால் தோன்றி, "இனியுள்ள ஒரு வரத்தை என்ன செய்யப்போகிறாய்?" என்றார்.

அந்த மனிதன், "இறைவா, இந்த மூன்றாவது வரம் எனக்கு வேண்டாம்; அதை நீயே வைத்துக்கொள்; உள்ளதில் திருப்தியுடன்

இவ்வுலகில் மகிழ்ச்சியுடன் வாழ்வது எப்படி என்று நான் அறிந்துகொண்டுவிட்டேன்" என்று கூறி மீதமுள்ள மூன்றாம் வார்த்தை இறைவனிடமே கொடுத்துவிட்டான்.

சில ஆண்டுகளுக்கு முன்பு, மகிமையில் பிரவேசித்துவிட்ட ஒரு தாயாரின் நினைவுநாள் அனுசரிக்கும் ஒரு வீட்டிற்கு சென்றிருந்தேன் (Death Anniversary). மரித்துவிட்ட தாயாரின் கணவர் தானும் சில வார்த்தைகள் கூற விரும்பினார்.

அவர் கூறினார்: "நான் எனது மனைவியை அதிகம் நேசித்தது என்னவோ உண்மைதான்; ஆனால் அவள் இன்னும் அதிகமாக நேசிக்கப்பட்டிருக்கவேண்டும் – இன்னும் அதிகமாக அன்பு செலுத்தப்பட்டிருக்கவேண்டும்; இப்பொழுது அதற்காக வருந்துகிறேன்" என்றார்.

உயிருடன் இருக்கும்பொழுது, பல கணவன்மார்கள். தங்களுடைய மனைவிகளின் அருமையை உணராதிருக்கிறார்கள்; அதைப்போலவே பல மனைவிகளும் தங்களுடைய கணவர்களின் அருமையை உணராதிருக்கிறார்கள். ஒரு பொருள் தனக்கருகில் இருக்கும்வரைக்கும் அதன் அருமை தெரிவதில்லை; இழந்த பின்னர்தான் அதன் அருமையைப் பலர் உணருகிறார்கள்.

பல தம்பதியர்கள், தங்களுடைய அறியாமையால், தங்களுடைய வாழ்க்கையைத் தாங்களே நரகமாக்கிக் கொண்டிருக்கிறார்கள். உடலளவில் கணவனும் மனைவியும் ஒரே வீட்டில் வசிப்பதால் மட்டும் அது இல்லற வாழ்க்கையாகிவிடாது. குடும்பத்தில், மனங்கள் இணைந்து, இன்பமாய் இருந்தால்தான் அது இல்லறம். உங்கள் இல்லறம் மனங்கள் இணைந்த இல்லறமாக இருக்கிறதா?

"மணமான தம்பதியர்களிருவரும் உடலாலும், உணர்ச்சியாலும், ஆவியினாலும் உண்மையாகவே தங்களை இழந்து, ஒருவரிலொருவர் புதைந்து, ஒருவரையொருவர் மற்றவரில் தன்னைக் காண்பார்கள்" என்று பால் ஸ்டீவென்ஸ் என்பவர் தனது "ஆவிக்குரிய திருமணம்" என்ற நூலில் கூறுகிறார் (Married persons are literally buried into each other, physically, emotionally and spiritually, losing themselves but finding themselves in the other — ***Paul Stevens** in his book* 'Marriage Spirituality').

எத்தனை அர்த்தமுள்ள வார்த்தைகள்!

நீங்கள் ஒருவரிலொருவர் மற்றவரைக் காண்கிறீர்களா?

திருமணத்தினால் இணைந்த தம்பயதியர்களிடையே நிலவ வேண்டிய அன்பு எப்படிப்பட்ட அன்பாக இருக்கவேண்டும்?

அந்த அன்பு, ஆலயத்தில் இருவரும் அளித்த உறுதிமொழிக்குக் கீழ்ப்படிவதினால் ஏற்படும் அன்பு மட்டுமல்ல, அது அவர்களிடம் நிலவவேண்டிய உடன்படிக்கையைக் கைக்கொள்வதினால் உண்டாகும் அன்பாகும். இருவரும் (கணவன்–மனைவி) ஒருவரிட மொருவர் அன்பு காட்டவேண்டியது இருவரின் கடமை மட்டுமல்ல, அது இறைச்சன்னதில் செய்துகொண்ட உடன்படிக்கை யினால் இருவரும் நிறைவேற்றவேண்டிய கட்டாயக் கட்டளையாகும். (Marriage is not just a commitment to love, but it is a covenant of love; it is not just an obligatory love, but it is a mandatory love).

கவிஞர் கண்ணதாசன், " **இளமையிலே காதல் வரும்; எதுவரையில் கூடவரும்?**" என்று கேட்டுவிட்டு, "**முழுமை பெற்ற காதலென்றால், முதுமைவரை ஓடிவரும்**" என்று அவரே பதிலையும் கூறுகிறார். ஒருவகையில் அது உண்மைதான்.

ஆனால் நான் கூறுகிறேன், "**முதுமைவரை மட்டுமல்ல, தனது வாழ்க்கைத் துணையின் மரணத்திற்குப் பின்பும் தொடர்ந்து நிலைத்து நிற்பதுதான் உண்மையான காதல்**"

"**சூரியனுக்குக்கீழே தேவன் உனக்கு நியமித்திருக்கிற மாயையான நாட்களிலெல்லாம் நீ நேசிக்கிற மனைவியோடே நிலையில்லாத இந்த ஜீவவாழ்வை அநுபவி; இந்த ஜீவனுக்குரிய வாழ்விலும், நீ சூரியனுக்குக் கீழே படுகிற பிரயாசத்திலும் பங்கு இதுவே**" (பிரசங்கி 9:9).

8

பெண் வாழும் மூன்று பாத்திரங்கள்

புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள்.

(நீதிமொழிகள் 14:1).

இன்றைய நாட்களில் பாரம்பரியக் கூட்டுக்குடும்ப (Joint-family) கலாச்சாரம் குறைந்துகொண்டு வருகிறது. வேலையினிமித்தமாகவும், வியாபாரத்தினிமித்தமாகவும் வெவ்வேறு இடங்களில், உள் நாட்டிலும், வெளி நாடுகளிலும், வாழவேண்டிய நிர்ப்பந்தத்தினால், கணவன்–மனைவி–பிள்ளைகள் மட்டுமேகொண்ட சிறிய குடும்பங்கள் (Nucleus Families) உருவாகிக்கொண்டிருக்கின்றன.

பொருளாதார தேவைகளுக்காகப் பெற்றவர்களைச் சார்ந்திருக்க வேண்டிய நிலையிலில்லாத தம்பதியர்கள் தனிக்குடித்தனங்களாக, வேறு ஊரிலோ அல்லது அயல் நாடுகளிலோ, வாழ்கிறார்கள். இவற்றை Satellite Families என்று அழைக்கிறார்கள். விண்ணில் செல்லும் விண்கலன்கள், பூமியிலுள்ள மையத்துடன் தகவல்–தொடர்புடன் இணைக்கப்பட்டிருப்பதுபோல, இவ்வகைக் குடும்பங்கள் தொலைத் தொடர்பு சாதனங்களினால் (Telephones, Online chatings, Web camaras, e-mails, Postel-letters) பெற்றார்–உற்றார்–உறவினர் களுடன் தங்கள் உறவைத் தக்கவைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

பழங்காலத்தில் ஒரு பெண்ணின் உலகம் மிகவும் குறுகியது – சிறியது. கிட்டத்தட்ட அவர்களின் குடும்பந்தான் அவர்களின் உலகமாக இருந்தது. இன்று அவர்களின் அறிவும், வெளியுலகத் தொடர்பும் பரந்து விரிந்துவிட்டது. அவர்களுடைய வாழ்க்கை ஆண்களுக்குச் சரிநிகர் சமமாக இருக்கிறது.

வேலைக்குச் செல்லும் பெண்கள் இந்தப் பரந்த உலகை நேரடியாகவே சந்திக்கிறார்கள். வெவ்வேறு இடங்கள், புதிது புதிதான உறவுகள், பலவகையான சூழ்நிலைகள், விதவிதமான அனுபவங்கள், இன்றய பெண்களின் எண்ணங்களையும், செயல்களையும், வாழ்கை முறைகளையும் வெகுவாகப் பாதித்திருக்கிறது.

பெண்ணின் மூன்று முகங்கள்

இந்திய மண்ணில் பிறக்கும் பெண்கள் தங்கள் திருமணத்திற்குப் பின்னர், பெரும்பாலும் மூன்றுவிதமான பாத்திரங்களில் வாழ வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

1). குழந்தைகளுக்கு அவள் **தாயாக** (Mother) இருக்கிறாள்;

2). கணவனுக்கு **மனைவியாக** (Wife) இருக்கிறாள்;

இரண்டிற்கும் மேலாக

3). உலகத்தார் பார்வையில் அவள் ஒரு **பெண்ணாகவும்** (Woman) இருக்கிறாள்.

இந்த மூன்று பொறுப்புக்களையும் செவ்வனே நிறைவேற்றி வெற்றியடைபவளே திருமறை எதிர்பார்க்கும் பெண்ணாவாள்.

"கர்த்தருக்குப் பயப்படும் பெண்ணே புகழப்படுவாள்" (நீதிமொழிகள் **31:30**).

கர்த்தருக்குப் பயப்படும் பெண்ணின் குணாதிசயம் என்னென்ன?

இதற்குப் பதிலை பவுலடியார் கூறுகிறார். கர்த்தரை மகிழ்விக்கும் பெண், **"தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்த புத்தியோடு தன்னை அலங்கரிக்கிறவளாகவும் ...... அடக்கமுள்ளவளாகவும், அமைதலோடு கற்றுக்கொள்ளுகிற வளாகவும் ....தெளிந்த புத்தியோடு விசுவாசத்திலும், அன்பிலும், பரிசுத்தத்திலும், நிலைகொண்டிருப்பவளாகவும்" (1 தீமோ.2:10, 11,15)** இருக்கவேண்டுமென்று பவுலடியார் கூறுகிறார்.

I. பெண்

ஜி.சே. வேதநாயகம், தன்னுடைய "ஆடவர் கும்மி" என்ற கவிதைத் தொகுப்பில் இப்படிக் கேள்விகள் கேட்கிறார்.

"பெண்ணேயல்லாமல் மனையேது? – அவர்
தன்னேயல்லாமல உலகேது?"

தொடர்ந்து அவரே கூறுகிறார்:

பெண்ணற்ற வீடு செழிக்காதே! நல்ல
பெண்ணற்ற செல்வம் ஜொலிக்காதே!

ஆங்கிலத்தில் ஒரு பழமொழியுண்டு **House is not a house, if it is not a Home; Home is not a home, if there is no woman. "இல்லறமாகத் திகழாத வீடு வீடல்ல; பெண்ணில்லாத குடும்பமும் குடும்பமல்ல"** என்பதுதான் இதன் பொருள்.

மானுட இல்லற வாழ்க்கையில் பெண் இன்றியமையாதவள்.

பாரதிதாசன், ஒரு பெண்ணானவள் எப்படி குணத்துடனும், மனதுடனும், அறத்துடனும், சொல்லுடனும், பண்புடனும், தாய்மையுள்ள அன்புடனும் திகழவேண்டுமென்று கவிநயத்துடன் கூறுகிறார்.

"பொன்னான குணமுடையோள்
பொய்யில்லா மனமுடையோள்
முன்னான அறமுடையோள்
முத்தான சொல்லுடையோள்
தென்னாட்டின் பண்பாட்டில் தீராத பற்றுடையோள்
தன்வீட்டு விருந்தினர்மேல் தாய்போன்ற
அன்புடையோள்!" (புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் – "பெண்").

ஆனால் இன்றைய நடைமுறை வாழ்க்கையில் பெண்கள் நிலையென்ன?

இயேசு இவ்வுலகில் மாம்ச சரீரத்தில் வாழ்ந்த காலத்தில் வழக்கத்திலிருந்த யூத ஜெபமொன்றில், "என்னை ஒரு அவிசுவாசியாகவோ அல்லது ஒரு காட்டுமிராண்டியாகவோ, ஒரு அடிமையாகவோ அல்லது ஒரு பெண்ணாகவோ படைக்காததற்காக உமக்கு நன்றி" என்று கூறுவார்களாம் (Thank you for not making me an unbeliever or barbarian, a slave, or a woman – **Jewish Prayer**). பெண்ணாக இருப்பது இஸ்ரவேலர்களின் மத்தியில் அவ்வளவு கேவலமாக கருதப்பட்டிருக்கிறது.

உலக சரித்திரத்தின் ஏடுகளைப் புரட்டினால், பெண்கள் போகப்பொருள்களாகவும், உடைமைகளாகவுமே கருதப்பட்டிருந்ததைக் காணலாம். ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் சமீபகாலம் வரை பெண்களுக்கு ஓட்டுரிமைகூட மறுக்கப்பட்டிருந்தது அதிர்ச்சியளிக்கும் உண்மை.

பெண்–உரிமைக்காகவும், பெண்–கல்விக்காவும், பெண்–முன்னேற்றத்திற்காவும் கிறிஸ்தவம் செய்துள்ள தொண்டு, பெண்ணடிமைத்தனத்தை எதிர்த்து நிகழ்த்திய போர் என்றால் அது மிகையல்ல.

"இறையரசில் ஆணென்றும், பெண்ணென்றும் பேதமில்லை, இறைச் சன்னதியில் பால்பேத (Gender difference) உணர்வுகளுக்கு இடமில்லை" (கலா.3:27,28) என்ற இயேசுவின் கருத்து அன்றைய யூத சமுதாயத்திற்கு எதிராக விடப்பட்ட சவால்.

மாறிவரும் இன்றைய உலகில், தன்னுடைய குழந்தைகளிடமும், கணவனிடமும், மற்றவர்களிடமும் உரையாட / உறவாட தன்னுடைய அறிவையும், ஆளுமையையும் (personality) வளர்த்துக்கொள்வது தவிர்க்க இயலாததாக இருக்கிறது. பெண்கள் தங்களுடைய திறமைகளையும், தாலந்துகளையும் வெளிப்படுத் துவதற்கு, சில வளராத நாடுகளையும் – பின்தங்கிய சமுதாய அமைப்புகளையும் தவிர, ஏனைய உலக நாடுகளில் / சமுதாயத்தில் ஏற்றுக்கொள்ளப் பட்டவைகளாகவே இருக்கின்றன.

பெண்களுக்கு உறுதுணையான குடும்பம் அமையப்பெற்றால், பெண்களும் விலையேறப்பெற்ற ஒளிரும் கற்களாகப் ஜொலிப்பார்கள்.

பெண்கள் ஒன்றுமறியாத, பேதையான குடும்பப் பெண்களாக வீட்டையே வலம் வந்துகொண்டிருப்பதற்காக மட்டும் கர்த்தர் பெண்களைப் படைக்கவில்லை (God doesn't confine the woman's role to a housewife). நீதிமொழிகள் புத்தகத்தில் **31** ஆம் அதிகாரத்தை வர்சித்துப்பாருங்கள். ஆண்களைப்போலவும் அதற்கும் மேலேயும் பெண்கள் குடும்பத்தைக் கட்டிக்காக்கவும், தலைமையேற்றுக் குடும்பப் பொறுப்புகளை நிறைவேற்றவும் நிர்வகிக்கவும் அறிவுறுத்தப் பட்டிருப்பதைத் தெளிவுறக் காணலாம்.

பெண்கள் தங்களுடைய தனித்துவத்தை (Individuality) வளர்த்துக்கொள்ள கணவர்கள் உதவவேண்டும். ஞானத்துடன் வீட்டைக் கட்டும் (நிர்வகிக்கும்) பொறுப்பை ஆண்டவர் பெண்கள் கையில் அல்லவா கொடுத்துள்ளார்? (நீதி.14:1)

II. தாய்

"கடவுள் எல்லா இடத்திலும் இருக்க இயலாததால், அவர் தாய்மார்களைப் படைத்தார்" என்றொரு யூதப் பழமொழியுண்டு. (God could not be everywhere, and so He made mothers — **Jewish Proverb**). உலகமனைத்திலும் தாய்மை போற்றிப் புகழப்படுகிறது.

"அன்னையின் பாதங்களே சுவர்க்கம்" என்று நவில்கிறார் நபிகள் நாயகம்.

"தாயிற் சிறந்த கோயிலில்லை" என்கிறது தமிழ் மூதுரை.

திருமறை (Bible) தாய்மையைப்பற்றி என்ன கூறுகிறது?

தாயாகவும் மனைவியாகவும், இல்லத்தை ஆள்வது இல்லாள் என்பதை வலியுறுத்துவதுபோல, 'வாழ்க்கைத் துணைநலம்' என்ற அதிகாரத்தில், குடும்பத் தலைவியாக, மனைவி ஆட்சிசெய்யும் குடும்பத்தை 'மனைமாட்சி' என்று இரு குறள்களில் வள்ளுவரும் போற்றிப் புகழுகிறார். "மங்கல மென்ப மனைமாட்சி" என்பதுதான் வள்ளுவரின் வாக்கு. அதன் பொருள் 'மனைவி ஆளும் இல்லமே போற்றுதற்குரியது' என்பதாகும். இவ்வார்த்தை நீதிமொழிகள் 31ம் அதிகாரத்தை நினைவுபடுத்துகிறதல்லவா?

நீதிமொழிகள் **31**–ம் அதிகாரத்தில், 'ஒரு பெண், தாயாகவும் மனைவியாகவும் எப்படி இருக்கவேண்டும்' என்பதை, ஒரு அரசனுடைய தாய் தன் மகனுக்கு உபதேசித்தவைகளை ஆறு குறிப்புகளாகச் சுருக்கிக் கூறலாம்.

1. **ஒரு தாய் தன்னுடைய நம்பிக்கையில் (Conviction) உறுதியாக இருக்கவேண்டும்.**

2. **ஒரு தாய் பெருமைப்படத்தக்கவளாக** (Dignified) **இருக்கவேண்டும்.**

3. **ஒரு தாய் நகைச்சுவை உணர்வுள்ளவளாகவும்** (Sense of humor) **எதிர்காலத்தைக் குறித்து நல்நம்பிக்கையுள்ளவளாகவும்** (Optimistic) **இருக்கவேண்டும்.**

4. **ஒரு தாய் அறிவுள்ளவைகளைப் பேசவேண்டும், அறிவற்ற வம்புப்பேச்சுகளைத்** (Gossip) **தவிர்க்கவேண்டும்.**

5. **ஒரு சிறந்த பெண், தாய் அல்லது மனைவி, அன்புள்ளவளாகவும், இரக்கத்தைக் கற்பிக்கும் எடுத்துக்காட்டாகவும்** (Modeling compassion) **இருக்கவேண்டும்.**

6. **ஒரு சிறந்த தாய் அல்லது மனைவி கடின உழைப்பாளியாக** (Industrious) **இருக்கவேண்டும்.**

தாயன்பு இறையன்பைப் போன்றே மேலானது; நாம் அன்பு செலுத்தப்பட தகுதியுள்ளவர்களாக இருப்பதால் ஆண்டவர் நம்மீது அன்பு செலுத்தவில்லை; இவறைவனிடத்திலிருப்பதுபோலவே, அன்பு செலுத்துவது தாயினிடம் இயற்கையாகவேயுள்ள குணநலனாகும்.

சீன மக்களின் வாழ்க்கையை மையமாக வைத்து எழுதப்பட்ட Good Earth என்ற நாவலிற்காக Noble Prize பெற்ற ஆங்கில எழுத்தாளர் பெர்ல் எஸ். பக், "தங்கள் குழந்தைகளை முத்தமிடும் சில தாய்மார்கள் உண்டு, திட்டும் சில தாய்மார்களும் உண்டு; ஆனால் இந்த இரண்டு வகைத் தாய்மார்களிடமுமுள்ள அன்பு ஒன்றுதான்" என்று கூறுகிறார் ("Some are kissing mothers and some are scolding mothers, but it is love just the same." - ***Pearl S. Buck***).

பிரபல மர்மக்கதை நாவலாசிரியை அகிதா கிறிஸ்டி, "தன்னுடைய குழந்தையிடம் அன்புசெலுத்தும் அன்னையின் அன்பிற்கீடானது இவ்வுலகில் வேறேதுமில்லை" என்று கூறுகிறார் (A mother's love for her child is like nothing else in the world –*Agatha Christe*).

குழந்தை வளர்ப்பில் தாய்மார்களுக்குப் பெரும்பங்கு உண்டு. நீங்கள் எவ்வளவு பெரியவர்களானாலும், உங்கள் தாயைப் பொறுத்தவரைக்கும் நீங்கள் முழுமையாக வளர்ச்சியடையாத குழந்தைதான். ஊருக்கு ராஜவானாலும் வீட்டிற்கு நீங்கள் பிள்ளைதான் – தாயின் உள்ளத்தில் என்றுமே நீங்கள் குழந்தைதான். உங்கள் தாயின் மனதிலுள்ள இந்த உண்மையான மனநிலையை அறியாதவரை, நீங்கள் முழுமையான மனமுதிர்ச்சியை எட்டவில்லை என்றே பொருள்.

இந்தக் கருத்திற்கு வலுசேர்ப்பதுபோல இரண்டு அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஜனாதிபதிகள் தங்கள் தாயாரைப்பற்றிக் கூறிய வார்த்தைகளை உங்களிடம் பகிர்ந்துகொள்ளுகிறேன்.

ஜார்ஜ் வாஷிங்டன், அமெரிக்க நாட்டின் முதல் ஜனாதிபதி: **"என்னுடைய வாழ்க்கையில் எனக்குக் கிடைத்த மிகப்பெரிய ஆசிரியை என்னுடைய அன்னைதான். ... நான் இந்நாள்வரை கண்டதிலேயே மிகவும் அழகான பெண்மணி என்னுடைய தாயார்தான். நான் இன்று இப்படி உயர்நிலை எட்டியிருப்பதற் கெல்லாம் என்னுடைய தாயாருக்கே கடன்பட்டிருக்கிறேன். ஏன்னுடைய வெற்றி வாழ்கைக்கு அனுசரணையாக. என்னி லிருக்கும் ஒழுக்கம், புத்திகூர்மை, உடற்கல்வி யாவும் என்னுடைய அன்னையிடமிருந்து நான் பெற்றவைகளே"** (The greatest teacher I ever had was my mother .... My mother was the most beautiful woman I ever saw. All I am, I owe to my mother. I attribute all my success in life to the moral, intellectual and physical education I received from her." — **George Washington**).

ஆபிரகாம் லிங்கன், புகழ்பெற்ற அமெரிக்க ஜனாதிபதி: **"நான் இன்று எட்டியிருக்கும் உயர்நிலைக்கும், பின்னால் நான் அடைய நம்பியிருக்கும் உயர்விற்கும், என்னுடைய அன்னை யென்னும் தேவதைக்கே கடன்பட்டிருக்கிறேன் .... பக்தி யுள்ள தாயை யுடையவன் எவனும் ஏழையல்ல"** – (All that I am and all that I ever hope to be, I owe to my angel mother. . . . No man is poor, when he has a godly mother — **Abraham Lincoln**).

ஒரு தாய் சரியான தாயாக இல்லையென்றால், அது அவளுடைய மொத்த குடும்பத்தையும், முக்கியமாக அவளுடைய பிள்ளை களையும், எப்படிப் பாதிக்கும் என்பதை எசேக்கியேல் தீரக்கதரிசி இப்படிக் கூறுகிறார்: **இதோ, பழமொழிகள் சொல்லுகிறவர்கள் எல்லோரும் 'தாயைப்போல மகள்' என்று உன்னைக் குறித்துப் பழமொழி சொல்வார்கள்" (எசேக்.16:44).**

ஆகையால் ஒரு தாய், தனக்காக மட்டுமல்ல, தன்னுடைய பிள்ளைகளின் நல்ல எதிர்கால வாழ்க்கைக்காகவும் நற்சாட்சிபெற்ற தாயாக இருப்பது அவசியமாக இருக்கிறது.

சார்லஸ் ஸ்வின்டால் என்ற ஆங்கில எழுத்தாளர் கூறும் கருத்தினைக் கேளுங்கள்: **"நீங்கள் நல்லதொரு தாயை ஆசீர்வாதமாகப் பெற்றிருந்தீர்களானால், அவர் நல்கிய பயன்களை உங்களுடைய வாழ்நாள் முழுவதும் நீங்கள் அனுப வித்துக்கொண்டிருப்பீர்கள். ஆனால், உங்களுடைய நலன் களைப் புறக்கணிப்பவளாகவும், உங்களுடைய தந்தைக்கு உறுதுணயாக இல்லாதவளாகவும் இருக்குமொரு பெண்ணைத் தாயாகப் பெற்ற துரதிஷ்டசாலியாக நீங்கள் இருந்திருந்தால், உங்களுடைய உள்ளத்தில் ஏற்பட்டுள்ள காயங்களின் வடுக்களை அழிப்பது அவ்வளவு சுலபமில்லைதான். நன்மை**

யானலும் அல்லது தீமையானாலும், உங்களுடைய தாயின் அடையாளம் உங்களில் நிரந்தரமாக இருக்கும்" ("If you were blessed with a good mother, you will reap the benefits, the rest of your days. If your mother neglected your needs and failed to support your dad, unfortunately, much of what you suffered cannot be erased. For good or ill, a mother's mark is permanent. — **Charles Swindoll**).

சாதாரணமாக ஒரு ஆணோ, பெண்ணோ கிட்டத்தட்ட ஐம்பது வயதை எட்டும்பொழுதுதான் அவர்களுடைய வாழ்க்கையின் உயர்வான இடத்தை அடைகிறார்கள். தாங்கள் உருவாக்கிய புத்திரச் செல்வங்கள் சீரிய ஒழுக்கத்துடனும் பண்புடனும் உயர்நிலையை எட்டும்பொழுது, அந்த அருங்காட்சியைக்காண அநேக அன்னையர் பெரும்பாலும் இவ்வுலகில் உயிருடன் இருப்பதில்லை; தங்கள் கடமையை முடித்துவிட்ட திருப்தியில் மகிமையில் பிரவேசித்திருப் பார்கள். இந்த அரிய கருத்தை போப் 4–ம் பவுல் அழகாக எடுத்தியம்பு வதைப் பாருங்கள்.

"ஒவ்வொரு தாயும் மோசேயைப்போலவே இருக்கிறார்கள். அவர்கள் "வாக்குத்த தேசத்திலே" பிரவேசிப்பதில்லை. தாய் மார்கள் தங்களால் காணமுடியாத உலகை ஆயத்தம் பண்ணு கிறவர்களாக இருக்கிறார்கள்" என்று அங்கலாய்போடு கூறுகிறார். (Every mother is like Moses. She does not enter the promised land. She prepares a world she will not see—**Pope Paul VI**).

ஊழியத்தின் பாதையில்கூட, இறை நற்செய்தியை விதைக்கும் அநேகர் அறுவடையைக் காணுமுன் மறுமைக்குள் பிரவேசித்து விடுகிறார்கள் அல்லவா?

நிறைவுரை

ஒரு நாள் ஒரு குடும்ப நண்பர் ஒரு வீட்டின் கதவைத் தட்டினார்.

அந்த வீட்டுச் சிறுபையன் கதவைத் திறந்தான்.

பையன் மட்டும் நிற்பதைப் பார்த்த அந்தக் குடும்ப நண்பர் கேட்டார், "ஹே! தனியாகவா இருக்கிறாய்."

பையன் கூறினான், "எஸ் அங்கிள், அம்மாவிற்குச் சுகமில்லை ஆஸ்பத்திரியில் இருக்கிறார்கள்; வீட்டில் நானும், என் தம்பியும், எனது இரு தங்கைகளும், எங்கள் அப்பாவும் தனியாக இருக்கிறோம்."

எத்தனை பேர் இருந்தென்ன! வீட்டில் தாய் இல்லையென்றால் வீடு வெறிச்சோடிவிடுகிறது. எத்தனைபேர் இருந்தாலும் அத்தனை பேர்களும் தனிமையானதுபோல் உணருகிறார்கள். அதுதான் ஒரு சிறந்த தாய் தனது வீட்டில் ஏற்படுத்தும் தாக்கம்.

சார்லஸ் ஸ்வின்டால் (Charles Swindoll) தனது Family Life என்ற நூலில் கூறியுள்ள ஒரு அருமையான பகுதியை உங்களுக்காக மொழிமாற்றம் செய்து தந்துள்ளேன்; படியுங்களேன்.

திருமறையில் பாண்டித்தியம் பெற்ற நான்கு அறிஞர்கள், ஆங்கிலத் திருமறையில் எந்த மொழிபெயர்ப்பு சிறந்தது என்ற விவாதத்தில் ஈடுபட்டார்கள்.

ஒரு அறிஞர் கூறினார், "King James Version" மொழிபெயர்ப்பின் அழகும், கம்பீரமும் தன்னைக் கவர்கிறது என்று கூறினார்.

மற்றொரு அறிஞர், "American Standard Bible" மொழிபெயர்ப்பின் இலக்கிய நயமும், மூலமொழியோடு இசைந்துள்ள சிறப்பும் என்னைக் கவர்கிறது என்று கூறினார்.

மூன்றாவது அறிஞர், "Moffatt" மொழிபெயர்ப்பின் கவர்ச்சியான சொற்பிரயோகங்களும், படிப்போரின் கருத்தைக்கவரும் வளமான மொழிநடையும் என்னைக் கவர்கிறது என்று கூறினார்.

நான்காவது அறிஞர், **"என்னைப் பொருத்தவரையில், எனக்குப் பிடித்தது என்னுடைய தாயின் மொழிபெயர்ப்புதான்"** என்று கூறினார். மற்ற மூன்று அறிஞர்களும் அவரை வியப்புடன் பார்த்தார்கள்.

அவர் தொடர்ந்து கூறினார், "ஆம் பிரியமானவர்களே! என்னுடைய தாயும் திருமறையை மொழிபெயர்த்திருக்கிறார்கள். அவர் எப்படித் திருமறையை மொழி பெயர்த்தார் தெரியுமா? **திருமறையின் ஒவ்வொரு பக்கத்தையும் வாழ்க்கையாக மொழிபெயர்த்தார்** (She translated each page of the Bible into life). நான் அறிந்த வரையில், என்னை மிகவும் கவர்ந்த மொழிபெயர்ப்பு என்னுடைய தாயின் மொழிபெயர்ப்புதான்" என்றார்.

தாய்மார்களே! நீங்கள் உங்கள் இல்லங்களில் நடமாடும் திருமறையாக விளங்குகிறீர்களா?

திருமறையை உங்களுடைய அன்றாட வாழ்க்கையில் மொழி மாற்றம் செய்துகொண்டிருக்கிறீர்களா? (Are you translating the Bible in your day-today life?).

ஒரு தாய்தான் ஒரு வீட்டை இல்லமாக மாற்றுகிறார் என்பது உண்மைதான், ஆனால் கிறிஸ்துதான் ஒரு பெண்ணை சிறந்த தாயாக மாற்றுகிறார் என்ற உண்மையையும் என்றும் நினைவில் கொண்டிருங்கள் (The mother makes the house into a home, And Christ makes the lady into a great mother).

இல்லத்தை ஆளும் இல்லாள்

(மனைவி)

குணசாலியான ஸ்திரீ தன் புருஷனுக்குக் கிரீடமாயிருக்கிறாள் (நீதிமொழிகள் 12:4).

ஒரு வீட்டை இல்லமாக மாற்றுகிறவளே இல்லாள் (The wife converts the house into a home). **'இல்லாள்'** என்றால் (இல்+ஆள்) **'இல்லத்தை ஆளுகிறவள்'** என்று பொருள். இல்லாள் என்றால் **'இல்லாதவள்'** என்று தவறாகப் பொருள் கொள்ளக்கூடாது என்பதனால், இன்றய நாட்களில் குடும்பத் தலைவியை **'இல்லத்தரசி'** என்ற கூறுகிறவர்களுமுண்டு.

மார்ட்டின் லூத்தர்—தான் சீர்திருத்த சபையினரின் பிதாமகர். அவரைப் போப்பாதிக்கம் துரத்தியதால் உடல் வருத்தமுற்றார், உள்ளம் நைந்தார், ஏழ்மையில் வாடினார். ஆனால் அவர் கூறுவதைக் கேளுங்கள்: **"என்னுடைய ஏழ்மையைப் போக்க என்னுடைய மனைவியை எக்காலத்திலும் இழக்கமாட்டேன்; ஏனென்றால், இந்த உலகம் முழுவதுமுள்ள செல்வமனைத்தும் அவளில்லையென்றால் ஒன்றுமேயில்லை"** (I would not exchange my poverty with my **wife,** for all the riches of the world is nothing without her. — ***Martin Luther,*** the Protestant Reformer).

"ஒவ்வொரு வெற்றி பெற்ற மனிதனுக்குப் பின்னாலும் ஒரு பெண் இருக்கிறாள்" என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழியுண்டு (Behind every successful man, there is a woman). அந்தப்பெண் சிலருக்குத் தாயாக இருக்கலாம் – சிலருக்கு மனைவியாகவும் இருக்கலாம்.

மணமான பெண்ணாக இருந்தால், நீங்களும் உங்கள் கணவனின் முன்னேற்றத்திற்குப் பக்கப்பலமாகவும் – பின் பலமாகவும் இருக்கலாமே!

செருப்புக்கடையில் வேலைசெய்ய ஆரம்பித்து, பின்னாளில் அமெரிக்க ஐக்கிய நாட்டையே தன்னுடைய ஊழியத்தால் அசைத்த **டி. எல். மூடி, "என்னுடைய இந்த வெற்றிக்கெல்லாம் என்னுடைய மனைவிக்கே நான் கடமைப்பட்டிருக்கிறேன்"** என்று கூறியுள்ளது கவனத்திற்குரியது (I owe to my wife all my successes – *Dwight L. Moody).*

இரண்டாம் உலகப்போரின் கதாநாயகனான இங்கிலாந்துப் பிரதமர் **வின்ஸ்டன் சர்ச்சிலிடம்** ஒரு பத்திரிக்கை நிருபர், **"ஐயா, உங்களுடைய வாழ்நாட்களில், உங்களை மகிழ்ச்சியால் நிறைத்த நாளெது?"** என்று கேட்டார்.

எல்லோரும் அவர் இரண்டாம் உலகப்போரில் ஜெர்மானிய இராணுவம் சரணடைந்த நாளையோ அல்லது அவர் இங்கிலாந்தின் பிரதமராகப் பதவி ஏற்ற நாளையோ குறிப்பிடுவார் என்று ஆவலுடன் எதிர்பார்த்தார்கள். ஆனால் சர்ச்சில், **"நானும் என்னுடைய மனைவியும் திருமணத்தினால் இணைந்த நாள்தான் என்னை மகிழ்ச்சியால் நிறைத்த நாள்; என்னுடைய வாழ்க்கையின் வெற்றிக்கெல்லாம் அவளே காரணம்"** என்று கூறி யாவரையும் வியப்பில் ஆழ்த்தினார்.

பிறிதோர்முறை, வின்ஸ்டன் சர்ச்சிலிடம் ஒருவர் கேட்டார்: **"உங்களுடைய சாதனைகளிலெல்லாம் பெரிய சாதனையாக எதைக் கருதுகிறீர்கள்?"**

சர்ச்சில் பதிலளித்தார்: **"என்னுடைய மனைவியை என்னை மணமுடிக்கச் சம்மதிக்கச் செய்ததுதான் எனது மிகச்சிறந்த சாதனை"** என்றார் (My brilliant achievement was my ability to be able to persuade my wife to marry me – Winston Churchill).

சர்ச்சிலின் மனைவி அந்த அளவிற்குத் தனது அன்பினாலும், பாசத்தாலும் தனது கணவனின் உள்ளத்தை ஆக்கிரமித்திருந்தார்.

உங்களுடைய கணவர் உங்களுடன் திருமணத்தில் இணைக்கப் பட்டதற்காக மகிழ்ச்சியில் இருக்கிறாரா?

அவருடைய வாழ்க்கையின் வெற்றிக்கு நீங்கள்தான் பின்பலம் என்று கருதுகிறாரா?

பிடுங்கி நடப்பட்ட செடி – பெண்

மணமாகி புகுந்த வீட்டுக்கு வரும் பெண், ஓரிடத்திலிருந்து பிடுங்கி வேறு இடத்தில் நடப்பட்டச் செடியைப்போல இருக்கிறாள் – புதிய வீடு, புதிய மனிதர்கள், புதிய உறவுகள், புதிய சூழ்நிலைகள். இடமாற்றத்திற்குத் தக்கவாறு தன்னைச் சரிசெய்துகொண்டு பொருந்திக்கொள்ளவில்லையென்றால் செடி கருகிவிடுவதுபோல, பெண்ணும் வாடி வதங்கிப் போய்விடுவாள்.

தனிக்குடித்தனமாக இருந்தால், இந்தப் பாதிப்பு சற்று குறைவு. ஆனாலும் மேற்கத்திய பாணியில் இல்லாமல், பெற்றோர்கள் தெரிவுசெய்யும் முன்பின்–தெரியாத வாழ்க்கைத் துணையுடன் குடும்பம் நடத்துவதால், தன்னுடைய துணையைச் சரியாக சீக்கிரம் புரிந்துகொண்டு அதற்குத்தக்க செயல்படவேண்டிய கட்டாயத்தில் கணவன்–மனைவி இருவருமே இருக்கிறார்கள்.

இருவருமே தங்களுக்குள் ஒருவரையொருவர் சார்ந்திருப்பதால் அவர்களுக்குள் இணக்கமான நெருக்கம் ஏற்பட உறுதுணையாக இருக்கிறது.

ஆயினும் தனிக்குடித்தனமாக இருப்பதில் இடர்பாடுகளும் உண்டு.

1. இருவருக்குள் பிரச்சனைகள் எழும்பொழுது ஆலோசனைக்கு பெரியவர்கள் அருகில் இருக்கமாட்டார்கள். சிலநேரங்களில் பெரியவர்களே பிரச்சனையாக இருப்பார்கள் என்பது வேறு விஷயம்.
2. இருவரிடையே பிணக்குகள் ஏற்பட்டால், அவர்கள் இருவரும் தங்களுக்குள்தான் தீர்த்துக்கொள்ளவேண்டும். எனவே ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துப்போவது கட்டாயமாகி விடுகிறது.
3. பிள்ளைகள் பிறந்தபின்னால் அவர்களை வளர்க்கும் பொறுப்பு அவர்களுக்கு மட்டும்தான். எனவே பொறுப்பு அதிகமாகிறது.
4. பொருளாதாரத் தேவைகளுக்குப் பிறரைச் சார்ந்திருக்க இயலாது. வரவுக்குள் செலவு செய்வதும், வருங்காலத்திற்கு சேமித்து வைப்பதும் கட்டாயமாகிவிடுகிறது.

மனைவிகளுக்குப் பத்துக் கட்டளைகள்
(Ten Commandments for Wives)

ஒரு இல்லத்திலுள்ள இல்லாள், நல்லதொரு மனைவியாகத் திகழ்வது எப்படி என்பதைப் பத்துக் கட்டளைகளாக எடுத்துக் காட்டியுள்ளேன். படியுங்கள்

1. பெண்ணாக இருப்பதைத் தாழ்வாகக் கருதாதீர்கள்

உங்கள் கணவன் உங்களுக்கு அளித்துள்ள வீட்டில் உங்கள் வாழ்நாட்கள் நீடித்திருப்பதற்கு, உங்கள் பெண்மையைப் பெருமையாகக் கருதுங்கள் (Honor thy own womanhood, that thy days may be long in the house which thy husband provideth for thee).

நீங்கள் அவ்வீட்டின் பெண்ணாக / தலைவியாக / தாயாக / மனைவியாக இருப்பதற்காகப் பெருமைப்படுங்கள். 'மனைவி

வீட்டோரங்களில் கனிதரும் திராட்சைக் கொடியைப்போல் இருக்க வேண்டும்' (சங்.128:3) என்று திருமறை இயம்புவதைக் கருத்தில் கொள்ளுங்கள்.

**"மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம்
செய்திட வேண்டுமம்மா"**

– கவிமணி தேசிய வினாயகம்பிள்ளை.

2. எதிர்பார்ப்புகள் அளவோடு இருக்கட்டும்

உங்கள் பிறந்த வீட்டிலுள்ள அத்தனை வசதிகளையும் உங்கள் கணவனிடம் எதிர்பார்க்காதீர்கள். உங்கள் தந்தையினுடைய பல ஆண்டுகள் கடின உழைப்பினாலும் – சேமிப்பினாலுமே அவர் அந்த வசதிகளைப் பெற முடிந்தது (Expect not thy husband to give thee as many luxuries as thy father hath given thee after many years of hard labor and economies). அந்த வசதிகளை உங்களுக்கு உங்கள் கணவர் பெற்றுத்தருவதற்கு அவருக்கு அவகாசம் அளியுங்கள்.

வாழ்க்கையில் உங்கள் கணவர் முன்னேறுவதற்கு நீங்களும் உறுதுணையாகவும் – ஆதரவாகவும் இருங்கள். **"புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள் (நீதிமொழிகள் 14:1).**

3. நகைச்சுவை உணர்வுடன் இருங்கள்

மனைவியரே! நீங்கள் மகிழ்ச்சியாக இருங்கள். குடும்பத்தையும் மகிழ்ச்சியாக வைத்திருங்கள்; புன்னகையுடன் இருங்கள்; நகைச்சுவை உணர்வுடன் இருங்கள். ஆனால், நகைச்சுவை என்ற பெயரில் யாரையும் புண்படுத்தாதீர்கள். புன்னகையின் நன்மைகளை மறந்துவிடாதீர்கள். புன்னகை, மொழிகளைக் கடந்த உறவை உருவாக்கும் சக்தியுள்ளது. ஆகையால் அதை உலகப் பொதுமொழி (Universal language) என்று கூறுவார்கள்.

பெண்களின் புன்னகையில் ஆண்கள் உண்மையாகவே மயங்கிவிடுகிறார்கள் (Forget not the virtue of good humor, for verily all that a man hath will he give for a woman's smile).

"கன்னியரின் கடைக்கண் பார்வையில் ஓர்மலையும் கடுகாமே" என்று ஒரு கவிஞர் பாடினார். நீங்கள் உங்களுடைய கணவனுக்குக் கொடுக்கும் மகிழ்ச்சியும், தன்னம்பிக்கையும்தான் உங்கள் கணவரை இவ்வுலகில் உயர்த்துகிறது – வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சனைகளை தைரியத்துடன் எதிர்கொள்ளச் செய்கிறது.

"மனைவியானவள், தனது கணவனை, வீட்டிற்கு வருவதற்கு ஆவலுள்ளவனாகவும், வீட்டைவிட்டு வெளியில் செல்வதற்கு வருந்துபவனாகவும், மாற்றுபவளாக இருக்க வேண்டும்" என்று மார்ட்டின் லுத்தர் கூறுகிறார் (Let the wife

make her husband glad to come home, and let him make her sorry to see him leave — *Martin Luther).* அதாவது இல்லத்தைக் கணவனுக்கு மகிழ்ச்சியான இடமாக நிர்வகிப்பது மனைவியின் கரத்தில்தான் இருக்கிறது.

4. உங்கள் கணவனும் மனிதன்தான், தேவதூதனல்ல

கணவரிடம் ஓயாது ஏதாவது குற்றங்கண்டுபிடித்துத் தொல்லை கொடுக்காதீர்கள் (Thou shalt not nag). குறைகளேயற்ற ஆண்மகன் இந்த உலகில் யாருமே கிடையாது. உலகில் யார் புகழ்வதும் உங்கள் வீட்டுக்காரருக்கு ஒருபொருட்டல்ல; தன்னுடைய மனைவியின் வாயால், 'தான் கெட்டிகாரர்' என்று புகழப்படுவதைத் தான் எல்லாக் கணவர்களும் பெரிதாகக் கருதுகிறார்கள் என்பதை நினைவில் வைத்துகொள்ளுங்கள்.

எல்லாக் கணவர்களுமே தங்களுடைய மனைவியர்களால் புகழப் படுவதற்காக பெரும்பாலும் ஏங்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால் உங்கள் கணவர் எதையாவது திறம்படச்செய்தால் சங்கோஜமின்றி தராளமாகப் புகழுங்கள். அது அவரில் தன்னம் பிக்கையை வளர்க்கும்.

"அவள் புருஷனுடைய இருதயம் அவளை நம்பும்; அவன் சம்பத்துக் குறையாது" (நீதிமொழிகள் 31:11).

5. கணவர் உங்கள் கவனிப்பிற்காக ஏங்குகிறார்

உங்கள் கணவரைப் பரிவோடு கவனித்துக்கொள்ளுங்கள், தாங்கள் அதிகக் கனிவுடன் கவனிக்கப்படுவதை எல்லா ஆண்களுமே விரும்புகிறார்கள் (Thou shalt coddle thy husband, for verily every man loveth to be fussed over).

"குணசாலியான ஸதிரீயைக் கண்டுபிடிப்பவன் யார்? அவளுடைய விலை முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்தது" (நீதிமொழிகள் 31:10).

கணவன்மார்கள் சுகவீனமடைந்தாலோ அல்லது களைப் புடனிருந்தாலோ உங்களுடைய பரிவான உபசரிப்பிற்காக / கவனிப்பிற்காக ஏங்குகிறார். உங்கள் கணவர்களை வளர்ந்துவிட்ட குழந்தையாக எண்ணிக்கொள்ளுங்கள் (Many husbands are just grown up boys). அப்பொழுதுதான் அவருடைய சிறுசிறு குறைகளைப் பெரிதாகக் கருதமாட்டீர்கள். அவருடைய குறைகளை மன்னித்து – மறந்து அவரிடம் அன்பு செலுத்துங்கள்

6. கணவர் விரும்பும் வண்ணம் இருங்கள்

தெருவில் போகும் அன்னியர்களின் கண்களைக் கவர்ந் திழுக்கும் தோற்றத்துடன் இருப்பதைவிட, உங்கள் கணவர் விரும்பும் வண்ணம் இருப்பதே மதிப்பு மிக்கது என்பதை மறவாதீர்கள்.

(Remember that the frank approval of thy husband is worth more to thee than the sidelong glances of many strangers).

ஊரார் மெச்ச உடையணிவதைவிட, உங்கள் கணவர் விரும்பும் விதத்தில் உடையணியுங்கள். அப்பொழுது உங்களுடைய கணவர், **"அநேகம் பெண்கள் குணசாலிகளாயிருந்ததுண்டு, நீயோ எல்லாருக்கும் மேற்பட்டவள்" (நீதிமொழிகள் 31:29)** என்று உங்களைப் புகழுவார்.

ஆனாலும், ஒரு பெண்ணுக்கு, புறம்பான அலங்காரத்தைவிட, அழியாத அலங்காரமான, **"சாந்தமும், அமைதலுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமுமே (பெண்களுக்கு) அலங்காரமாயிருக்கக்கடவது. அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது" (1 பேதுரு3:3–4)** என்று பேதுரு கூறுகிறார்.

7. கணவருக்கு கவர்ச்சியாக இருங்கள்

சுத்தமாக இருப்பதிலும், நல்ல உடை உடுத்துவதிலுமுள்ள கவர்ச்சியை மறந்துவிடாதீர்கள் (Forget not the grace of cleanliness and good dressing). வீட்டை சுத்தமாக வைத்திருங்கள். குழந்தைகளை சுத்தமாக வைத்திருங்கள்.

குழந்தை பிறந்தவுடன் காதல் வாழ்க்கை முடிந்துவிடுவதில்லை. காலம் முழுவதும் உங்கள் கணவருக்கு நீங்கள்தான் அழகான–விரும்பப்படத்தக்கப் பெண்ணாக இருக்கவேண்டும் என்ற உணர்வுடன் அலங்கரித்துகொள்ளுங்கள். அதற்காக அழகு நிலையங்களுக்குச் செல்லுங்கள் என்று கூறவரவில்லை. ஆனால், உங்கள் கணவனுக்கு நீங்களே **'நேசிக்கப்படத்தக்க பெண் மானாகவும், வரையாடாகவும்'** இருங்கள் – உங்கள் நேசத்தால் உங்கள் கணவர் என்றென்றும் கவரப்பட்டவராக இருப்பாராக (நீதிமொழிகள் 5:19).

8. கணவனைப்பற்றி பிறரிடம் குறை கூறாதீர்கள் – பிறரையும் கூற விடாதீர்கள்

உங்கள் கணவனால் கஷ்டப்படுத்தப்படுகிறீர்கள் என்று யாரும் உங்களிடம் கூறுவதை அனுமதிக்காதீர்கள் ; உங்கள் தாயானாலும், உங்கள் சகோதரியானாலும், உங்கள் அத்தையானாலும், உங்கள் இனத்தார் யாராகயிருந்தாலும், தன்னுடைய கணவனை பிறர் இழிவாகக் கூறுவதை அனுமதிக்கும் மனைவியை குற்றமற்றவள் என்று நியாயந்தீர்க்கமாட்டார்கள் (Permit no one to assure thee that thou art having a hard time of it; neither thy mother, nor thy sister, nor thy maiden aunt, nor any of thy kinfolk, for the judge will not hold her guiltless who letteth another disparage her husband).

கணவனுடைய பாதுகாப்பு வளையமாக நீங்கள் இருங்கள். "புருஷனே மனைவிக்குத் தலையாக இருக்கிறான்" (எபே.5:23) என்பதை மறவாதீர்கள். உங்கள் உறவினர் மத்தியில் உங்கள் கணவருக்கு மதிப்பும் மரியாதையும் இருந்தால்தான் உங்களையும், உங்கள் குடும்பத்தையும் பிறர் மதிப்பார்கள் என்பதை மறவாதீர்கள். "அவள் புருஷன் தேசத்து மூப்பர்களோடே நியாயஸ்தலங்களில் உட்கார்ந்திருக்கையில் பேர் பெற்றவனாயிருக்கிறான்" (நீதிமொழிகள் 31:23).

உங்களுக்குள் கருத்து வேறுபாடோ அல்லது சண்டை சச்சரவோ இருப்பதை அறிந்தால், மற்ற உறவினர்கள் வெளியில் சொல்லிக்கொள்ளாமல் உங்கள் ஒட்டுமொத்த குடும்பத்தையும் தவிர்ப்பார்கள்.

9. குடும்பத்திற்காகக் கடினமாக உழையுங்கள்

உங்கள் இல்லத்தைச் சிறப்பாக வைத்துக்கொள்வதற்குக் கடினமாக உழையுங்கள்; "சோம்பலின் அப்பத்தைப் புசியாமல் ... வீட்டின் காரியங்களில் கண்ணோட்டமுள்ள" (நீதி.31:27) பெண்ணாக இருக்கவேண்டும்.

உங்கள் முதிர்வயது காலத்தின் இன்பமே இதில்தான் இருக்கிறது (Keep thy home with all diligence, for out of it cometh the joys of thine old age).

உங்கள் பிள்ளைகள் பெரியவர்களாகி – குடும்பஸ்தர்களாகி, இவ்வுலகில் தங்களுடைய காரியங்களைத் தாங்களே பார்த்துக் கொண்டு வாழ்வதைப் பார்க்கும்பொழுது உண்டாகும் மகிழ்ச்சியே அலாதிதான்.

இவ்வுலகிலிருந்து விடுபடும்பொழுது அதாவது மரிக்கும் பொழுது, கடமையை முடித்த திருப்தியில் – குற்றவுணர்வின்றி நிம்மதியாக விடைபெறலாம். இந்த வெற்றியில் பெரும்பங்கு கணவனுக்கு உறுதுணையாக நிற்கும் மனைவிக்கு அதாவது குடும்பத் தலைவிக்குத்தான்.

10. உங்கள் கணவருக்காகவும் – குடும்பத்திற்காகவும் தினமும் ஜெபியுங்கள்

கர்த்தருக்குப் பயப்படும் பெண்ணே பக்தியுள்ள மனைவியாக இருக்கிறாள் (A godly wife is a woman who fears God). மனைவியர்கள்தான் குடும்பத்தின் ஜெப வீராங்கனைகளாக இருக்கவேண்டும். அப்படிப்பட்ட பெண்ணைத்தான், "அவள் பிள்ளைகள் எழும்பி அவளைப் பாக்கியவதி என்பார்கள்" (நீதிமொழிகள் 31:28) (Commit thy ways unto the Lord thy God and thy children shall rise up and call thee blessed).

ஒரு காலக்கட்டத்திற்குப்பிறகு தங்களுடைய குழந்தைகளுக்கோ அல்லது கணவருக்கோ தங்களால் ஏதும் செய்யமுடியவில்லையே என்று பல தாய்மார்கள் அல்லது மனைவிமார்கள் சலிப்படைவதுண்டு. ஆனால் அவர்களுக்காக எப்பொழுதும் ஜெபிக்கலாமல்லவா?

தனக்காகத் தன் தாயார் அல்லது மனைவி ஜெபித்துக் கொண்டிருக்கிறார் என்ற நம்பிக்கையுள்ள பிள்ளைகள் அல்லது கணவன்மார்கள், வெளியுலக வாழ்கையின் சவால்களைத் துணிவுடனும், நம்பிக்கையுடனும் எதிர்கொள்வார்கள்.

பிஷப் டெய்லர், **"ஒரு நல்ல மனைவி சுவர்க்கத்திலிருந்து அருளப்படும் மிகச்சிறந்த வெகுமதி. அவளுடைய இறை வேண்டல்கள் சுவர்க்கத்தின் ஆசீர்வாதங்களை அவன் சிரசின் மேல் அமரச் செய்வதற்காக இறையுடன் பரிந்து வாதிடும்"** என்று கூறுகிறார் (A good wife is heaven's last best gift to a man.Her prayers are the ablest advocates of heaven's blessing on his head —***Bishop Taylor***).

உங்களுடைய ஜெபமே, உங்களுடைய பிள்ளைகளும், கணவரும் நெஞ்சார நேசிக்கும் பிரதானமான வெகுமதி என்பதை மறவாதீர்கள் (Your prayers are among the most cherished gifts of all). **"கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள்" (நீதிமொழிகள் 31:30).**

ஜெபிக்கும் தாய் அல்லது மனைவி கர்த்தர் குடும்பத்திற்கு அருளும் அரும்பெரும் ஈவு (A praying Mother and a Wife is priceless gift to the family).

நிறைவுரை

நான் வாழ்க்கையிலும், புத்தகங்களிலும் கற்ற சிலவற்றைப் பத்துக்கட்டளைகளாக எழுதியுள்ளேன். சிலர் இன்னும் சில கட்டளைகளையும் அறிந்திருக்கக்கூடும். உங்களை அறியாமலே, உங்களில் சிலர் இவைகளைக் கடைப்பிடித்துக் கொண்டிருக்கக்கூடும். அவ்வாறு கடைப்பிடித்துக் கொண்டிருந்தீர்களானால் மகிழ்ச்சியே.

தமிழ்க் கிழவி **ஔவையார்** எழுதியுள்ள ஒரு பாடலைப் பாருங்கள்

> **"இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றில்லை**
> **இல்லாளும் இல்லாளே ஆமாயின் – இல்லாள்**
> **வலிகிடந்த மாற்றம் உரைக்குமேல் அவ்வில்**
> **புலிகிடந்த தூறாய் விடும்." – (மூதுரை).**

(பொருள்:– நல்ல குணமும், செயலுமுடைய மனைவி இல்லத்திலிருந்தால் அந்த வீட்டில் இல்லாதது யாதுமில்லை. ஆனால், வார்த்தைக்கு வார்த்தை எதிர்வார்த்தை பேசும் குணமற்ற மனைவி இல்லிலிருந்தால், அவ்வீடு புலி உறையும் குகைக்கு ஒப்பாயிருக்கும்.)

கணவனின் வார்த்தைக்கு–வார்த்தை எதிராடும் மனைவிகளும், எப்பொழுதும் எதற்கும் குறைகண்டு கணவனை வசைபாடிக் கொண்டிருக்கும் மனைவிகளும் தங்களுடைய கணவர்களை வீட்டை நினைத்தாலே வெறுப்டையும்படி செய்துவிடுகிறார்கள். இப்படிப்பட்ட மனைவியை உடைய கணவன், ஏதாவது காரணத்தைக் கூறி பெரும்பாலான பொழுதை வீட்டிற்கு வெளியே கழிக்கவே விரும்புகிறான்.

அறிவர். ஜி. கேம்பல் மோர்கன் (Dr. G. Campbell Morgan) மிகவும் பிரசித்திப் பெற்ற இறைச்செய்தியாளர் (preacher).

அவருக்கு நான்கு மகன்கள். நான்குபேருமே தலைசிறந்த பேச்சாளர்கள் (செய்தியாளர்கள் – Preachers).

அவர்களுடைய வீட்டிற்கு வந்திருந்த விருந்தாளியொருவர் மூத்த மகனான ஹாவொர்டிடம் (Howard), **"உங்கள் வீட்டில், மிகவும் சிறப்பாக இறைச் செய்தியளிப்பவராக யாரைக் கருதுகிறீர்கள்?"** என்று கேட்டார்.

ஹாவொர்டு சிறிதும் யோசிக்காமல், **"என்னுடைய தாய்"** என்று பதிலளித்தார். ஹாவொர்டுக்குத் தன்னுடைய தந்தையின் இறைச் செய்திகள் மிகவும் பிடிக்கும்; வியந்து பாராட்டுவார்; இருந்தாலும், தன் தாயாரின் வாழ்க்கை, 'வார்த்தைகளற்ற அமைதியான பிரசங்கமாகத்' தன்னை எப்படிக் கவர்ந்துள்ளது என்பதை எடுத்துக்கூறுவதுபோல அவருடைய பதில் அமைந் துள்ளது.

கேம்பல் மோர்கன் மனைவியின் வாழ்க்கை வல்லமையான இறைச்செய்தியாக இருந்தது.

ஒரு குடும்பத்தின் இல்லாள், தன் கணவனின் பெருமைக்கும், பெற்ற குழந்தைகளின் முன்னேற்றத்திற்கும் முதுகெலும்பாக இருந்து செயலாற்றினால்தான், அந்தக் குடும்பம் இவ்வுலகில் ஆன்றோர்களும், சான்றோர்களும் மெச்சும் இறைவன் நிறுவிய இனிய இல்லறமாகப் பரிமளிக்கும்.

ஆகையால்தான், **"மனைக்கு ஆக்கம் மாண்புடைய மனைவி"** என்று **'நான்மணிக்கடிகை'** நவில்கிறது.

"நல்ல ஞாலமும் வானமும் பெறினும், எல்லாமில்லை இல்லில்லோர்க்கே" என்று 'நறுந்தொகைப்' பாடல் கூறுகிறது. அதனுடைய பொருள்: "இல்லத்தில் இல்லாள் இல்லாதவர் களுக்கு, மண்ணும் விண்ணும் கிடைக்கப் பெற்றாலும், அவைகள் அவர்களுக்கு ஒன்றுமேயில்லை" என்பதாகும்.

திருவள்ளுவரும் மனைவியை குறித்து இவ்வாறே கூறுகிறார்.

**“மனைமாட்சி இல்லாள்கண் இல் ஆயின் வாழ்க்கை
என்னமாட்சித்து ஆயினும் இல்”**

– (திருக்குறள் அதிகாரம் 6: வாழ்க்கைத் துணைநலம்)

(பொருள்: மனைவியிடம், குடும்பத்திற்கேற்ற குணநலன்கள் இல்லையானால், வாழ்வில் வேறு எத்தனை சிறப்புக்களைப் பெற்றிருந்தாலும் அதிற்பயனில்லை)

ஆகையால் ஒரு குடும்பத்தின் உயர்வு–தாழ்விற்கும், கணவனின் ஏற்ற–இறக்கத்திற்கும் அவ்வீட்டின் இல்லாளாக இருக்கும் பெண்ணிற்குப் பெரும்பங்குண்டு.

ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே” என்பது தமிழில் வழங்கிவரும் வழக்குச்சொல். அதாவது ஒரு குடும்பத்தின் ஏற்றமும் – இறக்கமும் ஒரு பெண்ணாலே ஏற்படுகிறது என்பதே அதின் பொருள்.

இதைத்தான் சாலமோன் ஞானியும், **“புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக்கட்டுகிறாள், புத்தியில்லாத ஸ்திரீயோ தன் கைகளினால் அதை இடித்துப்போடுகிறாள்”** (நீதி.14:1) என்று கூறுகிறார். ஒரு கணவன் வெளியுலகில் எவ்வளவுதான் சிறந்தவனாக – வெற்றி பெற்றவனாக இருந்தாலும், ஒரு குடும்பத்தின் உயர்வையும் தாழ்வையும் நிர்ணயிப்பவள் இல்லாளே.

திருமறை உங்களைக் கணவனுக்குக் கீழ்ப்படியச் சொல்வதால், அவர் செய்யும் தவறுகளையெல்லாம் கண்டுகொள்ளாமல், அஞ்சியிருக்கவோ அல்லது அமைதிகாக்கவோ தேவையில்லை (Being submissive does not mean being silent). கணவனிடத்தில் தவறுகள் இருந்தால் அன்புடன் சுட்டிக்காட்டுங்கள் (*Confront your husband in love).* **உங்கள் உறவில் விரிசல் விழுந்துவிடாதபடி ஞானமாகச் செய்யுங்கள்.**

ஒரு மனிதர் ஒரு படிவத்தை (Form) நிரப்பிக்கொண்டிருந்தார். அதில் ‘மனைவியின் தொழில்’ என்ற குறிப்பிற்கு நேராக **‘குடும்பத் தலைவி’** (Housewife) என்பதற்குப் பதிலாக **‘குடும்பத் தேவதை’** (Domestic Goddess) என்று எழுதினாராம்.

இல்லத்தரசிகளே! நீங்கள் உங்களுடைய கணவனின் பார்வையில் தேவதையாக இருக்கிறீர்களா?

10

கணவன் வீட்டில் வாழப்போகும் பெண்ணே!

"உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன்" (ரூத்.1:16).

ஆண்களைப் போலன்றி, பெண்கள் தங்களுடைய வாழ்க்கையில் இரண்டு வீடுகளைத் சந்திக்கிறார்கள். மணமாகும்வரைக்கும் தாய்–தந்தையருடன் வாழும் வீட்டைப் 'பிறந்த–வீடு' என்றும், மணமான பின்னர் கணவனுடைய குடும்பத்தாருடன் வாழும் வீட்டைப் 'புகுந்த–வீடு' என்றும் அழைப்பார்கள். பெற்ற தாயையும், வளர்த்த தகப்பனையும், உடன் பிறந்த சகோதர சகோதரர்களை விட்டுவிட்டுக் கணவன் வீட்டிலுள்ள புதிய உறவுகளுடன் தன்னைச் சங்கமித்துக்கொள்வது பெண்களுக்குக் கடினந்தான்.

மணமான பின்னர் தன் கணவனுடன் வாழப்போகும் பெண்ணுக்கு இன்றைய தாய்மார்கள், புகுந்தவீட்டில் வாழும் கலையைச் சரிவரக்கற்றுக்கொடுப்பதில்லை. சிலவேளைகளில் தவறான உபதேசங்களுடன் தங்கள் பெண்ணைப் புகுந்த வீட்டிற்கு அனுப்பிவைக்கிறார்கள்.

பெரும்பாலான தாய்மார்கள், (சிலவேளைகளில் ஒருசில தகப்பன்மார்களும்) தங்களுடைய பெண்பிள்ளைளைகள் புகுந்த வீட்டில் கணவனையும் அவனுடைய உறவுகளையும் அனுசரித்துப் பாசத்துடன் வாழவேண்டும் என்று கற்றுக்கொடுக்கத் தவறிவிடு கிறார்கள். தன்னுடைய மகள் கணவனை மாத்திரம் எப்படியாவது கைக்குள் போட்டுக்கொள்ளவேண்டும் என்றுதான் கற்றுக் கொடுக்கிறார்கள் (நான் ஒட்டுமொத்தமாக எல்லோரையும் குற்றம் சாட்டவில்லை; பெரும்பாலும் என்றுதான் கூறுகிறேன்).

புதிய வீடு – புதிய இடம் – புதிய சூழல் – புதிய பழக்க வழக்கங்கள் எல்லாவற்றையும் சமாளித்து, புகுந்த வீட்டின்

அன்பையும் பாசத்தையும் பெறுவது மணமான பெண்களுக்கு விடப்படும் பெரிய சவால்தான்.

'தனது வீடு எது?'

இன்றைய சமுதாய அமைப்பில், கூட்டுக்குடும்பங்கள் குறைந்து வருகின்றன. கணவனின் வேலையினிமித்தம், வெளியூர்களில் தனிக்குடித்தனம் நடத்தும் கணவன்–மனைவிகளே இன்று அதிகமாக இருக்கிறார்கள். ஆகையால் மணமான பல பெண்களுக்குத் 'தனது வீடு எது?' என்பதைப் புரிந்துகொள்வது குழப்பமாக இருக்கிறது.

மணமான பெண்களே! நீங்கள் உங்களுடைய கணவரின் பெற்றோர்கள் வாழும் வீட்டிலிருந்து எவ்வளவு தூரத்தில் வசித்தாலும் – எந்த நாட்டில் வசித்தாலும், அந்த வீடுதான் உங்கள் புகுந்த வீடு என்பது நினைவிலிருக்கட்டும்.

மணமான பின்னர் ஒரு பெண்ணுக்குத் 'தனது வீடு' என்றால், அது கணவனுடைய வீடுதான். அவள் ஈன்றெடுக்கும் பிள்ளைகளும் கணவன் வீட்டு வாரிசுகள்தான். இதில் எந்தத் தடுமாற்றம் வந்தாலும் அது மணவாழ்க்கையைப் பாதிக்கும்.

மணமான பெண்ணுக்குத் திருமறை கூறும் அறிவுரை என்னவென்று காண்போம்:

1. வீட்டைக் கட்டுங்கள்

திருமறை, **"புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள்"** **(நீதி.14:1)** என்று கூறுகிறது. ஆனால் இந்த வசனத்தில் **"தன் வீடு"** என்று சாலமோன் ஞானி எந்த வீட்டைக் கூறுகிறார்?

பிறந்த வீட்டையா? இல்லவேயில்லை;

இங்கே, புகுந்த வீட்டைத்தான் சாலமோன் ஞானி குறிப்பிடுகிறார்.

ஆகையால்தான், ரூத் தனது கணவனின் தாயாகிய நகோமியிடம், அதாவது தன்னுடைய மாமியாரிடம், **"உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன்" (ரூத்.1:16)** என்று கூறினார். புகுந்தவீட்டில் மருமகள், அந்த "வீட்டைக் கட்டவேண்டும்" என்று சாலமோன் ஞானி எழுதியுள்ளார்.

"கட்டுவது" என்றால் என்ன?

அந்த வீட்டிலுள்ள உறவுகளைத் தனது பாசத்தாலும் – நேசத்தாலும் ஒன்றிணைத்து ஒற்றுமையாக வாழ்வதற்கும், அக்குடும்பம், முன்னேற்றமான பாதையில் செல்வதற்கும் உறுதுணையாக இருக்கவேண்டும் என்பதுதான் அதன்பொருள். ஆனால், இன்றைய சில அம்மாக்கள், கட்டுவதற்கு அறிவுரை நல்குவதில்லை; வெட்டுவதற்குத்தான் கற்பித்து அனுப்புகிறார்கள்.

அதே அம்மாக்கள், தங்களுக்கு வரும் மருமகள் தங்களுடன் அனுசரித்து – ஒத்து – கீழ்படிந்து நடக்கவேண்டும் என்று விரும்புகிறார்கள்.

ஒருசிலர், தன்னுடைய மகளின் கணவன் (மருமகன்), அவனுடைய உறவுகளிடம் ஒட்டுதலுடனோ, அனுதாபத்துடனோ அல்லது அன்புடனோ இருப்பதை சகித்துக்கொள்வதில்லை. ஆனால் அதேவேளையில் தங்களிடம் ஒட்டுதலுடனும் உறவுடனும், பாசத்துடனும் இருக்கவேண்டும் என்று விரும்புகிறார்கள். இது எந்தவகை நியாயத்தில் சேரும்?

ஈசாக்கை மணமுடிக்க, எலியேசருடன் புறப்பட்ட ரெபேக்காளை, அவருடைய உற்றார் உறவினர்கள் எப்படி வாழ்த்தி வழியனுப்பி வைத்தார்கள் பாருங்கள். "எங்கள் சகோதரியே, நீ கோடா கோடியாய்ப் பெருகுவாயாக ... என்று ஆசீர்வதித்தார்கள்" (ஆதி.24:60).

தன்னுடைய பெண் செல்லும் இடத்தில் சீரும் சிறப்புமாய் இருக்கவேண்டும் என்று எந்தப் பெற்றோரும் எதிர்பார்ப்பது நியாயம்தான். ஆனால், புகுந்த இடத்தில் குழப்பமுண்டாக்க மகளை ஊக்குவிக்கும் பெற்றோர்கள், திருமறை கற்பிக்கும் குடும்ப–நீதிக்கு முரணாகச் செயல்படுகிறவர்கள். அவர்கள் தங்கள் பெண்ணின் வாழ்க்கையைத் தாங்களே கெடுக்கிறோம் என்பதை அறியாமலிருக்கிறார்கள்.

இல்லறத்தை நிறுவிய இறைவன், "புருஷன் தன் தகப்பனையும் தாயையும்விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்" (ஆதி.2:24) என்று கூறினார். இந்த வசனத்தில், 'விட்டு' என்ற சொல், தகப்பனையும் தாயையும் 'கைவிட்டுவிட்டு' அல்லது 'புறக்கணித்துவிட்டு' என்று பொருள்படப் பிரயோகிக்கப்படவில்லை. இவ்வசனம், கணவனுக்கும் மனைவிக்கும் இருக்கவேண்டிய அன்னியோன்னிய உறவையே குறிக்கிறது.

சாதாரணமாக உலக வழக்கில், மணமான இருவரை, "ஈருடல், ஒருயிர்" என்றுதான் வாழ்த்துவார்கள். ஆனால் கிறிஸ்தவத் திருமறை, கணவனும்–மனைவியும், "ஈருயிர், ஒருடல்" என்று கூறுகிறது.

அந்த வசனத்தின் அடுத்த பகுதியில், "அவர்கள் (கணவனும்–மனைவியும்) ஒரே மாம்சமாயிருப்பார்கள்" என்று கூறுகிறார். கணவனுடன் ஒரே மாம்சமாக இசைந்த பின்னர், கணவனுடைய குடும்பத்தைத் தனது குடும்பமாகப் பாவிப்பதுதானே முறையான செயலாக இருக்கமுடியும்.

ஒரு ஆண்மகன், கௌரவமான அந்தஸ்தில் இருப்பதாலும், பொருளாதாரச் சூழல் இருப்பதாலும்தான், ஒரு பெண் அவனைத்

தன் கணவனாக வரிக்கிறாள் அல்லது ஏற்றுக்கொள்கிறாள். அந்த அந்தஸ்தையும், அந்தப் பொருளாதாரச் சூழலையும் அவனுக்கு உருவாக்கித் தருவதற்கு அவனுடய பெற்றோர்களும் அல்லது உடன் பிறப்புக்களும் எத்தனை பாடுகள் – தியாகங்கள் புரிந்திருப்பார்கள் என்பதைப் பல பெண்களும் – அவர்களுடைய பெற்றோர்களும் உணரத் தவறிவிடுகிறார்கள்.

புகுந்தவீடு நன்றாக இருந்தால்தான், மணமான பெண்களுக்குப் பிறந்த வீட்டில் மரியாதை இருக்கும் என்பதை மறவாதீர்கள். ஆரம்பத்தில் இந்த வித்தியாசத்தைப் பல பெண்களால் உணரமுடியாது; அதை உணர்ந்தால்தான் நீங்கள் முதிர்ச்சியான பெண் என்று பொருள்.

2. கையைக் கட்டுங்கள்

திருமறை கூறுகிறது: **"அவள் (மனைவி) சோம்பலின் அப்பத்தைப் புசியாமல்; தன் வீட்டுக்காரியம் எப்படி நடக்கிறது என்று கண்ணோக்கமாயிருக்கிறாள்" (நீதி.31:27).**

குடும்பத்தை திறம்பட நடத்துவதில் பெண்களுடைய பங்கு மிக அதிகம். பட்ஜெட்டுக்குள் குடும்பம் நடத்துவது ஒரு தனிக்கலை. அதை ஒரு பெண் கண்டிப்பாகக் கற்றாக வேண்டும். 'ஊதாரியாகவோ' அல்லது 'ஒட்டைக் கையாகவோ' மனைவி இருந்தால், அந்தக் குடும்பம் சிக்கலைச் சந்திப்பதைத் தவிர்க்க இயலாது.

ஆகையால்தான் திருவள்ளுவர் கூறுகிறார்:

"மனைத்தக்க மாண்புடையாள் ஆகித்தற் கொண்டாள்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"

– (திருக்குறள் அதிகாரம் 6: வாழக்கைத் துணைநலம்).

(பொருள்: குடும்பத்திற்குப் பெருமை சேர்க்கிறவளாய், கணவனின் செல்வ நிலையறிந்து – வருவாய்க்கேற்ப குடும்பம் நடத்துபவளே நல்ல வாழக்கைத் துணை (மனைவி) ஆவாள்).

மனைவியின் ஊதாரித்தனத்திற்கு ஈடுகட்ட, உடலையும் உள்ளத்தையும் அதிகம் வருத்திக் கணவன் பணம் சம்பாதித்தாக வேண்டும்; அதனால் கணவனுடைய உடலும், உள்ளமும் கெடும்; கடன் வாங்கினால் கணவனின் கௌரவத்துடன் உங்களுடைய கௌரவமும் – ஏன், ஒட்டுமொத்தக் குடும்பத்தின் கௌரவமும் காற்றில் பறக்கும்.

வேறு சிலர், தங்களுடைய ம்னைவிகளின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்காக தவறான வழிகளில் ஈடுபட்டு, மீள இயலாத சிக்கலில் மாட்டிக்கொண்டு உத்தியோகத்தை இழப்பவர்களும், கல்லறைகளில் சீக்கிரமே தஞ்சமடைந்தவர்களும் மிக அதிகம்.

சேமிப்பற்றவர்களுடைய எதிர்காலம் அச்சமுள்ளதாகவே இருக்கும். ஊதாரித்தனமாக செலவு செய்யாதிருப்பது சிறந்த சேமிப்பு என்பதை மறவாதீர்கள்.

உடன்பிறப்புகளுக்கும், உற்றார் உறவினர்களுக்கும் உதவுவதில் தவறில்லை. ஆனால் அவர்கள் ஊதாரித்தனமாகச் செலவு செய்துவிட்டு உங்களிடம் கைநீட்டினால், தயவுதாட்சண்யமின்றி மறுப்பதுதான் நீங்கள் அவர்களுக்குச் செய்யும் உதவி. உங்களிடம் பணம்பெறலாம் என்ற எதிர்பார்ப்பில் அவர்கள் அளவிற்கு மீறி செலவுசெய்ய அவர்களை நீங்கள் ஊக்குவிக்காதீர்கள்.

நியாயமான காரணமென்றால் கண்டிப்பாக உதவுங்கள். இதில் ஞானமாக இருங்கள்.

3. தோழியாக இருங்கள்

“சண்டைக்காரியும், கோபக்காரியுமான ஸ்திரீயுடன் (மனைவியுடன்) குடியிருப்பதைப் பார்க்கிலும் வனாந்தரத்தில் குடியிருப்பது நலம்” (நீதி.21:19).

உங்கள் கணவனிடம் நீங்கள் நட்புடன் இல்லாதிருந்தால், அவரை மனத்தளவில் வனாந்தரத்தில் குடியிருக்கத்தூண்டு கிறீர்கள் என்றே பொருள்.

வேறு எந்த உறவுகளிடமும் பகிர்ந்துகொள்ளத் தயங்கும் விஷயங்களை ஆண்கள் தங்கள் நண்பர்களிடமும், பெண்கள் தங்கள் தோழிகளிடமும்தான் பகிர்ந்துகொள்வார்கள். மனைவி என்ற தகுதியுடன் ஒரு ஆணின் வாழ்க்கையில் பங்குபெற்ற நீங்கள், ஏன் ஒரு உற்ற தோழியாகவும் அவருக்கு இருக்கக்கூடாது?

மனைவியைத் தோழியாகப் பெற்ற கணவன் பாக்கியவான். அந்த பாக்கியத்தை உங்கள் கணவனுக்கு, நீங்கள் ஏன் கொடுக்கக் கூடாது?

4. உதவியாக இருங்கள்

“விவாகம் பண்ணினவள் தன் புருஷனுக்கு எப்படிப் பிரியமாயிருக்கலாமென்று உலகத்திற்குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறாள்” (1 கொரி.7:34).

உங்களுடைய கணவனின் பணியைப்பற்றிச் சற்றேனும் தெரிந்துகொள்ள முயலுங்கள்; முடிந்தால் உதவுங்கள். அவருடைய லட்சியம் என்ன என்பதை அறிந்துகொள்ளுங்கள். அந்த லட்சியத்தை அவர் அடைய உங்களால் உதவமுடியாவிட்டாலும் உற்சாகப் படுத்தலாமே!

“காதலொருவனைக் கைப்பிடித்தே, அவன்
காரியம் யாவினும் கைகொடுத்து

மாதரறங்கள் பழைமையைக் காட்டிலும்
மாட்சிபெறச் செய்து வாழ்வமடி" என்று கூறுகிறார்
மகாகவி பாரதியார் (பெண்கள் விடுதலைக் கும்மி).

கணவனுடைய குறைவினை நிவிர்த்தி செய்து, சமூகத்தில் அவரை நிறைவான மனிதனாக மாற்றுவதுதான் ஒரு மனைவி தனது கணவனுக்குச் செய்யக்கூடிய சிறந்த உதவி.

5. கணவனின் நலமே உங்கள் நலம்

"கர்த்தருக்குள் ஸ்திரீயில்லாமல் புருஷனுமில்லை, புருஷனுமில்லாமல் ஸ்திரீயுமில்லை" (1 கொரி.11:11). கண்டிப்பாக சுயநலத்தை நீங்கள் களைந்தாகவேண்டும். சுயநலமுள்ள மனைவியால் கணவனின் முன்னேற்றத்திற்கு உதவ முடியாது.

கணவனுடன் ஒன்றிய உறவு அனுதினமும் இறுக்கம் பெற – வளர முயலுங்கள். அந்த ஒன்றுதல் அவருக்குப் பிடித்தமான பல விஷயங்களில் இருக்கலாம். உலகப்பிரகாரமாகவும் – அறிவுப்பூர்வமாகவும் – ஆவிக்குரிய காரியங்களிலும் இருக்கலாம்,

ஒருவேளை உங்கள் கணவன், பாலுறவுதான் ஆண்மையின் அடையாளம் என்று கருதினால், அதை நீங்கள் வெறுக்க வேண்டாமே. அவருக்கு–அதுதான்–முக்கியம் என்று முத்திரைகுத்தி குற்றவாளியாக்கி, அவரை அந்தரங்க வாழ்க்கையில் கூனிக்குறுகச் செய்யவேண்டாமே.

அவர் வெளியே வேலி தாண்டிச்செல்ல முயலாதவரையில் அவருடைய எதிர்பார்ப்பில் களங்கமில்லை என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

குடும்பத்தில் தன்னுடைய அந்தரங்க வாழ்க்கையில் பிரச்சனையின்றி இருக்கும் ஆண்மகனால்தான் வெளியுலகில் ஏற்படும் பிரச்சனைகளைத் தெளிவாகவும் – தீர்க்கமாகவும் எதிர்கொள்ள முடியும் – மனைவியின்மேலும் உண்மையான பாசத்தைச் செலுத்த முடியும் – குடும்பத்தை மனசார நேசிக்கமுடியும். இல்லையென்றால் சமூக நீதி–நியமங்களுக்குக் கட்டுப்பட்டு, மனைவியையும் குடும்பத்தையும் பராமரிப்பது தனது கடமை என்ற அளவில் மாத்திரம் காரியமாற்றும் ஆண்மகனையே பார்க்க முடியும்.

ஞானமாக நடந்துகொள்வதே பெண்மைக்கழகு. கணவனின் முன்னேற்றம்தான் உங்களுடைய முன்னேற்றம் என்பதை மறவாதீர்கள்.

6. கணவனுக்கு மரியாதை கொடுங்கள்

"நல்லொழுக்கமுள்ள ஸ்திரீ (மனைவி) மானத்தைக் காப்பாள்" (நீதி.11:16); தனது மானத்தை மட்டுமல்ல, தனது கணவனுடைய மானத்தையும் காப்பாள்.

உங்கள் கணவனை நம்புங்கள். உங்கள் கணவனைப் பற்றி மற்றவர்களைவிட நீங்கள் அதிகம் அறிந்திருக்கவேண்டும். உங்களுடைய கணவனின் தவறுகள்–பலவீனங்களை அறிந்திருந் தாலும், உங்களுக்கு இறைவன் கொடுத்துள்ள கணவனுடைய திறமைகளை நம்புங்கள், குடும்பத்தில் அவருடைய தலைமையை ஏற்றுக்கொள்ளுங்கள்.

இந்த நாட்களில் கணவனைப் பலர் முன்னிலையில் பெயரிட்டு அழைக்கும் மனைவிகள் பெருகியிருக்கிறார்கள். கணவனை, மனைவி பெயரிட்டழைப்பது சரியா?

மனதில் மரியாதையுள்ள எவரையும் நமது தமிழ் கலாச்சாரப்படி பெயரிட்டழைப்பதில்லை; மனைவி பெயரிட்டு அழைக்கிறாள் என்றால், அவள் கணவனிடம் மரியாதை காட்ட மனதில் தயங்குகிறாள் என்றுதான் பொருள்.

"அப்படியெல்லாம் இல்லை, என்னுடைய கணவனைப் பெயரிட்டு அழைத்தாலும் நான் அவரை மதிக்கிறேன்" என்று வாதத்திற்கு வேண்டுமானால் கூறலாம். தன் கணவனை மதிக்கும் பெண் தன் கணவனை பெயரிட்டு அழைக்கமாட்டாள். தன் தகப்பனை எந்தப் பெண்ணாவது பெயரிட்டு அழைப்பாளா?

முத்தான தமிழ் மொழியில், "அத்தான்" என்று அழைப்பதிலுள்ள ஆனந்தத்தை ஒரு பெண் கணவனுக்குக் கொடுப்பதில் என்ன தயக்கம்?

மணமான புதிதில், மனைவி–மயக்கத்தில் "நீ என்னை எப்படி வேண்டுமென்னாலும் அழைக்கலாம்" என்று அனுமதி வழங்கிவிட்டு வாழ்நாளெல்லாம் மனதில் புழுங்கித் தவிக்கும் கணவர்கள் பலர். தன் மனைவி தன்னைப் பெயரிட்டு அழைப்பது பிடிக்காமல் – சொல்லவும் முடியாமல் முழுங்கவும் முடியாமல் – ஏற்படும் அந்த மனக்காயம் வேறு வடிவில் வெடித்து மனைவிமீது வெறுப்பை உருவாக்கிவிடும்.

உண்மையிலேயே கணவன்மீது மரியாதையுள்ள மனைவி யாக இருந்தால் பெயரிட்டழைக்கமாட்டாள். பெயரைச் சொல்லாத கட்டுப்பெட்டியாக இருக்கச் சொல்லவில்லை; பெயரிட்டுக் கணவனை விளிக்காதீர்கள் என்றுதான் கூறுகிறேன்.

இந்தப் பிரச்சனை அற்பமான பிரச்சனையாகத் தோன்றுகிறதா? இல்லை – இல்லவேயில்லை – இது அற்பமான பிரச்சனையல்ல. ஒரு மனைவி கணவனைப் பெயரிட்டு அழைக்கும் ஒவ்வொரு முறையும் அவனுடைய மனதில் நெருடலை ஏற்படுத்தி சலனமில்லாமல் இருவருடைய மனதையும் பிரிக்கும் ஆபத்தான விஷ(ய)ம். ஜாக்கிரதை!

பலர் முன்னிலையில் கணவனைப் பெயரிட்டு அழைக்கும் ஒவ்வொரு முறையும் சமுதாயத்தில் அவனுக்குள்ள மரியாதையை மனைவி குறைத்துக்கொண்டிருக்கிறாள் – குலைத்துக் கொண்டிருக்கிறாள்.

சமுதாயத்தில் ஒரு மனைவியின் மரியாதை கணவனைச் சார்ந்தேயிருக்கிறது என்பது மறுக்க இயலாத உண்மைதானே. மரியாதையளிக்காத கணவன்மீது மற்றவர்களும், சொந்த– பந்தங்களும் மரியாதை செலுத்தவேண்டுமென்று ஒரு மனைவி எப்படி எதிர்பார்க்கலாம்?

கணவனுக்கு மரியாதை இல்லாவிட்டால், முதலாவது பாதிக்கப் படுவது அவனுடைய மனைவிதான் என்பதை எப்பொழுதும் நினைவில்கொள்ளுவது நல்லது.

மனைவிகளே! உங்கள் மனதிலுள்ள அகம்பாவத்தை அகற்றுங்கள்; **'தன்முனைப்பு'** (Ego) எண்ணத்தை விரட்டியடியுங்கள்.

மனைவி கணவனுக்கு மரியாதை கொடுப்பதால் அவள் இழக்கப்போவது என்ன? ஒன்றுமில்லையே! கணவனிடம் மனைவி தாழ்ந்துபோவதில் *(அதாவது மரியாதையளிப்பதில்)* தப்பில்லை. அதனால் மனைவிக்குத் தான் கௌரவம். நீங்கள் அவரிடம் தஞ்சமடைந்தால்தான் அவர் உங்களிடம் தஞ்சமடைவார் என்ற இரகசியத்தைக் கற்றுக் கொள்ளுங்கள்.

பொது இடங்களிலோ அல்லது உறவினர்கள் / நண்பர்கள் மத்தியிலோ உங்கள் கணவன் கோபப்பட்டாலோ அல்லது குரலை உயர்த்திப் பேசினாலோ, நீங்கள் சற்று அமைதியாக இருங்கள். அவருடைய செய்கை தவறாகக்கூட இருக்கலாம்; ஆனாலும் அமைதியாக இருங்கள்.

அவருக்குச் சரிக்குச்சரி நின்றால் உங்கள் கணவனின் மானமும் மரியாதையும் வீழ்வது ஒருபுறமிருக்கட்டும்; அதோடு சேர்த்து உங்களுடைய மானமும் மரியாதையும் அதலபாதாளத்தில் வீழ்கிறது என்பதை மறக்காதீர்கள். இப்படிப்பட்ட நேரங்களில் சரிக்குச்சரி மல்லுக்கு நிற்கும் பெண்ணை உறவினர்களும் விரும்பமாட்டார்கள், மற்றவர்களும் மதிக்கமாட்டார்கள். உங்களுடைய மரியாதையும்– மானமும் கணவனுடைய மானம் – மரியாதையுடன் தொடர்பு கொண்டது என்பதை மறவாதீர்கள்.

நீங்கள், உங்களுடைய கணவனைவிட புத்திசாலி என்று எண்ணுகிறீர்களா? நீங்கள், ஒருவேளை உண்மையிலேயே புத்திசாலியாவே இருக்கலாம். ஆனாலும் அந்த எண்ணம் உங்களுடைய மனதோடேயே இருக்கட்டும். உங்களுடைய புத்திசாலித்தனத்தால் உங்களுடைய கணவனிடம் தாழ்வு மனப்பான்மை ஏற்பட அனுமதித்துவிடாதீர்கள். பல ஆண்கள், தான்

ஒரு புத்திசாலியாகத் தனது மனைவியால் ஏற்றுக்கொள்ளப் படுவதையே விரும்புகிறார்கள் என்பதுதான் நிஜம். ஆகையால் உங்களைவிட உங்கள் கணவன், தான் புத்திசாலி என்று கருதும் படியாக நடந்துகொள்ளுங்கள். அதில் தவறில்லை. உங்களுடைய கணவருக்கு தன்னம்பிக்கையூட்டவும், தாழ்வு மனப்பான்மை ஏற்படாதிருக்கவும், உங்களை அடிமனதில் வெறுக்காதிருக்கவும் நீங்கள் இந்தத் தியாகத்தைச் செய்வதில் தவறில்லை என்றே நான் கருதுகிறேன்.

இல்லற வாழ்க்கையில் இணைந்த இருவரில் யார் புத்திசாலி என்பதில் கொடிப் பிடிப்பதைவிட, விட்டுக்கொடுத்து இல்லறத்தை மகிழ்ச்சியாக வாழுவதுதான் புத்திசாலித்தனம். "மனைவியும் புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கக்கடவள்" (எபே.5:33) என்று பவுலடியார் கூறுவதைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

7. வேண்டாமே வெட்கம்

"வேசித்தனம் இராதபடிக்கு, அவனவன் தன் சொந்த மனைவியையும், அவளவள் தன் சொந்தப் புருஷனையும் உடைய வளாயிருக்கவேண்டும். புருஷன் தன் மனைவிக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்யக்கடவன்; அப்படியே மனைவியும் தனது புருஷனுக்குச் செய்யக்கடவள்" (1 கொரி.7:2–3).

"ஆதாமும் அவன் மனைவியுமாகிய இருவரும் நிர்வாணிகளாக இருந்தாலும் வெட்கப்படாதிருந்தார்கள்" (ஆதி.2:25) என்ற வாசகம், கணவன்–மனைவி உறவில், மற்ற உறவுகளில் காணக்கூடாத அந்தரங்கத்தையும், நேர்மையையும், புனிதத்தையும், உயர்வையும் எடுத்தியம்புவதாக இருக்கிறது.

நீங்கள் ஆடையின்றி இருந்தாலும் ஆபாசமில்லாத இடம் கணவனின் முன்னிலைதான். உலகில் உங்களைத் தவிர வேறு யாராலும் கொடுக்கமுடியாத சுகத்தை அவருக்கு அளிப்பதற்காக அங்கீகாரம் பெற்றவரும் நீங்கள்தான். எனவே மனதில் களங்கமின்றி – தயக்கமின்றி உங்கள் கணவரிடம் உறவாடி – மகிழ்வித்து அவரைக் களவாடுங்களேன்!

இந்த விஷயத்தில் கணவனை ஏங்க வைப்பதோ அல்லது அதைக் கருவியாகப் பயன்படுத்தி கணவனைப் பணியவைக்க முயற்சிப்பதோ ஆபத்தானது. அப்படிச் செய்யும் பெண் தனக்குத்தானே குழிவெட்டு கிறாள் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். எல்லா ஆண்களும் பிரம்பின் அசைவிற்காடும் குரங்குகளல்ல; அப்படி ஆடுபவர்களும் என்றைக்கும் ஆடிக்கொண்டிருப்பார்கள் என்று எண்ணவும் வேண்டாம். பாலுறவு மயக்கத்திலிருந்து ஆண்மகன் விழித்துக் கொண்டால், உங்கள் வாழ்க்கை சுழன்றடிக்கும் சூறாவளிக் காற்றில் சிக்கிய படகாகிவிடும் – ஜாக்கிரதை.

இந்த அந்தரங்க வாழ்க்கையில் கணவன் மனது காயப்பட்டுப் பிரிவினை ஏற்பட்டால், உங்களிருவரையும் எந்த சமரச முயற்சிகளும் இணைக்காது என்பதைத் திட்டமாக அறிந்துகொள்ளுங்கள். **“மனைவியானவள் தன் புருஷனைவிட்டுப் பிரிந்துபோகக் கூடாது”** (1 கொரி.7:10) என்பது கர்த்தருடைய கட்டளை என்று பவுலடியார் கூறுகிறார்.

திருமண பந்தத்திற்குள்ளான தாம்பத்திய உறவு இறைவன் அருளியுள்ள வெகுமதி; அது அசுத்தமானதுமல்ல, பாவமான்துமல்ல (Sex is a God-given gift and not unholy or sinful as long as it stays within the confines of marriage).

இதைக்குறித்து **ரிச்சர்ட் எல். ஸ்டார்ஸ்** என்ற இறையியல் வல்லுனர் கூறியுள்ள அறிவுறையைத் தமிழில் மொழிமாற்றம் செய்து கொடுத்துள்ளேன். படியுங்களேன்...

“மணமான தம்பதியரிடையே நிகழும் தாம்பத்தியம் வெட்கப் படவேண்டிய ஒன்றல்ல, அது பரிசுத்தமானதுதான் (எபி.13:4). தாம்பத்திய உறவில் தாங்கள் எதில் அதிக இன்பமடைகிறோம் என்பதை இருவரும் தெளிவாக ஒருவருக்கொருவர் சொல்லுவது இன்றியமையாதது; தேவையானால் தாம்பத்திய உறவை இன்னமும் இன்பமுடையதாக ஆக்கிக்கொள்வதற்கு என்ன செய்யலாம் என்றுகூட இருவரும் ஆலோசிக்கலாம். இந்த உறவில் எழக்கூடிய பிரச்சனையை ஜெபத்துடன் கலந்துரையாடி இடையூறுகளைக் களைந்து, இறைவன் விரும்பியவாறு இந்த அழகான தம்பத்திய உறவை அனுபவியுங்கள்” (The sex in marriage is not shameful, but holy. The Bible deals with sex frankly and openly, and so should we. The best way to resolve problems in this area is to keep the lines of communication open. Husbands and wives need to tell each other kindly but candidly what they enjoy, what brings them greatest pleasure, and how they feel their sex lives can be improved. Discussing the subject calmly and prayerfully with each other will melt down the obstacles and make sex the beautiful experience God intended it to be”

-by **Richard L. Strauss in his book “How Fair Is Thy Love**!”).

8. புரிந்துகொள்ளுங்கள்

“ஸ்திரீயானவள் எல்லாவற்றிலும் அடக்கமுடையவளா யிருந்து, அமைதலோடு கற்றுக்கொள்ளக்கடவள்” (1 தீமோ.2:11) என்று பவுலடியார் தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார்.

முதலாவது, தன்னுடைய கணவனுடைய விருப்பு–வெறுப்பு களைப்பற்றித் தெரிந்துகொள்ளுங்கள்; அதற்கேற்ப புத்திசாலித் தனமாக நடந்துகொள்ளுங்கள்.

அவருடைய இலட்சியங்களைப்பற்றி அறிந்துகொள்ளுங்கள்; அவர் தன்னுடைய இலட்சியத்தின் இலக்கையடைய உங்களால் முடிந்தவரை உதவுங்கள்.

வாழ்க்கைப் பாதையில் நாம் சந்திக்கும் எத்தனை பேர்களிடம் பொறுமையைக் கடைப்பிடிக்கிறோம். வாழ்நாள் முழுவதும் உங்களுடன் இணைந்து வாழப்போகிறவரிடம் பொறுமையாக இருந்து அவருடைய குண—இயல்புகளைப் புரிந்துகொள்ளுங்களேன்.

சிலவேளைகளில் வெளியில் மனக்காயப்பட்டு வீட்டுக்கு வந்து கோபமாகக் கத்தினால், அமைதியாக இருங்கள்; திருப்பிக் கத்தி அவருடைய மனதை மேலும் காயமாக்காதீர்கள். அவருடைய ஆற்றாமையையும் கோபத்தையும் தணிக்க வடிகாலாக இருங்கள்; அதனால் உங்களுடைய கௌரவம் குறைந்துவிடாது. காரணத்தைப் புரிந்துகொண்டு அவருக்கு ஆறுதல் சொல்லுங்கள் அல்லது ஆலோசனை கூறுங்கள்.

'உங்களால் முடியும்' என்று அடிக்கடி கூறி, உங்கள் கணவருக்கு உற்சாகமும், தன்னம்பிக்கையும் ஊட்டிகொண்டிருப்பது உங்களுடைய பிரதான வேலைகளிலொன்று என்பதை மறவாதீர்கள்.

உங்கள் கணவன் திறமையற்றவராக இருந்தாலும் உற்சாக மூட்டுங்கள். உங்களுடைய உற்சாகமூட்டலால், திறமையற்ற கணவரைக்கூட திறமையுள்ளவராக மாற்றலாம். மனவியின் உற்சாகமூட்டல், கணவனுக்குப் பலமடங்கு பலத்தையும், திறமையையும் தரும் என்பதை உணர்ந்துகொள்ளுங்கள்.

9. பாராட்டுங்கள்

"ஒருவருக்கொருவர் தயவாயும், மன உருக்கமாயுமிருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" (எபேசி.4:32).

இந்த உலகில் பூரணமான மனிதன் (Perfect man) ஒருவனுமில்லை. உங்களுடைய கணவருக்குச் சிறுசிறு குறைகளிருந்தால் அவைகளைப் பெரிதுபடுத்தாதீர்கள். கணவனின் மனம் புண்படாதவாறு அவற்றை மாற்ற முயலுங்கள்.

உங்களுடைய கணவர் புத்திசாலித்தனமாகவோ அல்லது திறமையாகவோ ஏதாவது செய்தால் தயக்கமின்றி பாராட்டுங்கள். பதவியுயர்வு பெற்றால் கட்டிப்பிடித்து – கைகுலுக்கி – ஏன் முத்தம் கொடுத்துக்கூட பாராட்டலாம். இந்த உலகிலேயே, உங்கள் பாராட்டுகள்தான் உங்களுடைய கணவருக்கு உற்சாகத்தை யூட்டும் பெரிய டானிக். அவரைத் தாராளமாகப் பாராட்டி பலப்படுத்தும் டானிக்காக இருங்களேன்! அதிலென்ன உங்களுக்குக் கஷ்டம்?

அவருடைய வெற்றிதான் உங்களுடைய வெற்றி என்பதைக் கண்டிப்பாக நீங்கள் உணரவேண்டும்.

ஒரு இரகசியம் சொல்லவா? எல்லா ஆண்களுமே, பிறரால் பாராட்டப்படுவதைவிட தனது மனைவியால் பாராட்டப்படுவதையே அதிகம் விரும்புகிறார்கள்.

ஒருவேளை கிடைக்கவேண்டிய பதவியுயர்வு கிடைக்காமல் போனால் அல்லது தொழிலில்/ வியாபாரத்தில் பின்னடைவுகள் ஏற்பட்டால், உங்களுடைய ஆறுதலும், தேறுதலும்தான் உங்களுடைய கணவருக்கு மிகமிக அவசியம்; அவரைக் கலங்கவோ அல்லது சோர்வடையவோ விடாதீர்கள். பதவியுயர்வு கிடைக்காததாலோ அல்லது ஏனைய பின்னடைவுகளாலோ வாழ்க்கை அஸ்தமித்து விடவில்லை என்பதை உணர்த்துங்கள். அடுத்த முயற்சிக்கு அவரைத் தயார்ப்படுத்துங்கள்.

அவர் வெற்றி பெற்றாலும், தோல்வியுற்றாலும் உங்களுடைய அன்பும், மரியாதையும் எப்பொழுதும் போலவே இருக்கும் என்பதை அவருக்குப் புரியவையுங்கள்.

10. ஜெபியுங்கள்

"ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள்" (யாக்.5:16) என்று யாக்கோபு அடிகளார் கூறுகிறார். அப்படியானால் நீங்களும் கணவருக்காகவும், புகுந்தவீட்டிற்காவும் ஜெபிக்கவேண்டும். கணவருக்காக மட்டுமல்ல, அவருடைய உறவுகளுக்காகவும் ஜெபியுங்கள்.

கணவருடைய சுகத்திற்காகவும், முன்னேற்றத்திற்காகவும் ஜெபிப்பது உங்களுடைய கடமை. ஆபத்துக்கள் நிறைந்த வெளியுலகிற்குள் செல்லும் உங்களுடைய கணவனுக்கு நீங்கள் கொடுக்கக்கூடிய பாதுகாப்பு அரண், உங்கள் ஜெபம்தான். அத்துடன் உங்களுடைய ஜெபம் நின்றுவிடாதிருப்பதாக. அவருடைய பெற்றோர்களுக்காகவும், சுற்றத்திற்காவும் ஜெபியுங்கள் .

தனக்காகவும், தனது சுற்றத்திற்காவும் ஜெபிக்கின்ற மனைவியைப்பெற்ற கணவன் பாக்கியவான்; அவன் ஆசீர்வதிக்கப்பட்டவன்.

நிறைவுரை

ஒரு மனைவி எப்படி இருக்கவேண்டும் என்று தன்னுடைய "பெண்" என்ற கவிதையில் **புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்** கூறுவதைக் கேளுங்கள்:

"கண்ணவள் மாமியார்க்கே,
காப்பவள் மாமனார்க்கே
உண்மையில் வாழ்க்கையிலே
உயிராவாள் கணவனுக்கே!"

திருமறையில் தள்ளுபடி ஆகம நூலான **'சீராக்கின் ஞானம்'** என்ற புத்தகத்தில் நல்ல மனைவியைக் குறித்து கூறப்பட்டுள்ள சில சிறப்பான வசனங்களைக் எடுத்துக்காட்டியுள்ளேன்; படித்துப் பாருங்கள்

சீராக் அதிகாரம் 26

1. துணிவுள்ள மனைவியை அடைந்த கணவன் பேறு பெற்றவன்; அவனுடைய வாழ்நாளின் எண்ணிக்கை இரு மடங்காகும்.

2. பற்றுள்ள மனைவி தன் கணவனை மகிழ்விக்கிறாள்; அவன் தன் வாழ்நாள் முழுவதும் அமைதியாகக் கழிப்பான்.

3. நல்ல மனைவியே ஒருவனுக்குக் கிடைக்கும் நல்ல சொத்து; ஆண்டவருக்கு அஞ்சி நடப்போர் பெறும் செல்வங்களுள் ஒன்றாக அவளும் அருளப்படுவாள்.

13. ஒரு மனைவியிடம் விளங்கும் நன்னயம் அவள் கணவனை மகிழ்விக்கும்; அவளிடம் காணும் அறிவாற்றல் அவன் எலும்புகளுக்கு வலுவூட்டும்.

14. அமைதியான மனைவி ஆண்டவர் அளித்த கொடை; நற்பயிற்சி பெற்றவளுக்கு ஈடானது ஏதுவுமில்லை.

15. அடக்கமுள்ள மனைவியின் அழகே அழகு! கற்புள்ள வளுக்கு ஈடு இணை எதுவுமில்லை.

16. ஒழுங்கமைதி உடைய இல்லத்தில் விளங்கும் நல்ல மனைவியின் அழகு ஆண்டவர் உறையும் உயர்வானில் எழும் கதிரவனைப் போன்றது.

26. தன் கணவனை மதிக்கும் மனைவியை ஞானி என அனைவரும் கண்டுகொள்வர். தன் கணவனை மதிக்காத செருக்குற்ற மனைவியை இறைப்பற்றில்லா தவள் என அனைவரும் அறிந்துகொள்வர்.

27. நல்ல மனைவியை அடைந்த மனிதன் பேறுபெற்றவன்; அவனுடைய வாழ்நாளின் எண்ணிக்கை இரு மடங்காகும்.

சாலமோன் ஞானி, "புத்தியுள்ள மனைவியோ கர்த்தர் தரும் ஈவு" (நீதி.10:14) என்று கூறுகிறார்.

நீங்கள், உங்கள் கணவருக்குக் கர்த்தர் தந்த வெகுமதியாக (ஈவாக) இருக்கிறீர்களா?

உங்கள் கணவன், "தேசத்து மூப்பர்களோடே நியாய ஸ்தலங்களில் உட்கார்ந்திருக்கையில் பேர்பெற்றவனா யிருக்க" (நீதி.31:23) உதவும் பெண்ணாக நீங்கள் ஏன் இருக்கக் கூடாது?

உங்கள் இல்லறம் நல்லறமாக இருக்க, நீங்கள் ஏன் உங்கள் கணவருக்குக் "கர்த்தர் கொடுத்த ஈவாக" இருக்கக்கூடாது?

திருவள்ளுவரும், **"இல்லாதுஎன் இல்லாள் மாண்பு ஆனால்?"** என்று வினவுகிறார். அதாவது, 'குணநலமிக்க பெண் மனைவியாக அமைந்துவிட்டால், அந்தக் குடும்பத்தில் இல்லாதது என்ன?' என்பதுதான் அதன் பொருள். 'ஒரு குறையும் அந்த வீட்டில் இருக்காது' என்பதுதான் அந்த வினாவிற்குப் பொருத்தமான பதிலாக இருக்கமுடியும்.

உங்கள் கணவர், தன்னுடைய வாழ்க்கையின் இலட்சியத்தை அடைய அவருக்கு உதவியாக – உறுதுணையாக இருங்கள். நீங்கள் வாழ்க்கைப்பட்ட கணவனுடைய வீட்டாரை உங்கள் பாசத்தாலும் நேசத்தாலும் கட்டுங்கள்; புகுந்த வீட்டின் தூணாக இருங்கள்.

இளமை காலத்தில் தன்னைத் துன்புறுத்திய மாமனார்–மாமியாரை, அவர்களது முதுமைக் காலத்தில் ஒரு மருமகள் கவனித்துதான் ஆகவேண்டுமா?

இன்றைக்குப் பல பெண்களின் எண்ணத்தை ஆக்கிரமித் திருக்கும் கேள்வி இதுதான்.

ஒருவேளை உங்கள் கணவனின் தாயோ அல்லது தந்தையோ, அவர்களுடைய உடல் வலுவுள்ள காலத்தில் உங்களைத் துன்புறுத்தியிருந்தாலும், உதாசீனம் செய்திருந்தாலும் அல்லது உள்ளதைக் காயப்படுத்தியிருந்தாலும் அவர்களைப் பழிவாங்காதீர்கள் – அவர்களை மன்னித்து விடுங்கள் – அவர்களை நேசியுங்கள் – அவர்களுக்குப் பணிவிடை செய்யுங்கள் என்றுதான் அறிவுரை கூறுவேன். **வேறு எதற்காக இல்லாவிட்டாலும்கூட, உங்களுக்கு ஒரு நல்ல கணவரைப் பெற்று, வளர்த்துக் கொடுத்திருப் பதற்காகவாவது அவர்களை மன்னித்து நேசிக்கலாமே. அதைப் போலவே கணவனும் தனது மனைவியின் பெற்றோர்களை மன்னிக்கலாம் – நேசிக்கலாமே.**

உங்கள் கணவனின் உயர்விற்கும், கௌரவத்திற்கும் ஆதாரமாகவும், அடிப்படையாகவும் இருங்கள். வீட்டின் அடிப்படை, மேலோட்டமான பார்வைக்குத் தெரியாது. ஆனால் வீட்டின் பலமே அடிப்படையை ஆதாரமாகக்கொண்டதுதான் என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

உங்கள் கணவனின் முன்னேற்றம் உங்கள் கையில் என்பதை மறவாதீர்கள் –**"நல்ல மனைவியைக் கண்டடைகிறவன் நன்மையானதைக் கண்டடைகிறான்"** (நீதி.11:22).

11

மகிழ்ச்சியான இல்லறம்

புருஷன் தன் மனைவிக்கு செய்யவேண்டிய கடமையைச் செய்யக்கடவன்: அப்படியே மனைவியும் தன் புருஷனுக்குச் செய்யக்கடவள் (1 கொரிந்தியர் 7:3).

எந்த ஒரு ஆணுக்கும், பெண்ணுக்கும் மணநாள் மறக்க முடியாத நாள். இருவருமே மணநாளில் பலவித கனவுகளுடனும், எதிர்பார்ப்பு களுடனும் மகிழ்ச்சியில் திளைக்கிறார்கள். திருமணத்திற்கு வந்துள்ள உறவினர்களையும், வாழ்த்த வந்துள்ள நண்பர்களையும் தங்கள் வாழ்நாள் முழுவதும் வழித்துணையாக எண்ணிக் கொள்கிறார்கள். மணநாள் முடிந்த பிறகு வந்தவர்கள் சுவடுகளின்றி தங்கள் வாழ்க்கைக்குத் திரும்பிச் சென்றுவிடுகிறார்கள்.

சிலநாட்கள் சென்று, தேனிலவு முடிந்து, கனவுகள் கலைந்து, நனவுலகிற்குத் திரும்பி, இல்லற வாழ்க்கைக்குள் அடியெடுத்து வைத்த பின்னரே நிதர்சனமான உண்மைகளை இருவரும் உணருகிறார்கள். நான்கு சுவர்களுக்குள் தனித்துவிடப்பட்ட இருவரும் தாங்களே தங்கள் எதிர்காலத்தை நிர்ணயம் செய்யும் கட்டாயத்திற்குத் தள்ளப்படுகிறார்கள்.

தங்கள் எதிர்பார்ப்புகளில் குறைவுகளைச் சந்திக்கும்பொழுது முதிர்ச்சியற்ற மனம் மருளுகிறது. தாங்கள் ஏமாற்றப்பட்டுவிட்டதைப் போல் சில தம்பதியர்கள் கருதுகிறார்கள்.

இவ்வுலகில் மணம் முடித்து குடும்பம் நடத்தும் தம்பதியரெல்லாம் மகிழ்வான மணவாழ்க்கையை நடத்துகிறார்களா? அல்லது ஏமாற்றங்களை உள்ளடக்கிக்கொண்டு மகிழ்ச்சியாக இருப்பது போல் நடித்துக்கொண்டிருகிறார்களா?

உண்மையான மனமகிழ்வு மணவாழ்க்கையில் கிட்டுகிறதா?

மகிழ்ச்சியான மணவாழ்க்கை இரகசியத்தின் திறவுகோல் எது?

பரிசோதனை

நீங்கள் மணமானவராக இருந்தால், உங்களுக்கு ஒரு சோதனை (Test) கீழே கொடுக்கப்பட்டுள்ள பத்து கருத்துகளில் (Statements) எது சரி, எது தவறு என்று கூறுங்கள். சரி அல்லது தவறு என்று பதிலளித்தால் போதும்.

1. வெற்றியான குடும்பம் நடத்தும் தம்பதியர் எதற்காகவும் தங்களுக்குள் விவாதம் செய்வதில்லை — சரி | தவறு
   (They never argue)
2. மகிழ்ச்சியான தம்பதியர் ஒருவரையொருவர் சார்ந்து வாழாமல் தங்கள் காரியங்களை தாங்களே கவனித்துக் கொள்கிறார்கள் — சரி | தவறு
   (They do not depend on each other)
3. பாலுறவின் தேவையில் தம்பதியர் இருவரும் சமமாக இருக்கிறார்கள் — சரி | தவறு
   (Both want sex equally)
4. அவர்கள் மகிழ்ச்சியாக இருப்பதற்குக் காரணம், அவர்களின் குடும்பத்தேவைகள் யாவும் பூர்த்தியாகி எப்பொழுதும் நிறைவுடன் இருக்கிறார்கள் — சரி | தவறு
   (They always have their needs met)
5. தம்பதியர்கள் இருவரும் தங்களுடைய பொறுப்புகள் அனைத்தையும் சமமாகப் பிரித்துக்கொள்கிறார்கள் — சரி | தவறு
   (They share all their responsibility equally)
6. அவர்கள் ஒருவரைவிட்டுப் பிரியாமல் எப்பொழுதும் சேர்ந்தேயிருக்கிறார்கள் அவர்கள் தனியாகவே இருப்பதில்லை — சரி | தவறு
   (They are never lonely)
7. அவர்கள் எல்லாவற்றிலும் ஒத்துப் போகிறவர்களாகவே இருக்கிறார்கள் அவர்களுக்குள் விவாதங்கள் வருவதேயில்லை — சரி | தவறு
   (They always agree)
8. அவர்களுக்குள் கருத்துவேறுபாடுகள் எழுவதேயில்லை. அவர்கள் எப்பொழுதும்

ஒருமித்த சிந்தையுள்ளவர்களாக இருக்கிறார்கள் சரி | தவறு
(They always think alike)

9. **இருவரும் ஒருவருடையத் தேவையை மற்றவர் அறிந்து உடனுக்குடன் ஒருவருக்கொருவர் பூர்த்தி செய்கிறார்கள்** சரி | தவறு
(They always perceive other's need and satisfy)

10. **இருவரும் தங்கள் பிரச்சனைகளை எப்பொழுதும் வெற்றிகரமாகத் தீர்த்துக் கொள்கிறார்கள்** சரி | தவறு
(They always resolve their porblems successfully)

இவைகளுக்கெல்லாம் பதில் எனக்குத் தெரிந்தவைதானே என்று நீங்கள் நினைப்பது எனக்குப் புரிகிறது. ஆனால், உண்மை என்ன தெரியுமா?

இங்கே கொடுக்கப்பட்டுள்ள எந்தக் கருத்துகளும் சரியல்ல. இவைகள் அனைத்திற்கும் "தவறு" என்று பதிலளித்திருந்தால் மட்டுமே, நீங்கள் இல்லற வாழ்வின் தத்துவத்தை அல்லது இரகசியத்தை முதிர்ச்சியுடன் புரிந்துகொண்டு மகிழ்ச்சியுடன் வாழ முயன்றுகொண்டிருக்கிறீர்கள் என்று பொருள்.

எது வெற்றியான இல்லறம்?

பயத்தினால் ஒருவருக்கொருவர் பணிந்துபோவது அல்லது சண்டையிடாதிருப்பது மகிழ்ச்சியான இல்லறமல்ல.

ஒரு ஆலயத்தில், ஒரு தம்பதியரை மிகவும் சிறந்த தம்பதியர் என்று எல்லோரும் கருதினார்கள்.

அந்தத் தம்பதியர்கள் அவர்களுடைய இருபத்தி ஐந்து ஆண்டு— இல்லற வாழ்க்கையில் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டதை ஒருவரும் ஒருபோதும் கண்டதேயில்லை. அவர்களுடைய வெற்றியான இல்லற வாழ்க்கையின் இரகசியத்தை அறிந்துகொள்ள அனைவரும் ஆவலாக இருந்தார்கள்.

அந்தச் சபையிலுள்ள பெண்கள் ஐக்கிய சங்க உறுப்பினர்கள் அந்த இரகசியத்தைத் தங்களிடம் பகிர்ந்துகொள்ளும்படி அவர் மனைவியிடம் வற்புறுத்தினார்கள். அந்த மனைவி அவர்களிடம் இரகசியத்தை இப்படிப் பகிர்ந்துகொண்டார்.

"மணமான புதிதில் தேனிலவிற்குச் இருவரும் தனியாகச் சென்றிருந்தோம். இருவரும் இரு குதிரைகள் பூட்டிய வண்டியில்

பயணித்துக்கொண்டிருந்தோம். சிறிது தூரம் சென்றவுடன் இரு குதிரைகளில் ஒரு குதிரை மேலே செல்லாமல் நின்றுவிட்டது. என்னுடைய கணவர் கோபமாகத் தன்னுடைய இடுப்பில் வைத்திருந்த துப்பாக்கியை எடுத்து, குதிரையை நோக்கி "ஒன்று" என்று கத்தினார். குதிரை அசையாமல் அப்படியே நின்று கொண்டிருந்தது."

"மறுபடியும் இன்னும் அதிக சத்தமாக, "இரண்டு" என்று கூறினார்; எந்த முன்னேற்றமுமில்லை. மூன்றாவதாக, "மூன்று" என்று கூறினார்; குதிரை நகரவில்லை. ஆத்திரமடைந்த என் கணவர் அந்த குதிரையை சுட்டார்; குதிரை செத்து விழுந்தது."

அவருடைய செயல் எனக்கு அதிர்ச்சியளித்தது. "ஏன் இப்படி முட்டாள்தனமாக ஒரு காரியத்தைச் செய்தீர்கள்?" என்று அவரைப் பார்த்து அலறினேன். குதிரையை நோக்கியிருந்த துப்பாக்கியை எனக்கு நேராக நீட்டி, "ஒன்று" என்று கூறினார்.

கொஞ்சம் பயந்துகொண்டே, "அது இல்லைங்க, அது வாயில்லா ஜீவன் .... " என்று அவரைச் சமாதனப்படுத்த எத்தனித்தேன். அவர் அதைச் சட்டைசெய்யாமல், "இரண்டு" என்றார்.

மேலும் தொடர்ந்தால், குதிரையின் கதிதான் நமக்கும் என்பதை உணர்ந்து வாயைப் பொத்திக்கொண்டேன். அதன் பின்பு அவர், "ஒன்று" என்று சொல்வதற்குக்கூட நான் வாய்ப்பளிக்கவில்லை. இதுதான் எங்களுடைய இல்லற வாழ்க்கையின் இரகசியம்" என்று கூறினார்.

இது வெற்றியான – மகிழ்ச்சியான இல்லற வாழ்க்கையா? இல்லவேயில்லை.

கணவனும் – மனைவியும், ஒருவரிலோருவர் அன்புகொண்டு, ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து, ஒருவரையொருவர் மதித்து – மன்னித்து, ஒருவருக்கொருவர் பகிர்ந்து –பணிவிடைசெய்து, ஒருவரோடொருவர் இசைந்து – இணைந்து வாழ்வதே இனிய இல்லறம்.

வாழ்க்கையைப் புரிந்துகொள்ளுங்கள்

மனித வாழ்க்கை குறைகளற்றதல்ல என்பதை நாமனைவரும் அறிவோம் (Life is not perfect). குறைவுகள் நிறைந்ததுதான் வாழ்க்கை.

நாம் விரும்புவதெல்லாம் நமக்குக் கிடைக்க வேண்டுமென்று அடம்பிடித்தால், நாம் ஏமாந்துபோவோம். நாம் எப்படியெல்லாம் எதிர்பார்க்கிறோமோ அப்படியெல்லாம் நடக்கவேண்டுமென்று பிடிவாதம் பிடித்தால், நாம் தோற்றுப்போவோம்.

வாழ்க்கையில் நாம் கேட்டதெல்லாம் கிடைப்பதுமில்லை; நினைப்பதெல்லாம் நடப்பதுமில்லை. இதுதான் இவ்வுலக வாழ்க்கையின் நிஜம். **"எல்லாம்"** கிடைப்பதில்லை, **"எல்லாம்"** நடப்பதில்லை என்றுதான் கூறினேன். **"எதுவுமே"** கிடைப்பதில்லை யென்றோ, **"எதுவுமே"** நடப்பதில்லையென்றோ நான் கூறவில்லை.

சிலவேளைகளில் ஒன்றைப் பெற்றுக்கொள்ள மற்றொன்றை விட்டுக்கொடுப்பது இவ்வுலகில் தவிர்க்க இயலாதது. எல்லோருக்கும் எல்லாம் கிடைப்பது அரிது. அப்படியே கிடைத்தாலும், அதில் திருப்தியுறுவது அதனிலும் அரிது. ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழ்வதுதான் இல்லறவாழ்க்கை. ஒருவருக்கொருவர் தியாகம் செய்து வாழ்வதுதான் குடும்ப வாழ்க்கை.

"திருமணம் என்பது நன்கு மன்னிக்கின்ற இருவரின் கூட்டுறவு" என்ற ராபர்ட் குய்லானின் வார்த்தையை கருத்தில் கொள்க ("Marriage is the union of two good forgivers" – Robert Quillan).

இறைவனின் மானுடப்படைப்பில், ஒவ்வொருவரும் வெவ்வேறான தனித்தன்மை (Individual Uniqueness) உள்ளவர்கள்; வெவ்வேறு பின்னணியில் வாழ்ந்தவர்கள்; வெவ்வேறு அனுபவங்களைப் பெற்றவர்கள். எனவே இருவரும் எல்லாவற்றிலும் ஒருமித்த சிந்தையுள்ளவர்களாகவும், அனைத்திலும் ஒத்துப்போகிறவர் களாகவும் இருப்பார்களென்று எதிர்பார்க்க இயலாது. எனவே ஒருவரையொருவர் அனுசரித்து, சரிசெய்துபோவதுதான் முறையான அணுகுமுறை.

சமீபத்தில், "திருமண உறவுகள்" பற்றி நடந்த ஆராய்ச்சியில், கணவன்–மனைவி இருவரிடமும் கருத்துவேறுபாடுகள் இருப்பது, ஆரோக்கியமான இல்லற உறவிற்கு அவசியம் என்ற கருத்தினை வலியுறுத்தியிருக்கிறார்கள் (Existance of Difference-of-Opinion in a family is an indicator of Healthy-Family-Relationship).

கருத்து வேறுபாடுகள் இருந்தால் அது பலவீனமல்ல. மாறாக, அஃது அந்தக் குடும்பத்தில் நலமான உறவு இருப்பதை உறுதிப் படுத்துகிறது;

அங்கு ஆணாதிக்கமோ அல்லது பெண்ணடிமைத்தனமோ இல்லை; அங்கு சிந்தனைகள் விலங்கிடப்படவில்லை; அக்குடும்பத்தில் கருத்துச் சுதந்திரம் நிலவுகிறது. ஒருவரை யொருவர் மதிக்கிறார்கள்; மற்றவர்கள் கருத்து கேட்கப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டு, அமுலாக்கப்படுகிறது.

கலில் கிப்ரன் என்ற அறிஞர், **"உங்கள் ஒருமிப்பில் சற்று இடைவெளிகள் இருக்கட்டும்"** என்று கூறும் கருத்தையும் கவனத்திற்கொள்ளுங்கள் ("Let there be spaces in your togetherness" - **Kahlil Gibran**).

இல்லற வாழ்க்கை என்பது ஒரு ஆணும் பெண்ணும் தாங்கள் தங்களுடைய வாழ்க்கை முழுவதும் ஒருவரையொருவர் கனம் பண்ணி, இணைந்து வாழ்வதாக வாக்களித்து ஆரம்பிக்கப்படுகிறது. பல தம்பதியர்கள் தங்களுக்கிடையே ஊடாடும் அன்புதான் பிரதானம் என்று கருதுகிறார்கள். ஒருவகையில் இது சரிதான். ஆனால் இந்தக் கருத்தை முற்றிலும் சரியானது என்று கூறமுடியாது. ஏனென்றால், திருமணத்தன்று தம்பதியர்கள் இருவரும் அளிக்கும் உறுதி மொழிகளை (Commitment) அவர்கள் பின்பற்றவதால் கிடைக்கும் வெகுமதியே அவர்களிருவரிடையை பிறக்கும் அன்பாகும்.

கணவனும், மனைவியும் இறைச் சன்னதியில் எடுத்துக்கொண்ட உறுதிமொழியின்படி வாழ்விலும்–தாழ்விலும், சுகத்திலும்–சுகவீனத்திலும், இன்பத்திலும்–துன்பத்திலும், நன்மையிலும் தீமையிலும் இருவரும் ஒருவருக்கொருவர் துணையாக நின்று இணைந்து இல்வாழ்க்கைப் போராட்டத்தை எதிர்கொள்ளும் வலுவான ஒற்றுமையில் இறுக்கமுறும் பாசப்பிணைப்பின் வெகுமதிதான் இருவரிடையே ஊடாடும் அன்பாகும் (Commitment is the adhesive of keeping the marriage going strong; the love is the reward of keeping the commitment).

நிறைவுரை

வின்ஸ்டன் சர்ச்சில் பிரதமராக இருந்தபொழுது இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் காரசாரமாக விவாதம் நடந்துகொண்டிருந்தது.

அப்பொழுது ஒரு பெண் உறுப்பினர் சர்ச்சிலைப் பார்த்து, **"நீர் மட்டும் என்னுடைய கணவனாக வாய்த்திருந்தால், உம்மை விஷம் வைத்துக்கொன்றிருப்பேன்"** என்று ஆவேசமாக கூறினார்.

அதற்குச் சர்ச்சில், **"அப்படி ஒரு துர்ரதிஷ்டம் ஏற்பட்டிருந் தால், மறுக்காமல் அதைக் குடித்திருப்பேன்"** என்று அமைதி யாகப் பதிலளித்தார்.

குணமற்ற பெண்ணுடன் குடும்பம் நடத்துவது கடினந்தான். குடும்ப வாழ்க்கையில் சிறுசிறு மனஸ்தாபங்களும், கருத்து வேறுபாடுகளும் ஏற்படுவது சகஜம்தான். அதற்காக அனுதினமும் சண்டையிட்டுக்கொண்டு குடும்பத்திலுள்ள மற்றவர்களின் உணர்ச்சிகளை முறுக்கேற்றும் (Building up tension everyday in the family) தம்பதியர்களை, கருத்துவேறுபாடுள்ள தம்பதியர் களோடு குழப்பிக்கொள்ளாதீர்கள்.

ஆரோக்கியமான கருத்துவேற்றுமைக்கும், முதிர்ச்சியற்ற சண்டைக்கும் பலத்த வேறுபாடுண்டு. நலம்பயக்கும் விவாதமோ அல்லது கருத்துவேறுபாடோ சண்டையிடுவது அல்ல.

முரணான கருத்துக்களைக் கொண்டிருந்தாலும், அக்கருத்து வேறுபாடுகளுடன் மகிழ்ச்சியாக வாழ கற்றுக்கொண்டால், உங்கள் வாழ்க்கை மகிழ்ச்சியான அனுபவமாயிருக்கும் (Your life will be pleasant experience, if you learn to disagree pleasantly).

காலத்தால் அழியாது இன்றும் நிலைத்து நிற்கும், "இலியட்" (Illiad) என்ற காப்பிய கர்த்தாவான கிரேக்க கவிஞர் ஹோமர் இப்படிக்கூறுகிறார்: "குடும்பமாக இணைந்த இரு நபர்கள், எதிரிகளை வீழ்த்தியும், நட்புக்களை மகிழ்வித்தும், ஒருமித்த நோக்குடன் கணவன் மனைவியாக இல்லறம் நடத்தும் சிறப்பைவிட பெரிய சிறப்பு வேறில்லை, அதற்கிணையாகப் பாராட்டத்தக்க விஷயமும் வேறில்லை" (There is nothing more nobler or more admirable than when two people, who see eye to eye, keep house as man and wife, confounding enemies and delighting their friends. -***Homer***).

எல்லாம் நிறைவாக இருக்கவேண்டும் என்று ஒருவரிலொருவர் எதிர்பார்க்காத தம்பதியர்கள்தான் நிறைவான இல்லற வாழ்க்கையை வாழுவார்கள் (Perfect marriage is not expecting perfection). ஏனென்றால், (இறைமைந்தன் இயேசுவைத் தவிர) குறையற்ற நிறைவான ஆணோ அல்லது பெண்ணோ இவ்வுலகில் பிறப்பதில்லை என்பதுதான் உண்மை.

"காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதே இன்பம்"
(ஔவையார்)

தமிழ் சமுதாயத்தில், திருமணமான தம்பதிகளைப்
"பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க"
என்று வாழ்த்துவது வழக்கம்.
அந்தப் பதினாறு பேறுகள் ஏன்னென்ன?

1. அழியாத கல்வி
2. குறைவற்ற வயது
3. கபடற்ற நட்பு
4. குறையாத செல்வம்
5. பிணியற்ற உடல்
6. சோர்வற்ற மனம்
7. அன்புள்ள மனைவி
8. தவறாத சந்தான பாக்கியம்
9. மங்காத புகழ்
10. பிறழாத சொல்
11. தடையில்லாக் கொடை
12. தொலையாத நிதி
14. நீதி தவறாத ஆளுகை
15. துன்பமற்ற வாழ்க்கை
16. இறை பக்தர்களுடன் ஐக்கியம்.

12

மகிழ்ச்சியான இல்லத்தின் ஐந்து ஆதார வார்த்தைகள்

1. அன்பு – 2. நம்பிக்கை – 3. சுயஒழுக்கம் – 4. பொறுப்பு – 5. ஜெபம்

கர்த்தருக்குப் பயப்படுகிறவனுக்குத் திடநம்பிக்கை உண்டு; அவன் பிள்ளைகளுக்கும் அடைக்கலம் கிடைக்கும் (நீதிமொழிகள் 14:26).

ஆங்கிலத்தில் ஒரு பழமொழியுண்டு, "Home is father's kingdom, mother's world and children's paradise" இதன் பொருள்: **"இல்லம் தந்தையின் அரசு, தாயின் உலகம், குழந்தைகளின் சுவர்க்கம்"** என்பதாகும்.

மனித வாழ்க்கையில் மகிழ்ச்சியான இடம் அவரவர் இல்லம்தான். உடலாலும், உள்ளத்தாலும், பிறப்பாலும் நெருங்கிய உறவுகள் வாழுமிடம் இல்லம்தான். ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்க்கையில் பிடிப்பையும் (Source of strength), அகத்தூண்டுதலையும் (Inspiration) அளிப்பது இல்லமே. மனித வாழ்க்கையில் இல்லம் மகிழ்ச்சியான இடமாக இல்லையென்றால், அந்த வாழ்க்கையே நரக வாழ்க்கைதான்.

ஆனால் இல்லத்தில் மகிழ்ச்சியை உருவாக்குவதற்கும், பாதுகாப்பதற்கும் அத்தியாவசிமான அடிப்படை சிறப்பியல்புகளை ஐந்து ஆதார வார்த்தைகளில் (Key Words) குறிப்பிட்டுக் கூறலாம். அவைகள்: 1. அன்பு, 2. நம்பிக்கை, 3. சுய-ஒழுக்கம், 4. பொறுப்பு, 5. ஜெபம் – என்பவைகளே.

1. அன்பு (Love)

ஒரு ஆணும் பெண்ணும் தன்னலமற்ற அன்பால் (unselfish love) ஒன்றிணையும்பொழுதுதான் விரும்பத்தக்க ஆரோக்கியமான குடும்பம் (Healthy Home) அமையப்பெறுகிறது. அந்த குடும்பத்தில் பிள்ளைகளும் வந்து சேரும்பொழுது, அத்தன்னலமற்ற அன்பு அதிமாகிறது. பெரும்பாலும் உலகிலுள்ள எல்லாக் குடும்பங்களையும்

பிணைத்திருப்பது இயற்கையாகவே மனிதனிலுள்ள பாச உணர்ச்சிதான் (Natural impulse).

ஆனால் ஒரு **கிறிஸ்தவக் குடும்பம்**, இயற்கையான பாச உணர்விற்கும் மேலே, ஒருவரிலொருவர்கொண்டுள்ள **தன்னலமற்ற அன்பால்** (Unselfish Love) பிணைக்கப்பட்டிருக்கவேண்டும்.

திருமறை, **"அவனவன் தன்னிடத்தில் அன்புகூறுவதுபோல, தன் மனைவியிடத்திலும் அன்புகூறக்கடவன்; மனைவியும் புருஷனிடத்திலே பயபக்தியாயிருக்கக்கடவள்"** (எபே.5:33) என்று கூறுகிறது.

தன்னலமற்ற அன்புள்ள மனிதன் தனது மனைவிக்காகவும், தன்னுடைய பிள்ளைகளுக்காகவும், தன்னுடைய குடும்பத்திற்காகவும் தன்னுடைய உல்லாசத்தையும், தன்னுடைய உயிரையும், தனக்குள்ள சகலத்தையும் துறக்கவும், இழக்கவும் தயாராக இருக்கிறான். இப்படிப்பட்ட அன்பு மனைவிக்குக் கணவனிடம் இருக்கவேண்டும். இருவரும் இணைந்த பெற்றோர்களாகப் பிள்ளைகளிடம் தன்னலமற்ற அன்பு செலுத்தவேண்டும்.

ஆனால் இந்த அன்பு, சிறிது சிறிதாகக் குறைந்து, இறுதியில் அன்பே வற்றிப்போய்விடும் அபாயமுண்டு. அன்பை வற்றாத ஈரத்துடன் காத்துக்கொள்ளவேண்டுமென்றால், அந்த குடும்பத்தில் ஒருவரிடையொருவர் கூட்டுறவும் (Association), கவனிப்பும் (Attention) அக்கறையும் (Care) இருக்கவேண்டும்.

இன்றைய நாட்களில் பெற்றோர்கள் இருவரும் வேலைக்குச் செல்லும் கலாச்சாரம் அதிமாகிவிட்டது. அலுவலகத்தில் அதிக நேரத்தைச் செலவிட்டுவிடுவதால், பெற்ற பிள்ளைகளிடம் அவர்கள் தொடர்புடன் இருக்கும் நேரம் மிகவும் குறைவாக இருக்கிறது. அலுவலகத்திலிருந்து திரும்பிய பின்னும், பிள்ளைகள் படுக்கைக்குச் செல்லும்வரை, தொலைக்காட்சிப் பெட்டிக்கு முன்னால் அமர்ந்து "தொலைக்காட்சித் தொடர்களில்" (TV Serials) மூழ்கிவிடுவதால் குடும்ப உறவுகள் சீர்கெட்டுக்கொண்டிருக்கின்றன. **பல பிள்ளைகளுக்கு, அவர்களுடைய பெற்றோர்கள் மனத்தளவில் அந்நியர்களாக இருக்கிறார் என்பது அதிர்ச்சியூட்டும் நிஜம்.**

இயற்கையில் பிள்ளைகள் தங்களுடைய பெற்றோரை அதிகம் நேசிக்கிறார்கள்; அதே பாசத்தைப் பெற்றோர்களிடமிருந்து திருப்பி எதிர்பார்க்கிறார்கள். அது கிடைக்காவிட்டால் மனதளவில் நொறுங்கிப்போகிறார்கள். அதனால் பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் அகற்ற முடியாத திரை விழுந்துவிடுகிறது அல்லது இடைவெளி ஏற்பட்டுவிடுகிறது.

குடும்பத்தின் அங்கத்தினர்கள் ஒருவர்மீது ஒருவர் கொண்டுள்ள தன்னலமற்ற அன்பே குடும்ப மகிழ்ச்சியின் பிறப்பிடமாகும். நீங்கள் பிள்ளைகளுக்குக் கொடுக்கும் பணமுமோ, பரிசுகளோ, பைக்கோ,

காரோ, வேறு எந்தப் பொருளும் உங்களுடைய அன்பிற்கு மாற்றகவோ அல்லது அதற்கிணையாகவோ இருக்க முடியாது.

2. நம்பிக்கை (Faith)

ஆங்கிலத்தில் நம்பிக்கைக்கு இன்னும் பல வார்த்தைகளுண்டு **Trust, Confidence, Believe, Reliance** போன்றவைகள். **Trust** என்றால் உறுதியான நம்பிக்கை; **Confidence** என்றால் நிச்சயமான நம்பிக்கை; **Believe** என்றால் மெய்யான நம்பிக்கை; **Reliance** என்றால் ஆழமான நம்பிக்கை. குடும்பத்தில் காணப்படவேண்டிய நம்பிக்கை **(Faith)** அத்தனை வார்த்தைகளின் பொருள்களையும் உள்ளடக்கியதாக இருக்கவேண்டும்.

ஒரு இல்லம் இனிய குடும்பமாக இருக்கவேண்டுமானால், பெற்றோர்கள் இருவரும் தங்களுக்குள் பரஸ்பர நம்பிக்கை (Mutual faith) கொண்டிருக்கவேண்டும். பெற்றோர்களின் பரஸ்பர நம்பிக்கை, பிள்ளைகளுக்குத் தாங்கள் பின்பற்றத்தக்க அகத் தூண்டுதலாக அமையவேண்டும் (Parents faith in each other should inspire their children to emulate).

குடும்ப நம்பிக்கையின் அடிப்படையின் சிறப்பியல்புகள் எவை?

Ü ¬ õ è œ :Þ ¬ øõ Q ¡ ° í ïô ¡ è ÷ £ù **உண்மை** (Truth), **நேர்மை** (Fairness), **வாய்மை** (Integrity), **அன்பு** (Love), **பரிவு** (Compassion), **இரக்கம்** (Mercy) என்பவைகளே.

இறை பக்தியுடன், இறைவனின் இக்குணநலன்களை தங்கள் வாழ்க்கையில் வெளிப்படுத்தும் பெற்றோர்களாக இருந்தால், அவர்கள் தங்கள் பிள்ளைகளின் நம்பிக்கையைப் பெறுவார்கள்; அவர்கள் பிள்ளைகளும் பெற்றோர்களின் நம்பிக்கைக்குரியவர்களாக வளருவார்கள்.

அந்தக் குடும்பத்தில் எல்லோருமே ஒருவருக்கொருவர் நம்பிக்கைக்குப் பாத்திரமுள்ளவர்களாக இருப்பார்கள்.

3. சுய–ஒழுக்கம் (Self-discipline)

சுய–ஒழுக்கம் உடனடியாகக் கிடைத்துவிடும் குணாதிசயமல்ல. குழந்தைகள் சுய–ஒழுக்கமுள்ளவர்களாகப் படிப்படியாகத்தான் உருவாகிறார்கள். "குழந்தைகள் முதிர்ச்சியுடன் முடிவுகள் எடுக்கவும், சுய–ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கவும் தகுதியாகும் வரைக்கும், பெற்றோர்களின் வழிகாட்டுதலுடனும் அறிவுரைகளுடனும் வளர்க்கப்படுவது இன்றியமையாதது" என்பதை பெரும்பாலும் எல்லா மனநல மருத்துவர்களுமே வற்புறுத்துகிறார்கள்.

ஒழுக்கம் இருக்கவேண்டுமென்றால் கட்டுப்பாடுகள் இருப்பதும் அவசியமாகிறது. செய்யத்தக்கவை எவைகள், செய்யத்தகாதவை எவைகள் என்று குழந்தைகள் அறிவுறுத்தப்படவேண்டும்; அந்த

வரையறைகளை மீறினால், தண்டனைகளுண்டு என்று பிள்ளைகள் அறிந்திருக்கவேண்டும்.

பிள்ளைகள் மீது நீங்கள் கொண்டுள்ள தன்னலமற்ற அன்பிற்கும், அவர்களுடைய தவறான நடத்தைகளின்மீது நீங்கள் காட்டும் கண்டிப்பிற்குமுள்ள வித்தியாசத்தைப் பிள்ளைகள் அறிந்திருக்கவேண்டும் (Children need to know that your disapproval of certain behavior and your love for them are two different things.)

இதைக் கருத்தில்கொண்டுதான் பவுலடியார், **"உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சை யிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக"** (எபே.6:4) என்று கூறுகிறார்.

ஒழுக்கங்கள் குடும்பத்தில் கற்பிக்கப்பட்டு பயிற்றுவிக்கப்பட வேண்டும்; சில வேளைகளில் கண்டிப்பு அல்லது தண்டனைபோன்ற கடின வழிகளும் கையாளப்படவேண்டும். சாலமோன் ஞானி கூறுகிறார்: **"பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து. அவன் முதிர் வயதிலும் அதை விடாதிருப் பான்"** (நீதி.22:6).

ஆனால் நீங்கள் அளிக்கும் தண்டனை, உங்கள் இயலாமையின் வெளிப்பாடாகவோ அல்லது உங்கள் கோபத்தின் வடிகாலாகவோ இருக்கக்கூடாது; நீங்கள் அளிக்கும் தண்டனை, பிள்ளைகளைத் திருத்துவதற்காக உங்களுடைய அன்பின் செயலாக அமைய வேண்டும். பிற்காலத்தில் அவர்கள் வளர்ந்தபின்பு நீங்கள் காட்டிய கண்டிப்பிற்காக உங்கள் மீது மரியாதையுள்ளவர்களாக இருப்பார்கள்.

பல பிள்ளகள், பெற்றோர்களின் கண்டிப்பிற்கு வெளியரங்கமாக முறுமுறுக்கிறவர்களைப்போலத் தோன்றினாலும், அவர்கள் தங்கள் உள்ளத்தில் பெற்றோர்களால் கண்டிக்கப்படுவதை விரும்புகிறார்கள் என்பது வியப்பளிக்கும் உண்மை.

கண்டிக்கப்படாவிட்டால், தங்களுடைய பெற்றோர்களுக்குத் தங்கள்மீது அக்கறையில்லை என்று எண்ணுகிறார்கள். **"உன் மகனைச் சிட்சை செய், அவன் உனக்கு ஆறுதல் செய்வான்; உன் ஆத்துமாவுக்கு ஆனந்தத்தையும் உண்டாக்குவான்"** (நீதி.29:17).

4. பொறுப்பு (Responsibility)

குடும்ப அங்கத்தினர்களிடையே தன்னலமற்ற அன்பு, ஆழமான பரஸ்பர நம்பிக்கை, முதிர்ச்சியான சுய–ஒழுக்கம் ஆகிய மூன்றும் இருந்தால், அவர்கள் ஒவ்வொருவரும் குடும்பத்தில் தங்களுடைய பொறுப்புக்களை இயல்பாகவே நிறைவேற்றுகிற மனபக்குவமுள்ளவர் களாக இருக்கிறார்கள். அந்தக் குடும்பத்தில் யார் எதைச் செய்ய

வேண்டுமென்ற போட்டியில்லை. குடும்பத்தில் தங்களுடைய பொறுப்புகளை தாங்களே புரிந்துகொண்டு நிறைவேற்றுகிறார்கள்.

அந்தக் குடும்பத்தின் அங்கத்தினர்களிடம் பொறுப்புணர்ச்சி (Sense of Responsibility) பழக்கமாக அவர்களில் படிந்து போய்விடுவதால், அவர்கள் பணியாற்றும் இடங்களிலும், சமுதாயத்திலும், நண்பர்களிடமும், உறவினர்களிடமும் பொறுப்புணர்ச்சியுடனிருக்கிறார்கள். அவர்கள் இயல்பாகவே நாட்டின் பொறுப்புள்ள பிரஜைகளாகவும், திருச்சபையின் பொறுப்புள்ள அங்கத்தினர்களாகவும் இருக்கிறார்கள்.

5. ஜெபம் (Prayer)

"ஜெபமில்லாத வீடு, கூரையில்லாத வீடு" என்பார்கள். ஜெபமே கிறிஸ்தவக் குடும்பத்தின் "பாதுகாப்பு அரண்" (Fort of Security).

ஜெபமே கிறிஸ்தவ வாழ்க்கையின் வெற்றி இகசியம். குடும்ப வாழ்க்கையின் வெற்றி இரகசியமும் இதுவே. ஜெபமே, வாழ்க்கையின் பிரச்சனைகளைத் (Trails of life) துணிவுடனும், நம்பிக்கையுடனும் எதிர்கொள்ள வலிமையளிக்கிறது.

"இணைந்து ஜெபிக்கும் குடும்பம் என்றும் ஒன்றாயிருக்கும்" (The Family that prays together stays together) என்பது ஆங்கிலத்தில் பிரபலமான வழக்குச்சொல்.

ஜெபிக்கின்ற குடும்பத்தின் உண்மையான தலைவர் கிறிஸ்துவே. கிறிஸ்துவின் பிரசன்னம் அக்குடும்பத்தில் இருப்பதால், தவறுகள் நடப்பது அரிது. தவறுகள் நடந்தாலும் மன்னிக்கும் மனப்பக்குவம் அனைவரிடத்திலும் இருக்கும்.

அந்தக் குடும்பம் ஆரோக்கியமாகவும், ஆனந்தமாகவும் இருக்கும்.

நிறைவுரை

பலர் வீட்டிற்கு வெளியே நல்லவர்கள்போலவும், ஒழுக்கமுள்ளவர்கள்போலவும், அன்புள்ளவர்கள்போலவும், பொறுப்புள்ளவர்கள் போலவும், ஜெப சிந்தையுள்ளவர்களபோலவும் நடித்துக்கொண்டிருப்பார்கள். ஆனால் அவர்களுடைய சுயரூபம் (வண்டவாளம்) வீட்டில் இருப்பவர்களுக்குத்தான் தெரியும்.

நீங்கள் வெளியுலகில் நியாயவாதியாகவும், நேர்மையுள்ளவராகவும் இருந்தால்மட்டும் போதாது, உங்கள் வீட்டிலுள்ளவர்களாலும் நீங்கள் உத்தமராக மதிக்கப்படவேண்டும் – உண்மையுள்ளவராக ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். "உத்தமமான வழியிலே விவேகமாய் நடப்பேன்; ....என் வீட்டிலே உத்தம இருதயத்தோடே நடந்துகொள்ளுவேன்" (சங்.101:2) என்று தாவீது அரசன் கூறுவது இதைத்தான்.

குடும்ப அங்கத்தினர்களிடையே அன்பும், நம்பிக்கையும், ஒழுக்கமும், இல்லையென்றால், அந்தக் குடும்பத்தில் தங்களுடைய கடமைகளை உணர்ந்து நிறைவேற்றுகிறவர்களைக் காண்பதரிது; அந்த குடும்பத்தில் சோகத்தையும், அவலத்தையும் தவிர்க்க இயலாது. அந்தக் குடும்பம் கிறிஸ்துவிலிருத்து தூரமாக இருக்கும்; அங்கு ஜெபமும் அரிதாக இருக்கும்.

மாறாக, குடும்ப அங்கத்தினர்கள் **தன்னலமற்ற அன்பு** நிறைந்த பாசப்பிணைப்பு உடையவர்களாகவும், **நம்பிக்கையையும், சுய–ஒழுக்கத்தையும்** தங்களுடைய வாழ்க்கையில் பழக்கமாக்கிக் கொண்டவர்களாகவும், தங்கள் கடமைகளை நிறைவேற்றுவதில் பொறுப்புணர்ச்சியுள்ளவர்களாகவும், இறைபக்தியால் நிறைந்த ஜெப சிந்தை உள்ளவர்களாகவும் இருந்தால், அக்குடும்பம் மகிழ்ச்சியான இல்லறத்தின் ஆதாரத்தை அடித்தளமாகக் கொண்டிருக்கிறது என்று பொருள்; அக்குடும்பத்தில் வாழும் அனைவரும் இவ்வுலகில் வெற்றியான இல்வாழ்க்கை வாழும் மகிழ்ச்சியான மனுமக்களாக இருப்பார்கள்.

மறவாதீர்கள்!

மகிழ்ச்சியான குடும்பத்தின் ஆதார வார்த்தைகள்:

அன்பு
நம்பிக்கை
சுய ஒழுக்கம்
பொறுப்பு
ஜெபம்
– ஆகியவைகளே.

13

ஆரோக்கியமான குடும்பத்திற்கு ஏழு வழிகள் (Seven Keys)

ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான் (1 தீமோத்தேயு 3:5).

திருமணம் ஆனபின் ஒவ்வொரு ஆணும், பெண்ணும் பலபடி களைத் (Stages) தங்கள் வாழ்நாட்களில் கடந்து செல்கிறார்கள்.

முதற்படி:
தன்னலம் துறத்தல் (Sharing and sacrificing).

திருமணத்திற்கு முன் உங்களின் நேரத்தை / சுதந்திரத்தை / உடமைகளைப் பகிர்ந்துகொள்வார் யாருமின்றி தனிக்காட்டு ராஜாவாக / ராணியாக வாழ்ந்திருப்பீர்கள். அதாவது நீங்கள் உங்களுக்காகவே வாழ்ந்திருப்பீர்கள். இப்பொழுது உங்கள் வாழ்க்கையைப் பகிர்ந்துகொள்ள வந்துள்ள புதிய வரவிற்காக / உறவிற்காக (மனைவிக்காக அல்லது கணவனுக்காக) வாழ முற்படுகிறீர்கள்.

இரண்டாம்படி:
மூன்றாம் நபர் பிரவேசம் (Invasion of third-person)

முதற் குழந்தை பிறந்தவுடனேயே உங்கள் வாழ்க்கைமுறை முற்றிலுமாக மாறிப்போய் விடுகிறது. பொறுப்புகளும், பிரச்சனை களும் தலைதூக்க ஆரம்பித்துவிடுகின்றன. உங்கள் வாழ்க்கையின் முக்கியத்துவம் வித்தியாசப்படுகிறது / அதிகமாகிறது. பிள்ளைகளின் நல்வாழ்விற்காக உங்கள் தேவைகளை தியாகம் செய்யத் தயாராகிறீர்கள்.

மூன்றாம்படி:
பொறுப்புகள் (Responsibilities)

குழந்தைகள் வளர்ந்து, தொட்டில் பருவம் தாண்டி, பள்ளிப் பருவம் வந்தவுடன் உங்கள் பொறுப்புக்கள் இன்னமும் அதிகமாகிறது; செலவுகள் அதிகமாகிறது; பிள்ளைகளின் மீது கவனமும் அதிகமாகிறது. பிள்ளகளை "அவையத்து முந்தியிருக்க" அனைத்தையும் செய்கிறீர்கள். இந்தக் காலக்கட்டத்தில் உங்கள் குடும்பம் ஆரோக்கியமான குடும்பமாக இல்லாவிட்டால் அது சிதைந்துபோகும் அபாயமுள்ளது.

நான்காம்படி:
உணர்ச்சிப்பெருக்குள்ள காலக்கட்டம் (Sensitive Phase)

நீங்கள் தூக்கிப் பாலூட்டி சீராட்டி வளர்த்த உங்கள் பிள்ளைகள் உங்கள் தலைக்குமேல் வளர்ந்து நிற்கிறார்கள். உங்கள் துணையை எதிர்பாராமல் வெளியே போய்வருகிறார்கள். அவர்கள் இருக்கும் பொழுது சண்டை, கலாட்டா, சத்தம், கலகலப்பு இல்லத்தை நிறைக்கிறது.

அவர்களுடைய படிப்புச் செலவு, ஆடைச் செலவுகள் எகிறுகிறது. ஆனாலும் அவர்கள் நன்கு படித்து உடையுடுத்தி வலம்வரும்பொழுது இனம்தெரியாத மகிழ்ச்சி / பெருமிதம் உங்கள் உள்ளத்தை நிறைக்கிறது.

பிள்ளைகளின் வாலிபப் பருவத்தில் அவர்களுக்கு உங்களின் கவனமான ஆலோசனை/ உதவி அதிகம் தேவை. இந்தக் காலத்தில் தான் அவர்கள் தனி மனிதனாக / மனுஷியாக (Individuals) உருவாகிறார்கள். உங்கள் குடும்பம் ஆரோக்கியமாக இல்லையென்றால் உறவுகள் உடைந்துபோகும் அபாயம் இந்த காலக் கட்டத்தில் உள்ளது.

ஐந்தாம்படி:
காலி வீடு (Empty Nest)

படிப்பதற்காகவும் வேலைக்காகவும் பிள்ளைகள் உங்களை விட்டுப் பிரிந்து செல்லும் காலம். அவர்கள் தங்களைத் தாங்களே கவனித்துக்கொண்டு வாழும் காலம். கலகலவென்றிருந்த இல்லம் காலியாக இருக்கிறது. ஆரம்பித்த இடத்திலேயே முடியும் வட்டம்போல குடும்ப வாழ்க்கையை ஆரம்பிக்கும்பொழுது தொடங்கிய இருவர்–உறவு (தம்பதியர்), மறுபடியும் இருநபர் உறவாகிறது.

தம்பதியர்கள் இருவரும் நல்ல நண்பர்களாக இல்லையென்றால் இந்தக் காலக்கட்டத்தைய வாழ்க்கை மிகவும் கடினமான பாதையாக இருக்கும்.

ஆறாம்படி:
பேரன் பேத்திகள் (Extension of Generation)

பிள்ளைகளின் பிள்ளைகளை காணும் பேறு பெற்றவர்களாகிறீர்கள். உங்கள் சந்ததி இவ்வுலகில் வளருவதைக்கண்டு பூரிக்கும் காலம். உங்கள் வாழ்க்கையின் வெற்றி தோல்விகளை அசைபோடும் காலம். இறையுடன் இணைய தயாராகும் அந்திமக்காலம். இந்த ஆறு காலக்கட்டங்களையும் சீராகக் கடந்துசெல்ல ஆரோக்கிமான குடும்பச் சூழல் தேவை.

ஆரோக்கிமான குடும்பத்தை உருவாக்கும் ஏழு வழிகள் (Seven Keys for a Healthy Family)

1. முதலாவது வழி: ஆண்டவரே அடிப்படை (Lord, the Foundation).

ஆரோக்கிமான குடும்பத்திற்கு ஆண்டவரே அடிப்படை என்ற இறை அடிப்படையில் குடும்பக் கட்டிடத்தைக் கட்டுங்கள் (He is to be your Master Architect). ஆண்டவர் கொடுத்துள்ள வரைபடத்தின்படியே (Blue Print) குடும்பத்தைக் கட்டுங்கள். ஆண்டவர் கொடுத்துள்ள வரைபடம் திருமறையே.

நான் (இயேசு) சொல்லிய இந்த வார்த்தைகளைக்கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். பெருவெள்ளம் சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதியும், அது விழவில்லை. ஏனென்றால், அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது – (மத்.7:24–25).

கர்த்தர் இல்லாத இல்லம், வேரற்ற மரம் (Tree without root) – சுக்கான் இல்லாத கப்பல் (Ship without rudder). வேரற்ற மரம் பலத்த காற்றைச் தாங்காது – விழுந்துவிடும். அதைப்போலவே சுக்கானில்லாத கப்பல், கடலில் திசைதெரியாமல் பயணம் செய்துகொண்டிருக்கும் – அலையடிக்கும் வழியே சென்று கொண்டிருக்கும் (Drifts at the mercy of the tides).

கர்த்தரை உங்கள் இல்லத்தின் தலைவராக ஏற்றுக்கொள்ளுங்கள். கர்த்தர் உடனிருந்தால் வாழ்க்கைக் கடலில் பயணிக்கும்பொழுது வீசும் புயலையும், ஆர்ப்பரித்தெழும் அலையையும் சமாளித்து இல்வாழ்க்கைப் பயணத்தை வெற்றியுடன் தொடரலாம்.

பவுலடியார் எபேசியருக்கு எழுதின கடிதத்திலே (5:1) கூறுவது போல, **"நீங்கள் கடவுளின் அன்பார்ந்த பிள்ளைகளாய், அவரைப்போல் ஆகுங்கள்"** (பொது மொழிபெயர்ப்பு)

இறைவன் அன்பாக இருக்கிறார். பிரதிபலன் எதிர்பாராத அன்பே இறையன்பு. அதுபோல குடும்ப அங்கத்தினர்களிடையே நிலவும்

அன்பு சுயநலமற்றதாகவும், பிரதிபலன் எதிர்பாராததாகவும் இருக்கவேண்டும். We are advised to imitate God. We need to act and react like God.

2. இரண்டாவது வழி:
ஒருவரையொருவர் கனம்பண்ணுங்கள்
(Honour one another).

குடும்பத்தில் ஒருவருக்கொருவர் மரியாதை கொடுங்கள். இதைத்தான் பவுலடியார் ஒருவருக்கொருவர் கீழ்ப்படியுங்கள் என்று கூறுகிறார்.

எபேசியர் 5:20–21– "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரித்து, தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்."

எபேசியர் **5:22–ல் "மனைவிகளே....... கீழ்ப்படிந்திருங்கள்"** என்பதால் மனைவி கணவனின் அடிமையல்ல. கீழ்ப்படிதல் என்றால் காலில் விழுவதல்ல. கணவனின் தலைமையை ஏற்றுக்கொள்ளுதல் என்று பொருள்.

குடும்பத்திலுள்ள பிற நபர்களின் சுயமரியாதையை மதியுங்கள். உங்கள் மனைவி / குழந்தைகள் என்பதால் அவர்களை எப்படி வேண்டுமானாலும் நடத்தலாம் என்று நினைக்காதீர்கள். அவர்கள் சமுதாயத்தில் மதிக்கப்படவேண்டியவர்கள். நீங்களே அவர்களை மரியாதையாக நடத்தவில்லையென்றால், மற்றவர்கள் அவர்களுக்கு மரியாதை கொடுக்கவேண்டும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?

3. மூன்றாவது வழி:
ஒழுக்கமும் உண்மையும் உள்ளவர்களாக இருங்கள்
(Be Loyal and Faithful to your spouse).

ஒழுக்கமுள்ளவர்களாக இருங்கள். கூடாநட்பு வேண்டவே வேண்டாம்.

'கற்புநெறியான வாழ்க்கை' என்பது பெண்ணுக்கு மட்டுமல்ல ஆணுக்குமுண்டு.

"உன் இளவயதின் மனைவியோடே மகிழ்ந்திரு. அவளே நேசிக்கபடத்தக்க பெண் மானும், அழகான வரையாடும் போலிருப்பாளாக .... அவளுடைய நேசத்தால் நீ எப்பொழுதும் மயங்கியிருப்பாயாக" (நீதிமொழிகள் 5:18,19).

பாரதியாரும்: **"ஆணெல்லாம் கற்பைவிட்டுத் தவறுசெய்தால், அப்போது பெண்மையுங் கற்பழிந்திடாதோ?"** என்று வினவுகிறார் **–(விடுதலைக் காதல் – பாரதியார்).**

தம்பதியர்களிடையே உறவு முறியும்பொழுதும், அன்பு தணியும் பொழுதும் துரோகம் தலை தூக்குகிறது. இல்லற வாழ்க்கையில் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தால் இறைவன் காட்டிய வழியைக் கனம்பண்ணுகிறீர்கள் (Leading the disciplined / faithful/ loyal life is the way to honour God).

4. **நான்காவது வழி:**
தம்பதியர் இருவரும் நல்ல நண்பர்களாக இருங்கள்
(Respect for your spouse as your best friend)

உங்கள் கணவனை / மனைவியை மகிழ்வியுங்கள். "அவனவன் தன்னிடத்தில் அன்புகூருவதுபோல, தன் மனைவியிடத்திலும் அன்புகூரக்கடவன். மனைவியும் புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கக்கடவள்" (எபே.5:33).

இல்லறவாழ்க்கையில் தம்பதியர்களிடையே சம்பாஷணை / தகவல்பரிமாற்றம் (Communication) மிகவும் முக்கியம். உறவு முறியும்பொழுதுதான் தகவல்பரிமாற்றம் அற்றுப்போகிறது.

தம்பதியர்களிடம் எவ்வளவு ஊடல்கள், கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் பேச்சுவார்த்தையை நிறுத்தாதீர்கள்; மௌனத்தை கணவனுக்கு / மனைவிக்கு எதிரான ஆயுதமாகப் பயன்படுத்தாதீர்கள் (Never use silence as the weapon to fight against your spouse).

பலக் குடும்பங்கள் உடைந்து போவதற்குக் காரணம், தம்பதியர்கள் மனம்விட்டுப் பேசாதுபோனதால்தான் என்பதை மறவாதீர்கள்.

மனம்விட்டுப் பேசுவது என்றால் வாயிலிருந்து வரும் வார்த்தைகள் மாத்திரமல்ல – நம்முடைய குரல், நம்முடைய முகபாவம், நம்முடைய உடலசைவுகள், நாம் சொல்லும் சொல்லில் நாம் கொடுக்கும் அழுத்தம் யாவும் சேர்ந்ததாகும் (Communication consists of more than words, voice, tone, facial expression, and body language, reinforce the emphasis we place on what we say - **Joyce Meyer**).

சிலவேளைகளில் அமைதியாக இருப்பதும் அவசியம். இருவரிலொருவர் கோபமாக இருந்தால், மற்றவர் அமைதிகாப்பது நல்லது. இருவரிலொருவர் களைப்பாக இருந்தால், மற்றவர் அமைதிகாப்பது நல்லது.

இருவரும் மனம்விட்டு உரையாடுவதற்குக் சரியான நேரத்தைத் தெரிவு செய்வதிலும் கவனம் தேவை (It is very important to choose the timing for good communication).

"மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும்; அதில் பிரியப்படுகிறவர்கள் அதின் கனியைப் புசிப்பார்கள்" (நீதி.18:21).

"தன் வாயையும் தன் நாவையும் காக்கிறவன்(ள்) தன் ஆத்துமாவை இடுக்கண்களுக்கு விலக்கிக் காக்கிறான்(ள்)" (நீதி.21:23).

5. ஐந்தாவது வழி:
நல்ல பெற்றோர்களாக இருங்கள் (Be a good parent).

· நல்ல பெற்றோர்களாக இருப்பது எப்படி?

i). ஆவியில் ஆனலுள்ளவர்களாக இருங்கள். ஆவிக்குரிய ஜீவியத்தில் குடும்பத்திலுள்ளவர்களுக்கு / குழந்தைகளுக்கு வழிகாட்டியாக / எடுத்துக்காட்டாக (Role-Models) இருங்கள்.

ii). உங்கள் நேரத்தைக் குடும்பத்தில் / குடும்பத்திற்காகச் செலவிடுங்கள் (Spend time with each other in the family).

iii). குழந்தைகளை வளர்ப்பதை இறைவனளித்த உற்சாகமான பணியாகக் கருதுங்கள் (Enjoy in rising your Children).

iv). உங்களுக்கு இறைவன் அருளியுள்ள குழந்தைகளைச் சரியாக வளர்க்கும் பணியில் இறைவனுக்குக் கணக்கு ஒப்புவிக்கவேண்டும் என்பதைக் கருத்தில்கொள்ளுங்கள்.

திருமறைக் கூறுகிறது: **"உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து, உயிரோடிருக்கும் நாளெல்லாம், நீயும் உன் குமாரனும் உன் குமாரத்தியும், நான் உனக்கு விதிக்கிற அவருடைய எல்லாக் கற்பனைகளையும் கட்டளைகளையும் கைக் கொள்ளுகிறதினாலே உன் வாழ்நாட்கள் நீடித்திருக்கும்படி ...... நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத் தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு பலத்தோடும் அன்பு கூறுவாயாக. இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது"** (உபா.6:1,5–6).

6. ஆறாவது வழி:
உங்கள் ஆழமான விசுவாசத்தை உங்கள் சந்ததிக்கும் விதைத்து விளைவிக்கச் செய்யுங்கள் (Have a strong faith in God and be willing to pass it on to your kids).

வீட்டில் குழந்தைகளுக்கு நல்ல ஆசிரியர்களாக இருங்கள். திருமறையைக் கற்றுக்கொடுங்கள். ஜெபிக்கக் கற்றுக்கொடுங்கள். உங்கள் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளுங்கள். உங்கள் பெற்றோர்கள் கற்றுக்கொடுத்தவைகளை உங்கள் பிள்ளைகளுக்குக் கொடுங்கள் (Pass on the Humorous stories your mother taught you).

நீங்கள் இறைவனுக்குக் கீழ்ப்படிகிறீர்கள் என்பது நல்லதுதான். ஆனால் உங்களுடைய எதிர்காலச் சந்ததியும் கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறவர்களாக இருக்கச் செய்வதும் உங்கள் கரத்தில்தான் இருக்கிறது. இஸ்ரவேலரின் ஆதிப்பிதா ஆபிரகாமுக்கு இறைவன் பல வாக்குத்தத்தங்களை அருளியிருந்தார். அவைகள் நிறைவேற வேண்டுமென்றால், அவனுடைய சந்ததியாரும் கர்த்தரின் கற்பனைகளைக் கைக்கொண்டொழுகவேண்டும் என்பதை ஆபிரகாம் அறிந்திருந்தான். ஒரு நல்ல தகப்பனாக ஆபிரகாம் நடப்பதைக் குறித்துக் கர்த்தரே சாட்சியிடும் அற்புத வார்த்தைகளைக் கருத்தூன்றிக் கவனியுங்கள்.

"கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னதை நிறைவேற்றும்படியாய் அவன் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின்வரும் தனது விட்டாருக்கும்: நீங்கள் நீதியையும் நியாயத்தையும் செய்து, கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை நான் அறிந்திருக்கிறேன் என்றார்" (ஆதி.18:19).

கர்த்தர் உங்களுக்கு அருளியுள்ள வாக்குத்தத்தங்கள் நிறைவேற, உங்களுடைய சந்ததியையும் கர்த்தருக்கு நேராய் வழிநடத்தித் திருமறையின் வார்த்தைகளின்படி நடக்கப் பிள்ளைகளைப் பயிற்றுவிக்கிற பெற்றோர்களாக இருங்கள்.

7. ஏழாவது வழி:
ஒருவரையொருவர் மன்னியுங்கள்
(Have the willingness to forgive and be forgiven).

ஒருவரையொருவர் மன்னிக்கவேண்டும்

ஏன் மன்னிக்கவேண்டும்?

யார் மேல் வெறுப்புக்கொண்டுள்ளார்களோ அவர்களைவிட, மன்னிக்க இயலா மனதுடன் வாழ்பவர்களே அதிகமாகத் தோற்றவர்களாக இருக்கிறார்கள் (A person who has an unforgiving spirit is always the real loser, much more so than the one against whom the grudge is held).

i). மன்னிக்க முடியாதவர்கள் இறந்த காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். கடந்த காலம், வருங்காலத்தை ஆள அனுமதிப்பது நல்லதல்ல (Don't let the past dictate the future).

ii). மன்னிக்க இயலாதவர்களின் உள்ளம் கசப்பால் நிறைந்திருக்கிறது. இத்தகைய உள்ளத்தைத் திருமறை 'கசப்பான வேர்' என்று கூறுகிறது (எபி.12:15).

iii). மன்னிக்கும் செயலில்தான், ஒருவிசுவாசி இறைவனின் செயலுக்கு நிகரான செயலைச் செய்கிறான். பிறரை

மன்னிப்பவனைத்தான் இறைவனும் மன்னிக்கிறார்; மன்னிக்காதவர்களை இறைவனும் மன்னிப்பதில்லை. (Forgiving others is not an obligatory Christian Quality, but a Mandatory Christian Quality).

iv). பிறரை மன்னிக்கும்பொழுது மனக்கசப்பு அகன்று போகிறது. பிரதிபலன் எதிர்நோக்கா இறையன்பை வெளிப்படுத்து கிறது. இத்தகையச் சிறப்புகளினால்தான், **"மகிழ்ச்சியான திருமணம் என்பது, மன்னிக்கும் இரு நல்லவர்களின் கூட்டுறவு"** என்று ராபர்ட் குயிலான் கூறுகிறார் (Robert Quillan said, "A happy marriage is the union of two good forgivers").

நிறைவுரை

ஒரு மனிதன், 'மோட்சமும் நரகமும் எப்படி இருக்கும்?' என்று பார்க்க ஆசைப்பட்டான்; இறைவனிடம் வேண்டினான். இறைவன் அவனுடைய வேண்டுதலுக்குச் செவிசாய்த்தார்.

ஒரு தேவதூதன், அந்த மனிதனை முதலாவது நரகத்திற்கு அழைத்துச் சென்று நரகத்தைக் காட்டினான்.

அங்கே, ஓர் அறையில் பெரிய சாப்பாட்டு மேஜை இருந்தது. அந்த மேஜையின் மேலே பலவகையான உணவுகள் இருந்தன. ஆனால், அவர்களால் அந்த உணவைச் சாப்பிட இயலவில்லை; எல்லோரும் அழுது கொண்டிருந்தார்கள். ஏனென்றால் அவர்களால் தங்களுடைய முழங்கைகளை மடக்கமுடியவில்லை.

கையில் உணவை எடுத்து வாயின் அருகில் கொண்டுசெல்ல இயலவில்லை. ஆகையால், அனைவரும் உணவருந்த இயலாமல் கண்ணீர் சிந்திக்கொண்டிருந்தார்கள்.

அடுத்தபடியாக தேவதூதன் அந்த மனிதனை மோட்சத்திற்கு அழைத்துச் சென்றான். அங்கேயும் நரகத்தில் இருந்தது போலவே பெரிய சாப்பாட்டு மேஜையும் உணவுவகைகளும் இருந்தன.

அங்கிருத்தவர்களாலும் தங்களுடைய முழங்கைகளை மடக்க முடியவில்லை. ஆனாலும் அவர்கள் அனைவரும் பசியாறி – சிரித்து மகிழ்ந்துகொண்டிருந்தார்கள்.

இது எப்படிச் சாத்தியமானது?

முழங்கையை மடக்க இயலாததால், தங்களுக்குத் தாங்களே சாப்பிமுடியாதுதான்; ஆனால், ஒருவர் மற்றவருக்குக் கையை மடக்காமலே ஊட்டலாமல்லவா?

ஒருவர் மற்றவருக்கு ஊட்ட, மற்றவர் அடுத்தவருக்கு ஊட்ட அனைவருமாக ஒருவர் பிறருக்கு ஊட்டி எல்லோரும் உண்டு திருப்தியாகி மகிழ்ந்திருந்தார்கள்.

இந்த இரகசியத்தைக் கற்றுக்கொண்டு – இல்லத்திலும் அதையே கைக்கொண்டால், அந்த வீடு மோட்சமாக இருக்கு மல்லவா?

இல்லறம் நல்லறமாகத் திகழுமல்லவா?

ஒவ்வொருவரும் குடும்பத்திலுள்ள மற்றவர்கள்மீது பாசம் கொண்டிருப்பதும் – தங்களுக்குள் பணிவிடை புரிவதும் – உதவுதும்தான் மகிழ்ச்சியான இல்லறம்.

இப்படிப்பட்ட குடும்பத்தில் வாழ்பவர்கள் மோட்சத்தின் இனிமையை முன்ருசிப்பார்கள் – மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டான குடும்பமாக இருப்பார்கள் (A witnessing family is foretaste of Heaven).

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த தியோடர் ரூஸ்வெல்ட் கூறுகிறார் –

"மானுட வாழ்க்கையின் வெற்றி – ஒரு நாட்டின் ஜனாதிபதி யாகவோ, மிகப்பெரிய செல்வந்தராகவோ, படிப்பாளியாகவோ, எழுத்தாளராகவோ அல்லது வேறு உயர்நிலைகளில் இருப் பதில் இல்லை. எந்தப் பெற்றோர்கள் தங்கள் கடமைகளைச் (Parental Duties) சிறப்புறச் செய்ததினால், அவர்களுடைய குழந்தைகளும், பேரக்குழந்தைகளும் உயர்வடைந்து ஆசீர் வதிக்கப்பட்டவர்களாக இருக்கிறார்களோ அவர்களே உண்மையில் வாழ்க்கையில் வெற்றிபெற்றவர்கள்."

நீங்கள் இல்லற வாழ்க்கையில் வெற்றிபெற்றிருக்கிறீர்களா?

உங்கள் குடும்பம் ஆரோக்கியமான குடும்பமா?

நல்ல இல்லங்கள் தற்செயலாக ஏற்படுவதில்லை. எந்த ஒரு நல்ல உறவும் வலுப்பெறவேண்டுமென்றால், அதற்காக திட்டமிடத்தான் வேண்டும், உழைக்கத்தான்வேண்டும் (Good family relationship is not an accident. If you desire to have a healthy family relationship, you have to work it out).

சாதாரணமாகக் குடும்பத்தில் கடைப்பிடிக்க வேண்டிய 12 ஒழுங்குகள்

1. எதையாவது திறந்தால், மூடுங்கள் (கதவு)
2. திருகித் திறந்தால்; அடையுங்கள் (குழாய்)
3. பூட்டைத் திறந்தால்; மறுபடி பூட்டுங்கள்.
4. எதையாவது உடைத்தால், ஒப்புக்கொள்ளுங்கள்.
5. சரிசெய்ய இயலாவிட்டால்; சரியான நபரை அழைத்துச் சரிசெய்யுங்கள்
6. இரவலாக வாங்கினால்; திருப்பிக்கொடுங்கள்.
7. விலையுள்ளதாகக் கருதினால்; கவனமாகக்கையாளுங்கள்.
8. அழுக்காக்கினால்; சுத்தப்படுத்துங்கள்.
9. நகர்த்தினால், இருந்த இடத்தில் மறுபடி வையுங்கள்.
10. வேறொவருடைய பொருளாக இருந்தால், அனுமதி பெறுங்கள்.
11. எதையாவது கையாளத் தெரியாதென்றால்; சும்மாயிருங்கள்.
12. சம்பந்தமில்லாத விஷயமாக இருந்தால்; கேள்விகள் கேட்காதீர்கள்.

14

குடும்ப உறவை முறிக்கும் அபாயங்கள்

கர்த்தர் உனக்கும், உன் இளவயதின் மனைவிக்கும் சாட்சியாயிருக்கிறார் (மல்கியா 2:14).

பல எதிர்பார்ப்புகளுடன் இல்லறத்தில் இணையும் தம்பதியர்களில் சிலர், சில நாட்களிலோ, சில மாதங்களிலோ அல்லது சில ஆண்டுகளிலோ விவாகரத்துப் பெற்று பிரியும் அவலநிலைக்கு ஆளாகிறார்கள். போன தலைமுறையில் விவாகரத்துக்கள் அபூர்வமாக நிகழ்ந்தன. தற்போது விவாகரத்துக்கள் அதிகரித்து வருகின்றன.

குழந்தைகள் இல்லாத தம்பதியர்கள் மட்டுமல்ல, குழந்தைகள் பெற்ற தம்பதியர்கள்கூட இந்த அவலநிலைக்கு ஆளாகிறார்கள்; ஆனால் குழந்தைகளுள்ள தம்பதியர்கள் பிரிந்துசெல்லும் விகிதாச்சாரம் குறைவு, அவ்வளவுதான்.

தம்பதியர் இருவரையும் கட்டிப்போடும் பாசக்கயிறாகக் குழந்தைகள் இருக்கின்றனர். மனைவிக்குக் கணவனையோ, கணவனுக்கு மனைவியையோ பிடிக்காவிட்டால்கூட குழந்தைகளின் எதிர்கால நலன் கருதி ஒருவரை மற்றவர் சகித்துக்கொண்டு, ஒரே கூரையின் கீழ் வாழும் அன்னியர்களாக வாழ்நாட்களை நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள். சில சமயங்களில் இந்த நாட்களில் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு, ஒருவரையொருவர் மன்னித்து சரியான தடத்தில் செல்லும் தம்பதியர்களாக மாறிவிடும் மகிழ்ச்சியான அனுபவங்களும் நிகழ்வதுண்டு.

குழந்தையுள்ள தம்பதியர்கள், விவாகரத்துப் பெறும்பொழுது, தங்கள் குழந்தைகள் யார் வசம் இருப்பது என்பதற்காக நீதிமன்றப் படிக்கட்டுகளில் பரிதாபமாக ஏறிக்கொண்டிருக்கிறார்கள்.

சென்னையிலுள்ள குடும்ப நல நீதிமன்றங்களில் மட்டும் 6000 வழக்குகளுக்குமேல் நிலுவையிலுள்ளன (Pending). ஒரு நாளைக்கு ஏறத்தாழ 30 விவாகரத்து வழக்குகளுக்குமேல் பதிவாகிக் கொண்டிருக்கின்றன. வருங்காலங்களில் இந்த எண்ணிக்கை அதிகரிக்கவே வாய்ப்புள்ளது.

இந்த வழக்குகளில் கிறிஸ்தவர்களுடைய எண்ணிக்கையும் கணிசமாக இருப்பது அதிர்ச்சியாகவும் – கவலையளிப்பதாகவும் இருக்கிறது. விவாகரத்து எண்ணிக்கையேற்றம் புதிதாக உருவாகிக் கொண்டிருக்கும் சமுதாயப் பிரச்சனையாக அரசு கருதுகிறது.

இந்தப் பிரச்சனை கிறிஸ்தவ திருச்சபைக்கும் இக்கட்டான நிலையை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது. ஏன் இந்த அவலநிலை? விவாகரத்தைக் குறித்துத் திருமறை என்ன சொல்லுகிறது?

விவாகரத்தைக்குறித்து திருமறை

நற்செய்தி நூல்களில் பரிசேயர்களுக்கும் இயேசுவிற்கும் நடந்த உரையாடலொன்று பதிவுசெய்யப்பட்டுள்ளது (மத்.19:1–12; மாற்.10:2–9).

இயேசுவிடம், "புருஷனானவன் தனது மனைவியைத் தள்ளி விடுகிறது நியாயமா?" என்று பரிசேயர்கள் கேட்டார்கள்.

இயேசு, "மோசே உங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறது என்ன?" என்று கேட்டார்.

பரிசேயர்கள், "தள்ளுதற் சீட்டை எழுதிக்கொடுத்து அவளைத் தள்ளிவிடலாமென்று மோசே உத்தரவுகொடுத்திருக்கிறார்" என்றார்கள். (பரிசேயர்கள் குறிப்பிடும் கட்டளை உபாகமம் 24:1–4–ல் உள்ளது), மோசே இந்தக் கட்டளையை ஏன் கொடுத்தார் என்று இயேசு விளக்கமளிக்கிறார்:

"உங்களுடைய இருதயக் கடினத்தினிமித்தம் (மோசே) இந்தக் கட்டளையை உங்களுக்கு எழுதிக்கொடுத்தான். ஆகிலும் ஆதியிலே மனுஷரைச் சிருஷ்டித்து, தேவன் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார். இதினிமித்தம், புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான். அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள்; இவ்விதமாய் அவர்கள் இருவராய் இராமல் ஒரே மாம்சமாயிருப்பார்கள். ஆகையால், **தேவன் இணைத்ததை மனஷன் பிரிக்காதிருக்கக்கடவன்.**"

இந்த உரையாடலை நோக்குங்கால், விவாகரத்தை இயேசு அனுமதிக்கவில்லை என்பது தெற்றனெத் தெரிகிறது.

"தள்ளிவிடுதலை நான் வெறுக்கிறேன்" (God hates divorce) (மல்.2:16) என்று திருமறை திட்டவட்டமாகக் கூறுகிறது. **"ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாதிருங்கள்"** (1 கொரி.7:5) என்று பவுலடியார் கூறுகிறார்.

இங்கிலாந்து நாட்டில் எதிர்கட்சித் தலைவராகவும், நாவன்மையில் புகழ்பெற்றவராகவும் இருந்த பென்ஜமின் டெய்சரலி, **"பொதுவாழ்க்கையில் சாதிக்கும் எந்த சாதனையும் (வெற்றியும்), இல்லற வாழ்க்கையின் தோல்வியை ஈடுசெய்ய இயலாது"** என்று இயம்புகிறார் (No success in public life can compensate for failure in the home — **Benjamin Disraeli**).

ஆகையால்தான் பவுலடியார், சொந்த வீட்டைச் சரியாகச் நிர்வகிக்காதவனுக்கு, திருச்சபைப் பதவிகளுக்குத் தகுதியில்லை என்றுரைக்கிறார் (1 தீமோ.2:5).

திருமண பந்தங்கள் தோல்வியுறுவதற்கும், குடும்பங்கள் உடைந்து சிதறுவதற்கும் பெரும்பாலான காரணங்கள் என்ன?

பெரும்பாலான தம்பதியர்கள் திருமணத்தில் மகிழ்ச்சியாகத் தான் இணைகிறார்கள்; திருமணத்தால் இணைந்த இருவரும் சேர்ந்து வாழ ஆரம்பித்த பின்னர்தான் பிச்சனைகள் தலை தூக்குகின்றன.

திருமணத்தைக் குறித்து ஹேரி எமர்சன் போஃஸ்டிக் என்பவர் இப்படிக் கூறுகிறார்: **"திருமணங்கள் தோற்பதில்லை, (திருமணத்தில் இணைந்த) மனிதர்கள்தான் தோற்கிறார்கள்"** (It is not marriage that fails, it is people that fail – ***Harry Emerson Fosdick***).

1. பணப் பிரச்சனைகள்

குடும்ப உறவுகள் உடைவதற்கு முதல் காரணம் பணம். உறவுகள் முறிந்த குடும்பங்களைக் (Broken Families) கவனித்துப் பார்த்தால், அவைகளில் பெரும்பாலனவைகள் ஏதோ ஒருவிதத்தில் எழுந்த பணப் பிரச்சனையினால் உடைந்த குடும்பங்களாக இருக்கின்றன. குடும்ப வாழ்க்கைக்குப் பணம் அவசியந்தான்; ஆனால் ஆசை பேராசையாக மாறும்பொழுது பிரச்சனைகளும் உடன் எழுகின்றன.

பணம் தன்னில்தானே பாவமானதல்ல; பணத்தைக் குறித்த உங்களுடைய அணுகுமுறையில்தான் (Attitude towards money) நன்மையும், தீமையும் விளைகின்றன. பணம் ஈட்டுவது பாவமல்ல; ஆனால், பணத்தை எப்படிச் சம்பாதிக்கிறீர்கள் என்பதுதான் இங்கே காரியம். எப்படி வேண்டுமென்றாலும் பணம் ஈட்டலாம் என்ற கருத்து தவறானது.

பவுலடியார் "பணம் தீமையானது" என்று கூறவில்லை; **"பண ஆசையே எல்லாத் தீமைக்கும் வேர்"** (1 தீமோ.6:10) என்றுதான் கூறுகிறார். இந்த வசனத்திற்கு இரண்டு வசனத்திற்கு முன்னால், **"உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கடவோம்"** (1 தீமோ.6:8) என்று அறிவுரை கூறுகிறார். ஆனால், உள்ளதில் திருப்தியடையும் குடும்பங்கள் உலகில் அரிதாயிருக்கின்றன.

பணப்பிரச்சனை ஏற்படுவதற்குக் காரணங்கள்:

i. குடும்பம் நடத்தப் போதுமான வருமானம் இல்லாததால் ஏற்படும் பணப்பற்றாக்குறை,

ii. வருமானத்திற்குள் செலவு செய்யாமல், வரம்பிற்கு மீறிய செலவுகள் செய்வதால் ஏற்படும் பணப்பற்றாக்குறை.

iii. திருமணத்திற்கு முன்பு வாக்களித்துக் கொடுக்கத் தவறியதால் எழும் பணத் தகராறுகள்

iv. பெண்வீட்டார் வாக்களித்தபடிக் கொடுத்தபிறகும், தொடர்ந்து கொடுத்துக்கொண்டே இருக்கவேண்டுமென்ற எதிர்பார்ப்பு.

v. வெளி ஆடம்பரத்திற்கும், பொய்யான அந்தஸ்திற்கும் அனாவசியச் செலவு செய்வதால் ஏற்படும் பணப்பற்றாக் குறைகள்.

vi. தவறான செலவுகளினால் ஏற்பட்ட பற்றாக்குறையை ஈடுகட்ட கடன் வாங்கிக் "கடன் வலையில்" (Debt Trap) மாட்டிக்கொள்ளும் பரிதாபம்.

vii. பணம் சேர்க்கும் ஆசையால், தவறான அல்லது பாவமான காரியங்களில் ஈடுபட்டு சிக்கலில் மாட்டிக்கொண்டு தவிப்பது.

சிலவேளைகளில் நியாயமான செலவீனங்களினாலும் பணப்பற்றாக்குறை எழலாம்.

i. பிள்ளைகளுக்காகும் கல்விச் செலவினால் ஏற்படும் பணபற்றாக்குறை.

ii. குடும்பத்தில் யாருக்காவது வரும் நோய் அல்லது விபத்துக்களால் ஏற்படும் எதிர்பாராத செலவுகள்.

iii. உறவினர்கள் வீட்டில் நடக்கும் நன்மை—தீமைகளுக்குச் செய்யவேண்டிய செலவினங்கள்; மாமனாக, மைத்துனனாக, அண்ணனாக, தம்பியாக, நண்பனாகச் செய்யவேண்டிய சமுதாயக் கடமைகளுக்கு ஆகும் செலவுகள்.

அளவுக்கு மீறி, கட்டுப்பாடற்று எழும் பொருளாசைகள் மனிதர்களின் வாழ்க்கையை எப்படிச் சீர்குலைக்கும் என்று பவுலடியார் எச்சரிக்கிறார். பண ஆசையினால் பலர் "சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள்" (1 தீமோ.6:9) என்றுரைக்கிறார்; தொடர்ந்து, "தேவனுடைய மனுஷனே இவைகளைவிட்டோடு" (1 தீமோ.6:11) என்று அறிவுறுத்துகிறார்.

2. தாம்பத்திய உறவில் பிரச்சனைகள்

இல்லற வாழ்க்கையில் தாம்பத்திய உறவு இன்றியமையாதது. இந்த உலகில், மற்ற உயிரினங்கள், இனப்பெருக்கத்திற்கு மட்டுமே பாலுறவு கொள்கின்றன. ஆனால், மனிதர்கள் இனப்பெருக்கத்திற்காக மட்டுமல்ல, தம்பதிகள் தங்களுக்குள்ள பரஸ்பர அன்பையும், நேசத்தையும், பாசத்தையும் வெளிப்படுத்தவும் – பகிர்ந்து கொள்ளவும் தாம்பத்திய உறவுகொள்கிறார்கள். மேலும், விலங்குகளைப்போலன்றி, மனிதர்கள் தங்களுடைய பாலுறவின்மூலமாக, தங்களிடையே அன்பை வெளிப்படுத்துவதுடன் இறைச் சாயலைப் பெற்ற மனிதக் குழந்தைகளை இவ்வுலகில் பிறப்பிக்கிறார்கள்.

தாம்பத்திய உறவு தவறு என்று திருமறை எவ்விடத்திலும் கூறவில்லை. ஏனென்றால் அந்த உறவை ஏற்படுத்தியவரே இறைவன்தான்.

"நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்புங்கள்" (ஆதி.1:28) என்றுதான் ஆதாம்–ஏவாளுக்குக் கர்த்தர் ஆணையிட்டார்.

"உன் இளம் வயது மனைவியோடே மகிழ்ந்திரு" (நீதி.5:18) என்றுதான் திருமறை அறிவுறுத்துகிறது.

பாலுறவு இறைவன் அருளியுள்ள ஈவாகும். **"இல்லற வாழ்க்கையில் தாம்பத்திய உறவை உதாசீனம் செய்தால், எல்லாவிதமான பிரச்சனைகளும் எழும்"** என்று டி. ஜேம்ஸ் கென்னடி கூறுகிறார் (When sex is neglected in a marriage, all kinds of problems can develop. - D. James Kennedy in his book 'The Secret to a Happy Home').

தாம்பத்திய உறவில் வில்லங்கம் எழுந்தால் இல்லற வாழ்க்கையில் விரிசல் ஏற்படுவதைத் தவிர்ப்பது கடினமாக இருக்கும்.

தாம்பத்திய உறவில் பிரச்சனைகள் எழுவதற்குக் காரணங்கள்:

i. இருவரிலொருவர் பாலுறவு கொள்ள இயலாத நிலையிலிருப்பதை மறைத்து திருமணம் செய்துகொள்வது (Impotent).

ii. தாம்பத்திய உறவிற்கு ஆபத்தான AIDS, STD, Cancer, TB, Leprosy போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டிருப்பது.

iii. இருவரிலொருவர் மனநலமற்றவராகவோ அல்லது விசித்திரமான நடத்தையுள்ளவராகவோ (Eccentric Behaviour) இருத்தல்; ஆபாசமான உறவிற்குக் கட்டாயப்படுத்துதல்.

iv. தாம்பத்திய உறவு (அது திருமண உறவிற்குள்ளாக இருந்தாலும்) அருவருப்பானது என்று கருதும் தவறான கண்ணோட்டம் (Thinking sex is dirty or wrong).

v. தாம்பத்திய உறவைக் கருவியாகப் பயன்படுத்தி, ஒருவர் மற்றவரை அடிமைப்படுத்த எத்தனிப்பது (Using sex to make the other one a slave).

vi. இருவரிலொருவர் தாம்பத்திய உறவை விரும்பும்பொழுது மற்றவர் மறுப்பது (Refusing sex).

vii. இருவரிலொருவர் வேற்று நபரிடம் தவறான உறவு கொள்வது (Extra-marital affairs - sex outside marriage).

திருமறை இவைகளுக்கு என்ன கூறுகிறது?

மேலேயுள்ள முதல் மூன்று காரணங்களால் **(i. Impotent, ii. Diseases and iii. Eccentric)** இல்லற பந்தத்திலிருந்து விலகுவதைத் தவிர்ப்பதற்கில்லை. இப்படிப்பட்டவர்கள் திருமணத்தைத் தவிர்ப்பதுதான் சரியான அணுகுமுறையாக இருக்கும். தனக்குள்ள பலவீனத்தை மறைத்து, குற்றமற்ற மற்றவரைத் திருமணம் செய்து தண்டிப்பது எந்த வகையில் நியாயம்?

மற்றபடி, திருமண பந்தத்திற்குள்ளான தாம்பத்திய உறவு சரியானது, முறையானது, நியாயமானது, பரிசுத்தமானது. **"விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாக மஞ்சம் அசுசிப் படாததாயும் இருப்பதாக"** (எபி.13:4) என்று திருமறை கூறுகிறது.

பாலுறவு உணர்வும் மற்ற உணர்வுகளைப்போல மனிதர்களுக்குள்ள உணர்வுதான். முறையின்றி கோபப்படுவது எப்படித் தவறோ, அதுபோல முறையற்ற பாலுறவும் தவறானது.

திருமண பந்தத்திற்குள் நுழையும் வரைக்கும், பாலுறவு உணர்வை, **"அடைக்கப்பட்ட தோட்டமாகவும், மறைவு கட்டப்பட்ட நீரூற்றாகவும், முத்தரிக்கப்பட்ட கிணறாகவும்"** (உன்.4:12) கருதவேண்டும் – பாதுகாப்புடன் இருக்கவேண்டும்.

திருமணமான பின்னர், தாம்பத்திய உறவில் ஒருவர் விரும்பும் பொழுது மற்றவர் மறுப்பது அல்லது வெறுப்பது பாவமாகும். இந்தக் கருத்தைத் திருமறையில் பவுலடியார் வெளியரங்கமாகவே விவரிக்கிறார்.

"வேசித்தனம் இராதபடிக்கு அவனவன் தன் சொந்த மனைவியையும், அவளவள் சொந்த புருஷனையும் உடையவர்களாயிருக்கவேண்டும். புருஷன் தனது மனைவிக்குச் செய்ய வேண்டிய (தாம்பத்திய) கடமையைச் செய்யக்கடவன். அப்படியே மனைவியும் தன் புருஷனுக்குச் (தாம்பத்திய கடமையைச்) செய்யக்கடவள். மனைவியானவள் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல, புருஷனே அதற்கு அதிகாரி; அப்படியே புருஷனும் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல. மனைவியே அதற்கு அதிகாரி" (1 கொரி.7:2–4).

இந்த ஒரு விதியை இல்லற வாழ்க்கையில் அமுல்படுத்தினாலே, பல திருமணங்கள் மணமுறிவிலிருந்து தப்பிக்கும். பலர் தங்களுடைய வடிகாலுக்குத் தவறான உறவுகளில் தஞ்சமடைய மாட்டார்கள்.

தாம்பத்திய உறவில் திருப்தியுள்ள தம்பதியர்களிடையே எழும் கருத்துவேறுபாடுகளைக் களைவது பெரும்பாலும் கடினமானதாக இராது.

3. மது / போதைப் பழக்கங்கள்

ஆங்கிலத்தில், பிரபலமான பழமொழியொன்று உண்டு - "Alcohol Destroys Internally, Externally, and Eternally." அதன் பொருள் "மது, உள்ளேயும், புறம்பேயும், நிரந்தரமாக அழித்துவிடுகிறது" என்பதாகும்.

மதுப்பழக்கத்தால் அல்லது போதைப் பழக்கத்தால் ஏற்படும் தீமைகள் யாவை?

i. குடி அல்லது போதைப் பழக்கத்தால் பணம் விரயமாகிறது; அதனால் குடும்பச் செலவில் பற்றாக்குறை எழுகிறது.

ii. உங்கள் பிள்ளைகள் முன்னால் ஒரு முன்மாதிரியான வாழ்க்கையை வாழத் தவறுகிறீர்கள்.

iii. உங்கள் மனைவிக்கு ஒரு நல்ல கணவனாக இருக்கும் கடமையிலிருந்து தவறுகிறீர்கள்; (மனைவியின் உடலிலும் உள்ளத்திலும் காயப்படுத்துதல்; மனைவியைக் கொடுமைப் படுத்துதல்).

iv. சமுதாய அந்தஸ்து குறைகிறது; சமுதாயத்தின் ஏளனத் திற்கு உங்களுடன், உங்கள் குடும்பமும் இலக்காகிறது.

v. உடல் நலம் கெடுகிறது; அதனால் தேவையற்ற வைத்தியச் செலவுகள் ஏற்படுகின்றன.

vi. இந்தப் பூமியில் உங்கள் ஆயுசு நாட்கள் குறையும்; காலம் வருமுன்னரே கல்லறைக்கு விரைந்து சென்றுவிடும் நிலை ஏற்பட்டுவிடும்.

vii. உங்களுடைய ஆவிக்குரிய ஜீவியம் கறைப்பட்டு, இறையுடன் உங்களுடைய உறவு முறிகிறது; அல்லது கேள்விக் குறியாகிறது.

பல குடும்பங்கள் பிரிவதற்கு கணவனின் குடிப்பழக்கம் அல்லது போதைப்பழக்கம் காரணமாக இருக்கிறது. இன்றைய நாட்களில், நகர்ப்புறங்களில் வாழும் அநேக பெண்கள் மதுப்பழக்கத்திற்கும், போதைப்பழக்கத்திற்கும் அடிமையாகியிருப்பது அதிர்ச்சியளிப்பதாக இருக்கிறது. மதுவிற்கோ, போதைக்கோ அடிமைப்பட்ட

கணவனுடனோ அல்லது மனைவியுடனோ குடும்பம் நடத்துவது சுலபமான காரியமல்ல. குடி அல்லது போதைப் பழக்கத்திலிருந்து விடுபட உரிய மனநல மருத்துவர்களை அணுகி வைத்தியம் செய்து கொள்வது அவசியம்.

4. மன முதிர்ச்சியின்மை (Immaturity)

குடும்ப முறிவுகளுக்கு மனமுதிர்ச்சியின்மையும் சிலவேளை களில் காரணமாக இருக்கிறது. குடும்ப வாழ்க்கைக்கு உடல் வளர்ச்சிமட்டும் போதாது, உள்ளமும் வளர்ச்சியடையவேண்டும்.

இந்தியத் திருமணசட்டப்படி, திருமணம் செய்வதற்கு ஆணுக்கு 21 வயதும் பெண்ணிற்கு 18 வயதும் முடிந்திருக்கவேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் இந்தியச் சட்டப்படி திருமணத்திற்குத் தகுதியுள்ளர்களாகிறார்கள். ஆனால் இல்லறத்தில் இணையும் பலர், சட்டப்படி மணமுடிக்கத் தகுதியுள்ளவர்களானாலும், மனதளவில் முதிர்ச்சியின்றி இருக்கிறார்கள்.

"எது நல்லது? எது கெட்டது? எது சரி? எது தவறு?" என்று அறிய இயலாத முதிர்ச்சியற்ற மனநிலையைக் கடந்து செல்லும் காலகட்டத்திலுள்ளவர்களால் எந்த முடிவையும் எடுக்க இயலாது.

சிலவேளைகளில் மனந்தடுமாறி அவசரகதியில் தவறான முடிவுகளை எடுத்துவிட்டு, பின்னால் தவற்றை உணர்ந்தாலும் நேர்செய்ய வழியின்றி வாழ்க்கையை இழந்து தவிப்பவர்களின் எண்ணிக்கை எத்தனை எத்தனை!

ஒரு குறிப்பிட்ட வயதுவரை பொம்மைகளை வைத்து விளையாடுவது ஆனந்தமாக இருக்கும். சில நாட்களுக்குப் பின்பு அது தேவையற்ற பொருளாகிவிடுகிறது. முதிர்ச்சியற்ற மன நிலையுடன் திருமண பந்தத்தில் இணைபவர்கள், இல்லற வாழ்க்கையின் முக்கியத்துவத்தை அறியாமல், விளையாட்டுப் பொம்மையைப் புறக்கணிப்பதுபோல தங்களுடைய வாழ்க்கை யையும், மனநிம்மதியையும் தொலைத்துப் போடுகிறார்கள்.

சந்தேகம் என்பது ஒருவிதமான மனநோய்; சந்தேகம் மன முதிர்ச்சியின்மையினால் எழுவதுதான். மனைவியின் ஒழுக்கத்தில் கணவனும், கணவனின் ஒழுக்கத்தில் மனைவியும் சந்தேகப்படுதல் இல்லற வாழ்க்கையைப் பாழாக்கிவிடும். சந்தேகப்படும்படியான சூழல் எழுந்தால் ஆற–அமரப் பேசித் தெளிவுபெறவேண்டும்.

5. சின்னத்திரை – பெரியதிரைக் கனவுகள்

வீட்டிலுள்ள தொலைக் காட்சி பெட்டிகளும், திரையரங்குகளும் நாட்டின் கலச்சாரத்தையும், சமுதாய சிந்தனைகளையும், குடும்ப உறவுகளையும் தீர்மானிக்கும் எத்தனங்களாக மாறிப்போய் விட்டிருக்கின்றன. இன்றய இளைஞர் சமுதாயம், சின்ன/பெரிய திரை மாயைகளில் சிக்குண்டு கிடக்கிறார்கள்; நடிகர்–நடிகைகளை முன்மாதிரியாகவும், வழிகாட்டியாகவும் ஏற்றுக்கொள்ளும்

கலாச்சாரம் பெருகியுள்ளது.

வக்கிரமான செய்திகளைக் கொடுக்கும் கதைகள் மெகா–சீரியல்களாகவும், திரைப்படங்களாகவும் வெளிவந்து இன்றைய சமுதாயத்தின் வாழ்க்கைக் கண்ணோட்டத்தைத் தவறான பாதைக்குத் திசைதிருப்புகின்றன. பெரும்பாலான குடும்பங்கள் மெகா–சீரியல்களில் காலத்தைத் தொலைத்துக்கொண்டிருப்பதோடு, அந்தக் கதாபாத்திரங்களைப்போல வாழத் தலைப்படுகிறார்கள்.

திரைப்படத் துறையின் மறுபெயரே "கனவுத் தொழிற்சாலை" என்பதுதான். அது கனவுலகம்; கனவை நனவென நம்பி ஏமாறும் கூட்டத்தில் அகப்பட்டவர்களின் நிலை பரிதாபமானதே.

நிழலை நிஜமென நம்பி, தங்களுடைய வாழ்க்கைத் துணையை நடிகர், நடிகர்களுடன் ஒப்பிட்டு, தங்களுடைய குடும்ப வாழ்க்கையையும், தனிவாழ்க்கையும் சிதைத்துக்கொள்வோரின் எண்ணிக்கை அனுதினமும் நீண்டுகொண்டேபோகிறது.

6. புகுந்த வீட்டு உறவுகள் (In-Laws)

"கூட்டுக் குடும்ப வாழ்க்கை" (Joint Family) என்பது இந்தியாவின் கலாச்சார அடையாளம். இன்றைய நாட்களில், சமுதாய – பொருளாதார – அறிவியல் மாற்றங்களினால் தனிக்குடித்தனங்கள் பெருகி வருகின்றன. சிலவேளைகளில், மாமன் மாமியார், மைத்துனர்கள், நாத்தனார்கள், ஓரகத்திகளுடன் வாழும் நிலை ஒரு பெண்ணுக்கு எழலாம்; அதனால் உறவுகளில் பிரச்சனைகள் எழுந்து, கணவன்–மனைவி உறவில் விரிசல்கள் விழலாம்.

திருமறை, **"புருஷன் தன் தகப்பனையும், தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருக்க"** வேண்டுமென்று (ஆதி.2:24) கற்பிக்கிறது. அதேபோல் மனைவியும், தன் தகப்பனையும் தாயையும்விட்டு, தன் கணவனோடே இசைந்திருக்கவேண்டும்.

ஒருவேளை, கூட்டுக் குடும்பத்தில் தவிர்க்க இயலாது இருக்க நேர்ந்தால், அவ்வப்பொழுது தம்பதியர்கள் இருவரும் தனித்திருந்து தங்களுடைய பிரச்சனைகளுக்குத் தீர்வுகாணவேண்டும். கூடுமான வரை, தங்களுடைய அந்தரங்கங்களில், தம்பதிகள் இருவரைத்தவிர பிறர் தலையிடுவதை அனுமதிக்காதிருப்பது நலம்.

புகுந்த வீட்டு உறவுகளால் மனைவிக்கும், மனைவியின் உறவுகளால் கணவனுக்கும் பிரச்சனைகள் எழலாம்; சில பிரச்சனைகள் தீர்க்க இயலாத அளவிற்கு பெரிதாவும் இருக்கலாம். பிரச்சனை எதுவானாலும், மணமுறிவு தீர்வல்ல.

தம்பதியர்கள் இருவரிடையேயும் பரஸ்பர அன்பு நிலவினால், பிரச்சனைகளுக்கு மத்தியிலும் இல்லறப்படகை சீராகச் செலுத்தலாம்.

7. பொறுப்பின்மை

திருமணத்திற்கு முன்னர் வேலைவெட்டியின்றியோ, பொறுப்பின்றியோ, தான்தோன்றித்தனமாகவோ அல்லது ஒழுக்கமில்லாமலோ இருக்கும் இளைஞன், திருமணமான பிறகு திருந்தி விடுவான் என்று எதிர்பார்ப்பது அறிவீனம்.

அதுபோலவே, சோம்பேறியாவும், செலவாளியாகவும், ஆடம்பரப்பிரியையாகவும் உள்ள பெண் திருமணத்திற்குப் பின்னர் தனதுபோக்கை மாற்றிக்கொள்வாள் என்று கருதுவதும் தவறான கணிப்பாகும். இப்படிப்பட்டவர்கள், வாழ்க்கை முழுவதும் தாங்கள் கடைப்பிடித்து வந்த பழக்கத்தைத் திடீரென்று மாற்றிக்கொள்வது அரிதிலும் அரிதே; திருந்திவிடுவான்/ திருந்திக்கொள்வாள் என்ற எதிர்பார்ப்புக்களுடன் மணமுடிக்கும் கணவனுக்கு / மனைவிக்குப் பெரும்பாலும் ஏமாற்றமே மிஞ்சும்.

இந்த மணமுறிவைத் தவிர்ப்பது எப்படி?

இப்படிப்பட்ட நபர்களை முதலிலேயே மணமுடிக்காமல் இருப்பதுதான் மணமுறிவைத் தவிர்க்கும் சிறந்த வழி.

8. நேர் எதிர்மறையான வாழ்க்கைக் கண்ணோட்டங்கள்

“இன்னா நாற்பது” என்ற தமிழ் பாடல், **“உடம்பாடு இலாத மனைவிதோள் இன்னா”** என்றுரைக்கிறது. அதாவது, ‘மனமொத்துப்போகாத அல்லது ஒருவருக்கொருவர் உடன்பாடு இல்லாத மனைவியுடன் இல்வாழ்க்கை நடத்துவது துன்பமாக இருக்கும்’ என்பதே இதன் பொருள்.

“இரண்டுபேர் ஒருமனப்பட்டிருந்தாலொழிய ஒருமித்து நடந்துபோவார்களோ?” (ஆமோ.3:3) என்று திருமறை வினவுகிறது.

மதுரை ரயில்வே பிளாட்பாரத்தில், ஏற்கனவே அறிமுகமான இருவர் சந்தித்துக்கொண்டனர். பரஸ்பர விசாரிப்புகளுக்குப் பிறகு இருவரில் ஒருவர், “சரி இருவரும் ஒரே ரயில் பெட்டியில் ஒன்றாகச் செல்லாம்” என்று கூறினார்

அடுத்தவர், “சாரி, நீங்கள் என்னுடன் வர முடியாது” என்று கூறினார்.

முதலாமவர் ஏமாற்றத்துடனும், ஆச்சரியத்துடனும், “ஏன் வர முடியாது?” என்று வினவினார்.

அடுத்தவர், “நான் நாகர்கோவிலுக்குச் சென்றுகொண்டிருக்கிறேன். நீங்கள் சென்னைக்குச் சென்றுகொண்டிருக்கிறீர்கள். உங்கள் ரயில் வேறு என்னுடைய ரயில் வேறு, நீங்கள் போகும் திசை வேறு, நான் போகும் திசை வேறு. அதனால்தான் நீங்கள் என்னுடன் வர முடியாது என்று கூறினேன்” என்றார்.

அதைப்போலதான் இல்லறமும். வெவ்வேறு நோக்கங்கள் அல்லது இலட்சியங்கள் உள்ள ஆணும் பெண்ணும் இல்லறத்தில் இணைந்து செல்ல முடியாது. வாழ்க்கையில் இருவருடைய இலக்கும் (Goal) ஒன்றாக இருக்கவேண்டும். பயணிக்கும் பாதையும் ஒன்றாக இருப்பது அவசியம். யாராவதொருவர் தனது நோக்கத்தை விட்டுவிட்டு மற்றவருடன் இணைந்து பயணிக்க ஆயத்தமாயிருந்தால்தான் இல்லறத்தில் வெற்றி கிட்டும்.

இரு காளைகள் இணைந்து வண்டியை இழுத்துச் செல்லுவது போல, வாழ்க்கை என்னும் வண்டியை கணவனும் மனைவியும் கருத்தொருமித்து இழுத்துச் செல்லவேண்டும்.

வண்டியின் நுகத்தில் மாட்டப்பட்ட மாடுகள் இரண்டும் வேறு–வேறு பாதைகளில் இழுத்தால் நிலையென்ன?

வண்டி குடைசாயும்.

திருமணத்தினால் இல்லற உறவில் இணைந்த இருவரும் வெவ்றுவேறு திசையில் இழுத்தால் என்னவாகுமென்று சொல்லவும் வேண்டுமோ?

ஆகையால்தான், "அந்நிய நுகத்தடியில் அவிசுவாசிகளுடன் இணைக்கப்படாதிருப்பீர்களாக" (2 கொரி.6:14) என்று பவுலடியார் எழுதுகிறார்.

இவ்வுலகில் இல்லற வாழ்க்கை என்பது ஒரு பயணம். பயணம் இனிதாக இருக்கவேண்டுமென்றால், உங்களுடைய வாழ்க்கைத் துணை, உங்களுடைய நலனில் அக்கறைகொண்ட இனிய நண்பனாக (நண்பியாக) இருக்கவேண்டும்.

நிறையுரை

"சிறந்த மணவாழ்க்கை என்பது 'குறைவற்ற தம்பதியர்கள்' ஒன்றாக இணைவதல்ல. குறைவுள்ள தம்பதியர்கள் தங்களுடைய வேற்றுமையிலும் இணைந்து மகிழ்ந்திருக்கக் கற்றுக்கொள்வதாகும்" என்று தேவ் மேயர் கூறுகிறார் (A great marriageis not the perfect couple comes together. It is when an imperfect couple learns to enjoy their differences - ***Dave Meyer***).

திருமணங்களெல்லாம் மகிழ்ச்சியாகத்தான் நடைபெறுகின்றன; அதற்குப்பிறகு தம்பதியர்களாகச் சேர்ந்து வாழும் பொழுதுதான் சிரமங்கள் எழுகின்றன (All marriages are happy. It's living together afterwards that is difficult). அந்தச் சிரமங்களை மேற்கொண்டு இல்லறத்தைத் தொடர்ந்தால்தான் இல்லறம் இனிமையான அனுபவமாக இருக்கும்; வாழ்க்கை இனிக்கும்.

வெவ்வேறு பின்னணியத்திலிருந்து வந்த இரு நபர்களிடையே, இருவேறு கருத்துக்கள் இருப்பது அதிசயமல்ல. அக்கருத்துக்கள் முரண்பாட்டுடன் இருந்தாலும், அந்த முரண்பாட்டிலும் உடன் பாட்டுடன் இணைந்து வாழவேண்டும்; அதுதான் வாழ்க்கை; விலகி யோடுவது விவேகமல்ல.

குறைகளுள்ளவர்களோடு வாழ்வதுதான் வாழ்க்கை. ஏனென்றால் நிறைவுள்ளவர்களாக (இயேசுவைத் தவிர) யாரும் இவ்வுலகில் பிறந்ததில்லை; இனியும் யாரும் பிறக்கப்போவது மில்லை.

எனவேதான், ஔவையார், "குற்றம் பார்க்கிற் சுற்றமில்லை" (கொன்றைவேந்தன்) என்று கூறுகிறார்.

குறைகளை மறந்துவிடுங்கள்.
நிறைவை ரசியுங்கள்;
அப்பொழுதுதான் வாழ்க்கை இனிக்கும்.

15

குடும்ப உறவை முறியாமல் காக்கும் உபாயங்கள்

அவனவன் தன்னிடத்தில் அன்புகூருவதுபோல, தன் மனைவியினிடத்திலும் அன்புகூரக்கடவன்; மனைவியும் புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கக்கடவள் (எபே.5:33).

கணவன் மனைவியிடத்தில் அன்பாக இருப்பதும், மனைவி கணவனிடத்தில் பணிவுடனிருப்பதும் இல்லற வாழ்க்கையின் கடமை மட்டுமல்ல, அது கர்த்தர் அருளிய கட்டளையாகும்.

திருமண பந்தத்தினால் இணைந்த ஆணும் பெண்ணும், மரணம் பிரிக்கும் வரை இணந்திருக்கவேண்டியது அவர்கள் இருவரிடையே உருவான ஒப்பந்தம் (Agreement) மட்டுமல்ல, அது அவர்கள் இருவரும் இறைச் சன்னிதியில், இறைவனைச் சாட்சியாக வைத்துச் செய்துகொண்ட வாக்குத்தத்தமுமாகும் (Commitment).

இல்லற முறிவைத் தவிர்க்க என்னென்ன செய்யலாம்?

இல்லற முறிவைத்தவிர்க்க

1. இறையச்சத்துடன் இருங்கள்

இறைவன் அன்பானவர்தான். அதற்காக எந்தத் தவறு செய்தாலும் அல்லது எந்தப் பாவம் செய்தாலும் கண்டுகொள்ள மாட்டார் என்று ஏமாறவேண்டாம்.

இறைவன் 'பட்சிக்கிற அக்கினியுமாகவும்' (எபி.12:29) இருக்கிறார். பாவத்தில் உழன்றுகொண்டிருந்தால், பகைவனான சாத்தானை வீட்டிலும் உள்ளத்திலும் உறைய (வசிக்க) வைத்துள்ளீர்கள் என்றுதான் பொருள்.

"கர்த்தருக்குப் பயப்படுதல் ஞானத்தின் ஆரம்பம்" (நீதி.1:7). 'மெய்ஞானத்தைக் காத்துக்கொள்ளுகிறவன், பயமின்றி அவன் வழியில் நடப்பான், அவனுடைய கால்கள் இடறாது' (நீதி.3:21,23).

எப்படிப்பட்ட துணையாக (கணவன்/மனைவி) இருந்தாலும், அவர்களை ஆவிக்குரிய ஜீவியத்தில் பற்றுடன் வழிநடக்கச் செய்தால், அவர்களிலே பெரும் மாற்றங்கள் விளைவதைக் கண்கூடாகக் காணலாம்.

அசிசி பட்டணத்துப் புனிதர் பிரான்ஸிஸ் கூறுவதைக் கேளுங்கள்: **"எந்த வீட்டில் இறையச்சம் நிலவுகிறதோ, அவ்வீட்டிற்குள் பகைவன் நுழைவதற்குப் பாதை கிடையாது"** (Where there is fear of God to keep the house, the enemy can find no way to enter. - **St. Francis of Assisi**).

இறைவனிடம் பயத்துடன் இருக்கும் குடும்பங்கள் பெரும்பாலும் தடமாறிச் செல்லுவதில்லை.

2. கிடைத்தற்கரிய போக்கிஷம் என்று கருதுங்கள்

திருமறை, **"விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளது"** (எபி.13:4) என்று கூறுகிறது. இல்லற வாழ்க்கை மிகவும் போற்றி மதிக்கப்படவேண்டிய ஒன்றாகும்; அதன் விலை விலையேறப் பெற்றது; அது கிடைத்தற்கரிய போக்கிஷமாகப் பாதுகாக்கப்பட வேண்டியதாகும் ("We need to esteem marriage as worthy, precious, of a great price and especially dear" - Joyce Mayer in her Book "Help Me I'am married").

இல்லறத்தில்தான் ஒரு ஆணோ—பெண்ணோ முழுமையான வாழ்க்கை வாழ்ந்த நிறைவை எய்த இயலும். மானுடம் மகிழ்ச்சியாக இருக்கவும், மனம் அமைதியுறவும், தங்களுடைய சந்ததியை தங்களுக்குப்பின் விட்டுச்செல்லவும் இறைவனே இல்லற வாழ்க்கையை நிறுவியுள்ளார்.

இல்லற வாழ்க்கை தோல்வியைச் சந்தித்தால், தோல்விக்குக் காரணம் இறைவன் தோற்றுவித்த இல்லறத்திலுள்ள குறையில்லை; மாறாக இல்லறத்தில் இணைந்தவர்களுடைய தவறான எதிர் பார்ப்பினாலும், தவறான புரிந்து கொள்ளுதலினாலும் ஏற்பட்ட விபத்து என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். எனவே, குறைகளைக் கண்டு, களைந்து, இல்லற உறவைச் சீர்செய்ய ஆவன செய்தல் வேண்டும்.

3. வாக்குத்தத்தத்தை நினைவுகூறுங்கள்

மணநாளில் இறை சன்னதியில் இருவரும் கூறிய வாக்குத்தத் தங்களை அவ்வப்போது மனதில்கொண்டுவாருங்கள். அந்த வாக்குத்தத்தங்களைக் காப்பதில் இருவரும் பொறுப்புடன் நடந்து கொண்டிருக்கிறீர்களா?

கிறிஸ்து திருச்சபையை நேசிப்பதுபோன்று, கணவன் மனைவி யிடம் அன்பு செலுத்தவேண்டும். அப்படியே மனைவியும் தன்னலம் அகற்றிக் கணவனின் தலைமைக்கு மதிப்பளித்து — அவனுடைய

ஆளுகைக்குத் தன்னை ஒப்படைத்து, இருவரும் தங்கள் தங்கள் வாக்குத்தங்களை இணைந்து நிறைவேற்றி வாழும் வாழ்க்கையில் கிடைக்கும் பேரின்ப உறவிற்கு இணையான உறவு இவ்வுலகில் வேறில்லை.

இந்தக் கடமையிலிருந்து இருவரில் ஒருவர் விலகினாலும் அதலபாதாளத்தில்தான் விழவேண்டும். வெற்றியான இல்லற வாழ்க்கைக்குக் கணவன் – மனைவி இருவருக்குமே பொறுப்புண்டு என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

யாக்கோபு நம்முடைய பிரச்சனைகளின் பிறப்பிடத்தைப் படம்பிடித்துக் காட்டுகிறார்; **“உங்களுக்குள்ளே யுத்தங்களும், சண்டைகளும் எதினாலே வருகிறது? உங்கள் அவயவங்களில் போர் செய்கிற இச்சை களினாலல்லவா?”** (யாக்.4:1) என்று வினவுகிறார்.

ஆண்டவராகிய இயேசு இன்னமும் எளிமையாக்கூறுகிறார்: **”மற்றவர்கள் உங்களுக்கு எவைகளைச் செய்யவேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்”** (மத்.7:12).

பல இல்லற முறிவுகளுக்கு தன்னலமும் (Selfishness), தன்முனைப்புமே (Ego) காரணிகளாக இருக்கின்றன. **‘தெய்வ பயத்தோடே ஒருவரையொருவர் உயர்வாக மதித்து** (Reverence) **வாழ்ந்தால்’** (எபே.5:21), அந்த இல்லறத்தில் முறிவுமில்லை, பகையுமில்லை. அந்தக் குடும்பம் இவ்வுலகில் கிறிஸ்துவின் ஆசிபெற்ற சாட்சியான குடும்பமாக இருக்கும்.

4. தன் முனைப்பை அகற்றுங்கள் (Get rid of Ego)

“வைராக்கியமும், விரோதமும் எங்கே உண்டோ, அங்கே கலகமும் சகல துர்ச்செய்கைகளுமுண்டு” (யாக்.3:12) என்று திருமறை போதிக்கிறது.

இல்லற உறவில் இணைந்த ஆணும் பெண்ணும் **‘நான், எனது, எனக்கு”** என்ற சுயநலத்தைக் முதலாவது கைவிடவேண்டும். இல்லற வாழ்க்கையில் ‘இருவரும் ஒருவரே’ என்பதுதான் இரகசியம். கணவன் மனைவி இருவரும் வேலைக்குச் சென்றால், இருவருடைய வருமானமும் குடும்பத்திற்குப் பொதுவானது. நான் சம்பாதிப்பதால் ‘என் இஷ்டத்திற்குச் செலவு செய்வேன்’ என்று ஒருவரும் கூறமுடியாது.

சிலவேளைகளில் மனைவி அதிக சம்பளம் வாங்கினால் அல்லது அதிகம் படித்திருந்தால் கணவனுக்குத் ‘தாழ்வு மனப்பான்மை’ (Inferiority Complex) வரலாம்; அல்லது மனைவிக்கு ‘உயர்வு மனப்பான்மை’ (Supiriority Complex) ஏற்படலாம். இரண்டுமே இல்லற வாழ்க்கையில் கண்டிப்பாக அகற்றப்படவேண்டியதொன்று.

அதைப்போலவே, பணக்காரக் குடும்பம், படித்த குடும்பம், நாகரீமான குடும்பம், செல்வாக்கான குடும்பம் என்ற இறுமாப் பினாலும் 'தன்முனைப்பு' எழலாம். காரணம் எதுவானலும், கணவன் மனைவிக்கிடையே 'தன்முனைப்பு" தவறான விளைவுகளை ஏற்படுத்தும்.

உலகப் புகழ்பெற்ற ஸ்காட்லாந்து நாட்டின் வரலாற்று ஆசிரியர் தாமஸ் கார்லைல், "**நமது அனைத்துத் தவறுகளுக்கும் – துன்பங் களுக்கும் ஒட்டுமொத்த பிறப்பிடம் 'தான்' என்ற 'தன்முனைப்பு'** தான் (அகம்பாவம்) என்று கூறுகிறார் (Egotism is the source and summary of all faults and miseries – *Thomas Carlyle*).

விட்டுக்கொடுத்து வாழ்ந்தவர்கள் என்றும்–எங்கும் கெட்டுப்போனதில்லை; கெட்டுப்போனவர்கள் எதையும்– எங்கும் விட்டுக்கொடுத்து வாழாதவர்களே. 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு, ஒற்றுமை நீங்கிடில் இருவர்க்கும் தாழ்வு' – என்பதை மறவாதீர்கள். கணவன்–மனைவி இருவருமே தன்முனைப்பை (Ego) அகற்றி, இறைவன் கிருபையாக அருளியுள்ள இல்லற வாழ்வை ஒற்றுமையாய் - இன்பமாய் அனுபவியுங்களேன்.

மண உறவை விலக்க –
திருமறை அனுமதிக்கும் ஒரே காரணம்

ஒரேயொரு காரணத்திற்காக மட்டும், திருமண உறவை முறிக்கவும், மறுமணம் முடிக்கவும் திருமறை அனுமதியளிக்கிறது. அது 'கூடா ஒழுக்கம்' (Adultry). கூடா ஒழுக்கமுள்ள மனைவியைத் தள்ளிவிடத் (Divorce) திருமறை அனுமதியளிக்கிறது (மத்.5:32; 19:9; மாற்.10:12).

இந்த விதி (Rule) கூடா ஒழுக்கமுள்ள ஆணுக்கும் பொருந்தும். கற்பு என்பது பெண்ணிற்கு மட்டுமல்ல, ஆணிற்கும் உண்டு. கற்புநெறியை இருபாலாரும் கடைப்பிடித்தொழுகவேண்டுமென்பதே தமிழ்ச் சமுதாயத்தின் கோட்பாடு.

"தன்மனை யாளைத் தனிமனை இருத்திப்
பிறர்மனைக் கேகும் பேதையும் பதரே" (வெற்றிவேற்கை).

(பொருள்: தன் மனைவியைத் தனியே தவிக்கவிட்டுவிட்டு, பிற பெண்டிரோடு உறவுகொள்ள விழையும் காமுகன் நெற்பதருக்கு ஒப்பாவான்).

**"தன்மனை யாளைத் தாய்மனைக் அகற்றிப்
பின்புஅவளைப் பேணாப்பேதையும் பதரே" (வெற்றிவேற்கை)**

(பொருள் தன்னுடைய மனைவியை முறையான காரணமின்றி பிறந்த வீட்டிற்குத் துரத்தி அவளை வாழாவெட்டியாக்கும் கணவனும் பதருக்கு ஒப்பானவனே).

தமிழ்ச் சமுதாயத்தில், **"ஒருவனுக்கு ஒருத்தி – ஒருத்திக்கு ஒருவன்"** என்பதையே சமூகநீதியாகத் தொன்றுதொட்டு

இன்றளவும் கடைப்பிடிக்கப்பட்டு வருவதைத் தமிழ் இலக்கியங்களிலும், தமிழர்களின் நடைமுறை வாழ்க்கையிலும் காணலாம்.

திருமறை கற்பிக்கும் நீதியும் இதுவேதான். பலதார மணத்திற்கு இறைவன் அனுமதிக்கவேவில்லை. Charles Hostetter தன்னுடைய "How to Build a Happy Home" என்ற நூலில் **"God made a pair, not a harem"** என்று கூறுகிறார். அதன் பொருள்: "இறைவன் ஒரு ஜோடியைத்தான் படைத்தார், அந்தப்புரத்தையல்ல" என்பதாகும்.

ஆதாமைப் படைத்த இறைவன் அவனுக்குத் துணையாக (ஒரு) ஏவாளை மட்டுமே படைத்தார்; ஏவாள்களைப் (Eves) படைக்கவில்லை. பெண்ணுக்குத் துணையாக ஆதாமை மட்டுமே படைத்தார் ஆதாம்களைப் (Adams) படைக்கவில்லை.

கற்புநெறி பெண்ணுக்கும் உண்டு, ஆணுக்கும் உண்டு.

"கற்புநிலை யென்று சொல்ல வந்தார் – இரு
கட்சிக்கும் அஃதைப் பொதுவில் வைப்போம்"

– என்கிறார் பாரதியார் (பெண்கள் விடுதலைக் கும்மி).

அவர் கூறும் கூற்று முற்றிலும் சரிதானே!

நிறையுரை

ஆணானாலும்சரி, பெண்ணானாலும்சரி, யாரும் இந்த உலகில் முழுமையானவர்கள் அல்ல (No human being on this earth is perfect).

மனிதன் குறைவுள்ளவன்; கணவனும் மனிதன்தானே. ஆகையால் கணவனும் குறையுள்ளவன்தான், அதைப்போலவே மனைவியும் குறையுள்ளவள்தான்.

தன் கணவன் அனைத்து நற்குணங்களையும் கொண்டவராக இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கும் மனைவி ஏமாற்றமடைவாள். அதைப்போலவே, தன் மனைவி எல்லா நற்குணங்களையும் உடையவளாக இருக்கவேண்டுமென்று எதிர்பார்க்கும் கணவனும் அதிர்ச்சியடைவான்.

இக்கருத்தைத் திருவள்ளுவரும் அழகுபட இயம்புகிறார்.

குணம்நாடிக் குற்றமும்நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல் – (குறள் 504)

(பொருள்: ஒருவருடைய குணம்–குற்றங்களை நன்கு ஆராய்ந்துபார்த்து, அவற்றுள் எது மிகுதியாக உள்ளதோ – எந்தத் தன்மை சிறப்பாக விளங்குகிறதோ, அதையே சிறப்பாகக்கொள்ள வேண்டும்).

ஆணானாலும் சரி, பெண்ணானாலும் சரி தனது துணையைச் சரியான காரணமின்றி விவாகரத்துச் செய்ய நினைப்பது விவேகமற்ற காரியம்.

விவாகரத்து என்பது தனது சரீரத்திலுள்ள உறுப்பை இழப்பதற்கு ஒப்பாகும்; நீங்கள் உயிர் வாழ்வீர்கள், ஆனால் ஏதோ ஒன்றை இழந்துவிட்டது போன்ற உணர்வு உங்கள் வாழ்க்கை முழுவதும் நீடிக்கும் (A **divorce** is like an amputation; you survive, but there is less of you). விவாகரத்து என்பது உங்களிடமிருந்து பிரிய விருக்கும் உங்கள் வாழ்க்கைத் துணையை மட்டுமல்ல, உங்களையும் சேர்த்தே பலிவாங்கும் – பழிவாங்கும் மறந்துபோகாதீர்கள்.

விவாகரத்து செய்வது தவிர்க்கப்படவேண்டும்; தவிர்க்க இயலாத நிலையில், விவாகரத்து என்னும் ஆயுதத்தை வெகு அரிதாகவே பயன்படுத்தவேண்டும்.

பிரச்சனைகள் கைமீறிவிட்டதுபோன்று தோன்றினால் ஜெபியுங்கள்; முடிந்தால் கணவன் மனைவி இருவரும் இணைந்து ஜெபியுங்கள். இணைந்து ஜெபிக்கும் குடும்பம் என்றும் உடைந்து போக ஆண்டவர் அனுமதிப்பதில்லை (A family that prays together stays).

ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர் பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்தது போல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். இவை எல்லா வற்றின்மேலும், பூரண சற்குணத்தின் கூட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள்" – (கொலோ.3:13–14).

தவறான கருத்துக்களை மனதைவிட்டு அகற்றுங்கள்;
ஒருவரையொருவர் நேசியுங்கள்.
ஒருவரையொருவர் மதியுங்கள்;
ஒருவரையொருவர் மன்னியுங்கள்;
ஒருவரையொருவர் புரிந்துகொள்ளுங்கள்.

"மன்னிப்பே வெற்றி பெறும் எல்லா உறவிலுமுள்ள பிரதான விஷயமாக இருக்கிறது" (Forgiveness is the core ingredient to every successful relationship –Joyce Meyer).

மன்னிப்பதே தெய்வீகம். கணவன்–மனைவி உறவிலும் 'மன்னிப்பே' இல்வாழ்க்கை–வெற்றிக்குப் பிரதானமாக இருக்கிறது.

ஒருவரையொருவர் புரிந்துகொண்டு வாழுங்கள். **"ஒருவரை யொருவர் மன்னிப்பதுமட்டுமல்ல, ஒருவரையொருவர் புரிந்து கொள்வதும் ஒருவகையான அன்புதான்"** என்பதை மறவாதீர்கள்.

ஒன்றாய்– வளமாய் வாழுங்கள்;
நன்றாய் – நலமாய் வாழுங்கள்.

16

வாழ்க்கையின் நோக்கமென்ன?

**ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள்
சோதனையிலும், கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும்
அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான
பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள் (1 தீமோத்தேயு 6:9).**

இங்கிலாந்து பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில், பிரதமராக இருந்த காலத்தில், தொலைக்காட்சிப் (Television) பெட்டிகளெல்லாம் கிடையாது.

ஒரு நாள் சர்ச்சில் பிபிசி வானொலியில் (BBC Radio), நேரடி ஒலிபரப்பில் பேசுவற்காகச் செல்லவேண்டியதிருந்தது. அந்தப் பகுதியிலிருந்த ஒரு வாடகைக் காரில் (Taxi) வானொலி நிலையத்திற்குச் சென்றார். ஓட்டுநருக்கு (Taxi Driver) பிரதமர் சர்ச்சிலை அடையாளம் தெரியவில்லை.

வானொலி நிலையத்தை அடைந்தவுடன் ஓட்டுநரிடம், "நான் திரும்பி வரும்வரைக்கும் காத்திருக்கமுடியுமா?" என்று சர்ச்சில் கேட்டார்

"ஐயா என்னால் காத்திருக்க இயலாது; நான் அவசரமாக வீட்டிற்குச் சென்றுகொண்டிருக்கிறேன்; இன்று நம்நாட்டுப் பிரதமர் சர்ச்சில் வானொலியில் பேசுகிறார்; அதைக் கேட்க வேண்டும்" என்று ஓட்டுநர் கூறினான்.

சர்ச்சிலுக்கு மிகுந்த மகிழ்ச்சி. தன்னுடைய பேச்சைக் கேட்பதற்கு நாட்டுமக்கள் இவ்வளவு ஆவலுடன் இருக்கிறார்களே என்று எண்ணிப் பெருமிதம்கொண்டார். அகமகிழ்வுற்ற சர்ச்சில் அந்த ஓட்டுநரிடம், வாடகைக் காரின் கட்டணம் போக 'பத்து ஷில்லிங்' பணத்தைக் கொடுத்து, "இனாமாக வைத்துகொள்" என்று கூறினார்.

அவ்வளவுதான்! பணத்தை வாங்கிய ஓட்டுநர் பரவசமடைந்து, "ஐயா, நீங்கள் உங்கள் வேலை முடித்துவிட்டு சவகாசமா வாருங்கள்; நான் காத்திருக்கிறேன்" என்றான்.

"அப்படியானால் பிரதமர் பேசுவதைக் கேட்கச்செல்ல வில்லையா?" என்றார் சர்ச்சில்.

"பிரதமராவது– ஒன்றாவது! என்ன பெரிதாய்ப் பேசிவிடப் போகிறார். நீங்கள் உங்கள் வேலையை முடித்துவிட்டு வாருங்கள் சார்; நான் காத்திருந்து உங்களை எங்குவேண்டு மானாலும் கூட்டிச்செல்லுகிறேன்" என்று கூறினான்.

பணத்தைப் பார்த்தவுடன், திடீரென்று திசைமாறிய ஓட்டுநரின் வார்த்தைகளால் சர்ச்சில் அதிர்ச்சியாகிவிட்டார்.

பணம் வலிமைமிக்க சாதனம். பணம் யாரையும் தடுமாறச் செய்யும்; அல்லது விழச்செய்யும். பணத்தின் வலிமையை யாரும் எளிதாகக் கருதிவிட முடியாது.

ஆகையால்தான், தமிழில் பணத்தைக் குறித்த பல பழமொழிகள் வழக்கில் உள்ளன.

"இல்லானை இல்லாளும் வேண்டாள்; பெற்ற தாயும் வேண்டாள்."

"அருளில்லார்க்கு அவ்வுலகமில்லை, பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை"

"பணம் பந்தியிலே, குணம் குப்பையிலே"

"பணம் பத்தும் செய்யும்."

"பணமென்றால் பிணமும் வாய்திறக்கும்"

"பணம் பாதாளம்வரை பாயும்".

நல்லவேளை 'பணம் மோட்சம்வரை பாயும்' என்று சொல்ல வில்லை.

தமிழ் மூதாட்டி ஔவையார்,

"கல்லானே யானாலும் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாருஞ் சென்றங்கு எதிர்கொள்வர்" –என்றுரைக்கிறார்.

(பொருள்: மூடனாக இருந்தாலும், கையில் பணமிருந்தால் அவனை உலகில் எதிர்க்கொண்டு வரவேற்கிறார்கள்).

ஆகையால் இவ்வுலகில் மதிப்பும், மரியாதையும், அந்தஸ்தும் பெறுவதற்குப் பணம் தேவைதான். ஆனால், பணம்–மட்டுமே வாழ்க்கையில்லை. வாழ்க்கை என்பது அதற்கும் மேலே.

பணம் சம்பாதிக்கும் வெறி

வாழ்க்கையில் நாம் சந்திக்கும் பலர், பணம் சம்பாதிக்கும் வெறியில், நிற்க நேரமின்றி, இளைப்பாற அவகாசமின்றி ஓடிக் கொண்டே இருக்கின்றார்கள்.

குடும்பத்தாரிடம் பேசுவதற்குக்கூட இவர்களுக்கு நேரம் கிடைப்பதில்லை. "I am too busy; I have no time" என்று பறந்துகொண்டேயிருப்பார்கள். இவர்களை வீட்டில் பார்ப்பது மிகவும் அரிது.

பொருளீட்டுவதில் தவறொன்றுமில்லை. 'பணப்பசி' கலாச்சாரத் தாலான (Money-hungry-culture) இன்றைய உலகில், ஒரு மனிதனின் மதிப்பு அவனிடமுள்ள காசினால் அளவிடப்படுகிறது.

சமுதாயத்தில், உங்களிடமுள்ள உடைமை – சொத்து–பணம் தான், உங்களுக்கும், உங்கள் குடும்பத்திற்கும் கிடைக்கும் மரியாதையின் அளவுகோலாயிருக்கிறது (The money you possess is the measure of your respect in the society).

ஒருவனிடமுள்ள அசையும் அசையா சொத்துக்களின் (Movable and immovable properties) மதிப்பிற்கேற்ப சமுதாய அந்தஸ்து, ஏற்ற – இறக்கம் பெறுகிறது. இதுதான் இன்றய உலகின் அவலநிலை.

இப்படி கொஞ்சம் யோசியுங்கள்:

சமுதாயத்தில் நல்ல அந்தஸ்திலுள்ள ஒரு மனிதர் ஏதோ ஒரு காரணத்தினால், அவருடைய வியாபாரமோ அல்லது தொழிலோ நொடிந்துப்போய் தன்னுடைய சொத்துக்களை இழக்கும்படி நேரிட்டால், அம்மனிதரின் நிலை என்ன?

நோய்வாய்ப்பட்டோ அல்லது தொழிற்சாலை மூடப்பட்டோ ஒருவர் வேலையை இழக்கும் நிலை வந்தால், அவர் நிலை என்ன?

வேறு ஒன்றும் வேண்டாம் – ஒரு நல்ல அதிகாரமுள்ள பதவி வகித்தவர் ஓய்வு பெற்றுவிட்டாரென்று வைத்துக்கொள்ளுங்கள். அவர் நிலை என்ன?

இவைகளில் ஏதாவது ஒன்று நடந்தால், அவருடைய அந்தஸ்து சரிந்து, திடீரெனச் சமுதாயத்தில் முகமற்ற மனிதனாகிவிடுகிறார் (He suddenly becomes a nonperson).

நாம் பெறும் மரியாதையோ அல்லது செல்வாக்கோ, வங்கி வைப்புக் கணக்கினாலோ, வகிக்கும் பதவியினாலோ அல்லது சொத்து சுகத்தினாலோ ஏற்பட்டிருந்தால், அவைகள் மறைந்தவுடன், மரியாதையும் கரைந்து காணாமல் போய்விடும்.

எனவே பணத்தின் பலத்தை குறைத்து மதிப்பிடவில்லை. இறைவன் கிருபையாய் அருளும் ஈவுகளில் பணமும் அடங்கும்.

ஆனால், பணம் ஒன்றுதான் வாழ்க்கையா?

இவ்வுலகில் மானுடப் பிறவியெடுத்ததின் நோக்கமே பணம் ஈட்டுவதுதான் என்று எண்ணி சிலர் ஓடிக்கொண்டே இருக்கிறார்களே; இதுவா மானுட வாழ்க்கையின் நோக்கம்?

பணமிருந்தால் குடும்பம் மகிழ்ச்சியுடனிருக்கும்; மனைவியும் பிள்ளைகளும் ஆனந்தமாக இருப்பார்களென்று பலர் எண்ணுகிறார்கள்; இவ்வெண்ணம் சரியா?

தவறான கண்ணோட்டங்கள்

நம்மிடம் என்னென்ன (ஆடம்பரப் புறப்பொருட்கள்) இருக்கிறது என்பது பொருட்டல்ல; நாம் (உள்ளத்தில்) எப்படி இருக்கிறோம் என்பதுதான் காரியம். ஏனென்றால், மகிழ்ச்சி என்பது அகம் சார்ந்தது; புறம் சார்ந்ததல்ல (Happiness is inward, and not outward; and so, it does not depend on what we have, but on what we are— *Henry Van Dyke)*.

இறைமைந்தன் இயேசு, நம்மை ஏழைகளாக இருந்து பற்றாக்குறையுடன் அவதியுறுங்கள் என்று திருமறையில் எவ்விடத்திலும் இயம்பவில்லை. "ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது" (மத்.5:3) என்றுதான் கூறினார்; "ஏழைகள் பாக்கியவான்கள்" என்று கூறவில்லை. "Blessed are the **poor in spirit**" என்றால் "ஏழ்மை" எனப் பொருளல்ல; அதற்கு 'மனத்தாழ்மை' என்றே பொருள். 'ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை அளவின்றி பெற்றிருந்தாலும், இறுமாப்பைத் தவிருங்கள்' என்றே இதற்குப் பொருள்.

"ஐசுவரியமானது தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப்பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும்" என்று (மத்.19:24) இயேசு கூறினார். அதாவது 'செல்வந்தன் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது அரிது / கடினம் / எளிதல்ல' என்றுதான் கூறினார். செல்வந்தன் தேவனுடைய ராஜ்யத்தில் 'பிரவாசிக்கவே முடியாது' என்று சொல்லவில்லை. செல்வமுள்ள இடத்தில், இடறச்செய்யும் சோதனைகள் அதிகமுண்டு என்று எச்சரிக்கவே இவ்வண் இயம்பினார்.

பவுலடியாரும், "பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது" (1 தீமோ.6:10) என்றுதான் கூறினார். *"பண ஆசை"* தான் தீமைக்கு வேர்; *"பணம் தீமை"* என்று சொல்லவில்லை.

இவ்வுலகில் கௌரவமான வாழ்க்கை நடத்தவும், குடும்பத்தின் அத்தியாவசிய தேவைகளுக்கும், குடும்ப முன்னேற்றத்திற்கும், உழைக்க வலுவில்லா முதுமைக்காலப் பாதுகாப்பிற்கும் பணம் அவசியந்தான் என்பதை யாராலும் மறுக்க இயலாது.

அளவிற்கதிகமான செல்வம், தேவையற்ற பிரச்சனைகளைத் தரும். அதிகமான செல்வமிருந்தால், அதைப் பாதுகாக்க அதீத முயற்சிகள் தேவை. உங்கள் பிள்ளைகளுக்கும் அதனைப் பாதுகாக்கும் கலையைக் கற்றுக்கொடுக்கவேண்டும். சமுதாய விரோதிகள் பணம் படைத்தவர்களையும் அவர்கள் குடும்பத்தாரையுந்தான் பணம் பறிக்க கடத்துகிறார்கள் அல்லது கொலை செய்கிறார்கள். பணம் தன்னகத்தே ஆபத்தையும் கொண்டுள்ளது.

ஆடம்பரமற்ற சாதாரண வாழ்க்கைதான் வரவேற்கத்தக்கது. அளவிற்கதிகமான செல்வமின்றி, தங்களுடைய தேவைகளுக்கேற்ற செல்வம் உடையவர்களே இவ்வுலகில் மகிழ்ச்சி நிறைந்தவர்கள் (Unnecessary possessions are unnecessary burdens. If you have them, you have to take care of them! There is great freedom in simplicity of living. It is those who have enough but not too much who are the happiest).

பணம்

மிகுந்த பணமிருந்தால் இல்லற வாழ்க்கை மகிழ்ச்சியைக் கொடுக்குமென பலர் எண்ணுகிறார்கள். செல்வந்தர்களின் குடும்பங்கள்தான் மகிழ்ச்சியாக இருக்கின்றன என்று நீங்கள் நினைத்தால், உங்கள் கணிப்பு தவறு.

பணம் குறைவாக உள்ளதால், இல்லறம் இனிதாக இராது என்று கருதிக்கொண்டிருப்பீர்களானால், நீங்கள் வாழ்க்கையின் சூட்சுமத்தை கண்டுகொள்ளத் தவறிவிட்டீர்கள் என்று பொருள்.

வாழ்க்கை அற்புதமானது. இல்லற வாழ்க்கை மிகவும் அற்புதமானது. வாழ்க்கை வாழ்வதற்கும், சமுதாய அந்தஸ்த்திற்கும் நமக்குப் பணம் தேவைதான். ஆனால் பணமே வாழ்க்கையல்ல. வாழ்க்கையின் நோக்கம் பணம் சேர்ப்பது மட்டுமல்ல.

பணம் சேர்ந்துவிட்டால் மகிழ்ச்சி கிட்டிவிடும் என்று கருதி நீங்கள் வாழ்க்கையில் பயணித்துக்கொண்டிருந்தால், நீங்கள் கானல் நீரைப் பின்தொடர்கிறீர்கள்; வாழ்க்கையின் மகிழ்ச்சியைத் தொலைத்துக்கொண்டிருக்கிறீர்கள்; வாழத்தவறிக்கொண்டிருக்கிறீர்கள்; வாழ்க்கையைப் புரிந்துகொள்ளாமலே கல்லறைக்கு விரைந்துகொண்டிருக்கிறீர்கள் – என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.

இங்கே நான் உங்களுக்கு உணர்த்த முயல்வது, "பணம்–பணம்" என்று பறந்து–திரிந்து, உங்கள் வாழ்கையை மகிழ்வாக வாழ மறந்துவிடாதீர்கள் என்பதுதான்.

பணத்திற்கும் மேலே வாழ்க்கை அற்புதமானது

உங்களுக்கு எவ்வளவு வேலைகளிருந்தாலும், உங்கள் குடும்பத்திற்காக நேரத்தை ஒதுக்குங்கள்.

உங்களுடைய மனைவியிடமும், பிள்ளைகளிடமும் ஒவ்வொரு நாளும் சிறிது நேரத்தை செலவிடுங்கள்.

உங்கள் குழந்தைகளின் மழலையை ரசிக்கத் தவறாதீர்கள்;

உங்கள் மனைவியின் புன்னகையைக் காணத் தவறாதீர்கள்;

உங்கள் குடும்பத்தினர் பாடும் இசையைக் கேட்கத் தவறாதீர்கள்.

உங்கள் குடும்பத்தினருடன் இனிமையாகக் களிக்கும் ஆனந்த தருணங்களை இழந்து போகாதீர்கள்.

உங்கள் உடல் போன்றே, உங்கள் குடும்பமும் இறைவன் உறையும் ஆலயம் என்பதை மறவாதீர்கள்.

"நான் உழைப்பதெல்லாம் என் குடும்பத்திற்குத்தானே" என்று நீங்கள் கூறுவது எனக்குப் புரிகிறது.

"என் உயிரினும் மேலாக என் குடும்பத்தாரை நேசிக்கிறேனே" என்று நீங்கள் சொல்வது கேட்கிறது.

ஆனால், உங்கள் அன்பை, உங்கள் அன்பிற்குரியவர்கள் அறியும்வண்ணம் வெளிக்காட்டாது, உங்கள் உள்ளத்தில் பூட்டி வைத்துக்கொண்டால் என்ன பயன்? "ஐயோ! என் அன்பை குடும்பத்தினர்கள் அறிந்துகொள்ளவில்லையே" என்று பின்னாளில் அங்கலாய்ப்பதில் அர்த்தமுண்டோ?

உங்கள் அன்பை, உங்கள் மனைவி பிள்ளைகள் அறியும் வண்ணம் செயலில் காட்டுங்கள்–வெளிப்படுத்துங்கள் (Show your love in your action).

அவர்களுடன் உரையாடி உறவாட நேரம் ஒதுக்குங்கள்.

அவர்களுக்கு எழும் சந்தேகங்களை நிவிர்த்தி செய்ய முயலுங்கள்.

அவர்களுக்கு ஆலோசனை கூறுங்கள்.

அவர்களிடம் உங்கள் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளுங்கள்.

அவர்களுடைய மகிழ்ச்சியில் பங்குகொள்ளுங்கள்.

அவர்களுடைய நம்பிக்கையைப் பெற்றவர்களாக இருங்கள்.

யாருக்காக நீங்கள் உழைக்கிறீர்களோ, அவர்களுடன் ஒன்றி வாழவேண்டிய தருணத்தில் ஒன்றி வாழவில்லையென்றால், நீங்கள் மனத்தளவில் அவர்களுக்கு அன்னியமாகிப் போவீர்கள் என்பதே அதிர்ச்சியூட்டும் நிஜம்.

மகிழ்ச்சி பணத்திற்குக் கிடைக்கும் பண்டமாற்றுப் பொருளல்ல.

தேவைகள் நிறைந்ததுதான் வாழ்க்கை (Life is made up of wants). ஆனால், விளம்பர யுக்திகள் நிறைந்த இவ்வுலகில், எல்லாமே தேவையுள்ளவைகள்போல் நமக்குத் தோன்றும். நான் யாரையும்

குற்றங்காண முயலவில்லை; இன்றைய விளம்பரங்களின் தாக்கத்தால் மதிமயக்கமடைவது இயற்கையே; தேவைக்கும், ஆடம்பரத்திற்கும் வித்தியாசம் கண்டுபிடிப்பது மிகவும் கடினமே. ஆனால், தேவையற்றவைகளில் பணத்தைச் செலவிடாதிருப்பதே சிறந்த சேமிப்பு; இந்த விஷயத்தைப் பலர் உணருவதில்லை – புரிந்து கொள்ளுவதில்லை.

உறவினர்கள், நண்பர்கள், பக்கத்து வீட்டுக்காரர்கள் வைத்திருக்கும் அத்தனையும், நமக்குத்தேவை என்று எண்ணுகிறோம். தேவை இருந்தாலும் இல்லாவிட்டாலும், நம்மிடம் அவைகள் இருக்கவேண்டும் என்ற போலி கௌரவத்திற்காக பணத்தை விரையம் செய்வோர் பலர். சிலர் கையிருப்பைக் கரைப்பார்கள்; சிலர் கடனில் சிக்கிச் சிதைந்துபோவார்கள்.

தங்கள் வரவிற்குள் செலவுசெய்யக் கற்றுக்கொள்ளவேண்டும். திட்டமிடாது செலவுகள் செய்யின் சிக்கலில் மாட்டிக்கொண்டு, நரகத்தை இவ்வுலகிலே அனுபவிக்கவேண்டிய ஆபத்து ஏற்படும்.

நிறைவுரை

இவ்வுலகில் வாழ்வதற்குப் பொருள் (பணம்) தேவைதான்; ஆனால் உங்கள் வாழ்க்கைக்குப் பொருள் (அர்த்தம்) வேண்டாமா? (We should have means to live; but our life should have a meaning).

"மகிழ்ச்சி என்பது உங்களிடம் எவ்வளவு உள்ளது என்பதைப் பொறுத்தல்ல. உங்களிடம் உள்ளதை எப்படி அனுபவிக்கறீர்களோ அதற்கொப்பவே உங்களில் மகிழ்ச்சி நிலவுகிறது". என்று சி. ஹெச். ஸ்பர்ஜன் கூறுகிறார் (It is not how much we have, but how much we enjoy, that makes happiness -*C. H. Spurgeon*).

உங்களிடம் இருப்பவைகளுக்காக இறைவனுக்கு நன்றி செலுத்துங்கள்.

இல்லாதவைகளுக்காக ஏங்கி இறைவன் உங்களுக்குக் கிருபையாகக் கொடுத்துள்ள ஆசீர்வாதங்களை அனுபவித்து – மகிழ்ந்து வாழத்தவறிவிடாதீர்கள்.

ஒரு தகப்பன் தனது குடும்பத் தலைவன் ஸ்தானத்தைச் சிறப்பாக வகிப்பதற்கான அடையாளம்,

அவர் எவ்வளவு பணம் ஈட்டுகிறார் என்பதிலில்லை,

எத்தனை பட்டங்கள் வாங்கியுள்ளார் என்பதிலில்லை,

அவர் அலுவலகத்தை எப்படி நிர்வாகிக்கிறார் என்பதிலில்லை;

அவர் எப்படிக் குடும்பத்தை நடத்துகிறார் – என்பதில்தான் இருக்கிறது.

"குன்றத் தனையி நிதியைப் படைத்தோர், அன்றையங் பகலே யழியினு மழிவர்" (கொன்றைவேந்தன்) என்று தமிழ் பாடல் கூறுகிறது.

அதன்பொருள், "மலைஅளவு செல்வத்தையுடையவர் கூட, ஒரு பகற்பொழுதில் அனைத்தையும் இழந்து அழிந்து வறியவர் ஆவர்" என்பதாகும்.

ஆகவே, பணத்திற்கு எந்த அளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமோ அந்த அளவிற்கு மட்டுமே கொடுங்கள். வாழ்க்கை என்பது பணத்தினால்மட்டும் நிர்ணயிக்கப்படுவதல்ல.

"சண்டையோடுகூடிய வீடுநிறைந்த கொழுமையான பதார்த்தங்களைப்பார்க்கிலும், அமரிக்கையோடே சாப்பிடும் வெறும் துணிக்கையே நலம்" (நீதி.17:1) என்று கூறும் சாலமோன் ஞானியின் கூற்றில்தான் எத்தனை உண்மை!

குடும்ப வரவு - செலவு 1

**"வேண்டிய திரவியமும் எண்ணையும்
ஞானவானுடைய வாசஸ்தலத்தில் உண்டு.
மூடனோ அதைச் செலவழித்துப் போடுகிறான்"
(நீதி.21:20).**

ஒரு குடும்பத்தில் பிரச்சனைகள் எழுவதற்கும், வளருவதற்கும் பிரதானக் காரணம், பெரும்பாலும் பணப்பற்றாக்குறையே. இப்படிப் பணப் பற்றாக்குறையினால் கஷ்டப்படும் பலர், நல்ல வருமான முள்ளவர்கள்தான். பெரும்பாலானவர்கள் வருமானமின்மையால் கஷ்டப்படவில்லை. ஈட்டிய வருமானத்தைத் திட்டமின்றிச் செலவழித்து விட்டுதான் அவதியுறுகிறார்கள்.

சார்லஸ் டிக்கன்ஸ் (Charles Dickens) என்ற நாவலாசிரியர் தன்னுடைய "டேவிட் காப்பர்பீல்டு" (David Copperfield) என்ற நாவலில் ஒரு வீட்டுக் கணக்குப் போடுகிறார்:

முதல் **கணக்கு**

ஆண்டு வருமானம்	–	20.00 பவுண்டு
ஆண்டு செலவு	–	19.06 பவுண்டு
விளைவு	–	மகிழ்ச்சி

இரண்டாம் **கணக்கு**

ஆண்டு வருமானம்	–	20.00 பவுண்டு
ஆண்டு செலவு	–	20.06 பவுண்டு
விளைவு	–	துன்பம்

I. Annual
Income - twenty pounds,
Expenditure - nineteen - six pounds,
Result - **happiness.**

II. Annual
Income - twenty pounds,
Expenditure - twenty pounds ought and six,
Result - **misery.**

- ***Charles Dickens***
(in his Novel "David Copperfield")

செலவை வரவிற்குமேல் மிகாது பார்த்துக்கொள்வதில்தான் ஒரு இல்லத்தின் மகிழ்ச்சி அடங்கியிருக்கிறது என்பதைத்தான் சார்லஸ் டிக்கன்ஸ் இப்படிக் கூறுகிறார்.

''இனியவை நாற்பது' என்ற தமிழ்ப் பாடால், **"வருவாய் அறிந்து வழங்கல் இனிதே"** என்று உரைக்கிறது ('வழங்கல்' என்றால் 'செலவிடுதல்' என்று பொருள்).

பல குடும்பத் தலைவர்களும், தலைவிகளும் தங்களுக்கு இறைவன் கிருபையாக அளித்துள்ள வருமானத்தை / செல்வத்தை எப்படிக் கையாள்வது என்ற கலையை அறியாமல், திட்டமின்றி பணத்தை விரையம் செய்துவிட்டு, பின்பு அவதியுறுகின்றனர் என்பதுதான் ஜீரணிக்க முடியாத நிஜம்.

வாழ்க்கையின் மூன்று காலகட்டங்கள்

இந்த நேரத்தில் எனக்கு ஒரு மூதுரை நினைவிற்கு வருகிறது.

''மனித வாழ்க்கையின், முதல் 25 ஆண்டுகள்,
பணம் பற்றாக் குறை (Shortage of money);

அடுத்த 25 ஆண்டுகள்
நேரம் பற்றாக் குறை (Shortage of time);

இறுதி 25 ஆண்டுகள்
பெலம் பற்றாக் குறை (Shortage of energy)."

இப்படிக் கூறுவதால், 26–வது பிறந்த நாளன்று, பணப் பற்றாக் குறை பறந்துபோய்விடும் என்று பொருளல்ல. இது ஒரு பரவலான கணிப்புதான். இந்தக் கணக்கு கொஞ்சம் முன்னேபின்னே இருக்கலாம்.

அதாவது, வாழ்க்கையின் முதல்கட்டமான, 25–ம் வயதுவரை படித்துக்கொண்டோ அல்லது வேலைத் தேடிக்கொண்டோ இருக்கும் காலம்; பணத்திற்காகப் பெற்றவர்களையும், மற்றவர் களையும் சார்ந்திருக்கும் காலம். தனக்கென்று வரவு இல்லாத காலம்; எனவே இது பணத்தட்டுப்பாடான காலம்.

அடுத்த 25 ஆண்டுகள், சம்பாதிக்கும் காலம்; நீங்கள் வேலை செய்யும் இடம் ஒரு நிறுவனமாகவோ அல்லது அரசு அலுவல மாகவோ இருக்கலாம்; நீங்கள் வியாபாரமோ அல்லது சுயதொழிலோ செய்யலாம். சுருங்கக்கூறின், இது உழைக்கும் காலம்; பொறுப்புக்கள் நிறைந்த காலம்; ஒரு நாளுக்கு 24 மணிநேரம் போதாதுபோல் கருதும் காலம்.

இறுதியான 25 ஆண்டுகள், உங்கள் உடல் கொஞ்சம் கொஞ்சமாக தளர்ச்சியுறும் காலம்; மனதில் தெம்பிருந்தாலும், உடல் ஒத்துழைக்க மறுக்கும் காலம்; பல வியாதிகள் உடலில் தலை தூக்கும் காலம்; பணமிருந்தாலும் பிறர் அருகாமையும், உதவியும் தேவையுள்ள காலம்.

பணப்பிரச்சனை

மனித வாழ்க்கையில், கிறிஸ்தவ ஜீவியத்திற்குப் பணம்ஒரு தலைவலியாக இருக்கக்கூடாது. பெரும்பாலும், பணத்தைப் பற்றிய

தெளிவான கருத்து இல்லாமையே பிரச்சனைக்குக் காரணம். மனிதன் வாழ்வதற்கு நேரம், சக்தி, நீர், நெருப்பு, ஆகாயம், காற்று போன்ற சாதனங்களை இறைவன் அருளியுள்ளதுபோல், பணமும் இறைவன் அருளிய சாதனங்களிலொன்று என்று எண்ணுங்கள்.

திருமறை வசனங்களைப் பாருங்கள்:

"நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது" (யாக்.1:17).

"பூமியும் அதின் நிறைவும், உலகமும் ... கர்த்தருடையது" (சங்.24:1).

"வெள்ளியும் என்னுடையது, பொன்னும் என்னுடையது" என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" (ஆகாய் 2:8).

படைப்பின் காரணனான இறைவன், தன்னிடமுள்ள ஐசுவரியத்திலிருந்து, நாம் இவ்வுலகில் ஜீவிக்க உங்கள் குடும்பத்திற்கு அருளாக அளித்துள்ள சாதனங்களில் ஒன்றுதான் பணம்.

பெரும்பாலும் உங்கள் உடல் உழைப்பையோ அல்லது அறிவையோ பயன்படுத்திதான் பணம் ஈட்டுகிறீர்கள். ஆனால் பணத்தைப் பற்றிய கண்ணோட்டத்தில்தான் ஒருவருக்கொருவர் வேறுபடுகிறோம்.

ஜாண் வெஸ்லி, **"செல்வம், இறைவனின் மிகச்சிறந்த நோக்கத்திற்குப் பயன்படுத்தப்பட, இறைவன் அளித்துள்ள மிகச்சிறந்த ஈவு"** என்று கூறுகிறார் ("Wealth is an excellent gift of God that can be used for excellent purpose of God"— John Wesley).

பணத்தைக் குறித்து நாம் மனதில்கொள்ளவேண்டிய கருத்து என்ன?

1. பணம் நல்லதுதான்; அதுவும் இறைவன் அளிக்கும் ஈவுகளில் ஒன்று.
2. இறைவனின் ஈவாக ஈந்த பணத்தை பொறுப்புடனும், கவனத்துடனும் பயன்படுத்தவேண்டும்.
3. இறைவனின் ஈவாகிய பணம், குடும்பத்திற்குப் பொதுவானது. அது குடும்பத்தினர் அனைவரின்கூட்டுப் பயனுக்காக அருளப்பட்டுள்ளது.

எனவே பணம் தன்னில் தானே பாவமுள்ளதல்ல; இவ்வுலகில் நாம் வாழ்வதற்கு இறைவன் அருளியுள்ள பல சாதனங்களில் பணமும் ஒன்று; அவ்வளவுதான். ஆனால், பணத்தை ஈட்டுவதிலும் (Earning), கையாளுவதிலுந்தான் (Using or spending) பாவமும், புண்ணியமும் பங்கு போட்டுக்கொள்கின்றன.

ஈட்டலும் – கழித்தலும்

செல்வத்தை / பணத்தைக் கையாளுவது எப்படி?

1. உங்களால் இயன்றவரை பணத்தை ஈட்டுங்கள் (Gain / Earn all you can),
2. உங்களால் இயன்றவரை பணத்தைச் சேமியுங்கள் (Save all you can),
3. உங்களால் இயன்றவரை கொடுங்கள் (Give all you can).

1. இயன்றவரை ஈட்டுங்கள்

உங்களால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு பணமும் சம்பாதியுங்கள்.

"பொருளிலார் பொருள் செய்தல் முதற்கடன்" என்பது பாரதியார் கூற்று (சுயசரிதை – பொருட்பெருமை):

ஆனால் எப்படியெல்லாம் பொருளீட்டக்கூடாது?

i. உயிரைப் பணயம் வைத்துப் பணம் சம்பாதிக்கவேண்டாம் (Do not earn risking your life).

ii. உடல் நலத்திற்குக் கேடான வழியில் பொருளீட்ட வேண்டாம் (Do not earn endangering your health).

iii. நெறிகேடான வழிகளில் பணம் ஈட்டவேண்டாம் (Do not earn through foul means).

iv. பாவம்புரிந்து பணம் சேர்க்கவேண்டாம் (Do not earn, by committing sin).

v. இறைக் கட்டளைகளை மீறி பணம் சம்பாதிக்கவேண்டாம் (Do not earn violating God's Laws).

vi. நாட்டின் சட்டங்களை மீறி சம்பாதிக்கவேண்டாம் (Do not earn infringing the Laws of the land).

vii. பிறரைக் கெடுத்துப் பணம் ஈட்டவேண்டாம் (Do not earn harming others).

viii. பிறரை ஏமாற்றிப் பணம் சம்பாதிக்கவேண்டாம் (Do not earn deceiving others).

ix. மனச் சாட்சியைக் கொன்று சம்பாதிக்கவேண்டாம் (Do not earn killing your conscience).

x. உங்கள் ஆத்துமாவுக்குக் கேடாகப் பணம் ஈட்டவேண்டாம் (Do not earn at the cost of you soul).

நியாயமான வழியில் சம்பாதியுங்கள்; நாணயமான தொழில் செய்து சம்பாதியுங்கள்.

உங்கள் திறமைகளையும், ஞானத்தையும் இறைப் பயத்துடன் நேர்மையாகப் பயன்படுத்திப் பொருளீட்டுங்கள்.

பணப்பசி நிறைந்த இவ்வுலகில் இது சாத்தியமா?

இறையரசில் பங்குகொள்வதையே என்றென்றும் முதன்மையாகக் கருதினால், உங்களுடைய பணம் ஈட்டும் வழிகளும் நேர்மையாகவும், நியாயமாகவும், நாணயமாகவும் இருக்கும்.

2. இயன்றவரை சேமியுங்கள்

பணம் இறைவன் ஈந்த ஈவு. எனவே கவனத்துடன் கையாள வேண்டும்.

சம்பாதிக்கும் பணத்தையெல்லாம் செலவழித்துவிடவேண்டுமென்று கட்டாயமில்லை. செலவுகள்போக உபரியாக இருக்கும் பணத்தை சேமியுங்கள்; அநாவசிய செலவுகளைத் தவிர்ப்பதே சிறந்த சேமிப்புத்தான் என்பதை மறவாதீர்கள்.

“சோம்பேறியே, நீ எறும்பினிடத்தில்போய், அதின் வழிகளைப் பார்த்து, ஞானத்தைக் கற்றுக்கொள். அதற்குப் பிரபுவும், தலைவனும், அதிகாரியும் இல்லாதிருந்தும், கொடைகாலத்தில், தனக்கு ஆகாரத்தைச் சம்பாதித்து, அறுப்புக் காலத்தில் தனக்குத் தானியத்தைச் சேர்த்துவைக்கும்” (நீதி.6.6–8).

i. உங்கள் காலத்தையும், உழைப்பையும், சக்தியையும், அறிவையும் பயன்படுத்தி ஈட்டியுள்ளதால், வீண்செலவுகளைத் தவிருங்கள்

ii. தேவையற்ற செலவுகளைத் தவிர்ப்பதே சிறந்த சேமிப்பு என்பதை உணருங்கள்

iii. விலையுயர்ந்த உணவுவகைகளில் மோகம் வேண்டாம், உடல் நலமளிக்கும் எளிய உணவுகளையே நாடுங்கள்.

iv. முடிந்தவரை ஆடம்பரமான வீட்டுப் பொருட்களின்மீது ஆவல்கொள்ளாதீர்கள்; தேவையான பொருட்களையே வாங்குங்கள்

v. ஊர் மெச்சவும், பிறரைக் கவரவும் செலவு செய்யாதீர்கள்.

vi. செல்வச் செருக்கைக் காட்டவும், பணபலத்தைப் பறைசாற்றவும் பணத்தைப் பாழடிக்கவேண்டாம்..

vii. குழந்தைகளிடம் தேவைக்கதிகமான பணத்தைக் கொடுத்து அவர்களைக் கெடுக்கவேண்டாம்

viii. பணத்தால் மனிதர்களைக் கவரலாம் – வாங்கலாம், இறைவனைப் பணத்தால் கவரவோ – வாங்கவோ இயலாது என்பதை உணருங்கள்

ix. ஆடம்பரச் செலவுகள் செய்யவேண்டாம்; தேவையானவைகளுக்காகவே செலவு செய்யுங்கள்.

x. பணத்தால் எதையும் சாதிக்கலாம் எனக் கருதாதீர்கள். பணம் பயன்படாத – பணத்தால் சாதிக்கமுடியாத பல காரியங்கள் இவ்வுலகில் உண்டு என்பதை உணருங்கள்.

xi. வருமானத்தில் குறிப்பிட்ட தொகையை மாதாமாதம் சேமிப்பது நல்லது. கூடுமானவரை தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் சேமியுங்கள்; சீட்டுக்கம்பெனிகளிலும், தனியார் பைனான்ஸ் கம்பெனிகளிலும் பணத்தைச் சேமிக்க முயல்வது ஆபத்து நிறைந்தது; அதிக வட்டிக்கு ஆசைப்பட்டு முழுமுதலையும் இழந்து நிற்காதீர்கள்.

xii. இந்தச் சேமிப்புகள் பிற்காலத்தில் பிள்ளைகளுடைய படிப்பிற்கும் திருமணத்திற்குத் தேவைப்படும். நோய்கள் போன்ற எதிர்பாராத செலவுகளுக்கும் பயன்படும்.

நீங்கள் 'செலவு செய்யும் பழக்கத்தில்' (Spending habit) எச்சரிக்கையாக இருங்கள்; இதுதான் 'நிதி நிர்வாகத்தின்' (Fund Management) முதல் பாடம்.

3. இயன்றவரை கொடுங்கள்

இறைவன் கருணையாய் அருளியுள்ள செல்வத்தை அல்லது சம்பாத்தியத்தை எப்படிப் பங்கிடுவது?

பங்கீட்டு முன்னுரிமை (Order of Priorities) வரிசை எது?

i. முதலாவது, உங்களுக்கும், உங்கள் குடும்பத்திற்கும் உரிய தேவைகளைப் பூர்த்திசெய்யப் பணம் ஒதுக்குங்கள்.

கிறிஸ்தவ–சமய–அமைப்பின் நிர்வாகத்தில் தலைமை ஏற்கவிருக்கும் நபர்களுக்கு இருக்கவேண்டிய தகுதிகளைக் குறித்துப் பவுல் கூறுகையில், **"தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப் பண்ணுகிறவனாகவும் இருக்கவேண்டும்"** (1 தீமோ.3:4) என இயம்புகிறார்.

மனித உறவின் முதல் வட்டம், குடும்ப அங்கத்தினர்கள். அந்த வட்டத்தின் தலைவன் கணவன்/தகப்பன். திருச்சபைத் தலைவர்களுக்குப் பவுலடியார் கூறுகின்ற தலைமைத் தகுதிகள் அனைத்தும் குடும்பத் தலைனுக்கும் பொருந்தும்.

குடும்பத்தின் அடிப்படைப் பொருளாதார தேவைகளைப் பூர்த்தி செய்வது குடும்பத் தலைவனின்மீது விழுந்த தலையாய கடமை.

ஆகையால்தான் பவுலடியார், **ஒருவன் தனக்குச் சொந்தமானவர்களையும், விஷேசமாய்த் தன் வீட்டாரையும் பராமரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவன், அவிசுவாசியிலும் கெட்டவன்"** என்று கூறுகிறார் – 1 தீமோ.5:8 (திருத்திய மொழிபெயர்ப்பு).

ii. அடுத்து, உங்கள் இனத்தார், பந்துக்களுக்கு உதவுங்கள்.

ஒரு கிறிஸ்தவனுக்கு தனது குடும்பத்திற்கு அடுத்தபடியாக தனது உற்றார் உறவினர்களுக்கு உதவவேண்டும். **"ஒருவன் தனக்குச் சொந்தமானவர்களையும்... பராமரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவன்"** (1 தீமோ.5:8) என்று பவுல் கூறுவதைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

iii. அதன்பின், உடன் விசுவாசிகளுக்கும், திருச்சபைக்கும் உவந்து அளியுங்கள்.

"ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குக்தக்கதாக, யாவருக்கும், விஷேசமாக விசுவாசக் குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்யக்கடவோம்" (கலா.6:10).

ஒரு கிறிஸ்தவனுக்கு, விசுவாசக் கூட்டத்தாராகிய 'திருச்சபை மக்கள்' அகன்ற குடும்பத்தின் உறுப்பினர்கள்' (Members of Extended Family).

iv. இறுதியில், பிறமக்களுக்கும், தொண்டு நிறுவனங்களுக்கும் உதவிக்கரம் நீட்டுங்கள்

குடும்பத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்தபின், உறவினர்களுக்கு உதவுங்கள். அதன்பின் உடன் விசுவாசிகளுக்கு நன்மை செய்யுங்கள்.

அதற்கும் மேல், இன்னமும் பிறருக்குக் கொடுக்கக் கூடிய பண பலத்தை இறைவன் உங்களுக்கு ஆசீர்வாதமாகக் கொடுத்திருந்தால், விசவாச வீட்டிற்கு வெளியேயுள்ள வறியவர்களுக்கும் எளியவர்களுக்கும், அநாதை விடுதிகளுக்கும், முதியோர் இல்லங்களுக்கும், மழை / புயல் / வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோர்களுக்கும் உவந்து கொடுங்கள்.

இந்த விகிதாச்சாரம் (Percentage) என்ன என்பதை இறைவேண்டல் (Prayer) ஏறெடுத்துத் தீர்மானியுங்கள்.

நம்மிடமுள்ள பணத்தைக் கவனத்துடன் செலவு செய்யவேண்டுமென்பதை, **"ஆற்றில் கொட்டினாலும் அளந்து கொட்டு"** என்று நமது முன்னோர்கள் ஏற்கனவே கற்பித்திருக்கிறார்கள். இந்தப் பழமொழியில் **'ஆற்றில்'** என்பதற்குப் **'பிறர்க்கு உதவுதல்'** என்பது பொருளாகும் (பார்க்க: 'தமிழில் பழமொழி இலக்கியம்' – எஸ்.சௌந்திரபாண்டியன்).

நிறைவுரை

நீங்கள் சம்பாதிப்பதால், உங்களிடமுள்ள செல்வத்திற்கு அல்லது பணத்திற்கு நீங்களே சொந்தக்காரர் என்று உரிமை கொண்டாட வேண்டாம். அந்த செல்வத்தை உங்களுடைய முன்னோர்களின் மூலமாகவோ (Inheritance) அல்லது நீங்கள் உழைத்து ஈட்ட

(Earnings) உங்களுக்கு வாய்ப்பளித்தோ, அவற்றினை அருளியவர் இறைவனே.

எனவே, உங்களிடமுள்ள செல்வத்தின் உண்மையான சொந்தக் காரர் இறைவன் என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்; நீங்கள் பணத்தின் பாதுகாவலர் (Trustee) மட்டுமே. ஆகையால் கர்த்தருக்குக் காணிக்கை கொடுப்பதில் தயக்கம் கூடாது.

உங்களிடம் இறைவனால் அளிக்கப்பட்டுள்ள செல்வத்திற்கு, நீங்கள் ஒரு பொறுப்பாளர் (Steward - உக்கிராணக்காரர்) மட்டுமே என்று உணர்ந்து, கவனத்துடன் – **சேமியுங்கள்– செலவிடுங்கள்.**

18

குடும்ப வரவு – செலவு 2

நீங்கள் விண்ணப்பம்பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படிசெலவழிக்க வேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம்பண்ணுகிறபடியினால், பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள் –யாக்கோபு 4:3.

இதற்கு முந்தைய அத்தியாயத்தில், செலவு செய்யும் பழக்கத்தில் எச்சரிக்கையாக இருங்கள் என்றுதான் கூறினேன்; உங்களைக் கஞ்சனாக இருங்கள் என்றோ அல்லது இறைவன் கிருபையாய் அருளிய பணத்தை உங்கள் அத்தியாவசியத் தேவைகளுக்குப் பயன்படுத்தாமல் இரும்புபெட்டியில் பூட்டிவைத்துத் துருப்பிடிக்க வையுங்கள் என்றோ கூறவில்லை.

உங்கள் அத்தியாவசியத் தேவைகளுக்குப் பயன்படாத பணம் உங்களிடம் இருந்து என்ன பயன்? ஆனால் உங்ளுடைய அவசியச் செலவு எது, வீணான செலவு எது என்பதை நீங்கள்தான் ஞானமாகக் கண்டறியவேண்டும்.

வரவு–செலவுத் திட்டம்

மனித வாழ்க்கையின் மூன்று காலகட்டங்களைக் குறித்து முந்தைய அத்தியாயத்தில் கூறினேன். அதில் சம்பாதிக்கும் இரண்டாம் காலகட்டத்தில், ஒவ்வொருவரும் ஞானமாகத் திட்டமிட்டுச் செயல்படவேண்டியது மிகமிக அவசியம். உழைக்க இயலாத முதுமைக் காலத்தையும் கருத்திற்கொண்டு, வாழ்க்கையின் பொருளாதார திட்டத்தை வகுத்துக்கொள்ளவேண்டும்.

வரவு–செலவு–திட்டமிடுதலை ஆங்கிலத்தில் "பட்ஜட்" (Budget) என்பார்கள். பட்ஜட் என்றால் என்ன? செயல் படுத்தப்படவிருக்கும் திட்டம் (**Budget is a plan of action**).

நாட்டிற்கும்–நிறுவனங்களுக்கும் மட்டுமல்ல, வீட்டிற்கும் பட்ஜட் அவசியம். "திட்டமிடாத வீடும், திட்டமிடாத நாடும் உருப்படாது" என்பார்கள். வீடானாலும், நாடானாலும் திட்டமிடுதல் அவசியம்.

உழைக்கும் காலத்தில் சம்பாதித்த பணத்தை ஊதாரித்தனமாகச் செலவு செய்துவிட்டு, பின்னால் தவிப்பது பரிதாபத்திற்குரியது; திட்டமிட்டுச் செலவு செய்யவேண்டும்..

நாட்டு பட்ஜட்டில், வரவிற்கும் செலவிற்குமிடையே துண்டு விழுந்தால், அதை 'Deficit Budget' என்று கூறுவார்கள். அதைச் சரிக்கட்ட, மக்கள் மீது வரிவிதித்து வரவை அதிகரித்துவிடுவார்கள். உங்கள் குடும்ப பட்ஜட்டில் துண்டுவிழுந்தால் உங்கள் வரவை எப்படி அதிகரிப்பீர்கள்?

நீங்கள் மாதவருவாயை நம்பியிருக்கும் நடுத்தர வர்க்கமாகவோ அதற்குக் கீழாகவோ இருந்தால் சமாளிப்பது மிகக்கடினந்தான்.

விளம்பர யுக்திகள் நிறைத்த இவ்வுலகில், உங்கள் பணத்தை வியாபாரம் என்ற பெயரில் எப்படியாவது உங்கள் பையிலோ அல்லது கையிலோ உள்ள பணத்தைக் கரைக்க அல்லது பிடுங்க, வர்த்தக உலகம் போட்டிபோடுகிறது. எனவே, ஒவ்வொரு குடும்பத் தலைவனும், தலைவியும் இன்றைய நாட்களில் நன்கு தேறிய பொருளாதார நிபுணர்களாக இருந்தாகவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள்.

குடும்ப பட்ஜட்டை மூன்று வகையில் பிரிக்கலாம்.

1. தொலை நோக்கு பட்ஜட் (Long Term Budget).
2. வருடாந்திர பட்ஜட் (Annual Budget).
3. மாதாந்திர பட்ஜட் (Monthly Budget).

இந்த மூன்று பிரிவின் கீழ் என்னென்ன செலவினங்கள் அடங்கும் என்பதற்கு எடுத்துக்காட்டாகச் சிலவற்றைக் கீழே கூறியுள்ளேன். உங்கள் நிலைக்கேற்ப இவைகளைக் கூட்டவோ அல்லது குறைக்கவோ செய்துகொள்ளலாம்.

தொலை நோக்கு பட்ஜட்

பிள்ளைகள் திருமணம், நிலம் வாங்குதல், வீடு கட்டுதல், நகை / வாகனங்கள் / தொலைக்காட்சி அல்லது வானொலி பெட்டி வாங்குதல், உங்கள் முதிர்வயது காப்பு நிதி – போன்றவைகள்.

வருடாந்திர பட்ஜட்

பிள்ளைகள் படிப்புச் செலவு (புத்தகங்கள், வருடாந்திர கட்டணம் – Annual Fees), பண்டிகைச் செலவுகள், குடும்பத்தினருக்கு ஆடைகள், வீட்டுப் பராமரிப்புச் செலவு, வருமான வரி, வீட்டுவரி, சொத்துவரி – போன்றவைகள்.

மாதாந்திர பட்ஜட்

சாப்பாட்டுச் செலவு, வீட்டு வாடகை, போக்குவரத்து அல்லது வாகனங்கள் சார்ந்த செலவு, மாத–வார–தினசரி பத்திரிக்கைள், பிள்ளைகள் படிப்புக் கட்டணம் (Monthly Fees), மின் கட்டணம்,

தொலைபேசி கட்டணம், தண்ணீர் வரி, வேலைக் காரர்கள் சம்பளம், பொழுதுபோக்குச் செலவு – போன்றவைகள்.

இதுபோக எதிர்பாராத செலவுகள் (வைத்தியச் செலவு, விருந்தினர்கள் செலவு, எதிர்பாராத பயணச் செலவுகள், வாகன ரிப்பேர் செலவுகள், உறவினர்கள்/வெளிவைபவங்களில் கலந்து கொள்ளும் செலவு, பரிசு செலவுகள், இன்னும் இதரச் செலவுகள்), ஆலயத்திற்கு, மற்றும் ஊழியத்திற்கு உதவிகள் – போன்றவைகள்.

ஆலோசனைகள்

1. **ஒரு வீட்டின் தலைவன் தலைவியின் திறமை யெல்லாம், மாதாந்திரச் செலவீனங்களைக் கையாளு வதில்தான் இருக்கிறது. இந்தச் செலவுகளில் சிக்கன மாக இருந்தால்தான், முந்தைய இரண்டு செலவு களுக்கும் போதிய நிதி ஒதுக்கீடு செய்ய இயலும்.**
2. செலவு செய்யுமுன் "இச்செலவு தேவைதானா?" என்று சிந்திக்கத் தயங்காதீர்கள். குழப்பமாக இருந்தால் – கொஞ்சம் பொறுங்கள் (When in doubt - WAIT). தெளிவுற்றபின் தேவையென்றால் செலவிடுங்கள்.
3. **அநாவசியச் செலவைத் தவிர்த்தல் சிறந்த சேமிப்பு** – என்பதை என்றென்றும் மறவாதீர்கள்.
4. குறைந்த விலையில் கிடைக்கிறது என்பதற்காகத் தேவையற்றவைகளை வாங்குவது அறிவீனம்)A bargain is not a bargain unless you need it).
5. அதிக விலையுள்ள பொருள்கள் எதையாவது வாங்குமுன், அந்த வகைப் பொருளை வாங்கி உபயோகிக்கும் நபர்கள் அதில் திருப்தி அடைந்திருக்கிறார்களா என்று அறிந்து வாங்குவது விவேகமானது.
6. கழிவு விலைப் பொருள்கள் வாங்கும்பொழுது கவனமாக இருங்கள். நஷ்டத்தில் யாரும் விற்கமாட்டார்கள். கழிவு விலையில் விற்பதற்காகவே தரம் தாழ்ந்த பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு சந்தைக்கு வருகிறது என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்.
7. செலவுபோக அதிகப் பணம் கையில் இருந்தால் அதைச் செலவழித்துத்தான் ஆகவேண்டுமென்ற கட்டாயமில்லை. அதைச் சேமியுங்கள்.
8. கணவன் மனைவி இருவர் பெயரிலும் கூட்டாக வங்கிக் கணக்கு (Joint Account) கண்டிப்பாக இருக்கவேண்டும். உங்கள் பெயரில் மட்டுமிருந்தால் மனைவியை 'Nominee" யாக அக்கணக்கிற்குப் பதிவு செய்யுங்கள். இதனால் உங்கள் காலத்திற்குப் பின்னால் உங்கள் குடும்பத் திலுள்ளவர்கள் உங்கள் சேமிப்பைச் சிரமமின்றி வங்கியி லிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

9. உங்களுடைய கௌரவத்திற்காக எந்தச் செலவையும் செய்யாதீர்கள். உங்களுக்குப் பணப்பற்றாக்குறை வந்தால் அந்த கௌரவம் காற்றில் பறக்கும்.

10. உங்களுக்காக அல்லது குடும்ப செலவிற்காக வைத்திருக்கும் பணத்தில் கடன் கொடுக்காதீர்கள். உங்கள் பணத்தைக் கடன் கொடுத்துவிட்டு பிறரிடம் நீங்கள் ஏன் கடனுக்காகக் கையேந்தவேண்டும்?

11. எக்காரணத்தைக்கொண்டும், யாருக்கும் ஜாமீன் கொடுக்கவோ அல்லது கையெழுத்துப் போடவோ செய்யாதீர்கள். தேவையென்றால் உங்களால் முடிந்த பொருளுதவியோ அல்லது பண உதவியோ செய்யுங்கள். நீங்கள் பெறாத—அனுபவிக்காத—தொலைக்காத பணத்திற்காக, நீங்கள் ஏன் துன்பத்தை அனுபவிக்கவேண்டும்? (Why you become a sufferer for the money which you never received, never enjoyed and never lost?).

12. இந்த வரவுசெலவு பாடத்தை எங்கேயும், யாரும் கற்றுக் கொடுப்பதில்லை. அந்த ஞானம் கைவரப்பெற ஆண்டவரிடம் ஜெபியுங்கள்.

நிறைவுரை

சின்னஞ்சிறு செலவுகளானாலும் கவனமாய் செலவு செய்யுங்கள். அடித்தளத்திலுள்ள சிறு ஓட்டை ஒரு பெரிய கப்பலையே மூழ்கடித்து விடும் என்பதைக் கருத்தில்கொள்ளுங்கள்.

பணத்தை ஞானமாக எப்படிக் கையாளவேண்டுமென்று வெளிப்படுத்தும்படி கர்த்தரிடம் ஜெபியுங்கள்.

ஞானத்தின் அதிபதியிடம் ஞானத்தை அனுதினமும் கேட்பதில் தவறில்லை. அவர் ஞானத்தில் மாத்திரமல்ல, ஐசுவரியத்திலும் பெருத்தவர்.

ஞானத்தைக் கேட்ட சாலமோனுக்கு ஐசுவரியத்தையும் அளித்த தேவனல்லவா அவர்?

"தேவன் ஐசுவரியத்தையும், சம்பத்தையும் எவனுக்குக் கொடுத்திருக்கிறாரோ, அவன் அதிலே புசிக்கவும், தன் பங்கைப் பெறவும், தன் பிரயாசத்திலே மகிழ்ச்சியாயிருக்கவும் அவனுக்கு அதிகாரம் அளிப்பது தேவனுடைய அநுக்கிரகம்" – (பிரசங்கி 5:19).

19

குடும்ப வரவு - செலவு 3

பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறதுபோல, எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன் (3 யோவான் 2).

“ஆன முதலில் அதிகஞ்செலவானால் மானம் அழிந்து மதிகெட்டுப்” போகுமென்று தமிழ்ப் புலவர் ஔவையார் தன்னுடைய 'நல்வழி' என்னும் நூலில் கூறுவதைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

கடந்த அத்தியாயத்தில், ‘ஒரு வீட்டின் தலைவன்—தலைவியின் திறமையெல்லாம், மாதாந்திரச் செலவீனங்களைக் கையாளுவதில் தான் இருக்கிறது; இந்தச் செலவுகளில் சிக்கனமாக இருந்தால்தான், முந்தைய இரண்டு செலவுகளுக்கும் போதிய நிதி ஒதுக்கீடு செய்ய இயலும்' என்று கூறியிருந்தேன்.

மாதாந்திர செலவில் சிக்கனமாக இருப்பது எப்படி என்பது குறித்து இத்தக் கட்டுரையில் தியானிப்போம்.

இருவகை மாதாந்திர செலவுகள்

மாதாந்திர செலவுகளை இருவகைகளாகப் பிரிக்கலாம் – நிலையான செலவுகள் (Fixed Expenses) ஏற்ற–இறக்கமுறும் செலவுகள் (Flexible Expenses).

i). நிலையான செலவுகள் (Fixed Expenses)

தவிர்க்க இயலாத, அதிக மாற்றத்திற்குள்ளாகாத மாதாந்திர செலவுகளை நிலையான செலவுகள் என்று கூறலாம். அவைகள் என்னென்ன?

வசிப்பதற்கு வீடுவேண்டும். அது சொந்த வீடாகவோ அல்லது வாடகை வீடாகவோ இருக்கலாம். வாடகை வீடென்றால் வாடகைச்

செலவு – சொந்த வீடென்றால் பராமரிப்புச் செலவு – வீட்டு வரி – தண்ணீர் வரி.

போக்குவரத்துச் செலவு – பஸ் / கார் / ஸ்கூட்டர் / சைக்கிள் / பெட்ரோல் / பராமரிப்பு செலவுகள் போன்றவைகள். வருமான வரி / இன்ஸ்சூரன்ஸ் பிரிமியம் / தொலை பேசி கட்டணம் / மின்சாரக் கட்டணம் போன்றவைகள்.

வீட்டு வேலையாள் / பிள்ளைகள் படிப்புச் செலவுகள் / தொலைக் காட்சி கேபிள் இணைப்பு செலவுகள், ஆலய காணிக்கைகள் / ஊழியங்களுக்கு வாக்குக்கொடுத்து கொடுக்கும் தொகைகள்.

இந்தச் செலவுகளில் மாதத்திற்கு மாதம் அதிகம் வித்தியாசம் இருக்காது.

ii). ஏற்ற–இறக்கமுறும் செலவுகள் (Flexible Expenses).

நிலையான செலவுகள்போக மிச்சப் பணந்தான் அவ்வப்போது மாற்றத்திற்குள்ளாகக் கூடிய ஏற்ற–இறக்கமுறும் செலவுகளுக்குக் கையிலிருக்கக் கூடிய பணம்.

குடும்பத்திற்காகும் சாப்பாட்டுச் செலவு நிலையான செலவுதான். ஆனால் ஏற்ற இறக்கமுறும் சந்தை (Market) நிலைவரப்படி அரிசி பருப்பு எண்ணெய் காய்கறி, மட்டன் / கோழி / மீன் போன்ற சாப்பாட்டுப் பொருட்களின் விலைவாசிகள் அவ்வப்போது மாறுவதால் இதை நிலையான செலவாகக் கொள்ள இயலாது;

மேலும் அந்தந்த மாதம் நீங்கள் போடும் மளிகைச் சாமான்களின் அளவிற்கேற்ப – தரத்திற்கேற்ப – பொருளுக்கேற்ப செலவுகளில் ஏற்ற இறக்கம் இருக்கும்.

உடை – சலவைச் செலவு, சமையல் காஸ் (Gas), தினசரி வாரந்திர மாதப் பத்திரிக்கைகள், மருத்துவச் செலவுகள், தபால் செலவுகள், இணையதள செலவுகள், செல்போன் செலவுகள், வாகன ரிப்பேர் செலவுகள் போன்றவைகள் உங்கள் பயன்பாட்டிற்கேற்ப ஏற்ற–இறக்கமுறும்.

வெளியூர் பயணச் செலவுகள், திருமணம் போன்ற வைபவங்களுக் காகக் கொடுக்கும் வெகுமதிகள். ஹோட்டல் செலவுகள், நண்பர் களுக்காகும் செலவுகள் – இவைகள் எதிர்பாராத செலவுகளாகும்.

இவைகள்போக, ஊதாரித்தனமாகத் தான்தோன்றித்தனமாகச் செய்யும் செலவுகள் – இந்தவகைச் செலவுகள்தான் கண்டிப்பாகக் கட்டுப்படுத்தப்படவேண்டிய செலவுகள்.

தேவையற்ற முதலீடுகள்

உங்கள் வீட்டை ஒருமுறை அப்படியே சுற்றிப்பாருங்கள். உங்கள் வீடு தேவைப்படும் பொருட்களால் மட்டுமா நிறைந்திருக்கிறது?

எவ்வளவு தேவையற்ற பொருட்கள் வீட்டை அடைத்துக் கொண்டு அடைகாத்துக் கிடக்கின்றன. அவைகள் யாவும் உங்கள் காசை விரயம்செய்து வாங்கியவைகள். அவைகள் வீட்டை அடைத்துக்கொண்டு வீணாகக்கிடப்பதுடன், தூக்கத்–துடைக்க வழியின்றி தூசிபடிந்து சுகாதாரக்கேட்டையும் ஏற்படுத்துகின்றன.

பெண் குழந்தைகளுக்காகப் பாத்திரபண்டங்கள் வாங்குகிறோ மென்று வாங்கிக் குவிக்காதீர்கள். நீங்கள் வாங்கும் பொருட்கள் அவர்கள் வளர்ந்து பெரியவர்களாகும்பொழுது தேவைப்படாத பொருட்களாகப் போய்விடும் நிலை ஏற்படலாம், பழைய மாடலாகி விடலாம் (Out of fashion); அல்லது அதைவிட நவீனமான பொருட்கள் சந்தைக்கு வந்துவிடலாம்.

சிலவேளைகளில் பெண்கள் திருமணமாகி வெளியூரில், வேறு மாநிலங்களில் அல்லது வெளிநாட்டில் கணவனுடன் வசிக்க நேர்ந்தால், உங்களிடமுள்ள பண்டபாத்திரங்களை அவர்களிருக்கும் இடத்திற்கு அனுப்ப ஆகும் செலவுகள், அனுப்பப்படும் பொருட்களின் விலையைவிட அதிகமாக இருக்கும்.

இப்படிப்பட்ட சூழ்நிலைகளில், உங்கள் குழந்தைகளே அவற்றை எடுத்துச்செல்ல விரும்பமாட்டார்கள். அதைவிட அவர்கள் குடியேற விருக்கும் ஊருக்கே சென்று வாங்கிக்கொடுங்கள், அல்லது அதற்குரிய பணத்தைப் பிள்ளைகளிடம் கொடுத்து அவர்கள் விரும்பும் பொருட்களை வாங்கிக்கொள்ளச்சொல்லுங்கள்.

இந்தச் செலவிற்காக வங்கியில் கணக்கு ஆரம்பித்து பணத்தை போட்டுவைத்தல் நல்லது. சாவகாசமாக யோசித்துப் பார்த்தால் எது எது தேவையற்ற செலவுகள் என்று உங்களுக்கே தெரியும்.

ஏற்கனவே செலவழித்த தேவையற்ற செலவுகளை எண்ணிப் பயனில்லை. 'சிந்திய பாலை அள்ள இயலாது; கடந்தகாலத்தை மறுபடியும் வாழ முடியாது.' ஆகையால் செலவழித்தது செலவழித்தது தான். இனியாவது, இப்படித்தான் கட்டுப்பாட்டுடன் செலவழிக்க வேண்டும் என்று உறுதிகொள்ளுங்கள். அப்பொழுது பணத்தின் அருமையையும், அதனைக் கையாளும் திறமையையும், திட்ட மிடுதலில் தெளிவையும் பெறுவீர்கள்.

நிறைவுரை

உங்களுடைய வங்கிக் கணக்கில் கணிசமான தொகையிருந் தால், வாழ்கையை எதிர்கொள்ள மனதில் தன்னம்பிக்கையும், உள்ளத்தில் அமைதியும், பிரச்சனைகளைச் சந்திக்கத் தைரியத் தையும் பெறுவீர்கள்.

சேமிக்கும் வழக்கத்தை கடைப்பிடியுங்கள்.

உங்கள் வரவிற்குள் வாழத் திட்டமிடுங்கள்.

இறைவன் ஒவ்வொருவரையும் வெவ்வேறு பொருளாதாரச் சூழலில் படைத்துள்ளார்.

எனவே மற்றவர்களைப் போல வாழ முயலாதீர்கள்.

நீங்கள் நீங்களாக வாழுங்கள்.

கர்த்தர் உங்களுக்குக் கிருபையாகக் கொடுத்துள்ள, உங்களுடைய பணத்தை எண்ணியெண்ணிச் செலவு செய்யுங்கள். கவனமாகச் செலவு செய்வதில் தவறில்லை. நீங்கள் எண்ணி யெண்ணிச் செலவுசெய்யாது, வீண் செலவுசெய்து பணத்தை விரையமாக்கினால், பின்னாளில் ஒருவேளைப் பணத்தை எண்ணி யெண்ணியே வாழ்க்கையை நடத்தும் – நகர்த்தும் பரிதாப நிலமை ஏற்பட்டுவிடலாம். ஜாக்கிரதை !

20

குடும்ப வரவு – செலவு 4

(வீட்டைக் கட்டிப்பார்)

வெளியில் உன் வேலையை எத்தனப்படுத்தி, வயலில் அதை ஒழுங்காக்கி, பின்பு உன் வீட்டைக்கட்டு (நீதி.24:27).

(Prepare your work outside, and make it fit for yourself in the field; and afterwards build your house - Prov.24:27 MKJV).

மனிதன் இவ்வுலகில் உயிர்வாழ்வதற்கு அவசியமான மூன்று அடிப்படைத் தேவைகளில் (ஊண், உடை, உறைவிடம்), மூன்றாவது இடத்தில் இருப்பது வீடு / உறைவிடம்.

ஆங்கிலத்தில் ஒரு பழமொழியுண்டு – "Fools build houses for wisemen to live." (புத்திசாலிகள் குடியிருக்க, முட்டாள்கள் வீடுகளைக் கட்டுகிறார்கள்). அதாவது சொந்தவீடு கட்டுவதைவிட வாடகை வீட்டிலிருப்பதே புத்திசாலித்தனம் என்பதே பொருள்.

ஏனென்றால், பல ஊர்களில் வீடுகட்ட செலவழித்த தொகைக்கும், அதில் கிடைக்கக்கூடிய வீட்டு வாடகைக்கும் சம்பந்தமே இருக்காது – வட்டிக்குகூட கட்டாது. நாளாவட்டத்தில் ஏறும் "சொத்துவிலை ஏற்றத்தால்" (Appriecíation Cost of the Property) மனதை தேற்றிக்கொள்ளலாம்.

"எலி வளையானாலும், தனிவளைவேண்டும்" என்று தமிழில் பழமொழியுண்டு. எந்த மனிதனுக்கும், மண் குடிசையானாலும், தன் குடிசையில் வாழ்வது ஒரு சுகம்தான்! இவ்வுலகில் காற்றுக்கும் மழைக்கும் ஒதுங்கத் தனக்கென்று ஒரு கூரை இருக்கவேண்டும் என்பது எல்லா மனிதனுக்குமுள்ள ஏக்கம்தான்.

ஆனால் அதைத் திட்டமிட்டடுச் செய்யவேண்டும். ஆழம் தெரியாமல் காலைவிட்டுவிட்டு அவதியுறாதீர்கள்; ஆழம் தெரிந்து ஆற்றைக் கடக்க எத்தனியுங்கள்; அல்லது கரையில் நின்று காலத்தைக் கழித்துக் கடந்து செல்லுங்கள். வீடுகட்டும் உங்கள் ஆசையைக் கிள்ளி எறியவோ அல்லது கருக்கவோ முயலவில்லை.

மாறாக, சொர்க்கத்தை எதிர்பார்த்து நரகத்தில் விழாதீர்கள் என்று எச்சரிக்கவே இதை எழுதுகிறேன்.

திட்டமிடுதல்

"வீட்டைக் கட்டிப்பார், கல்யாணத்தைப் பண்ணிப்பார்" என்பது முதுமொழி. வீடு கட்டும்பொழுதும், பிள்ளைகளுக்குத் திருமணம் செய்யும்பொழுதும், எதிர்கொள்ளக்கூடிய சவால்கள்/அனுபவங்கள் எண்ணற்றவை. இரண்டிலுமே சரியான திட்டமிடுதல் இல்லையென்றால் வாழ்நாளெல்லாம் வருந்தவேண்டியதிருக்கும்.

கடன்வாங்கி வீடுகட்டி, பின் வாங்கிய கடனை அடைக்க முடியாமல், தான் வசிக்கக் கட்டிய வீட்டையே விற்கும் அவலங்கள் அன்றாடம் நம் கண்கள்முன் நிகழ்ந்துகொண்டுதானே இருக்கிறது. வீடுகட்டும்பொழுது சந்திக்கும் பிரச்சனைகள் நிலம் வாங்குவதிலிருந்து ஆரம்பித்துவிடுகிறது.

நிலம் அல்லது வீடு வாங்கும்பொழுது கவனிக்கவேண்டியவைகள்:

1. எந்தப் பகுதியில் (Area) வாங்கப்போகிறீர்கள் என்பதை முடிவுசெய்யுங்கள். – பள்ளி / மருத்துவ வசதி / போக்குவரத்து / கடைகள் – உண்டா? ஒரு சில வருடங்களிலாவது அவ்விடம் வளர்ச்சியுற வாய்ப்புள்ளதா?– என்று கவனியுங்கள்.

2. நீங்கள் வேலை செய்யுமிடத்திலிருந்து எவ்வளவு தூரம்? – தினமும் கஷ்டமின்றி நீங்களும் குடும்பத்தாரும் சென்றுவர முடியுமா?

3. 'விற்பவர் சொத்திற்கு உண்மையான சொந்தக்காரரா?' என்று விசாரியுங்கள். புரோக்கர்களை மட்டுமே நம்பிவாங்காதீர்கள். நீங்களும் பலரிடம் விசாரியுங்கள். இந்தத் துறையில் தில்லுமுல்லுகள் அதிகம். ஒரே இடத்தைப் பலருக்கு விற்பது அடிக்கடி நிகழும் வாடிக்கையாகிவிட்டது. புரோக்கர்கள், விற்பனை முடிந்து கமிஷனை வாங்கியவுடன் காணாமல் போய்விடுவார்கள். நிலத்தை வாங்கியபின், நிலத்தில் வில்லங்கமென்றால் நீங்கள்தான் எல்லா ஆபீசுக்குப் நடையாய் நடந்து அல்லாடவேண்டும். நிலத்தை வாங்குமுன் இவைகளுக்காக புரோக்கர் அலைவார் அல்லது விற்பவர் அலைவார்.

4. உங்களுடைய மனதில் சந்தேகம் எழுந்தால், வாங்குவதைப் பிந்திப்போடுங்கள். அந்த இடத்தைக்குறித்து மறுபடியும் விசாரியுங்கள்.

5. அரசாங்க நிலம், அரசு ஆர்ஜிதம் செய்துள்ள நிலம் (Land acquisition), புறம்போக்கு நிலம் – இவைகளை வாங்காதீர்கள்.

6. நிலம் / வீட்டு விற்பனைத் தொழிலில் (Real Estate Business), அடாவடிப்பேர்கள் அதிகம். உங்களின் வாங்கும் ஆசையை அதிகரிக்க, விற்காத நிலங்களையும், வீடுகளையும் காட்டுவார்கள். எனவே, வாங்கவேண்டு மென்று தீர்மானித்தால், அந்த இடத்தின் / வீட்டின் சொந்தக்காரரைச் சந்தித்துப் பேசுங்கள்.

7. நம்பிக்கைக்குரிய நல்லவர்கள் நிலம்–வீட்டு–விற்பனைத் தொழிலில் இல்லாமல் இல்லை. அவர்களை இனம் கண்டு அவர்கள மூலம் வாங்கினால் நல்லது.

8. வாங்கவிருக்கும் சொத்து பத்திரங்கள், வங்கிக் கடனிற் காகவோ அல்லது வேறு தனிக் கடனிற்காகவோ ஈடாகக் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று கேளுங்கள். வங்கியில் Equitable Mortgage பண்ணியிருந்தால், 'வில்லங்க பத்திரத்தில்' (Unencumbrance Certificate) கண்டு பிடிக்க இயலாது. மூலபத்திரம் (Original Documents) விற்பவரிடம் இல்லையென்றால், எங்கேயோ – யாருக் காகவோ பத்திரங்களை ஈடாகக் கொடுக்கப் பட்டிருக் கிறது என்று புரிந்துகொள்ளுங்கள். மூலபத்திரம் இல்லாத நிலத்தை வாங்குவது ஆபத்தானது

9. கூடுமானவரை Town Planning Authorities–ல் அனுமதி வழங்கியுள்ள நிலங்களை (Approved Layout Plots) வாங்குங்கள்.

10. புரோக்கர்களின் அல்லது "சொத்து வாங்கும்–விற்கும் தொழில்" செய்பவர்களின் பேச்சுக்களில் ஏமாந்து விடாதீர்கள். Real Estate Business–ல் ஈடுபட்டடுள்ள பலருக்குப் பேச்சுதான் மூலதனம்.

வீடுகட்டும்பொழுது கவனிக்கவேண்டியவை

1. வீடு கட்டுவதற்கு முன், உரிய அதிகாரியிடம் "Building Plan Aprroval" வாங்குங்கள். கட்டும்பொழுது மாற்றங்கள் செய்தால் Revised Plan – க்கு அனுமதி வாங்குங்கள்.

2. கட்டிய வீடு என்றால் "சொத்து வரி," "மின்சார கட்டணம்," "தண்ணீர் வரி" எல்லாம் சொத்தை விற்பவர் பெயரில் முறையாகக் கட்டப்பட்டுள்ளதா? என்று பாருங்கள்.

3. உங்களுக்கு எழும் சந்தேகங்கள் எதுவானாலும் விற்பவரிடம் கூச்சப்படாமல் கேளுங்கள். வில்லங்க மில்லாமல் சொத்தைக் கொடுப்பது விற்பவரின் கடமை;

விற்குமுன் உள்ள ஆர்வத்தை விற்றபின் விற்றவர் காட்ட மாட்டார் என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

4. கூடுமானவரை முத்திரைத்தாள் மதிப்பைக் (Stamp Paper Value) குறைத்துக்கட்ட முயலாதீர்கள். சொத்து மதிப்பைக் குறைத்துப் பதிவுசெய்துவிட்டுப் (Register) பின்னால் கலெக்டரிடம் மனுச்செய்யலாம் என்று கூறுவார்கள். இது சிக்கலான வழிமுறை; அது உங்களை விரக்தியின் விளிம்பிற்கே கொண்டுபோய்விடும்.

5. வீடுகட்டத் திட்டமிடும்பொழுது மற்றவர்கள் கட்டியிருக்கும் வீடுபோல இருக்கவேண்டும் என்று அகலக்கால் வைக்காதீர்கள்; உங்கள் கையிருப்பு (Cash on hand and in Bank), கஷ்டமின்றி திருப்பிக் கட்டக்கூடிய கடன் தொகை (Loan Amout that could be obtained within your repaying capacity) இவைகளைக் கருத்தில் கொண்டு திட்டமிடுங்கள். என் அண்ணன்–தம்பி, அக்கா–தங்கை, மாமன்–மச்சான் வீட்டைவிட பெரிய வீடாகக் கட்டவேண்டுமென்று நினைத்து சிக்கலில் மாட்டிக்கொள்ளாதீர்கள். ஆகையால்தான் தமிழ்–பெண்பாற்புலவர் ஔவையார், “இடம்பட வீடு எடேல்” என்று கூறினார். அதன் பொருள்: *‘தன்னுடைய குடும்பத்திற்குத் தேவையான விஸ்தீரணத்திற்கு அதிகமான பெரிய வீடு கட்டுவது அறிவுடைமையாகாது’* என்பதாகும்.

6. சில வேளைகளில் கடன்வாங்கிக் கட்டுவதில் அனுகூலங்கள் உண்டு. வங்கிகளில் வாங்கிய கடன்களின் தவணைத் தொகையையும் (Instalments of Housing Loans), வட்டியையும் (Housing Loan Interests) கணக்கில்காட்டி வருமானவரி சலுகை பெறலாம். இந்த வருமானவரி சலுகைகளைப் பெறுவதற்காகவே, கையில் பணமிருந்தாலும், வங்கியில்கடன் பெறுபவர்கள் உண்டு.

குடியேறியபின்

குடியேறியபின், முடிந்தவரை சுற்றியுள்ளவர்களிடம் சுமூகமாக இருங்கள்; அவசரத்திற்கு அவர்கள் உதவி உங்களுக்குத் தேவை. எனவே அவர்கள் அவரசரத்திற்கு நீங்களும் உதவியாக இருங்கள்.

அவசரமாக யாரையேனும் ஆஸ்பத்திரிக்குக்கொண்டு செல்வது, பெற்றோர்கள் வெளியே சென்றுள்ளபொழுது பக்கத்து வீட்டுப் பிள்ளைகள் வந்தால் பாதுகாப்பாக வைத்திருப்பதுபோன்ற உதவிகள் செய்யலாம்.

வீட்டைப் பூட்டிவிட்டு எங்காவது சென்றிருந்தால் தபால்களை வாங்கிவைத்துக் கொடுங்கள்.

பக்கத்து வீட்டுக்காரர்கள் ஊரிலில்லாத வேளைகளில் அந்த வீட்டின்மீது ஒரு கண்ணை வைத்துக் கண்காணிப்பது, ஏதாவது உதவிக்குரல் கேட்டால் சென்று பார்ப்பது போன்ற உதவிகள் செய்யுங்கள்.

ஆனால் முடிந்தமட்டும் பணம் கொடுக்கல் வாங்கல்களைத் தவிருங்கள். "அரையிலே புண்ணும், அண்டையிலே கடனும் ஒருபோதும் ஆகாது" என்பது தமிழர்களின் வழக்குச்சொல். கவனத்திற்கொள்ளுங்கள்.

நிறைவுரை

"சிறுகக் கட்டிப் பெருக வாழுங்கள்" என்பது தமிழில் வழங்கும் பழமொழி. நமக்கு இறைவன் அளந்த அளவின்படி உறைவிடம் அமைத்து இவ்வுலகில் வாழ நாம் முயற்சி மேற்கொண்டால், அதனை வாய்க்கச்செய்ய இறைவன் ஆயத்தமாகவே இருக்கிறார்.

வருத்தத்தோடும் மனச்சஞ்சலத்தோடும் இரண்டு கைப்பிடியும் நிறையக் கொண்டிருப்பதைப்பார்க்கிலும், அமைச்சலோடு ஒரு கைப்பிடி நிறையக் கொண்டிருப்பதே நலம் (பிரசங்கி 4:6).

இறையாசியுடன் அளவோடு வீட்டைக்கட்டி வளமோடு வாழுங்கள்.

கிறிஸ்தவ வீட்டின் பத்து குணவியல்புகள்

1. கிறிஸ்தவ வீட்டிலுள்ள பெற்றோர்கள் இறைப்பற்றுள்ளவர்களாகவும், இறை நம்பிக்கையுள்ளவர்களாகவும், இறையுறவு கொண்டவர்களாகவும், தங்களுடைய முழுமனதுடனும் இறைவனிடத்தில் அன்பு செலுத்துகிறவர்களாகவும் இருப்பார்கள் (உபா.6:4,5).

2. கிறிஸ்தவ வீட்டில் இறைவார்த்தைகள் மேஜை மேலும், சுவர்களிலும் மட்டும் இராமல், ஒவ்வொருவர்களுடைய இருதயங்களிலும் இருக்கும் (உபா.6:6).

3. கிறிஸ்தவ வீட்டில் வளரும் பிள்ளைகள் இறைவார்த்தைகளைத் தங்களுடைய பெற்றோர்களிடமிருந்தே கற்றுக்கொள்ளுகிறார்கள் (உபா.6:7–9).

4. கிறிஸ்தவ வீட்டில் இறைவார்த்தையே குடும்பத்தின் அங்கத்தினர்கள் அனைவரையும் கட்டுப்படுத்துகிறது (Control) (உபா.6:7–9).

5. கிறிஸ்தவ வீட்டில், கணவன்–மனைவி உட்பட, அனைவரும் ஒருவருக்கொருவர் மரியாதை கொடுக்கிறார்கள் (எபே.5:21).

6. கிறிஸ்தவ வீட்டில், மனைவி கணவனுக்கு உண்மையுள்ளவளாக இருக்கிறாள்; கணவனும் மனைவியிடம் நேசத்துடன் இருக்கிறான் (எபே.22–23).

7. கிறிஸ்தவ வீட்டிலுள்ள கணவன் மனைவியிடம் செலுத்தும் அன்பு, கிறிஸ்து திருச்சபையிடம் செலுத்தும் அன்பிற்கு ஒப்பாக இருகிறது (எபே.25–28).

8. கிறிஸ்தவ வீட்டிலுள்ள கணவன் மனைவியிடையே காணப்படும் அன்பு, அவரவர்கள் தங்களுடைய பெற்றோர்களிடம் செலுத்தும் அன்பிற்கும் மேலாக இருக்கும் (எபே.28–33).

9. கிறிஸ்தவ வீட்டிலுள்ள அங்கத்தினர்கள், ஒரு சிறிய மோட்சத்தையே முன்ருசித்துக்கொண்டிருப்பார்கள் (எபே.5:31–33).

10. கிறிஸ்தவ வீட்டிலுள்ள பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளைச் சரியான முறையில் பயிற்றுவிக்கிறார்கள்; பிள்ளைகளும் முழுமனதுடன் பெற்றோர்களுக்குக் கீழ்படிகிறார்கள் (எபே.6:1–4).

21

முதிர் வயதுள்ள பெற்றோரைக் கனம் பண்ணுங்கள்

உனக்கு நன்மை உண்டாகியிருப்பதற்கும், உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும் உன்தகப்பனையும் தாயையும் கனம்பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங்கற்பனையாயிருக்கிறது. (எபே.6:2–3).

ஒரு நாட்டிலுள்ள மக்களை அந்த நாட்டின் 'மனித–திறன்' (Human resource) என்று பொருளாதார நிபுணர்கள் கூறுவார்கள், அந்த திறனைப் 'பயனுள்ள திறன்' (Productive resource), 'பயன்பாடில்லாத திறன்' (Unproductive resource) என்று வகைப் படுத்துவார்கள். வயதானவர்களைப் 'பயன்பாடில்லாத திறன்' என்ற பிரிவில் வகைப்படுத்துகிறார்கள். ஏனென்றால் அவர்கள் தங்களுடைய செயலாற்றும் திறனை (Productivity) இழந்து விட்டதால் இனி அவர்களால் சமுதாயத்திற்கு ஆவது ஒன்றுமில்லை என்று கருதுகிறார்கள். அவர்களை அரசாங்கம் வாழ அனுமதிப்பது மனிதாபிமான அடிப்படையில் மட்டுமே என்று கருதுகிறார்கள்.

குடும்பத்தில் பிள்ளைகளும் பெற்றோர்களைக் கிட்டத்தட்ட இப்படித்தான் கருதுகிறார்கள். முதியவர்களால் தங்களுக்கு கிடைக்கக்கூடிய பயன் ஒன்றுமில்லை என்று கருதுகிறார்கள். பால் சுரந்துகொண்டிருந்த பசுமாடு, வயது முதுமையினால் பால் சுரப்பது நின்றுபோனால், பால்பண்ணையில் அது தேவையற்ற மாடாக ஆகிவிடுவதுபோல, வருமானமற்ற முதியவர்கள் குடும்பத்தில் தேவையற்ற மனிதர்களாகிவிடுகிறர்கள்.

ஏழ்மையில் வாடும் பிள்ளைகள் மட்டுமல்ல, பொருளாதார ரீதியில் மேல்மட்டத்தில் இருப்பவர்கள்கூட முதிர்வயதுற்ற பெற்றோர்களிடம் அக்கறை கொள்வதோ அல்லது பாசம் காட்டுவதோ இல்லை. பிள்ளைகளால் நிராதரவாகவிடப்பட்டு அநாதை இல்லங்களிலும், முதியோர் காப்பகங்களிலும் தஞ்சமடையும் முதியோர்கள் பலர்.

இப்பொழுது இந்தியாவின் பெருமைக்குரிய கூட்டுக்குடும்ப பாரம்பரியம் நலிவடையத் தொடங்கிவிட்டது. பெற்றோர்களை முதியோர் இல்லங்களில் விட்டுவிடும் பழக்கம் இப்பொழுது இந்தியாவிலும் தலைதூக்க ஆரம்பித்துவிட்டது. இந்த சமுதாய கலாச்சார மாற்றம் பல காரணங்களால் நிகழ்கிறது.

காலத்தால் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்

1. முந்தைய தலைமுறைகளில், குடும்பத்தினர்கள் யாவரும் குடும்பத் தலைவனின் சொத்தையும், அதில் வரும் வருமானத்தையும் நம்பியே வாழ்க்கை நடத்தினர். இப்பொழுது ஏற்பட்டுள்ள சமுதாய மாற்றங்களினால், பல இளைஞர்கள் படிக்கிறார்கள்; பின்னர் தங்களுடைய வேலையினிமித்தம் தங்கள் சொந்த மண்ணை(ஊரை) விட்டு வெளியூர்களுக்கும் வெளிநாடுகளுக்கும் புலம் பெயர்கிறார்கள். தங்களுக்குத் தேவையான வருமானத்தைத் தாங்களே ஈட்டுவதால், தங்களுடைய பொருளாதாரத் தேவைகளுக்காகப் பெற்றோர்களைச் சார்ந்திருக்க வேண்டிய அவசியத்தில் இல்லை. இந்தச் சூழலில் முதிய பெற்றோர்கள் தனித்துவிடப்படுகிறார்கள்.

2. குடும்பக் கட்டுப்பாடுகளின் (Family Planning) காரணமாக இன்று பல குடும்பங்களில் ஒரு பிள்ளை அல்லது இருபிள்ளைகளுக்கு மேலில்லை. அந்த பிள்ளை(கள்) படிப்பினிமித்தமாக அல்லது வேலையினிமித்தமாக வீட்டைவிட்டு வெளியேறிவிட்டால், முதிய பெற்றோர்கள் தனிமரமாகிறார்கள்.

3. இப்பொழுது வாழும் பிள்ளைகளுக்கு 'மண்வாசனை' கிடையாது. பிறந்த மண்ணிலேயே வாழும் நாட்டமோ அல்லது தேட்டமோ இல்லை. இரையிருக்கும் இடந்தேடித் திரியும் பறவைகளைப்போல எங்கே வசதியான வாழ்க்கைக்கு அனுகூலங்களுண்டோ, அங்கே வாழ்க்கையை அமைத்துக்கொள்ளவே விரும்புகின்றனர். பெற்றோர்கள் தங்களிருக்கும் இடத்திற்கு வருவார்களா – என்று எந்தப் பிள்ளையும் யோசிப்பதில்லை. அப்படியே படித்த இளைய தலைமுறையினர் சொந்த ஊரில் வாழ விரும்பினாலும் அவர்களுடைய (கல்வி – அனுபவ) தகுதிகளுக்கேற்ற வேலை கிடைப்பதில்லை. ஆகையால் தங்களுடைய நலனுக்காக இடம் பெயர்வது தவிர்க்க இயலாததாகிவிடுகிறது.

4. அநேக பெற்றோர்கள் பிள்ளைகளுடன் சென்று அயலூரில் வாழுவதை விரும்புவதில்லை. தாங்கள் வாழ்ந்த மண்ணிலேயே மதிப்பும் மரியாதையுடனும் வாழவேண்டுமென்று விரும்புகின்றனர். பிள்ளைகள் வீட்டில் தங்களுடைய

வீட்டில் இருப்பதுபோல சுதந்திரமாக இருக்கமுடியாது என்பதும் ஒருகாரணம். மற்றொன்று, பழகிய சூழலையும், தெரிந்த மனிதர்களையும் விட்டுப்பிரிய மனமில்லாத மனம். இன்னும் சொல்வதானால் மாற்றங்களுக்கு அஞ்சும் மனநிலை.

5. பல பிள்ளைகளுக்கு பெற்றோர்கள்மீது இருக்கவேண்டிய அளவிற்கு அன்பு இல்லை. பல பிள்ளைகள் தங்களுடைய வாழ்நாளில் பெரும்பகுதியான நாட்களைப் படிப்பிற்காகவும் – வேலைக்காகவும் வீட்டிற்கு வெளியிலே வசிக்கிறார்கள்– வளருகிறார்கள்; எனவே, பெற்றோர்கள் மீது ஈர்ப்போ அல்லது பிடிப்போ அவர்களுக்கு இல்லை. ஆகையால் பெற்றோர்களைப் பிரிந்திருப்பதொன்றும் கடினமாகப் பிள்ளைகளுக்குத் தோன்றுவதில்லை.

6. பல பிள்ளைகள் சுயசம்பாத்தியத்தில் தாங்கள் காலூன்றும் வரைக்கும், பெற்றோர்களைப் பணம் எடுத்துக்கொள்ளக் கூடிய வங்கி சேமிப்பு கணக்கைப்போல பயன் படுத்திக் கொள்கிறார்கள். அந்த கணக்கில் தாங்களும் திருப்பிப் பணம்போடவேண்டும், அதாவது பெற்றோர்களுக்குப் பொருளாதார உதவிசெய்யவேண்டும், என்றெண்ணும் பிள்ளைகள் அரிதாகி வருகிறார்கள்.

7. பல பிள்ளைகள் தங்கள் சிறுவயதாக இருந்தபொழுது தங்களுடைய பெற்றோர்களுக்கு இருந்த அதே பொருளாதார நிலையும், உடல் நலமும் (வலிவும்) இன்னமும் இருப்பதாக நினைத்துக்கொள்கிறார்கள். கஷ்டப்படும் பெற்றோர்களும் தங்களுடைய கஷ்டங்களைப் பிள்ளைகளிடம் கூறுவதில்லை; தங்களுடைய கஷ்டங்களைக்கூறிப் பிள்ளைகளைக் கஷ்டப்படுத்தத் தயங்குகிறார்கள்.

8. சில பண்பற்ற கணவனை அல்லது மனைவியை மணந்த பிள்ளைகள், தங்களுடைய கணவனோ / மனைவியோ பெற்றோரைக் கவனிக்க அல்லது உடன் வைத்துக் கொள்ள அனுமதிக்கமாட்டார்கள் என்ற பயத்தால், தங்களுடைய பெற்றோர்களைத் தனியே விட்டுவிடுகிறார்கள். பெற்றோர்களை உடன் வைத்துக்கொண்டால் தனது கணவனோ / மனைவியோ அவர்களைத் தனது சொல்லாலும், செயலாலும் காயப்படுத்திவிடுவார்களோ என்று அஞ்சுகிறார்கள்; தனது குடும்பத்தின் அமைதி குலைந்துவிடும் என்று கருதுகிறார்கள்.

9. சில பிள்ளைகள் சுயநலவாதிகளாக இருக்கிறார்கள். பெற்றோர்களை உடன் வைத்துக்கொள்ளுவதால்

ஆகக்கூடிய அதிக செலவைத் தேவையற்ற செலவாகக் கருதுகிறார்கள்.

10. பல குழந்தைகளைப் பெற்ற பெற்றோருக்கு எழும் பிரச்சனை வித்தியாசமானது; ஒவ்வோரு பிள்ளையும், அடுத்த பிள்ளை கவனித்தால் என்ன – என்று போட்டியிட்டுக் கடைசியில் யாருமே பெற்றோர் களைக் கவனிக்காமல் விட்டுவிடுவார்கள்.

11. திருமணத்திற்கு முன்னால், கிட்டத்தட்ட எல்லாப் பிள்ளைகளுமே தங்களுடைய பெற்றோர்களுடன் வசிப்பதையே விரும்புகிறார்கள்; தங்களுடைய பெற்றோர் களுக்கு உதவிசெய்யவேண்டும் – அவர்களைக் கவனித்துக்கொள்ளவேண்டுமென்று மனதாரக் கருதுகிறார்கள். இப்படி எண்ணம் எழுகையில் பெரும் பாலான இளைஞர்கள் மணவாழ்க்கைக்குள் நுழை கிறார்கள். அதன் பிறகு தான்–தனது–குடும்பம் என்று ஆகிவிடுகிறார்கள். வந்த மருமகளோ அல்லது மருமகனோ நல்லவளாக – நல்லவனாக வாய்த்தால் பரவாயில்லை; இல்லையென்றால் தொலைபேசி (Phone) உறவுகூட அற்றுப்போகிறது. பெற்றோர்கள் பிள்ளை களுடைய வருகைக்காவும் போனுக்காகவும் ஏங்கித் தவமிருப்பதுதான் மிச்சம்.

12. பல பிள்ளைகள் தங்களுடைய பெற்றோர்களை உடன் வைத்துக்கொள்ளுவது தங்களுடைய சுதந்திரமான குடும்ப வாழ்க்கைக்கு இடைஞ்சலாகக் கருதுகிறார்கள். பல பிள்ளைகள் தங்களுடைய பெற்றோர்கள் தங்களுடைய இல்லற வாழ்க்கையில் தேவையற்ற பாரம் – அநாவசிய இணைப்பு (Appendage) என்றே கருது கிறார்கள்.

இத்தனை பிரச்சனைகளையும்மீறி உங்களுடைய பிள்ளைகள் உங்களிடம் பாசமாகவும், பணிவாகவும் இருந்தால் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்ட பெற்றோர்கள். ஒரு ஆசீர்வாதமான பரம்பரையை இந்த உலகத்தில் நீங்கள் விட்டுச்செல்கிறோம் என்று ஆனந்தப் படுங்கள். அதற்காகக் கர்த்தருக்கு அனுதினமும் ஸ்தோத்திரம் செய்யுங்கள்.

வயது முதிர்ந்த பெற்றோர்களைப் பராமரிப்பது குறித்துத் திருமறை

ஒவ்வொருவரும், தங்களுடைய 'தகப்பனையும் தாயையும் கனம் பண்ணவேண்டும்' என்பது பத்துக் கற்பனைகளிலொன்றாகும். ஐந்தாவது கற்பனை இதுதான். "உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுத்திருக்கிற தேசத்திலே, உன் வாழ்நாட்கள்

நீடித்திருப்பதற்கும் உன் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவாயாக" (யாத்.20:12). இந்தக் கற்பனையைத் தான் 'வாக்குத்தத்தமுள்ள கற்பனை' என்று பவுலடியார் கூறுகிறார் (எபே.6:2–3).

தகப்பனையும் – தாயையும் கனம்பண்ணுகிறவர்களுடைய வாழ்நாட்கள் நீடித்திருக்கும் என்று தனது கற்பனையில் கர்த்தர் வாக்குக்கொடுத்திருப்பதால் பவுலடியார் இவ்வாறு கூறுகிறார்.

"தன் தகப்பனையாவது தனது தாயையாவது சபிக்கிறவன் கொலைசெய்யப்படக்கடவன்" (யாத்.21:17) என்று மோசே எழுதுகிறார்.

லேவியராகமத்தில் "உங்களில் அவனவன் தன்தன் தாய்க்கும் தன்தன் தகப்பனுக்கும் பயந்திருக்கவும்" கட்டளையிடப்பட்டிருக்கிறது (லேவி.19:3).

மேலும், "தன் தகப்பனையாவது தன் தாயையாவது சபிக்கிற எவனும் கொலைசெய்யப்படக்கடவன்; அவன் தன் தகப்பனையும் தன் தாயையும் சபித்தால், அவன் இரத்தப்பழி அவன் மேல் இருப்பதாக" (லேவி.20:9) என்று கூறப்பட்டுள்ளது.

சாலமோனின் நீதிமொழிகள்,

இந்த ஐந்தாம் கட்டளைகளைக் கைக்கொள்ளாதவர்கள் என்னென்ன தண்டனைக்குள்ளாவார்கள் என்று சாலமோன் ஞானி கூறுவதையும் கேளுங்கள்.

"தன் தகப்பனைக் கொள்ளையடித்து, தன் தாயைத் துரத்திவிடுகிறவன் இலச்சையையும் அவமானத்தையும் உண்டாக்குகிற மகன்" (நீதி.19:26).

"தன் தகப்பனையும் தாயையும் கொள்ளையிட்டு, அது துரோகமல்ல என்பவன் பாழ்கடிக்கிற மனுஷனுக்குத் தோழன்" (நீதி.28:24).

"தகப்பனைப் பரியாசம்பண்ணி தாயின் கட்டளையை அசட்டைபண்ணுகிற கண்ணை நதியின் காகங்கள் பிடுங்கும், கழுகின் குஞ்சுகள் தின்னும்" (நீதி.30:17).

ஐந்தாம் கற்பனையைக் குறித்து இயேசு கிறிஸ்து

அன்றைய யூத சமுதாயத்தில், பக்திமான்களாக மக்கள் மத்தியிலே உலாவந்த சதுசேயர்களும், பரிசேயர்களும், பாரம்பரியம் என்ற கவசத்தின் கீழே, கற்பனைகளை எப்படி அவமாக்கினார்கள் என்பதை இயேசு தோலுரித்துக் காட்டினார்.

இறைக் கற்பனைகளுக்கு மாற்றாக அன்றைய யூத சமுதாயத்தில் நிலவிய பாரம்பரிய முறைமைகளை இயேசு ஏற்றுக்கொள்ளவில்லை.

யூதத் தலைவர்களின் தவறான போதனைகளைக் குறித்துக் கண்டிப்பதற்காக இயேசு எடுத்துக்கொண்ட எடுத்துக்காட்டே ஐந்தாம் கற்பனைதான்.

“நீங்கள் உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனைகளை ஏன் மீறி நடக்கிறீர்கள்? உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்றும்; உன் தகப்பனை யாவது தாய்யாவது நிந்திக்கிறவன் கொல்லப்படவேண்டும் என்றும் தேவன் கற்பித்திருக்கிறாரே; நீங்களோ எவனாகிலும் தகப்பனையாவது தாயையாவது நோக்கி: உனக்கு நான் செய்யத்தக்க உதவி ஏது உண்டோ அதைக் காணிக்கையாகக் கொடுக்கிறேன் என்று சொல்லி, தன் தகப்பனையாவது தன் தாயையாவது கனம்பண்ணாமற்போனாலும் அவனுடைய கடமை தீர்ந்ததென்று போதித்து, உங்களுடைய பாரம் பரியத் தினாலே தேவனுடைய கற்பனையை அவமாக்குகிறீர்கள்” (மத்.15:3–6) என்று கூறினார்.

தொடர்ந்து அவர்களை “மாயக்காரர்கள், உதடுகளால் கனம் பண்ணுகிறவர்கள், இருதயம் (கர்த்தரிடத்திலிருந்து) தூரமானவர் கள், மனுஷ உபதேசங்களைப் போதிக்கிறவர்கள், வீணாய் ஆராதனை செய்கிறவர்கள்” என்று ஏசாயா தீர்க்கதரிசி வசை பாடியது (ஏசா.29:13) இவர்களைத்தான் என்று அன்றைய மத வாதிகளைச் சாடினார்.

இந்த நிகழ்ச்சியை மாற்குவும் (7:5–13) பதிவு செய்துள்ளார். ஆலயத்தில் **‘கொர்பான்’** என்ற காணிக்கையைக் கொடுத்து விட்டால், தகப்பனையும் தாயையும் கவனிக்காமல் புறக்கணிக்கும் பாவத்திற்கு நீங்கலாக்கப்படுகிறார்கள் என்ற பாரம்பரியத்தை கடுமையாகச் சாடினார். கற்பனைக்கு விரோதமான இத்தகைய பாரம்பரிய பழக்கவழக்கங்களை இயேசு சிறிதும் ஏற்றுக்கொள்ள வில்லை. பெற்றோர்களைக் கனவீனம் செய்பவர்கள் இறையன்பைப் பெறமுடியாது – இறைவனின் ஆசீர்வாதத்தையும் இழந்து போவார்கள்.

பெற்றோர்களல்லாத முதியவர்களிடமும் மரியாதை செலுத்தவேண்டும்

முதிர் வயதினரான உங்கள் பெற்றோர்களை மட்டுமல்ல, பிறமுதியவர்களையும் கனம்பண்ணவேண்டும் என்று திருமறை கற்பிக்கின்றது. **“நரைத்தவனுக்கு முன்பாக எழுந்து, முதிர் வயதுள்ள முகத்தைக் கனம்பண்ணி, உன் தேவனுக்குப் பயப்படுவாயாக”** (லேவி.19:32).

முதியவர்கள் தவறுசெய்தாலும் அவர்களுக்குரிய மரியாதை யுடன் புத்திசொல்லவேண்டும் என்று பவுலடியார் கூறுகிறார். **“முதிர் வயதுள்ளவர்களைக் கடிந்துகொள்ளாமல், அவனைத் தகப்**

பனைப்போலவும் ..... முதிர்வயதுள்ள ஸதிரீகளைத் தாயைப் போலவும் .... பாவித்து புத்திசொல்லு" (1 தீமோ.5:1–2).

பிறமுதியவர்களிடமே மரியாதை செலுத்தவேண்டுமென்றால், சொந்தப் பெற்றோர்களைக் கனம்பண்ணுவது எவ்வளவு அவசியம்!

விதைத்ததையே அறுப்பீர்கள்

எங்கோ, எப்போதோ கேட்ட ஒரு புதுக்கவிதை நினைவிற்கு வருகிறது–

"இல்லத்தின் பெயரோ அன்னையில்லம் – ஆனால்
அன்னை இருப்பதோ முதியோர் இல்லம்."

இதுதான் இன்றைய முரண்பட்ட நடைமுறையைச் சித்தரிக்கும் எடுத்துக்காட்டு. சிந்தைக்கும், சொல்லுக்கும், செயலுக்கும் பொருந்தாத நெறிமுறைகள், இன்றைய சமுதாய வாழ்க்கை–நடைமுறைகளாக (Way of life) மாறிப்போயிருக்கின்றன.

நான் சொல்லப்போகும் இந்தக் கதை எல்லோருக்கும் தெரிந்த கதைதான். அதைக் கொஞ்சம் நினைவு படுத்திக் கொள்ளுங்கள்.

அந்த வீட்டில் வயதான பெரியவர் மரித்துவிட்டார். பெரியவரின் மகன் மற்ற ஏற்பாடுகளைக் கவனித்துக்கொண்டிருந்தார். அப்பொழுது மரித்துவிட்ட பெரியவரின் பேரன், அவர் உணவருந்தப் பயன்படுத்திய ஒரு அலுமனியத் தட்டை எடுத்துப் பத்திரப் படுத்தினான்.

இதைப் பார்த்த பையனின் தந்தை, "இனி அது எதற்கு; அதை வெளியே எறிந்துவிடு" என்றார்.

பையன் கூறிய பதில்: "இல்லையப்பா, நான் பெரியவனாகி – நீங்கள் வயதான பிறகு உங்களுக்கு இது பயன்படுமல்லவா? ஆகையால் இதைப் பத்திரமாக வைத்திருப்பேன்." மகனுடைய பதிலால் பையனின் தந்தை அதிர்ந்துபோனார்.

"மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்" (கலா.6:7) என்று திருமறை கூறுவதைக் கவனத்தில் கொள்ளுங்கள். **"மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்"** (மத்.7:12) என்ற இயேசுவின் வார்த்தைகளில் ஆலோசனை மட்டுமல்ல, எச்சரிக்கையும் இணைந்தே ஒலிக்கிறது.

"பிறர்க்கின்னா முற்பகல் செய்யின், தமக்கின்னா பிற்பகல் தாமே வரும்" என்பது தமிழ் வாக்கு. அதாவது "மற்றவர்களுக்கு நீங்கள் தீங்கு செய்தால் அதேபோன்ற தீங்கு உங்களுக்கும் வந்துரும்" என்பதே அதன் பொருள்.

ஒவ்வொரு செயலுக்கும் பிரதிச்செயல் உண்டு

ஐசக் நியூட்டனின் புவியீர்ப்பு விதி இந்த இடத்திலும் பொருத்தமாகவே இருக்கும். "For every action there is an equal and opposit reaction"- என்பதுதான் அந்த விதி. அதாவது, "ஒவ்வொரு செயலுக்கும் எதிரான, சரிசமமான பிரதிச்செயல் உண்டு" என்பதுதான் அதன் பொருள்.

உங்களுடைய ஒவ்வொரு அசைவையும் உங்கள் பிள்ளைகள் கவனித்துக்கொண்டிருக்கிறார்கள். நன்மையானவைகளையும், தீமையானவைகளையும் பெற்றோர்களிடமிருந்தே பிள்ளைகள் கற்றுக்கொள்ளுகிறார்கள். நீங்கள் உங்கள் பெற்றோரைக் கனம் பண்ணி, கீழ்ப்படிந்து நடப்பதையும் அவர்களுடைய முதிர்வயதில் அவர்களைக் கவனிப்பதையும் உடனிருந்து கவனிக்கும் உங்களுடைய பிள்ளைகளின் மனதில் அது ஒரு குடும்ப பாரம்பரிய பழக்கமாகப் பதிந்துவிடும். அப்போது நீங்கள் முதிர் வயதினராக ஆகும்பொழுது உங்கள் பிள்ளைகளும் உங்களைக் கவனிப்பதில் தயக்கமோ – வெறுப்போ கொள்ளமாட்டார்கள்.

உங்களுடைய நலனை முன்னிட்டாவது அதாவது தன்னலத்துடனாவது, உங்களுடைய பெற்றோர்களைக் கவனியுங்கள் – கனம்பண்ணுங்களேன்.

பெற்றோர்களைப் பிள்ளைகள் ஏன் கவனிக்கவேண்டும்?

1. முதியவர்களைக் கனம்பண்ணுவது, முக்கியமாகப் பெற்றோர்களைக் கனம்பண்ணுவது கர்த்தர் நமக்குத் தந்துள்ள கட்டளை (கற்பனை). கனம் பண்ணுவது என்றால் அவர்களிடம் அன்பு செலுத்துவது, அவர்களை மதிப்பது, மரியாதையளிப்பது, பேணுவது, பணிவிடை செய்வது யாவும் அடங்கும். இந்தக் கற்பனையைக் கைக்கொண்டு நடந்தால், 'ஆயுசு நாட்கள் நீடிக்கும்' என்பது இறைவனின் வாக்கு. அவர் வாக்குமாறாக் கர்த்தரல்லவா?

2. மானுடக் குழந்தை இவ்வுலகில் அவதரிப்பதற்கு இறைவனே காரணர். என்றாலுங்கூட, பிறக்கும் ஒவ்வொரு குழந்தையின் சரீரமும் ஆண்–பெண் உறவால் கருவுற்று, அன்னையின் கருப்பையில் பத்துமாதம் வளர்ச்சியுற்று அதன் பின்னர்தான் இந்த உலகைக் காண்கிறது. இந்த உலகில் நாம் உயிர்வாழ்வதற்காக நமது சரீரத்தை அளித்தவர்களுக்கு நாம் செய்யவேண்டிய நன்றிக்கடன், அவர்களுடைய கடைசிகாலத்தில் அவர்களைப் பேணுவதாகும். ஆகையால்தான், சாலமோன் ஞானி, "உன்னைப் பெற்ற தகப்பனுக்குச் செவிகொடு; உன் தாய் வயது

சென்றவளாகும்போது அவளை அசட்டை பண்ணாதே" (நீதி.23:22) என்று கூறுகிறார்.

3. பெற்றோர்களுடைய தியாகங்களுக்கு முன்னால் பிள்ளைகளால் செய்யத்தக்க கைமாறு ஒன்றுமில்லை; பெற்றோர்களுக்கு நீங்கள் என்றென்றும் கடன்பட்டவர்களே. என்றாலும் அவர்களைக் கவனித்துக் காப்பாற்றி அன்பையும், நன்றியையும் காட்டலாம். ஆகையால் பெற்றோர்களைக் கனம்பண்ணுவதும், அவர்களுக்குப் பணிவிடைபுரிவதையும் பாரமாக அல்ல – பாக்கியமாகக் கருதுங்கள்.

4. மனிதனுடைய குழந்தைப் பருவத்தில் எப்படிப் பெற்றோர்களுடைய அன்பும், ஆதரவும், அரவணைப்பும் தேவைப்பட்டதோ, அதைப்போலவே முதுமையான நாட்களில் பிள்ளைகளின் அன்பும், ஆதரவும், அரவணைப்பும் பெற்றோர்களுக்குத் தேவைப்படுகிறது. குழந்தையாக இருந்தபொழுது உங்களிடம், உங்கள் பெற்றோர்கள் காட்டிய அதே தன்னலமற்ற அன்பை அவர்களுடைய முதுமையில் அவர்களுக்குத் திருப்பிக் காட்டுவதற்கு நீங்கள் கடமைப்பட்டுள்ளீர்கள்.

5. வாழ்க்கையின் சில இக்கட்டான சூழ்நிலைகளில் அவர்களுடைய அனுபவ ஆலோசனைகள் உங்களுக்குக் கிடைக்கும் என்ற மனதைரியம் உங்களுக்கு அபரிமிதமான மன பலத்தைக்கொடுக்கும். "முதியோரிடத்தில் ஞானமும், வயது சென்றவர்களிடத்தில் புத்தியும் இருக்குமே" (யோபு 12:12).

6. இப்போது நீங்கள் அனுபவிக்கும் சமுதாய அந்தஸ்திற்குக் காரணம் உங்களுடைய பெற்றோர்களே. இன்னாரின் குடும்பம் (பிள்ளைகள்) என்றுதான் சமுதாயத்தில் நீங்கள் அறியப்படுகிறீர்கள். உங்களுடைய பரம்பரை (Antecedent) உங்களுடைய பெற்றோர்களால்தான் அறியப்படுகிறது. "பிள்ளைகளின் பிள்ளைகள் முதியோருக்குக் கிரீடம்; பிள்ளைகளின் மேன்மை அவர்கள் பிதாக்களே" (நீதி.17:6).

7. உங்கள் பெற்றோர்கள் இருக்கும்வரைக்கும் உங்களை நீங்கள் இளமையாக எண்ணுவீர்கள். அந்த எண்ணம் உங்களுக்குத் தெம்பையும் உற்சாகத்தையும் கொடுக்கும்.

8. உங்கள் பெற்றோர்கள் இருக்கும்வரைக்கும் ஒன்றுவிட்ட– இரண்டுவிட்ட சொந்தங்களுடன் தொடர்பு இருக்கும். அவர்களுடைய மரணத்துடன் பல சொந்தங்கள் முடிந்துவிடும் – தூரமாகிவிடும்.

9. சிலவேளைகளில் பெற்றோர்களைக் கவனிப்பது உங்களுக்கு பாரமாக இருக்கலாம்; உங்களுடைய அன்பை உங்கள் பெற்றோர்கள் புரியாதிருக்கலாம்; இல்லை யென்றால் உங்களுடைய சகோதர சகோதரிகளிடம் பாரபட்சமான அன்பைக் காட்டலாம். இதனால் உங்களுடைய கடமையைச் செய்யாதிருக்காதீர்கள். உங்கள் கடமையை நீங்கள் செய்யுங்கள்.

10. துன்மார்க்கத்திலிருக்கும் பிள்ளைகளைப்பற்றியும், வாழ்க்கையில் கஷ்டப்படும் பிள்ளைகளைப்பற்றியும் பெற்றோர்களுக்கு தவிப்பு அதிகமாக இருக்கும். 'நான் எவ்வளவு செய்தும் என்னிடம் அக்கறையில்லையே' என்று ஒருவேளை நீங்கள் அங்கலாய்க்கலாம். ஆனால் பெற்றோர் களின் தவிப்பிற்குக் காரணம், தாங்கள் அந்தப் பிள்ளையை மட்டும் சரியாக வளர்க்காமல் விட்டு விட்டோமோ என்ற குற்றவுணர்வால் ஏற்படும் தவிப்பே என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.

இந்த இடத்தில் ஒரு கதை என்னுடைய நினைவிற்கு வருகிறது. ஒரு தாய் மரண தறுவாயிலிருந்தார். அவருடைய பிள்ளைகளில் ஒருவரைத் தவிர மற்றவர்கள் எல்லாம் அருகே இருந்தனர். அருகில் இராதவன் பாவ வழியில் சென்று தன்னுடைய வாழ்க்கையைத் தொலைத்துப்போட்டவன். அவனைப் பார்க்க அந்தத் தாய் துடித்தார்.

மற்ற பிள்ளைகளுக்கு ஏகவருத்தம். "நாம் எவ்வளவு செய்தோம், ஆனால் சாகும் தறுவாயில் தங்களுடைய அன்னை, அவரைச் சட்டை செய்யாத – அவருக்குக் கீழ்ப்படியாத மகனையல்லவா தேடுகிறார்" என்று எண்ணி ஆதங்கப்பட்டார்கள்.

எங்கெங்கோ தேடி அந்த மகனைப் பிடித்து அழைத்து வந்து விட்டார்கள். அந்த மகனைப் பார்த்ததும் அந்தத் தாய் கண்ணீருடன் கூறினார், "மற்ற பிள்ளைகளையெல்லாம் மோட்சத்தில் மறுபடி சந்திப்பேன் என்ற நம்பிக்கை இருக்கிறது; உன்னை மோட்சத்தில் பார்ப்பேன் என்ற நம்பிக்கை எனக்கில்லை. ஆகையால்தான் உன்னைக் கடைசியாகப் பார்த்துவிடவேண்டுமென்று பரித வித்தேன்" என்று கூறினாராம். ஆகையால் பெற்றோர்களுடைய மனநிலையை அவர்களுடைய கோணத்தில் பார்த்தால்தான் அவர்களுடைய நியாயங்கள் புரியும்.

சில வேளைகளில் சில பிள்ளைகள் பெற்றோர்களைத் தந்திரமாக ஏமாற்றிக் காரியம் சாதிப்பதுமுண்டு. அப்படி உங்கள் பெற்றோர்கள் மற்ற பிள்ளைகளிடம் ஏமாறினாலும் பாதகமில்லை. ஏமாற்றியவர்கள் எங்காவது ஏமாறுவார்கள். நீங்கள் பெற்றோர் களுக்கு உங்கள் கடமையைச் செய்யுங்கள். உங்கள் பெற்றோர்களை நீங்கள் கனம் பண்ணுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

நிறைவுரை

பெற்றவர்கள் உயிருடன் இருக்கும்பொழுது அவர்களை மதிக்காது நடந்து, உதாசினப்படுத்திய பிள்ளைகள், அவர்கள் மரித்த பின்பு பெரிய போட்டோக்களை வீட்டில் மாட்டி மாலையிடுவதும், அவர்கள் பிறந்த அல்லது இறந்த நாட்களில் அன்னதானம் செய்வதும், அவர்களுக்கு சலவைக்கல் கல்லறைகள் கட்டுவதும் அர்த்தமற்றது. பெற்றோர்கள் உயிருடன் இருக்கும்பொழுதே கற்பனைகளைக் கைக்கொண்டு அவர்களைக் கனம்பண்ணுவதே இறைவனின் விருப்பம்.

நாம் கற்பனைகளைக் கைக்கொண்டொழுகவேண்டும் என்றே கர்த்தர் விரும்புகிறார். **"என் மகனே, என் போதகத்தை மறவாதே; உன் இருதயம் என் கட்டளைகளைக் காக்கக் கடவது. அவைகள் உனக்கு நீடித்த நாட்களையும், தீர்க்காயுசையும் சமாதானத்தையும் பெருகப்பண்ணும்"** (நீதி.3:1–2).

ஜாண் ஸ்டீவன்ஸ் எழுதியுள்ள நெஞ்சைத்தொடும் ஆங்கிலக் கவிதையொன்றைத் தமிழில் மொழிமாற்றம் செய்துகொடுத்துள்ளேன். ஒரு தாய் தனது பிள்ளைகள் முன்னால் வைக்கும் வேண்டுகோளாக இந்தக் கவிதை அமைந்துள்ளது.

எனது குழந்தைகளுக்கு வேண்டுகோள்

உண்ணு கையில் உணவு சிந்தி ஆடை அழுக்கானால் –அன்றில்
என் காலணியைச் சீராயணிய நான் மறந்தால், தயவுடன்
உன் நினைவில் கொஞ்சம் பின்னோக்கி செல், உனக்காய்
நான் செலவிட்ட காலத்தைக் கருதிப் பொறுமை கொள்.

கவனமாக உணவருந்த உனக்கு நான் கற்பித்ததையும் –
உனக்குகழுத்துப் பட்டை– காலணி யாவும் நான் அணிவித்த
அன்றைய நாட்களையும் நினைவில்கொண்டால் – எனது
இன்றைய அழகற்ற முதிய முகத்தை வெறுக்காதிருப்பாய்.

சொன்ன கதையையே நான் திருப்பிச் சொன்னாலும்
முன்னமே கதை முழுதையும் நீ அறிந்திருந்தாலும்,
உனது பால வகுப்பு 'பாப்பா–பாட்டை' நூறு முறை நான்
உன்னுடன் சேர்ந்து பாடியதை நினைத்துக்கொள்.

என் கால்கள் களைத்து, நிற்க நான் தடுமாறினாலும்
நான் நினைத்தபடி நேராய்நடக்க இயலாது போனாலும்
அன்று உனக்கு நான் உதவினாற்போல் – எனது கரத்தை
இன்று நீ தயவாய் பற்றிக் கவனமாய் வழி நடத்து.

-(John Stevens' Poem *'To my children"*).

பெற்றோர்களைப் பேணி, அவர்களிடம் அன்பு செலுத்துவதையே இறைவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார். கர்த்தர் சீயோனுக்குத் திரும்பி எருசலேமில் வாசம்பண்ணும் காட்சியை சகரியா தீர்க்கதரிசி இப்படி வர்ணிக்கிறார்,

"திரும்பவும் எருசலேமின் வீதிகளில் முதிர் வயதினாலே தங்கள் கைகளில் கோலைப் பிடித்து நடக்கிற கிழவரும் கிழவிகளும் குடியிருப்பார்கள். நகரத்தின் தெருக்களிலே விளையாடுகிற ஆண் பிள்ளைகளும், பெண் பிள்ளைகளும் அதின் வீதிகளிலே நிறைந்திருக்கும்" (சக.8:4–5).

உங்கள் வீடுகளிலும், உங்களுடைய இருதயங்களிலும் கர்த்தர் வாசம்பண்ணினால், உங்கள் இல்லங்களில் முதியவர்களும், வாலிபர்களும் குழந்தைகளும் மகிழ்ச்சியுடன் ஒன்றாக – ஒற்றுமையாக இருப்பார்கள். உங்கள் வீடு சகரியா தீர்க்கர் கண்ட எருசலேம்போல் இருக்கும்.

TO MY CHILDREN

When I spill some food on my nice clean dress
Or maybe forget to tie my shoe,
Please be patient and perhaps reminisce
About the many hours I spent with you.
When I taught you how to eat with care,
Put on your shoe and tie your lace,
If you think of these when my age you bare,
You may not notice my messy face.
If I tell the story one more time,
And you know the ending through and through,
Please remember your first nursery rhyme
When I rehearsed it a hundred times with you.
When legs are tired and it's hard to stand
Or walk the steady pace I would like to do,
Please take me carefully by my hand,
And guide me now as I did for you.

— John Stevens

22

முதுமையை எதிர்பாருங்கள் முதுமையை எதிர்கொள்ளுங்கள்

"முதிர்ந்தவயதில் என்னைத் தள்ளிவிடாமலும், என்னுடைய பெலன் ஒடுங்கும்பொழுது என்னைக் கைவிடாமலும் இரும்" (சங்.71:9).

"எல்லோருக்கும் அதிக நாள் வாழ ஆசைதான், ஆனால் எவருக்கும் முதுமையடைய விருப்பமில்லை" என்று ஆபிரகாம் லிங்கன் வேடிக்கையாகக் கூறுகிறார் (Every one desires to live long, but no one would be old - Abraham Lincoln).

'முதியவர்களான பின்னர் முதுமையில் தாங்கள் எப்படி நடந்து கொள்ளவேண்டும்? முதுமையை எப்படி எதிர்கொள்ளவேண்டும்?' என்பதை அறிந்துகொள்ளாமல் பல முதியவர்கள் தங்களைச் சுற்றிப் பிரச்சனைகளைத் தாங்களே பெரும்பாலும் உருவாக்கிக்கொள் கிறார்கள். தாங்கள் வாழுவதற்கே போராடிக்கொண்டிருக்கும், தன்னுடைய பிள்ளைகளுக்குப் பாரமாக இருக்கக்கூடாது என்று இறுதிமூச்சுவரை உழைத்துக்கொண்டே இருக்கும் பெற்றோர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்.

அதே வேளையில், "யார் எப்படிப்போனாலும், பிள்ளைகள் என்னைக் கவனிக்கவேண்டும்; ஆனால் நான் என்னவேண்டு மென்றாலும் செய்வேன்; எப்படிவேண்டுமென்றாலும் இருப்பேன். பிள்ளைகள் பிறந்த கடனை செய்தாகவேண்டும்" என்று அடம் பிடிக்கும் பெற்றோர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். இந்தப் பெற்றார்கள் 'தங்களுடைய கடமைகளைச் சரியாகச் செய்தார் களா?' என்பது வேறுவிஷயம்.

தவறான கண்ணோட்டத்தில் இருக்கும் பெற்றோர்களுக்கும், தவறான எதிர்பார்ப்புகளுள்ள பெற்றோர்களுக்கும் ஆலோசனை வழங்குவது அவசியம் என்று கருதுகிறேன்.

மோட்சம் சென்ற தம்பதியர்

மோட்சத்திற்குச் சென்ற ஒரு முதிய தம்பதியரைப் பற்றிய வேடிக்கையான கற்பனைக் கதையொன்றொண்டு.

எண்பது வயதைத் தாண்டிய, அறுபது ஆண்டுகளுக்கு மேலாகத் திருமண வாழ்க்கை வாழ்ந்த ஒரு தம்பதியர் ஒரு விபத்தில் ஒன்றாக மரித்துப்போனார்கள். அவர்கள் உணவு கட்டுபாட்டிலும், அனுதின உடற்பயிற்சியிலும் மிகவும் கவனமுள்ளவர்களாயிருந்து, அந்த வயதிலும் தங்களுடைய உடம்பை ஆரோக்கியமாக வைத்திருந் தார்கள்.

அவர்கள் இருவரும் மோட்சத்தின் வாயிலை அடைந்தவுடன் பேதுரு அவர்களை வரவேற்றார். இருவரையும் மிகவும் அழகான ஒரு மாளிகைக்கு அழைத்துச்சென்றார். இருவரும் உள்ளே சென்று பார்த்தனர். அந்த வீட்டின் ஆடம்பரமான படுக்கையறையும், எல்லா வசதியுமுள்ள சமையலறையும், சிறந்த குளியலறையும் அவர்களைக் கவர்ந்தது.

கணவர், **"இந்த வீட்டில் வசிப்பதற்கு எவ்வளவு செலவாகும்; வாடகை எவ்வளவு?"** என்று பேதுருவிடம் கேட்டார்

"இது மோட்சம்; இங்கே வசிக்க நீங்கள் ஒன்றும் தரத் தேவையில்லை" என்றார் பேதுரு.

வீட்டிற்குப் பின்புறம் சென்றார்கள். அங்கே எல்லாவிதமான விளையாட்டுகளும் விளையாடுவதற்கான அழகிய மைதானம் இருந்தது. அந்தக் கணவர் பேதுருவிடம் திரும்பி, **"இந்த மைதானத்தைப் பயன்படுத்த மாதம் எவ்வளவு தரவேண்டும்?"** என்று வினவினார்

"இது மோட்சம்; இந்த மைதானத்தை உபயோகிக்க நீங்கள் ஒன்றும் தரத்தேவையில்லை" என்றார் பேதுரு.

பின்பு அங்கிருந்த உணவகத்திற்குச் சென்றார்கள். மிகவும் சிறந்த உணவு வகைகள் சாப்பாட்டு மேஜைமேல் அலங்காரம் செய்து வைக்கப்படிருந்தன. கணவர் பேதுருவிடம் திரும்பி, **"இங்கே சாப்பாட்டிற்கு எவ்வளவு பணம் கொடுக்கவேண்டும்?"** என்று கேட்டார்.

"இன்னமும் உங்களுக்குப் புரியவில்லை என்று நினைக் கிறேன்; நீங்கள் இப்பொழுது மோட்சத்தில் இருக்கிறீர்கள். இங்கு எல்லாமே ஓசிதான்; நீங்கள் எவ்வளவு வேண்டு மானாலும் உண்ணலாம்; நீங்கள் எதுவும் தரத்தேவையில்லை" என்றார் பேதுரு.

கணவர் ஆச்சரியப்பட்டார். **"சரி; நான் உணவுக் கட்டுப் பாட்டில் இருக்கிறேன்; எனக்குக் கொழுப்புச் சத்தில்லாத உணவு கிடைக்குமா?"** என்று கேட்டார்.

பேதுரு அவர்களுக்கு விளக்க ஆரம்பித்தார். "நான் சொல்லுவதைக் கேளுங்கள்; இங்கு நீங்கள் எதைவேண்டுமானாலும், எவ்வளவு வேண்டுமானாலும் உண்ணலாம்; நீங்கள் குண்டாகவும் மாட்டீர்கள், நோயுறவும் மாட்டீர்கள்; ஏனென்றால் நீங்கள் இருப்பது மோட்சம்" என்றார்.

இவைகளைக் கேட்ட பின்பு அந்த முதிய கணவருக்கு கோபம் தலைக்கேறிவிட்டது, 'காச்மூச்' என்று கத்த ஆரம்பித்திவிட்டார். முதியவரின் மனைவியும், பேதுருவும் அவரைச் சமாதானப்படுத்தி விஷயம் என்னவென்று கேட்டார்கள்.

அந்த மனிதர் தன்னுடைய மனைவியைப் பார்த்துக் கூறினார், "எல்லாம் உன்னுடைய தவறுதான்; உன்னால்தான் எல்லாம் வந்தது; நீ என்னை என் இஷ்டத்திற்குச் சாப்பிடவும், சுற்றவும் அனுமதித்திருந்தால் பத்து வருடத்திற்கு முன்பே இங்கு வந்திருப்பேனே; இவைகளையெல்லாம் ஓசியாகப் பத்து வருடங்களுக்கு முன்பே அனுபவிக்க ஆரம்பித்திருப்பேனே" என்று அங்கலாய்த்தாராம்.

இந்தக் கதையைக் கூறுவதால், நீங்கள் இஷ்டத்திற்குச் சாப்பிடுங்கள், ஊர் சுற்றுங்கள் என்று கூறவரவில்லை. அப்படி அவர் இருந்திருந்தால், கடைசி சில ஆண்டுகள் ஆரோக்கிமின்றி, தானும் கஷ்டப்பட்டு, மனைவி–பிள்ளைகளையும் வருத்தி, சாவு எப்பொழுது வரும் என்று பரிதாபமாகத் தவமிருந்திருப்பார்.

"வாழ்க்கை என்பது வெங்காயம் போன்றது. ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு இதழாகப் பிரிக்கவேண்டும், சில வேளைகளில் அழவேண்டியதிருக்கும்" (Life is like an onion; You peel it off one layer at a time, And sometimes you weep — Carl Sandburg). ஆனால் வாழ்க்கை நிரந்தர அழுகையல்ல என்பதையும் நினைவில் கொள்ளுங்கள்.

"வாழ்க்கை என்பது நிஜம்! வாழ்க்கை விலையேறப் பெற்றது! அதன் இலக்கு கல்லறையல்ல: நீங்கள் களிமண்தான், மண்ணிற்குத்தான் திரும்புவீர்கள், ஆனால் ஆவியைக் குறித்து அப்படிச் சொல்லப்படவில்லையே" (Life is real! Life is earnest! And the grave is not its goal;Dust thou art, to dust returneth,Was NOT spoken of the soul.—Henry Wadsworth Longfellow).

ஆகையால் மண்ணிற்குத் திரும்பும் உடலைவிட நித்தியத்திற்குப் பாத்தியமான உங்களுடைய ஆவியைக்குறித்து அதிக கவனம் செலுத்துங்கள்.

முதுமையும் மானுட வாழ்க்கையில் கடந்துசெல்லவேண்டிய வழித்தடமே

முதுமை என்றாலே கிட்டத்தட்ட எல்லோருக்கும் பயம் அல்லது வெறுப்பு. காரணமென்ன?

முதுமை வந்துவிட்டால், தாங்கள் இந்த உலகில் வாழும் நாட்களின் முடிவை நெருங்கிவிட்டோம் என்று கருதுகிறார்கள். இக்கருத்து சரியானதல்ல. முதுமையைக் காணாமலே இவ்வுலகில் முடிந்துபோனவர்கள் இல்லையா?

உங்களுக்கு அறுபது வயதைத் தாண்டியிருந்தால், உங்களோடு படித்தவர்கள், வேலை பார்த்தவர்கள் எத்தனை பேர்கள் ஏற்கனவே இந்த உலகைவிட்டுக் கடந்து சென்றிருக்கிறார்கள் என்று நிதானமாக யோசித்துப் பாருங்கள். ஏறத்தாள 30 முதல் 40 சதவீதமுள்ளவர்கள் இயற்கையெய்தியிருப்பார்கள்.

ஒருவேளை உங்களுக்கு எழுபது வயது சென்றிருந்தால் உங்களுடைய பூரண வாழ்க்கையை இந்த உலகில் நீங்கள் வாழ்ந்து விட்டீர்கள் என்று தேவனுடைய மனுஷனான மோசே கூறுகிறார் (சங்.90:10).

எழுபது வருஷங்களுக்கு மேல் நீங்கள் வாழும் ஒவ்வொரு வருஷமும், கர்த்தர் உங்களுக்குக் கிருபையாகக் கொடுத்துள்ள மிகையாண்டுகள் (Bonus years). அதற்காகக் கர்த்தருக்கு நன்றி செலுத்துங்கள். மறுமைக்கு உங்களை ஆயத்தப்படுத்த ஆரம்பியுங்கள். இந்த உலகில் பூரண ஆயுசுடன் வாழவேண்டுமென்றால், முதுமையும் மானுட வாழ்க்கையில் கடந்து செல்லவேண்டிய ஒருபாதை. அதுதான் உங்கள் வாழ்க்கைப் பயணத்தின் உச்சகட்டம் (Climax).

ஒரு சீனப்பழமொழியொன்றுண்டு: **"நாம் நம்மை நாமே முட்டாளாக்கிக்கொள்கிறோம். நீண்ட நாட்கள் உயிர்வாழ ஜெபிக்கிறோம், ஆனால் முதுமையைக் கண்டு அஞ்சுகிறோம்."** (We fool ourselves. We pray for a long life, and fear old age - *(Chinese Proverb)*.

சரீரத்தில் நீண்ட நாட்கள் உயிர் வாழவேண்டுமென்றால், சரீரம் மூப்படைவதைத் தடுக்கமுடியாது. இதுதான் ஜீரணிக்கவேண்டிய நிஜம் (Old Age is a fact of life for every body, if we don't die before). பிறந்தவரெல்லாம் இறவாது இப்பூமியில் தங்கிவிட்டால், இனிப் பிறப்பவர்களுக்கு இங்கே இடமேது? பழையன கழிதலும் புதியன புகுதலும் இறைவன் இயற்கையில் வகுத்துள்ள நியதி.

பிறந்தவர்கள் அனைவரும் வளருவதும் – வாலிபராவதும் – பெரியவர்களாவதும் – முதியவர்களாவதும் – இறப்பதும் தொன்று தொட்டு இன்றுவரை இவ்வுலகில் அன்றாடம் நிகழ்ந்து கொண்டிருக்கும் சாதாரண மானுட நிகழ்வு.

அரசனானாலும் – ஆண்டியானாலும், பக்தனானாலும் – பாவியானாலும், செல்வந்தனானாலும் – ஏழையானாலும், ஆணானாலும் – பெண்ணானாலும் இந்த விதிகளுக்கு விலக்கல்ல.

உலகில் பிறந்த யாராவது வயது ஏறாமல் அப்படியே இருந்திருக்கிறார்களா? அல்லது யாருக்காவது வயது குறைந்துகொண்டே இருந்திருக்கிறதா? இந்த உலகில் யாராவது, அவர் எவ்வளவு பெரிய ஆளாக இருந்தாலும், சாசுவதமாக உயிர் வாழ்ந்திருக்கிறார்களா?

மானுடனாக வாழ்ந்துகொண்டிருக்கும் ஒவ்வொருவருக்கும் பிறந்தநாள் எப்படி நிச்சயமாக உண்டோ, அப்படியே இறக்கவிருக்கும் நாளொன்றொண்டு என்பதும் அவ்வளவு நிச்சயமானது. சாவைத் தள்ளிப்போடலாம் – தவிர்க்க முடியாது.

இல்லற வாழ்க்கையின் எடுத்துக்காட்டாகத் திகழும் நோவாவும், கர்த்தருடைய நண்பனான ஆபிரகாமும், கர்த்தரிடம் முகமுகமாகப் பேசிய மோசேயும், கர்த்தரின் இதயத்திற்குகந்த தாவீதும், கிறிஸ்துவிற்கு அன்பான அடியாராகிய யோவானும் தங்கள்–தங்கள் காலம் முடிந்தவுடன், இவ்வுலகைவிட்டும் – உடலைவிட்டும் தங்களுடைய பிதாக்களின் வழியிலேயே மரணமெய்தினார்கள். யாரும் இதற்கு விதிவிலக்காக இருக்கவில்லை.

முதுமையையும் சாவையும் எண்ணி அஞ்சுவது அர்த்தமற்றது. ஆதரவற்ற முதுமையும் – அகாலமரணமும் ஏற்படக்கூடாது என்று ஜெபிப்பது நியாயமானதே. முதுமையே ஏற்படக்கூடாது என்றோ அல்லது சாவே வரக்கூடாது என்றோ ஜெபிப்பது தவறானது.

வள்ளுவர், மானுடர்களின் நிலையாமையைக் குறித்து கூறும் கூற்றினைக் கேளுங்கள்

நெருநல் உளனோருவன் இன்றில்லை என்னும்
பெருமை யுடைத்து இவ் வுலகு – (குறள்336).

(பொருள்: இந்த உலகம், நேற்றிருந்த ஒருவன் இன்றில்லை என்னும் நிலையாமையாகிய பெருமையை உடையதாக இருக்கிறது.)

சமணசமய நூலான நாலடியார் கூறுவதைக் கேளுங்கள்

புல்நுனிமேல் நீர்போல் நிலையாமை என்றெண்ணி
இன்னினியே செய்க அறவினை – இன்னினியே
நின்றான் இருந்தான் கிடந்தான் கேள் அலறச்
சென்றான் எனப்படுதலான் – (அதிகாரம்: நிலையா யாக்கை).

(பொருள்: இப்பொழுது இங்கே நின்றுகொண்டிருந்தான், அமர்ந்திருந்தான், படுத்துக்கிடந்தான், உற்றார் உறவினர்கள் அழுது புலம்ப இவ்வுலகைவிட்டுச் சென்றுவிட்டான் என்று சொல்லப்படுவதால், புல்லின் நுனிமேலுள்ள நீர்த்துளியைப்போல் இவ்வுலக வாழ்க்கை நிலையில்லாது என்பதை நினைவில்கொண்டு நற்காரியங்களைச் செய்து ஒழுக்கமாக இருக்கவேண்டும்).

முதுமை உங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி என்று நினைக்கிறீர்களா? கண்டிப்பாக இல்லை.

முதுமையைக்குறித்து கார்ல் ஜங் கூறுகிறார்: "வாழ்க்கையின் மாலைப்பொழுதும் தன்னில்தானே மிகவும் சிறப்புவாய்ந்த தாகத்தான் இருக்கிறது; அது வாழ்க்கையின் காலைப் பொழு துடன் சேர்க்கப்பட்ட பரிதபிக்கத்தக்க இணைப்பாக ஒரு போதும் இருக்கக்கூடாது" (The afternoon of life must also have the significance of its own and cannot be merely a pitiful appendage to life's morning - *Carl Jung*).

குழந்தைப் பருவத்தைப்போல, வாலிப பருவத்தைப்போல, முதுமையும் கர்த்தருடைய வெகுமதிதான். முதுமையையும் அனுபவியுங்கள். இந்த உலகம் நமக்கு சாசுவதமில்லை. பவுலடியார், "நமது குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது" (பிலி.3:29) என்று கூறுகிறார். அப்படியானால், நமது முதுமை பரலோகத்தின் வாழ் விற்காக ஆயத்தப்படும் இறுதிக்கட்டம் அவ்வளவுதான்.

முதுமை என்பது வாழ்க்கையின் முடிவல்ல, மனிதனின் இறுதி வளர்ச்சி என்பதுதான் சரியானது. முதுமையில் அன்றன்றைய தினத்தை அன்றன்று வாழவேண்டும் (The task of old person is to continue to live the now).

முதுமைக்குத் தயாராகுங்கள்

முதுமையைத் தவிர்க்க இயலாது என்றால் அதைச் சந்திக்கத் தயாராவதுதான் புத்திசாலித்தனம். பலர் வாழ்க்கையின் இந்த நிதர்சன உண்மையைப் புரிந்துகொள்ளாமல் அல்லது ஏற்றுக் கொள்ளத்தயங்கித் தங்களுடைய இறுதி நாட்களை நரகமாக்கிக் கொண்டு மடிகிறார்கள்.

பலர் அர்த்தமற்ற பிரச்சனைகளை மண்டையில் ஏற்றிக்கொண்டு உடல் நலிவுற்று, காலம் வருமுன்னரே முதுமையடைகின்றனர் - கல்லறைக்கு விரைகின்றனர். முதுமையடைவதைவிட, முதுமையைக் கண்டு அஞ்சுவதுதான்அதிக ஊறுவிளைவிப்பதாக இருக்கிறது (The fear of aging and dying is more harmful than the aging process itself).

அநேக மனிதர்கள் தங்களுடைய முதற்பாதி வாழ்நாட்களைத் தவறாகச் செலவிட்டு, அடுத்த பாதியை துயர் மிகுந்ததாக்கிக் கொள்கிறார்கள் (Most men spend the first half of their lives making the second half miserable - *La Bruyere*).

முதுமையில் எழக்கூடிய பிரச்சனைகளும் அவற்றை எதிர்கொள்ள ஆலோசனைகளும்

1. தலைமுடி நரைக்க ஆரம்பிக்கும்

வெள்ள முடியை மறைக்க Dye அடிக்கலாம். ஆனால் அது எவ்வளவு நாட்களுக்கு? இன்னும் சில ஆண்டுகளில் வெள்ளை முடியும் உதிர்ந்துபோனால் என்ன செய்வது? இயற்கையாக ஒரு

மனிதனுக்கு நிகழும் மாற்றங்களை மனநிறைவுடன் ஏற்றுக் கொள்ளப் பழகிக்கொள்ளவேண்டும். "நீதியின் வழியில் உண்டாகும் நரைமயிரானது மகிமையான கிரீடம்" (நீதி.16:31).

2. **உடலின் பெலன் குறைய ஆரம்பிக்கும்.**

முன்புபோல கடினமான வேலைகள் செய்யமுடியாது. ஆனால் இந்த உண்மையைப் பலர் ஒத்துக்கொள்வதில்லை. இன்னமும் தன்னுடைய பலம் தன்னைவிட்டுப்போகவில்லை என்பதுபோல் நடித்துக்கொண்டிருப்பார்கள். இது தேவையற்றது. உங்களுடைய பலத்திற்குத் தகுந்தாற்போல் நடந்துகொள்ளுங்கள்.

எங்கள் ஆயுசு நாட்கள் எழுபது வருஷம், எங்கள் பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷமாயிருந்தாலும், அதின் மேன்மை யானது வருத்தமும் சஞ்சலமுமே" (சங்.90:10).

3. **மாதச் சம்பளத்தில் வேலையில் இருப்போர்கள் குறிப்பிட்ட வயதிற்குப் பின்னர் ஓய்வு பெற்றுவிடுவதால் வருமானம் குறைகிறது** (Less of income).

ஓய்வூதியம் உண்டென்றால் ஓரளவிற்குப் பிரச்சனையில்லை. செலவுகளைக் குறைத்து ஓய்வூதியத்திற்குள் அல்லது உங்களுடைய சேமிப்புகளிலிருந்து கிடைக்கும் வருமானத்திற்குள் வாழப் பழகிக்கொள்ளுங்கள்.

ஓய்வூதியமில்லாதவர்கள் தங்களுக்கு வேலையுள்ள காலத் திலேயே, முதுமைக்காகச் சேமித்து வைக்கவேண்டும்; அல்லது நிரந்தர வருமானத்திற்கு வழிவகை செய்யவேண்டும்.

4. **சுறுசுறுப்பாக அலுவலங்களில் வேலைபார்த்தவர்களுக்கு, வேலையின்றி வீட்டில் இருப்பது கஷ்டமாக இருக்கும்** (Boredom).

ஒய்விற்குப் பின்னரும் சுறுசுறுப்பாக இருக்கக்கூடியவாறு ஏதாவது செய்யுங்கள். வருமானத்திற்காகச் சொல்லவில்லை; சமூகநல சேவைகள் அல்லது சமயஞ்சார்த்த ஊழியங்கள் செய்யலாம்.

5. **வீட்டிலும் வெளியிலும், வேலையிலிருந்தபொழுது கிடைத்த மரியாதை கிடைக்காமற்போகிறது** (Loss of respect).

இப்பொழுதான் பலருக்கு உலகத்தின் நிஜமுகம் தெரியும். மக்கள் கொடுத்த மரியாதை உங்களுக்கல்ல, உங்களுடைய பதவிக்காக என்ற உண்மை புரியும். வீட்டிலும் வெளியிலும் மரியாதை எப்பொழுதும்போல் கிடைக்கவேண்டுமென்றால், அது நீங்கள் பதவியிலிருந்து பணம் ஈட்டிய காலத்தில் மற்றவர்களை எப்படி நடத்தினீர்கள், எப்படி நடந்துகொண்டீர்கள் என்பதைப் பொறுத்ததே. இந்த இடத்தில் ஒரு சிறிய ஆலோசனை: மரியாதையை யாரிடமும் எதிர்பார்க்காதீர்கள்; அப்போது ஏமாற்றமுமில்லை – வருத்தமு மில்லை.

6. உடல் நலக்குறைவுகள் தலைதூக்க ஆரம்பிக்கும் காலம் (Ill Health).

கூடுமானவரை அடிக்கடி உடலை பரிசோதித்துக் கொள்ளுங்கள். வியாதிகளை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்துங்கள். உணவில் கட்டுப்பாடாக இருங்கள். முடிந்த உடற்பயிற்சிகளைச் செய்யுங்கள். தினமும் சிறிது தூரம் நடப்பது நல்லது.

7. உடலில் பெலன் குறைவதால் மற்றவர்களைச் சார்ந்து வாழும் நிலை (Dependency on others).

நறுந்தொகை, **"பெற்றோரெல்லாம் பிள்ளைகளல்லர், உற்றவரெல்லாம் சுற்றமுமல்ல"** என்றுரைக்கிறது. எல்லாப் பிள்ளைகளும் பெற்றவர்களிடம் அன்புடன் ஆதரவாக இருப்பார்கள் என்று கூறமுடியாது. பல பிள்ளைகள் பெற்றோர்களைத் தேவையற்ற பாரமாகக் கருதுகிறார்கள். பிள்ளைகளை வளர்க்கப் பெற்றோர்கள் பட்டபாட்டை நினைவுரும் பிள்ளைகள் எத்தனை பேர்கள்?

உடலில் பெலன் இருக்கும்பொழுதே ஒருசில "முதியோர் காப்பகங்களை" விசாரித்து வையுங்கள். **தேவைப்பட்டால் நீங்களே** அங்குபோய் சேர்வதற்குத் தயங்காதீர்கள்.

8. உடல் நலிவால், முதுமையில் புத்திகூர்மைக் குறைகிறது (Lack of mental sharpnes).

இந்நிலை எல்லோருக்கும் ஏற்படுவதில்லை. அநேகர் முதுமையில்தான் ஞானத்தை வெளிப்படுத்தும் மகான்களாகியிருக்கிறார்கள்; பல சாதனைகளைப் புரிந்திருக்கிறார்கள். ஒருவேளை புத்தி கூர்மை குறைகிறது என்று கருதினால், வீட்டில் முக்கியமான முடிவுகளை எடுக்கும் முன்பு மனைவியையோ அல்லது பிள்ளைகளையோ ஆலோசித்து முடிவெடுங்கள்.

9. உலகோர் அளவின்படி வெற்றியடையத் தவறினால், தனது வாழ்க்கை தோல்வியுற்றதாகக் கருதி, வாழ்க்கையில் வெறுப்பு ஏற்படுகிறது.

உங்களைவிடத் திறமையான அநேகர், நீங்கள் அடைந்த வெற்றியைக்கூட அடைய இயலவில்லை என்பதினால், நீங்கள் மகிழ்ச்சியடைவதுதான் நியாயம்.

10. கடந்த காலங்களில் செய்த பாவங்கள் முதுமையில் மனதில் வந்து வாட்டுவது.

கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளுங்கள்; அவர் சிலுவையில் ஈட்டிய மீட்பைப் பெற்றுக்கொள்ளுங்கள். பாவங்களுக்காக மனம் வருந்துங்கள், மன்னிப்புக்கேளுங்கள் – மன்னிப்பைப் பெற்றுக் கொள்ளுங்கள்

11. **பிள்ளைகளையே சார்ந்து வாழவேண்டிய, வருமான மில்லாத முதியவர்களுக்கு முதுமை பாதுகாப்பற்ற நிலையை மனதில் உருவாக்குகிறது.**

வீட்டில் சோம்பியிராமல், நீங்கள் இன்றியமையாதவர் என்று கருதும்படி ஏதாவது செய்துகொண்டிருங்கள்; குடும்பத்திற்கு உதவியாக இருங்கள்.

12. **முதுமையில் சிலருக்குக் கவனக்குறைவும், மறதியும், உரையாட இயலாமையும், காது மந்தமும், கண்பார்வைக் குறைவும் ஏற்படுகிறது.**

இப்படிப்பட்டவர்களைக் கவனிப்பது பிள்ளைகளுக்கும் கஷ்டம் தான் என்பதை உணர்ந்து, அவர்களுக்கு அதிகக் கஷ்டம் தராமலி ருங்கள். பிள்ளைகளால் செய்ய இயலாதவற்றைச் செய்யவேண்டு மென்று வற்புறுத்தாதீர்கள். உங்களைக் கவனிப்பதோடு இவ்வுலகில் அவர்களுக்கு வேறு பொறுப்புக்களும் உண்டு என்று உணருங்கள்.

13. **சில முதியவர்களுக்கு – வாழ்க்கை அர்த்தமற்றதாக இருக் கிறது; நேரத்தைக் கழிப்பது கடினமாக இருக்கிறது; பிறரைக் குறைசொல்வதே பிரதானமாக இருக்கிறது.**

குறை சொல்லிக்கொண்டேயிருந்தால், உங்களுக்கு உதவி செய்கிறவர்கள்கூட, "செய்து கெட்ட பெயர் வாங்குவதைவிடச் செய்யாமலே விட்டுவிடலாம்" என்று முடிவெடுத்துவிடுவார்கள். ஜாக்கிரதை!

14. **ஊரைச் சுற்றிவர ஆசை, ஆனால் வாகனங்களை ஓட்ட இயலாது, சிலருக்கு வெகுதூரம் நடக்கவும் முடியாது.**

உங்களால் செய்யமுடியாத ஆசைகளை அகற்றுங்கள்; உங்களுடைய ஆசையால் உங்களையும் கஷ்டப்படுத்திக்கொண்டு மற்றவர்களையும் கஷ்டப்படுத்தாதீர்கள்.

15. **முதியவர்கள், இன்றைய தலைமுறையினரின் நடைமுறை களைப்பார்த்து அதிர்ச்சியுற்று, எல்லாவற்றையும் விமர் சனம் செய்துகொண்டிருப்பதே வேலையாக இருக்கும்.**

உலகின் மாற்றங்களுக்கு ஏற்ப உங்களையும் மாற்றிக் கொள்ளுங்கள்; அல்லது வாயைப் பொத்திக்கொண்டிருங்கள். அவர்கள் வாழ்க்கையை அவர்கள் வாழ அனுமதியுங்கள். உங்களுடைய காலம் முடிவை நெருங்கிக்கொண்டிருக்கிறது என்று உணருங்கள்.

16. **சில முதியவர்கள் எவரையும் குற்றஞ்சாட்டுகிறவர்களாவும் புறங்கூறுகிறவர்களாகவும், அவதூறு பேசுகிறவர்களா கவும், மற்றவர்களை விமர்சனங்கள் செய்கிறவர்களாகவும் இருப்பார்கள்** (False accusers,gossips, evil speakers, vicious in criticism).

இப்படிப்பட்ட செயல்களால் குடும்பத்திலும் வெளியிலும் வெறுப்பைச் சம்பாதிப்பீர்கள். காணும் மனிதர்களிடம் வாழ்த்துக் கூறுங்கள் ஆசீர்வதியுங்கள், அவர்களுக்காக ஜெபியுங்கள். உங்களை மரியாதைக்குரியவராய் மற்றவர்கள் கருதப்படும்படியாக நடந்துகொள்ளுங்கள்.

பொறுப்புக்களும், நடத்தைகளும்

ஆங்கிலத்தில் ஒரு பழமொழியுண்டு; "If you want to punish your children, live long" என்பார்கள். அதாவது **"உங்களுடைய பிள்ளைகளைத் தண்டிக்கவேண்டுமென்றால், அதிகநாள் உயிர்வாழுங்கள்"** என்பது அதன் பொருள்.

இன்னும் ஒருபடி மேலேசென்று, **"உங்களுடைய பிள்ளைகளைக் கொடுமைப்படுத்தவேண்டுமா, படுத்த படுக்கையாக – வியாதியோடு அதிகநாள் உயிர் வாழுங்கள்'** என்று கூறலாம். அதற்காக சீக்கிரம் மரித்துவிடுங்கள் என்று ஆலோசனை கூறவில்லை; கூடுமானவரை உங்களுடைய பிள்ளைகளுக்கு உபத்திரவமாக இராதீர்கள் என்றுதான் கூறுகிறேன்.

பிள்ளைகள் முதியவர்களைக் கவனித்துக்கொள்கிறார்களா இல்லையா என்பது ஒருபுறமிருக்கட்டும், முதியவர்களும் தங்களுடைய பொறுப்புக்களையும், நடத்தைகளையும் உணர்ந்து செயல்பட வேண்டும்.

1. உங்கள் பிள்ளைகளின் வீட்டில் சுயநலத்துடன் இருக்க நினைக்காதீர்கள் – குறைகூறாதீர்கள் – விமர்சனம் செய்யாதீர்கள் (Don't be selfish, complaining or critical).
2. முறையற்ற அல்லது நேர்மையற்ற கோரிக்கைகளை நிறைவேற்றவேண்டுமென்று பிள்ளைகளையும், உறவினர்களையும் வற்புறுத்தாதீர்கள் (Don't make unreasonable demands).
3. பிள்ளைகளும், மருமக்கள்மாரும் உங்களைச் சுற்றிக் கொண்டேயிருக்கவேண்டும் என்றும், உங்களையே கவனித்து கொண்டிருக்கவேண்டும் என்றும் நினைக்காதீர்கள் (Don't expect the world to revolve around you).
4. உங்களுக்கும் பாவங்களுண்டு, குறைகளுண்டு என்பதை உணர்ந்து அனுதினமும் கர்த்தருடைய கிருபையால் நடத்தப்பட ஜெபியுங்கள் (Ask for daily grace to overcome sin).
5. பிள்ளைகளுக்கு பொருளாதாரத்தில் உதவுவதில் தவறில்லை. ஆனால், உங்களுடைய ஓய்வுகாலப் பாதுகாப்பிற்காகச் சேமித்து வைத்திருக்கும் உங்களுடைய பொருளாதார ஆதாரத்தைத் தாரைவார்க்காதீர்கள். உங்களிடம் உண்மையான அன்புகொண்டொழுகும் பிள்ளைகள் அதைப் பற்றி சிந்திக்கவேமாட்டார்கள். மாறாக உங்கள் வாழ்க்கையில் ஆதாரமாக இருக்கும் பணத்தைக் கேட்கும் பிள்ளைகள்

ஆரோக்கியமற்ற சிந்தையையுடையவர்கள் என்று கண்டு கொள்ளுங்கள். காரியம் முடிந்த கையோடு பெற்றோர்களைக் கைகழுவி நிராதரவாக விட்டுவிடும் பிள்ளைகள் இன்று பெருகியிருக்கிறார்கள். ஆகையால் 'புத்திசாலியாக இருங்கள்' என்று எச்சரிப்பது எனது கடமை. தன்னைத்தான் தற்காத்துக் கொள்வதற்கு இவ்வுலகில் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

முதுமையை ஆக்கத்துடன் பயன்படுத்தலாம்

உடல் முதுமையடைவது தவிர்க்க இயலா இயற்கை நியதி; ஆனால் மனம் முதிர்வடைவதும் – இளமையாயிருப்பதும் உங்கள் கையில்தான் இருக்கிறது. முதுமை உங்களை முடக்க அனுமதிக்காதீர்கள்; குடும்பத்திற்கும், திருச்சபைக்கும், சமுதாயத்திற்கும் நீங்கள் விரும்பிய வகையில் பணிசெய்யக் கிடைத்த நல்வாய்ப்பாகக் கருதுங்கள்

1. முதுமையில் பல புதிய நண்பர்களை உருவாக்கிக்கொள்ளலாம்,
2. பல புதிய விஷயங்களில் ஆர்வத்தைச் செலுத்தலாம்.
3. சமய – சமுதாயத் தொண்டுகள் புரியலாம்.
4. இறைவனுடன் அதிக நேரத்தைக் கழிக்கலாம்.
5. பிள்ளைகளுக்காவும், நண்பர்களுக்காவும் ஜெபிக்கலாம்.
6. அதிக அவகாசம் இருப்பதால், நல்ல புத்தகங்களைப் படிக்கலாம்.
7. பிள்ளைகளுக்குப் பாரமாக இருப்பதைவிட, நல்ல துணையாக / உதவியாக இருக்கலாம்.

முதியவர்களுக்காகத் திருமறையில் கொடுத்துள்ள விலைபெறப்பெற்ற வாக்குத்தத்தங்களை உங்களுடையதாக்கிக் கொள்ளுங்கள்.

"உங்கள் முதிர்வயதுவரைக்கும் நான் அப்படிச் செய்து வந்தேன். இனிமட்டும் நான் உங்களைத் தாங்குவேன்; நான் அப்படிச் செய்துவந்தேன்; இனிமேலும் நான் ஏந்துவேன்; நான் சுமப்பேன்; தப்புவிப்பேன்" (ஏசா.46:4).

"கர்த்தர் உத்தமரென்றும், என் கன்மலையாகிய அவரிடத்தில் அநீதியில்லையென்றும் விளங்கப்பண்ணும்படி அவர்கள் முதிர்வயதிலும் கனிதந்து புஷ்டியும் பசுமையுமாயிருப்பார்கள்" (சங்.91:14,15).

"நீதிமான் பனையைப்போல் செழித்து, லீபனோனிலுள்ள கேதுருவைப்போல் வளருவான். கர்த்தருடைய ஆலயத்திலே நாட்டப்பட்டவர்கள் எங்கள் தேவனுடைய பிரகாரங்களில் செழித்திருப்பார்கள். கர்த்தர் உத்தமரென்றும், என் கன்மலையாகிய அவரிடத்தில் அநீதியில்லையென்றும் விளங்கப்

பண்ணும்படி, அவர்கள் முதிர்வயதிலும் கனிதந்து, புஷ்டியும் பசுமையுமாயிருப்பார்கள்" – (சங்.92:12–14).

உங்களுடைய வாழ்நாளில் எதையாவது கர்த்தருக்காகச் சாதிக்க / செய்ய விரும்பினால், அதைச் செய்துமுடிக்கும்வரைக்கும் ஆயுசையும் பெலனையும் கர்த்தரிடத்திலிருந்து வேண்டிப் பெற்றுக் கொள்ளலாம். **"இப்போதும் தேவனே, இந்தச் சந்ததிக்கு உமது வல்லமையையும், வரப்போகிற யாவருக்கும் உமது பராக்கிரமத்தையும் நான் அறிவிக்குமளவும், முதிர்வயதும் நரைமயிருமுள்ளவனாகும்வரைக்கும் என்னைக் கைவிடீராக" (சங்.71:18)** என்று தாவீது கர்த்தரிடத்தில் கேட்பதை எடுத்துக்காட்டாக எடுத்துக் கொள்ளுங்கள்.

நிறையுரை

முதுமையைப் புகழ்ந்து ராபர்ட் பிரௌனிங் என்ற கவிஞர் எழுதியுள்ள கவிதையை மொழிமாற்றம் செய்துகொடுத்துள்ளேன். படியுங்கள்.

என்னுடன் சேர்ந்து முதிர்வடையுங்கள்
இன்பகாலம் இனிதான்
வாழ்க்கையின் இறுதிக்காகவே, துவக்கம்
வடிவமைக்கப்பட்டுள்ளது.
நம்காலம் கர்த்தர் கரங்களில்,
"எல்லாம் என் திட்டம்" எனச் சொல்வோன் யார்?
வாலிபம் பார்த்தது பாதியை;
கர்த்தரை நம்பு, மீதியையும் பார், அஞ்சாதே!

(Grow old along with me! The best is yet to be. The last of life, for which the first was made. Our times are in His hand; Who saith"A whole I planned." Youth shows the half. Trust God, see all, nor be afraid!—*Robert Browning).*

முதுமை கடந்த காலங்களின் அறுவடை (Old age is the harvest of all the past years). முதுமை கடந்த ஆண்டுகளில் செய்துவந்த கிரியைகளின் பலாபலன்கள் சங்கமிக்கும் கடல். கடந்த ஆண்டுகளில் காலத்தையும், உழைப்பையும் செலவழித்து நீங்கள் உருவாக்கியுள்ள உங்கள் வாழ்க்கையைச் சிறையாக்குவதும் – மாளிகையாக்குவதும் உங்கள் கையில்தான் இருக்கிறது. தாவீதைப்போல, **"கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்தரிப்பேன் அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்" (சங்.34:1)** என்று நமது முதுமையிலும் கூறுவோமாக.

23

குழந்தை வளர்ப்பு 1

(அடிப்படை விதிகள்)

இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன் (சங்.127:3). உன் பிள்ளைகள் உன் பந்தியைச் சுற்றிலும் ஒலிவமரக் கன்றுகளைப்போல இருப்பார்கள் (சங்.128:3).

திருமணம் முடிந்தபின், சுற்றமும் நட்பும் எதிர்நோக்குவது அவர்களுக்கு பிறக்கப்போகும் மழலையைத்தான். தாய்மையுறுதலும், ஒரு மானிட சிசுவை உலகிற்கீதலும் இறைவன் மானிடர்கீந்துள்ள அருட்பெருங்கொடை. தாய்மைதான் ஒரு பெண்ணிற்குப் பெருமை. குழந்தை பிறப்பில்தான் ஒரு பெண்ணின் பெண்மை முழுமையடைகிறது.

"மங்கலம் என்ப மனைமாட்சி; மற்று அதன்
நன்கலம் நன்மக்கட் பேறு"
—(திருக்குறள்—அதிகாரம் 6 – வாழ்க்கைத் துணைநலம்)

(பொருள்: குடும்ப வாழ்க்கை சிறப்பானது. நற்குழந்தைகளுடன் வாழும் குடும்பம் அதனிலும் சிறப்பானது).

பெற்ற பிள்ளைகளைப் பேணி வளர்ப்பது பெற்றோர்கள்மீது விழுந்த கடமை. பெற்றோர்களால் தங்களுடைய பிள்ளைகளின் வாழ்க்கையை ஆக்கவும் முடியும்; அழிக்கவும் முடியும் (Parents make or mar the life of their children).

பிள்ளைகளைப் பெறுவதோடு பெற்றோர்களின் கடமை முடிந்துவிடுவதில்லை; பிள்ளைகளைக் குறித்து இறைவனுக்குக் கணக்கு ஒப்புவித்தாகவேண்டும்.

பிள்ளைகள் கர்த்தர் தந்த ஈவு என்பது சரிதான், ஆனால் பெற்றோராக இருப்பது கர்த்தர் கொடுத்துள்ள மிகப்பெரிய பொறுப்பு என்பதையும் உணர்ந்து, உத்தரவாதத்துடன் பிள்ளைகளை வளர்க்கவேண்டும்.

குழந்தைகளை வளர்த்து "அவையத்து முந்தியிருக்கச்' செய்வது அவ்வளவு எளிதல்ல. பிள்ளைகளை எப்படி வளர்ப்பது என்பதை அறிந்துள்ள பெற்றோர்கள் எத்தனை பேர்கள்? பல பெற்றோர்கள் பிள்ளைகளை வளர்ப்பதில்லை; பெரும்பாலான குழந்தைகள் அவர்களாகவே அவர்கள் இஷ்டத்திற்கு வளருகிறார்கள் என்பது தான் உண்மை.

மணமாகிக் குழந்தைகள் பெற்று வாழும் ஒரு பெண் கூறினார்: **"நான் குழந்தைபெற்று நானே ஒரு தாயான பின்னர்தான் என்னுடைய தாயை முன்னைவிட அதிகம் நேசிக்க ஆரம் பித்தேன்"** என்று கூறுகிறார்.

பெற்றோர்களின் அன்பையும் பாசத்தையும், தியாகத்தையும் பெரும்பாலன பிள்ளைகள் காலங்கடந்த பின்னர், பெற்றோர்கள் கல்லறைக்குச்சென்ற பின்னர்தான் உணர்கிறார்கள். சிலர் இறுதி வரைக்கும் தங்களுடைய பெற்றோர்களின் அருமையை உணரா மலேயே வாழ்ந்து முடித்து விடுகிறார்கள்.

சிலர் தங்களுடைய பிள்ளைகளால் தாங்கள் புறக்கணிக்கப்படும் பொழுதான், தங்களுடைய பெற்றோர்களைத் தாங்கள் நன்றாக நடத்தத் தவறிவிட்டமையைக் குறித்துப் புழுங்குகிறார்கள் – ஞானோதயம் அடைகிறார்கள். விதைத்ததைத்தானே அறுவடை செய்யமுடியும்? வினையை விதைத்துவிட்டுத் தினையை அறுவடை செய்யமுடியுமா?

உங்கள் பிள்ளைகள் உங்களிடம் பாசமாக இருக்கவேண்டும் என்று விரும்பினால், உங்கள் பெற்றோர்களிடம் நீங்கள் பாசமாக இருந்து அவர்களுக்கு முன்மாதிரி காட்டுங்கள்.

குழந்தையின் தனித்துவம் (Individuality)

நம்மில் பலர் நம்குழந்தைகளை நமது படைப்பு எனக் கருதிக் கொண்டிருக்கிறோம். அவ்வண் கருதின் அது தவறான கருத்து. **இறைவன் படைப்பான குழந்தைகளை, இவ்வுலகில் ஊனுருக் கொண்டு அவதரிப்பதற்கு பெற்றோர்கள் கருவிமட்டுமே** (A child born into the world ***not by you***, but ***through you***).

ஒவ்வொரு மானுட குழந்தைக்கும் ஒரு தனித்துவமுண்டு. ஒவ்வொரு குழந்தைக்கும் வெவ்வேறு குணாதிசயங்கள், வெவ்வேறு திறமைகள் உண்டு. இறைவனின் அருட்கொடையாய் பிறந்த குழந்தைகளைப் பேணி வளர்க்கும் பொறுப்பு பிள்ளைகளைப் பெற்ற பெற்றோர்களுக்கும் உண்டு.

குடும்பமே முதல் பள்ளி (Home is the first School)

குழந்தை பிறந்த சிலமணி நேரங்களிலேயே தன் ஐம்புலன் களாலேயும் கற்றுக்கொள்ளத் துவங்கிவிடுகிறது. தாயின் வயிற்றிலிருந்து வெளிவந்த குழந்தை, தன்னைச் சுற்றியுள்ள உலகை

ஆராய்ச்சிசெய்ய ஆரம்பித்துவிடுகிறது. ஆகவே உங்கள் குழந்தையை ஓர் 'இளம் ஆராய்ச்சியாளர்' (Explorer) என்று கூறினால் அது மிகையில்லை.

குடும்பமே குழந்தைக்கு முதற் பள்ளி. பெற்றோர்களே குழந்தைகளின் முதல் ஆசிரியர்கள். "முதல் மூன்று ஆண்டுகளிலேயே குழந்தைக்கு ஏற்படும் அனுபவம், அதன் மனவளர்ச்சியில் ஆழ்ந்து பதிந்து நிற்கும்" என உளவியல் வல்லுநர்கள் உரைக்கின்றனர்.

பெரும்பாலும் குடும்பத்திலுள்ள உறுப்பினர்களின் நடையுடை பாவனைகளே, அக்குடும்பத்தில் வளரும் குழந்தையின் ஆளுமை வளர்ச்சியில் (Personality Development) பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். ஆகையால், குழந்தைகள் சீராக வளரத்தக்க சூழலை (Atmosphere) வீட்டிலே உருவாக்குவதில், குடும்பத்திலுள்ள அத்தனை உறுப்பினர்களுக்கும் பொறுப்புண்டு. நீங்கள் குழந்தையை மட்டும் வளர்க்கவில்லை, நாளைய குழந்தைகளின் தந்தையை / தாயை வளர்க்கிறீர்கள் என்பதை நினைவில் இருத்துங்கள்.

"இன்றைய குழந்தை நாளைய மனிதனின் தந்தை" (Child is the father of the man) என Wordsworth என்னும் ஆங்கிலக் கவிஞர் Immortality என்ற கவிதையில் கூறும் கூற்றில்தான் எத்துணை உண்மை?

இன்றைய குழந்தை, நாளைய குடும்பத் தலைவன்.
இன்றைய சிறார், இந்நாட்டின் எதிர்காலக் குடிமகன்.
இன்றைய இளைஞன், திருச்சபையின் வருங்கால
அங்கத்தினர் / தலைவர்.

ஆகையால் குழந்தைகள் குடும்பத்தில் சிறுபிள்ளைகளாக இருக்கும்பொழுதே, அவர்களை நற்பண்புகளிலும், ஆன்மீக ஞானத்திலும் பயிற்றுவிக்கவேண்டும்.

தள்ளுபடி நூலான (Apocrypha) சீராக் ஞானம் கூறுவதைக் கேளுங்கள்: "குழந்தாய், இளமைமுதல் தற்பயிற்சியைத் தேர்ந்துகொள்; முதுமையிலும் ஞானம் பெறுவாய்" (சீராக் ஞானம் 6:18 – பொது மொழிபெயர்ப்பு).

ஒருவரிலொருவர் அன்பு (Love each other)

இறை மைந்தன் இயேசு, "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்," எனக்கூறியது வெளியுறவை மட்டும் மனதில் கொண்டல்ல, குடும்ப உறவையும் சேர்த்துதான். யோவான் தனது முதலாம் நிருபத்தில், "நாம் ஒருவரிலெருவர் அன்புகூரவேண்டுமென்பதே நீங்கள் ஆதிமுதல் கேட்ட விஷேசமாயிருக்கிறது" (1 யோவா.3:11) என எழுதுகிறார்.

எந்த ஒரு நற்செயலும் குடும்பத்திலிருந்துதான் ஆரம்பிக்கிறது. (Charity begins at home.) தனது குடும்பத்திலுள்ளவர்களிடம் அன்பு செலுத்த இயலாதவர்களுக்கு, வெளியுலகிலுள்ளோரிடம் அன்பு செலுத்துவது இயலாத காரியம். ஆகையால், முதலாவது உங்கள் குடும்பம் அன்பெனும் பாசப்பிணைப்பினால் கட்டப்பட்ட குடும்பமாயிருக்கவேண்டுமென்பதே இறை எதிர்பார்ப்பு.

நேசிக்கப்படும் குழந்தைகள், பிறரை நேசிக்கிறார்கள். வெறுக்கப்படும் குழந்தைகள் சமுதாய விரோதிகளாக மாறுகிறார்கள்.

எடுத்துக்காட்டாயிருங்கள் (Be a Role Model)

குழந்தைப் பருவத்தில், குழந்தைகள் தங்கள் பெற்றோரைக் கண்மூடித்தனமாய் நேசிக்கின்றன. யூதத் தத்துவஞானி பிலோ, **"உலகிற்குக் கடவுள் எப்படியோ, அப்படியே குழந்தைகளுக்குப் பெற்றோர்கள்"** என்று கூறுகிறார் (What God is to the world, parents are to their children –***Philo***) .

இதே கருத்தில்தான் ஆத்திச்சூடியில் ஔவையும், **"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"** என்று கூறுகிறார். அந்த அளவிற்குக் குழந்தைகள் தங்களுடைய பெற்றோர்களின்மேல் பாசமும், மரியாதையும் கொண்டுள்ளார்கள்.

குழந்தைகளுக்கு அவர்களுடைய பெற்றோர்கள்தான் உலகிலேயே மிகவும் நல்லவர்கள், நேர்மையானவர்கள், உண்மை விளம்பிகள்; அவர்களுக்கு ஈடானவர்கள் உலகில் யாருமில்லை என நம்புகிறார்கள்.

ஆனால் அவர்கள் வளருங்காலத்தில் தங்கள் பெற்றோர்களின் நிறைகுறைகளைச் சீர்தூக்கிப் பார்க்கின்றனர். சில வேளைகளில் பெற்றோரின் குறைகளை மன்னித்துவிடுகிறார்கள். சில சமயம் அவர்களை வெறுக்க தொடங்குகிறார்கள். "The children begin by loving their parents; as they grow older they judge them; sometimes they forgive them; sometimes they don't" — *(Oscar Wilde)* என்று **ஆஸ்கர் ஒயில்டு** என்ற ஆங்கில எழுத்தாளர் கூறுவது உண்மையான வார்த்தைகளன்றோ?

பிள்ளைகளால் நேசிக்கப்படும் பெற்றோராய் மட்டும் இருந்தால் போதாது, பிள்ளைகளால் மதிக்கப்படும் பெற்றோராயும் இருத்தல் வேண்டும். பிள்ளைகளின் மதிப்பீட்டில் பெற்றோர் உயர்வான இடத்தைப் பிடிப்பதற்கு, பெற்றோரின் இறை பக்தி, ஒழுக்கம், பண்பு, பாசம், உண்மை, நேர்மை போன்ற நடைமுறை வாழ்க்கை நெறிகள் பெரும் பங்கு வகிக்கின்றன.

பிள்ளைகளுக்கு அறிவுரை கூறுமுன், அந்த அறிவுரைகளை நீங்கள் கடைப்பிடிக்கிறவர்களாக இருக்கவேண்டும். பிள்ளைகள் உங்கள் சொல்லைக் கேட்டு வளர்வதைவிட, உங்கள் செயலைப் பார்த்து வளர்வதையே விரும்புகிறார்கள் என்பதை மறவாதீர்கள்.

பிள்ளைகள் உங்களைப் பின்பற்றத்தக்க வகையிலே உங்கள் வாழ்க்கை அவர்களுக்கு முன்மாதிரியான வாழ்க்கையாக இருக்கவேண்டும்.

இளமையிலே இயேசுவை அறிமுகப்படுத்துங்கள் (Catch them young)

குழந்தைகளுக்கு இயேசுவை இளமையிலே அறிமுகப் படுத்துவது அனைத்துக் கிறிஸ்தவப் பெற்றோர்களுக்குமுள்ள தலையாய கடமை. இளமையில் கற்பது பசுமரத்தாணிபோல மனதில் ஆழமாகப் பதியும் என்பது சான்றோர் கூற்று.

“இளமையில் கல்” என இயம்பினார் ஔவைப் பிராட்டி. “ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது” என்கிறது தமிழ் முதுரை.

“பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர் வயதிலும் அதை விடாதிருப்பான்.” (நீதிமொழிகள் 22:6) என்று சாலமோன் ஞானி கூறுகிறார்.

உடைந்த குடும்பங்கள் (Broken Families)

சிறைக் கம்பிகளுக்குப்பின் தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கும் குற்றவாளிகளில் பெரும்பாலோர் சமாதானமற்ற (Peaceless Families), சிதைந்துபோன (Shattered Families) அல்லது முறிந்துபோன (Broken Families) குடும்பங் களிலிருந்து வந்தவர்களே.

எப்போதும் குடும்பத்தில் சண்டை சச்சரவு நிகழ்ந்து கொண்டிருந்தால், அச்சூழலில் வளரும் குழந்தைகள் வக்கிர குணத்துடன் வளர்வதைத் தவிர்க்க இயலாது. இத்தகையச் சூழலில் வளரும் குழந்தைகள்தான் பின்னைய நாட்களில் சமூக விரோதி களாகவும், தீவிரவாதிகளாகவும், குற்றவாளிகளாகவும் உருப் பெறுகின்றனர். புறக்கணிக்கப்பட்ட குழந்தைகள் இச்சமுதாயத்தையே விரோதக் கண்ணொட்டத்துடன் நோக்குகின்றனர்

சில அடிப்படை விதிகள்

குழந்தை வளர்க்கப் பெற்றோர்களுக்குச் சில அடிப்படை விதிகளைக் கூறியுள்ளேன்; இவைகளைக் கடைப்பிடியுங்களேன்.

1. குழந்தையிலுள்ள தன்னிச்சையான சுபாவத்தைக் (Natural sinful behaviours) கட்டுப்படுத்துங்கள்; அப்படிச் செய்வதால், கர்த்தருடன் சேர்ந்து உங்கள் குழந்தையின் ஆத்துமாவை இயேசுவண்டைக்கு மீட்கலாம் (Subdue self-will in a child and thus work together with God to save his soul).

2. உங்கள் குழந்தை பேச ஆரம்பித்தவுடனேயே, ஜெபிக்கக் கற்றுக்கொடுங்கள்.

3. மற்ற குழந்தையுடன் உங்கள் குழந்தையை ஒருபோதும் ஒப்பிடாதீர்கள். ஏனென்றால் ஒவ்வொரு குழந்தையும் தனித்துவமானவர்கள் என்பதை மறவாதீர்கள்.

4. பிள்ளைகளிடம் எப்பொழுதும் அன்பாக இருங்கள்; எந்தச் சூழ்நிலையிலும் பிள்ளைகளிடம் நீங்கள் வைத்திருக்கும் அன்பை விலக்கிக்கொள்ளாதீர்கள்.

5. உங்களுடைய பிள்ளைகளைக் கிண்டல் பண்ணாதீர்கள் (redicule); முக்கியமாக அவர்களுடைய பலவீனங்களை ஏளனஞ்செய்யாதீர்கள்.

6. எதையாவது கேட்டு, அழுது, அடம்பிடிக்கிறான்(ள்) என்பதற்காக எதையும் உங்கள் குழந்தைக்குக் கொடுக்காதீர்கள்; அழுகைக்கு நீங்கள் பயந்தால், உங்களைப் பணிய வைக்கவும், உங்களிடம் காரியம் சாதிக்கவும், உங்களை மிரட்டவும் அழுகையையே ஆயுதமாகப் பின்னால் பயன்படுத்துவான்(ள்). நன்மையானவைகளைக் கொடுப்பதானால்கூட பணிவோடு கேட்டால் மட்டுமே கொடுங்கள் (Give him nothing he cries for and give only what is good for him if he asks for it politely).

7. உங்கள் குழந்தை பொய் சொல்லுவதைத் தடுக்க வேண்டுமென்றால், உங்களிடம் மன்னிப்புக் கேட்கும் தவறுகளுக்காக பிள்ளைகளைத் தண்டிக்காதீர்கள்; இலையென்றால், தண்டனைக்குப் பயந்து பொய் சொல்வார்கள்; பிள்ளைகள் பொய்பேசுவதுற்கு நாமே மறைமுகமான கரணமாகிவிடக்கூடாது. அதற்காகத் திமிரான நடத்தையையும், பாவமான காரியங்களையும் கண்டுகொள்ளாதீர்கள் என்று அதற்குப் பொருளல்ல (To prevent lying, punish no fault which is freely confessed, but never allow a rebellious, sinful act to go unnoticed).

8. பிள்ளைகளிடம் "இல்லை, முடியாது, கூடாது" என்று சொல்லத் தயங்காதீர்கள் – அஞ்சாதீர்கள் (Don't afraid to say "No").

9. பிள்ளைகளிடம் கீழ்ப்படிதலையும் – ஒழுக்கத்தையும் எதிர்பார்க்கிறீர்கள் என்பதை உணர்த்துங்கள். இதில் சமரசம் (Compromise) என்ற பேச்சுக்கே இடமில்லை என்பதைப் பிள்ளைகளுக்குப் புரியவையுங்கள். நல்ல குணங்களைப் பாராட்டுங்கள்; பிள்ளைகள் நல்லவர்களாக இருப்பதற்கு லஞ்சம் (Bribe) கொடுக்காதீர்கள்

அவ்வப்பொழுது பிள்ளைகளுக்குப் பரிசளிக்கலாம்; தவறில்லை. ஆனால், நீ இதைச் செய்தால், நான் உனக்கு இதைத்தருவேன் என்று பிள்ளைகளிடம் பேரம் பேசாதீர்கள்.

10. எந்தத் துறைக்கான படிப்பு (Course) படிக்கவேண்டும், என்ன வேலையில் சேரவேண்டும், எப்படி தனது வாழ்க்கைத் துணையைத் தெரிவு செய்வது என்பன போன்றவற்றில் பிள்ளைகள் தாங்களே முடிவெடுக்க ஊக்குவிக்கலாம்; அத்தருணத்தில், எந்த முடிவை எடுப்பது நல்லது என்று அவர்களுக்கு உதவவும், ஆலோசனை வழங்கவும் ஆயத்தமாக இருக்கவேண்டும்.

11. பிள்ளைகள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்ல அனுமதியுங்கள் (Allow them to express their virews or suggestions). ஒருவேளைஅவர்களுடைய கருத்துக்கள் உங்களுடைய கருத்துக்களைவிட சிறப்பாகவும் இருக்கலாம்.

12. நீங்கள் உங்களுடைய குழந்தைக்கு ஏதாவது வாக் களித்தால் அதைக் கண்டிப்பாக நிறைவேற்றுவதில் கவனமாக இருங்கள் (Strictly observe all promises you have make to your child).

13. பெற்றோர்களாக இருந்தாலும், உங்களிடம் தவறு இருந்தால் ஒத்துக்கொள்ளுங்கள். அப்படிச் செய்வதால். பிள்ளைகளின் பார்வையில் நீங்கள் பெருமைக்குரிய வர்களாவீர்கள்.

14. குழந்தைகள் அனுதினமும் அருகாமையை அனுபவிக்கும் நபர்கள் பெற்றோர்களாகிய நீங்கள்தான். ஆகையால் நீங்கள் பிள்ளைகளுக்குச் சிறந்த முன்மாதிரியாக இருக்கவேண்டும்.

15. நீங்களே கடைப்பிடிக்க இயலாத – முடியாத – விரும்பாத நற்குணத்தையோ, நல் நடக்கையையோ உங்கள் பிள்ளைகளிடம் எதிர்பார்ப்பது எந்தவகையில் நியாயம்? பிள்ளைகளில் எதிர்பார்க்கும் நற்குணங்களுக்கு நீங்கள் முன்மாதிரியாக இருங்கள்.

16. பிள்ளைகளை ஒழுக்கத்தில் வளர்ப்பது ஒருநாள் கூத்தல்ல; அது பெற்றோர்கள் தொடர்ந்து ஆற்றவேண்டிய முக்கியமான நீண்டகால குடும்பப் பணி (Long range process) என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

17. பிள்ளைகளை வளர்ப்பதில் தாய் தந்தை இருவருக்கும் பங்குண்டு. இது ஒரு கூட்டுப்பணி (Team Work). இருவரும் இணைந்து பிள்ளைகளை வளர்க்க வேண்டும்.

நிறைவுரை

ஒரு குடும்பத் தலைவன் தன்னுடைய பண்புகளினாலேயே பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக நடந்து கற்றுக்கொடுக்கிறார்.

1. தனது உயர்வான சிந்தையாலும், கருணையுள்ள அன்பாலும் பாசத்தைக் (Kindness) கற்றுக்கொடுக்கிறார்.
2. தனது மென்மையாலும், புரிந்துகொள்ளுதலினாலும் (udnerstanding) பொறுமையைக் கற்றுக்கொடுக்கிறார்.
3. தனது வாக்குறுதிகளைச் செயல்படுத்துவதில் அதிகச் செலவானாலும் நிறைவேற்றுவதினால், நேர்மையைக் (Honesty) கற்றுக்கொடுக்கிறார்.
4. எந்தச் சூழலிலும் பயமின்றி நம்பிக்கையுள்ளவராக வாழ்ந்து தைரியத்தைக் (courage) கற்றுக்கொடுக்கிறார்.
5. எல்லோரையும் (குடும்பத்தில்) சரிசமமாக நடத்தி – நேர்மையாக இருந்து நியாயத்தைக் (justice) கற்றுக் கொடுக்கிறார்
6. தன்னுடைய குடும்பத்தாரோடு இணைந்து திருமறையை வாசித்து – ஜெபித்து இறைவார்த்தைக்குக் கீழ்படிவதைக் (obedience to God's Word) கற்றுக்கொடுக்கிறார்.
7. ஆலய ஆராதனைகளுக்கு அழைத்துச்சென்று இறைவனையும், திருச்சபையையும் நேசிக்கக் (love) கற்றுக் கொடுக்கிறார்.
8. மற்றவர்கள் அவரைப் பின்பற்றிக் கற்பதால், அவர் கடந்து செல்லும் ஒவ்வொரு அடியும் (steps) முக்கியம் என்று அறிந்திருக்கிறார்.

இந்த இடத்தில் ஒரு நிகழ்ச்சியைச் சொல்லுவது நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன்.

நீதிமன்றத்தில் ஒரு வாலிபன் குற்றவாளியாக நிறுத்தப் பட்டிருந்தான். நீதிபதிக்கு அந்த வாலிபனின் தந்தை மிகவும் அறிமுகமானவர். அந்த வாலிபனுடைய தந்தை நீதித்துறையிலே பெரிய அறிவாளியாக இருந்தார்; பிரபலமான வக்கீலாக இருந்தவர்; பல சட்ட புத்தகங்களை எழுதிப் பெயர்பெற்றவர். நீதிபதி அந்த வாலிபனிடம், "*உன்னுடைய தந்தையை நினைவிருக்கிறதா?*" என்று கேட்டார்.

வாலிபன், "*நன்றாக நினைவிருக்கிறது, ஐயா*" என்றான்.

நீதிபதி, "*இப்பொழுது உனக்குத் தண்டனை தரவிருக்கிறேன். உன்னுடைய தந்தை எவ்வளவு அற்புதமான அறிவாளி தெரியுமா? அவரிடமிருந்து நல்லவைகளைக் கற்றுக்கொள்ளாதது ஏன்?*" என்று கேட்டார்.

ஒரு நீண்ட பெருமூச்சுவிட்டுவிட்டு, வாலிபன் இப்படிக் கூறினான்:

"ஐயா நான் ஏதாவது ஆலோசனைக்காக அவரிடம் நெருங்கினால், தான் எழுதிகொண்டிருக்கும் புத்தகத்திலிருந்து கொஞ்சம் தலைநிமிர்த்தி – 'நான் வேலையாயிருக்கிறேன்; தொந்தரவு செய்யாதே என்பார்' – அவரிடம் நட்பாகப் பேசுவதற்காக அருகில்சென்றால், 'நான் இப்புத்தகத்தை எழுதி முடிக்கவேண்டும்; இங்கிருந்து ஓடுவிடு' என்பார். அவரை ஒரு சிறந்த வக்கீலாக நீங்கள் அவரை நினைக்கிறீர்கள்; ஆனால் என்னைப் பொறுத்தவரைக்கும் அவர் ஒரு தொலைந்துபோன நண்பர்" (You remember him as a great lawyer. I remember him as a lost friend) என்றான்.

நீதிபதி வருத்தத்தோடு இப்படி முணுமுணுத்தார்: "பாவம்! புத்தகத்தை எழுதி முடித்தார்; ஆனால் தன்னுடைய மகனை இழந்துவிட்டார்" (Alas! Finished the book, but lost the boy!).

நீங்கள் சமுதாயத்தில் பெரியவர்களாக ஆனால் மட்டும் போதாது; உங்கள் பிள்ளைகளையும் உயர்ந்தவர்களாக உருவாக்குவது உங்கள் கடமை என்பதை மறவாதீர்கள்.

ஒரு காலக்கட்டம்வரை உங்களுடைய பிள்ளைகள், இன்னாரின் பிள்ளைகள் என்று – உங்களுடைய பெயரால் உலகத்தாரால் அறியப்படுவார்கள். அடுத்த ஒரு காலக்கட்டத்திற்குப் பிறகு, நீங்கள் இன்னாரின் தகப்பன்–தாய் என்று உங்களுடைய பிள்ளைகளின் பெயரால் உலகத்தாரால் அறியப்படவேண்டும். அப்படி அறியப்படுகிற காலங்களில் உங்களுடைய பிள்ளைகள் உலகத்தாரால் எந்த அளவிற்கு மதிக்கப்படுகிறார்களோ அதுதான் உங்களுடைய பிள்ளை–வளர்ப்புத்–திறமைக்குக் கிடைக்கும் மதிப்பெண்.

உங்கள் மூலமாய் உங்கள் குழந்தைகள் உங்களுக்குப் பிறந்திருப்பினும், அவர்களும் இறைச்சாயலுடன் பிறந்தவர்களே. அவர்களை பொறுப்புள்ள, ஒழுக்கமுள்ள மானுட / சமுதாய / திருச்சபை பிரஜைகளாயும், நித்தியத்தைச் சுதந்தரித்துக்கொள்ள உரிமை பெற்றவர்களாகவும் வளர்ப்பது இறைவன் மானிட பெற்றோர்களிடம் எதிர்பார்க்கும் கடமை.

"சான்றோ ரென்கை யீன்றோட் கழகு" (ஔவையார் – கொன்றைவேந்தன்)

(பொருள்: தான் பெற்றடுத்த பிள்ளைகளைச் சான்றோர்கள் என்று மற்றவர்கள் போற்றுவதைக் கேட்பதே பெற்றவர்களுக்கு மகிழ்ச்சி தரும்)

உங்கள் பிள்ளைகளுக்கு இளமையிலிருந்தே நற்போதனைகளை அளியுங்கள். **"போதக சிட்சையே ஜீவ வழி"** (நீதி.6:23).

பிள்ளைகளிடம் தவறான குணங்களைக் கண்டால், உடனே திருத்தத் தவறாதீர்கள். "முளையில் கிள்ளாததை முற்றினால் கோடரிகொண்டு வெட்டவேண்டும்" என்ற தமிழ் பழமொழியை மறவாதீர்கள்.

."கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களுக்குத் திடநம்பிக்கை உண்டு; அவன் பிள்ளைகளுக்கும் அடைக்கலம் கிடைக்கும்" (நீதி.14:26).

குழந்தை வளர்ப்பு 2

(ஆரணம் தப்பினால் மரணம்)

பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக (எபேசியர் 6:4).

துரிதகதியில் நிகழ்ந்துகொண்டிருக்கும் இன்றைய கலாச்சார மாற்றங்கள், தற்கால பிள்ளைகள், சீரான வழியில் வளர்வதற்குத் தடையாக இருக்கின்றன. இன்றைய இளைஞர்கள் கெட்டுப்போக அவர்களைச் சுற்றியுள்ள ஏதுக்கள் அதிகம். பண்டைய நாட்களில் பிள்ளைகள் கெட்டுப்போக வீட்டிற்கு வெளியே செல்லவேண்டும். ஆனால் இப்போது வீட்டிலிருந்துகொண்டே கெட்டுப்போகலாம்.

இன்றைய அபாயகரமான சூழலில் பிள்ளைகளைத் தடமாறித் தறிகெட்டுப் போகாமல் வளர்க்கும் பொறுப்பு பெற்றோர்களுக்கு அதிகமுள்ளது.

ஆபாசம்

அன்றைய நாட்களில் ஆபாசத்தைக் காண திரையரங்குகளுக்கோ அல்லது கேளிக்கைக் கூடங்களுக்கோ செல்ல வேண்டும். ஆனால், இன்றைய நாட்களில் ஆபாசங்கள் ஒளிவுமறைவின்றி வீட்டின் நடுக்கூடத்தில் காட்சிப் பொருளாகிவிட்டன. தொலைக்காட்சி பெட்டிகள், தொல்லைக்காட்சி பெட்டிகளாகிவிட்டன; அதனை "Idiot Box" எனவும் அழைப்பர். உள்ளபடியே அதனை "நடுக்கூடத்துப் பிசாசு" (Devil in the Drawing Room) என அழைப்பதே சாலப் பொருத்தம்.

வீட்டிலே தொலைக்காட்சிப் பெட்டி (Television Set) இருந்தால், ஆபாச Vedio Cassettes /DVD/ CDs-களை அதில் ஓடவிட்டு வரவேற்பறைக்கூடத்தில்? ...

வானவீதியிலே வலம்வந்துகொண்டிருக்கும் ஆபாசங்கள் அனைத்தையும் உங்கள் வீட்டுத் தொலைக்காட்சி பெட்டியில் பார்க்கலாம்.

Cable Net Works மூலமாகப் பெறப்படும் Foreign TV Channels நம் மக்களிடையே "கலாச்சார அதிர்ச்சியை" (Cultural Shock) ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றன.

பல நகர்ப்புற இளைஞர்களின் பாடப் புத்தகங்களினூடே, ஆபாசப் புகைப்படப் புத்தகங்களை (Pronography Books) வைத்திருப்பது மிகச் சாதாரண விஷயமாகிவிட்டது. உங்களிடம் ஒரு PC (Personal Computer) இருத்தால், உங்கள் வீட்டுத் தொலை பேசி (Telephone) வழியாக Internet Connection பெற்றுக்கொண்டு உலக மெங்குமுள்ள எல்லையில்லா ஆபாசங்களை உங்கள் வீட்டிலிருந்து கொண்டே எளிதாகத் தொடர்புகொண்டு – கண்டு – களித்துக் கெட்டுப்போகலாம்.

நம் வீட்டுப் பிள்ளைகள் Computer Class அல்லது Browsing Centres – க்குச் செல்வதாக எண்ணி இறுமாந்திருப்போம்; ஆனால், பிள்ளைகள் ஆபாச இணைய தளங்களில் (Web Sites) தங்கள் காலத்தைக் கழித்துப்போடவும், கருத்தைக் கெடுத்துப்போடவும் வாய்ப்புண்டு. Web Cameras வழியாக நடக்கும் ஆபாசங்களை விலாவாரியாக விவரிக்க ஆரம்பித்தால் உறைந்துபோவீர்கள்.

புகை–போதை– குடி

புகைப் பிடித்தல் இன்றைய இளைஞர் சமுதாயத்தைப் பீடித்துள்ள சாபக்கேடு. சிகரட் விலையை பட்ஜட்டில் எவ்வளவு ஏற்றினாலும் விற்பனை குறையவேயில்லை. "புகைப்பது ஆரோக்கியக் கேடு" என (Smoking is injurious to health) என்று எத்தனை விளம்பரங்கள் வந்தாலும் அவைகள் செவிடன் காதில் ஊதிய சங்கொலியாகத்தான் இருக்கின்றன. புகைப்பிடித்தல் உடலுக்கும் காசுக்கும் கேடு என்று எத்தனை சமுதாய அமைப்புகள் அபயமிட்டு அலறினாலும் இன்றைய இளைஞர்கள் காதில் ஏறுவதில்லை.

மதுபானக் கடைகளில்லாத வீதிகளேயில்லை என்னு மளவிற்கு ஊரெல்லாம் மதுக்கடைகள் பெருகிவிட்டன. விற்பனை வானளாவ இருப்பதால், மதுபானக் கடைகள் கோடிக்கணக்கான தொகைக்கு ஏலங்கள் எடுக்கப்படுகின்றன.

குடிபோதையால் வாழ்க்கையைக் கெடுத்துப்போட்ட இளைஞர்கள் ஏராளம். குடிவெறியால் குடும்பத்தைச் சிதைத்துப்போட்டக் குடி வெறியர்கள் எண்ணிலடங்கா.

மதுக்கடைகளில் கிடைக்கும் லாபத்தின் காரணமாக, இப்பொழுது அரசே மதுக்கடைகளை எடுத்து நடத்துவது பரிதாபமான விஷயம்.

போதை ஊசிகள், போதை மாத்திரைகள் இன்றைய இளைஞர்களைப் பீடித்திருக்கும் பீடை. கண நேர பலவீனத் தீர்மானத்தால், போதைப் பழக்கத்திலிருந்து மீளமுடியாது அமிழ்ந்து—அழிந்து போய்கொண்டிருக்கும் இளைஞர்கள் எத்தனை—எத்தனை பேர்!

இணைக் கல்வி

பண்டைய நாட்களைப் போலின்றி, இன்று ஆண்–பெண் "கூட்டுக் கல்வி" (Co-education) முறை கல்விக்கூடங்கள் பெருமளவில் பெருகிவிட்டன. நலமிக்க சமுதாய வளர்ச்சிக்கும், வருங்கால மானுட பிரதிநிதிகளின் மனமுதிர்ச்சிக்கும் (Mental Maturity), போலியான மாய்மால கட்டுப்பாடுகளைக் களைவதற்கும் "கூட்டுக் கல்வி முறை" வரவேற்கத்தக்க நல்ல அம்சம் என்பதை மறுக்கவோ அல்லது மறைக்கவோ இயலாது. ஆண்–பெண் இருபாலாரும் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு ஆரோக்கியமான நட்புறவுடன்—நல்லுறவுடன் பழக இக்கல்வி முறை அடித்தளமாயுள்ளது என்பதையும் மறுப்பதற்கில்லை.

எனினும், வாலிப வயதின் விழிப்புணர்வுகளினால் ஏற்படும் ஆர்வக்கோளாறினால் இளைஞர்கள் தடம் தடுமாறும் இடர்வுகளுக்கும் ஈண்டு இடமுண்டு என்பதனையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இதனால், இணைக்கல்வி முறையோ அல்லது கூட்டுக் கல்விக் கூடங்களோ தவறு என வாதிட வரவில்லை. ஆனால், வக்கிரமான எண்ணங்கள் கொண்டவர்கள் அதிகம் இங்குண்டு என்பதால், அவர்களை இனம் கண்டு பிள்ளைகள் விலகியிருப்பது இன்றியமையாதது என்பதையும் மறந்துவிடக்கூடாது என்று வலியுறுத்தவே இவைகளைக் கூறுகிறேன்.

ஒழுக்கமில்லாச் சமுதாயம்

பெருகிவரும் High Tech விபசார யுக்திகள் அதிர்ச்சியூட்டுவதாக இருக்கிறது. சமுதாய ஒழுக்கங்கள் தேய்ந்து கொண்டிருக்கின்றன. முறைகேடான நெறிபிறழ்வான பாலுணர்வுகள் (Perverted Sex) வக்கிரமான சமுதாயத்தை உருவாக்கிக்கொண்டிருக்கிறது.

பிள்ளைகளை எவ்வளவுதான் ஒழுக்கத்துடன் வளர்த்தாலும், வீட்டிற்கு வெளியே ஒழுக்கமுள்ள சமுதாயத்தைத் தருவது நமது கரத்திலில்லை.

உங்கள் பிள்ளைகளுக்கு கூரை முட்டுமளவுக்கு செல்வம் சேர்த்து வைக்கலாம்; திகட்டுமளவுக்கு உண்ணக் கொடுக்கலாம்; படிக்கும் மட்டும் கற்கவைக்கலாம்; வீட்டிலிருக்கும்வரை ஒழுக்கத்துடன் வளர்க்கலாம். ஆனால், அவர்கள் வீட்டுக்கு வெளியே வாழப்போகும் சமுதாயத்தை நிர்ணயம் செய்வது யார்? நாம் விரும்பும் ஒழுக்கமான சமுதாயத்தை நம் பிள்ளைகளுக்கு நம்மால் கொடுக்க இயலுமா?

பெற்றோரின் பங்கு

இத்தகைய அபாயச் சூழலில், பெற்றோர்களின் பணி அதிமுக்கியமானது. இக்காலகட்டங்களில், பிள்ளைகள்மேல் பெற்றோர்களின் கண்டிப்பு, கட்டுப்பாடு, கண்காணிப்பு மிகவும் தேவையானது. இப்படிக் கூறுவதால், பிள்ளைகளை வேவு பார்க்க ஊக்குவிக்கவில்லை. அல்லது அவர்களிடம் ஆவேசப்பட்டு அன்பை முறித்துக்கொள்ளும் அபாயத்தையும் ஆதரிக்கவில்லை.

என் ஆதங்கமெல்லாம் வெள்ளம் வருமுன்னரே அணைபோட வேண்டுமென்பதே. பிள்ளைகளின் தவறான பாதையைப் பெற்றோர்கள் கண்டுபிடிக்கும்பொழுது காலம் கடந்துபோய் விட்டிருக்ககூடாது என்பதே. ஏனெனில், பெரும்பாலான தடம்புரண்ட பிள்ளைகளைக் குறித்த செய்திகள் பெற்றோரின் கவனத்திற்கு வரும்பொழுது, பல பிள்ளைகள் மீண்டும் இயல்பு நிலைக்குத் திரும்ப இயலாத் தூரத்திற்குக் கடந்து போய்விட்டிருக்கின்றனர்.

கண்டிக்கவேண்டிய காலத்தில் கண்டிக்காமல், நல்வழிப் படுத்தவேண்டிய நேரத்தில் நல்வழிப்படுத்தாமல், காலம் கடந்த பின்பு கல்லறைகளிலே முட்டிமோதிக் கதறும் பெற்றோர்கள் கணக் கிலடங்கா.

பிள்ளைகள் கிடைத்தற்கரிய பொக்கிஷம் என்பதையும்; அவர்களை நற்குணத்தில் வளர்ப்பதற்கு எவ்வளவு கவனமுள்ளவர் களாக இருக்கவேண்டும் என்பதையும் பெரும்பாலான பெற்றோர்கள் உணருவதில்லை.

திருவள்ளுவர் கூறுவதைக் கேளுங்கள்

"பெறும்அவற்றுள் யாம்அறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற "

–(திருக்குறள் – அதிகாரம் 7 – மக்கட்பேறு).

(பொருள்: இறைவனிடமிருந்து நமக்குக் கிருபையாகக் கிடைத்த பேறுகளில், அறிவுடைய குழந்தைகளே அரும்பெரும் பேறு என்பதை நாம் உணருவதில்லை).

இவ்வுலகில் இறைவன் தங்களுக்கு அருளியுள்ள குழந்தை களை, அறிவும் ஒழுக்கமுமுள்ள பிள்ளைகளாக வளர்ப்பதே பெற்றோர்களிடமிருந்து இறைவன் எதிர்நோக்கும் எதிர்பார்ப்பு என்பதை மறந்துவிடக்கூடாது.

"வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்" என்பது ஔவையாரின் வாக்கு. அதாவது, கற்கவேண்டியவைகளை மறுபடிமறுபடி கற்பித்தால்தான், கற்றவைகள் மனதில் பதியும். ஆகையால், குழந்தைகள் கற்கவேண்டிய பழக்கவழக்கங்களை அவர்கள் கற்று தங்களுடைய உள்ளத்திலும், பழக்கத்திலும், குணத்திலும்

பதிக்கும்வரைக்கும் மறுபடி–மறுபடி கற்பிப்பது பெற்றோர்கள்மீது விழுந்த கடமையாகும். இளமையிலேயே ஆன்மீக ஒழுக்கங்கள் பிள்ளைகளிலே பழக்க வழக்கங்களாகப் பதிந்திருக்கவேண்டும்.

ரோமிலுள்ள வாட்டிகன் நகரிலிருக்கும் (Vatican City) பேதுரு பேராலயத்திலுள்ள (Peter's Basillica) ஓவியங்களையும் சிற்பங் களையும் வடிவமைத்த மைக்கல் ஏஞ்சலோ, "ஒவ்வொரு கற்பாறை யினுள்ளேயும் ஒரு தேவதூதன் வெளிவரத் துடிப்பதைப் பார்க்கிறேன்" என்று கூறினாராம் (Inside every stone, I see an angel struggling to come out – Michael Angelo).

சிற்பம் என்பது ஒவ்வொரு கல்லிலும் மறைந்திருக்கிறது. ஒரு சிற்பி, அந்தக் கல்லிலுள்ள தேவையற்ற பகுதிகளைச் செதுக்கி நீக்கும்பொழுது, அந்தக் கல் அற்புத சிற்பமாக உருப்பெருகிறது. அதைப் போலத்தான் குழந்தைகளும்.

இயற்கையாகக் குழந்தைகளிலிருக்கும் தீய சுபாவங்களை அவர்களிலிருந்து எடுத்துப்போட்டுவிட்டால், அவர்கள் நல்ல மனிதர்களாக, நல்ல திருச்சபைத் தலைவர்களாக (அங்கத்தினர் களாக), நாட்டின் தலைவர்களாக (பிரஜைகளாக) உருவாவார்கள். பெற்றோர்களும், சிற்பிகளைப்போல குழந்தைகளைச் செதுக்கி, அவர்களை அற்புத மனிதர்களாக உருப்பெறச் செய்யவேண்டும்.

நிறைவுரை

வகுப்பு ஆசிரியை ஒரு கணக்குப் போட்டார்.

"உங்கள் வீட்டில் ஐந்து பேர்கள் இருக்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். நான்கு தோசைக்குத்தான் மாவு இருக்கிறது. அதில் உனக்கு எத்தனை தோசை கிடைக்கும்?"

பையன், "ஒரு தோசை" என்று கூறினான்.

ஆசிரியை, "நீ கணக்கைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்று கருதுகிறேன். வகுத்தல் (Division) கணக்கு உனக்குத் தெரியாதா?" என்று கேட்டார்.

பையன், "நன்றாகவே தெரியும். ஆனால் இதுபோன்ற சந்தர்ப்பங்களில் என்னுடைய தாயார், தனக்குப் பசிக்கவில்லை என்று கூறிவிட்டு, சுட்ட நாலு தோசைகளையும் வீட்டிலுள்ள மற்ற நால்வர்களுக்கும் கொடுத்துவிடுவார்கள்' என்று கூறினான்.

பல இல்லத் தலைவிகள், தங்களை ஒறுத்துக் குடும்பத்திற்காக வாழ்கிறவர்களாக இருக்கிறார்கள். இப்படிப் பாசத்தையும் – நேசத்தையும் சொற்களால் மட்டுமல்ல, செயலாலும் கற்றுக்கொடுக்க வேண்டும்.

இன்றையத் தலைமுறையினர், தங்களைத் தவறுகளிலிருந்து தற்காத்துக்கொள்ளத் தடையாயிருக்கும் தடைகள் மிக அதிகம்.

இத்தனை இடர்பாடுகள் மத்தியிலும் பிள்ளைகள் தங்களைக் கட்டுக்காவலுடன் காத்துக்கொள்ளவேண்டின், இல்லத்திலுள்ள பாசப்பிணைப்பு ஏனைய எல்லா உறவுகளைவிட வலுவுள்ளதாயிருத்தல்வேண்டும்.

உங்கள் பிள்ளைகள் அன்பென்னும் பாசக்கயிற்றினால் கட்டப்பட்டவர்களாக இருக்கவேண்டும்.

“அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது;
அன்புக்குப் பொறாமையில்லை;
அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது.
அயோக்கியமானதைச் செய்யாது;
தற்பொழிவை நாடாது; சினமடையாது,
தீங்கு நினையாது.
அநியாயத்தில் மகிழ்வுறாமல் சத்தியத்தில் மகிழ்வுறும்.
அன்பு சகலத்தையும் தாங்கும்
சகலத்தையும் விசுவாசிக்கும்;
சகலத்தையும் நம்பும்;
சகலத்தையும் சகிக்கும்” (1 கொரி.13:4–7).

25

குழந்தை வளர்ப்பு - 3

(உள்ளத்தைக் காயப்படுத்த வேண்டாம்)

பிதாக்களே உங்கள் பிள்ளைகள் திடனற்றுப் போகாதபடி, அவர்களுக்குக் கோப மூட்டாதிருங்கள் (கொலோசெயர் 3:21).

ஒரு தாய் குழந்தையைப் பத்துமாதம் சுமந்து பெறுகிறாள் என்பது உண்மைதான். ஆனால், அதன்பிறகு பிள்ளைகளையும் மனைவியையும் சேர்த்து இவ்வுலகில் தூக்கிச் சுமப்பவன் பெரும்பாலும் தந்தைதான். தன் மனைவி—பிள்ளைகள் நன்றாக இருப்பதற்காகத் தானே, தந்தை தன்னுடைய வாழ்க்கையின் பெரும்பகுதியை வீட்டிற்கு வெளியே செலவிடுகிறான் – பாடுபடுகிறான்! இந்த உண்மையைப் பல பிள்ளைகள் உணரத்தவறிவிடுகிறார்கள்; தாய்மார்களும் இந்த உண்மையைப் பிள்ளைகளுக்கு உணர்த்துவதில்லை.

திருவள்ளுவர்:

"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்"– (குறள்67) என்று இயம்புகிறார்.

(பொருள்: ஒரு தந்தை மகனுக்குச் செய்யும் உதவி அவனைச் சமுதாயத்தில் தலை சிறந்தவனாக, மரியாதைக் குரியவனாக ஆக்குவதுதான்).

தமிழ் செய்யுள் கூறுகிறது: "ஈன்று புறம் தருதல் தாயின் கடமை – அவனைச் சான்றோனாக்குதல் தந்தையின் கடமை – அவனுக்கு நன்னடை நல்குதல் வேந்தனின் (அரசின்) கடமை" (புறநானூறு – புலவர் பொன்முடியார்).

குடும்பத்தைச் சுமப்பதற்காக தந்தையின் உழைப்பு, தன்னல தியாகம், சந்திக்கும் அவமானங்கள், சகித்துக்கொள்ளும் அவ மரியாதைகள் யாவும் அவர்களுடைய முன்னிலையில் நடைபெறுவ

தில்லையாதலால், பல பிள்ளைகளுக்குத் தகப்பனுடைய அருமை தெரியாமலே போய்விடுகிறது. பல குடும்பங்களில், வெளியுலகில் கணவன் அனுபவிக்கும் பாடுகளை மனைவியர்களும் அறியாம லிருப்பதுதான் பரிதாபம்.

பல இடங்களில், பல வேளைகளில் அவர்களுடைய உள்ளான உணர்வுகளையும், நியாயமான பிரதிச்செயல்களையும் (Reaction) கட்டுப்படுத்திக்கொண்டு சகித்துப்போவது, குடும்பத்தின் எதிர்கால நன்மையைக் கருதித்தான். தன்னுடைய சீற்றத்தின் பின்விளைவுகள் குடும்பத்தைப் பாதிக்குமே என்ற உணர்வினால்தான் பல குடும்பத் தலைவர்கள் தங்களைக் கட்டுப்படுத்திக்கொள்ளுகிறார்கள்.

பெற்றோர்களை வெறுக்கும் பிள்ளைகள்

சமுதாயத்தில் எல்லோராலும் மதிக்கப்படத்தக்க உயர் மட்டத்திலுள்ள பெரிய மனிதர்கள் கூட, தங்கள் பெற்றோர்களை, பெரும்பாலும் தந்தையை, அவமரியாதையுடனோ (Disrespect) அல்லது அலட்சியத்துடனோ (Indifference) நடத்தும் அவலத்தை நம் சமுதாயத்தில் பல வீடுகளில் காண்கிறோம். பெரும்பாலோனோர் தந்தையையும், சிலர் தாயையும், வேறுசிலர் பெற்றோர்கள் இருவரையும் மதிப்பதில்லை.

தனிப்பட்ட முறையில் பெற்றோர்களும் பிள்ளைகளும் நல்லவர் களாகவும், இனியவர்களாகவும் இருக்கின்றனர். மேலோட்டமாகப் பார்க்கின் அவர்களிலே எக்குறையையும் காண்பதரிது. எனினும், அவர்கள் உறவிலுள்ள விரிசல் அதிர்ச்சியூட்டுவதாயும், வியப் பூட்டுவதாயுமிருக்கும். ஆழ்ந்து ஆயின், இந்நிலைக்குக் காரணம், பெரும்பாலும் பெற்றோர்களே.

பெற்றோர்கள் சில கண்டிப்புகளை – தண்டனைகளை – வசைகளைப் பிள்ளைகளின் நலன் கருதி செய்தாலும், அவற்றை பிள்ளைகள் புரிந்துகொள்ளக் கூடியவகையில் மனிதத்தன்மையுடன் செய்யாமல், முரட்டுத்தனமாக நிலைமையைக் கையாளுவதலால், பிள்ளைகள் பெற்றோர்களை வெறுக்கும் நிலை உருவாகிறது.

பிள்ளைகள் வளரும் காலத்தில் நிகழ்ந்த நிகழ்வுகளும், பெற்றோர்கள் தங்களை நடத்திய விதங்களும், பேசிய பேச்சுக்களும் ஏற்படுத்தும் தாக்கத்தினால் விழையும் உள்ளத்தின் காயங்கள் அவ்வளவு எளிதாக மறைவதில்லை.

பதிலுக்குப் பதில் (Reciprocity)

இன்றைய உளவியல் வல்லுனர்களின் ஆய்வின்படி, மானுட உறவுகள் "பரஸ்பர செயல் கொள்கை" (Principle of Reciprocity) அடிப்படையினாலது. அதாவது, 'மற்றவர்கள் நம்மை எவ்வண் நடத்தினார்களோ, அவ்வண்ணமே நாமும் மற்றவர்களை நடத்தும் குணம்' நம்மனைவரிலுமுள்ள மானிட இயல்பு.

இந்த அடிப்படையான குணத்தைக் கருத்தில் கொண்டுதான், இயேசு கிறிஸ்து, "உங்களை சினேகிக்கிறவர்களையே நீங்கள் சினேகிப்பீர்களானால், உங்களுக்குப் பலன் என்ன? ஆயக்காரரும் அப்படியே செய்கிறார்கள் அல்லவா? உங்கள் சகோதரனை மாத்திரம் வாழ்த்துவீர்களானால், நீங்கள் விசேஷித்து செய்கிறது என்ன? ஆயக்காரரும் அப்படியே செய்கிறார்கள் அல்லவா?" (மத்.5:46,47) எனக். கூறுகிறார்.

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் பிள்ளைப் பருவத்திலே. அவர்கள் நல்லவர்களாவதும், தீயவர்களாவதும் அன்னை வளர்ப்பினிலே." வளரும் பருவத்தில், பெற்றோர்களின் ஒவ்வொரு சொல்லும், செயலும் பிள்ளைகளின் ஆழ்மனதில் அவற்றின் தடங்களைப் பதித்துக்கொண்டிருக்கின்றன.

இவ்வண், பிள்ளைகளின் உள்ளத்திலே பதியும் "பதிலுக்குப் பதில் செய்யும்" எண்ணத் (Mind of reciprocity) தடங்களை (Impressions), உடனடியாகப் பெற்றோர்களால் வெளியரங்கமாய் உணரமுடிவதில்லை. ஆனால், பெற்றோர்களினால் தாங்கள் வளர்க்கப்பட்ட முறை அல்லது நடத்தப்பட்ட விதம், பிள்ளைகளின் உள்ளத்திலே பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இவ்வண் பாதிப்பாக பதிந்துவிட்ட வடுக்கள் (Scare), பின்னைய நல்லுறவிற்கோ அல்லது சீர்கேடான உறவிற்கோ வித்திடுகிறது.

பிள்ளைகள் பெரியவர்களானபின், பெரும்பாலும் பெற்றோர்கள் தங்களை எப்படி நடத்தினார்களோ, அப்படியே தாங்களும் பெற்றோர்களை நடத்துகின்றனர். பெற்றோர்கள் பலர், பிள்ளைகள் மதிக்கப்பட தேவையில்லை என்றும், அவர்களை எப்படி வேண்டுமானாலும் திட்டலாம் என்றும் எண்ணுகிறார்கள். இத்தகைய எண்ணம் மிகமிகத் தவறானதாகும். அதைப்போன்று "உன் யோசனைகள் தேவையில்லை", "முட்டாள் தனமாகப் பேசாதே" என்பன போன்ற வார்த்தைகள் அபாயமான பின்விளைவிற்கு ஆரம்ப வரிகள்.

மானிடக் குழந்தைகளின் இயலாமை

ஒரு மானிடக் குழந்தையால் பிறர் தயவில்லாமல் இவ்வுலகில் வாழ இயலாது (A human child is totally a helpless infant). மானிடக் குழந்தைகள் பிறக்கும்போது எவ்வகை உலக ஞானமும் அதற்கு இருப்பதில்லை (A human infant is completely without any knowledge).

இத்தகைய குறைபாடுகளுடன், மானிடக் குழந்தை தன் வாழ்க்கைப் பயணத்தைத் துவங்குவதால், பல பெற்றோர்கள், தங்கள் குழந்தைகளை மனிதர்களாகவே எண்ணுவதில்லை (To many adults, children are no really "people"). குழந்தைகளை ஆளாக (Person) கருதாமல், பொருளாகவே (Object) கருதுகிறார்கள். குழந்தைகளின் உணர்வுகளை ஒரு பொருட்டாகவே கருதுவதில்லை.

பிறரால் கோபமூட்டப்பட்டால் அல்லது வெறுப்பூட்டப்பட்டால் அதற்குப் பதில் நடவடிக்கை (Recourse) எடுக்க பெரியவர்களுக்குப் (Adults) பல வழிவகைகளுண்டு. அவர்களை எதிர்த்து நடவடிக்கைகள் எடுக்கலாம். அல்லது அப்படிப்பட்ட மனிதர்களை விட்டு, விலகிச் சென்றுவிடலாம். அன்றேல், தனக்குப் பிடித்த மனிதர்களைத் தெரிவு செய்து, அவர்களுடன் நட்புடனும், உறவுடனும் வாழலாம்.

ஆனால், பெற்ற தாயாலோ அல்லது தந்தையாலோ கோபமூட்டப் படும் குழந்தையின் நிலையை எண்ணிப் பாருங்கள்! பெற்றோருக்கு எதிராகப் பிள்ளைகளால் என்ன நடவடிக்கை எடுக்க முடியும்? வீட்டைவிட்டு வெளியேறும் எண்ணம் வலுப்பெறும். ஆயினும், வாலிப வயது வருமுன், மானிடக் குழந்தைகளுக்கு இப்பரந்த உலகில் பாதுகாப்பு இன்மையால், வேறு வழியின்றி கோபத்தை உள்ளடக்கிக் கொண்டு வெறுப்புடன் வீட்டில் வாழுவர்.

தங்களுடைய அன்றாட, அத்தியாவசிய, அடிப்படைத் தேவை களைப் பூர்த்திசெய்யப் போதுமான பணம் ஈட்டும் வழிவகையைக் காணும் திறனின்மையால், பெற்றோரைச் சார்ந்து வாழவேண்டிய நிர்ப்பந்தத்தால், உள்ளப் புழுங்கலுடன் காலத்தைக் கடத்திக் கொண்டிருப்பார்கள்.

இயலாமையால் எதிர்நடவடிக்கை எடுக்காவிட்டாலும், வெறுப்பும், பழியுணர்வும் குழந்தைகளின் உள்ளங்களில் ஆழப் பதிவதைத் தவிர்க்க இயலாது. அக்குழந்தை வளர்ச்சியுற்று பெரியவர்களாகி "தற்சார்பு நிறைவு" (Self-sufficient) நிலை யடைந்தவுடன், அதுகாறும் புதையுண்டு கிடந்த பழியுணர்வு அவர்களால் உணரப்படாமலே, பல ரூபங்களில் வெளிப்படுகிறது.

பெற்றோர்–பிள்ளை உறவு

பெற்றோர்களை மட்டுமல்ல, தங்கள் வாழ்க்கையில் சந்திக்கும் ஆசிரியர்கள், சக மாணவர்கள், நண்பர்கள், உடன் ஊழியர்கள், உறவினர்கள் போன்ற மற்றவர்களையும், தாங்கள் நடத்தப்பட்ட விதத்தின்படியே பின்னாளில் நடத்துகின்றனர்.

ஆகையால், குழந்தைகளை நாம்பெற்ற பிள்ளைகள்தானே என்று அலட்சியப்படுத்தாதீர்கள்; அவர்களையும் மரியாதையுடன் நடத்துங்கள்.

"பெற்றோர்கள் தாங்கள் பெற்ற பிள்ளைகளையே மதிப்புடனும் மரியாதையுடனும் நடத்தவேண்டுமா?" என வியப்புடன் கேட்கிறீர் களா?

இதற்கு என் பதில் – "ஆமாம்....ஆமாம்" என்பதுதான்.

பெற்றுவிட்டதால் பிள்ளைகள் உங்கள் அடிமைகள் அல்ல. அவர்களும் உணர்வுள்ள உயிர் ஜீவிகள். இறைவனின் சாயலில்

வளர்க்கப்பட்ட மனித பிரஜைகள், வருங்காலத்தில், உலகில் பொறுப்புகளை ஏற்கப்போகும் தலைவர்கள், நாளைய குழந்தைகளின் பெற்றோர்கள் (The parents of tomorrow's children).

இளம்பிராயத்தில் பெற்றோர்களால் ஏற்பட்ட அவமானங்கள், அவமரியாதைகள், ஏளனங்கள், சுடுசொற்கள், இகழ்வுகள் யாவும் மனதிலே, ஆழ்மனதில் ஆழப்பதிந்து, பின்னைய நாட்களிலே ஏற்றிலே மற்றவர்களுக்கு பரஸ்பர-பழிக்குப்பழியாக வெளியுலகிலே திருப்பிச் செயல்படுத்துகின்றனர். ஆனால், பெற்றோர்களின் அன்பிலும் அரவணைப்பிலும் வளரும் குழந்தைகள், எதிர்காலத்தில் பெற்றோர்களிடமும், மற்றவர்களிடமும் நல்லுறவு கொண்டிருக்கும்.

ஒரு குழந்தைக்கு, தன்னுடைய பெற்றோர்களால் கௌரவத்துடனும், மரியாதையுடனும் நடத்தப்படுவதைவிட வேறென்ன மகிழ்ச்சி இருக்கமுடியும்?

அதைப்போன்று தம்மக்கள் தம்மைவிட அறிவில் சிறந்தவர்களாக இந்த சமுதாயத்தில் திகழ்கிறார்கள் என்பதைவிட, பெற்றோர்க்கு இன்பம் பயக்கவல்ல விஷயம் இவ்வுலகில் வேறென்னவாக இருக்கமுடியும்?

"தம்மின் தம்மக்கள் அறிவுடைமை, மாநிலத்துமன்
உயிர்க்கு எல்லாம் இனிது" – (திருக்குறள் – அதிகாரம் 7 – மக்கட் பேறு).

(பொருள்: தம்மைவிட தாம் ஈன்றெடுத்த மக்கள், இப்பாரில் வாழும் உயிர்களுக்கெல்லாம் இன்பம் பயக்கும் அறிவாற்றலில் சிறந்து விளங்குவதைக் காண்பதிலும் பெரிய இன்பம் இவ்வுலகில் வேறேதும் இல்லை.)

குழந்தைகளும் மனித ஜீவன்கள்தான்

உங்கள் பிள்ளைகள் எப்படியெல்லாம் இருக்கவேண்டும் என்று எதிர்காலத் திட்டங்களும் – மனக்கோட்டைகளும் உங்கள் உள்ளத்தில் இருக்கலாம். ஆனால் பெரும்பாலும், பிள்ளைகள் கல்லூரியில் காலடி வைத்த பின்புதான், பெற்றோர்கள் அவர்களை ஒரு பொருட்டாகவே மதிக்கத் துவங்குகிறார்கள். ஆனால் அதற்கு முன்பு அது ஒரு உயிருள்ள உணர்ச்சியுள்ள ஜீவன் என்று புரிந்து கொள்ளாவிட்டால் உங்களுக்கு எந்தத் திட்டமிருந்து என்ன பயன்? (We worry about what a child will become tomorrow, yet we forget that he/she is someone today).

என்றோ பின்னொரு நாளில் காட்டவிருக்கும் பாசத்தையும் மதிப்பையும், இன்றே ஏன் காட்டக்கூடாது?

பிள்ளைகளை உபசரியுங்கள். அவர்கள் முன்னேற்றத்தில் ஆரம்பமுதலே அக்கறை காட்டுங்கள். அவர்களுக்காக உங்கள் பணத்தை மட்டுமல்ல, உங்கள் நேரத்தையும் செலவிடுங்கள். அவர்களிடம் அக்கறையுடன் பேசுங்கள்.

அவர்களின் கருத்துக்களுக்குச் செவிமடுங்கள்; அவர்களின் ஆலோசனைகளுக்கும் மதிப்பளியுங்கள். இவ்வாறுள்ள பெற்றோர் களின் ஆலோசனைக்கும், அறிவுரைக்கும் பிள்ளைகளும் பதிலிற்கு மதிப்பளிப்பார்கள்; பெற்றோர்கள்–பிள்ளைகள் உறவு அன்பெனும் பாசக்கயிற்றினால் பிணைக்கப்பட்டிருக்கும்.

எல்லா மனிதர்களும், குழந்தைகள் உட்பட, சுயமரியாதையை விரும்புகிறார்கள்.

எந்த மனிதனும், குழந்தைகள் உட்பட, அவமதிக்கப் படுவதை விரும்புவதில்லை.

எனவே, குழந்தைகளின் சுயமரியாதை காயமடையும்படி, குறைவாகவோ அல்லது அற்பமாகவோ எதையும் பேசுவதையும், செய்வதையும் தவிருங்கள்.

1. குறைகூறியே (Criticism) வளர்க்கப்படும் பிள்ளைகள், எதிலும் குற்றம் (Condemn) காண்பவர்களாக இருப் பார்கள்.
2. பகைமையுணர்வில் (Hostility) வளர்க்கப்படும் பிள்ளை கள், எப்போதும், எதற்கும் சண்டையிடும் (Fighting Nature) குணத்துடன் இருப்பார்கள்.
3. அச்சமூட்டி (Fear) வளர்க்கப்படும் பிள்ளைகள், எந் நேரமும் பய உணர்வுடன் (Apprehension) வாழ்வார்கள்.
4. பரிவிரக்கத்தில் (Pity) வளர்க்கப்படும் பிள்ளைகள் தன்னையே அவலமாகக் (Self-regret) கருதுவார்கள்.
5. ஏளனப்பேச்சால் (Ridicule) வளர்க்கப்படும் பிள்ளைகள் எவ்விடத்திலும் வெட்கப்பட்டுக் (Shy) கொண்டிருப் பார்கள்.
6. பொறாமையுடன் (Jealousy) வளர்க்கப்படும் பிள்ளைகள் குற்ற உணர்வோடு (Guilty) வாழ்வார்கள்.
7. சகிப்புடன் (Tolerance) வளர்க்கப்படும் பிள்ளைகள் பொறுமையைக் (Patience) கற்றுக்கொள்வார்கள்.
8. ஊக்குவிப்புடன் (Encouragement) வளர்க்கப்படும் பிள்ளைகள், நம்பிக்கையைக் (Confidence) கற்றுக் கொள்வார்கள்.
9. மெச்சி (Praise) வளர்க்கப்படும் குழந்தைகள், பாராட்ட (Apprieciate) கற்றுக்கொள்வார்கள்.

10. மதிப்புடன் (Respect) நடத்தப்படும் குழந்தைகள், அன்பு (Love) செலுத்தக் கற்றுக்கொள்வார்கள்.
11. உரிமை (Approval) கொடுக்கப்பட்டு வளர்க்கப்படும் பிள்ளைகள், தன்னை விரும்பக் (Like himself) கற்றுக் கொள்வார்கள்.
12. அங்கீகாரத்துடன் (Recognition) வளர்க்கப்படும் பிள்ளைகள், கீழ்ப்படிதலைக் (Obedience) கற்றுக்கொள் வார்கள்.
13. நியாயத்துடன் (Fairness) வளர்க்கப்படும் குழந்தைகள், எது நீதி (Justice) என்பதைக் கற்றுக் கொள்வார்கள்.
14. நேர்மையுடன் (Honesty) வளர்க்கப்படும் குழந்தைகள், எது உண்மை (Truth) என்பதைக் கற்றுக்கொள்வார்கள்.
15. பாதுகாப்புடன் (Security) வளர்க்கப்படும் பிள்ளைகள், தங்களில் நம்பிக்கையுடன் (Faith) வாழ்வார்கள்.
16. நட்புடன் (Security) வளர்க்கப்படும் பிள்ளைகள், தாங்கள் வாழும் இந்த உலகம் வாழ்வதற்கு இனிமையான இடம் (World is a nice place) என்பதைக்கற்றுக்கொள்வார்கள்.

குழந்தைப் பருவத்தில், தங்கள் முன்னைய வாழ்க்கை அனுபவத்தில் கற்றுக்கொண்டவைகளையே, பின்னைய நாட்களில் செயல்களாக வெளிப்படுத்துகின்றனர். ஆரம்பகால வாழ்க்கையே, பிற்கால வாழ்க்கைக்கு அடித்தளம். அடித்தளத்தைச் சீராக அமைப்பது பெற்றோர்களின் கடமை.

நேரத்தை ஒதுக்கி – நேசத்தைப் பெறுங்கள்

எப்போதோ படித்த ஒரு புதுக்கவிதை நினைவிற்கு வருகிறது.

"குழந்தையாயிருக்கையில் பெற்றோர்கள் அவனைக்
'குழந்தைகள் காப்பகத்தில்' சேர்த்தனர்

குழந்தை பெரியவனானதும் பெற்றோர்களை அவன்
'முதியோர்கள் இல்லத்தில்' சேர்த்தான்."

குழந்தைக் காப்பகத்தில்விடப்பட்ட பிள்ளையிடம் பெற்றோர்கள் பாசத்தை எப்படி எதிர்பார்க்க முடியும்?

பொருளாதாரத் தேவைகள் மிகுதியான இந்த நாட்களில் கணவன் மனைவி இருவரும் வேலைக்குப்போகத்தான் வேண்டிய துள்ளது. ஆனால் பெற்ற பிள்ளைகளைக் கவனிப்பதற்கு வேலை தடையாக இருக்கக்கூடாது.

'பிள்ளைகளுக்காகத்தானே வேலைக்குப்போகிறேன்' என்று நீங்கள் கூறினாலும், பிள்ளைகளைக் கவனிப்பதும் உங்கள் கடமைதான் என்பதை மறவாதீர்கள். இந்த இடத்தில்தான் கூட்டுக் குடும்பத்தின் சிறப்பு மேலோங்கி நிற்கிறது.

பிள்ளைகளுக்காக உங்களுடைய நேரத்தை ஒதுக்குவது அவசியம். பிள்ளைகளுக்காக உங்களுடைய ஆசாபாசங்களை தியாகம் செய்வது நல்லது.

பிள்ளைகளுக்குப் பணம் சேர்த்துவைப்பதைவிட, அவர்களிடம் சிறந்த குணங்களை உருவாக்குவதே சிறந்தது. குணமில்லா பிள்ளைக்குப் பணமும் – சொத்தும் சேர்த்துவைப்பது வீண்; கையில் கிடைக்கும் பணத்தை நீங்கள் நினைப்பதைவிட அதிசீக்கிரமே அழித்துவிடுவான்(ள்).

வெள்ளித்திரையிலும், சின்னத்திரையிலும், கணினித் திரையிலும், தொலைபேசியிலும், செல்போன்களிலும், அழகு நிலையங்களிலும், நண்பர்கள் கூட்டத்திலும், கிளப்களிலும் (Clubs) நேரத்தைத் தொலைத்துவிட்டு, பிள்ளைகளைக் கவனிக்க – வளர்க்க நேரமில்லை என்று அங்கலாப்போர்களுக்கு மன்னிப்பில்லை.

ஒரு நாள் ஒரு சிறுவன் தனது தந்தை வீட்டுக்கு வரும்வரை ஆவலோடு காத்திருந்தான். வந்தவுடன் தன்னுடைய தந்தையிடம் கேட்டான், "அப்பா உங்களுக்கு ஒரு நாளைக்கு எவ்வளவு சம்பளம்?" என்று கேட்டான்.

மகனுடைய கேள்வி தகப்பனுக்கு ஆச்சரியமாகவும் அதே சமயம் எரிச்சலூட்டுவதாகவும் இருந்தது. அவர் கூறினார், "உன்னுடைய அம்மாவிற்கே என்னுடைய சம்பளம் என்னவென்று சொன்னதில்லை; உன் வேலையைப்பார் நான் களைப்பாக இருக்கிறேன்."

பையன், "சொல்லுங்கப்பா, ஒரு மணி நேரத்திற்கு உங்களுக்கு எவ்வளவு சம்பளம்?" என்று பிடிவாதமாகக் கேட்டான்.

மகனுடைய கேள்விக்கு எதையாவது சொல்லுவோம் என்றெண்ணி, "ஒருமணிக்கு சுமார் 100 ரூபாய்" என்றார் தந்தை.

"அப்படியா? சரி, எனக்கு ஒரு பத்து ரூபாய் கொடுக்கமுடியுமா?" என்று பையன் கேட்டான்.

தந்தைக்குக் கோபம் தலைக்கேறியது. "போ... போய் தூங்கு; என்னைத் தொந்தரவு செய்யாதே" என்று அலறினார்.

சிறிது நேரம் சென்றபின்னர், தந்தை தனது கோபத்திற்காக வருத்தப்பட்டார். "ஒரு வேளை ஏதாவது புத்தகம் அல்லது நோட்டு வாங்குவதாகக் கேட்டிருப்பானோ; தேவையில்லாமல் சிறு பிள்ளையின் உள்ளத்தைக் காயப்படுத்திவிட்டோமே" என்று எண்ணிக்கொண்டே பையனின் படுக்கை அருகே சென்று "என்னப்பா தூங்கிவிட்டாயா?" என்று கேட்டார்.

பையன் எழுந்து, "இல்லையப்பா, இன்னும் தூங்கவில்லை; என்ன விஷயம்?" என்றான்.

"இந்தா, நீ கேட்ட பத்து ரூபாய்" என்று ரூபாயை நீட்டினார்.

"தேங்ஸ் – ப்பா" என்று கூறிக்கொண்டே தலையணிக்கடியில் துழாவி, அதனடியில் இருந்த பணத்தை எடுத்தான்.

"அப்பா எனக்குக் கொடுக்க உங்கள் கையில் வைத்திருக்கும் 10 ரூபாயையும், நான் சேர்த்துவைத்திருக்கும் 90 ரூபாவையும் சேர்த்து மொத்தம் 100 ரூபாய் இருக்கிறது; இது உங்களுடைய ஒருமணி நேர சம்பளம். தயவுசெய்து இந்தப் பணத்தை வைத்துக் கொண்டு ஒருமணி நேரத்தை எனக்குத் தருவீர்களா? ஒருமணி நேரம் என்னோடு கழிப்பீர்களா?" என்று கேட்டான்.

உங்கள் பிள்ளைகள், நீங்கள் அவர்களுக்கு அளிக்கும் வெகுமதிகளைவிட – பணத்தைவிட உங்களுடன் கழிக்கும் நேரத்தைத் தான் வெகுவாக விரும்புகிறார்கள்; அவர்களுடன் கழிக்கும் நேரத்திற்கு ஈடானது வேறில்லை என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

ஒரு தாய் இப்படிக் கூறினார்:

"என் குழந்தையிடமுள்ள அன்பினால், என்னுடைய குழந்தை உடன் தவழ்ந்தேன், அவன் தத்தித்தத்தி நடக்கும்பொழுது மெதுவாக உடன் நடந்தேன்; அவன் குழந்தையாக ஓடும் பொழுது நானும் உடன் ஓடினேன்; அதன்பின் அவன் வாலிபத் தில் அடியெடுத்து நடப்பதை ஒதுங்கி நின்று பெருமையாகப் பார்த்தேன்" இது எவ்வளவு உண்மையான வார்த்தைகள்!

குழந்தையின் ஒவ்வொரு கட்டத்திலும், அதனுடன் தனது நேரத்தை செலவிட்டு, ஒழுக்கத்தைக் கற்றுகொடுத்து, நற்பழக்கங் களைப் – பயிற்றுவித்து. ஆவிக்குரிய ஜீவியத்தில் வழிநடத்திய பெற்றோர்களால்தான், பிள்ளைகள் வளர்ந்து தங்களைத் தாங்களே கவனித்துக்கொள்ளவேண்டிய வாலிபர்களாக சமுதாயத்தில் பிரவேசிக்கும்பொழுது ஒதுங்கிநின்று பெருமைப்படமுடியும். இல்லையென்றால், எந்த நேரத்தில் எந்தப்பிரச்சனையைக் கொண்டு வருவானோ(ளோ) என்ற அச்சத்தில், அனுதினமும் 'நெருப்பை வயிற்றில் கட்டிக்கொண்டு' வாழும் பெற்றோர்களாக இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும்.

தனது தந்தையைப் பற்றிக் கூறும் கிளாரன்ஸ் பி. கெலண்ட், "வாழ்க்கையை எப்படி வாழ்வது என்று என்னுடைய தந்தை எனக்குச் சொல்லிக்கொடுக்கவில்லை, நான் பார்த்துப் படிக்கும் படியாகத் தன் வாழ்க்கையை என் கண்முன்னே வாழ்ந்து காட்டினார்" என்று கூறுகிறார் (**My father did not teach me how to live; but he lived, and let me watch him to do it** - ***Clarence B. Kellan***).

இன்றைய பிள்ளைகள் தங்களுக்கு ஆலோசனை அல்லது அறிவுரை கூறுகிறவர்களைவிட, தாங்கள் பின்பற்றத்தக்க முன்மாதிரியான மனிதர்களையே விரும்புகிறார்கள் (The children of today like role model to emulate, more than counsellors and advisers).

நீங்கள் உங்களுடைய பிள்ளைகளுக்கு முன்னால் முன்மாதிரியான வாழ்க்கையை வாழ்ந்துகொண்டிருக்கிறீர்களா?

நிறைவுரை

ஒரு குழந்தை பெரியனாக அல்லது பெரியவளாக ஆனபின்பு, வாழ்க்கையின் வெற்றி–தோல்வியை அப்பிள்ளையின் மூன்று வகையான உறவுமுறைகள்தான் பெரும்பாலும் தீர்மானிக்கின்றன.

அந்த மூன்று உறவுமுறைகள்:

1. குழந்தையின் இறையுறவு (வேதம் வாசித்தல், ஜெபித்தல்)
2. குழந்தையின் குடும்ப உறவு (பெற்றோர், உடன்பிறந்தவர்கள்)
3. குழந்தையின் வெளியுறவு (வீட்டுக்கு வெளியே)

இந்த உறவுகளை குழந்தையின் அனுபவத்திலே முறையாக நெறிப்படுத்துவதற்குப் பெற்றோர்களைப்போல் வேறு யாரும் தகுதியுள்ளவர்கள் அல்ல. பிள்ளகளின் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு, அவற்றை இறைவன் தங்களுக்குக் கிருபையாக அளித்துள்ள பாக்கியமாக அல்லது பொறுப்பாகக் கருதி, வாழ்க்கையைச் சந்திக்கக் குழந்தைகளைத் தயார்படுத்தவேண்டும்.

"முறையாக ஆரம்பிக்கப்பட்ட வேலை பாதி முடிந்ததுபோல்' என்பார்கள் (A well began work is half done). அதுபோலவே, முறையாக வளர்க்கப்பட்ட பிள்ளைகள், பெரியவர்களாக வளர்ந்த–பின்னர் சரியாக வாழ்வார்கள்.

26

பொறுப்பான பெற்றோர்

(ஒழுக்கம்)

என் பிள்ளைகள் சத்தியத்தில் நடக்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிற மகிழ்ச்சியிலும் அதிகமான மகிழ்ச்சி எனக்கு (வேறொன்றும்) இல்லை (3 யோவான்; வசனம் 4).

பொறுப்புள்ள பெற்றோராயிராதவர்கள், ஒழுக்கமற்ற பிள்ளைகள் உருவாவதற்குப் பொறுப்பாகிறார்கள் (Faulty Parenting breads faulty children). குழந்தைகள், இறைவன் உங்கள் கரங்களில் ஈந்துள்ள "அருங்களிமண்" போன்றவர்கள். ஒரு குயவனைப்போல், அல்லது ஒரு கலைஞனைப்போல் அவர்களை எவ்வடிவிலும் வடிக்கலாம். பெற்றோர்களின் திறமைக்கேற்ப பிள்ளைகள் உருப்பெறுகிறார்கள்.

அமெரிக்க ஜனாதிபதி, ஜாண் எஃப் கென்னடி, "தவறாகக் கற்பிக்கப்படும் குழந்தை உதவாக்கரையாகிவிடும்" என்று கூறுவதைக் கவனத்தில் கொள்ளுங்கள் (A child miseducated is a child lost –*John F. Kennedy*).

டேவிட் வில்கிர்சன் (David Wilkerson) என்ற சமூக சிந்தனையாளர் கூறும் கூற்றைக் கேளுங்களேன்: "நல்ல பெற்றோர்களெல்லாம் எப்பொழுதும் நல்ல குழந்தைகளைப் பெற்றுவிடுவார்கள் என்று கூறிவிட முடியாது. குழந்தைளை வளர்ப்பதில் பொறுப்பும், ஈடுபாடும் கொண்ட பெற்றோர்களே, பிள்ளைகளில் நற்குணங்களையும், நற்பண்புகளையும், நல்லொழுக்கங்களையும் மேலோங்கச் செய்ய வாய்ப்புள்ளது. பெற்றோர்களின் ஒவ்வொரு செயலும் வார்த்தையும் குழந்தையின் குணத்தை நெய்யும் நூலிழைகள் போன்றவைகள். இவ்வண் நெய்யப்பட்ட குணநலங்களே, அக்குழந்தையைச் சமுதாயம் என்னும் கூட்டமைப்பில் தன்னை எப்படி இணைத்துக்கொள்கிறது என்பதைத் தீர்மானிப்பதாக இருக்கிறது."

பெற்றோராயிருத்தல் (Parenting)

குழந்தை வளர்ப்பு எளிதானதல்ல. குழந்தைகளின் உடல் வளர்ச்சி, உள்ள வளர்ச்சி, ஆவிக்குரிய வளர்ச்சி, ஒழுக்கம், சாமர்த்தியம் (Talent) யாவிலும் பெற்றோர்களுக்குப் பெரும் பங்குண்டு. பெற்றோராயிருக்கும் கலையை யாரும் எங்கும் கற்றுத் தருவதில்லை. பெரும்பாலான பெற்றோர்கள் முட்டி–மோதிக் கற்றுக்கொள்ளும் வழியையே பின்பற்றுகின்றனர் (Many parents learn by the ***Trial and Error Method***). சிலர் வெற்றியை ஈட்டுகின்றனர். பலர் பல குளறுபடிகள் செய்து தோல்வியைத் தழுவுகின்றனர்.

பெற்றோராய் நடந்துகொள்ளும் முறைமையைக் குறித்த தெளிவான கண்ணோட்டம் பலரிடம் இல்லை. பெரும்பாலும் நம் பெற்றோர்கள் எவ்வண் நமக்குப் பெற்றோர்களாயிருந்தார்களோ, அவ்விதப் பெற்றோர்களாகவே நாமிருக்கிறோம் (We parent the way we parented). நாம் எப்படிப்பட்ட ஒழுக்கத்தில் வளர்க்கப் பட்டோமோ அப்படிப்பட்ட ஒழுக்க வழிகளிலேயே நாமும் நம் பிள்ளைகளை வளர்க்க விழைகிறோம் (We discipline the children, as we were disciplined).

நம் பெற்றோர்களின் நிறைகுறைகளைச் சீர்தூக்கிப் பார்த்து, குறைகளை நீக்கி, நிறைவான பெற்றோர்களாக நாம் விளங்குவதில்லை. நமது பெற்றோர்களால் நம்மில் ஏற்பட்ட பாதிப்பை பிள்ளைகளுக்குக் கடத்துகிறோம் (We pass on conceptions down to our generation).

நீங்கள் பொறுப்புள்ள பெற்றோராய் வெற்றிகரமாகப் பணியாற்றியதைக் கணிக்க உங்கள் பிள்ளைகள்தான் அளவுகோல்கள் (Your children are the measure of your sucess of your parenting).

பெற்றோர்களின் எதிர்பார்ப்பு (Parental Expectations)

அனைத்துப் பெற்றோர்களுமே தங்கள் பிள்ளைகள் சகல திறமைகளையும் பெற்றுத் தலைசிறந்து விளங்கவேண்டுமென விரும்புகிறார்கள் (All parents want perfect children). உலகின் எந்த மூலையில் வசிக்கும் பெற்றோருக்கும் இதுதான் எதிர்பார்ப்பு.

எல்லாப் பிள்ளைகளும் அனத்துத் திறமையைகளையும் பெற்ற அசாதாரணமானவர்களாக இருக்கமுடியாது. இறைவன் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையான திறமையை வழங்கியுள்ளார். நம் குழந்தைக்குள்ள திறமையைக் கண்டுபிடித்து அதனை மெருகூட்டி வளர்க்கவேண்டும்.

பெற்றோரின் எதிர்பார்ப்புகள் இடிந்து நொறுங்கி நேர் எதிர்மாறான நிகழ்வுகள் உருவாவதில் பிள்ளைகளைவிட பெற்றோர்களே காரணிகளாக இருக்கின்றனர் என்பது அதிர்ச்சியூட்டும் நிஜம் (Indifferent parenting leads to problem children).

தோல்வியுறும் பெற்றோர்கள் (Parental Failure)

குழந்தை வளர்ப்பில் தோல்வியுறும் பெற்றோர்கள் செய்யும் தவறுகள் என்னென்ன?

1. பிள்ளைகளின் ஒழுக்கத்தில் பெற்றோர்களாகிய தங்களுக்கும் பங்குண்டு என உணராதவர்கள் (The parents who do not realise that the parents are part of the discipline).
2. பிள்ளைகளின் நிறைகளை மெச்சாமல், எப்பொழுதும் எதிலும் குற்றம், குறை கூறிக்கொண்டே இருக்கும் பெற்றோர்கள் (The parents who do not apprieciate but criticise).
3. அன்பாய் இருப்பதாய் எண்ணிக்கொண்டு, பிள்ளைகளுக்கு அதிக செல்லம் கொடுத்து, தண்டிக்கத் தயங்கும் பெற்றோர்கள் (The parents who hesitate to punish, but pamper their children).
4. தங்கள் சொல்லிலும், செயலிலும் நிலையில்லா குணமுள்ள பெற்றோர்கள் (The parents who are inconsistant in their words and deeds).
5. வளரும் தங்கள் பிள்ளைகளின் முன், அவர்கள் பின்பற்றக் கூடிய "முன்மாதிரியான நன்னடக்கை" இல்லாதவர்கள் (The parents who are with indisciplined character).
6. தாங்கள் கொடுத்த கட்டளைகளை அல்லது எச்சரிக்கைகளைப் பிள்ளைகள் மீறும்பொழுது அதைக்கண்டு கொள்ளாது அல்லது பொருட்படுத்தாது இருக்கும் பெற்றோர்கள் – அதாவது தங்கள் சொல்லுக்கும் செயலுக்கும் முரணானவர்கள் (The parents who say things which they do not mean).
7. பிள்ளைகளைத் திருத்துவதற்காய்த் தண்டிக்காமல், தங்கள் கோபத்தைத் தணிக்க வடிகாலாகத் தண்டிப்பவர்கள் (The parents who punish their children to subside their anger).
8. நிதானமின்றி பிள்ளைகளின் பிரச்சனைகளை அணுகி, சிக்கலை அதிகப்படுத்தும் அல்லது தற்காலிக தீர்வு காணும் பெற்றோர்கள் (The parents who complicate matters due to lack of patience).
9. பிள்ளைகள் வளருங் காலத்தில், ஒவ்வொரு காலக்கட்டங்களிலும், அவர்களுக்கு ஏற்படக்கூடிய பிரச்சனைகளை எதிர்நோக்கி முன்கூட்டியே திட்டமிடாது காலத்தைக்

கழித்த பெற்றோர்கள் (The parents who do not plan for the prevention of behavioural problems).

10. கிறிஸ்துவை இளம்பிராயத்திலேயே பிள்ளைகளுக்கு அறிமுகப்படுத்தி, ஆவிக்குரிய வாழ்க்கைக்கு வழிநடத்தத் தவறிய பெற்றோர்கள் (The parents who do not have concern for the Chidren's Spiritual Growth).

வெற்றி பெற்ற பெற்றோர்கள் (Parental Success)

தங்கள் குழந்தைகளை 'அவையத்து முந்தியிருக்கசெய்த' – வெற்றி பெற்ற பெற்றோர்கள் கடைப்பிடிக்கும் வழிமுறைகளைக் காண்போம்

1. பிள்ளைகளின் ஒழுக்கத்தில் தங்களுக்கிருக்கும் பங்கினை உணர்ந்து, பிள்ளைகள் முன்னே எடுத்துக் காட்டான வாழ்க்கை வாழும் பெற்றோர்கள் (As parents of discipline, they are the Role Model of discipline).

2. பிள்ளைகள் வளரும் காலத்தில், ஒவ்வொரு பருவத்திலும் அவர்களுக்கு ஏற்படக்கூடிய பிரச்சனைகளை எதிர் நோக்கி, அவற்றினைத் தவிர்க்கும் தற்காப்பு நடவடிக் கைகளை மேற்கொள்ளும் பெற்றோர்கள்; ஒழுக்கச் சீர்கேட்டை உருவாக்கும் சூழலை வீட்டிலும், சுற்றுப் புறத்திலும் தவிர்க்கும் பெற்றோர்கள் (The Parents who give attention to the prevention of behavioural problems).

3. கண்டிக்கவேண்டிய நேரத்தில் கண்டிக்கத் தவறாத – தண்டிக்கவேண்டிய தருணத்தில் தண்டிக்கத் தயங்காத பெற்றோர்கள். பிள்ளைகள் ஒழுக்கத்தை கடைப்பிடிக்கச் செய்வதில் உறுதியாகவும், ஆக்கப்பூர்வமாகவும் செயல் படும் பெற்றோர்கள் (The parents who are strict and positive in inculcating discipline).

4. கண்டிப்பு தண்டனையல்ல; அது ஒழுக்கப்படுத்தும் வழிமுறை என்பதை உணர்ந்த பெற்றோர்கள் (The parents who understood that discipline is not a punishment, but a process).

5. "அடித்து வளர்க்காத பிள்ளையும், முறித்துவளர்க் காத முருங்கையும் உருப்படாது" என்பது தமிழிலுள்ள வழக்குச்சொல். தண்டிப்பது அவசியமாயின், அது பிள்ளைகள் திருந்த மட்டுமேயன்றி, தங்கள் கோபத்தைத் தணித்துக்கொள்ள அல்ல என்பதை உணாந்த பெற்றோர்கள் (The parents who punish, not in anger, but to correct their children).

6. அன்பு செலுத்துவதற்கும், செல்லம் கொடுத்து கெடுப் பதற்குமுள்ள வேறுபாட்டினை உணர்ந்த பெற்றோர்கள் (The parents who aware of that discipline does not mean lack of love).

7. பிள்ளைகள் ஒழுக்கத்தை மீறும்பொழுது எடுக்கும் நடவடிக்கைகள், அவர்களுடைய வருங்கால நடக் கையைச் சீர்செய்யும் என்பதை உணர்ந்து செயல்படும் பெற்றோர்கள் (The parents reaction to misbehaviour affects the future behaviour of the children)

8. காலத்தின் மாறுதல்களுக்கேற்ப, தங்களுடைய சிந்தனை களை மாற்றிக்கொள்ளும் மனப்பக்குவமுள்ள பெற்றோர் கள் (The parents who are open to change - change with change of time).

9. பிள்ளைகளை வளர்ப்பதில் ஒருமித்த கருத்துடன் செயல் படும் (தாய்—தந்தை) பெற்றோர்கள் (The parents - father and mother - who act with one-mind in disciplining).

10. இயேசுவை இளமையிலே பிள்ளைகளுக்கு அறிமுகப் படுத்தி— ஜெபத்திலும், திருமறை வாசிப்பிலும், ஆலயத் தொழுகையிலும் ஊக்கப்படுத்தி, ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்க்கும் பெற்றோர்கள் (The parents who introduce their children to Christ while they are young. The parents who take care of their Spiritual Growth).

நிறைவுரை

பிள்ளைகளில் ஒழுக்கத்தை உருவாக்குவது என்றால், அவர்களைத் தண்டிப்பது என்று பொருளல்ல. கண்டிப்பதும், தண்டிப்பதும் பிள்ளைகளின் மேலுள்ள அன்பினால்தான் என்பதை நீங்கள் மட்டுமல்ல, தண்டிக்கப்படும் பிள்ளைகளும் உணரும் படியாகத் தண்டியுங்கள்.

பொறுப்பான பெற்றோராயிருப்பது எளிதானதல்ல; அது இறைவன் உங்களுக்கு அளித்துள்ள பெருங்கடமை என்பதை மறவாதீர்கள். "பெற்றோர்களாக இருப்பதில் பெரிய பிரச்சனை என்னவென்றால், நீங்கள் பெற்றோராக இருப்பதற்கு அனுபவம் கிடைத்த பிறகு, நீங்கள் வேலையற்றவர்களாகி விடுகிறீர்கள்" என்று வேடிக்கையாக ஒருவர் கூறினார் (The trouble with being a parent is that by the time you are experienced, you are unemployed - Anonymous.). ஏனென்றால், உங்களுக்கு அனுபவம் கிடைத்தபிறகு, உங்களுடைய பிள்ளைகள் பெரியவர்களாகி விட்டிருப்பார்கள். ஆகவே உங்கள் அனுபவம் இனிப் பயன்பட வாய்ப்பில்லை.

இறைவன் நமக்குக் கிருபையாய் ஈந்துள்ள குழந்தைகளை நல்நடத்தையுடனும், ஆவிக்குரிய நற்பண்பிலும் வளர்ப்பது எல்லாக் கிறிஸ்தவப் பெற்றோர்கள்மீதும் விழுந்த பெறும் பொறுப்பு என்பதை மறவாதீர்கள்.

பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான் (நீதி.22:6). பிள்ளையின் நெஞ்சில் மதியீனம் ஒட்டியிருக்கும்; அதைத் தண்டனையின் பிரம்பு அவனைவிட்டகற்றும் (நீதி.22:15).

"பருவத்தே பயிர்செய்" (ஆத்திச்சூடி) என்று ஔவை மூதாட்டி கூறியது, வேளாண்மைக்கு மட்டுமல்ல, இல்வாழ்க்கைக்கும் சேர்த்துத்தான். குழந்தைகளால் அன்பையும், அறிவையும், பண்பையும், பாசத்தையும், தைரியத்தையும், ஊக்கத்தையும், ஆன்மீகத்தையும் உரிய காலத்திலேயே விதைத்து, பேணிப் பாதுகாத்து, ஏற்றகாலத்தில் அவர்களைக் கிறிஸ்துவிற்காக அறுவடை செய்ய ஆயத்தப்படுத்தவேண்டும்.

இறைமகன் இயேசு ஈந்துள்ள நித்திய ஜீவனை நீங்கள் பெற்றுக்கொண்டால் மட்டும் போதுமா? உங்கள் பிள்ளைகளும் நித்திய ஜீவனைப் பெறும்படியாகத் தயார் செய்வது பெற்றோர்களின் கடமையல்லவா?

27

பெற்றோரின் பொறுப்பு

(கோபம்)

பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள். தேவசமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது (கொலோசெயர் 3:14,15).

ஒருநாள் ஒரு சிறுபையன் தனது தந்தையிடம், "அப்பா, யுத்தங்கள் எப்படி ஆரம்பிக்கின்றன?" என்று கேட்டான்.

தந்தை பதில் சொல்ல ஆரம்பித்தார்; "ஜெர்மனி நாடு பெல்ஜியத்திற்குள் படையெடுத்து நுழைந்ததால் முதலாவது உலக மகா யுத்தம் ஆரம்பமாயிற்று" என்று கூறி விளக்கத் துவங்கினார்.

அவர்களருகிலிருந்த பையனின் தாய், "பிள்ளைக்குச் சரியாகச் சொல்லிக்கொடுங்கள்; யாரோ யாரையோ சுட்டுக் கொன்றதால்தானே முதலாவது உலகமகா யுத்தம் ஆரம்பித்தது" என்று இடைமறித்துக் கூறினாள்.

மனைவி இடையில் குறுக்கிட்டுப் பேசியதைக் கணவன் ரசிக்கவில்லை. சற்று எரிச்சலுடன் கூறினார்: "பையனுக்கு என்னைப் பதில் கூறவிடுகிறாயா? அல்லது நீயே பதில் கூறுகிறாயா?" என்றார்.

மனைவி, கணவனை முறைத்துப் பார்த்தாள்; அவர்களிருந்த அறையைவிட்டு வேகமாக வெளியேறினாள்; போகிறபோக்கில் அந்த அறைக் கதவை, அவளால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு வேகமாக, ஓங்கி அறைந்து சாத்திவிட்டுப் போனாள்.

வீட்டில் மயான அமைதி குடிகொண்டது. யாரும் யாரிடமும் பேசவில்லை. சிறிது நேரஞ்சென்று, பையன் மெதுவாக நாற்காலியைவிட்டு எழுந்தான்; தந்தையின் அருகில் மெதுவாகச் சென்று, "அப்பா, யுத்தங்கள் எப்படி ஆரம்பிக்கின்றன என்று இனி எனக்குச் சொல்லத் தேவையில்லை. யுத்தங்கள் எப்படி ஆரம்பிக்கின்றன என்பதை இப்பொழுது அறிந்துகொண்டுவிட்டேன்" என்று கூறிவிட்டு அந்த அறையைவிட்டு வெளியே சென்றுவிட்டான்.

இதில் ஒரு உண்மை என்னென்றால், கணவன் மனைவி இருவர் கூறியதும் சரிதான். ஆஸ்ட்ரியா–ஹங்கேரியின் பட்டத்து அரசர் பிரான்சிஸ் பெர்டினன்டு (Francis Ferdinand, Archduke of Austria - Hungary) என்பவரை செர்பியா (Serbia) நாட்டு இளைஞன் ஒருவன் சுட்டுக்கொன்றான். இதனால் ஆஸ்ட்ரியா நாடு செர்பியாவின்மீது யுத்தப் பிரகடனம் செய்தது. அதன் முதல் கட்டமாக ஆஸ்ரியாவின் நட்பு–நாடான ஜெர்மனி நாட்டுப் படை, செர்பியாவுடன் நட்புடனிருந்த பெல்ஜியத்திற்குள் 1914–ம் வருடம், ஆகஸ்டு 4–ம் தேதி புகுந்தது.

இந்த நிகழ்ச்சியில், கணவன் மனைவி இருவருக்கிடையேயும் சண்டையெழுந்ததற்குக் காரணம், அவரவர்களிடையே நிலவிய 'தான்' என்னும் தன்முனைப்புதான் (Ego).

பல வேளைகளில் நமது செயல்களாலும், உடல்–பாவனைகளாலும், முகபாவனைகளாலும், சைகைகளாலும் (gesture), வார்த்தைகளாலும் (Talk) நம்மீது பிறரைச் சினமுறச் செய்கிறோம். நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், குடும்பத்தில் இப்படிப்பட்ட சிறு சிறு சண்டைகள் ஏற்படுவதைத் தவிர்க்க இயலாது.

கோபத்தினால் முறிந்த உறவுகள், சிதைந்த வாழ்க்கைகள், சீரழிந்த குடும்பங்கள் எத்தனை எத்தனை!

இந்த இடத்தில் கோபத்தைப் பற்றிக் **கவிஞர் கண்ணதாசன்** எழுதிய கவிதையொன்று நினைவிற்கு வருகிறது.

"பிள்ளைகளாய் இருந்தவர்கள்தான்
பெரியவரானார் – அந்தப்
பெரியவர்கள் கோபத்தினால்
சிறியவரானார்" –என்று கவிஞர் பாடுகிறார்.

சிறியவர்கள் வளர்ந்தால் அது வளர்ச்சி; பெரியவர்கள் சிறியவர்களானால், அது இயற்கைக்கு முரண்பட்ட விபரீதமல்லவா?

புனிதர் அகஸ்டின், "ஒருவன் கோபவெறி கொண்டவனாக இருந்துகொண்டு, தனக்கு மதுவெறி இல்லை என்பதில் ஏதேனும் பெருமையுண்டோ?" என்று வினவுகிறார் **(Is it any merit to abstain from wine, if one is intoxicated with anger? – St. Augustine).**

வள்ளுவர் கூறுகிறார்,

"சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி
இனம் என்னும் ஏமப் புணையைச் சுடும்" –(திருக்குறள் – அதிகாரம் 31 – வெகுளாமை).

(பொருள் – கோபம் என்னும் உயிர்க்கொல்லி, நண்பர்களையும், சுற்றத்தையும் மட்டுமல்ல, தன் சொந்த துணையாகிய மனைவியையும் சுட்டெரிக்கும்).

வள்ளுவர் மேலும் கூறுகிறார்:

"தன்னைத்தான் காக்கின், சினம் காக்க; காவாக்கால் தன்னையே கொல்லும் சினம்"—(திருக்குறள் – அதிகாரம் 31 வெகுளாமை).

(**பொருள்** – தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும் சுயநலத்தின் பொருட்டாவது கோபத்தைத் தவிர்க்கவேண்டும்; அல்லவெனில், கோபம் கோபப்படும் நபரையே அழித்துவிடும்).

கோபப்படுவது எவ்வளவு ஆபத்தானது என்பதைப் புரிந்து கொண்டிருப்பீர்கள். அதற்காக எதற்குமே கோபமே வராத ஜடமாக மனிதர்கள் இருக்கவேண்டுமென்று கூறவரவில்லை. ஒருபோதும் கோபமே ஏற்படாத ஜடமாக மனிதனால் வாழ முடியுமா?

கோபமும் ஒரு மனித உணர்ச்சிதான்

கோபம் என்பது இறைவன் மனுமக்களுக்கு ஈந்துள்ள பல்வேறு உணர்ச்சிகளிலொன்று. தன்மானமுள்ள எந்த மனிதனுக்கும் கோப உணர்வு இருக்கும். ஆனால் அக்கோப உணர்ச்சியை எவ்வண் கையாளுகிறோம் என்பதில்தான் பிரச்சனையுள்ளது.

திருமறை கோபமே படக்கூடாது என்று கற்பிக்கவில்லை. '**நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள்; சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது**' (எபே.4:26) என்றுதான் பவுலடியார் கூறுகிறார்.

ஆகையால் இந்தக் கட்டுரையில், "கோபமே படாதீர்கள்" என்று கூற நான் முற்படவில்லை. மாறாக, "**கோபத்தைக் கையாள்வது எப்படி?**" என்ற வழிமுறைகளை கற்றுக்கொடுக்கவே முயற்சி செய்துள்ளேன்.

கோபத்தினால் மற்றவர்களின் உணர்வுகளைக் காயப்படுத்தவும் – உறவுகளை முறித்துப் போடவும் இயலும்; அதே கோபத்தினால் மற்றவர்களை நெறிமுறைப்படுத்தி உதவிடவும், நமது மனித உறவுகளிலே புதிய வலுவூட்டவும் இயலும். ஒரு கிறிஸ்தவன் தன்னுடைய கோப உணர்வுகளைத் தானே தனது பலத்தினால் கையாள திருமறை ஊக்குவிக்கவில்லை.

இறையாவியானவரின் (Holy Spirit) வழிநடத்துதலின்றி சரியான வழியில் மானுட உணர்ச்சிகளைக் கையாள்வது இயலாக் காரியம்.

கோபத்தைக் கையாளும் வழிகள்

குடும்ப உறவிலும் (மனைவி, பிள்ளைகள், உறவினர்), ஏனைய புற உறவிலும் (நண்பர்கள், உடன் ஊழியர்கள், அண்டை அயலார்) நன்மை பயக்கும் கோப உணர்ச்சிகளைக் கையாளும் பன்னிரெண்டு படிகள் யாவையெனக் காண்போம்.

1. நீங்கள் உணர்ச்சி வயப்படுகையில், அவற்றினை எவ்வண் எதிர் கொள்கிறீர்கள் என்பதில் கவனமாயிருங்கள் (Beware of your Emotional Reaction). உணர்ச்சி வேகத்தில் எடுக்கப்படும் முடிவுகள் தவறாகவேயிருக்கும்.

கோப உணர்வு தலைதூக்கி நிற்கும்போது மூளையில் சிந்திக்கும் செயல் தடைப்படுகிறது. உங்கள் சிந்தனை ஓட்டத்தை தடையொண்ண ஒட்டாதீர்கள். உங்கள் சிந்தனை செயல்பட **"நான் எப்படிப்பட்ட உணர்ச்சியால் ஆட்கொள்ளப்பட்டுள்ளேன்?"** (What am I feeling?) - என உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள். இக்கேள்வி உங்களைச் சிந்திக்கத் தூண்டும். சிந்தித்து எடுக்கும் முடிவில் தெளிவு இருக்கும்.

2. உங்கள் உள்ளத்திலிருக்கும் கோப உணர்ச்சியை உணருங்கள் (Recognise your anger); உங்களிலுள்ள கோப உணர்ச்சியை ஒத்துக்கொள்ளுங்கள் (Admit your feelings). உங்கள் மனதில் உள்ள கோபத்தை ஒத்துக் கொள்வதால், நீங்கள் கோபப்படத்தான் வேண்டுமென்ற கட்டாயமில்லை (Admitting the feeling of anger does not mean that you should act it out). ஒத்துக்கொள்ளச் செய்வது உங்களிலுள்ள உணர்ச்சியைப் புரிந்து கொள்வதற்காகவே.

3. உங்களில் **"கோப உணர்வு ஏன் எழுந்தது"** என அறிய முயலுங்கள். பெரும்பாலும் நம்மிலெழும் கோபங்கள் நமது சுயநலத்தினால் ஆனவையே. நீங்கள் எதிர்பார்ப்பதுபோல் மற்றவர்கள் நடக்கவேண்டுமென்று விரும்புகிறீர்கள். அவர்கள் அப்படி நடக்காவிட்டால் கோபமடைகிறீர்கள்.

நீங்கள் நினைப்பதுபோல் எல்லோரும், எப்போதும் நடக்க வேண்டுமென எதிர்பார்த்தால் ஏமாற்றமடைவீர்கள். உங்களாலும் மற்றவர்கள் நினைப்பதுபோல் எப்போதும் நடக்க இயலாது. நாமடையும் ஏமாற்றங்களே, நமது கோபங்களுக்குக் காரணமாக இருக்கிறது (We are often angry, because we are frustrated).

எப்போதெல்லாம் ஏமாற்றமடைகிறோம்?

ஆசைகள் (Desires) நிராசைகளாக ஆகும்போது,

வெற்றிகள் (Success) கிட்டாதபோது,

தேவைகள் (Wants) பூர்த்தியுறாதபோது,

குறிக்கோள்கள் (Ambitions) நிறைவேறாதபோது,

நம்பிக்கைகள் (Hopes) தளரும்போது,

ஊக்கம் (Drives) குன்றும்போது,

உறுதி (Will) குலையும்போது,

முன்னேற்றங்கள் (Advancement) தடைப்படும்போது ஏமாற்றமடைகிறோம் – அதனால் கோபமடைகிறோம்..

எனவே "இறைவனின் சித்தம்" நிறைவேறவே எப்போதும் விரும்புங்கள்.

4. உங்கள் கோபம் மேற்கூறிய காரணங்களினாலோ அல்லது வேறொன்றினாலோ இருக்கலாம். அப்படிப்பட்ட நேரங்களில் உங்களை நீங்களே கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்விகள்:

"என் கோபம் ஏமாற்றத்தினால் உண்டானதா?"

"ஏமாற்றமென்றால், அது எப்படிப்பட்ட ஏமாற்றம்?"

"என் ஏமாற்றத்திற்கு எது அல்லது யார் காரணம்?"

இக்கேள்விகள் உங்களைப் பெரும்பாலும் கோபத்தின் உச்சியிலிருந்து சமநிலைக்குக் கொண்டுவரும்.

5. நீங்கள் கோபங்கொள்ளாச் சூழலை உருவாக்க முயலுங்கள். "நான் கோபமுறும்படி மற்றவர்கள் நடப்பதற்கு நான் எவ்வகையிலாவது காரணமாயிருக்கிறேனா?" – என உங்களை நீங்களே வினாவித் தெளிவுறுங்கள்.

பதில் 'ஆம்' – எனின் அச்சூழல் உருவாவதைத் தவிருங்கள்

6. உங்கள் உள்ளில் கோபம் பற்றி எரியினும், கோபத்தைக் காட்டுவதுதான் உங்கள் முன்னுள்ள பிரச்சனைக்குத் தீர்வா? – என நிதானியுங்கள்.

உங்கள் கோபத்தினால் உருவாகக்கூடிய பின்விளைவுகளைப் (Consequences) பட்டியலிடுங்கள்.

உங்கள் முன்னுள்ள பிரச்சனைக்குச் சிறந்த பிரதிச்செயல் (Best response) கோபம் மட்டுந்தானா?

அதனை அன்பாலும், இரக்கத்தாலும், புரிந்துகொள்ளு தலாலும் எதிர்கொண்டு கோபத்தை ஏன் தவிர்க்கக்கூடாது?

7. நீங்கள் முன்கோபக்காரரா? முன்யோசனையின்றி திடீர் உணர்ச்சிக்கு (Impulse) ஆட்கொள்ளப்படுபவரா?

அப்படியானால் உங்களுக்கு கோபம் வரும்பொழுது ஆழமாக சுவாசத்தை உள்ளிழுத்து பத்துவரை எண்ணுங்கள். தாமஸ் ஜெபர்சன், "நீங்கள் கோபமாக இருந்தால், உங்கள் வாயைத் திறப்பதற்கு முன்னால் பத்து எண்ணுங்கள்; நீங்கள் மிகவும் கோபமாக இருந்தால் நூறு எண்ணுங்கள்" என்று கூறுகிறார் (When angry, count ten before you speak; if (you are) very angry, (count) an hundred.— Thomas Jefferson).

இந்தப் பயிற்சி எளிதாகவும் அதே சமயத்தில் வேடிக்கையாகவும் தோன்றலாம்; ஆனால் இந்தப் பயிற்சி பலரால் பயன்படுத்தப்பட்டு, சிறந்தது என்று ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையாகும் (it is a proven

technique). சினமுள்ள வார்த்தையை உச்சரிப்பது சிரமமல்ல, ஆனால் அதனால் ஏற்படும் கண்ணீரும், வேதனையும் அளவிற்கடங்காததாக இருக்கும்.

ஆகையால், உங்கள் கோபத்திற்குக் காரணமான நபரிலுள்ள குறைகளைக் காண்பதை விடுத்து, அவர்களிலுள்ள நிறைகளிலேயே உங்கள் கவனத்தைத் திருப்புங்கள்.

8. நீங்கள் எப்போதும் மற்றவர்களிடம் குற்றம் காணும் நபரா?

"நான் எப்போதும் சரி – மற்றவர்கள் செய்வது எப்போதும் தவறு" – எனக் கருதும் மனோபாவம் கொண்டவரா நீங்கள்? I am always right - others are always wrong" என்னும் உங்கள் குணபாவம் உங்களுக்கே ஊறு விளைவிக்கத்தக்கது.

9. பிறர் உங்களைக் குறித்துக் கூறும் குறைகள் உங்களைக் கோபமுறச் செய்கிறதா?

நிதானமாக சிந்தியுங்கள். உங்களைக் குறித்த அவர்களின் மதிப்பீடு ஏன் உண்மையாயிருக்கக்கூடாது?

பெரும்பாலும், உங்களைக் குறித்து உங்கள் எதிரிகளின் மதிப்பீடே உண்மை. பிறரிடம் குறை காண்பதை விடுத்து, அவர்களின் மறுபக்கத்தை பார்த்து ஏன் புகழவும், மெச்சவுங்கூடாது? உங்களில் குறையிருந்தால் ஏன் திருத்திக்கொள்ளக்கூடாது?

10. சில வேளைகளில் உங்கள் கோபம் நியாயமானதாகவுமிருக்கும். உங்கள் உடல் அல்லது உணச்சிகள் பிறரால் காயப்படுத்தப்படும்பொழுது, உங்கள் பாதுகாப்புக்கு ஆபத்து வரும்பொழுது, உங்களைத் தற்காத்துக் கொள்ளக் கோபங்கொள்ளல் அவசியம் எனக் கருதும் பொழுது, உங்களுக்கோ, பிறருக்கோ அல்லது சமுதாயத்திற்கோ அநீதி நிகழும்பொழுது கோபம் எழுந்தால் அது நியாயமே. ஆனால், உங்கள் நியாயமான கோபத்தை, உங்கள் சுயநலமான கோபத்துடன் குழப்பிக்கொள்ளக் கூடாது.

நியாயமான கோபம் எழும் வேளைகளில் உங்கள் கோபத்தை எவ்வண் வெளிப்படுத்துவது என முன்னதாவே திட்டமிட்டு, பின் கோபத்தை காட்டுங்கள். ஆகையால்தான் ஔவைப் பிராட்டி "ஆறுவது சினம்" என்று கூறினார்.

உங்களின் கோபத்தால் பிறர் உணர்ச்சிகளை நொறுக்கிப் போடுவதைவிட, அதையே ஏன் பிறருக்கு உதவப் பயன்படுத்தக் கூடாது? பிறர் உங்கள் கோபத்தை புரிந்துகொண்டு திருந்தும் வண்ணம், சரியான நேரத்தில் சாதுரியமாக உங்கள் கோபத்தை வெளிப்படுத்துங்கள்

11. **"நான் எப்போதும் சரியாகச் செயல்படுகிறேன்"** என்று உங்களால் கூற இயலாது. உணச்சிவயத்துடன் எடுக்கப் படும் எந்த முடிவும் தவறாகவேயிருக்கும்.

தாவீதிற்கு அமைந்த நாத்தான்போன்று, நீங்கள் தடம்புரள் கையில் கண்டித்துணர்த்த ஆத்மார்த்தமான ஒரு நபர் தேவை. அப்படிப்பட்ட நண்பரிடம் உங்கள் உணர்வுகளைக் குறித்து மனம் விட்டுப் பேசி அவ்வப்போது ஆலோசனை பெற்று செயல்படுங்கள்.

அப்படிப்பட்ட அந்த நண்பர் மனைவியாகவும் இருக்கலாம். மனைவிக்கு கணவனே நண்பனாக இருக்கலாமல்லவா?.

12. உங்கள் பிரச்சனையான உணர்ச்சியைக் குறித்து, உங்கள் இறைவேண்டலில் (Prayer) ஆண்டவரிடம் மனம் திறந்து கூறி ஆலோசனை பெறுங்கள். கோபத்தைக் குறித்து திருமறையில் கூறியுள்ள திருவசனங்களை படியுங்கள். அவற்றை உங்கள் வாழ்க்கையின் வழித் துணையாகக் கொள்ளுங்கள். கீழே சில திருமறை வசனங்களைக் கொடுத்திருக்கிறேன்; படியுங்கள்.

கோபத்தைத் தவிருங்கள்

நீதி.15:1 – சாந்தமான மறுமொழி சினத்தை அகற்றும்; கடுஞ் சொல்லோ கோபத்தை எழுப்பும்.

நீதி.27:4 – சினம் கொடியது; சீற்றம் பெருவெள்ளம்;

கோபத்தில் நிதானமாக இருங்கள்

நீதி.15:18 – கோபக்காரன் கலகத்தின் காரணியாயிருக்கிறான்; சாந்தமுள்ளவன் கலகத்தை நிறுத்துகிறான்.

நீதி.19:11 – மனுஷனுடைய விவேகம் (அறிவு) அவன் கோபத்தை அடக்கும்.

சுயநலமான கோபம் வேண்டாம்

எபே.4:31 – சகலவித கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக் குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது.

கொலோ.3:8 – இப்பொழுதோ கோபமும், மூர்க்கமும், பொறாமை யும், உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும், வம்பு வார்த்தை களுமாகிய இவைகளையெல்லாம் விட்டுவிடுங்கள்.

பழிவாங்கும் கோபம்வேண்டாம்

எபேசியர் 4:26 – நீங்கள் கோபம் கொண்டாலும் பாவஞ்செய்யா திருங்கள்; சூரியன் மறைகிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது.

சங்கீதம் 4:4 – நீங்கள் கோபம் கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள்; (இரவில்) உங்கள் படுக்கையிலே உங்கள் இருதயத்தில் பேசிக்கொண்டிருங்கள்.

குழந்தைகளைத் தண்டித்தல்

1. நீங்கள் கோபமாக இருக்கும்பொழுது குழந்தைகளைத் தண்டிக்காதீர்கள்; சிலவேளைகளில் உணர்ச்சிவேகத்தில் பிள்ளைகளை அளவிற்கதிமாகத் தண்டித்துவிடும் வாய்ப்புக்களுள்ளன.
2. 'தண்டிப்பேன்' என்று மிரட்டாதீர்கள். சொன்னால் சொன்னபடி செய்யும் பெற்றோர்களாக இருங்கள். வெறுமனே மிரட்டிக்கொண்டேயிருந்தால், குழந்தைகள் சில நாட்டகளில் உங்களுடைய மிரட்டலைக் கண்டு கொள்ளமாட்டார்கள்

நிறைவுரை

ஒரு கிறிஸ்தவனின் கோபம் அல்லது கிறிஸ்தவக் கோபம்,

i. தீமையைக் (Wrong) குறித்தும், தவறைக் (Evil) குறித்துமே இருக்கவேண்டும்,

ii. கட்டுப்படுத்தப்பட்ட மட்டான (Controlled) கோபமாயிருக் வேண்டும்;

iii. கட்டுக்கடங்காச் (Uncontrolled) சீற்றமாயிருக்கக் கூடாது,

iv. வெறுப்பினாலோ, பகைமையினாலோ, வன்மத்தினாலோ இருக்கக்கூடாது.

இவைகளைச் சொல்வது எளிது; ஆனால் செயல்படுத்துவது கடினந்தான். ஆயினும், "நம்மைப் பலப்படுத்துகிற இறைவனாலே எல்லாம் செய்ய நமக்குப் பெலனுண்டு" (பிலிப்.4:13) என்ற பவுலடியாரின் வார்த்தைகளை எப்பொழுதும் நினைவில் வைத்திருங்கள்; கோபத்தை உங்கள் கட்டுக்குள் ஆளுங்கள்.

28

குழந்தைக் கொடுமை
(Child Abuse)

பிள்ளைகளின் மேன்மை அவர்கள் பிதாக்களே
(நீதிமொழிகள் 17:6)

சிறுகுழந்தைகள் காணமல்போவதும் (Missing Child}), வீட்டைவிட்டு ஓடிப்போவதும் (Running away from Home), தீய சவகாசத்தால் கெட்டுப்போவதும் (Spoilt Child), கொடியவர்களால் கெடுக்கப்படுவதும் (Abused Child) அன்றாடம் செய்தித்தாள்கள் தாங்கிவரும் செய்திகள்.

உங்கள் குழந்தைகளை இவற்றிலிருந்து காப்பது எப்படி?

உங்கள் குழந்தைகளுக்கு ஏற்படக்கூடிய பலவிதமான கொடுமைகள் என்னென்ன?

குழந்தைக் கொடுமை (Child Abuse) என்றவுடன், பெரியவர்கள் அல்லது அன்னியர்கள்தான் செய்வார்கள் என்று நினைக்கிறோம். அப்படியல்ல. உடன் படிக்கும் மாணவர்கள் அல்லது பெரிய மாணவர்கள், ஆசிரியர்கள், வீட்டிலுள்ள வேலைக்காரர்கள், விருந்தினர்கள், உறவினர்கள் போன்றவர்கள்கூட உங்கள் குழந்தைகளைக் கொடுமைப்படுத்தலாம்.

அப்படி கொடுமைக்குள்ளாகும் குழந்தைகளை, அவர்களுடைய நடத்தையில் தீடீரென்று ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் பார்த்து பெற்றோர்கள் ஓரளவு கண்டுபிடிக்கலாம்.

1. பிள்ளைகளின் நடவடிக்கைகளில் மாற்றம் தெரியும்,
2. சில குழந்தைகள் பயந்து நடுங்குவார்கள்.
3. சில குழந்தைகள் தனிமையை நாடுவார்கள்.

4. சிலர் பிறரிடம் பேசுவதை, முக்கியமாகப் பெற்றோர்களிடம் பேசுவதைத் தவிர்ப்பார்கள்; பேச்சில் தடுமாற்றமிருக்கும்.
5. சில குழந்தைகள் குறிப்பிட்ட வீட்டிற்கோ அல்லது இடத்திற்கோ (உதாரணம்: பள்ளிகூடம்) போவதற்கு மறுக்கும் அல்லது தயங்கும்.

அநேகமாக இரண்டும் கெட்டான் வயதிலிருக்கும் குழந்தைகள் தான் பெரும்பாலும் பாதிப்பிற்குள்ளாகிறார்கள். அதாவது நான்கு வயதிலிருந்து, பதினான்கு வயதிற்குள் உள்ள குழந்தைகள்தான் பெரும்பாலும் இத்தகைய பாதிப்படைகிறார்கள். ஆண் குழந்தைகள் – பெண் குழந்தைகள் – இரு பாலாருமே கொடுமைக்குள்ளா கிறார்கள். ஆனால் பெண் குழந்தைகளுக்கு இப்பாதிப்பு அதிகமாக இருக்கிறது.

1. உடலைப் பாதிக்கும் கொடுமை (Physical abuse)

உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தாத உடற் காயங்கள் எதுவானாலும் அதை உடற் கொடுமை என்று கூறலாம். எடுத்துக்காட்டாக: அடித்தல், தலையில் குட்டுதல், கன்னத்தில் அறைதல், உதைத்தல், கிள்ளுதல், தீக்காயம் ஏற்படுத்துதல், தலைமயிரை இழுத்தல், கடித்தல், எறிதல், முரட்டுத்தனமாகத் தள்ளிவிடுதல். பிரம்பால் அடித்தல், வெயிலில் நிற்க வைத்தல், முட்டியிடச்செய்தல் அல்லது சரியான உணவு கொடுக்காமல் பட்டினிபோடுதல் உடலை பாதிக்கும் கொடுமை களாகும்.

2. உள்ளத்தைப் பாதிக்கும் கொடுமை (Emotional Abuse)

குழந்தைகளின் உள்ளத்தையும் (Mental health) வளர்ச்சி யையும் (Social development) பாதிக்கும் சொற்களும் (கெட்ட வார்த்தைகள்), செயல்களும் (மனதைப் புண்படுத்தும் செயல்கள்) இதில் அடங்கும். வீட்டிலோ வெளியிலோ, பள்ளியிலோ குழந்தைகள் இவ்வகை பாதிப்பிற்குள்ளாகலாம். அன்னியர்களல்ல, பல பெற்றோர் கள்கூடத் தங்களையறியாமலே, தங்களுடைய பிள்ளைகளின் உள்ளங்களைப் பாதிப்பிற்குள்ளாக்கிக்கொண்டிருக்கிறார்கள்

3. பாலியல் கொடுமை (Sexual abuse)

குழந்தைகளை எந்தவகையில் பாலியல் செயல்களில் ஈடுபடுத் தினாலும், உபயோகித்தாலும் அச்செயல் பாலியல் கொடுமையே யாகும் (Any sexual act between an adult and child. This includes fondling, penetration, intercourse, exploitation, pornography, exhibitionism, child prostitution, group sex, oral sex, or forced observation of sexual acts).

பெற்றோர்கள் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டியவைகள்

1. உங்கள் குழந்தைகள், அவர்கள்மேல் உங்களுக்குள்ள அன்பையும், அக்கறையையும் அறிந்திருக்க வேண்டும் (You must let your children know that You Love them and You Care for them). பல பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை உள்ளத்தில் உயிரினும் மேலாக நேசித்தும், அதனை வெளிக்காட்டாமல் உள்ளத்திலேயே புதைத்து வைத்துக்கொள்கின்றனர். அதனால் பல பிள்ளைகள் தங்களின் பெற்றோரின் பாசத்தை இறுதிவரை உணராதே போய்விடுகிறார்கள். பெற்றோர்களின் இந்த இரகசிய பாசத்தை வெளியரங்கமாய் அறிந்திருந்தால், பல குடும்பங்களில் அரங்கேறும் அவல நிகழ்வுகள் தவிர்க்கப்பட்டிருக்கக்கூடும்.

2. எவ்வளவு சீக்கிரம் கற்றுத்தர முடியுமோ அவ்வளவு சீக்கிரம் குழந்தைக்கு அவர்களின் முழு பெயர், அப்பா—அம்மாவின் பெயர்கள், வீட்டு முகவரி, வீட்டு தொலைபேசி எண் ஆகியவற்றை கற்றுத்தரவேண்டும். பிள்ளைகள் பேசத்துவங்கும்பொழுதே இவற்றைக் கற்றுக்கொடுப்பது சிறந்தது. அவ்வப்போது கேள்விகள் கேட்டு, இவைகளைச் சரியாகச் சொல்கிறார்களா எனக் கவனியுங்கள்.

3. குழந்தைகள் எந்நேரமும் யாராவது ஒருவரின் கண்காணிப்பில் இருக்க வேண்டும் (Never leave children unattended) பெற்றோர்கள், ஆசிரியர்கள் அல்லது உங்களுக்கு அறிமுகமானவர்கள் யாராவது ஒருவர் கண்காணிப்பில் குழந்தைகள் இருத்தல் நலம்.

4. கடைவீதிக்குப் பிள்ளைகளுடன் செல்லும்போது மிகவும் கவனம் தேவை. பிள்ளைகள் உங்களைவிட்டுப் பிரிந்துபோய் உங்களைப் பிள்ளைகள் தேடும் நிலையை உருவாக்காதீர்கள். ஒருவேளை பிள்ளைகள் உங்களைத் தவற விட்டுவிட்டால், அவர்களைக் கண்டுபிடிக்க வசதியாக நீங்கள் எந்தக் கடையில் சாமான் வாங்கினீர்களோ அங்கேயே நிற்கவேண்டுமென்று அவர்களுக்கு முன்பே அறிவுரை கூறிவையுங்கள். Departmental Store—ஆக இருந்தால் அங்குள்ள கடை ஊழியர்களிடம்தான் பெற்றோரைவிட்டுப் பிரிந்துவிட்டதைக் கூறவேண்டுமென்பதைக் கற்பித்து வையுங்கள்.

5. குழந்தைகளுக்கு **"நல்ல தொடுதலுக்கும்"** (Good Touch), **"தீய தொடுதலுக்கும்"** (Bad Touch) உள்ள வித்தியாசத்தைக் குறித்து நன்கு சொல்லி வையுங்கள். எடுத்துக்காட்டாக, ஒரு மருத்துவரின் தொடுதல் "நல்ல தொடுதல்." ஆனால் ஒரு அன்னியனோ, உறவினரோ, நண்பரோ குழந்தைகளின் அந்தரங்க உறுப்பைத் தொட்டால் அது "தீய தொடுதல்." அப்படி தீய தொடுதல் செய்பவர் எவராக இருந்தாலும் பிள்ளைகள் தைரியமாக உங்களிடம்

தெரிவிக்க துணிவூட்டுங்கள் (No matter who does the **Bad Touching** the child should be encouraged to tell you about it).

6. வாகனங்களில் (Car, Scooter, Bike) குழந்தைகளைத் தனியே விட்டுவிட்டுச் செல்லாதீர்கள்.

7. குழந்தைகள் தாங்களாகவே பள்ளி செல்லும் வயது வரும்வரை, பெற்றோர்களுடனோ அல்லது வழக்கமாகக் கூட்டிச் செல்லும் வாகனத்திலோ செல்லவேண்டும். தன்னைக் கூட்டிச் செல்ல அந்நியரோ அல்லது பழக்கமற்ற வாகனமோ அழைத்தால் ஆசிரியரிடமோ அல்லது பள்ளி முதல்வரிடமோ அதைத் தெரிவித்து, வந்திருப்பவரின் அடையாளத்தை உறுதி செய்தபின் உடன் செல்லவேண்டும் என்பதைப் குழந்தைகள் அறிந்திருக்கவேண்டும். பெற்றோர்களுக்கும், பிள்ளைகளுக்குமிடையே "சங்கேத வார்த்தைகள்" (Code Words) இருந்தால் மிகவும் நன்று.

8. நீங்கள் வீட்டிலில்லாத வேளைகளில் யாராவது தொலை பேசியில் பேசினால், தாங்கள் தனியாக இருப்பதை எக்காரணத்தைக் கொண்டும் எதிர்முனையில் பேசுபவர் அறிந்துகொள்ள இடமளிக் கலாகாது. தெரியாத நபர் எதிர்முனையில் இருந்தால், "அப்பா குளித்துக் கொண்டிருக்கின்றார்" என்றோ அல்லது "அம்மா சமையலில் அவசர வேலையில் இருக்கிறார்" என்றோதான் கூறவேண்டும் எனக் கற்றுக் கொடுத்துவையுங்கள்.

9. குழந்தைகள் வீடு திரும்பும்பொழுது நீங்கள் வீட்டில் இருக்க இயலா நிலை ஏற்பட்டால், அருகிலுள்ள நல்ல நண்பர்கள் வீட்டிலோ அல்லது உறவினர்கள் வீட்டிலோ நீங்கள் வரும்வரை தங்கியிருக்க ஏற்பாடு செய்துவிட்டுச் செல்லுங்கள்.

10. பெரியவர்கள் இல்லாமல் குழந்தைகள் தனியாக (Alone) இருக்கும்பொழுது அன்னியர்கள் யாராவது வந்தால் எக்காரணம் கொண்டும் கதவைத் திறக்கக்கூடாது என்பதைப் பிள்ளைகள் அறிந்திருக்கவேண்டும்.

11. பிள்ளைகள் எங்கே போகிறார்கள், யாருடன் போகிறார்கள், எப்போது வீடு திரும்புவார்கள் என்பதை தெரிவித்துவிட்டு வெளியில் செல்லவேண்டும் என்று அறிவுறுத்துங்கள்.

12. யாராவது அநாவசியமாகத் தொட்டாலோ, கையைப்பற்றி இழுத்தாலோ அல்லது அச்சுறுத்தினாலோ என்னென்ன செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொடுத்தல் அவசியம். அவ்விடத்தை விட்டு ஓடலாம்; உதவி கேட்டு அலறலாம்; அல்லது பிடித்திழுப் போரின் கையை / உடம்பைக் கடிக்கலாம்; எட்டிமிதிக்கலாம்; அல்லது பிராண்டலாம்; தப்பிப்பதற்கு எந்தெந்த வழிகளுண்டோ அத்தனை வழிமுறைகளையும் பயன்படுத்தலாம் என்பதைப் பிள்ளைகள் அறிந்திருக்கவேண்டும். முடிந்தால், பிள்ளைகளுக்கு கராத்தே, குங்ஃபூ போன்ற தற்காப்பு கலைகளைக் கற்றுக்கொடுக்கலாம்.

13. பிள்ளைகளுடன் அவ்வப்போது பள்ளிக்குச் செல்லும் வழியை நோட்டமிட்டு, அவ்வழி எத்துணை பாதுகாப்பானது என அறிய முயலுங்கள். வழியில் அன்னியரையும் (Strangers), காலி மனைகளுள்ள இடங்களையும் (Vacant sites), புதர்களுள்ள (Bushes) இடங்களையும் தவிர்க்கக் கற்றுக்கொள்ளுங்கள்.

14. உங்கள் பிள்ளைகளின் பெயர், படிக்கும் பள்ளிக்கூடம், பிள்ளைகளப் பற்றிய இதர விவரங்களை அன்னியர்கள் அறியும் வண்ணம் உளறவோ அல்லது வேறு எதையோ செய்யவேண்டாம்.

15. பிள்ளைகள் பெரியவர்களுக்கு கீழ்ப்படியவேண்டும், மரியாதை கொடுக்கவேண்டும், எதிர்த்துப் பேசக்கூடாது. எல்லாம் சரிதான். ஆனால் எல்லாப் பெரியவர்களுக்கும் கீழ்ப்படியவோ, மரியாதை கொடுக்கவோ பிள்ளைகளை வற்புறுத்தாதீர்கள். அன்னியர்கள், அவர்கள் எவ்வளவு வயது முதிர்ந்தவர்களானாலும், ஐயம் எழும் செயல்கள் செய்யத் தூண்டினால் உறுதியாய் முடியாது என்று கூறி மறுக்க பிள்ளைகளுக்குக் கற்பியுங்கள். எடுத்துக் காட்டாக,

i. போகும் வழியில் யாராவது ஏதாவது ஒரு படத்தைக் காட்டி பார்க்கச் சொன்னால் முடியாது என்று மறுக்கவேண்டும்.

ii. அன்னியர்கள் யாராவது புகைப்படம் எடுக்க முயற்சித்தால் – அனுமதிக்கவோ அல்லது ஒத்துக்கொள்ளவோ கூடாது.

iii. நடந்து சென்றுகொண்டிருக்கும்பொழுது, காரில் சென்று கொண்டிருக்கும் நபர்கள் பாதை கேட்டால் காரின் அருகே செல்லக்கூடாது. அவசியமானால் தூரத்தி லிருந்தே வழி கூறுங்கள்; அல்லது தெரியாது என்ற ஒரு வார்த்தையுடன் அவ்விடத்தைவிட்டு வேகமாக நடையைக் கட்டவேண்டும்.

iv. மக்களின் பார்வையிலிருந்து தனியாகவும், மறைவாகவு முள்ள வீடுகளிலோ, வேறு கட்டிடங்களுக்குள்ளோ நுழையக்கூடாது என்று பிள்ளைகளுக்கு கற்பித்து வையுங்கள்.

v. பிள்ளைகளை அச்சுறச்செய்யும் அல்லது மன நோவை உண்டாக்கும் நிகழ்வுகள் நிகழின், அதனைப் பெற்றோர் களுக்குத் தைரியமாகத் தெரிவிக்க மனதைரியத்தைப் பிள்ளைகளிடம் வளருங்கள்.

16. அறிமுகமில்லா அன்னியர்கள் நண்பர்கள்போன்று பழகமுயன்றால் விழிப்பாயிருக்கவேண்டுமென்று கூறிவையுங்கள். முன்பின் தெரியாதவர்கள் இனிப்புப் பண்டங்களோ, பொம்மையோ அல்லது வேறு எந்தப் பொருளோ கொடுத்தால், வாங்கக்கூடாது எனக் குழந்தைகளுக்கு கற்றுக்கொடுங்கள்.

17. மிகவும் முக்கியமாகப் போலீஸார் நண்பர்கள் என்றும், ஆபத்தில் உதவிபெற அவர்களை நாடலாம் என்றும் குழந்தைகள் அறிந்திருக்கவேண்டும்.

18. எவரும் தன்னை தொடுவதற்கோ, தன்னை மனஉளைச் சலுக்குள்ளாக்குவதற்கோ யாருக்கும் உரிமையில்லை என்றும், எந்த இரகசியங்களையும் பெற்றோர்களிடமிருந்து மறைக்கும்படி கூறுவதற்கு யாருக்கும் அதிகாரம் இல்லை என்பதையும் பிள்ளைகள் திட்டவட்டமாக அறிந்திருக்கவேண்டும்.

19. ஆசிரியரோ, பள்ளி ஊழியர்களோ, சகமாணவர்களோ அல்லது பெரியவர்களோ தவறான நோக்கத்துடன் தொட்டாலோ, துன்புறுத்தினாலோ அல்லது வேறு எந்தத் தவறான செயல்களைச் செய்யும்படி கூறினாலோ, அதனை உடனடியாக பெற்றோர்களிடம் தெரிவிக்கவேண்டியதுதான் மிகமிகச் சரியான நடவடிக்கை என்பதைப் பிள்ளைகள் தெளிவாக அறிந்திருக்கவேணடும்.

20. இளம் பெண்ணாக இருந்தால் அதிகக் கவனமாக இருக்கக் கற்பிக்கப்படவேண்டும். அதிக நேரம் கைகுலுக்குதல், தற்செயலாகத் தொடுவதுபோலத் தொடுதல் அல்லது உரசுதல் போன்றவற்றை ஒரு பெண் எப்படி எடுத்துக்கொள்கிறாள் என்பதைப் பொறுத்தே ஒரு ஆண் அடுத்தக்கட்ட வன்முறைக்குத் துணிகிறான். ஆரம்பத்திலேயே இச்செயல்கள் தனக்குப் பிடிக்கவில்லை என்பதைத் துணிந்து கூறுவதற்கு அல்லது வெளிப்படுத்துவதற்குப் பெண் பிள்ளைகளைத் தயார் செய்யவேண்டியது பெற்றோர்களின் கடமை.

21. உங்களுடைய குழந்தைகள் அவர்களுடைய வயதிற்கு மீறியவர்களுடன் அடிக்கடி தனியாகக் காணப்பட்டால், கண்டிப்பாகக் கவனியுங்கள். அது ஆசிரியராக இருந்தாலும் சரி, சகபள்ளி மாணவனாக இருந்தாலும் சரி, உங்களுடைய சொந்தகாரர் களானாலும் சரி, வேலைக்காரர்களானாலும் சரி, தெரிந்தவர் களானாலும் சரி, கவனமாக இருங்கள்.

நிறைவுரை

ஒருவேளை சந்தர்ப்பவசத்தால் பிள்ளைகள் ஏதாவது ஒரு வகையில் அலைக்கழிக்கப்பட்டிருந்தாலோ (Molestation), தவறாகப் பயன்படுத்தப்பட்டிருந்தாலோ (Abuse) அல்லது கெடுக்கப்பட்டிருந் தாலோ (Exploitation), **அது உங்கள் குழந்தையின் தவறல்ல.**

குழந்தைகளைத் தவறாகப் பயன்படுத்துவோர்கள் பெரும்பாலும் தங்களிடம் மாட்டியவர்களைத் (Victims) தந்திரமாக ஏமாற்றியோ (Deceit) அல்லது மிரட்டியோ (Intimideation) காரியம் சாதிக் கின்றனர்; பிள்ளைகள் தாங்கள் விரும்பித் தவறுகள் செய்வதில்லை.

குழந்தையைத் தவறாகப் பயன்படுத்தியவனைத் தண்டியுங்கள்; எக்காரணத்தாலும் உங்கள் குழந்தையைத் தண்டித்துவிடாதீர்கள். உங்கள் குழந்தை தனது மன அழுத்தத்திலிருந்து விடுபட சிறகுகளைக் கொடுங்கள், வாழ்நாளெல்லாம் சுமக்கும் சிலுவையைக் கொடுத்துவிடாதீர்கள்.

குழந்தைக் கொடுமை செய்பவர்கள் எல்லா (பொருளாதார) மட்டத்திலேயும், எல்லா மதத்திலேயும் இருக்கிறார்கள். குழந்தைகளைக் கொடுமைப்படுத்துகிறவர்கள் பெரும்பாலும் பிள்ளைகளுக்குத் தெரிந்தவர்களாகவே இருக்கிறார்கள். பிள்ளைகளுக்கு முற்றிலும் தெரியாதவர்கள் குழந்தைக் கொடுமைக்காரர்களாகப் பெரும்பாலும் இருப்பதில்லை (The child abuser is rarely a total stranger).

ஆகவே வெள்ளம் வருமுன்னரே அணை போடுங்கள். ஆபத்து வருமுன்னே அரண் அமையுங்கள். பிள்ளைகள் சிதைக்கப்படுவதற்கு முன்னரே கற்றுத்தர வேண்டியனவற்றைக் கற்றுக் கொடுங்கள்.

"தன்னுடைய வாரிசுகளுக்குக் கற்றுத்தரவேண்டியவைகளைக் கற்றுதருவதைவிட, உன்னதமான பணி வேறு என்னவாக இருக்க இயலும்?" என்று ரோமத் தத்துவஞானியும், அரசியல் மேதையுமான சிசரோ கேட்பது நியாயம்தானே (What nobler employment than that of the man who instructs the rising generation? — **Cicero**).

இப்போது கூறப்போவது ஸ்பெயின் நாட்டில் நடந்த சம்பவம்.

ஒரு பையன் தனது தந்தையிடம் கோபித்துக்கொண்டு வீட்டைவிட்டு ஓடிவிட்டான். பையனின் தகப்பன் மகனைப் பலமாதங்களாகத் தேடிக் களைத்துவிட்டார். இறுதியில் அந்தத் தந்தை ஒரு பத்திரிக்கையில் இப்படி ஒரு விளம்பரம் கொடுத்தார்;

"மகனே, சனிக்கிழமை மதியம் இந்த பத்திரிக்கை அலுவலகத்திற்கு வரவும்; அனைத்தையும் மன்னித்துவிட்டேன்; உன்னை நேசிக்கிறேன்.

இப்படிக்கு,

உன்னுடைய தந்தை."

அந்த தந்தை சனிக்கிழமை மதியம் சென்றபொழுது 800க்கும் அதிமான பையன்கள் அந்தப் பத்திரிக்கை அலுவலக வாசலில் திரண்டிருந்தர்களாம்!

குற்றமிழைத்த பிள்ளைகளில் பலர், தங்களுடைய பெற்றோர்களின் மன்னிப்பிற்காக – அன்பிற்காக ஏங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

உங்களுடைய சினத்தை அகற்றுங்கள்; உங்கள் பிள்ளைகளை மன்னியுங்கள். உங்களின் மன்னிக்கும் செயலினால், மன்னிப்பின் மாண்பினை உங்களுடைய பிள்ளைகளுக்கும் கற்றுக்கொடுங்கள்.

மதர் தெரசா, **"யாருக்கும் தேவையற்றவராகிவிட்டோம், எல்லோராலும் கைவிடப்பட்டுவிட்டோம், புறக்கணிக்கப்பட்டு விட்டோம் என்ற உணர்வைவிட இன்றைக்குத் தொழு நோயோ அல்லது காசநோயோ மிகவும் பெரிய வியாதி அல்ல"** என்று கூறுகிறார் (The biggest disease today is not leprosy or tuberculosis, but rather the feeling of being unwanted, uncared for, and deserted by everybody – Mother Teresa).

பிள்ளைகளைப் புறக்கணிக்காதீர்கள். பிள்ளைகளுடைய பிரச்சனைகளை முதிர்ச்சியுடனும், அனுதாபத்துடனும் கையாளுங்கள்; கவனமாக இருங்கள்; பிள்ளைகளை வெறுத்துவிடாதீர்கள்.

இறைமைந்தன் இயேசுவைத்தவிர, சர்வ நற்குணங்களும் ஒருகிணைந்த சற்குணமுள்ள குழந்தையாக இந்த உலகில் யாரும் பிறந்ததில்லை; இனி பிறக்கப்போவதுமில்லை. எல்லாக் குழந்தைகளுமே 'துர்குணத்திலே உருவாகிப் பாவத்தில் கர்ப்பம் தரிக்கப்பட்டு' (சங்.51:5) பிறந்தவர்கள்தான். அவர்களைச் சிறந்த குழந்தைகளாகச் செப்பனிட்டு உருவாக்கும் பணிதான் பெற்றோர்களுக்கு இறைவன் அளித்துள்ள தலையாய பணியாகும்.

பிள்ளைகளுக்காக ஜெபியுங்கள் – தொடர்ந்து ஜெபியுங்கள். பிள்ளைகளை நல்வழிப்படுத்த, ஆவிக்குரிய பாதையில் நடக்கச்செய்ய பல ஆண்டுகள் ஜெபித்த பெற்றோர்கள் உண்டு என்பதை நினைவில் கொள்ளுங்கள். புனிதர் அகஸ்டின் திருந்துவதற்காக அவருடைய அன்னையார் மோனிக்கா பதினோரு ஆண்டுகள் ஜெபித்தாராம்.

நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்காக ஜெபிக்கிறீர்களா? நீங்கள் ஜெபித்தால் உங்கள் ஜெபம் விணாகிப்போகாது என்று உறுதியாக நம்புங்கள்.

"கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல்
நோக்கமாகயிருக்கிறது; அவருடைய செவிகள்
அவர்களுடைய கூப்பிடுதலுக்குத் திறந்திருக்கிறது" (சங்.34:15).

29

பெற்றோர்கள் அறியவேண்டிய உளவியல் 1

(குழந்தைகளின் மனநிலை)

நான் குழந்தையாயிருந்தபோது குழந்தையைப்போல பேசினேன், குழந்தையைப்போல சிந்தித்தேன், குழந்தையைப்போல யோசித்தேன்; நான் புருஷனானபோதோ குழந்தைக் கேற்றவைகளை விட்டுவிட்டேன் (1 கொரி.13:11).

போட்டிகள் நிறைந்த அவசர உலகில், வெற்றியுடன் நிறைவாக வாழ (Successful and Satisfactory life), தங்கள் பிள்ளைகளைத் தகுதியுள்ளவர்களாக தயார் செய்யவேண்டியது இன்றைய பெற்றோர்கள் மேல் விழுந்த கடமை. எனவே, பிள்ளைகளிடம் பெற்றோர்களின் எதிர்பார்ப்பு மிகுதியாகவுள்ளது (Over Expectation). மிக விரைவிலேயே தங்கள் பிள்ளைகள் அனைத்தையும் அறிந்திருக்கவேண்டுமென ஆசிக்கின்றனர். வயதிற்கு மீறிய வளர்ச்சியை பிள்ளைகளிடம் காண விழைகின்றனர்.

'எத்தனை பிரயாசைபட்டாலும் பழம் பழுக்கிறது பருவ காலம் அல்லாதே பழுக்காது" என்பது தமிழ் பழமொழி. அளவிற் கதிகமான தூண்டுதல் (Excess Motivation), பிள்ளைகளை மிரளச்செய்து, பெற்றோர் எண்ணிய இலக்கை எட்ட இயலாது தட்டுத்தடுமாறுகின்றனர் அல்லது இடறி விழுகின்றனர்.

பெற்றோர்களின் எதிர்பார்ப்பு அந்தந்தப் பருவத்திற்கு இசைந் தாற்போல் இருத்தல்வேண்டும்.

பயனுள்ள அறிவுரைகள் (Useful Tips)

1. **அவர்கள் வயதிற்குத் தகுந்தாற்போல் உங்களுடைய எதிர்பார்ப்புகள் இருக்கட்டும்**

குழந்தையின் கரங்கள் சிறியவை. அவர்கள் செயல்களில், எழுதுதல், வரைதல், பேசுதல், போன்றவைகளில், குறையில்லாதிருக்க வேண்டுமென எதிர்பார்க்காதீர்கள் (Do not expect perfection).

அவர்களின் கால்கள் சிறியவை; அவர்களால் உங்களுக்கு இணையாக நடக்க இயலாது என உணருங்கள். அவர்கள் உங்களுடன் சேர்ந்து நடக்க சற்றே நீங்கள் மெதுவாக நடங்கள் (Slow down to keep phase up with you). அதாவது உங்கள் எதிர்பார்ப்புகள் அளவுடன் இருக்கட்டும்.

நீங்கள் பார்த்து அனுபவித்துள்ள அளவு, உங்கள் குழந்தைகள் இவ்வுலகை இன்னமும் காணவில்லை. எனவே உங்களுக்கு இணையாய் அவர்களிடம் புத்திசாலித்தனத்தை எதிர்நோக்கா தீர்கள். உங்கள் பாதுகாப்புடன், அவர்கள் ஆய்வுப்பயணம் தொடர அனுமதியுங்கள் (Allow them to explore the world). அவசியமின்றி அவர்களைக் கட்டுப்படுத்தாதீர்கள். அவர்கள் உங்கள் வயதினை அடையும்பொழுது ஒருவேளை உங்களைவிட புத்திசாலிகளா யிருப்பார்கள்.

2. அவர்களுடன் உங்கள் நேரத்தைப் பகிர்ந்து கொள்ளுங்கள்

எந்நேரமும் வேலை–வேலை என்று அலைந்துகொண்டு, பிள்ளைகளுடன் இணைந்திருப்பதற்காக ஒதுக்கவேண்டிய நேரத்தைப் புறக்கணிக்காதீர்கள். வேலையினூடே சிறிது கால அவகாசத்தைக் கண்டுபிடித்து, இவ்வழகிய வாழ்க்கையைப் பற்றியும், நாம் வாழும் உலகைக் குறித்தும் கொஞ்சம் உங்கள் குழந்தை களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள் (Share the beauty of Life and of the World).

நீங்கள் உங்கள் குழந்தைக்குக் கொடுக்கும் மிகப்பெரிய வெகுமதி உங்கள் நேரம்தான். (The best thing to spend on your children is time). இதுவே உங்கள் பிள்ளைகள் உங்களுடைய அன்பையும், பரிவையும் அறிந்துகொள்ளக் கூடிய அருந்தருணம்.

19ம் நூற்றாண்டில், **சார்லஸ் பிரான்சிஸ் அடம்ஸ்** (Charles Francis Adams) என்பவர் அமெரிக்காவில் மிகவும் பிரபலமான அரசியல்வாதியாக இருந்தார். அவருக்கு புரூக் அடம்ஸ் (Brook Adams) என்ற மகன் இருந்தான்.

இருவருக்கும் தினமும் டைரி எழுதுவது வழக்கமாக இருந்தது. ஒருநாள் தந்தையும் மகனும் பொழுதுபோக்கிற்காக ஒன்றாக மீன்பிடிக்கச் சென்றார்கள்.

அன்றைய தினம் அவர்கள் இருவரும் தங்கள் தங்கள் டைரியில் என்ன எழுதியிருந்தார்கள் தெரியுமா?

தந்தை சார்லஸ் பிரான்சிஸ் அடம்ஸ்: **"இன்றைய தினம் என்னுடைய மகனுடன் மீன்பிடிக்கச் சென்றதால் ஒருநாள் வீணாயிற்று"** என்று தனது டைரியில் எழுதியிருந்தார்.

ஆனால் புரூக் அடம்ஸ்: "இன்றைய தினம் என்னுடைய தந்தையுடன் மீன்பிடிக்கச் சென்றேன். இன்றைய தினம் எனது வாழ்க்கையில் மறக்கமுடியாத நாள்" என்று எழுதியிருந்தான்.

அந்த தந்தை அன்றைய தினத்தை வீணாக்கவில்லை; உண்மையில் அன்றைய தினம்தான் அவர் தன்னுடைய மகனுடைய வாழ்க்கையிலும் மனதிலும் இடம்பிடிக்கச் செய்த முதலீடு.

3. பிள்ளைகளின் உணர்வுகளை மதியுங்கள்

உங்கள் குழந்தைகளின் உணர்வுகள் மென்மையானவை; பிள்ளைகளின் தேவைகளை நீங்களே கவனமாக கவனித்து நிறைவேற்றுங்கள். அவர்கள் தங்கள் தேவைகளைக் கூறினால்தான் கவனிப்பேன் என அடம்பிடிக்காதீர்கள்.

உங்கள் பிள்ளைகளுக்கும் உள்ளம் உண்டு; அதில் உணர்வுகளுமுண்டு. அவ்வுணர்வுகளில் காயம் உண்டாக நீங்கள் காரணமாயிருக்கவேண்டாம். மாறாக, பிறரால் பிள்ளைகளின் உள்ளத்தில் உண்டாகும் காயங்களுக்கு மருந்திட்டு ஆற்றும் வைத்தியராக இருங்கள்.

பிள்ளைகளுக்கு அன்பான, மகிழ்ச்சியான குழந்தைப் பருவத்தைத் தருவதுதான் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு அளிக்கக்கூடிய மிகப்பெரிய சொத்து. அப்படிப்பட்ட மகிழ்ச்சியான குழந்தைப் பருவத்தை அனுபவித்த குழந்தைகளின் மனதில், அந்தப் பசுமையான நினைவுகள் என்றென்றும் நீங்காதிருக்கும்.

4. நீங்கள் எப்படி நடத்தப்பட விரும்பினீர்களோ அப்படியே பிள்ளைகளை நடத்துங்கள்.

தவறுகளைத் திருத்துங்கள்; தவறுகளுக்குத் தண்டியுங்கள். ஆனால் நாள் முழுவதும் திட்டிக்கொண்டே இருக்காதீர்கள். நீங்கள் தவறு செய்திருந்தால் கூட, நாள் முழுவதும் யாரிடமாவது நீங்கள் திட்டுப்பட்டுகொண்டேயிருக்க விரும்புவீர்களா? கண்டிப்பாக விரும்பமாட்டீர்கள்.

மற்றவர்களால் நீங்கள் எப்படி நடத்தப்படவிரும்புகிறீர்களோ, அவ்விதமே உங்கள் பிள்ளைகளை நீங்கள் நடத்துங்கள் (Treat your child as you would like to be treated).

உங்கள் குழந்தைகள் உயர்வுர, அவர்களை உற்சாகப்படுத்துங்கள் (Encourage) ; ஆனால் அளவுக்கதிகமாகப் புகழாதீர்கள் (Praise). ஒருவேளை அது எதிர்மறை பலனைத் தந்துவிடலாம்.

குற்றம் காண்பதையும், குறை கூறுவதையும் எளிதாய் எடுத்துக்கொள்வார்கள் என்று எண்ணாதீர்கள். குழந்தைகளின் செயலில் குற்றங்குறை காணலாம்; ஆனால் அவர்களை உங்கள்

வார்த்தைகளால் வறுத்து எடுக்காதீர்கள்; அவர்கள் உள்ளம் காயப்படும் வார்த்தைகளைத் தவிருங்கள் (You can criticise the things the child do; but do without criticising the child).

5. தோல்வியுறவும் அனுமதியுங்கள்

தோல்வி என்பது இழப்பல்ல என்றும், தோல்வியில் துவளக் கூடாது என்றும், தோல்வி முடிவல்ல – அது வெற்றியின் முதற்படி என்றும் கற்றுக்கொடுங்கள். உங்கள் குழந்தைகள் தங்கள் காரியங்களில் தாங்களே முடிவெடுக்க சுதந்திரம் கொடுங்கள். சில வேளைகளில் தோல்வியுறவும் அனுமதியுங்கள்.

அவர்கள் தங்கள் தவறுகளிலிருந்தும், தோல்விகளிலிருந்தும் கற்றுக்கொள்ளச் சந்தர்ப்பம் அளியுங்கள். இப்பயிற்சி கிட்டியிருந்தால் தான், பின்னாளைய வாழ்க்கையில் தாங்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளில், தோல்விகண்டுத் துவளாமல், தெளிவான– திடமான முடிவுகளை எடுக்க அவர்களால் இயலும்.

உங்கள் பிள்ளை தானேதன்னைக் கவனித்துக்கொள்வதற்குப் பயிற்சிபெற, அது தன்னைத்தானே கவனித்துக்கொள்ள அனுமதிக்க வேண்டும். இந்தப் பயிற்றுவித்தலில் குழந்தைகள் தவறுகள் செய்யலாம்; ஆனால் இந்த தவறுகளினால், அவற்றை மேற் கொள்ளும் ஞானத்தையும் பெற்றுக்கொள்கிறார்கள்.

6. அவர்கள் வேலைகளை நீங்கள் செய்யாதீர்கள்

குழந்தைகள் செய்யவேண்டிய வேலைகளை நீங்களே செய்யா தீர்கள். அப்படி செய்வதால், அவர்கள் அவ்வேலையைச் செய்யும் தகுதியை இன்னமும் தாங்கள் அடையவில்லை என எண்ண வைக்கும் தாழ்வு மனப்பான்மையை குழந்தைகள் உள்ளத்தில் நீங்களே ஊன்றுகிறீர்கள்.

நம்பிக்கையுடன் வாழ்க்கையை – உலகை எதிர்கொள்ள உங்கள் பிள்ளைகளைத் தயார்படுத்துங்கள் – பயிற்றுவியுங்கள்.

7. மற்ற குழந்தைகளுடன் ஒப்பிடாதீர்கள்

உங்களின் ஒரு குழந்தையை அவர்களின் சகோதரனுடனோ, சகோதரியுடனோ அல்லது அண்டை–அயல் வீட்டுப் பிள்ளை களுடனோ அல்லது உறவினர்களுடைய பிள்ளைகளுடனோ ஒப்பிட்டுப் பேசாதீர்கள்; இச்செயலை எல்லாக் குழந்தைகளுமே வெறுக்கிறார்கள்; உங்களால் புகழ்ந்து பேசப்படும் குழந்தைகளையும் வெறுக்கிறார்கள். ஒவ்வொரு குழந்தைக்கும் வெவ்வேறு தனித் தன்மைகள், தனித்திறமைகள் உண்டு என்பதை உணருங்கள். அவற்றைக் கண்டுபிடித்து, ஊக்கப்படுத்துங்கள்.

8. ஆவிக்குரிய ஜீவியத்தில் அறிமுகப்படுத்துங்கள்

குழந்தைகளை ஒழுங்காய் ஆலயத்திற்கு அழைத்துச் செல்லுங்கள்; ஓய்வுநாள் பள்ளிக்கு அனுப்புங்கள். ஜெபிக்க கற்றுக்கொடுங்கள்; பிள்ளைகளுடன் சேர்ந்து திருமறையை வாசியுங்கள்.

இறைவனைப்பற்றி அறியும் ஆவல் குழந்தைகளுக்கு அதிகமுண்டு. அந்த ஆவலைப் பயன்படுத்தியே அவர்களை ஆவிக்குரிய வாழ்க்கைக்கு அறிமுகப்படுத்துங்கள்.

9. உங்கள் ஆசைகளைப் பிள்ளைகள் மேல் திணிக்காதீர்கள்

நீங்கள் சிறு வயதில் எதையாவது சாதிக்க முயன்று அல்லது சாதிக்க நினைத்து, சாதிக்கத் தவறியவைகளை உங்கள் பிள்ளைகள் மூலமாகச் சாதிக்கவேண்டுமென்று அடம்பிடிக்காதீர்கள். உங்களுடைய நிறைவேறாத ஆசைகளைப் பிள்ளைகள் மேல் திணிக்காதீர்கள். பிள்ளைகளுடைய விருப்பு–வெறுப்புகளையும், பிள்ளைகளுடைய திறமையின் வரம்புகளையும் புரிந்துகொண்டு செயல்படுங்கள். பிள்ளைகளுடைய சிறந்த எதிர்காலத்திற்காக முயற்சிகள் மேற்கொள்வதில் தவறில்லை. ஆனால் பிள்ளைகள் திகைத்துப் போகும்படியான அதீத எதிர்பார்ப்புக்கள் வேண்டாம்.

10. முன்மாதிரியாக இருங்கள்

ஒரு வீட்டிற்கு அடிப்படை இருப்பதைப்போல, மனித வாழ்க்கைக்கும் அடிப்படை மிக முக்கியம். மனித வாழ்க்கையின் அடிப்படை குழந்தைப் பருவமே. குழந்தைகளைக் கண்டிக்க வேண்டாமென்றோ அல்லது தண்டிக்க வேண்டாமென்றோ நான் கூற முற்படவில்லை. **அன்புடன் கலந்த ஒழுக்கக் கட்டுப்பாடுகளே ஒரு சிறந்த மனிதனை உருவாக்கும்.**

உங்கள் பிள்ளைகள் உங்களுடைய அறிவுரைகளைவிட, உங்களையே அதிகம் பின்பற்றுகிறார்கள் – உங்கள் சொற்களும் – செயல்களுமே உங்களுடைய குழந்தைகளில் அதிகம் பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பதை உணர்ந்துகொள்ளுங்கள்.

வெகுமதிகளைப் பெறுவது நம் அனைவருக்கும் பிடித்தமானதே. பெற்ற வெகுமதியின் மேலுறையைப் பிரிப்பதில்தான் நமக்கு எவ்வளவு ஆனந்தம்!

அதைப் போலவே குழந்தைகள் இறைவன் உங்களுக்குக் கிருபையாய் அருளியுள்ள அரும்பரிசு. அவர்களை கிடைத்தற்கரிய அருஞ்செல்வமாகப் பாவியுங்கள். அவர்களை நல்லொழுக்கத்துடன்

வளர்ப்பதும், நல்லாலோசனைகள் நல்குவதும், நற்செயல்கள் புரியவைப்பதும் பெற்றோர்களுக்கு இறைவன் இட்ட பணி.

Joseph Joubert என்ற அறிஞர், "Children have more need of models than of critics or teachers" எனக் கூறுகிறார். **"குழந்தைகள் அறிவுரைகளையோ அல்லது விமரிசனங் களையோ அல்ல, தாங்கள் பின்பற்றி நடக்கக்கூடிய முன்மாதிரி யான "மாதிரி மனிதர்கள்ளயே" (Role Models) தேடுகிறார்கள்"** என்பதுதான் அதன் பொருள்.

நீங்கள் சொல்லும் வழியில் உங்கள் பிள்ளைகள் செல்லவேண்டு மென்றால், நீங்கள் சொல்லும் வழியில், முதலாவது நீங்கள் செல்லவேண்டும். உங்களுடைய உலகப்பிரகாரமான வாழ்க்கை யிலும் (worldly-life), ஆவிக்குரிய வாழ்க்கையிலும் (Spiritual-life) நீங்கள் பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக இருக்கிறீர்களா?

"தாங்கள் வாழும் குடும்பத்தினுள்ளே, உறுதியான குணத் தைக்கொண்ட பெற்றோர்களின் (பாசப்)பிடிப்பு வலுவுள்ளதாக இருந்தால், அந்தச் சூழலில்வாழும் குழந்தைகள், வெளி யுலகின் எந்த நெருக்குதலையும், சோதனையையும் திடமாக எதிர்கொள்வார்கள்" (Children can withstand a lot of pressure and trial from the outside. if the home inside is held steady by parents whose character is steady — Stuart Briscoe).

உங்களுடைய நெறிகாட்டலுடன் ஒழுக்கத்தில் வளரும் குழந்தை கள், பெரியவர்களான பின்னர் அவர்களிலே வெளிப்படும் ஆற்றலையும், அறிவையும், ஒழுக்க வாழ்க்கையையும் காண்பதைவிட, பெற்றவர்களுக்கு வேறு என்ன ஆனந்தம் இருக்க இயலும்?

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்" – (திருக்குறள் – மக்கட்பேறு – அதிகாரம் 7) – என்று வள்ளுவர் கூறுவதும் இதைத்தானே.

(பொருள்: தன் மகன் பிறரால் மேலோன் என்று அழைக்கப்படு வதைக் கேட்கும் தாய், அவன் பிறந்தபொழுது பெற்ற மகிழ்ச்சியை விட அதிக மகிழ்ச்சியடைவாள்).

நிறைவுரை

ஒரு சிறிய குழந்தை, தனது பெற்றோர்கள் தன்னை எப்படி நடத்தவேண்டுமென்றும், தன்னிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்றும் பெற்றோர்களுக்கு அறிவுரை கூறுவதுபோல் ஒரு குழந்தைநல நிபுணர் ஆங்கிலத்தில் எழுதியுள்ள பத்து ஆலோசனை களைத் தமிழில் மொழிமாற்றம் செய்து தந்துள்ளேன். படித்துப் பாருங்கள்.

1. என்னுடைய கைகள் சிறியவைகள். நான் படுக்கையை விரிக்கும்போதும், படங்கள் வரையும்போதும் அல்லது விளையாடுகையில் பந்தை எறியும்போதும் மிகச்சரியாகக் குறையின்றி செய்யவேண்டுமென்று எதிர்பார்க்காதீர்கள்.

2. என் கண்கள் நீங்கள் பார்த்த அளவிற்கு இவ்வுலகை இன்னமும் பார்க்கவில்லை. தேவையற்ற கட்டுப்பாடுகளை ஏற்படுத்தி, இவ்வுலகை நான் ஆய்ந்து அறிந்து பார்க்கும் அரிய வாய்ப்பைத் தடை செய்யாதீர்கள்.

3. வேலைகள் எப்பொழுதும் இருந்துகொண்டேதான் இருக்கும். சிறியவனான எனக்கு உங்கள் நேரம் கொஞ்சம்தான் தேவை. தயைகூர்ந்து தினமும் சிறிது நேரம் ஒதுக்கி, இந்த அற்புத உலகைக் குறித்துச் சற்று விவரித்துக் கூறுங்கள்.

4. என்னுடைய உணர்ச்சிகள் மென்மையானவைகள். என்னுடைய தேவைகளைக் கவனிப்பதில் சற்று கவனமாக இருங்கள். நீங்கள் சிறுவனாக இருந்தபொழுது எப்படி நடத்தப்பட விரும்பினீர்களோ, அப்படியே என்னையும் நடத்துங்கள்.

5. நான் இறைவனிடமிருந்து வந்த அரிய வெகுமதி. கடவுள் விரும்பும் வண்ணம் அரிய செல்வமாக என்னைக் காத்திடுங்கள்.

6. என்னுடைய செயல்களுக்கெல்லாம் நான்தான் பொறுப் பாளி என்பதை என்னை உணரச்செய்யுங்கள்; வாழ்க்கை விதிமுறைகளை கடைப்பிடிக்கக் கற்றுத்தாருங்கள்; அன்புடன் கூடிய கண்டிப்புடன் ஒழுக்கத்தைக் கடைப் பிடிக்கச் செய்யுங்கள்.

7. என்னுடைய குற்றங்குறைகளை எடுத்துக் கூறுகையில் மென்மையாகக் கூறுங்கள்; வளருவதற்கு உங்களுடைய ஊக்கம்தான் எனக்கு அதிக அவசியம். என்னை ஒழுக்கத்துடன் நடக்கச்செய்ய நீங்கள் எடுத்துக் கொள்ளும் முயற்சியில் என்னுடைய் தன்மானம் தகர்ந்து போகும்படி பேசாதீர்கள்.

8. முடிவுகள் எடுக்க எனக்கு சுதந்திரம் அளியுங்கள். தவறுகளிலிருந்து கற்றுக்கொள்வதற்காக நான் சில தோல்விகளை அடைய அனுமதியுங்கள். அப்பொழுதுதான் நான் பெரியவனாக வளர்ந்தபின்பு வாழ்க்கையில் எவ்வாறு முடிவுகள் எடுக்கவேண்டும் என்பதை என்னால் அறிந்து கொள்ள இயலும்.

9. நான் செய்த வேலையையே மறுபடியும் நீங்கள் செய்யாதீர்கள். அப்படிச்செய்தால் நீங்கள் எதிர்பார்த்த அளவிற்கு நான் என்னுடைய வேலையைச் செய்வில்லை என்று என்னை எண்ணச் செய்யும். தயவுசெய்து என்னுடைய திறமையை என்னுடைய அண்ணன்–தம்பியுடனோ அல்லது அக்காள்–தங்கையுடனோ ஒப்பிடாதீர்கள்; ஒப்பிடாமல் இருப்பது கடினம்தான் என்பது எனக்குத் தெரியும்; ஆனாலும் ஒப்பிடாதீர்கள்.

10. நான் நல்ல முன்மாதிரியாக இருக்கும்படிக்கு என்னை ஆலயத்திற்கும் – வேதபாட வகுப்பிற்கும் தவறாமல் கூட்டிச் செல்லுங்கள். நான் இறைவனைப்பற்றி அதிகதிகமாக அறிந்துகொள்ள ஆவலுடன் இருக்கிறேன்.

பெற்றோர்களே! குழந்தைகளின் இந்தப் பத்து அறிவுரைகளைச் சற்று கேட்டு அதன்படி நடந்துதான் பாருங்களேன்.

குழந்தைகளிடம் உங்களுடைய எதிர்பார்ப்புக்கள் வயதிற்குத் தகுந்தாற்போல் இருக்கட்டும்.

30

பெற்றோர்கள் அறியவேண்டிய உளவியல் 2

(இளமையின் சிறப்பு இயல்புகள் –Adolescence)

தன் இளம்பிராயத்தில் நுகத்தைச் சுமக்கிறது மனுஷனுக்கு நல்லது (புலம்பல் 3:27).

இத்தாலியப் பழமொழியொன்று, **"சின்னக் குழந்தைகள் தலைவலி தருவார்கள், வாலிபப் பிள்ளைகள் இதயவலி தருவார்கள், சின்னக் குழந்தைகள் உங்கள் தூக்கத்தைக் கெடுப்பார்கள்; வாலிபப் பிள்ளைகள் உங்கள் வாழ்க்கையையே தடமாற்றிப் போடுவார்கள்."** என்று கூறுகிறது (Little children, headache; big children, heartache; little children disturb your sleep, big children your life – *Italian Proverb*). பிள்ளைகள் சரியாக வளர்க்கப்படாவிட்டால் இதுதான் நிலைமை.

மானிட வாழ்க்கையில், வாலிப பருவம் அல்லது இளமைக் காலம் மிகவும் முக்கியமானது. இது முழுமனித நிலைக்கும், குழந்தைப் பருவத்திற்கும் இடைப்பட்ட காலம் (It is the transition period of life between childhood and manhood). கவித்துவத்துடன் கூறுவதானால், 'வாலிபம் வாழ்க்கையின் வசந்த காலம்."

குழந்தைகள் பெரியவர்களாக வளரவளர, பெற்றோர்களுக்கு தங்கள் பிள்ளைகளின் மேலுள்ள ஆதிக்கம் (Control) குறைந்து கொண்டேபோகிறது.

வாலிப பிள்ளைகளை நல்வழியில் நடத்தவேண்டுமானால், அவர்களுடைய ஒத்துழைப்பும் (Cooperation) வேண்டும். ஆகையால், பெற்றோர்கள் பெரும்பாலும், பிள்ளைகளுக்குத் தங்கள்மேலுள்ள அன்பையும் நம்பிக்கையையுமே (Trust) சார்ந்திருக்க (Rely on) வேண்டியதாயிருக்கிறது.

"தோளுக்குமேல் வளர்ந்த பிள்ளை தோழன்" என்பார்கள். பெண்ணானால், "தோளுக்குமேல் வளர்ந்த பெண் தோழி" என்று கூறலாம். இளம் பிள்ளைகளின் வாழ்க்கையில் நண்பர்களின் தாக்கம் அதிமாக இருக்கும். பெற்றோர்களே தோழனாகவோ அல்லது தோழியாகவோ இருந்து பிள்ளைகளின் வாழ்க்கையை செவ்வையான பாதையில் வழிநடத்த உதவக்கூடாதா?

பெற்றோர்கள் பிள்ளைகளுடைய மதிப்பிற்குரியவர்களாக (Respect), நம்பிக்கைக்குரியவர்களாக (Trust) இருக்கவேண்டும். வாலிபப் பிள்ளைகளைக் குழந்தையை நடத்துவதுபோல நடத்தினால், பெற்றோர்கள் தங்களிடையேயுள்ள உறவை சேதப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதே உண்மை.

பிள்ளைகளிடம் அளவிற்கதிகமாக தொணதொணத்துக் கொண்டிருந்தால், ஒன்று பெற்றோர்களின் பேச்சை அசட்டை செய் வார்கள்; அல்லது வீடு அவர்களுக்கு வெறுத்துப்போகும்.

பிள்ளைகளுக்கு வீடு பிரதானமானதாகவும், மகிழ்ச்சியூட்டும் இடமாகவும் இருக்கவேண்டும். வெளியிலிருப்பதைவிட வீட்டிலிருப் பதைப் பிள்ளைகள் விரும்பவேண்டும் (The home should be the child's centre of activity; the child should love to be in the house).

வாலிபத்தில் பிள்ளைகள் தங்கள் உடலிலும் உள்ளத்திலும் பலவகையான மாற்றங்களுக்கு உள்ளாகிறார்கள். அவ்வாறு ஏற்படும் அக–புறமாற்றங்களை வெற்றிகரமாகக் கையாளப் பெற்றோர்கள் அவர்களுக்கு உறுதுணையாக இருக்கவேண்டும்.

சில வேளைகளில், பெற்றோர்கள் தங்கள் எண்ணங்களை பிள்ளைகள் மேல் திணிக்காமல், அவர்கள் வழியில் செல்ல அவர்களை அனுமதிக்க வேண்டும்.

வாலிப பிள்ளைகளை வழிநடத்த, அப்பருவத்தில் அவர்களில் ஏற்படும் மாற்றங்களைப் பெற்றோர்கள் அறிந்துகொள்ளுதல் அவசியம். அவைகளை மேலோட்டமாகக் காண்போம்.

1. சரீரம் சார்ந்த மாற்றங்கள் நிகழும் காலம் (Period of Physical Change)

i) இளமையில் உடல் விரைவுடன் வளர்ச்சியுறுகிறது. வாலிப காலத்தில் உடல் முழுமையான உயரத்தையும், பெலத்தையும் அடைகிறது.

ii) இளமையில் உடல் பால்பியலூக்கத்திற்கு (Sex organs) முழுத்தகுதியான முதிர்ச்சியை அடைகிறது. இளைஞர்கள், குழந்தைப் பருவத்தைக் கடந்துவிட்டவர்கள்; வயது வந்தவர்கள் (Adults). பெற்றோர்களாக உள்ளத்தாலும் உடலாலும் ஆயத்தமாகிக் கொண்டிருப்பவர்கள்.

2. **உணர்ச்சி வெள்ளத்தால் அலைக்கழிக்கப்படும் காலம் (Period of Emotional Disturbance)**

i) குழந்தைப் பருவத்தைக் கடந்து வயது வந்தோராகும் இக்காலம் வாழ்க்கையில் குழப்பம் நிறைந்த காலம் (Disturbing period of life); கட்டுப்பாடுகளைக் களைந்து சுதந்திரத்தை விரும்பும் காலம்; தன்னை வயதுவந்தவராக மற்றவர்கள் மதிக்கவேண்டுமென ஏங்கும் காலம்; வளர்ந்த பின்னரும் தன்னை ஒருபொருட்டாகக் கருத வில்லையோ என ஐயுறுங்காலம்; பெரியவனாகக் கருதப் படுவதால் வரும் புதிய பொறுப்புகளைக் கண்டு மருளும் காலம்.

ii) இளமைக் காலத்தில், மானுட வாழ்க்கையில் மானிடர் களுக்குக் கிடைக்கும் பால்பியலூக்க முதிர்ச்சி, இறைவன் ஈந்துள்ள மாபெரும் சக்தி (Maturity of Sex Organs brings new power into human life). இச்சக்தியை முறை தவறிப் பயன் படுத்தினால் பேராபத்து. இக்காலகட்டத்தில் பெற்றோர் களுடைய ஆலோசனை (Counselling), அனுசரணை (Understanding), அனுதாபம் (Compassion), அன்பு (Love) பிள்ளைகளுக்குத் தேவை.

iii) இக்காலம், புதிய ஆசைகள் முளைவிடும் காலம்; புதிய கற்பனையுலகில் சஞ்சரிக்கும் காலம்; இவ்விளமைக் காலம், 'சரி எது – தவறு எது' எனத் தடுமாறச் செய்யும் குழப்பம் நிறைந்த காலம்.

iv) கட்டுப்பாடுகளிலிருந்து விடுபட்டு சுதந்திரத்தை நிலைநாட்டத் துடிக்கும் காலம். அதிகார ஆணைகளை மீறி கிளர்ச்சி செய்ய விரும்பும் காலம். ஆயினும், உறுதியான கட்டுப்பாடுகளை மதிக்கும் காலம் (Firmness is respected by adolescents).

v) இளைஞர்களின் பிரச்சனைகள், விருப்பு–வெறுப்புகள் யாவற்றையும் இணக்கத்துடனும், அனுதாபத்துடனும் செவிமடுக்கவேண்டும். உறுதியான கட்டுப்பாடுகளை எதிர்ப்பவர்களாக வெளியே தெரிந்தாலும், உள்ளத்தில் அக்கட்டுப்பாடுகளை இளைஞர்கள் விரும்புகிறார்கள் என்பதே உண்மை (Though the adolescents may outwardly rebel against firm discipline, inwardly they respect them and even desire to be disciplined).

3. **மனவளர்ச்சியடையும் காலம் (Period of Mental Development)**

i) ஒரு இளைஞன் அல்லது இளைஞி 15 வயதையடையும் பொழுது, அவனுடைய அல்லது அவளுடைய மூளை முழு

வளர்ச்சியடைகிறது. எனவே இவ்வயதில், அறிவைத் தேக்கி வைக்கும் கொள்திறன் (Capacity) முழு முதிர்ச்சி யுறுகிறது. ஆனால் அறிவும், அனுபவமும் முழுமை பெற்றதாகக் கூறமுடியாது.

ii) இளமைக்காலம் தன்னைப்பற்றி சிந்திக்கும் காலம். நடையுடை பாவனைகளில் மாற்றங்கள் நிகழும் காலம். தான் வாழும் உலகைப் பற்றியும், சமுதாயத்தைப் பற்றியும், சமயத்தைப் பற்றியும் கேள்விகள் எழுப்பி, உலகியலறிவை வளர்த்துக் கொள்ளும் காலம்.

iii) இளமைக்காலம் இளைஞர்கள் பெற்றோர்களிடம் குற்றம் குறை காணுங்காலம். சமய சடங்காச்சாரங்களில் வினா வெழுப்பும் காலம். எல்லாமே போலித்தனமானது (Hypocritical) என வேகமாக குற்றம் சாட்டும் காலம்.

சிறுகுழந்தையாயிருந்தபொழுது வினாவின்றி நம்பியது போலன்றி, உலகின் கண்ணுள்ள அனைத்தையுமே பாரபட்சமின்றி ஆய்ந்து மெய்மையை அறிய முயலும் காலம் (Adolescents look at the things of the world objectively). சமயக் கோட்பாடுகளை, நம்பிக்கைகளைச் சந்தேகக் கண்ணோட்டத்துடன் நோக்கும் காலம்.

4. ஆன்மீக நெருக்கடியான காலம் (Period of Spiritual Crisis)

i) இளமைக்காலம், தன் வாழ்க்கையில் கொள்கையையும் (Ideal), குறிக்கோளையும் (Goal) தேடும் காலம். தனக்குப்பிடித்த யாரையாவது கருத்தில்கொண்டு, அன்னாரைப்போல் தானும் இருக்க விரும்பும் காலம். (Period of Hero-worship). இக்காலத்தில் கிறிஸ்துவைப் போல இருக்கவேண்டும் என விரும்பின் நலம் பயப்பதா யிருக்கும்.

இந்தக் காலத்தில் சில இளைஞர்கள் பாதைமாறி நேர் எதிர்மறை திசையில் செல்லவும் வாய்ப்புண்டு. இளம் பிராயத்திலேயே கிறிஸ்தவ விதை சரியாக ஊன்றப் பட்டிருந்தால், பெரும்பாலும் விபரீத விளைவுகள் ஏற்படா வண்ணம் தவிர்க்கலாம்.

ii) இளமைக் காலம் தனது வாழ்க்கையின் தொழிலைத் தெரிவு செய்யும் காலம் (It is the period to seek a vocation).

இறைத் தொண்டாற்றுவதா?

பணம் சேர்க்கும் தொழில் புரிவதா?

பதவியைப் பிடிக்க முயற்சிகள் மேற்கொள்வதா?

அரசியலா? அரசாங்க வேலையா?

வியாபாரமா? – என முடிவு செய்யும் காலம்.

iv) இவ்விளமைக்காலமே தன்னைக் கிறிஸ்துவுக்காக அர்ப் பணிக்கத் தகுந்த காலம். இக்காலத்தில் கிறிஸ்துவை முறையாக அறிமுகப்படுத்தப்படாவிடில், கிறிஸ்துவை விட்டு தூர விலகிச் சென்றுவிடவும் வாய்ப்புகள் மிக அதிகம்.

5. இளைஞர்களைக் கையாளும் வழிவகைகள்

i) இளைஞர்களை வயதுவந்த மனிதர்களாக ஒத்துக் கொள்ளுங்கள் (Recognise them as persons). உங்கள் நண்பர்களையோ அல்லது உறவினர்களையோ சேர்ந்து சந்திக்க நேர்ந்தால், பிள்ளைகளை அறிமுகப்படுத் துங்கள்; இல்லையென்றால் தாங்கள் புறக்கணிக்கப் படுவதாகவோ அல்லது அவர்களை உங்கள் பிள்ளை யென்று கூறத்தயங்குகிறீர்கள் என்றோ கருதக்கூடும். அவற்றின் பாதிப்பை உடனே உங்களால் உணரமுடியாது. ஆனால், அவ்வாறான நிகழ்ச்சிகள் அவர்களை உங்களை விட்டு மெதுவாக விலகிச்செல்லச் செய்யும்.

ii) அவர்களின் அந்தரங்கத்திற்கு மரியாதை கொடுங்கள். (Respect their privacy). அவர்களுடைய நண்பர்கள் முன்னோ அல்லது உங்கள் உறவினர்கள் முன்னோ, பிள்ளைகளைத் தரக்குறைவாகத் திட்டாதீர்கள் – மரியாதை யுடன் நடத்துங்கள்.

iii) வீட்டின் காரியங்களில் அவர்களையும் கலந்தாலோசி யுங்கள்; அவர்கள் அபிப்பிராயத்தைக் கேளுங்கள். (Consult and seek their opinion). இப்படிச் செய்வதால் அவர்களுடைய பின்னாளைய குடும்ப வாழ்க்கைக்கு அவர்களைப் பயிற்றுவிக்கிறீர்கள் (Training); அத்துடன், குடும்பத்தில் நிகழும் யாவற்றிற்கும் தனக்கும் பொறுப் புண்டு என்பதை உணரவைத்து, அவர்களையும் குடும்பக் காரியங்களில் பங்கேற்கச் செய்கிறீர்கள்.

நிறைவுரை

டான் புர்சூட் என்ற சமூக சிந்தனையாளர் கூறுகிறார், "எல்லாக் குழந்தைகளுமே, இப்பொழுது நான் முக்கியமானவனாயிருக்க ஆசைப்படுகிறேன் என்ற அடையாள அட்டைகளை மனதில் அணிந்திருக்கிறார்கள். அவர்கள் மனதில் அணிந்துள்ள அடையாள அட்டையைக் கண்டுகொள்ளாது விட்டுவிடுவதால் தான், பல இளங்குற்றங்கள் நிகழ்வதற்குக் காரணமாக இருக்கின்றன" (All children wear the sign: *'I want to be important NOW.'* Many of our juvenile delinquency problems arise because nobody reads the sign —*Dan Pursuit*).

வாலிப வயதில் பிள்ளைகள் தங்கள் வாழ்க்கையின் குழப்பமான பருவத்தைக் கடந்துகொண்டிருக்கிறார்கள் எனப்பெற்றோர்கள் உணரவேண்டும் (Understand - in the youth, the children are passing through a tumultuous phase in their life).

பெற்றோர்களின் முதிர்ச்சியற்ற செயலால் பிள்ளைகள் மேலும் குழம்ப வாய்ப்புண்டு. எனவே, பிள்ளைகளின் குழப்பங்களை தீர்க்க, பெற்றோர்கள் முதிர்ச்சியு டன் அனுசரணையர்க இருக்கவேண்டும்.

வாலிபப் பிள்ளைகளைக் கண்டிக்கும்பொழுதும், தண்டிக்கும் பொழுதும் கவனமாக இருங்கள். அவர்களை ஏளனமாகப் பேசுவதையோ, அவர்களின் உள்ளத்தைக் காயப்படுத்துவதையோ கண்டிப்பாகத் தவிருங்கள்.

"பிள்ளை பெற்றுக்கொள்ளவேண்டும் என்று கண நேரத்தில் தீர்மானிக்கலாம். ஆனால் அந்தத் தீர்மானத்தினால் உங்களுடைய இருதயத்தை உங்களுடைய உடலிலிருந்து வெளியே எடுத்து என்றென்றைக்கும் உலாவ விடுகிறீர்கள் என்பதை அறிந்துகொள்ளுங்கள்" என்று எலிசபத் ஸ்டோன் என்பவர் கூறுகிறார் (Making the decision to have a child — it's momentous. It is to decide forever to have your heart go walking around outside your body —by Elizabeth Stone, *Reader's Digest*). அதாவது, உங்களுடைய பிள்ளைகள் உலகில் பிறந்து நடந்துதிரிவது, உங்களுடைய இதயமே உடலைவிட்டு வெளியேறி நடந்துதிரிவதற்கொப்பாகும்.

குழந்தைகளைப் பெறுவதுடன் பெற்றோர்களின் பணி நிறையுறுவதில்லை. அவர்களை இம்மையில் இயேசுவுக்கென்றும், மறுமையில் நித்திய வாழ்க்கைக்கென்றும் அவர்களை ஆயத்தம் செய்வதுவரை பெற்றோர்களின் கடமை தொடர்கிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக, பிள்ளைகள் தங்களுடைய பெற்றோர்களின் மேற்பார்வை இல்லாமலேயே இந்த உலகில் வாழ்வதற்குக் கற்பிக்கப்படவேண்டும் (The most important thing that parents can teach their children is how to get along without them - *Frank A. Clark*). அப்பொழுதுதான் மறுமைக்குள் பிரவேசிக்கும் காலத்தில் பெற்றோர்கள் சஞ்சலமின்றி சமாதானத்துடன் இவ்வுலகைக் கடந்து செல்லமுடியும்.

31

பெற்றோர்களுக்குச் சில ஆலோசனைகள்

பிதாக்களே, ... கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் அவர்களை (உங்கள் பிள்ளைகளை) வளர்ப்பீர்களாக – (எபேசியர் 6:4).

இன்றைய பிள்ளைகளைத் தடுமாறித் தடந்தவறிச் செல்லச் செய்யும் தடைக்கற்கள் இன்று ஏராளம். ஆகவே, இன்றைய இளைய தலை முறையினரை வளர்த்துக்கொண்டிருக்கும் பெற்றோர்களுக்குப் பொறுப்புகள் மிக அதிகம். கண்டிப்படன்கூடிய கவனம் மிக அவசியம்.

இன்றைய வாலிபர்களுக்கு, இதற்கு முன்பு வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு சுயக்கட்டுப்பாடு அல்லது இச்சையடக்கம் அதிகமாகத்தேவைப்படுகிறது. இந்த ஆபத்தான நாட்களில் தெரிந்துகொள்ளபட்ட கிறிஸ்தவக் குழந்தைகள் தொலைந்து போகாமலிருக்க, ஆழமான விசுவாச வாழ்க்கைக்கு அவர்களை அறிமுகப்படுத்திப் பயிற்றுவிப்பது திருச்சபையின்மீதும், பெற்றோர்கள்மீதும் விழுந்த கடமையாக இருக்கிறது.

பெற்றோர்கள் பிள்ளைகளுக்குச் செய்யவேண்டிய பல்வேறு கடமைகளில் பத்துக் கடமைகளை உங்களுக்கு ஆலோசனையாக இங்கே கூறியுள்ளேன். இதைவிட அதிகமான கடமைகளைக் கடைப்பிடித்து வருவீர்களானால் மிகுந்த மகிழ்ச்சியே.

1. எடுத்துக்காட்டாய் இருங்கள்

a. உங்களை உங்கள் பிள்ளைகள் பின்பற்றத்தக்கதாக சிறந்த முன்மாதிரியாக இருங்கள். உங்கள் பிள்ளைகள் எதைச் செய்யக் கூடாது என்று கருதுகிறீர்களோ, அதை நீங்கள் செய்யாதீர்கள் (Be a Role-Model to your Children - Be an example to your Children. Don't do the thing, what you wish your children must not do).

பிள்ளைகள் செய்யக்கூடாது என்று கருதும் தவறை நீங்கள் செய்தால், அவர்கள் தவறு செய்யும்பொழுது அவர்களைக் கண்டிக்கும் உரிமையை நீங்கள் இழந்துபோவீர்கள். இதற்கு எடுத்துக்காட்டாகத் தாவீதைக் கூறலாம்.

'கர்த்தரின் இருதயத்திற்குகந்த மனிதனாகத்' தாவீது இருந்தும், தன்னுடைய பாவச் செயல்களின் விளைவாய்ப் பிள்ளைகளைக் கண்டிக்கும் உரிமையை இழந்துபோனான்.

'பட்டயம் என்றென்றும் உன் வீட்டை விட்டு விலகாதிருக்கும் .. உன் கண்கள் பார்க்க ... உன் ஸ்திரீகள் ... கற்பழிக்கப்படுவார்கள்' என்ற சாபங்களையும் பெற்றான் (2 சாமு.12:10). அவனுக்குக் கூறப்பட்ட சாபங்கள் அப்படியே நிறைவேறியதல்லா?

அரசனாக இருந்தாலும் தகப்பனாகத் தாவீது தோல்வியையே தழுவினான்.

b. உங்கள் பிள்ளைகள் எப்படி இருக்கவேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்களோ அப்படியே நீங்களும் இருங்கள். உங்கள் பிள்ளைகள் உங்களைப் பின்பற்றத்தக்கவகையிலே உங்கள் நடக்கை இருக்கட்டும். பிள்ளைகளுக்கு எவற்றைக் கற்றுத் தருகிறீர்களோ, அவற்றின்படி நடக்க நீங்களும் கவனமுள்ளவர் களாக இருப்பது அவசியம் (It's important for parents to live the same things they teach).

c. இல்லம்தான் பிள்ளைகளின் முதலாவது 'மழலையர் பள்ளி (Nursery). குழந்தைகள் பார்த்தும், உணர்ந்துமே முதலாவது கற்கத் துவங்குகிறார்கள்; ஆகையால் வீட்டிலுள்ள உங்களுடைய மொழியையும், உங்களுடைய பழக்கவழக்கங்களையும், உங்களுடைய நடத்தையையும், உங்களுடைய குணத்தையுமே முதலாவது பிள்ளைகள் கற்கத் துவங்குகிறார்கள்.

d. பெற்றோர்களிருவரிடையேயும் உண்மையான அன்பு நிலவவேண்டும்; அவர்களிடையே ஒற்றுமையும் புரிந்துகொள்ளுதலும் இருக்கவேண்டும். **பெற்றோர்களிடையே நிலவும் அன்புதான் குழந்தைகளுக்குப் பெற்றோர்கள் தரக்கூடிய மிகச்சிறந்த வெகுமதியாகும்.**

2. நண்பர்களாக இருங்கள்

இளைஞர்கள் அல்லது இளைஞிகள் தங்களுடைய பெற்றோர் களைவிடத் தங்களுடைய நண்பர்களின் வார்த்தைகளுக்குத்தான் அதிக முக்கியத்துவம் அளிப்பார்கள் – அதிகம் நம்புவார்கள். ஆனால், ஒரு குழந்தையின் வாழ்க்கையில் முதல் நண்பர்கள் பெற்றோர்கள் தான். நாளாவட்டத்தில் அந்த நட்பு மறைந்துபோகிறது. நீங்கள் ஏன் உங்கள் பிள்ளைகளுடைய நண்பர்களாகத் தொடர்ந்து இருக்கக் கூடாது?

3. பிள்ளைகளின் நம்பிக்கைக்குரியவர்களாக இருங்கள்

a. நீங்கள் சொல்லும் சொல்லின்படி நடக்கும் மனிதனாக மனுஷியாக இருப்பதில் கவனமாக இருங்கள் (Be a man or woman of your words). உங்கள் வார்த்தையில் உண்மையுள்ளவர்களாக இல்லாவிட்டால், பிள்ளைகளின் நம்பிக்கையை இழந்துவிடுவீர்கள். சொல்வதொன்றும் செய்வதொன்றுமாக இருக்காதீர்கள்.

b. பிள்ளைகளிடம் உண்மையான அன்பு செலுத்துங்கள். பிள்ளைகளை, மனைவி கணவனுக்கெதிராகவும், கணவன் மனைவிக்கெதிராகவும் திருப்புவதற்காகவோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ அவர்களைத் தவறாகப் பயன்படுத்தாதீர்கள்.

c. பிள்ளைகளின் நம்பிக்கையைப் பெற்ற பெற்றோர்களாக இருங்கள். அவர்களுடைய நம்பிக்கையைப் பெற்றிருந்தால்தான், அவர்கள் தங்களுடைய இரகசியங்களையும் பலவீனங்களையும் உங்களிடம் பகிர்ந்துகொள்வார்கள். அவர்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளின்போது, நிலைமை கைவிட்டுக் கடந்துபோகுமுன் சரியான நேரத்தில் சரியான ஆலோசனைகளை உங்களால் வழங்க முடியும்

4. உற்சாகப்படுத்துங்கள்

பிள்ளைகளை உற்சாகப்படுத்துங்கள் - நம்பிக்கையூட்டுங்கள் (Encourage them and Motivate them). அவர்களுடைய பலவீனங்களைச் சீர் செய்யுங்கள். அவர்களுடைய பலத்தை அவர்களுக்கு வெளிப்படுத்துங்கள். வகுப்பில் அதிக மதிப்பெண்களைப் பெற்றவர்கள்தான் வாழ்க்கையில் வெற்றிபெறுவார்கள் – முன்னேறுவார்கள் என்பது தப்புக்கணக்கு. உலகில் சாதனை புரிந்தவர்கள் பலர் சாமான்யமானவர்களாக இருந்தவர்கள்தான் (Average or Less than average students). வாழ்க்கையில் முன்னேறவேண்டும் அல்லது சாதிக்கவேண்டும் என்ற வைராக்கியம் உள்ளவர்கள்தான் சாதித்திருக்கிறார்கள்.

5. நல்லவைகளைக் கற்றுக்கொடுங்கள்

நல்லவைகள் என்னென்ன – கெட்டவைகள் என்னென்ன என்பதைச் சிறுவயது முதலே கற்றுக்கொடுங்கள். நல்ல பழக்கவழக்கங்களைக் கற்றுக்கொடுங்கள். பிறர்முன்னால் எப்படி மரியாதையுடன் நடந்துகொள்ளவேண்டும் என்றும் – சாப்பிடும் பொழுது எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்றும், பணத்தின் அருமை என்னவென்றும் பிள்ளைகளுக்குச் சிறுவயதுமுதலே கற்றுக்கொடுங்கள்.

இவைகளை எடுத்துக்காட்டுகளாகத்தான் கூறுகிறேன். நல்ல பழக்கவழக்கங்கள் என்னென்ன என்பது உங்களுக்கே தெரியும்.

6. கண்டித்து வளருங்கள் – பாராட்டி வளருங்கள்

a. பிள்ளைகளைக் கண்டித்து வளருங்கள். பிள்ளைகள் திருந்துவதற்காக அல்லது தவறை உணர்த்துவதற்காக அன்புடன் தண்டியுங்கள். உங்கள் கோபத்திற்கு வடிகாலாகவோ அல்லது உங்களுடைய இயலாமையையின் வெளிப்பாடாகவோ உங்கள் தண்டனை இல்லாதிருக்கக் கவனமாக இருங்கள்.

b. பிள்ளைகள் சிறப்பாக ஏதாவது செய்தால் மனமுவந்து பாராட்டுங்கள். அளவிற்கதிகமாகவும் பாராட்டாதீர்கள் (At times of achievements, reward them to apprieciate, but not exceeding the limit). அவர்களுக்குத் தலைக்கனம் வந்துவிடாதபடி நடந்துகொள்ளுங்கள்

c. பிள்ளைகளுக்குக் கீழ்ப்படியக் கற்றுக்கொடுங்கள். கீழ்ப் படியாமையை அனுமதித்தால், அவர்கள் வாழ்க்கை பின்னாட்களில் பிரச்சனையுள்ளதாக இருக்கும். பெரியவர்களான பின்பும் இந்தக் குணம் தொடர்ந்தால், அவர்கள் பிரச்சனைக்குரிய நபராக எல்லா இடத்திலும் இருப்பார்கள். வீட்டிலும், வெளியிலும், அலுவலகத்திலும் கீழ்ப்படி யாதவராக இருப்பார்கள். "அடியாத மாடு பணியாது" என்ற முறையை மற்றவர்கள் கையாண்டுதான் இவர்களை அடக்க வேண்டியது வரும்.

d. கீழ்ப்படியாமையைத் தொடர்கிறவர்கள் திருந்தாவிட்டால், வாழ்க்கையில் முன்னேறுவது கடினமாக இருக்கும். பெரியோர் களுக்கும், நாட்டுச் சட்டத்திற்கும், ஆவிக்குரிய சட்டங்களுக்குக் கீழ்ப்படியக் கற்றுக்கொடுங்கள்.

7. மன்னிக்கக் கற்றுக்கொடுங்கள்

மன்னிக்க இயலாதவர்களால் இவ்வுலகில் மகிழ்ச்சியாக இருக்க இயலாது. மன்னிப்பது கிறிஸ்தவக் கடமை. 'நாம் மன்னித்தால்தான், ஆண்டவரும் நமக்கு மன்னிப்பார்' என்று 'கர்த்தருடைய ஜெபம்' கற்பிக்கிறது.

குடும்பம் மகிழ்ச்சியாக இருப்பதற்கு மன்னிப்பு அவசியம் ராபர்ட் குயிலன் என்ற அறிஞர், "மகிழ்ச்சியான திருமணம் என்பது நன்கு மன்னிக்கும் இருவரின் இணைதல்" என்று கூறுகிறார் (A happy marriage is the union of two good forgivers —*Robert Quillan*). கணவனும் மனைவியும் மன்னிக்கிறவர்களாக இருந்தால்தான் இல்லறம் நல்லறமாக இருக்கும்.

உங்கள் பிள்ளைகளுக்கு மன்னிப்பின் மகத்துவத்தைக் கற்றுக்கொடுங்கள். அப்பொழுதுதான் அவர்கள் மன்னிக்கும் குணத்தின் அவசியத்தை அறிந்துகொள்வார்கள்.

8. இயேசுவை அறிமுகப்படுத்துங்கள்

தீவிரவாத அமைப்புகளும், இயக்கங்களும், தங்களுக்கு ஆள்சேர்க்க குழந்தைகளுக்கும் இளைஞர்களுக்குமே கண்ணி வைக்கிறார்கள். அவர்களுடைய Slogon: "Catch them young." 'இளமையிலேயே (உன் பக்கம்) இழுத்துக்கொள்' என்பதுதான் அதன் பொருள். கிறிஸ்தவர்களும் அதே யுக்தியைப் பின்பற்றினால் தவறில்லை.

"பிள்ளையை நடக்கவேண்டிய வழியிலே நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்" (நீதி.22:6) என்று சாலமோன் ஞானி கூறுகிறார்.

பெரும்பாலும் மனிதனின் எண்ணங்கள்தான் அவனைத் நல்ல பாதைக்கோ அல்லது தவறான பாதைக்கோ இட்டுச் செல்கிறது. கிறிஸ்துவிற்கு கீழ்ப்படியும் சிந்தனையைப் பிள்ளைகளிடம் வளரச் செய்தால்தான் அவர்களுடைய செயல்கள் அவர்கள் வளர்ந்த பின்பும் செம்மையாக இருக்கும்; செம்மையான பாதையில் செல்வார்கள்

இயேசுவைப்பற்றி உங்கள் பிள்ளைகளுக்கு இளமையிலிருந்தே கற்றுக்கொடுங்கள்; இயேசுவை அறிமுகப்படுத்துங்கள். இயேசுவைத் தங்களுடைய வாழ்க்கையில் இரட்சகராக ஏற்கச் செய்யுங்கள். எந்த ஒரு பிரச்சனையையும், கிறிஸ்தவ வழியில் சிந்திக்கக் கற்றுக் கொடுங்கள். அதாவது திருமறை காட்டும் பாதையில் சிந்தனைகள் இருக்கட்டும்.

9. வேதம் வாசிக்கவும் – ஜெபிக்கவும் கற்றுக்கொடுங்கள்

வாழ்க்கை ஒரு போர்க்களம். கிறிஸ்தவ வாழ்க்கை எளிதான தல்ல. 'என்னிடம் வாருங்கள், நான் ஜெபிக்கிறேன்; உங்கள் கஷ்டங்களெல்லாம் போய்விடும்' என்று யாராவது கூறினால், அவர் எவ்வளவு பெரிய ஆளாக இருந்தாலும் நம்பாதீர்கள்.

கிறிஸ்தவனுக்கு கஷ்டங்கள் கிடையாது என்று திருமறையில் எந்த இடத்திலுமில்லை. இயேசுவே, **'உலகில் உங்களுக்கு உபத்திரவங்கள் உண்டு'** என்றுதான் கூறுகிறார். ஆனால், இயேசு அத்துடன் தனது உபதேசத்தை நிறுத்தவிடவில்லை; அதைத் அவர் தொடர்ந்து **'ஆனாலும் திடன் \கொள்ளுங்கள்"** என்று கூறுகிறார். **(யோவா.16:33).**

கடினமான கிறிஸ்தவ வாழ்க்கையை எதிர்கொண்டு வாழ்வதற்குக் கிருபையாக அருளப்பட்டுள்ள சக்தியுள்ள அருஞ்சாதனங்கள் – திருமறையும், ஜெபமும். திருமறை ஒரு பொக்கிஷம். ஜெபத்தில் நாம் கர்த்தரிடத்தில் பேசுகிறோம்; திருமறை வாயிலாகக் கர்த்தர் நம்மிடம் பேசுகிறார்.

தங்கள் குழந்தைகளுக்கு நடப்பதற்கும், பேசுவதற்கும் எப்படிக் கற்றுக்கொடுக்கிறார்களோ, அதுபோலவே குழந்தைகளுக்கு அனுதினமும் வேதம் வாசிக்கவும், ஜெபிக்கவும் கற்றுக்கொடுக்க வேண்டியது கிறிஸ்தவப் பெற்றோர்களின் கடமையாகும்.

“நான் இன்று செய்கிறதுபோல, உயிரோடிருக்கிறவன் – உயிரோடிருக்கிறவனே உம்மைத் துதிப்பான்; தகப்பன் பிள்ளைகளுக்கு உமது சத்தியத்தைத் தெரிவிப்பான்” (ஏசா.38:19).

நீங்கள் மட்டும் பக்தி வாழ்க்கை வாழ்ந்தால் போதாது, உங்கள் பிள்ளைகளையும் பக்தி வாழ்க்கைக்கு ஏதுவாக வழிநடத்துங்கள்; மீட்பின் அனுபவத்தைப் பெற்றவர்களாக நித்திய வாழ்க்கைக்கு அவர்களையும் தகுதியுள்ளவர்களாக்கவேண்டியது பெற்றோர்களின் கடமை.

10. பிள்ளைகளுக்காக ஜெபியுங்கள்.

பிள்ளைகளுக்காக அனுதினமும் ஜெபியுங்கள். கூடுமானால் அவர்களுடன் சேர்ந்து அவர்களுக்காக ஜெபியுங்கள். அவர்களுக்காக நீங்கள் அனுதினமும் ஜெபிக்கிறீர்கள் என்பதைப் பிள்ளைகள் அறிந்திருக்கவேண்டும்.

உங்களுக்காக அவர்களையும் ஜெபிக்கத் தூண்டுங்கள். உங்களுக்கும் – ஆண்டவருக்குமுள்ள நெருக்கத்தை உங்கள் பிள்ளைகள் அறிந்திருப்பது நலம்.

ஜெபிக்கும் தாயார் ஒரு குடும்பத்தில் இருந்தார். அவருடைய கணவர் வீட்டைவிட்டு வேலைக்குச் செல்லும்பொழுதெல்லாம் அவருடைய வழிநடத்துததலுக்காகவும் (Guidance), பாதுகாவலுக்காகவும் (Protection) ஒருசில வார்த்தைகள் ஜெபிப்பார்கள். வேலையினிமித்தம் கணவர் வீட்டிற்கு வெளியே தங்கயிருக்க வேண்டிய நாட்களில் அந்த அம்மையார் கணவருக்காகச் சத்தமாக ஜெபிப்பது வழக்கம்.

அந்த வழக்கம் அவருடைய பிள்ளைகளில் ஏற்படுத்தியிருந்த தாக்கத்தை அப்பொழுது அந்த அம்மையார் உணர்ந்திருக்கவில்லை. அவர்களுடைய மகள் வளர்ந்து, கல்லூரிக்கு மேற்படிப்பிற்காக செல்லவேண்டிய தருணம் வந்தது.

அப்பொழுது அந்தப் இளம் பெண் கூறினாள்: “தூர இடத்திற்குச் செல்வதற்கு எனக்குப் பயமாக இல்லை; ஏனென்றால் நான் புறபட்டவுடனேயே அம்மா எனக்காக ஜெபிப்பார்கள் – தொடர்ந்து ஜெபித்துக்கொண்டே இருப்பார்கள். ஆகவே ஆண்டவர் என்னோடிருப்பார்; நான் பயப்படத்தேவையில்லை” என்றாள்.

பெற்றோர்கள், முக்கியமாக தாய்மார்கள் குடும்பத்திற்காக – குழந்தைகளுக்காக ஜெபிப்பது மிகவும் அவசியமானது.

நிறைவுரை

இன்றைய நாட்களில் குழந்தைகளை வளர்ப்பது மிகவும் பொறுப்பான – கடினமான காரியம் என்பதை உணர்ந்திருப்பீர்கள்.

1. பிள்ளைகளைக் கண்டியுங்கள்; தண்டியுங்கள்; எரிச்சலூட்டாதீர்கள்; பெரியவர்கள்போல் (adults) நடக்கவேண்டும் என்று எதிர்பார்க்காதீர்கள். தன்னால் அப்பா–அம்மாவைத் திருப்திப் படுத்துவது இயலாக்காரியம் என்று உங்களுடைய எதிர்பார்ப்பை நிறைவேற்ற முயற்சி எடுப்பதையே குழந்தை விட்டுவிடும் (எபே.6:4).

2. உங்கள் குழந்தையைப் பிற குழந்தைகளோடு ஒப்பிடாதீர்கள். உங்கள் பிள்ளைகளுக்குக் கர்த்தர் கிருபையாக அருளியுள்ள தனித்துவத் திறமைகளிலே நீங்கள் பெருமை கொண்டிருக்கிறீர்கள் என்பதைப் பிள்ளைகள் அறிந்திருக்கவேண்டும்.

3. பிள்ளைகளுக்கு வீட்டில் செய்யவேண்டிய சில பொறுப்புக்களைக் கொடுங்கள். அப்பொழுதுதான் தானும் விட்டின் முக்கியமான நபர் என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்படும்; பொறுப்பை நிறைவேற்றுவதிலுள்ள மனநிறைவு ஆரோக்கியமான சுயமரியாதையைப் (Self-esteem) பிள்ளைகளில் ஏற்படுத்தும்.

4. உங்கள் பிள்ளைகளுடன் நேரத்தைச் செலவிடுங்கள். அவர்கள், உங்களுக்கு முக்கியமானவர்கள் என்பதை உணரச் செய்யுங்கள். நீங்கள் அவர்களுக்கு கொடுக்கும் எந்தப் பொருட்களும் உங்களைக் கொடுப்பதற்கிணையாகாது. மேலும், பிள்ளைகள் யாருடன் அதிகநேரத்தைச் செலவிடுகிறார்களோ அவர்களே பிள்ளைகளுடைய வாழ்க்கையில் அதிக செல்வாக்குப் (Influence) பெற்றிருப்பார்கள்.

5. பிள்ளைகளுக்கு ஏதாவது எதிர்மறை அறிவுரை கூறவேண்டுமென்றால்கூட, அதை நேர்மறையில் கூறுங்கள். எடுத்துக்காட்டாக, 'திருடக்கூடாது, பொய் சொல்லக்கூடாது' என்பதைவிட, 'நீ மிகவும் நல்ல பிள்ளை; நல்ல பிள்ளைகள் திருடமாட்டார்கள்; நல்ல பிள்ளைகள் பொய் சொல்லமாட்டார்கள்' என்று சொல்லுங்கள்; இப்படிக் கூறிவிட்டு அடித்தால்கூட உங்களிடம் பாசமாகவே இருப்பார்கள்.

6. பிள்ளைகளிடம் 'இல்லை, முடியாது, கூடாது' என்று சொல்வது அவர்களுடைய நன்மைக்காக என்பதைப் புரியச் செய்யுங்கள். பிள்ளைகளின் தவறான வேண்டுகோள்களைத் தயக்கமின்றி மறுக்கவேண்டும். அவர்களுடைய இஷ்டத்திற் கெல்லாம் வளைந்துகொடுத்தால், தன்னைச் சரியான கட்டுப் பாடுடன் வளர்க்கவில்லை என்று அந்தப் பிள்ளைகளே பின்னாளில் கருதலாம்.

பெற்றோர்களுடைய கட்டுப்பாட்டைப் பிள்ளைகள் தங்களுடைய உள்மனதில் ரசிக்கிறார்கள் – விரும்புகிறார்கள்.

7. பிள்ளைகள் உங்களைப் பின்பற்றத்தக்கதாக உங்கள் சொல்லும், செயலும் இருக்கவேண்டும். "நான் சொல்கிற படி நீ நட; நான் நடக்கிறபடி நீ நடக்காதே" ("Do as I say, not as I do") என்று கூறுவது சரியல்ல.

8. பிள்ளகளுடைய பிரச்சனைகள் அனைத்தையும் நீங்களே தீர்த்துவைக்கவேண்டாம். அவர்கள் பிரச்சனைகளை அவர்களே தீர்க்க அவர்களுக்குச் சந்தர்ப்பம் அளியுங்கள்; பயிற்சிகொடுங்கள். பிள்ளைகளுடைய வாழ்க்கைப் பாதையில் இடறச்செய்யும் தடைக் கற்களை நீக்குவது சரிதான், ஆனால் தளக்கற்கள் பாதைகளில் இருக்கட்டுமே!

9. கர்த்தரிடம் ஜெபியுங்கள் – கர்த்தருக்காய் ஊழியம் செய்யுங்கள் – கர்த்தர் வழியில் நடங்கள். இறைப்பற்றற்ற பெற்றோர் களிடம் வளரும் பிள்ளைகள், பெரியவர்களான பின்னரும் பெரும் பாலும் இறைப்பற்று இன்றியேதான் இருக்கிறார்கள். ஆவிக்குரிய ஜீவியத்தில் நிலைகொண்டுள்ள பெற்றோர்களிடம் வளரும் பிள்ளைகள், பெரியவர்களாகிப் பெற்றோர்களைவிட்டுப் பிரிந்து வசிக்கும் காலத்திலும் பெரும்பாலும் இறைப்பற்றுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

10. திருமறையைக் கற்றுக்கொடுங்கள். அநேகமாக எல்லாப் பெற்றோர்களுமே தங்கள் பிள்ளைகளுக்குச் சிறந்த கல்வி கற்பிக்கப் பிரயாசை எடுத்துக்கொள்ளுகிறார்கள். ஆனால் வாழ்கைக்கு மிக முக்கியமான திருமறைக் கல்வியைக் கற்றுக்கொடுக்கத் தவறிவிடு கிறார்கள். பிள்ளைகள் இம்மைக்கு மட்டுமல்ல மறுமைக்கும் ஆயத்தப்படுத்துவது பெற்றோர்களின் கடமையாகும்.

குழந்தைகள் நல நிபுணர் ஹென்றி வார்டு பீச்சர், "நாம் பெற்றோர்களாகும்வரைக்கும், நமது பெற்றோர் நம்மேல் வைத்திருந்த பாசத்தை முழுமையாக அறியாதவர்களாக இருக்கிறோம்" என்று கூறுகிறார் (We never know the love of our parents for us till we have become parents – Henry Ward Beecher) அவருடைய கூற்று உண்மைதானே.

உங்கள் அன்பை உங்கள் பிள்ளைகள் இப்போது அறியாவிட்டால் கூட, அவர்கள் பெற்றோர்களாகும்பொழுது அறிந்துகொள்ளுவார்கள்.

32

வயதுவந்த வாழ்க்கைக்குப் பிள்ளைகளை ஆயத்தப்படுத்துங்கள்
(Prepare your child to face adulthood)

நல்வழியில் நடக்கப் பிள்ளையைப் பழக்கு, முதுமையிலும் அவர் அந்தப் பழக்கத்தை விட்டுவிடமாட்டார் நீதி.22:6 (பொது மொழிபெயர்ப்பு).

மனிதக் குழந்தைகள்தான் உலகில் பரிதாபமான ஜென்மங்கள். மற்ற உயிரினங்களைவிட அதிகாலம் பிறரைச் சார்ந்திருப்பது மனிதக் குழந்தைகள்தான். ஆகையால், மனிதக் குழந்தைகளை 'இயற்கை யான அடிமைகள்" (Natural slaves) என்பார்கள்.

அவர்களுடைய விருப்பு–வெறுப்புகளையும், குணநலன் களையும், அவர்களைச் சுற்றியுள்ள மனிதர்கள்தான் உருவாக்கு கிறார்கள். பெரியவர்களாக உலகில் வாழ்வதற்குக் குழந்தைகளைப் பயிற்றுவிப்பதில் பெற்றோர்களுக்குப் பெரும் பங்குண்டு.

கலில் ஜிப்ரான் (Kahil Gibran) தன்னுடைய "The Prophet" என்ற புத்தகத்தில் எழுதியுள்ள ஒரு பகுதியைத் தமிழில் மொழிமாற்றம் செய்து தந்துள்ளேன்.

உங்கள் குழந்தைகள் உங்கள் குழந்தைகளல்ல
உயிர் வாழும் உந்தலில் மகன்கள், மகள்களாய்
தாங்களாய் வந்தவர்கள்
உங்கள் வழியாய் வந்தவர்கள் அவர்கள்,
உங்களிலிருந்து வந்தவர்களல்ல
உங்களுடன் இருந்தாலும் அவர்கள்
உங்களுடையவர்களல்ல
உங்களுடைய அன்பை அவர்களுக்குக் கொடுக்கலாம்,
சிந்தனையையல்ல

ஏனென்றால் அவர்களுக்கென்று சொந்த சிந்தனைகளுண்டு
உங்களுடைய வீட்டில் அவர்களின் உடல்கள் இருக்கலாம், ஆத்துமாக்களல்ல
ஏனென்றால், அவர்களுடைய ஆத்துமாக்கள் நாளைய வீட்டில் வசிக்கின்றன
அந்த வீட்டிற்கு நீங்கள் செல்ல முடியாது, கனவில்கூட முடியாது
அவர்களைப் போலாக நீங்கள் முயலலாம்,
அவர்கள் உங்களைப் போலாவாரெனக் கருதற்க – ஏனென்றால்
வாழ்க்கை பின்னோக்கிச் செல்வதுமில்லை, நேற்றோடு நிற்பதுமில்லை

(Your children are not your children
They are the sons and daughters of Life's longing for itself
They came through you but not from you
And though they are with you yet they belong not to you
You may give them your love but not your thoughts,
For they have their own thoughts.
You may house their bodies but not their soul
For their souls dwell in the house of tomorrow.
Which you cannot visit, not even in your dreams.
You may strive to be like them,
but seek not to make them like you,
For life goes not backward nor tarries with yesterday.
- *by* **Kahil Gibran** in his Book 'The Prophet')

திருமணம் என்னும் புனித உறவிற்குள் இணைக்கப்பட்டு கணவன்–மனைவியான ஆணும் பெண்ணும், குழந்தை என்ற உயிருள்ள ஜீவனை இந்த உலகில் உருவாக்குவதற்கு, இறையுடன் இணைந்த பங்காளர்களாகச் (Co-partners) செயல்படுகிறார்கள்.

இந்த உலகில் பிறக்கும் அனைவருமே இறைவனின் அநாதி சித்தத்தின்படியும், தீர்மானத்தின்படியும் பிறந்தவர்களே. மனிதர்கள் பிறக்குமுன்பே அவர்கள் பெயரிடப்பட்டிருக்கிறார்கள் என்று பிரசங்கி கூறுகிறார். **"இருக்கிறவன் எவனும் தோன்று முன்னமே பெயரிடப்பட்டிருக்கிறான்" (பிர.6:10).**

பிறக்குமுன்பே கர்த்தரால் பெயரிடப்பட்டுப் பிறந்த குழந்தைகளைக் குடும்பத்தில் முழுமனதுடன் வரவேற்று, உலக வாழ்க்கையை வாழ்வதற்கும், நித்திய வாழ்க்கைக்குத் தங்களை ஆயத்தம் பண்ணிக்கொள்வதற்கும் அன்புடன் பயிற்றுவிப்பது பெற்றோர்களுடைய கடமையாகும்.

பெற்ற குழந்தைக்கு உணவும், உடையும், உறைவிடமும், கல்வியும் கொடுத்துவிட்டால் மட்டும் பெற்றோர்களின் கடமைகள் முடிந்துவிடுவதில்லை. அவற்றுடன், பிள்ளையின் உணர்ச்சிகளைப் பக்குவப்படுத்தி, ஆவிக்குரிய வளர்ச்சியில் ஊக்குவித்து, ஒரு முதிர்ச்சியடைந்த மனிதனாக – மனுஷியாகப் பக்குவமடையச் செய்வது பெற்றோர்களின் கடமையாகும்.

மூன்று காலகட்டங்கள்

பிள்ளைகள் முதிர்ச்சியடையும் (Adulthood) வரையிலான காலகட்டங்களை மூன்று காலகட்டங்களாகப் பிரிக்கலாம்.

1. பெற்றோர்களைச் சார்ந்துவாழும் குழந்தைப் பருவம் (dependent childhood stage).
2. சுதந்திரத்துடன் வாழும் இளமைப் பருவம் (independent teenage stage).
3. ஒருவரையொருவர் சார்ந்துவாழும் முதிர்ச்சியடைந்த பருவம் (interdependent adult life).

முதிர்ச்சி பெறவிருக்கும் மூன்றாவது காலகட்டத்தைப் பிள்ளைகள் எட்டுமுன், முதல் இரண்டு காலகட்டங்களிலும் பிள்ளைக்கு **நிபந்தனையற்ற அன்பும், போதுமான சுதந்திரமும், உறுதியான ஒழுக்கப் பயிற்சியும்** கொடுப்பது பெற்றோர்களின் பொறுப்பாகும்.

நிபந்தனையற்ற அன்பு (Unconditional Love)

உங்கள் பிள்ளைகளின் திறமையை ரசியுங்கள். அவர்களுடைய ஒழுக்கத்தைப் பாராட்டுங்கள். உங்களுடைய சொற்படி நடந்தால் மகிழுங்கள். ஆனால் அவர்களிடம் அன்பு செலுத்துவதற்கு இவைகள் காரணிகளாக இருத்தலாகாது. உங்கள் பிள்ளைகளை "அவர்களை அவர்களுக்காக" அன்பு செலுத்துங்கள் (A child is not to be loved primarily for what he or she does or doesn't do, but to be loved for who he or she is).

போதுமான சுதந்திரமும் (Sufficient Freedom)

பிள்ளைகள் இயந்திரங்களுமல்ல – அடிமைகளுமல்ல. அவர் களுடைய உண்மையான ஆளுமைத்திறன் (Unique personality) வெளிப்படவேண்டுமென்றால் பிள்ளைகளுக்குப் போதுமான சுதந்திரம் தேவை. அவர்களே சில முடிவுகளெடுக்கப் பயிற்சிகள் கொடுங்கள், அதனால் ஏற்படும் சாதக–பாதக விளைவுகளைச் சந்திக்கவும் தயாரகும் மனநிலை அவர்களில் உருவாக்குங்கள்.

உறுதியான ஒழுக்கப்பயிற்சி (Firm Discipline)

எல்லாத் துறைகளிலும் பிள்ளைக்கு ஒழுக்கத்தைப் பயிற்றுவிக்க வேண்டும் (Discipline is the training of a child in every area

of life). காலையில் எழுவதுமுதல் – இரவு துயிலுறச் செல்லும் வரையிலான அனைத்திலும் ஒழுக்கம் கற்பிக்கப்படவேண்டும். சுதந்திரமாயிருக்க அனுமதிப்பது ஒழுக்கமின்றி இருப்பதற்காக அல்ல.

இலக்கை நிர்ணயிக்க ஆலோசனை (Goal Setting)

பிள்ளைகளுடைய தனித்துவ திறமைகளைக் கண்டறிந்து அதை வளர்த்துக்கொள்ள உதவுங்கள்; அதற்கேற்ப அவர்களுடைய. வாழ்க்கையின் இலக்கைத் தெரிவு செய்யவும், நிர்ணயிக்கவும் ஆலோசனை கூறுங்கள்.

தன்னம்பிக்கையற்றவர்களும், தாழ்வுமனப்பான்மையுள்ளவர்களும், சோம்பேறிகளும், தோல்வி– கண்டு அஞ்சுகிறவர்களுமே இலக்கைத் தெரிவுசெய்யத் தயங்குகிறவர்கள். இந்தக் கூட்டத்தைச் சேர்ந்த சராசரி மனிதனாக இருக்கக்கூடாது என்பதை உங்கள் பிள்ளைகளின் மனதில் பதியவையுங்கள்.

உங்களுடைய உற்சாகமூட்டுதலே, உங்களுடைய பிள்ளைகளை இலக்கை நோக்கி வழிநடக்கச் செய்யும் உந்து சக்தியாகும் (Motivation).

இப்படிப்பட்ட பிள்ளைகள்தான் பெரும்பாலும் 'எண்ணிய எண்ணியாங்கு எய்துவார்கள்' – வாழ்க்கையில் சாதிப்பார்கள் – வெற்றி முகட்டை எட்டிப் பிடிப்பார்கள்.

உலகை எதிர்கொள்ள பிள்ளைகளை ஆயத்தப்படுத்துங்கள்

பிள்ளைகள் எப்பொழுதும் உங்களையே எல்லாவற்றிற்கும் எதிர்பார்க்கும் நிலையை ஏற்படுத்தாதீர்கள். ஏனென்றால் நீங்கள் எப்பொழுதும் உங்களுடைய பிள்ளைகளுடனே இருக்கப்போவதில்லை. வயது வளரவளர அவர்களாகவே இவ்வுலக வாழ்க்கையை எதிர்கொள்ள அவர்களை ஆயத்தப்படுத்துங்கள்.

பிள்ளைகள், உங்களைவிட்டு மாணவர் விடுதியில் தங்கிப் படிக்கும் நிலை ஏற்படலாம்; அல்லது வேலையினிமித்தமாக வெளியூரிலோ அல்லது வெளிநாட்டிலோ தங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம். ஒருவேளை உங்களுக்குக் கர்த்தருடைய அழைப்புவந்து நிரந்தரமாக அவர்களை விட்டுப் பிரியும் நிலையும் எழலாம்.

அப்பொழுது வாழ்க்கையில் எழும் பிரச்சனைகளை அவர்களே எதிர் கொள்ள வேண்டியதிருக்கும். அவர்கள் இந்த சந்தர்ப்பங்களுக்கு ஆயத்தமாக இல்லையென்றால், வாழ்க்கை அவர்களுக்குச் சுமக்க இயலாத பாரமாகிவிடும். சிலர் உலக வாழ்க்கையை வெறுத்து விபரீத முடிவை நாடுவார்கள்.

கஷ்டத்தை எதிர்கொள்ள அனுமதியுங்கள் / கற்றுக்கொடுங்கள்

1. "வாழ்க்கை கடினமானதுதான், ஆனால் இறைவன் நல்லவர்" என்பதை பிள்ளைகளுக்குக் கற்பியுங்கள் (Life is hard, but God is good).
2. பிரபல ரஷ்ய எழுத்தாளராகிய லியோ டால்ஸ்டாய், "நம்பிக்கையே வாழ்க்கை" என்று கூறினார். இந்த உலகை எதிர்கொள்ள, ஒரு மனிதனுக்குத் தன்னம் பிக்கையும்வேண்டும், இறை நம்பிக்கையும்வேண்டும் என்பதை உங்கள் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுங்கள் (To live a fulfilled life on this earth, a man should have self-confidence and God-faith).
3. "வாழ்க்கையில் அநீதிகள் நிகழலாம், ஆனாலும் இறைவன் அனைத்தின்மேலும் அதிகாரமுள்ளவர்" என்பதைப் புரியவையுங்கள் (Life is unjust, but God is sovereign).
4. இந்த உலகில் கர்த்தருடைய பிள்ளைகளுக்கும் பாடு களுண்டு என்பதைப் பிள்ளைகள் அறிந்திருக்க வேண்டும். **"இதற்காக (பாடுபடுவதற்காக) நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப் போனார்" (1 பேது.2:21)** என்று திருமறை கூறுகிறது.
5. யோசேப்பு தன் சகோதரர்களால் வெறுக்கப்பட்டான்; சிறையில் அடைக்கப்பட்டான்; ஆனால் எகிப்தின் அதிகாரியானான் (ஆதியாகமம் அதிகாரங்கள் 37 முதல் 50 வரைப் பிள்ளைகளை வாசிக்கச் சொல்லுங்கள்).

இவைகளிலிருந்து பிள்ளைகள் கற்றுக்கொள்ளவேண்டிய பாடமென்ன?

வாழ்க்கையில் கஷ்டம் (துன்பம்) என்பது எல்லோரும் அனுபவிப்பது தான்; 'வாழ்க்கையில் நான்மட்டும்தான் கஷ்டப்படு கிறேன் என்றோ அல்லது நான் கஷ்டங்களுக்கு விதிவிலக்கானவன் என்றோ' கருதுவது தவறான கண்ணோட்டம் என்பதைப் பிள்ளைகள் உணர்ந்திருக்கவேண்டும்.

உழைப்பின் முக்கியத்துவத்தைப் பிள்ளைகள் உணர்ந்திருக்கவேண்டும்.

1. இவ்வுலகில் உழைப்பு என்பது இறைவனால் உங்களுக்கு அருளப்பட்ட "அழைப்பு," அது ஒரு அர்த்தமற்ற வேலை யல்ல என்பதைப் குழந்தைகளுக்குக் கற்பியுங்கள் (Work

is a "calling," not a job).மனிதன் உழைக்கவேண்டு மென்பது இறைசித்தம். "நீ பூமிக்குத் திரும்பு மட்டும் உன் முகத்தின் வேர்வை யால் ஆகாரம் புசிப்பாய்" (ஆதி.3:19) என்று கர்த்தர் ஆதாமிடம் கூறும் வார்த்தையில் மனிதன் உழைக்க வேண்டுமென்ற கட்டளை தொனிப்பதைக் கண்டு கொள்ள முடிகிறது பவுலடியார், "உழைக்க விரும்பாதவன் உண்பதற்குத் தகுதி யற்றவன்" (2 தெச.3:10) என்று கூறுகிறார்.

2. உழைப்பில் உயர்வென்றுமில்லை – தாழ்வென்றுமில்லை என்பதையும், எல்லா (வேலையும்) உழைப்பும் புனிதமானது என்பதையும், உழைக்காமல் உண்பதுதான் தவறு என்பதையும் குழந்தைகளுக்கு உணர்த்துங்கள்.

இரவீந்திரநாத் தாகூர், "உழைப்பவனுடைய வேர்வை யில் இறைவன் தெரிகிறான்" என்று நோபல் பரிசு (Nobel Prize) பெற்ற "கீதாஞ்சலி" என்ற நூலில் கூறுகிறார்.

3. தனக்கும், பிறருக்கும் ஊறுவிளைவிக்காததும், பாவத்தை விளைவிக்காததுமான அனைத்துப் பணிகளுமே கர்த்தரிடத்திலிருந்து நாம் பெற்றுக்கொண்டுள்ள பணிகள்தான் என்பதைப் புரியவையுங்கள்.

4. ஒவ்வொருவருக்கும் கர்த்தர் கொடுத்த வெவ்வேறு பணிகளுண்டு. ஆனால் எல்லோருமே தன்தன் வழிகளில் இறைச்சித்தத்தைச் செயல்படுத்துகிறவர்களாக இருக் கிறோம் என்பதைப் பிள்ளைகளுக்கு உணர்த்துங்கள்.

"உடலைக் கசக்கி உதிர்ந்த வியர்வையின்
ஒவ்வொரு துளியிலும் கண்டேன்
இவ்வுல குழைப்பவர்குரிய தென்பதையே"
– பாரதிதாசன்.

5. உழைக்கவேண்டும் என்பது கர்த்தருடைய ஆணை; ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்தவும், காக்கவும் மனுக்குல தகப்பனான ஆதாமுக்குக் கர்த்தர் ஆணையிடு வதை விளக்குங்கள் (ஆதி.2:15).

6. வேலைக்காரர்கள், கபடமின்றி உழைக்கவேண்டுமென்று பவுலடியார் கூறுகிறார் (கொலோ.3:22).

ஆபிரகாம் லிங்கன் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தபொழுது தன்னுடைய ஷூவைப் (Shoe காலணி) பாலிஷ் போட்டுக் கொண்டிருந்தார். அப்பொழுது அங்கு வந்த செனட்டர் (அமெரிக்கப் பாராளுமன்ற உறுப்பினர்) ஒருவர், "மிஸ்டர் பிரசிடெண்ட், உங்கள் ஷூவிற்கு நீங்களா பாலிஷ் போட்டுக்கொள்கிறீர்கள்?' என்று ஆச்சரியமாக வினவினார்.

ஆபிரகாம் லிங்கன் அமைதியாக, "நீங்கள் வேறு யார் ஷூவிற்குப் பாலிஷ் போடுவீர்கள்?" என்று சற்று கேலியாகக் கேட்டார்.

ஆபிரகாம் லிங்கன் உழைப்பின் உன்னதத்தை அறிந்த மேதையாக இருந்தார். எந்தப் பணியும் கேவலமானதல்ல; மனிதன் உழைக்க வேண்டுமென்பது கர்த்தர் மனிதனுக்குக் கொடுத்துள்ள ஆணை; எந்தப் பணியைச் செய்தாலும் கர்த்தருக்குப் பயந்து செய்யுங்கள் (Do what you are; do with the Fear of God).

நிறைவுரை

"அலைகள் இருந்தாலும் – படகு
ஆடித் தவழ்ந்து வரும்.
துயரம் இருந்தாலும் – வாழ்வின்
சுகமும் இணைந்துவரும்" —கவிஞர் கண்ணதாசன்.

வாழ்க்கை என்பது போராட்டங்கள் நிறைந்ததுதான். அந்தப் போராட்டங்களுக்குப் பிள்ளைகளைப் பயிற்றுவிப்பதுதான் பெற்றோர்களின் கடமை. கஷ்டப்படாமல் வாழ்க்கையில் உயர்வில்லை என்பதைப் பிள்ளைகள் உணர்ந்திருக்க வேண்டும். **'If there is no pain, there is no gain'** – என்பதைப் பிள்ளைகளின் மனதில் ஆழமாகப் பதியுங்கள்.

இளம்வயதில் நீங்கள் கொடுக்கும் பயிற்சியைத்தான், பிள்ளைகள் பெரியவர்களான பின்பும் பெரும்பாலும் கடைப் பிடிப்பார்கள். வாழ்க்கையின் ஏற்றத்திலும்–இறக்கத்திலும், வெற்றியிலும் – தோல்வியிலும், மகிழ்ச்சியிலும்–துன்பத்திலும் மனந்தளராது வாழ்க்கையை எதிர்கொள்ள பிள்ளைகளுக்கு இளம் பருவத்திலேயே பயிற்சியளிப்பது பெற்றோர்களின் கடமை.

பிரஞ்சு நாட்டு விஞ்ஞானி **லூயி** பாஸ்டர் (Luious Pasteur) தனது தாய்க்கும், தந்தைக்கும் எழுதிய கடிதத்திலிருக்கும் சில வரிகள் அவருடைய பெற்றோர்களின் வாழ்க்கை, அவருடைய வாழ்க்கையை எப்படி பாதித்திருந்தது என்பதை வெளிப்படுத்துவதாக இருக்கின்றன.

தாய்க்கு எழுதிய கடிதத்தில்:

"அம்மா, உங்களுடைய உற்சாகம் என்னுடைய வாழ்க்கைக்குள் கடந்து வந்துவிட்டது" ("Your eager enthusiasm, mother, passed into my life") என்று எழுதுகிறார்.

தந்தைக்கு எழுதிய கடிதத்தில்:

"உங்களுடைய அற்புதமான பொறுமையையும், கடினமான உழைப்பையும் நான் நன்கு கற்றுக்கொண்டுவிட்டேன்" ("Your

woderful patience and industry I learned well") என்று எழுதுகிறார்.

பவுலடியார், தான் இந்த உலகில், தனது போராட்டமான வாழ்க்கையை எப்படி எதிர்கொண்டு வெற்றி சிறந்தார் என்று தனது ஆவிக்குரிய மகனான தீமோத்தேயுவிற்கு எழுதுகிறார்.

"நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன்; விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்" (2 தீமோ.2:7) என்று எழுதுகிறார்.

உங்கள் பிள்ளைகள், இந்த உலகின் போராட்ட வாழ்க்கையின் மத்தியில், தங்களுடைய ஆவியின் விசுவாசத்தை அணைய விடாமலும், அவியவிடாமலும் பாதுகாத்துக்கொள்ளத்தக்கதாக அவர்கள் தங்களுடைய எதிர்கால வாழ்க்கையை எதிர்கொண்டு வாழ்வதற்கு ஆயத்தப்படுத்துங்கள்.

> "நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும்; கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார்" (சங்கீதம் 34:19).

33

வாலிபர்களுக்குச் சில ஆலோசனைகள்

கர்த்தராகிய ஆண்டவரே, நீரே என் நோக்கமும், என் சிறுவயது தொடங்கி என் நம்பிக்கையுமாயிருக்கிறீர் (சங்கீதம் 71:5).

நான் இன்றைய இளைஞர்களைப் பார்த்து இருவேறு உணர்ச்சிகளை அடைகிறேன். இன்றைய இளைஞர்களின்மேல் பொறாமைப்படுகிறேன்; அதேவேளையில் இன்றைய இளைஞர்களைப் பார்த்து ஆதங்கப்படுகிறேன் (I envy the present generation; at the same time, I pity them).

இன்றைய தலைமுறையில் வாழும் இளைஞர்கள் முன்னேறுவதற்கு, கிடைத்திருக்கிற வாய்ப்பு–வசதிகள் கடந்த தலைமுறையினர்களுக்கு இல்லை. அதே வேளையில், இன்றைய இளைஞர்கள் கெட்டு அழிந்துபோவதற்கு இன்றுள்ள ஏதுக்களும் கடந்த தலைமுறை இளைஞர்களுக்கு இல்லை.

“ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது” என்றும், “தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்” என்று கூறுவார்கள். வருங்கால வாழ்க்கைக்கு ஒவ்வொருவரும் தங்களை இளமையிலேயே தயார்படுத்திக்கொள்ளவேண்டும்.

ஆங்கில எழுத்தாளர் பிரபு செஸ்டர்பீல்டு, “இளமையில் அறிவை உள்ளத்தில் ஊன்றாவிட்டால், முதுமையில் நிழலின்றி தவிக்க நேரிடும்” என்று கூறுகிறார் (If we do not plant knowledge when young, it will give us no shade when we are old — ***Lord Chesterfield***).

I. முன்னேற வாய்ப்பு– வசதிகள்

1. பிள்ளைகள் முன்னேற்றத்தில் பெற்றோர்களின் அக்கறை - (Parental Care)

a. இன்றைய பெற்றோர்கள் பலர் படித்தவர்களாக இருக்கிறார்கள்; அல்லது படிப்பின் அவசியத்தை அறிந்தவர்களாக இருக்கிறார்கள்.

b. படிப்பைக் குறித்துப் பிள்ளைகளிடம் கலந்துரையாடுகிறார்கள். அவர்களுடைய படிப்பைக் கண்காணிக்கிறார்கள்; பிள்ளைகளுக்கு ஆலோசனை கூறுகிறார்கள்.

c. பிள்ளைகளுடைய படிப்பிற்கும் முன்னேற்றத்திற்கும், பொழுதுபோக்கிற்கும் பணம் செலவழிக்க ஆயத்தமாக இருக்கிறார்கள்; பிள்ளைகளுடன் நேரத்தை செலவிடுகிறார்கள். பிள்ளகளுடைய ஆரோக்கியத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

d. முந்தைய சந்ததியில், தந்தை தனது மனைவியிடமும் பிள்ளைகளிடமும் நேரத்தைப் பகிர்ந்துகொள்ளுவதும் பேசுவதும் அரிது; பெரும்பாலும் குடும்பத் தலைவர்களை வீட்டிலேயே பார்க்கமுடியாது. இன்றைய சமுதாய மாற்றங்களால், எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து குடும்பமாக வெளியே (Outings and Tours) செல்கிறார்கள்; வீட்டிலும் கலந்துரையாடுகிறார்கள், ஒருவருக்கொருவர் கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்ளுகிறார்கள்

2. அரசாங்கத்தின் கவனிப்பு - (Govermental Care)

a. இன்றைய நாட்களில் ஏராளமான பள்ளிகள் திறக்கப் பட்டுள்ளன. கிராமங்களில்கூட கல்லூரிகள் திறக்கப் பட்டுள்ளன. பொறியல் கல்லூரிகள் தமிழ்நாட்டில்தான் அதிகமாக இருக்கின்றன. தாராளமான அரசாங்க உதவித்தொகைகள், கட்டாயக் கல்விச்சட்டம் (Compulsory Education). சத்துணவு (Midday-meals). ‘குழந்தைத் தொழிலாளர்கள் தடைச்சட்டம்’ போன்றவைகள் இன்றைய இளைஞர்கள் முன்னேற சாதகமான சூழ்நிலைகளை உருவாக்கியுள்ளன.

b. பெற்றோர்களுக்கு பணவசதியில்லையென்றால், கல்விக் கடன் வழங்குவதற்கு வங்கிகள் தயாராக உள்ளன (Bank Loans for Education).

3. திருச்சபையின் கவனிப்பு - (Church Care)

கிறிஸ்தவ ஆலயங்களில் ஓய்வுநாள் பாடசாலை, வேதபாட வகுப்புகள், வாலிபர் முகாம்கள், ஆண்கள் ஐக்கியம், பெண்கள்

ஐக்கியம், பாடகர்கள் (Choir), பத்திரிக்கைகள் (Christian Magazines), கோடை கால விடுமுறைப் பள்ளிகள் போன்றவை களினால் பிள்ளைகளின் ஆவிக்குரிய வளர்ச்சியில் திருச்சபை கவனம் செலுத்துகிறது – செலுத்தவேண்டும்.

4. காலத்தினால் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் - (Natural Progress in the Passage of Time)

a. எண்ணற்ற ஆங்கில மற்றும் தமிழ் பத்திரிக்கைகள். வாராந்திர மாதாந்திரப் பத்திரிக்கைகள். வானொலி செய்திகள், தொலைக்காட்சி செய்திகள் போன்றவைகள் அறிவை வளர்த்துக்கொள்ள அனுசரணையாக இருக் கின்றன.

b. தினமும் சென்று படிக்க வசதியாகப் போக்குவரத்தில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. கிராமங்களிலும் பஸ் மற்றும் நல்ல சாலை வசதிகள், மின்சார வசதிகள் உள்ளன.

II. பின்னேறச் செய்யும் அபாயங்கள் – ஆபத்துக்கள்

இன்றைய இளைஞர்களுர்கள் கவனத்துடன் வாழ்க்கையை வாழவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள். இன்றைய வாலிபர் களைத் தடம்புரளச் செய்யும் சோதனைகளும், மயக்கங்களும் என்னை மலைக்கச் செய்கின்றன.

இன்றைய அறிவியலின் முன்னேற்றங்களும், அதன் பயன் பாடுகளும் ஆக்கத்தைவிட, அழிவிற்கே அதிக சாதகமாக அமைந்திருக்கின்றன. அறிவியலினால் விளைந்துள்ள தீமைகளே அதிவேகமாக மானிட வர்க்கத்தின் நடைமுறைகளை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன. வக்கிர சிந்தனைகளையும், செயல்களையும் கொண்ட மனிதர்கள் நம்மிடையே பெருகிக்கொண்டிருக்கிறார்கள்.

வீட்டிற்கு வெளியேதான் பிள்ளைகளுக்குக் கெட்டுப்போகக் கூடிய சூழல் உள்ளதென்றும், வீட்டிற்கு வெளியே சென்றால்தான் பிள்ளைகளுக்கு ஆபத்து இருக்கிறது என்றும் கருத ஒருகாலம் இருந்தது.

ஆனால் இன்றைய நிலைமை வேறாக இருக்கிறது? ஒரே வார்த்தையில் கூறுவதாக இருந்தால்: இன்றைய பிள்ளைகள் வீட்டைவிட்டு வெளியேறாமலேயே கெட்டுப்போகலாம்.

1. தொலைக்காட்சிப் பெட்டி (Television)

இன்று தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத வீடே இல்லை என்று கூறலாம். இல்லாத வீடுகளிலும், மாநில அரசின் தேர்தல் வாக்குறுதி யின்படி, இலவச வண்ணத் தொலைக்காட்சி பெட்டிகள் வந்துள்ளன.

இந்நாட்களில் உணவிற்குச் செலவிடுவதுபோலவே பொழுது போக்கிற்கும் செலவழிக்க மக்கள் தயாராக இருக்கிறார்கள். இன்று **TV**, வாழ்க்கையின் ஒரு அம்சமாக, அத்தியாவசியத் தேவைகளி லோன்றாக இருக்கிறது. அதற்குக் கொடுக்கப்பட்டுள்ள மிகவும் பிரபலமான பெயர்: **Idiot Box.** நான் இதற்குக் கொடுக்கும் பெயர்: **Devil in the Drawing Room**. வரவேற்பறையில் பிரதானமாக அமர்ந்திருக்கும் பிசாசு. இப்படிக் கூறுவதால், நான் Television பெட்டிக்கு விரோதியல்ல.

தொலைக்காட்சிப் பெட்டியைத் தூதனாக்குவதும், பிசா சாக்குவதும் வீட்டில் அதைப் பயன்படுத்துவோர்களின் கரங் களிலிருக்கிறது. நேரங்காலமில்லாமல், வேலை வெட்டியில் லாமல் 'மெகா சீரியல்'களைப் பார்த்துக்கொண்டே காலத்தை வீணாக்கிக் கடமைகளில் கவலையீனமாக இருக்கச் செய்யுமளவிற்கு TV உங்கள் வாழ்க்கையில் இடம் பிடித்திருக்குமானால் அது பிசாசன்றி வேறென்ன?

TV-யை அளவோடு பயன்படுத்துங்கள் – முறையாகப் பயன்படுத்துங்கள் – நல்லவைகளுக்காகப் பயன்படுத்துங்கள் – அறிவு வளர்ச்சிக்காகப் பயன்படுத்துங்கள். அப்பொழுது உங்கள் வீட்டில் அது தேவதூதனாக இருக்கும்.

2. திரைப்படம் - (Cinema)

திரைப்படம் மிகப்பிரபலமான பொழுதுபோக்கு சாதனமாக மட்டுமல்ல, மிகசக்தி வாய்ந்த ஊடகமுமாயிருக்கிறது (Major Pastime and Most Powerful Medium). திரைப்படத்தைப் பார்த்துச் சீரழிந்தவர்களும், நடிகனாக–நடிகையாக ஆகும் ஆசையால் வாழ்க்கையைத் தொலைத்துப்போட்டவர்களும் ஏராளம். திரைப் படத்தால் இளைஞர்களின் சக்தியும், பணமும் காலமும் எப்படி விரையமாகிக்கொண்டிருக்கிறது என்பது உங்கள் அனைவருக்கும் தெரிந்ததே.

நடிகர்–நடிகையர்களின், ரசிகர் சங்கங்கள், பொழுதுபோக்கு அம்சத்தையும் தாண்டி அரசியலில் செல்வாக்குப் பெற்றுவருகிறது. இது முதிர்ச்சியற்ற மக்கள் நாட்டில் பெருகிவருவதை எடுத்துரைக்கும் அபாய மணியின் ஓசையாக இருக்கிறது. இந்த நிலை, வளராத மூன்றாம் உலகநாடுகளில்மட்டும் (Third World Countries) நிலவவில்லை, வளர்ந்த நாடுகள் (Developed Countries) என்று சொல்லப்படும் நாடுகளிலும் இதே பரிதாபநிலைதான்.

3. மது – குடி

இன்று மதுக்கடைகள் இல்லாத தெருக்களுமில்லை – ஊருமில்லை. அரசாங்கமே மது வியாபரம் செய்கிறது. மதுவால் பணவிரயமும், உடல்நலக்கேடும் உண்டாகிறது. மது பழக்கத்தால் சமுதாயத்தில் மரியாதை தொலைந்துபோகிறது; குடும்பத்தில்

சண்டை/குழப்பம் ஏற்படுகிறது; குடும்ப முன்னேற்றம் பாதிக்கப் படுகிறது.

4. ஒழுக்கக் கேடு (Immorality)

பாலின ஒழுக்கக் கேடுகள் இன்றய சமுதாயத்தை அழிவின் பாதைக்கு இட்டுச்சென்றுகொண்டிருக்கின்றன. கலாச்சாரச் சீரழிவு இன்றுபோல் என்றும் இருந்ததில்லை. பாலின ஆபாசங்கள் HighTech தொழில் நுட்பங்களுடன் செயல்படுகின்றன. இதில் சிக்கியவர்கள் பெரும்பாலும் மீள்வது சிரமமே. இதனால் சொத்தையும் உடல் நலத்தையும் இழந்து அழிந்தவர்கள் எண்ணிலடங்கார்.

5. போதை மருந்துகள் (Drugs)

ஒரு நாட்டின் மனிதர்கள் அந்த நாட்டின் சக்தியாகக் கருதப் படுகிறார்கள். அதை ‘மனித சக்தி’ (Human Resources) என்று அழைப்பார்கள். ஒரு நாட்டின் மனித சக்தியை அழிப்பதற்காக, வருங்கால சந்ததியைக் கெடுப்பதற்காக எதிரி நாடுகள் போதைப் பொருட்களை அனுப்புகின்றன. இதனால் ஒரு நாட்டின் மனித சக்தி விரையமாகிறது. இதை ஒரு வகையான நிழல் யுத்தம் (Shadow War) என்றுகூடக் கூறலாம்.

சில சமூக விரோதிகள் பணத்திற்காக இக்கொடுமையான தொழிலில் ஈடுபடுகின்றனர். சில தீவிரவாத இயக்கங்கள் (Terrorist Movements) தங்களுடைய இயக்கத்திற்குப் பணம் சேர்ப்பதற்காக போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுகின்றன.

6. தீவிரவாதங்கள்

இன்றைய நாட்களில் தீவிரவாதக் கூட்டதில் சேர்ந்து பலியாகும் இளைஞர்கள் எல்லா மதங்களிலும் பெருகியுள்ளார்கள்.

மூளைச் சலவை (Brain Wash) செய்யப்பட்ட இளைஞர்கள், தாங்கள் என்ன செய்கிறோம் என்பதை அறியாமலே பிறர் உயிரையும் மாய்த்து, தங்களுடைய உயிரையும் மாய்த்துக்கொள்ளுகிறார்கள். மதத்தின் பெயராலும், அரசியல் கட்சிகளின் பெயராலும், ஜாதிகளின் பெயராலும் சுயநலவாதிகள் தங்களுடைய் காரியங்களைச் சாதிக்க இளைஞர்களைப் பகடைக்காய்களாகப் பயன்படுத்துகிறார்கள். சமயங்களில் சரியான போதனை கிடைக்காததால், இளைஞர்கள் தவறான போதனைகளைப் பெற்றுத் தடம்மாறிப்போகிறார்கள்.

பிறரை அழிக்கச் சொல்லி எந்த மதமும் கற்பிக்கவில்லை; அப்படி ஏதாவதொரு சமயம் வன்முறைகளைப் போதிக்குமானால், அது மதமல்ல; அது ‘மதம்’ (If a religion teaches violence, it is not a religion, it is contemptuousness).

7. சமூகவிரோதிகள் – ரௌடிகள்

தங்களை மற்றவர்கள் மதிக்கவேண்டும் அல்லது தங்களுக்கு மற்றவர்கள் பயப்படவேண்டும் என்ற குறுகிய கண்ணோட்டத்தில், தாதாக்கள், ரௌடிகள் கைகளில் சிக்கி இளைஞர்கள் சீரழிந்து போகிறார்கள். *புலி வாலைப் பிடித்த கதையாக* ரௌடிகள் கூட்டத்தில் இருக்கவும் முடியாமல், வெளியேறவும் முடியாமல் திக்கித்திணறிக்கொண்டிருக்கும் இளைஞர்கள் இன்று ஏராளம். ஆரம்பத்திலேயே அத்தகைய தொடர்புகளிலிருந்து ஒதுங்கி, முன்னேற இளைஞர்கள் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

8. தவறான சமயப் பிரச்சாரங்கள்

பணம் சேர்த்து பகட்டான வாழ்க்கை வாழச் சமயத்தைச் சாதனமாகப் பயன்படுத்தும் தலைவர்கள் (ஊழியர்கள்) இன்று எல்லா சமயத்திலும் பெருகிவிட்டார்கள். கிறிஸ்தவ சமயமும் இதற்கு விதிவிலக்கல்ல என்பதுதான் அதிர்ச்சியளிக்கும் பரிதாபமான நிஜம். இவர்களால் கிறிஸ்தவ சமயம் வெளியிலிருப்பவர்களால் ஏளனமாகப் பார்க்கக்கூடிய அவலநிலை ஏற்பட்டுள்ளது.

கிறிஸ்தவ சமயத்தின் பெயரால் சமுக / தேச விரோத செயல் செய்பவர்களிடமிருந்தும், தன்னையும் – தன் குடும்பத்தையும் வளர்த்துக்கொள்ளும் மதவாதிகளிடமிருந்தும் விலகுங்கள்.

இன்னும் பலர் அநாதை இல்லங்கள் நடத்துகிறேன் என்றும், ஆஸ்பத்திரிகள் நடத்துகிறேன் என்றும், ஏழைகளுக்கு உதவுகிறேன் என்றும், கிறிஸ்தவ ஊழியம் செய்கிறேன் என்றும் கூறி வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் வசூல்செய்து, பணங்களைச் சேர்த்து ஆடம்பர வாழ்க்கை வாழ்கிறார்கள்.

'கிறிஸ்தவர்கள்' என்று தங்களைக் கூறிக்கொள்பவர்கள் அனைவருமே கிறிஸ்துவை உடையவர்கள் என்று கருதி ஏமாந்துபோகவேண்டாம். கிறிஸ்தவச் சமயத்தில் உள்ளவர்களெல்லாம் கிறிஸ்துவை உடையவர்கள் அல்ல (All those who are professing Christ are not possessing Christ) என்பதை நன்கு புரிந்துகொள்ளுங்கள்.

கிறிஸ்தவரல்லாதவர்கள், கிறிஸ்துவைக் கிறிஸ்தவர்கள் மூலமாகத் தான் பார்க்கிறார்கள். கிறிஸ்தவர்களல்லாதோர் கிறிஸ்துவைப் பார்க்கக்கூடிய ஜன்னல்கள் கிறிஸ்தவர்கள்தான்; அவர்கள் கிறிஸ்துவை உங்களுடைய வாழ்க்கையின் மூலமாகத் தான் பார்க்கிறார்கள். உங்களுடைய வாழ்க்கைதான் கிறிஸ்துவிற்காக நீங்கள் செய்யும் அமைதியான பிரசங்கம்.

மதத்தின் பெயரால் தவறுகள் செய்பவர்களிடமிருந்தும் – செய்வதிலிருந்தும் விலகியிருங்கள். மதத்தின் பெயரால் தவறு செய்பவர்கள் மதவாதிகள் அல்ல. அவர்கள் மதத்தைப் போர்வையாக

வைத்துக்கொண்டு ஏமாற்றித்திரியும் ஏமாற்றுப் பேர்வழிகள் என்று இனங்கண்டுகொள்ளுங்கள் – அவர்களிடமிருந்து விலகியிருங்கள்.

9. இணையதள ஆபத்துகளையும் பாவங்களையும் தவிருங்கள் (Cyber Space Crimes and Sins)

இன்றைய யுகத்தை Silican Age - சிலிக்கான் யுகம் என்று கூறுகிறார்கள். கணினிகள் மானுட வாழ்க்கையின் திசையையே மாற்றிப்போட்டுவிட்டது. கணினி இல்லாத துறையே இன்றில்லை.

நூலகங்களுக்குச் (Libraries) செல்வதுபோலப் பிள்ளைகள் Browsing Centre–களுக்குச் செல்வது இன்று சர்வசாதாரண விஷயம். பிள்ளைகளின் அறிவு விருத்திக்காகப் பிள்ளைகளுக்குக் கணினி (Computer) வாங்கிக்கொடுக்கும் பெற்றோர்கள் பெருகத் தொடங்கிவிட்டார்கள்.

சில பெற்றோர்கள் அத்துடன் இணையதள தொடர்பையும் (Internet Connection) பெற்றுத்தருகிறார்கள். ‘அதிவேக இணைய தள’ (Broad Band) இணைப்பு வந்தபின், இணையதள இணைப்பு களைப் பயன்படுத்துவோர்கள் எண்ணிக்கை பெருகிவிட்டது. ஆக்கம் – ஆபத்து – அழிவு – உயர்வு எல்லாம் இந்த இடத்தில்தான் ஆரம்பமாகிறது (இதைக்குறித்து 35–ம் அத்தியாயத்தில் விரிவாக எழுதி யுள்ளேன் – படியுங்கள்).

குழந்தைகள் இணையதள வலைகளில் (Web Sites) எவற்றைப் பார்க்கவேண்டும், படிக்கவேண்டும் என்பதற்கான விதிமுறைகளும், பெற்றோர்களுடைய மேற்பார்வைகளும் அவர்களை ஒழுக்கத்தில் வளர்ப்பதற்காக மட்டுமின்றி, அவர்களுடைய பாதுகாப்பிற்காகவும் (Protection) மிகமிக அவசியம் என்பதைப் பிள்ளைகள் புரிந்துகொள்ளவேண்டும்.

III. இன்றைய உலகில் கிறிஸ்தவ இளைஞன் வருங்காலத்திற்குத் தன்னை எப்படித் தயார்படுத்திக் கொள்ளவேண்டும்?

1. வாழ்க்கையின் நோக்கத்தை, அதாவது குறிக்கோளை நிர்ணயுங்கள் (Set Goal for your life)

ஒரு ஊருக்குப் போகவேண்டுமென்றால் அதற்காக எப்படி ஆயத்தப்படுகிறோம்? எந்த பஸ், எந்த ரயில், எந்த விமானம் என்றெல்லாம் தீர்மானிக்கிறோம். ஆனால் எப்பொழுதாவது உங்கள் வாழ்க்கையைக் குறித்து சிந்தித்திருக்கிறீர்களா?

கடலில் வீசப்பட்ட காகிதக் கப்பல்கள் அலையடித்துச் செல்லும் இடங்களுக்கு அடித்துச் செல்லப்படுவதுபோல இவ்வுலகில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

ஒரு விமானமோ அல்லது கப்பலோ எந்த ஊருக்குச் செல்கிறோம் என்பதை அறியாமல் பயணப்படுமா? அப்படிப் பயணப்பட்டால் அதன் நிலைமை என்னவாகும்?

"A man without a goal is like a ship without a rudder" என்று தாமஸ் கரயால் **(Thomas Caryle)** என்ற அறிஞர் கூறுகிறார். அதாவது, "வாழ்க்கையில் இலக்கு (நோக்கம்) இல்லாத மனிதன் சுக்கான் இல்லாத கப்பலைப் போன்றவன்" என்று கூறுகிறார். சுக்கான்தான் படகைத் திசை திருப்பச்செய்யும் சாதனம்.

ஆகையால் உங்கள் வாழ்க்கையின் நோக்கம் என்ன என்பதைத் தீர்மானியுங்கள் (Set Goal for your life. Decide, what you want to become after 10 years or 20 years). அதற்காகப் பாடுபடுங்கள் உழையுங்கள். உங்கள் நோக்கம் சரியாக இருந்தால் ஆண்டவர் கண்டிப்பாக உதவுவார்.

வாழ்க்கையின் இலக்கை, உடனடி இலக்கு (Immediate Goal), குறுகியகால அல்லது நடுத்தரகால இலக்கு (Short term or mid term Goal) நீண்டகால இலக்கு (Long term Goal) என்று மூன்று வகையாகப் பிரிக்கலாம். எடுத்துக்காட்டாக, பரிட்சையில் வெற்றி பெறுதல் உடனடி இலக்கு, MLA ஆவது நடுத்தரகால இலக்கு; மந்திரியாவது நீண்டகால இலக்கு என்று கூறலாம்.

கிறிஸ்தவனுடைய நோக்கங்கள் இறையரசில் இருப்பதாக இருக்கவேண்டும் என்பது சரிதான். ஆனாலும் இந்த உலகில் வாழ்கின்ற காலத்திலும் நோக்கத்துடன் வாழவேண்டும். தடங்கல்கள் வந்தாலும், உங்கள் பார்வை திடமாக உங்கள் நோக்கத்தில் பதிந்திருந்தால் உங்கள் குறிக்கோளை எட்டிப் பிடிப்பீர்கள் என்பதில் ஐயமில்லை.

2. அறிவை வளர்த்துக்கொள்ளுங்கள்.

திருமறை அறிவுடன் உலக அறிவையும் வளர்த்துக்கொள்ளுங்கள். உங்களில் ஒரு சிலர் Toffler என்பவர் எழுதியுள்ள "The Future Shock" என்ற புத்தகத்தைப் படித்திருப்பீர்கள். அவரே "The Power Shift" என்ற புத்தகத்தையும் எழுதியுள்ளார். அதில் அவர் கூறும் பிரதான கருத்து "Knowledge is Power" (அறிவே சக்திவாய்ந்தது) என்பதுதான். அறிவு இருந்தால் அதிகாரமும், பணமும் தானாக வந்து சேரும் என்பதுதான் அவருடைய கருத்து. பணமிருந்தால் அதைப் பெருக்கவும் பாதுகாக்கவும் அறிவுவேண்டும். பதவியிருந்தால் அதைத் தக்கவைத்துக் கொள்ளவும், உயரவும் அறிவுவேண்டும்.

மற்றவர்களைவிட உங்கள் அறிவு மேம்பட்டதாக இருக்க வேண்டும் (You should always rise above the crowd). அறிவு என்று சொல்லும்பொழுது, வகுப்பில் படிக்கும் பாடத்தை மட்டும் நான் குறிப்பிடவில்லை. அதை ஆங்கிலத்தில் Academic Knowledge

என்பார்கள். அது அவசியம்தான். ஆனால் அத்துடன் இறையறிவு அதாவது ஆவிக்குரிய அறிவு, உலகியலறிவு, பொது அறிவு, பொருளாதார அறிவு, வணிக அறிவு என்பனவற்றையும் வளர்த்துக் கொள்ளவேண்டும்.

இன்று நீங்கள் வகுப்பறையில் கற்றுகொண்டிருப்பதற்கும், பின்னால் நீங்கள் வாழ்க்கையில் பயன்படுத்தவிருக்கும் அறிவிற்கும் பெரும்பாலும் சம்பந்தமில்லை. நான் Physics படித்தேன். ஆனால் வங்கி அதிகாரியாக இருந்தேன். ஆகையால் எந்தெந்த வழிகளி லெல்லாம் அறிவைப் பெருக்கிக்கொள்ளலாமோ அந்தந்த வழிகளி லெல்லாம் அறிவைப் பெருக்கிக்கொள்ளுங்கள்.

"அறிவே சக்திவாய்ந்தது" என்பதை மறவாதீர்கள்.

3. ஆளுமையை வளர்த்துக்கொள்ளுங்கள் Improve your personality

ஆளுமை என்பது உடல் சார்ந்தது மட்டுமல்ல. உடல், உள்ளம், உணர்ச்சி, அறிவு யாவையும் உள்ளடக்கியதாகும் (Personality Development means, wholesome development of a person - Physically, Mentally, Emotionally and Intellectually).

உடல் அல்லது முகம் என்பது இறைவன் அருளியது. பிளாஸ்டிக் சர்ஜரி செய்துகொண்டாலும் ஓரளவுதான் மாற்ற இயலும். ஆனால் நமது அறிவை வளர்த்துக்கொள்ளலாம். உணர்ச்சிகளை மென்மை யாக்கலாம்; உள்ளத்தை தூய்மையாக வைத்திருக்கலாம். நமது பண்பை வளர்த்துக்கொள்ளலாம்; நமது நடத்தையை ஒழுக்கமாக வைத்திருக்கலாம். உங்களுடைய வெற்றிக்கு, உங்களுடைய ஆளுமையை வளர்த்துக்கொள்வது இன்றியமையாதது.

4. இறைத் தொடர்புடனிருங்கள்

ஜெபமே ஜெயம். உங்களுக்காக, குடும்பத்திற்காக, மற்றவர் களுக்காக ஜெபியுங்கள். கிறிஸ்தவனுக்குக் கொடுக்கப்பட்டுள்ள மிகப்பெரிய அருட்கொடை ஜெபம் (Prayer is the highest of all our privileges given to us as the followers of Jesus). என்னுடைய நாமத்தினால் எதைக்கேட்டாலும் அதைக்கொடுப்பேன் என்பது இயேசு கிறிஸ்துவின் வாக்குத்தத்தம் (யோவான் 16:24).

ஜெபம்தான் ஒரு கிறிஸ்தவனின் மூச்சுக்காற்று (Prayer is indeed the Christian's vital breath; the Christian's native air) இறைமைந்தன் இயேசுவே இவ்வுலகத்தில் மாம்ச சரீரத்தில் வாழ்ந்தபொழுது இடைவிடாமல் ஜெபித்தாரென்றால், நாம் ஜெபிக்க வேண்டியது எவ்வளவு முக்கியம்!

ஆங்கிலத்தில் ஒரு பழமொழி சொல்வார்கள் The family that prays together, stays together என்பார்கள். அதாவது, "இணைந்து ஜெபிக்கும் குடும்பம், என்றும் இணைந்தே

இருக்கும்." இது முற்றிலும் உண்மையான காரியம். இதை உங்கள் குடும்பத்தில் செயல்படுத்துங்கள். அதன் வல்லமையை நீங்களே அறிந்து கொள்வீர்கள்.

5. உடலை ஆரோக்கியமாக வைத்திருங்கள்

உடல் ஆரோக்கியம் மிகவும் முக்கியம், நல்ல உணவுப் பழக்கங்கள், உடற் பயிற்சிகள் மிகவும் அவசியம். புகழ்பெற்ற பலர் வயதான பிறகுதான் பல சாதனைகளைப் புரிந்திருக்கிறார்கள்.

உடல் ஆரோக்கியமின்றி, நீங்கள் பெரிய அறிவாளியாகவும் பல திறமைகள் உடையவராகவும் இருந்து பிரயோஜனமில்லை. 'சுவரை வைத்துதான் சித்திரம்' என்பார்கள். அதுபோல உங்களுடைய உடல் ஆரோக்கியமாக இருந்தால்தான் சாதிக்கமுடியும்.

ஆங்கிலத்தில் Health is wealth – என்றும், Health is better than wealth - என்றும் கூறுவார்கள். திருமறையும் உங்களுடைய உடலை ஆலயத்திற்கு ஒப்பிடுகிறது (1 கொரி.3:16–19). ஆலயத்தை எப்படி சுத்தமாக வைத்திருக்கிறோமோ அதுபோல நம்முடைய உடலைச் சுத்தமாகவும், ஆரோக்கியமாகவும் வைத்திருக்கவேண்டும்.

6. ஆத்துமாவை ஆரோக்கியமாக வைத்திருங்கள்

உடல் ஆரோக்கியத்தைபோலவே ஆத்தும ஆரோக்கியமும் மிகவும் அவசியமானது. அனுதினமும் திருமறையைப் படியுங்கள். கிறிஸ்தவனுடைய ஆகாரம் அதுதான். கர்த்தர், திருமறை நமது அனுதின பயனுக்காகக் கொடுத்திருக்கிறார்; எப்பொழுதாவது பயன்படுத்துவதற்காக அல்ல (The Bible is bread for daily use, not cake for special occasions).

பல வேளைகளில் கர்த்தர் தன்னுடைய வசனத்தின் மூலமாக நம்மிடம் பேசுவார். இது ஒரு வேடிக்கைபோல் தோன்றலாம். ஆனால் இது உண்மை.

திருமறை வாசித்துவிட்டு, கர்த்தர் பேசுவதற்காக அமைதியாகக் காத்திருங்கள். இளந்தென்றல் உடலை வருடுவதுபோல, ஆண்டவருடைய சத்தத்தை உங்கள் உள்ளத்தில் கேட்பீர்கள். தன்னுடைய ஆடுகள் அவருடைய சத்தத்திற்குச் செவிகொடுப்பதாக (யோவா.10:3) ஆண்டவர் கூறுகிறார். இது உண்மை; பொய்யுரைக்க அவர் மனிதனல்லவே!

7. கீழ்ப்படியுங்கள்

பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் கீழ்ப்படியுங்கள். "இயேசுவும் பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார்" என்று திருமறை கூறுகிறது (லூக்.2:51). விண்ணக இறைமைந்தனாக இருந்த கிறிஸ்து, மனுமைந்தனாக மண்ணகம் வந்து இயேசு என்ற பெயரில் மாம்ச சரீரத்தில் வாழ்ந்தபொழுது, அவர் தனது பூலோகப்

பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிந்தார் என்று திருமறைக் கூறுகிறது. (லூக்.2:51). பவுலடியாரும் பெற்றோர்களுக்குக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறார் (எபே.6:1; கொலோ.3:20).

சட்டங்களும், சம்பிரதாயங்களும் மீறுவதற்காகவே என்ற எண்ணம் இளமைக்காலத்தில் மேலோங்கி நிற்கும் (Laws and customs are there only to break) ஆனால் கிறிஸ்தவ சமயம் இளைஞர்களைக் கீழ்ப்படியச் சொல்கிறது.

இன்று பிள்ளைகளாக இருப்பவர்கள், என்றுமே குழந்தைகளாகவோ அல்லது இளைஞர்களாகவோ இருக்கப்போவதில்லை. அவர்கள் வருங்காலத்தில் பொறுப்புள்ள தலைவர்களாக, அதிகாரிகளாக, திருச்சபை அங்கத்தினர்களாக இருக்கப்போகிறவர்கள். ஆகையால் இளைஞர்கள் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

கீழ்ப்படியத் தெரியாதவனுக்கு, அதிகாரம்செய்ய அருகதையில்லை. கீழ்ப்படிய விரும்பாதவனுக்கு, அதிகாரம் செய்வும் உரிமையில்லை. அவன் தலைமையேற்று நடத்தத் தகுதியற்றவன். ஒரு நாடோ, நிறுவனமோ அல்லது திருச்சபையோ – எதுவாக இருந்தாலும் தான் சார்ந்துள்ள ஸ்தாபனத்தின் சட்டதிட்டங்களுக்கு முதலாவது கீழ்ப்படியவேண்டியன், அதைத் தலைமை ஏற்று நடத்தும் தலைவன்தான். தானே கீழ்ப்படியாத சட்டங்களுக்கு, தனக்குக் கீழுள்ளவர்கள் மட்டும் கீழ்ப்படியவேண்டும் என்று எப்படி எதிர்பார்க்கலாம்? ஆகையால், கீழ்ப்படிதல் மிகவும் அவசியம்.

பவுலடியார், **"பிள்ளைகளே உங்கள் பெற்றோர்களுக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள். இது நியாயம்"** (எபே.6:1) என்றும், **"பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள்; இது கர்த்தருக்குப் பிரியமானது"** (கொலோ.3:20) என்றும் அறிவுரை கூறுகிறார்.

"தந்தைசொல் மிக்க மந்திரமில்லை. தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை" என்பது ஔவையின் வாக்கு (கொன்றை வேந்தன்).

சாலமோன் ஞானியும், **"என் மகனே, உன் தகப்பன் கற்பனையைக் காத்துக்கொள்; உன் தாயின் போதனையைத் தள்ளாதே"** (நீதி.6:20) என்று கூறுகிறார்.

அதற்காக தவறான பாதையில் நடக்கச்செய்யும் பெற்றோர்களுக்குக் கீழ்ப்படியுங்கள் என்று நான் கூறவரவில்லை? பெற்றவர்களானாலும் சரி, மற்ற யாராக இருந்தாலும் சரி, தீயவைகளைச் செய்யத் தூண்டுபவர்கள் எவராக இருந்தாலும் அவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டியதில்லை. ஆணவத்தினாலும், அகம்பாவத்தினாலும் உந்தப்பட்டு நியாயமான, நேர்மையான காரியங்களில், கீழ்ப்படியாதிருக்காதீர்கள் என்றுதான் கூறுகிறேன்.

8. நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுங்கள்

சகோதர சகோதரிகளை, பெற்றோர்களை நாம் தேர்ந்தெடுக்க இயலாது. அவர்கள் இறைவன் அருளியவர்கள். ஆனால் நம் நண்பர்களை நாம் தேர்ந்தெடுக்கலாம்; வேண்டாமென்றால் அவர்களை விட்டுவிடவும் செய்யலாம் **(Sisters and brothers are by chance; but friends are by choice; choose the best).**

ஆங்கில திருமறையில் **நீதி.12:26** இப்படி இருக்கிறது: **A righteous person is cautious in friendship, But the way of the wicked leads them astray** (WEB).

நண்பர்களில், **தற்காலிக நண்பர்கள்** (Temporary Friends), **தெரிந்த நண்பர்கள்** (Informal Friends), **நெருங்கிய நண்பர்கள்** (Close Friends) என்று மூன்றுவகையுண்டு. இதில் இந்த மூன்றாவதான நெருங்கிய நண்பர்கள்தான் நம்முடைய வாழ்க்கையில் – குணத்தில் பாதிப்பை ஏற்படுத்துகிறார்கள் (Most of our characters are influenced by our friends).

எப்படிப்பட்டவர்களை நண்பர்களாக ஏற்றுக்கொள்ளக்கூடாது

i. சோம்பேறியை நண்பனாக ஏற்றுக்கொள்ளாதீர்கள்

அவர்கள் தங்கள் வாழ்க்கையையும் கெடுத்து பிறர் வாழ்க்கையையும் கெடுத்துப்போடுவார்கள். **"சோம்பித் திரியேல்"** என்ற ஔவையின் வார்த்தையை நினைவில் வைத்திருத்தல் நலம்.

ii. முன்கோபக்காரனுக்கு நண்பனாக வேண்டாம்

கோபக்காரனுக்குத் தோழனாகாதே" (நீதி.22:24). "ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு" (Anger is temporary madness). பைத்தியக்காரனிடம் புத்திசாலித்தனமான நடக்கையை எதிர்பார்க்க முடியாது. **"மூர்க்கரோடிணங்கேல்"** என்கிறது ஔவையின் ஆத்திசூடி.

முன்கோபக்காரன் எந்த நேரத்திலும் உங்களுடைய நட்பை முறிப்பான். ஆனால், பின்னால் வருந்துவான்; அதனால் பிரயோஜனம் என்ன?

> **"நூறாண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை**
> **நீர்குட் பாசிபோல் வேர்கொள்ளாதே"** (நறுந்தொகை).

(பொருள்: எத்தனை ஆண்டுகள் நட்புடன் பழகினாலும் முன்கோபக்காரனுடைய நட்பு, நீருக்குள் உள்ள பாசி அடியில் வேர்கொள்ளாதிருப்பதுபோல, வேரூன்றாதிருக்கும்).

iii. நடத்தைக் கெட்டவனை நண்பனாக ஏற்றுக் கொள்ளாதீர்கள்.

ஆங்கிலத்தில், "You tell who is your friend, I will tell about you" என்பார்கள். 'நீ உன் நண்பன் யார் என்று கூறு, நான் உன்னைப் பற்றிக் கூறுகிறேன்' என்பதுதான் அதன் பொருள். அதாவது, நம் நண்பர்களின் ஆதிக்கம் நமது நடத்தையில் இருக்கும் என்பதுதான் அதன் உட்கிடக்கை.

இந்த நட்பு பல சோதனைகளுக்கும் இடர்களுக்கும் காரணியாக இருக்குமானால் இப்படிப்பட்ட நட்பு எதற்காகவேண்டும்?

"மாயக்காரன் தனக்கு அடுத்தவனை (வாயினால்) கெடுக்கிறான்" (நீதி.11:9).

"துன்மார்க்கருடைய ஆலோசனைகள் சூதானவைகள்" (நீதி.12:5).

நடத்தைக்கெட்டவனுடைய நட்பைவிட்டு விலகுங்கள்.

iv. பேராசைக்காரனை நண்பனாக ஏற்றுக்கொள்ளாதீர்கள்.

பேராசைக்காரன் தனது லாபத்திற்காக உங்களை ஏமாற்றவும், காட்டிக்கொடுக்கவும் தயங்கமாட்டான். பேராசை மிகவும் பெரிய பாவம் (Covetousness is a very grave sin).

ஆண்டவர் இயேசு, **"பொருளாசையைக்குறித்து எச்சரிக்கையாக இருங்கள்"** (லூக்.12:15) என்று கூறுகிறார்.

பவுலடியார், **"விக்கிரகாராதனையான பொருளாசையை ...அழித்துப்போடுங்கள்"** (கொலோ.3:5) என்றுரைக்கிறார்.

v. இறைநம்பிக்கையற்றவனை நண்பனாக ஏற்றுக்கொள்ளாதீர்கள்.

"அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக" (2 கொரி.6:14) என்று பவுலடியார் கூறுகிறார். அவர்களால் உங்கள் எண்ணங்களையும் விசுவாசத்தையும் பகிர்ந்துகொள்ள இயலாது. ஒருவேளை அப்படிப்பட்டவர்களுடன் நட்புடன் இருந்தால், உங்களுடைய தாக்கம் அவர்களில் இருக்கவேண்டுமேயொழிய, அவர்களுடைய தாக்கம் உங்களில் மாற்றத்தை ஏற்படுத்திவிடக் கூடாது.

எப்படிப்பட்டவர்களை நண்பர்களாக ஏற்றுக்கொள்ளலாம்?

1. உங்கள்உள்ளத்தில் உற்சாகமூட்டுகிறவர்களை நண்பர்களாக்கிக் கொள்ளுங்கள் (Those Who Stimulate You Mentally).

2. உங்கள் உணர்ச்சிகளுக்கு உரமூட்டுகிறவர்களை நண்பர்களாக்கிக் கொள்ளுங்கள் (Those who support you emotionally).
3. உங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தைப் பலப்படுத்து கிறவர்களை நண்பர்களாக்கிக்கொள்ளுங்கள் (Those who strengthen you spiritually).

9. உறவுகளை மதியுங்கள்

நம்முடைய பெற்றோர்களும், உடன் பிறந்தவர்களும் நாம் தேர்ந்தெடுத்தவர்களல்ல அவர்கள் இறைவனால் நமக்களிக் கப்பட்டவர்கள். அவ்வப்பொழுது விரிசல், உரசல், முரண்பாடுகள் வந்தாலும் கடமைகளிலிருந்தும், அன்பிலிருந்தும் விலகவேண்டாம்.

10. ஆண்டவர் உங்களை வழிநடத்த அனுமதியுங்கள்

உங்கள் வாழ்க்கையைச் செலுத்தும் சாரதியாகக் (ஓட்டுனராக) கர்த்தர் இருக்க அனுமதியுங்கள் (Allow God to be your Pilot). ஆடு மேய்ப்பனிடம் தன்னை ஒப்படைத்து அவன் காட்டிய வழியில் செல்வதுபோல கர்த்தரை நமது மேய்ப்பராக ஏற்றுக்கொண்டு, அவர் காட்டும் வழியில் நடவுங்கள்.

"நீ உன் வாலிபப் பிராயத்தில் உன் சிருஷ்டிகரை நினை" (பிர.12:1) என்று திருமறை கூறுகிறது. தன்னுடைய இளமைக் காலத்தில் தவறாக வாழ்பவனுக்குத் திருமறை எச்சரிப்புக் கொடுக்கிறது.

"வாலிபனே! உன் இளமையிலே சந்தோஷப்படு; உன்னுடைய வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும். உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட; ஆனாலும் இவைகளெல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டுவந்து நிறுத்துவார் என்று அறி. .... இளவயதும் வாலிபமும் மாயையே" (பிர.11:9–10).

நம்முடைய வாழ்க்கையை கர்த்தரிடம் நாம் ஒப்படைத்து வாழும் பொழுது, நமது வாழ்க்கையைக்கொண்டு நாம் சாதிப்பதைவிட, கர்த்தர் நமது வாழ்க்கையைக்கொண்டு நம்மூலமாக அதிகம் சாதிப்பார்.

நிறைவுரை

ஒரு கிறிஸ்தவ இளைஞன் வருங்காலத்திற்குத் தன்னைத் தயார்படுத்திக்கொள்ள என்னென்ன செய்யவேண்டும்?

இந்த இடத்தில் எப்போதோ கேட்ட ஒரு பாடல் நினைவிற்கு வருகிறது.

"நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி,
இந்த நாடேயிருக்குது தம்பி" – என்பது அந்தப்பாட்டின் முதல் இரண்டு வரிகள்.

நல்ல பிள்ளைகளை நம்பி இந்த நாட்டின் எதிர்காலம் மட்டுமல்ல, குடும்பத்தின் எதிர்காலமும், திருச்சபையின் எதிர்காலமும் இருக்கிறது.

காலங்களையும், கற்பனைகளையும் கடந்து விரிந்து கிடக்கும் இப்பிரபஞ்சத்திலே, நீங்கள் உருவாவதற்குப் பன்னெடுங் காலத்திற்கு முன்னதாகவே, இறைவன் உங்களைத் தனிப்பட்ட முறையில் அறிந்து அன்பு செலுத்திக்கொண்டிருக்கிறார். மானுட வரலாற்றின் சரியான காலத்தில், சரியான இடத்தில், சரியான பெற்றோர்களுக்கு, சரியான சரீரத்தை உங்களுக்காகப் படைத்து, அதினுள்ளே தன்னுடைய ஜீவசுவாசத்தை வைத்துள்ளார். நாம் இவ்வுலகில் அவதரிக்குமுன்பே இறைவன் நம்மை அறிந்திருக்கிறார். எத்தனை விந்தையான விஷயம்!

உங்கள் படைப்புக்கு ஒரு நோக்கமுள்ளது. இறைவன் ஒரு நோக்கத் துடனேயே உங்களைப் படைத்திருக்கிறார் என்பதை அறியுங்கள். இறைநோக்கம் உங்களிலே இவ்வுலகில் வெளிப்பட உங்களை இறைச்சித்தத்திற்கு அர்ப்பணியுங்கள்.

வாலிபப் பிள்ளைகள் தங்களுடைய வருங்காலத்திற்காக தங்களிலே வளர்த்துக்கொள்ளவேண்டிய பண்புகள் என்னென்ன?

1. நெருங்கிய – சரியான இறையுறவில் இருங்கள்; அனுதினமும் ஜெபியுங்கள்; ஆண்டவர் உங்களை வழிநடத்த அனுமதியுங்கள்.
2. பிறரிடம் நல்லுறவில் இருங்கள்; பிறையும் உங்களைப் போலவே நேசியுங்கள்.
3. உலக அறிவையும், திருமறை அறிவையும் வளர்த்துக் கொள்ளுங்கள்.
4. விட்டுக்கொடுத்து வாழக்கற்றுக்கொள்ளுங்கள். (காற்றடித்தால் ஆலமரங்கூட சாயலாம்; ஆனால் நாணல் காற்றுக்கேற்ப ஆடி நிமிர்ந்துவிடும்).
5. உண்மை பேசுங்கள்; வாய்மையே வெல்லும்.
6. இறை நம்பிக்கையுடன், தன்னம்பிக்கையும் வளர்த்துக் கொள்ளுங்கள்.
7. கருமமே கண்ணாயிருங்கள்; கடமையுணர்வுடனிருங்கள்.
8. நல்ல நண்பர்களைத் தேர்தெடுத்து நட்புடனிருங்கள். தேவையான அல்லது நெருக்கடியான பல சமயங்களில் சொந்தங்களைவிட நண்பர்களே அதிகமாக உதவு வார்கள்.
9. அகத்தையும் புறத்தையும் தூய்மையாக வைத்திருங்கள்; ஆண்ட ஆத்துமாவை ஆரோக்கியமாக வைத்திருங்கள்; ஆண்ட வரின் ஆலயமான உடலையும் ஆரோக்கியமாக வைத் திருங்கள்.

10. ஏழைகளையும், சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டவர்களையும் இளப்பமாக அல்லது ஏளனமாகக் கருதாமல் இரக்கம் கட்டுங்கள்.
11. பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் கீழ்ப்படியுங்கள்; பெரியவர்களிடமும் மரியாதை காட்டுங்கள்; உங்கள் பேச்சும் செயலும் அடக்கத்துடன் இருக்கட்டும்.
12. தோல்விகண்டு துவளாதீர்கள்; வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்களெல்லாம் தோல்வியைச் சந்திக்காதவர்களல்ல; தளராத மனஉறுதியை வளர்த்துக்கொள்ளுங்கள்.
13. உள்ளொன்று – புறமொன்றுவேண்டாம்; சொல்லிலும் செயலிலும் நேர்மையுடனிருங்கள்.
14. காலந்தவறாமையை (Punctuality) பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள்.
15. பொறுமையாக இருக்கக் கற்றுக்கொள்ளுங்கள்; "பொறுத்தார் பூமியாள்வார்" என்பது தமிழ் பழமொழி.
16. உங்களுக்குக் கொடுக்கப்பட்ட வேலையைப் பொறுப்புடன் செய்யுங்கள். மாணவனாக இருந்தால் கருத்தாய்ப் படியுங்கள்.
17. வாழ்க்கைக்குக் குறிக்கோள்வேண்டுமென்பதை அறிந்து வாழுங்கள்; அக்குறிக்கோள் பிறருக்குத் ஏதாவது தொண்டுசெய்வதாக இருந்தால் நல்லது.
18. ஆளுமையை வளர்த்துக்கொள்ளுங்கள் (Personality Development).
19. மனிதன் கூட்டுறவுடன் வாழவே வடிவமைக்கப் பட்டுள்ளான்; பெற்றோர்களையும், உடன் பிறந்தவர்களையும், மற்றும் நெருங்கிய உறவுகளிடமும் அன்பு செலுத்துங்கள்; அவர்களுடைய கூட்டுறவை மதியுங்கள்.
20. வெற்றியில் அகந்தையும், பதவியில் ஆணவமும் கொள்ளாத மனநிலையை வளர்த்துக்கொள்ளுங்கள்.
21. நீங்கள் எந்த நாட்டில் வசித்தாலும், நீங்கள் வாழும் நாட்டிற்கு விசுவாசத்துடனும், தாய் நாட்டுப்பற்றுடனும் இருங்கள்; வசிக்கும் நாட்டின் சட்டத்தை மதித்து நடங்கள்.

"நீதிமானுடைய தகப்பன் மிகவும் களிகூருவான்; ஞானமுள்ள பிள்ளையைப் பெற்றவன் அவனால் மகிழுவான்" (நீதி.23:24).

கர்த்தரும் நமதாண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்களை வழி நடத்துவதாக.

34

வாகனங்களும் பிள்ளைகளும்

"கர்த்தர் உன் போக்கையும், உன் வரத்தையும் இதுமுதற்கொண்டு என்றென்றைக்கும் காப்பார்" (சங்கீதம் 121:8).

பிள்ளைகளுக்கு பைக், சைக்கிள், கார் வாங்கிக்கொடுக்கும் பெற்றோர்கள் பெருகிவிட்டார்கள். ஆகையால் சாலையில் வாகனங்கள் பெருகிவிட்டன; விபத்துக்களும் அதிகரித்துவிட்டன. இப்பொழுது வாகனங்கள் ஓட்டும் பெண்களும் பெருகிவிட்டார்கள்.

வாலிபர்கள் தங்களுடைய பெண் நண்பிகளையும் (Girl friends), வாலிபப் பெண்கள் தங்களுடைய ஆண் நண்பர்களையும் (Boy friends) பின்னிருக்கையில் அமர்த்தி வீதியை வலம் வரும் போக்கு, முக்கியமாக நகர்ப்புறங்களில், வெகுவாகப் பரவியிருக்கிறது. இந்தச் சூழலில், பிள்ளைகளின் சௌகரியத்திற்காக வாங்கிக்கொடுக்கும் வாகனமே அவர்களின் உயிரைப் பலிவாங்கும் எத்தனமாக மாறிவிடாத படிக்குக் கவனமாக இருத்தல் அவசியமன்றோ?

பைக் அல்லது சைக்கிள் வாங்கிக்கொடுப்பதற்கு முன்னால் பெற்றோர்கள் கருத்தில்கொள்ளவேண்டிய – கடைப்பிடிக்க வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் என்னென்னவென்று காணலாம்.

பெற்றோர்கள் கவனத்திற்கொள்ளவேண்டிய பத்துக் காரியங்கள்

1. 'வாகனம் ஓட்டுவதற்கு உங்களுடைய பிள்ளைக்கு வாகனப் போக்குவரத்துச் சட்டப்படி 18 வயது வந்து விட்டதா?' என்பதை கவனத்தில் கொள்ளுங்கள்.
2. 'பிள்ளைக்குத் தனியாக வாகனம் அவசியந்தானா?' என்று நிதானியுங்கள்.

3. அடுத்த வீட்டுப்பிள்ளைகள் வாகனம் வைத்திருக் கிறார்கள் என்பதற்காகமட்டும் வாகனம் வாங்கிக் கொடுக்காதீர்கள்.
4. உங்கள் பெருமையை நிலைநாட்டுவதற்காக வாகனம் வாங்கிக்கொடுக்காதீர்கள்.
5. 'வாகனத்தை ஓட்டுவதுமட்டுமல்ல, அதை சரியாகப் பராமரிக்கவும் தேவையான முதிர்ச்சி பிள்ளைக்கு இருக்கிறதா?' என்று கவனியுங்கள்.
6. பிள்ளைகள் நச்சரிக்கிறார்கள் என்பதற்காக வாகனம் வாங்கிக்கொடுக்காதீர்கள்.
7. வாகனம் வாங்கிக்கொடுப்பதுடன் செலவு நின்றுவிடுவ தில்லை. 'மாதாமாதம் பெட்ரோலுக்கும், பராமரிப்பிற்கும் ஆகும் செலவை உங்கள் வருமானத்திலிருந்து சந்திக்க இயலுமா?' என்று கணக்கிட்டுப்பாருங்கள். முடியாது என்று கருதினால், நிலைமையை வெளிப்படையாகப் பிள்ளைகளிடம் பேசி வாகனம் வாங்குவதைத் தவிருங்கள், அல்லது தாமதம் செய்யுங்கள்.
8. கல்லூரிக்குச் செல்ல வாகனம் வாங்கிக்கொடுப்பது தவறில்லைதான்; ஆனால் ஊர்சுற்றி, படிப்பைக் கோட்டை விட்டுவிடாதபடி அவர்களைக் கொஞ்சம் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது அவசியம்.
9. மாதம் எத்தனை லிட்டர் பெட்ரோல் செலவழிக்கிறார்கள், எத்தனை கிலோமீட்டர் ஓட்டுகிறார்கள் என்று ஒரு கண் வைத்திருங்கள்.
10. பிள்ளைகள் இரவு நேரங்களில் வாகனம் ஓட்டுவதையும், நெடுஞ்சாலைகளில் (Highways) பயணிப்பதையும் தவிர்ப்பது நல்லது.

பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்கவேண்டிய பத்து முன்னெச்சரிக்கைகள்

1. வாகனங்கள் வாங்கித்தரும் முன்னர் சாலை விதிகளைக் கற்றுக்கொடுங்கள்.
2. சாலைவிதிகளைக் கடைப்பிடிப்பது அவசியம் என்பதை உணர்த்துங்கள்.
3. சைக்கிளைத் தவிர வேறு வாகனங்கள் வாங்கிக் கொடுத்தால், உடனே 'ஓட்டுனர் உரிமம்' (Driving Licence) வாங்கிக்கொடுக்க மறவாதீர்கள். வாகனம் ஓட்டும்பொழுது, Driving Licence, Insurance policy, Vehicle Registration ஆகியவற்றின் xerox copies களை உடன் வைத்திருக்கச் சொல்லுங்கள்.

4. வாகனம் ஓட்டும்பொழுது தலைக் கவசம் (Helmet) அணியவேண்டுமென்று வற்புறுத்துங்கள்.

5. வாகனம் என்பது ஓரிடத்திலிருந்து பிறிதோர் இடத்திற்குச் செல்லும் சாதனம்; அது ஒரு விளையாட்டுப் பொருளல்ல என்பதை உணர்த்துங்கள்.

6. தங்களுக்குத் தெரியாத நபர்களை வாகனத்தின் பின்னிருக்கையில் ஏற்றவேண்டாம் என்பதைச் சொல்லி வையுங்கள். அவர்கள் திருடர்களாகவோ அல்லது காவல் துறையால் தேடப்படும் குற்றவாளிகளாகவோ இருக்கலாம். ஏதாவது விபத்து நேர்ந்து பின்னிருக்கையில் இருப்பவர் மரித்தால் ஏற்றிச்சென்றவர் பலப் பிரச்சனைகளைச் சந்திக்க வேண்டியதிருக்கும்.

7. சாலையில் வண்டியோட்டிச் செல்லும்பொழுது கவனம் சாலையில் இருக்கவேண்டும் என்பதை கற்றுக் கொடுங்கள். சாலையில் வாகனங்களை ஓட்டுபவர் களெல்லாம் சாலைவிதிகளை அறிந்தவர்களாகவோ அல்லது அவற்றை வழுவாது கடைப்பிடிக்கும் உத்தமர் களாகவோ இருப்பார்கள் என்று எதிர்பாக்க முடியாது. ஆகையால் எப்பொழுதுவேண்டுமென்றாலும் ஆபத்து நிகழலாம் என்பதை எதிர்பார்த்தவர்களாகக் கவனத்துடன் ஓட்டுவதுதான் சாலச்சிறந்தது.

8. வாகனம் ஓட்டிக்கொண்டிருக்கும்பொழுது யாராவது அழைத்தால், வாகனத்தைப் பத்திரமான இடத்தில் நிறுத்திய பின்னர்தான் திரும்பிப் பார்க்கவேண்டுமென்று அறிவுறுத் துங்கள்; அதைப் போலவே, போக்குவரத்தி னூடே வாகனத்தில் செல்லும் யாரையும் கூப்பிடக்கூடாது என்பதையும் எடுத்துச் சொல்லுங்கள்.

9. வாகனம் ஓட்டும்பொழுது செல்போனை அணைத் துவைப்பது நலம்; அல்லது பாதுகாப்பான இடத்தில் வண்டியை நிறுத்திய பின்னர்தான் செல்போனை எடுத்துப் பேச ஆரம்பிக்கவேண்டும். வாகனத்தை ஓட்டிக் கொண்டே மொபைல் போனில் பேசுவது, தனக்கு மட்டுமல்ல, சாலையில் செல்லும் மற்றவர்களுக்கும் மிகவும் ஆபத்தானது. இவ்விஷயத்தில் பிள்ளைகளுக்கு கண்டிப்பான கட்டளைகளை இடுங்கள்.

10. ஒவ்வொரு முறையும் வண்டியை எடுக்கும்பொழுது ஜெபித்துவிட்டு Start பண்ணச்சொல்லுங்கள். ஓட்டும்பொழுதும் மனதில் ஜெபிக்கலாம். ஆபத்துக்கள் நிறைந்த இந்த உலகத்தில் அரணான பாதுகாப்பு கர்த்தரேயன்றோ?

உலக வாகன ஓட்டிகளுக்குப் போப்பாண்டவர் (Pope) விடுத்துள்ள பத்துக் கட்டளைகள்.

உலகில் பெருகிவரும் வாகனங்களின் எண்ணிக்கையையும், அதனால் பெருகியுள்ள ஆபத்துக்களையும் கருத்திற்கொண்டு, கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவரான போப்பாண்டவர் விடுத்துள்ள பத்துக் கட்டளைகள், உங்கள் பிள்ளைகள் மட்டுமல்ல உலகத்திலுள்ள அனைத்து வாகன ஓட்டிகளும் கைக்கொள்ள வேண்டிய கட்டளைகளாகும். 21.06.07–ம் தினத்தன்று New Indian Express நாளிதளில் வெளிவந்த அந்தப் பத்துக் கட்டளைகளின் தமிழாக்கத்தை கீழே கொடுத்துள்ளேன். அவற்றைப் படித்து வாகனங்கள் ஓட்டும்பொழுது கைக்கொள்ளுங்கள்.

1. சாலைகளில் வாகனங்கள் ஓட்டும்பொழுது, மற்றவர் களிடம் கனிவாக நடந்துகொள்ளுங்கள் (Thou shalt be charitable to others on hightways).
2. மது அருந்திவிட்டு வாகனங்கள் ஓட்டுவதைக் கண்டிப் பாகத் தவிருங்கள் (Thou shalt refrain from drinking and driving).
3. வாகனத்தை ஓட்ட ஆரம்பிக்குமுன் ஜெபியுங்கள் (Thou shalt pray before buckling up).
4. சாலைப் பயணத்தின்பொழுது மதிமயக்கும் கூடா ஒழுக்கத்தில் ஈடுபடாதீர்கள் (Thou shalt not indulge in prostitution while on the road).
5. வாகனத்தை ஓட்டும்பொழுது பண்பாட்டைக் கடைப் பிடிப்பதில் கட்டுமிராண்டிபோல நடந்துகொள்ளாதீர்கள் (Thou shalt not be culturely 'premitive' while driving).
6. சாலையில் பயணிக்கும் பிற ஓட்டுனர்களிடம் அநாகரிமாக நடந்துகொள்ளாதீர்கள் (Thou shalt not be impolite to the fellow drivers).
7. பயணத்தின்பொழுது பிற ஓட்டுனர்களைச் சபிக்காதீர்கள் (Thou shalt not curse the fellow drivers, while on the road).
8. சாலைப் போக்குவரத்து விதிகளை ஒருபோதும் மீறா தீர்கள் (Thou shalt not violate traffic regulations).
9. வாகனத்தை ஓட்டும்பொழுதுகூட ஜெபித்துக்கொண்டே ஓட்டலாம் (Thou shalt pray whilst behind the wheels).
10. சாலைப் பராயரிப்பைக் காப்பதிலும் பொறுப்புடன் நடந்துகொள்ளுங்கள் (Thou shalt be sensitive so as to maintain road responsibilities).

நிறைவுரை

வாகனம் ஓட்டும் பிள்ளைகளே!

1. வாகனம் எப்படிச் செயல்படுகிறது என்பது பற்றியும், அதனுடைய கட்டுப்பாட்டுக் கருவிகளை எப்படிக் கையாளுவது என்பது பற்றியும் சரியாகப் புரிந்துகொண்டு வண்டியை ஓட்ட ஆரம்பியுங்கள்.
2. எப்பொதும் ஆயத்தமாக இருங்கள்; வாகனம் எப்பொழுது வேண்டுமென்றாலும் பழுதடைந்து நிற்கலாம்; மெக்கானிக் போன் நம்பரை அறிந்து வைத்திருங்கள்.
3. கூடுமானவரைத் தனியாகப் பயணம் செய்வதைத் தவிருங்கள்; ஒருவர் உடன் இருப்பது நல்லது.
4. நீங்கள் செல்லுமிடத்தை வீட்டில் யாராவது அறிந்திருப்பது நல்லது.
5. வாகனத்தை எடுக்குமுன்பு அது ஓட்டும் நிலையில் சரியாக இருக்கிறதா என்று கவனியுங்கள்.
6. வாகனத்தினுள் ஏற்றும் பாரம் எல்லா பக்கமும் சமமாக இருக்கும்படியாகப் பார்த்துக்கொள்ளவேண்டும்.
7. எந்த இடத்திலிருக்கிறோம், எங்கு செல்கிறோம், செல்லும் வழியென்ன என்பதை அறிந்திருங்கள்.
8. மழை நேரத்திலும், பனிமூட்டத்திலும் வாகனங்கள் ஒட்டு வதைத் தவிருங்கள்.
9. இரவுப் பயணத்தையும், தானே ஓட்டிச்செல்லும் தூரப் பயணத்தையும் தவிருங்கள்.
10. வாகனத்தை ஓட்டும்பொழுது மொபைல் போன்களில் பேசாதீர்கள்.

இவ்வுலகில் பிறந்தவர் எவராகினும் என்றாவதொருநாள் மரிக்கத்தான்வேண்டும். ஆனால் பொறுப்பில்லாமலும், கவனக் குறைவுடனும், முட்டாள்ளதனமாவும் நடந்து கர்த்தர் தனக்கு இவ்வுலகில் வாழும்படியாக அருளியுள்ள காலம் முடியுமுன்னரே கல்லறைக்கு விரைவதைத் தவிர்க்கவேண்டியது ஒவ்வொரு வருடைய கடமையல்லவா?

“அழகு ரசிப்பதற்கே,
அறிவு கொடுப்பதற்கே
மனது நினைப்பதற்கே,
வாழ்க்கை வாழ்வதற்கே”

—கவிஞர் கண்ணதாசன்.

நாம் நமது வாழ்க்கையை முழுமையாக நிறைவாக வாழவேண்டு மென்பதே இறைநோக்கம். நம்முடைய மதியீனமான செயல்களினால், காலம் வருமுன்னே கல்லறைக்கு விரைவது வாழ்க்கையின் நோக்கமல்ல; அது இறை சித்தமுமல்ல.

கர்த்தர் நாம் இந்த உலகில் அனுபவிக்கும்படிக்கு அநேக சாதனங்களைக் கிருபையாக அருளியுள்ளார். அவைகளைக் கவனத்துடனும், பொறுப்புடனும் பயன்படுத்தி, கர்த்தர் நமக்கு இவ்வுலகில் வாழும்படிக்குப் பணித்துள்ள பூரண ஆயுளையும் அவருக்கென்றும், அவருக்குள்ளும் கவனத்துடன் வாழுவோமாக.

பிள்ளைகள் வாகனங்களில் செல்லுமிடமெல்லாம் கர்த்தருடைய சமூகம் முன் செல்வதாக. **“உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளை யிடுவார். உன்னுடைய பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உன்னைத் தங்கள் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள்”** (சங்.91:11–12) என்ற வாக்குத்தத்தங்களை நமக்கு என்றென் றைக்கும் அருளப்பட்டுள்ள வாக்குத்தத்தங்களாக மனதில் பதிப் போமாக.

35

கணினியும் பிள்ளைகளும்

வீடு ஞானத்தினால் கட்டப்பட்டு விவேகத்தினாலே நிலைநிறுத்தப்படும். அறிவினாலே அறைகளில் அருமையும், இனிமையுமான சகலவித பொருள்களும் நிறைந்திருக்கும் (நீதிமொழிகள் 24:3,4).

உள்ளபடியே இன்றைய தலைமுறையில் வாழ்ந்துகொண்டிருக்கும் குழந்தைகளுக்காக பரிதபிக்கிறேன். அவர்களைப் பாவத்தில் வீழ்த்துவதற்கும், அவர்களுடைய முன்னேற்றத்தைத் தகர்ப்பதற்கும், அவர்களை நல்வழியிலிருந்து இடறச் செய்வதற்கும் அவர்களைச் சுற்றியுள்ள ஏதுக்கள் ஏராளம். இன்றைய அறிவியலின் பயன் பாடுகள், ஆக்கத்தைவிட, அழிவிற்கே அதிகமாகத் துணைபோவது கவலையளிக்கிறது. அறிவியல் விளைத்துள்ள வக்கிரங்களே மானிட வர்க்கத்தின் நடைமுறைகளைப் பெருவாரியாக ஈர்த்துக் கொண்டிருக்கிறது

வீட்டிலிருந்துகொண்டே கெட்டுப்போகலாம்

அன்றைய நாட்களில் பெண் பிள்ளைகளுக்குக் கட்டுப்பாடுகள் மிக அதிகம். தனியாக எங்கும் அனுப்பமாட்டார்கள்; வாசலில் நிற்கவிடமாட்டார்கள்; அயலாரிடம் பேச அனுமதிக்கமாட்டார்கள். பள்ளிக்கூடம் அனுப்புவது என்றாலும் தக்க துணையுடன்தான் அனுப்புவார்கள்.

ஆண்பிள்ளைகளிடமும் அதிக கட்டுப்பாடுகளை விதித்திருப் பார்கள். வீட்டைவிட்டு வெளியே சென்றால்தான் பிள்ளைகளுக்கு ஆபத்து – கெட்டுப்போவார்கள் என்ற ஒருகாலம் இருந்தது. ஆனால் இன்றைய நிலை அப்படியல்ல.

ஒரே வார்த்தையில் கூறுவதாக இருந்தால்: "உங்கள் பிள்ளைகள் உங்கள் வீட்டுப்படியைத் தாண்டாமலேயே பாவங் கள் அனைத்தையும் செய்யலாம்; வீட்டைவிட்டு வெளி

யேறாமலே கெட்டுப்போகலாம்." இதுதான் இன்றைய அதிர்ச்சி யளிக்கும் நிஜம்.

உங்கள் பிள்ளைகள் தடுமாறி இடறிவிழச்செய்யும் தடுக்கற் கற்கள் இன்று ஏராளம். ஆகவே, இன்றைய இளைய தலைமுறை யினரை வளர்த்துக்கொண்டிருக்கும் பெற்றோர்களுக்குப் பொறுப்புகளும், கண்டிப்புடன்கூடிய கவனமும் மிக அவசியம் தேவை – மிக அதிகம் தேவை.

கணினிகளும், Browsing Centre–களும்

இன்றைய இளைய தலைமுறையினரிடையே கணினியின் ஆதிக்கம் பெருகிவிட்டது. வீட்டில் தொலைபேசி இருப்பதுபோல, கணினியும் குடும்பத்திற்கு அவசியமான பொருளாக மாறிவருகிறது.

வீட்டில் தொலைபேசி வசதி இல்லாதவர்கள், தொலைத் தொடர்பிற்கு பொதுத்தொலைபேசி நிலையத்திற்குச் செல்வதுபோல, உடனடியாக கணினி வாங்க இயலாதவர்கள், Browsing Cenre–களுக்குப் போவது வாடிக்கையாகிவிட்டது.

வசதியுள்ள பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகளுக்குக் கணினியுடன் இணையதள இணைப்பையும் பெற்றுத்தருகிறார்கள். இன்று பல நகரங்களில் – ஏன் கிராமங்களில்கூட – 'அதிவேக இணையதள' (Broad Band) இணைப்பு வசதிகள் வந்துவிட்டன.

கணினி வாங்கிக்கொடுக்கும் பெற்றோர்கள் பலருக்கு அதிலுள்ள ஆபத்துகளை அறியாதிருக்கிறார்கள். கணினியினால் ஆக்கமும், உயர்வும் உள்ளதுபோல, ஆபத்தும், அழிவும் உள்ளது என்பதைப் பெற்றோர்கள் அறிந்திருக்கவேண்டியது அவசியம்.

கணிவாங்கிக் கொடுப்பது தவறு என்று கூற முற்படவில்லை. பெற்றோர்களே! அந்தக் கணினிமேல் ஒரு கண் பதித்திருங்கள் என்றுதான் கூறுகிறேன். எப்படி என்று பார்ப்போமா?

1. கணினி உங்கள் கட்டுப்பாட்டில் இருக்கட்டும்

இன்றைய நாட்களில் தொலைத்தொடர்புத் துறையில் ஏற்பட்டிருக்கும் வளர்ச்சி, நம்மை வியப்பின் விளிம்பிற்கே கொண்டு செல்கிறது. வானொலி, தொலைக்காட்சி, தொலைபேசி, திரைப் படங்கள், நாளிதள்கள், சஞ்சிகைகள், புத்தகங்கள் போன்ற ஊடகங்கள் போன்றே, கணினியின் வாயிலாய் பயன்படுத்தக்கூடிய இணையதளங்களும் மானிடவர்க்கத்தின் வளர்ச்சிக்கும், வீழ்ச்சிக்கும் வித்தாயிருக்கிறது.

A. கணினி யாவருக்கும் பொதுவானது

Browsing Center - களுக்குச் செல்லும் பிள்ளைகளைக் கண்காணிப்பது கடினம்தான். ஆனால் இப்பொழுது காவல்

துறையினரே Browsing Center –களின்மேல் கவனத்தைச் செலுத்திக் கட்டுப்படுத்த ஆரம்பித்துவிட்டார்கள். ஆனால் வீட்டிலுள்ள கணினியைப் பெற்றோர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது அவசியம். 'இது எனது கணினி' என்ற உணர்வினை உங்கள் குழந்தைகளிடம் ஏற்பட ஒருபோதும் அனுமதிக்காதீர்கள். வீட்டில் தொலைபேசி, தொலைக் காட்சி பெட்டி, வானொலிப் பெட்டி போன்றே கணினியும் வீட்டிலுள்ள அனைவரும் பயன்படுத்தும் சாதனமாக இருக்க வேண்டும்.

B. கணினியைப் பயன்படுத்தும் விதிகள்

குழந்தைகள் இணையதள வலைகளில் (Web Sites) எவற்றைப் பார்க்கவேண்டும், படிக்கவேண்டும் என்பதற்கான விதிமுறைகளும், பெற்றோர்களுடைய மேற்பார்வைகளும் அவர்களை ஒழுக்கத்தில் வளர்ப்பதற்காகமட்டுமின்றி, அவர்களுடைய பாதுகாப்பிற்காகவும் (Protection) மிக மிக அவசியம் என்பதைப் பிள்ளைகளுக்கு வெளிப்படையாகவே உணர்த்துங்கள்.

தேசிய அல்லது பெரிய நிறுவனங்களின் பாதுகாப்பான இணையதளங்களில் (Secured Sites) அனுமதியின்றி நுழைந்தால் தண்டனைக்குள்ளாகலாம், ஆபாச இணைய தளங்களில் நுழைந்து விடும் ஆபத்துகள் உண்டு. பணம்பறிக்கும் தளங்களில் நுழைவதால் பணம் பறிபோகும். தவறான நபர்களிடம் இணையதளத்தின் மூலமாக தொடர்புகொண்டு உரையாடுவதால் (Chating) - உறவாடுவதால் ஆபத்துகள் மிக அதிகம்.

C. கணினியும் இரகசியங்களும்

இணையதளங்களில் தெரியாத நபர்களிடம், உங்களை அடையாளம் கண்டுகொள்ளக்கூடிய எந்தத் தகவல்களையும் கொடுப்பது ஆபத்தை வீடு தேடி வரவழைப்பதாகும். உங்களுடைய முகவரிகளையோ, இரகசியங்களையோ, புகைப்படங்களையோ பகிர்ந்துகொள்வது ஆபத்திற்கு வழிவகுக்கும்.

உங்கள் பிள்ளைகள், 'தங்களுடைய பெற்றோர்களுக்குத் தெரியாமல் எந்தவொரு இரகசியமும் தங்களுக்கு இருக்கலாகாது' என்பதைத் திட்டவட்டமாக அறிந்திருக்கவேண்டும். குடும்ப அங்கத்தினர்களுக்குள் எந்த ஒளிவு மறைவும் இருத்தலாகாது.

"இந்த விஷயத்தைப் பெற்றோர்களிடம் சொல்லாதே" என்று சொல்வதற்கு உலகில் யாருக்கும் உரிமையில்லை என்பதைப் பிள்ளைகளுக்குத் தெளிவாகப் புரியவையுங்கள். பிள்ளைகளுக்குத் தெரியாமல் உங்களுக்கும் எந்த இரகசியமும் இருக்கத் தேவையில்லை என்றே நான் கருதுகிறேன்.

D. தனியறையில் கணினியுடன் குழந்தைகள்

பிள்ளைகளுக்குத் தனியறை அளித்திருந்தால் அவ்வப்பொழுது அவர்களுடைய அறையைச் சற்றே நோட்டமிடுங்கள்; அவர்கள் புத்தகங்களைப் புரட்டிப்பாருங்கள்; கணினி அவர்களுடைய அறையிலிருந்தால், இணைய தளத்தில் அவர்கள் எதைப் பார்க்கிறார்கள் என்று கொஞ்சம் கவனியுங்கள்.

பிள்ளைகளை உளவு பாருங்கள் என்று சொல்லவரவில்லை. **பிள்ளைகளின் நடவடிக்கைகளை மேற்பார்ப்பதற்குப் பெற்றோர் களுக்கு உரிமையுண்டு** என்பதைப் பிள்ளைகள் புரிந்துகொள்ளு மளவிற்கு நடந்துகொள்ளுங்கள். சுதந்திரம் என்ற போர்வையில் பிள்ளைகள் கெட்டுப்போகவோ அல்லது பாதை தவறவோ அனுமதிக்க மாட்டீர்கள் என்பதைப் பிள்ளைகள் அறிந்துகொள்ளவேண்டும்.

E. இரகசியச் சொல் (Password)

பெற்றோர்களுக்குத் தெரியாமல் இணையதளங்களில் பிள்ளைகள் யாரும் நுழையக்கூடாது என்ற பொதுவான விதியைக் குடும்பத்தில் அமுல்படுத்தலாம். கட்டுப்பாடின்றி இணையதளத்தைப் பயன்படுத்தினால் தொலைபேசிக் கட்டணம் எகிறிவிடும்.

பிள்ளைகள், உங்கள் அனுமதியின்றி இணையதளத்தைப் பயன்படுத்தாதிருக்க 'இரகசியச் சொல்' (Password) முறையைக் கையாளலாம். இணைய தளத்தைப் படுன்படுத்தவேண்டுமென்று பிள்ளைகள் விரும்பினால், ஏன் – எதற்கு என்று கேளுங்கள். அதில் தவறில்லை. அதன்பின்பு உங்களுடைய 'இரகசியச் சொல்லை' உபயோகித்து இணையதளத்தைத் திறந்துகொடுங்கள். தவறான காரணங்களுகாகக் கணினியைப் பயன்படுத்த முயற்சித்தால் கண்டிப்பாக மறுத்துவிடுங்கள்.

F. கடிதங்களைக் கண்காணியுங்கள்

பிள்ளைகள் தங்களுக்கு வரும் கடிதங்களை (e-mails) தங்களுடைய சகோதர சகோதரிகள் பார்க்கக்கூடாது என்று விரும்பினால் "பயன்படுத்துவோர் இரகசியச் சொல்" (User Pass word) முறையை அனுமதிக்கலாம். ஆனால் உங்களுடைய ஒவ்வொரு பிள்ளைகளும் உபயோகிக்கும் 'இரகசியச் சொல் களையும் (Pass Words) நீங்கள் கண்டிப்பாக அறிந்திருக்கவேண்டும்.

பிள்ளைகளுக்கு வரும் கடிதங்களைப் பார்க்கும் உரிமை பெற்றோர்களுக்குண்டு என்பதைப் பிள்ளைகள் அறித்திருக்க வேண்டும்.

கணினியில் குடும்பத்தினர்கள் அறியக்கூடாத இரகசியங்கள் இருக்கலாகாது – இருக்கவும் கூடாது.

2. கணினியை ஆள்நடமாட்டமுள்ள இடத்தில் வையுங்கள்

நிறைய பெற்றோர்கள், தங்களுடைய பிள்ளைகளைப் பூட்டிய அறைகளுக்குள்ள கணினியைப் பயன்படுத்த அனுமதிக்கிறார்கள். இது மிகவும் தவறு.

A. கணினித் திரையை யாவரும் பார்க்க வசதியாக அமையுங்கள்

கணினியின் திரை (Monitor Screen) வீட்டிலுள்ளவர்கள் யார் வேண்டுமென்றாலும், எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும் தெரியுமாறு இருக்கவேண்டும். அந்த அறையில் யார் அமர்ந் திருந்தாலும் – நடந்து சென்றாலும் கணினித்திரை கண்ணில் படுமாறு வைக்கப்பட்டிருக்கவேண்டும்.

B. தனியறையில் கணினி

கூடுமானவரை தனியான அறையில் கணினியைப் பொருத்த வேண்டாம். வேறுவழியின்றி, பிள்ளைகளின் அறைகளிலேயே கணினி வைக்கப்படவேண்டியதிருந்தால், வாசலிலிருந்து பார்ப் பதற்கு வசதியாக Monitor Screen வாசற்பக்கம் தெரியும்படியாக வைக்கப்படவேண்டும்.

இணையதளத்தைப் பிள்ளைகள் பயன்படுத்திக்கொண்டிருந் தால், அறைக் கதவுகளை கண்டிப்பாக மூடக்கூடாது என்பதில் உறுதியாக இருங்கள். வாசலிலிருந்து பார்த்தால் Monitor Screen தெரியும்படி அமைக்கப்பட்ட கணினியைப் பிள்ளைகள் பயன் படுத்திக்கொண்டிருக்கும்பொழுது அவர்களின் முதுகு வாசலை நோக்கி இருப்பதால், அவர்களைத் தொந்திரவு செய்யாமல், கணினித் திரையைப் பெற்றோர்கள் அவ்வப்பொழுது வாசலி லிருந்தே கண்காணிக்கலாம்.

C. வீட்டில் கணினியைப் பொருத்தும் பொதுவான இடத்தைத் தெரிவு செய்தல்

கணினியை வாங்குவதற்கு முன்னாலும், வாங்கிய பின்பும் அது இடம்மாற்றப்படவேண்டுமென்றாலும், எந்த இடத்தில், எப்படி வைக்கப்படவேண்டுமென்று குடும்பத்தாரிடம் கலந்தாலோசித்து எல்லோருக்கும் பொதுவான இடத்தைத் தெரிவு செய்யுங்கள். கணினி அனைவருக்கும் பொதுவானதாக இருக்கவேண்டும். தொலைக்காட்சி பெட்டிபோல யாரும் பயன்படுத்தும் வகையில் இருக்கவேண்டும். தேவையானால் ஒவ்வொருவரும் தங்களுடைய விஷயங்களைத் சேமித்துவைக்கத் தனியாக ஒரு Folder திறந்து அதில் சேமித்துவைத்துக்கொள்ளலாம்.

3. கணினியை நீங்களும் பயன்படுத்துங்கள்

பெற்றோர்களும் அவ்வப்பொழுது கணினியைப் பயன்படுத்தினால் பிள்ளைகளுடைய ஆர்வம் எந்தெந்த இணைய தளங்களிலிருக்கிறது என்பதை அறிந்துகொள்ளலாம். பிள்ளைகளும் தவறாகக் கணினியைப் பயன்படுத்த அஞ்சுவார்கள். தவறாகப் பயன்படுத்தப்படுவதை அறிந்தால் உடனே கண்டுபிடித்துக் கண்டிக்கலாம் – தண்டிக்கலாம் – ஆலோசனை (Counselling) கொடுக்கலாம்.

A. உரையாடலறைகள் (Chat Rooms)

பெரும்பாலான குற்றங்களுக்கு Chat Rooms –தான் இணையதள குற்றவாளிகளின் (Online Predators) முக்கியமான ஆடுகளமாக இருக்கிறது. உங்களுடைய மேற்பார்வையின்றி, உங்களுடைய குழந்தைகளை Chat Rooms அனுமதிப்பது, திருவிழாக் கூட்டத்தில், குழந்தையைத் தனியாக அலைந்து திரிவதற்கு விட்டுவிடுவதற்கு ஒப்பாகும். குழந்தைகள் தொலைந்து போவதும், சமூக விரோதிகளால் கடத்தப்படுவதும், சீரழிக்கப் படுவதும், இப்படி கவனிப்பாரற்று விட்டுவிடப்பட்ட குழந்தைகள்தான் என்பதை மறவாதீர்கள். இந்த விஷயத்தில் கவலையீனமாக இருந்தால், அதனால் ஏற்பட்டுள்ள ஆபத்தை நீங்கள் அறியவரும் பொழுது எல்லாமே கைமீறிச் சென்றுவிட்டிருக்கும்.

B. விபத்துக்களைத் தவிருங்கள்

நீங்கள் அறைக்குள்ளிருந்து இணையதளத்தை இயக்குவதால் தங்களுடைய செயல் யாருக்கும் தெரியாது என்ற தவறான எண்ணம் பலருக்கு இருக்கிறது. உண்மை அதுவல்ல.

நீங்கள் இணையதளத்தில் நுழைந்தவுடன், நல்ல வெளிச்சத்தில், அதிவேகமாக வாகனங்கள் விரைந்து சென்றுகொண்டிருக்கும் வீதியிலே எல்லோரும் பார்க்கச் சென்றுகொண்டிருக்கின்றீர்கள் என்பதுதான் நிஜம்.

இணையதளத்தில் உங்களுடைய செயல்பாடுகள் அனைத்தும் இரகசியமல்ல; பரசியம் என்பதுதான் உண்மை. எப்படி அறிமுகமில்லாத வீட்டிற்குள்ளோ அல்லது தேவையற்ற கட்டிடத்திற்குள்ளோ நுழையமாட்டீர்களோ, அதுபோல தெரியாத அல்லது அவசிய மில்லாத Website–களுக்குள் நுழையாதீர்கள்.

வீதியில் நடக்கும்பொழுதும், வாகனங்கள் ஓட்டும்பொழுதும் எப்படி சாலைவிதிகளைக் கடைப்பிடித்துச் செல்கிறீர்களோ அதுபோலவே இணையதளத்திற்குள் சுற்றும்பொழுதும் இணையதள விதிகளைக் கடைப்பிடியுங்கள் – கவனமாக இருங்கள். ஆபத்துக் களையும் – விபத்துக்களையும் தவிருங்கள்.

4. அமெரிக்க உளவு நிறுவனத்தின் ஆலோசனைகள்

அமெரிக்க உளவு நிறுவனமான FBI, குழந்தைகள் இணைய தளத்தைப் பயடுன்படுத்துவதற்குப் பெற்றோர்களுக்கு கொடுத்துள்ள ஆலோசனைகளை (Parent's Guide to Internet Safety) மொழிமாற்றம் செய்து தந்துள்ளேன். படியுங்கள்.

1. இணையதளத்தில் உரையாடிய அன்னிய நபரை நேருக்கு நேர் சந்திக்கும் சந்தர்ப்பத்தைத் தவிருங்கள்.
2. தனக்கு அறிமுகமில்லாத இணையதள நபர்களுக்குப் பிள்ளைகள் தங்களுடைய புகைப்படங்களை இணை தளத்தின் வழியாகவோ அல்லது வேறுவகையிலோ கண்டிப்பாக அனுப்பக்கூடாது.
3. இணையதள வலையில் தொடர்புகொண்டு உரையாடும் அன்னியர்களிடம், பிள்ளைகள் தங்களுடைய பெயரையோ, வீட்டு முகவரியேயோ, படிக்கும் பள்ளியையோ, தொலை பேசி எண்ணையோ ஒருபோதும் கொடுக்கக்கூடாது.
4. அறிமுகமில்லாதவர்களிடமிருந்து எந்த புகைப்படத்தையும் – கடிதங்களையும் உங்கள் கணினியில் இறக்காதீர்கள் (Download). அதில் ஆபாச படங்கள் இருக்கலாம் அல்லது வேவு பார்க்கும் மென்பொருள் (Spywares) அத்துடன் இறங்கி உங்களுடைய நடவடிக்கைகளையும், கணினியில் உங்கள் குடும்பத்தினர்கள் சேமித்து வைத்திருக்கும் இரகசியங்களையும் அறிந்துகொள்ளலாம்.
5. அவசியமற்ற அல்லது அறிமுகமில்லாத நபர்களிடமிருந்து இணைய– தளத்தின் வழியாக வரும் செய்திகளுக்கும், விளம்பரங்களுக்கும் பதிலளிக்கக்கூடாது.
6. இணைய தளத்தில் Chat Room-ல் சந்திக்கும் நபர்கள் சொல்லும் செய்திகள் மெய்யாகவும் இருக்கலாம் அல்லது பொய்யாகவும் இருக்கலாம். பெரும்பாலும் அவைகள் மெய்யாக இருப்பதில்லை என்பதே உளவுத்துறையின் அனுபவம்.

அமெரிக்க உளவுத்துறையினரின் ஆலோசனைகளைக் கணினி நிறுவியுள்ள அனைத்து இல்லங்களிலும் சட்டமாக்குவதுதான் சாலச் சிறந்து.

5. பாதுகாப்பு மென்பொருளை நிறுவுங்கள்

குடும்பத்திலுள்ள அனைவருமே சந்தேகத்திற்கிடமான அல்லது அபாயகரமான e-mail, chat room, bulletin board posting, pop-up advertisement, or web link போன்ற தளங்களைத் தவிர்க்கவும், விலகியிருக்கவும் கற்றுக்கொண்டிருக்கவேண்டும். இதுதான் இணையதளத்தின் மிகமுக்கியமான ஒழுக்க விதியாகும் (Most

Important Basic Rule). தேவையற்ற செய்திகளும், விளம்பரங்களும் உங்கள் கணினிக்குள் ஊடுருவிக்கொண்டு நுழைந்து வராதபடி பாதுகாப்புக் கவசமாக அதற்குரிய மென்பொருளை நிறுவுங்கள் (Install Protection and Security Softwares).

நிறைவுரை

கணினி ஒரு கண்ணி. எந்த நேரத்தில் இணையதளத்திற்கு Internet என்று பெயர் வைத்தார்களோ அது இளைஞர்களை கவர்ந்து கெடுக்கும் வலையாகவே (Net – கண்ணி) இருக்கிறது. கணினி இன்றைய இளைஞர்களைத் தடந்தடுமாறிச்செய்து ஆபத்தில் வீழ்த்தும் கண்ணியாக இருக்கிறது.

"எவ்வகைப் பட்சியானாலும் (பறவை) சரி, அதின் கண்களுக்கு முன்பாக வலையை விரிப்பது விருதா" (நீதி.1:17) என்பதை அறிந்த பிசாசானவன், மனிதர்களை இடறச்செய்ய மறைமுகமாக வைத்துள்ள கண்ணியாகக் கணினி இருக்கிறது.

இந்த ஆபத்திற்கு நாமும் நமது பிள்ளைகளும் தப்பித்துக் கொள்ளவேண்டுமானால், நமது சிந்தையும் செயலும் கர்த்தரை நோக்கியதாகவே இருக்கவேண்டும்.

"என் கண்கள் எப்போதும் கர்த்தரை நோக்கிக் கொண்டிருக் கிறது; அவரே என் கால்களை வலைக்கு நீங்கலாக்கி விடு கிறார்" (சங்.25:15).

'இந்த உலகத்தின் அதிபதி' என்று அழைக்கப்படும் பிசாசின் வலைக்குத் தப்பி நமது ஆத்துமாவைக் காத்துக்கொள்ளவேண்டு மானால், மீட்பர் இயேசு கிறிஸ்துவின் மீட்பைப் பெற்றவர்களாக இருக்கவேண்டும். அப்பொழுதுதான், **'கெர்ச்சிக்கிற சிங்கம்போல எவனை விழுங்கலாமென்று வகைதேடிச் சுற்றித்திரிகிற எதிரா ளியாகிய பிசானவனின்'** (1 பேது.5:8) கண்ணிக்குத் தப்பமுடியும்.

"வேடருடைய கண்ணிக்குத் தப்பின குருவியைப்போல நம்முடைய ஆத்துமா தப்பிற்று, கண்ணி தெறித்தது, நாம் தப்பினோம்" (சங்.124:7).

உங்கள் பிள்ளைகள் ஞானத்திலும், அறிவிலும் சிறந்தவர்களாக வீட்டிலும் வெளியிலும் திகழவேண்டும் என்று நீங்கள் ஆர்வம் கொள்வதில் தவறில்லை. ஆனால் இணையதளத்தில் குழந்தை களின் அறிவளர்ச்சிக்கு மட்டுமல்ல ஆபத்திற்கும் வழியுண்டு என்பதையுணர்ந்து பெற்றோர்கள் கவனமாக இருக்கவேண்டும் என்ற ஆதங்கத்தில் இவைகளைக் கூறுகிறேன்.

36

மொபைல் போன்களும் பிள்ளைகளும் (Mobile / Cellular Phones)

உன் உதடுகள் செம்மையானவைகளைப் பேசினால், என் உள்ளந்திரியங்கள் மகிழும்
– (நீதிமொழிகள் 23:16).

இன்று மூலை முடுக்குகளிலெல்லாம் செல்போன்களின் (Cellular Phones) ஆதிக்கம் தலைவிரித்தாடுகிறது. மொபைல் போன்களின் கண்டுபிடிப்பும், அதனுடைய அசுர வளர்ச்சியும், நம்மை வியப்பின் எல்கைக்கே கொண்டு செல்கிறது.

கல்லூரிப் பெண்களிலிருந்து, கழனியில் களையெடுக்கும் அன்றாடங்காச்சிப் பெண்கள்வரைக்கும் செல்போன்களைப் பயன்படுத்துவது சர்வசாதாரணமாகிவிட்டது. நாட்டுத் தலைவர்களி லிருந்து கூலியாள்வரைக்கும் செல்போன்கள் இல்லாதவர்களே இல்லை என்று கருதுமளவிற்கு அதனுடைய தாக்கம் மக்களை ஆக்கிரமித்திருக்கிறது. இந்த அசுர வளர்ச்சி ஆரோக்கியமான வளர்ச்சியா?

இன்று வெளிவந்துகொண்டிருக்கும் வள்ர்ச்சியுற்ற செல் போன்கள் (Advanced Cell Phones) தொலைத்தொடர்புக்கு (Communication) மட்டுமல்ல, பல்முனைகள் கொண்ட சாதனமாகத் (uber device) திகழ்கின்றன; Computer, radio, Digital camera, Audio recorder, Video recorder, Multimedia messaging, Email, Gaming, TV, Documents viewer –போன்ற காரியங்களுக்கும் செல்போன்கள் பயன்படுத்தக்கூடியதாக இருக்கின்றன.

எந்த இடத்திற்குச் சென்றாலும் செல்போன்கள் சிணுங்கும் ஒலிகளும், அதைத் தொடர்ந்து, அருகிலுள்ள யாரைப்பற்றியும் கவலைப்படாமல் வளளவென்று உரையாடிக்கொண்டிருக்கும்

மனிதர்களும் அனுதினமும் வரைமுறையின்றிப் பெருகிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைய நாட்களில், தேவைக்காகப் பயன்படுத்துகிறவர்களைவிட, வீண் ஜம்பத்திற்காக கையில் மொபையிலுடன் அலைபவர்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டிருக்கிறது. செல்போன்களின் ஆக்கிரமிப்பு எதிர்கால சமூகத்தைக் கெடுத்துக்கொண்டிருக்கிறது.

மொபைல்களை உபயோகிப்பவர்கள் அலைகளிலுள்ள ஆபத்துக் களை அறிந்திருக்கிறார்களா?

செல்போனில் பேசுவது ஒரு மனோவியாதியாகிவிட்டது என்ற உண்மை இன்று எத்தனை பேருக்குத் தெரியும்?

செல் டவர்களின் (Cell towers) அருகில் வசிப்பதுகூட ஆபத்தானது என்ற இரகசியத்தை அறிந்தவர்கள் நாட்டில் எத்தனைபேர்கள் இருக்கிறார்கள்?

தினகரன் நாளிதழில் 09.10.2007 அன்று வெளியான செய்தி

செல்போன் உபயோகித்தால் ஏற்படும் அபாயங்களைக் குறித்து ஸ்வீடனைச் சேர்ந்த **"உமேயா மருத்துவப் பல்கலைக் கழகத்தின்"** 11 ஆண்டு ஆராய்ச்சியின் முடிவுகள்:

1. தொடர்ந்து 10 ஆண்டுகள் செல்போனை அதிகம் பயன்படுத்துகிறவர்களுக்குப் புற்றுநோய் வரும் அபாயம் உள்ளது.
2. ஒருநாளைக்கு ஒருமணி நேரம் பேசினாலேயே புற்றுநோய் ஆபத்துண்டு.
3. நீண்டநேரம் செல்போனில் பேசுகிறவர்களுக்கு மூளையில் கட்டி வரும் அபாயம் உள்ளது.
4. குழந்தைகளின் மண்டையோடு பலவீனமானதால், செல்போன் அலைகள் அவர்களுடைய மூளையை எளிதில் பாதிப்படையச் செய்கின்றன; ஆகையால் குழந்தைகள் செல்போனைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவேண்டும்.

ஆபத்துகள்

கதிரியக்கம் (Radiation) என்றாலே காததூரம் ஓடியொளிந்த ஒரு காலமுண்டு; ஆனால் உலக சரித்திரத்தில் முதல் முறையாக இன்றைய காலத்தில்தான் மனிதன் கதிரியக்கமுள்ள சாதனத்தையே தனது உடலோடு ஒட்டிக்கொண்டு திரிகிறான் (This is the first time in human existence that people have wandered around with radiating devices held close to their bodies - Alisdair Phillips, a consultant advisor on electromagnetic fields).

இன்றைய செல்போன் இல்லாத இளைஞனை அல்லது இளைஞியைக் காண்பது அபூர்வம். கல்லூரிக்குப் பீஸ் கட்டவே

தவித்துக்கொண்டிருக்கும் பெற்றோர்களுக்கு இது கூடுலான செலவு. கல்லூரி மாணவர்கள், தங்களுடைய நண்பர்கள் வட்டத்தில் அங்கீகாரம் கிடைப்பதற்காக மொபைல்போன் வைத்திருக்க வேண்டிய கட்டாயத்திற்குள்ளாகிறார்கள்.

ஆரோக்கியக் கேடு

1. கம்பியில்லாத தொலைத்தொடர்பு சாதனங்கள் அனைத்துமே மைகிரோ கதிரியக்கத்தை வெளிப்படுத்துகின்றன (Emit Microwave or Electro Magnetic radiation). அதைப்போலவே wireless Internet, antennas, wireless computers, cordless (portable) phones and their base units, and all other wireless devices அனைத்தும் கதிரியக்கம் உள்ளவைகள்தான். சுருங்கச் சொன்னால் சுவரில் கம்பியின் வழியாக இணைக்கப்பட்டிராத அனைத்து சாதனங்களுமே கதிரியக் கத்தை வெளிபடுத்துகிறவைகள்தான்.

2. செல்போன்கள் போலவே, Cordless Phone-களும் ஆபத்தானவைகளே. முக்கியமாக Wi-Fi systems–ல் செயல்படும் போன்கள் (Cordless Phones) அனைத்தும் சமையல் செய்யும் மின்னடுப்புக்குச் (Micro-oven) சமமாகக் கதிரியக்கம் செய்கின்றன. Cordless Phone-கள் உபயோகத்தில் இருக்கும்பொழுது மட்டுமல்ல, எப்பொழுதுமே கதிரியக்கம் செய்துகொண்டிருக்கிறது (The base units of most cordless phones are always radiating).

3. Cell-phone-களிலிருந்து, ஒரு மின்னடுப்பிற்குச் சமமான வெப்பம், வெளியே வருகிறது (A cell phone, like a microwave oven and unlike a hot shower, heats you from the inside out, not from the outside in).

4. மூளையில் உணர்ச்சிகளைக் காட்டும் நரம்புகள் இல்லையாதலால், செல்போன்களை பயன்படுத்துவோர்கள் எவ்வித எச்சரிப்பின்றித் தங்களையறியாமலே தங்களுடைய மூளை பாதிக்கப்பட அனுமதித்துக்கொண்டிருக்கிறார்கள் (As there are no sensory nerve endings in the brain to warn you of a rise in temperature, it is getting damaged, without any external signs).

5. இதில் இன்னும் பரிதாபமான விஷயம் என்னவென்றால், கதிரியக்கத் தாக்கதால் (Emission of Electro magnetic Radiation) ஏற்படும் வெப்பத்தின் தடங்கள் மூளையின் மேலோ, கபாலத்தின் அடியிலேயோ, மூளையின் ஆழத்திலோ அல்லது மூலகத்தினுள்ளோ தாக்கக்கூடும்

(Hot spots can occur both close to the surface of the skull and deep within the brain, and also on a molecular level). ஆகையால், மூளையில் ஏற்பட்ட பாதிப்பை முளையிலேயே கண்டுபிடிப்பதும் கடினம். செல்போன்களின் உபயோகம் இப்பொழுதுதான் அதிகரிக்கத் துவங்கி இருப்பதால், அதன் பாதிப்பை உடனடியாக உணர இயலா விட்டாலும், இன்னும் பத்துப் பதினைந்து ஆண்டுகளில் மூளை பாதிக்கபட்டவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

6. மூளையில் 'அல்பமின்' (Albumin) இருந்தால், மூளை யிலுள்ள இரத்த நாளங்கள் பழுதடைந்துள்ளது; மூளை தனது பாதுகாப்புப் படலத்தை இழந்துகொண்டிருக்கிறது என்று பொருள். இன்றைய மருத்துவ அறிவியல் வல்லுனர்கள், 18 ஆண்டுகள் ஆராய்ந்து, செல்போன் களின் கதிரியக்கம், மூளையின் திசுக்களில் 'அல்பமினை' உருவாகக் காரணமாக இருக்கிறது என்று கண்டு பிடித்துள்ளனர்.

7. ஒருவர் தொடர்ந்து இரண்டுமணி நேரம் பேசினால் electromagnetic radiation பாதிப்பினால், அவருடைய மூளை நிரந்தரமாக செயலிழக்கும் அபாயம் உள்ளது.

8. பத்து வருடங்கள் ஒருவர் Cell-Phone-யைத் தொடர்ந்து பயன்படுத்தினால் எந்தக் காதில் செல்லை வைத்துப் பேசுகிறாரோ அந்தப் பக்கமுள்ள மூளை பாதிக்கப்படும். அத்துடன் செல்போனிலிருந்து வெளிப்படும் கதிரியக்கம் மரபணுக்களையும் பாதிக்கும் – எலும்புருக்கி நோய் வருவதற்கும் வாய்ப்பு அதிகம் (*The electro-magnetic radiation emitted from cell phones may damage DNA and cause benign brain tumors* - Henry Lai, a bioengineering professor at the University of Washington).

9. நீண்ட ஆராய்ச்சியின் அடிப்படையில், தொடர்ந்து செல்போன் பயன்படுத்துகிறவர்களுக்கு தலைவலி, கவனக்குறைவு (Loss of Concentration), தோல் வியாதிகள் போன்றவைகள் தோன்ற வாய்ப்பிருப்பதாக மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.

10. ஒருசிலர் தங்களுடைய Cell-Phone–களில் உணர்ச்சி பூர்வமாக ஒன்றிக்கிடக்கிறார்கள். Cell-Phone வெளிப் படுத்தும் கதிரியக்கத்தால் அவர்களுடைய மூளை பாதிக்கப்பட்டு மனநோயாளிகளாகிறார்கள் (Some people appear to have an almost pathological emotional attachment to their cell phones; and the cell radiation pulses is addictive to the human brain).

11. மருத்துவ மனைகளில் Cell-Phone–களைப் பயன்படுத்துவது அங்குள்ள நோயாளிகளுக்கு ஆபத்தானது. அங்குள்ள Electronic Rquipment-கள் Cell-Phone–களிலிருந்து வெளிப்படும் Electro Magnetic Radiation–னால் பாதிக்கப்படுகின்றன; தவறான தகவல்களைத் தருகின்றன. அந்தக் கருவிகள் நோயாளியின் உடலில் பொருத்தப்பட்டிருந்தால் நோயாளியின் உயிருக்கே ஆபத்து ஏற்படுகிறது.

12. Heart Beats–யைச் சரிசெய்வதற்காக, இதய அறுவை சிகிச்சை செய்து Phase-Maker கருவி பொருத்தப்பட்டிருப்பவர்கள் Cell-Phone பயன்படுத்துவது ஆபத்தானது; அப்படிப்பட்டவர்களின் அருகிலிருந்துகொண்டு மற்றவர்கள் Cell-Phone பயன்படுத்துவதுகூட ஆபத்தானது.

குழந்தைகளுக்கு ஏற்படக்கூடிய ஆபத்துக்கள்

1. உங்கள் குழந்தைகளிடம் செல்போன்கள் மூலமாக அறிமுகமில்லாத அந்நியர்கள் உரையாடும் வாய்ப்பை நீங்களே உருவாக்கிக் கொடுக்கிறீர்கள்.
2. செல்போன்கள் வழியாக தடைசெய்யப்பட்ட விளம்பரங்கள், செல்போன்கள் வழியாக பிள்ளைகளைச் சென்றடைகின்றன.
3. பாதுகாப்புக் கவசம்போல (Safety blanket) கையில் மோபைல் இருந்தால் எந்த நேரத்திலும், எந்த உதவியையும் பெற்றுக்கொள்ளலாம் என்ற எதிர்பார்ப்பில் அல்லது நம்பிக்கையில் சிக்கலில் மாட்டிக்கொள்ளும் அபாயம் உள்ளது.
4. முக்கியமான தருணங்களில் செல்போன் அழைப்புகள் இடைஞ்சலாக அமைந்து விடுவதுண்டு.
5. குழந்தைகளுக்கு அச்சுறுத்தல்களும், தொல்லைகளும் செல்போன்கள் வழியாக ஏற்பட வாய்ப்புள்ளது.
6. பிறபிள்ளைகளின் செல்போனையோ அல்லது Sim Card–யோ திருடும் சலனம் குழந்தைகளிலே ஏற்படுகிறது.
7. செல்போனை ஒரு அவசியமான தொலைத்தொடர்பு சாதனமாகக் கருதாமல், அதை ஒரு விளையாட்டுப் பொருளாய்க் குழந்தைகள் கருதலாம்.
8. செல்போன் இரகசிய வார்த்தைகளால் பாதுகாக்கப்படக் கூடிய சாதனமல்ல. ஆகையால் செல்போனைத் தவறுதலாக

எங்கேயாவது வைத்துவிட்டால் அல்லது களவுபோனால், மற்றவர்கள் அதில் தாறுமாறாகப் பேசி, செல்போன் கட்டணத்தை எகிறச் செய்துவிடலாம்.

9. செல்போனில் பேசும் குழந்தைகள் தங்களுடைய பள்ளிப் பாடத்தைப் படிக்காமல் அரட்டையடித்துக்கொண்டிருக்கும் மனநோயாளிகளாக மாறும் அபாயமுள்ளது.

10. **எட்டு வயதிற்குட்பட்டவர்களுக்கு தலையிலுள்ள கபால ஓடுகள் முழுமையான வளர்ச்சியுற்றிருப்பதில்லை. ஆகையால் செல்போனை பயன்படுத்தும் சிறுவர்களுக்கு அதனால் அதிக பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.**

11. 'லாஸ் ஏன்சல்ஸ் மற்றும் டென்மார்க் பல்கலைக் கழகங்கள் 13,000–க்கும் அதிகமான நபர்களிடம், 1990–ம் ஆண்டு முதல் நடத்திய ஆய்வின்படி, செல்போனில் ஒருநாளைக்கு இரண்டு–மூன்று தடவைக்குமேல் பேசிய தாய்மார்களின் கருவில் வளர்ந்த குழந்தைகள் உடலாலும், மனதாலும் பாதிப்பிற்குள்ளாயிருப்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது ஏழு வயதிற்குட்பட்ட குழந்தைகள் செல்போனில் பேசுவதால் ஏற்படும் பாதிப்புகள் அதிகமாகவே யுள்ளது ...இது குறித்த ஆய்வுகள் இன்னும் தொடர்கின்றன' **(தினகரன் 21.05.2008).**

Mobile Phone உபயோகிக்க சில Tips

இன்றைய நாட்களில் மொபைல்போன் தவிர்க்க இயலாத அவசிய சாதனமாக ஆகிவிட்டதால், நாம் கடைப்பிடிக்கவேண்டிய சில வழிமுறைகளைப் பார்ப்போம்.

1. உங்கள் செய்திகளும் (Message), உரையாடல்களும் (Conversation) சுருக்கமாக இருக்கட்டும். அநாவசிய பேச்சுகளைத் தவிருங்கள் (Keep calls or texts short). செல்போனை அதிக நேரம் கையாளுவதைத் தவிருங்கள்.

2. அலுவலகத்தில் Ring-tone சத்தத்தைக் குறைத்து வையுங்கள். இலையென்றால் Silent-mode-லோ அல்லது Vibration-னிலோ வையுங்கள்; சுற்றியுள்ளவர்களுக்குத் தொந்தரவு தராமலிருங்கள் (Avoid disrupting people around you).

3. விமானத்தில் செல்லும்பொழுது, செல்போனை அணைத்து விடுங்கள் (Switch off your mobile phone before take off and before landing); விமானம் மேலே எழும்பு கையிலும், இறங்குகையிலும் கண்டிப்பாக செல்போன் அணைக்கப்பட்டிருக்கவேண்டும். இல்லையென்றால்

விமான ஓட்டி (Pilot) தரையிலுள்ள Control Room–முடன் தொடர்புகொள்கையில், தடங்கல் ஏற்படுத்தி, பயணிப் பவர்கள் அனைவருக்கும் ஆபத்தை உருவாக்கிவிடு வீர்கள்.

4. மருத்துவமனைகளிலுள்ள நுட்பமான கருவிகள் செல்போன் அலைகளால் பாதிக்கப்படக்கூடும். எனவே மருத்துவமனைகளில் செல்போன்களை அணைத்து விடுவது நல்லது (Keep the mobile phone switched off).

5. உங்களுடைய செய்திகளை எழுத்தால் அனுப்புவதற்கு செலவு குறைவுதான்; ஆனால் அதிகநேரம் Cell–லைக் கையாளவேண்டும்; Voice Message–ல் குறைந்த நேரமே Cell-லைக் கையாண்டால்போதும்.

6. பத்து வயதுவரைக்கும் Cell-Phone–ஐப் பயன்படுத்த குழந்தைகளை அனுமதிக்காதீர்கள்.

7. வாகனங்கள் ஒட்டும்பொழுது Cell-Phone–ஐ உபயோகிப்பது ஆபத்தானது மட்டுமல்ல, அது சட்டப்படியும் குற்றமாகும் (Both dangerous and illegal). Call வந்தால் அப்போதைக்கு Voice Mail Service-யைப் பயன்படுத்தி விட்டு, சௌகரியமான இடத்தில் / நேரத்தில் வாகனத்தை நிறுத்திவிட்டு சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

8. வாகனங்கள் ஒட்டும்பொழுது உங்கள் கவனத்தை எக்காரணத்தைக்கொண்டும் சிதறவிடக்கூடாது என்பதில் கவனமாக இருங்கள். Cell-லில் பேசிக் கொண்டு வாகனம் ஒட்டுவது, உங்களுக்கு மட்டுமல்ல, சாலையில் செல்லும் மற்றவர்களுக்கும் ஆபத்தானது.

9. மாணவர்களாக இருந்தால் வகுப்பறையில் செல்போனை Silent Mode–ல் வைத்திருக்கவேண்டும் அல்லது அணைத்துவைக்கவேண்டும். செல்போன் ஒரு அவசியப் பொருள், விளையாட்டுப் பொருளல்ல என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

10. அன்னியர்கள் உங்களை செல்போனில் தொடர்பு கொண்டால், பேசுவதைத் தவிருங்கள்; மிரட்டல் செய்திகள் வந்தால், உடனே காவல்துறையைத் தொடர்பு கொள்ளுங்கள்

புகைப் பிடிப்பவர்களுக்கெல்லாம் காசநோய் (Tuberculosis) வருவதில்லை; ஆனால் புகைப்பிடிப்பவர்களுக்கு நுரையீரல் பாதிக்கப்பட்டு காசநோய் வரும் வாய்ப்புக்கள் அதிகமுள்ளதால், விழிப்புணர்ச்சி விளம்பரங்களை அரசாங்கமே கொடுக்கிறது; பொது இடங்களில் புகைப்பதற்கெதிராகத் தடைச்சட்டங்களை இயற்றி

யுள்ளது. அதைப்போலவே செல்போனைப் பயன்படுத்துவோர்களுக்கு மூளையிலுள்ள செல்கள்/திசுக்கள் பாதிக்கப்படும் வாய்ப்புகள் அதிகம் இருப்பதால், மக்கள் மத்தியில் இதைக்குறித்த விழிப்புணர்ச்சி விளம்பரங்களை அரசாங்கமே கொடுக்கவேண்டும்.

நிறைவுரை

அறிவியல் வளர்ச்சியினால் விளைந்துள்ள நன்மைகளுடன், பல ஆபத்துக்களும் உள்ளடங்கியுள்ளன. ஆகையினால் தான் சாலமோன் ஞானி, **"அதிக ஞானத்தினாலே அதிக சலிப்புண்டு; அறிவு பெருத்தவன் நோவு பெருத்தவன்"** (பிர.1:18) என்று கூறுகிறார்.

ஆபத்துக்களைத் தவிர்த்து அல்லது குறைத்து, அறிவியலினால் விளைந்துள்ள நன்மைகளை மட்டும் அனுபவிக்க நாம் ஒவ்வொரு வரும் நம்மைநாமே பழக்கிக்கொள்ளவேண்டும். அந்த வழி முறைகளை நமது குழந்தைகளுக்கும் பயிற்றுவிக்கவேண்டும். **"உத்தமமாய் நடக்கிறவன் பத்திரமாய் நடக்கிறான்"** (நீதி.10:9) என்பது திருமறையின் வாக்கு.

ஆகையால் Mobile Phone–னானாலும், Cordless Phone – னானாலும், வேறு எந்த மின்நுட்ப சாதனங்களானாலும், அவை களைப் பயன்படுத்துவதில் அளவோடு இருங்கள், ஞானமாக நடந்துகொள்ளுங்கள், பாதுகாப்பாக இருங்கள்.

முடிவுரை

"நானும் என் வீட்டாருமோவென்றால்,
கர்த்தரையே சேவிப்போம்"
– யோசுவா 24:15.

அறத்தைத் தமிழர்கள் இரண்டாகப் பிரித்தார்கள்; ஒன்று துறவறம்; மற்றொன்று இல்லறம். இரு அறத்திலும் நல்லறம் இல்லறமே; 'இல்லறமல்லது நல்லறமல்ல' என்பதே தமிழ் சமுதாயம் கொண்டொழுகிய ஒழுக்கம்.

குடும்ப அமைப்பே மானுடத்தின் அனைத்து அமைப்புகளுக்கும் முதுகெலும்பாக இருக்கிறது. குடும்ப அமைப்பின் ஸ்திரமும் (Stability) – ஸ்திரமின்மையும் மனித சமூகத்தின் அனைத்து அமைப்புகளையும் பாதிக்கிறது, அது நாடானாலும் சரி – திருச்சபையானாலும் சரி – வேறு எந்த மானுட அமைப்பானாலும் சரி, குடும்ப அமைப்பின் நிலைத் தன்மையைச் சார்ந்தே ஏற்ற இறக்கம் பெறுகின்றன.

இந்தியக் குடும்பக் கலாச்சாரம் உலகெங்கும் போற்றப்படுகிறது– உயர்வாக மதிக்கப்படுகிறது. கூட்டுக் குடும்பமாக வாழும் இந்தியர்களின் வாழ்க்கைமுறை மேனாட்டவர்களை வியப்படையச் செய்கிறது.

இந்தக் கூட்டுக் குடும்ப கலாச்சாரம் திருமறைக்கு விரோதமானது அல்ல. இந்திய குடும்பத் தலைவனை, இந்திய சொத்துரிமைச் சட்டம் "கூட்டுக் குடும்பத்தின் கர்த்தா" (Kartha of Joint Family) என்று அழைக்கிறது. குடும்பத்தின் பிள்ளைகள் திருமணமான பின்னரும் குடும்ப தலைவனுக்குக் கட்டுப்பட்டிருந்தனர். இந்தக் கூட்டுக் குடும்ப அமைப்பைத் திருமறையில் நோவா, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு போன்ற குடும்பத்தலைவர்களின் (Patriarch) வழிவரும் தொடர்ச்சி தான்.

கணவன் மனைவியும் கூட்டுக் குடும்பமாக ஒரே கூரையின் கீழ் (ஒரே வீட்டில்) இருந்தாலும், அவர்கள் மனசாலும் உடலாலும், உள்ளத்தாலும், உணர்ச்சியாலும் தங்களுடைய பெற்றோர்களிலிருந்து பிரிந்து, "ஒரே மாம்சமாக இசைந்திருக்கவேண்டும்" (எபே.5:31) என்ற இறைவார்த்தைகளைக் கைக்கொள்ளவேண்டும்; திருமறை நெறியைப் பின்பற்றி நடக்கவேண்டும்.

நெறியான குடும்ப வாழ்க்கைமுறையை கைவிட்டுவிட்டு, சோதோம் – கொமோரா போன்ற நகரங்களில், நெறிபிறழ்வான (Perverted) பாலியல் வாழ்க்கை முறைகளில் மக்கள் தடமாறி நடந்ததால்தான், அந்த நகரங்களைக் கர்த்தர் அழித்தார்

இந்தியக் கலாச்சாரச் சிறப்பு

இந்தியக் கலாச்சாரம், இந்திய மக்களின் மனதில் ஆழப்பதிந் துள்ளதாலும், அவைகள் மானுட வாழ்க்கையின் வளர்ச்சிக்கும், ஒழுக்கத்திற்கும் உறுதுணையாக இருப்பதாலும் இந்தியக் கிறிஸ்தவர்கள் இந்தியக் கலாச்சாரத்தைக் கைவிடாதிருக்கிறார்கள். சமயமாற்றத்திலும் கலாச்சாரமாற்றம் நிகழாது பாதுகாக்கப்பட்டு வருவது இந்திய நாட்டில் மட்டுமே நடந்துள்ள அதிசயம்.

சிலவேளைகளில் இந்திய கலாச்சாரம் ஹிந்து கலாச்சாரம் என்று தவறாகக் கருதப்படுகிறது (Sometimes Indian Culture is misconstrude as Hindu Culture). ஆரியர்கள் இந்தியாவிற்கு வந்த பின்னர்தான் இந்திய கலாச்சாரத்திற்குச் சமயமுலாம் பூசப்பட்டு சமய சடங்காச்சாரங்களுடன் இணைக்கப்பட்டது. ஆனால் இந்திய கலாச்சாரம் பண்டைய இந்தியாவிலே வாழ்ந்த நாகரீக சமூதாயத்தின் வழிவந்ததாகும்.

17–ம் நூற்றாண்டில் வாழ்ந்த **தாமஸ் மேன்டன்** (Thomas Manton) என்ற பாதிரியார்:

"சமயம் என்பது முதலாவது குடும்பத்திலிருந்துதான் தோன்றியது; ஆகவேதான் பிசாசு குடும்ப அமைப்பைச் சீர்குலைக்க எத்தனிக்கிறான். (பிசாசு) குடும்பத்தை அழித்து விட்டால், சமுதாயமும் ஏனைய பொதுநல அமைப்புகளும் ஆற்றலோடும், உறுதியோடும் நீண்ட நாட்கள் வளரவும் முடியாது, வாழவும் முடியாது. ஏனென்றால், அனைத்து மானுட அமைப்பு களும் நிகழ்காலத்திற்கும், எதிர்காலத்திற்கும் குடும்ப அமைப்பிலிருந்துதான் ஆற்றலையும், உறுதியையும் பெற்றுக் கொள்ளுகின்றன" ("Religion was first hatched in families, and there the devil seeketh to crush it...If [the devil] can subvert families, other societies and communities will not long flourish and subsist with any power and vigor; for there is the stock from whence they are supplied both for the

present and future" -Thomas Manton, a 17th century minister) என்று கூறுகிறார்.

"ஒரு நல்ல கிறிஸ்தவக் குடும்பம் எப்படி இருக்கவேண்டும்?" என்று பில்லி கிரஹாம் (Billy Graham) கூறுவதைக் கேளுங்கள்:

"குடும்பம் என்பது இறுகிப் பின்னப்பட்ட கூட்டமைப்பாக இருக்கவேண்டும். இல்லம் என்பது முழுமையான பாதுகாப்பு அரணாக இருக்கவேண்டும்; வாழ்க்கைக்கு அடிப்படையான பாடங்களைக் கற்பிக்கும் பள்ளியாக இருக்கவேண்டும்; கர்த்தர் மகிமைப்படும் ஆலயமாக இருக்கவேண்டும்; ஆரோக்கியமான இன்பத்தையளிக்கும் இடமாகவும், மன நிறைவை அனுபவிக்கும் இடமாகவும் இருக்கவேண்டும்" (The family should be a closely knit group. The home should be a self-contained shelter of security; a kind of school where life's basic lessons are taught; and a kind of church where God is honored; a place where wholesome recreation and simple pleasures are enjoyed— Billy Graham) என்று கூறுகிறார்.

மேலை நாட்டில் குடும்ப அமைப்புகள் சிதைந்துகொண்டு வருவது, அந்த நாட்டுச் சமூகநல சிந்தனையாளர்களை அதிர்ச்சியடையச் செய்துள்ளது. மேலை நாடுகளில் ஆபத்தான – ஒழுக்கமற்ற சமுதாயம் உருவாகிக்கொண்டிருக்கிறது. இல்லற வாழ்க்கையை அவர்கள் தேவையற்ற உறவாகக் கருதுகிறார்கள். "திருமணம் என்பது முடிந்துபோன, பயனிழந்த, கைவிடப்பட்ட, இல்லாமற் போகவிருக்கும் விஷயம்" என்று கூறுகிறார்கள் (Marriage is finished, outdated, obsolete and on the way out). மேலை நாட்டுத் தாக்கம் இந்தியாவில் பாதிப்பை ஏற்படுத்தப்போகும் நாட்கள் வெகு தூரத்திலில்லை.

குடும்ப அமைப்பே ஒரு நாட்டின் அமைப்பை நிர்ணயிக்கிறது, ஏனென்றால் ஒரு நாட்டின் அமைப்பை நிர்ணயிக்கிறவர்களின் வாழ்க்கையைக் குடும்பங்களே வடிவமைக்கின்றன (The family shapes the nation because it shapes the lives of those who make the nation).

இல்லற வாழ்க்கைகள் செயலிழப்பதும், குடும்பங்கள் சிதைவதும், திருமண பந்தங்கள் உடைவதும், அந்த சமுதாயத்திற்கு வரவிருக்கும் பேரழிவிற்குக் கட்டியங்கூறும் முன்னறிவிப்புகள்.

குடும்பங்கள் சிதைந்தன – ரோமப் பேரரசு அழிந்தது

ஸ்திரமான குடும்ப அமைப்புக்களைக்கொண்ட சமுதாயமே உறுதியாகவும், நிலையாகவும் திகழும் (A solid family structure is the very foundation of any stable and permanent society). குடும்ப அமைப்பு அழிந்தால், சமுதாய அமைப்புகள் எப்படி அழிந்துபோகும் என்பதற்கு ரோம சாம்ராஜ்யமே பெரிய உதாரணமாக இருக்கிறது.

1788–ம் ஆண்டு Edward Gibbon என்ற ரோம வரலாற்று ஆசிரியர் வெளியிட்ட தன்னுடைய "Decline and Fall of the Roman Empire" என்ற வரலாற்று நூலில், ரோமப் பேரரசு ஏன் அழிந்தது என்பதற்கு ஐந்து காரணங்களைக் கூறுகிறார்.

1. மனித சமுதாய உறவுகளின் அடிப்படை அம்சமான குடும்ப உறவின் கௌரவத்தையும், தூய்மையையும் துச்சமாகக் கருதி நடந்துகொண்டது.

2. அதிகதிகமாக வரிவிதித்து அரசாங்கப் பணத்தில் இலவச உணவும், சர்க்கஸ் போன்ற கேளிக்கைகளிலும் பணத்தை விரையம் செய்தது.

3. களியாட்டங்களில் வெறிகொண்டு, ஆண்டுதோறும் கிளர்ச்சி யூட்டுவதும், கொடூரம் நிறைந்ததும், ஒழுக்கக் கேடானதுமான பொழுதுபோக்குகளில் காலத்தை விரையம் செய்துகொண்டி ருந்தது.

4. ஆட்சியில், பொறுப்பற்றவர்களும் சுயநலக்காரர்களும் நிறைந்திருந்தார்கள். நாட்டின் இப்படிப்பட்ட உள்வீட்டு எதிரிகளை வைத்துக்கொண்டு, வெளி எதிரிகளிடமிருந்து தங்களைப் பாதுகாக்க பெரும்படையை திரட்டி அதை நிர்வகித்துக்கொண்டிருந்தார்கள்.

5. சமயங்கள் நலிவுற்றிருந்தன – ஒரு சம்பிரதாயத்திற்காகத்தான் சமயம் இருந்தது; சமயம் அவர்களுடைய வாழ்கையுடன் பிணைந்திருக்கவுமில்லை, அவர்களுக்கு வழிகாட்டுவ தாகவும் இருக்கவில்லை.

கிப்சன் கூறிய ஐந்து காரணங்களும் குடும்பத்தின் அழிவிற்கும், திருச்சபையின் வீழ்ச்சிக்கும் பொருந்தும். திருச்சபை என்பது கிறிஸ்தவ விசுவாசிகளின் "அகன்ற குடும்பம்" (Church is the an enlarged family of believers).

மேற்கூறிய ஐந்து காரணங்களுமே நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ குடும்பத்துடனும் திருச்சபையுடனும் சம்பந்தப் பட்டவைகளே. ஆகையால் கிறிஸ்தவக் குடும்பங்களும் திருச் சபையும் இந்த ஐந்த காரணங்களையும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டியது அவசியம்.

குடும்பமும் ஒரு சாம்ராஜ்யம்தான். பாரபட்சமின்றிச் சிந்திக்கும் கிறிஸ்தவர்கள், இன்றைய குடும்பங்களின் நிலைக்கும், திருச்சபை களின் நிலைக்கும் அன்றைய ரோமப் பேரரசின் நிலைக்கும் அதிக வேறுபாடுகள் இல்லை என்பதை ஏற்றுக்கொள்வார்கள். இந்த ஐந்து காரணங்களும், சாம்ராஜ்யத்தை மட்டுமல்ல, குடும்பத்தையும் சிதைத்துவிடும்.

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ரொனால்டு ரீகன் ஒரு பேட்டியில், "குடும்ப அமைப்பை அடிப்படையாகக் கொண்டிராமல் ஒரு நாடு வலுவாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கும் என்பதில் எனக்கு நம்பிக்கையில்லை. குடும்பங்கள் எதை நோக்கிச் செல்கின்றனவோ, அதை நோக்கியே நாடும் செல்கிறது" என்று கூறினார் ("I don't believe you can have a strong, healthy nation without the family unit as its very base. As the family goes, so goes the nation" -*by* Ronald Reagan Former President of USA).

இக்கூற்று உண்மைதானே!

கர்த்தரையே சேவிப்போம்

மோசேயின் காலத்திற்குப் பின்னர் இஸ்ரவேலின் தலைமைப் பொறுப்பை ஏற்ற யோசுவா, **"நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம்"** (யோசு.24:12) எனக் கூறும் கூற்றில் மெய்யான பக்தியும், உண்மையான விசுவாசமும், தீர்க்கமான தீர்மானமும், தெளிவான தொலைநோக்குப் பார்வையும் தெரிகிறது. நாட்டின் தலைவனாக இருந்தாலும், தனது வீட்டாரை இறைப்பற்றிலும், இறையச்சத்திலும் தன்னோடு இணைத்து – அணைத்துச் செல்லவேண்டும் என்ற பொறுப்பான குடும்பத் தலைவனை யோசுவாவிடம் காண்கிறோம்.

உங்கள் குடும்பத்தின் நிலை என்ன?

உங்கள் குடும்பம் கிறிஸ்து என்னும் கற்பாறையின்மேல் கட்டப்பட்ட குடும்பமாக இருக்கிறதா?

உங்கள் குடும்பம், உங்களைச் சுற்றியுள்ளவர்களை கிறிஸ்து வண்டை வழிநடத்தும் கலங்கரை விளக்காக இருக்கிறதா?

உங்கள் குடும்பத்தின் பிள்ளைகள் எங்கு சென்றாலும் – எதைச் செய்தாலும், அவர்கள் தங்களுடைய நல்நடக்கையினாலும், தங்களுடைய நற்கிரியைகளினாலும் பரலோகத்திலுள்ள கர்த்தரின் நாமம் மகிமைப்படும்படியாகப் பிரகாசிக்கிறார்களா?

உங்களுடைய குடும்பங்களை மற்றவர்களுடைய குடும்பங் களுடன் ஒப்பீடு செய்யாதீர்கள் – பெருமை கொள்ளாதீர்கள். யார் எப்படியிருந்தாலும் சரி **"நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம்"** என்ற வார்த்தையில் உறுதியாக நிலைத்திருங்கள் அப்போது உங்களுடைய குடும்பம் இவ்வுலகில் வாழ்ந்தாலும், உங்கள் வீடு பரலோகமாக இருக்கும்; உங்கள் வீட்டின் பிள்ளைகள் மோட்சத்தின் சிலாக்கியங்களை இப்போதே ருசிப்பார்கள் – அனுபவிப்பார்கள். உங்கள் குடும்பம் மற்றவர் களுக்குச் சாட்சியான குடும்பமாக இருக்கும்.

நிறைவுரை

எந்த ஒரு "வீடும் ஞானத்தினால் கட்டப்பட்டு, விவேகத்தினால் நிலை நிறுத்தப்படும்" (நீதி.24:3) என்று திருமறை கூறுகிறது.

"விவேகம்" (அறிவு – புத்திகூர்மை) என்றால் என்ன?

இதற்குப் பதிலையும் திருமறையே நல்கியுள்ளது.

"கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்" (நீதி.1:7). மற்றொரு திருமறைப் பகுதியில், இத்துடன், "பரிசுத்தரின் அறிவே (விவேகமே) அறிவு (விவேகம்)" (நீதி.9:10) என்று கூறுகிறது.

ஆகையால் "எந்த வீடும் ஒருவனால் உண்டாக்கப்படும்; எல்லாவற்றையும் உண்டுபண்ணினவர் தேவன்" (எபி.3:4) என்ற தெளிவான சிந்தையுடன் குடும்பத்தை வழிநடத்துங்கள்.

"பரலோகத்திலும், பூலோகத்திலுமுள்ள முழு குடும்பத்துக்கும் நாமகரணராகிய நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால்படியிட்டு" (எபே.3:14–15) அனுதினமும் உங்கள் குடும்பத்திற்காக ஜெபியுங்கள்.

பவுலடியார் திருச்சபைக்கு கூறும் அறிவுரை குடும்பத்திற்கும் சாலப்பொருத்தமானதே. "நமக்கு ஒரே சரீரத்திலே அநேக அவயவங்களிருந்தும், எல்லா அவயங்களுக்கும் ஒரே தொழில் இராததுபோல, அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம்" (ரோம.12:4–5).

ஒரு நல்ல கிறிஸ்தவ இல்லத்தில் கடைப்பிடிக்கும் விதிகள் என்னென்ன என்று Gregg Harris என்பவர் ஆங்கிலத்தில் எழுதியுள்ளதை மொழிமாற்றம் செய்துகொடுத்துள்ளேன். படித்துக் கடைப்பிடியுங்கள்.

எங்கள் குடும்பத்தில்:

1. நாங்கள் நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிற்குக் கீழ்படிகிறோம்
2. நாங்கள் ஒருவரிடமோருவர் அன்பு செலுத்துகிறோம்,
3. நாங்கள் ஒருவரையொருவர் மதிக்கிறோம்,
4. நாங்கள் ஒருவருக்கொருவர் ஜெபிக்கிறோம்
5. நாங்கள் எப்பொழுதும் உண்மை பேசுகிறோம்.
6. நாங்கள் தன்னலத்திற்கு மேலாக பிறர்நலனில் அக்கறை காட்டுகிறோம்.
7. நாங்கள் ஒருவரிடமோருவர் அமைதியாகவும், மரியாதையாகவும் பேசுகிறோம்.

8. நாங்கள் தகாத வார்த்தைகள் பேசியோ அல்லது தகாத வார்த்தைகளைக் கூறியோ ஒருவரையொருவர் புண்படுத்துவதில்லை.

9. எங்களில் யாரையாவது திருத்தவேண்டியதிருந்தால், அன்புடன் திருத்துகிறோம்.

10. எங்களில் யாராவது தங்களுடைய சொல்லுக்கோ அல்லது செயலுக்கோ வருந்தினால் மன்னித்துவிடுகிறோம்.

11. எங்களில் யாராவது வருத்தத்தில் இருந்தால் ஆறுதல் கூறுகிறோம்.

12. எங்களில் யாராவது மகிழ்ச்சியடைந்தால், அவர்களுடன் சேர்ந்து நாங்களும் மகிழ்ச்சியடைகிறோம்.

13. எங்களில் யாராவது பகிர்ந்துகொள்ளக்கூடிய அருமையான விஷயங்கள் வைத்திருந்தால் பகிர்ந்துகொள்ளுகிறோம்.

14. நாங்கள் வீட்டு வேலைகளைச் செய்யும்பொழுது, முணுமுணுத்துக்கொண்டு செய்வதில்லை.

15. எங்களுக்குக் கர்த்தர் கொடுத்துள்ள யாவற்றையும் கவனத்துடன் பாதுகாக்கிறோம்.

16. நாங்கள் ஒருவருக்கொருவர் தேவையற்ற வேலைகளைத் தருவதில்லை.

17. வீட்டிலுள்ள எதையாவது நாங்கள் திறந்தால், நாங்களே அதை மூடிவிடுகிறோம்.

18. நாங்கள் (Fan, Light) எதையாவது போட்டால் நாங்களே அணைத்து விடுகிறோம்.

19. நாங்கள் எதையாவது எடுத்தால், அதை எடுத்த இடத்தில் வைக்கிறோம்.

20. நாங்கள் எதையாவது கலைத்தாலோ, சிந்தினாலோ நாங்களே சரிசெய்கிறோம் – சுத்தம் செய்கிறோம்.

21. எங்களுக்கு எதாவது தெரியவில்லையென்றால் மற்றவரிடம் கேட்கிறோம்

22. நாங்கள் வெளியே எங்காவது சென்றாலும், வீட்டில் நாங்கள் கடைப்பிடிப்பவைகளை கடைப்பிடிக்கிறோம்.

23. எப்பொழுதாவது ஏதோ ஒரு காரணத்தால், மேலே கூறியுள்ள வீட்டு விதிகளை மீறினாலோ அல்லது மறந்தாலோ, ஆண்டவருடைய கட்டுப்பாட்டையும், கட்டளையையும் ஏற்றுக் கொள்வோம்.

இந்த "உலகத்திலே சுடர்களைப்போலப் பிரகாசிக்கிற நீங்கள், கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்ற மற்றவர்களும், கபடற்றவர்களும் தேவனுடைய மாசற்ற பிள்ளை களாயும்" (பிலி.2:14–15) இருக்கும்படியாக வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளுங்கள்" (எபே.5:8).

இறைவன் விரும்பும் நல்லறமாகிய இனிய இல்லறத்தை இறைவார்த்தையை அடிப்படையாகக்கொண்டு, இவ்வையத்துள் வாழ்வாங்கு வாழ்வீர்களாக.

'உங்கள் இல்லறம் நல்லறமாகத் திகழட்டும்' என்று எல்லாம் வல்ல நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்துகிறேன்.

"ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரோடி
மூங்கில்போல் சுற்றம் முறியாமல் வாழியவே!"

வெற்றியான இல்லற வாழ்க்கைக்கு
30 ஆலோசனைகள்

1. இல்லத்தில் கர்த்தரைப் பிரதான இடத்தில் வைத்திருங்கள் (Place God first in your family).
2. தனியாகவும் ஜெபியுங்கள், குடும்பமாகச் சேர்ந்தும் ஜெபியுங்கள் (Pray individually and pray together, as a family)
3. தினமும் திருமறையைப் படியுங்கள், முடிந்தபொழுதெல்லாம் குடும்பமாகச் சேர்ந்து படியுங்கள் (Read the Bible daily, whenever it is convenient read together)
4. ஆலயத்திற்குக் குடும்பமாகச் சேர்ந்து செல்லுங்கள் – குழந்தைகளுக்கு ஜெபிக்கக் கற்றுக்கொடுங்கள் (Go to Church together as family and teach the children to pray).
5. இணைந்து வளர, ஒருவரையொருவர் ஊக்கப்படுத்துங்கள் (Encourage each other to grow together).
6. துன்பத்தில் ஒருவருக்கொருவர் ஆறுதலாகவும் – தேறுத லாகவும் இருங்கள் (Comfort and console each other in sufferings).
7. கேட்பதற்குச் சீக்கிரமாகவும், பேசுவதற்குத் தாமதமாகவும் இருங்கள் (Be quick to hear and slow to speak).
8. திருமணத்தன்று அளித்த வாக்குறுதிகளைக் காப்பாற்றுங்கள் – மதியுங்கள் (Protect and honor the marriage vows, in the presence of God).
9. உங்களுடைய வாழ்க்கைத் துணைக்காகவும், இருவரும் இணைந்து வாழும் வாழ்க்கைக்காகவும் கர்த்தரிடம் தினமும் நன்றி செலுத்துங்கள் (Thank God everyday for your mate and the life you have together).
10. உங்களுடைய மணவாழ்க்கையில் உங்களிடையே மற்றவர்கள் புக அனுமதிக்காதீர்கள் (Do not let others come between to harm your marriage).
11. உங்களுடைய வாழ்க்கைத் துணையை அனுதினமும் நேசியுங்கள் (Show your love to your mate everyday).

12. ஒருவரையொருவர் மதியுங்கள் – போற்றுங்கள் (Respect and honor each member of the family).
13. குழந்தைகளைக் கர்த்தர் அளித்த அரிய வெகுமதியாகக் கருதுங்கள் (Consider the children as the matchless gifts of God).
14. குழந்தைகளைப் பொறுப்புள்ள பெற்றோர்களாக வளருங்கள் (Bring them up as responsible parents).
15. குடும்பத்தில் யார் ஈட்டினாலும், அதைக் குடும்பத்தினர்கள் அனைவருக்கும் பொதுவானதாகக் கருதுங்கள் (The income eaned by the family-members belongs to the entire family).
16. எவ்வளவு வேலைப் பளு இருந்தாலும், உங்கள் குடும்பத்துடன் சேர்ந்திருப்பதற்காக நேரத்தை ஒதுக்குங்கள் (Dispite the busy work schedule, find time to send time with your children).
17. வருமானத்திற்குள் திட்டமிட்டுச் செலவிடுங்கள் (Expend within your income).
18. கடன் வாங்குவதைத் தவிருங்கள்; வேறு வழியின்றி வாங்க நேரிட்டால், அதைச் சீக்கிரம் கட்டிமுடித்து மீள முயலுங்கள் (Avoid debts; if obtained, pay and escape at the earliest).
19. யாருக்கும் ஜாமீன் கையெழுத்து போடாதீர்கள். போடும் பொழுது ஒரு சிறிய கையெழுத்துதான். ஆனால் அது உங்களுடைய வாழ்க்கையின் அஸ்திபாரத்தையே நிலை குலையச்செய்யும் அபாயம் நிறைந்தது (Don't sign any surety documents; it is a simple sign, but lies within a mighty dinemite that will blast your very foundation).
20. வீடு இனிமையான இடமாக இருக்க எல்லா அங்கத் தினர்களும் பொறுப்புடன் நடந்துகொள்ளுங்கள் (Let all the members of the family be responsible to make the home a happy place to live).
21. உறவுகளை மதியுங்கள் – அவைகள் கர்த்தர் கொடுத் தவைகள் (Regard relatives, for they are God-given).
22. எவரிடமும் நிறைவை எதிர்பார்க்காதீர்கள் – எல்லோருமே குறைவுள்ளவர்கள்தான் (Don't expect perfection from anybody, for all are imperfect).
23. அதிகம் எதிர்பாருங்கள், ஆனால் உள்ளதில் திருப்தியடை யுங்கள் (Expect more,but be contented with what you have).
24. அவ்வப்போது குடும்பத்தினருடன் ஒன்றாக உல்லாசப் பயணம் செல்லலாம் (Once in a way, take the family for vocational tour).

25. பிள்ளைகளின் வீட்டுப்பாடங்களில் உதவுங்கள்; பள்ளியில் நடந்த சுவாரசியமான விவரங்களைக் கேட்டு அவர்களுடன் மகிழுங்கள் (Help the children in their home-work; Ask your children each day what they did at school).

26. கோபங்களை மனதில் தேக்கி வைக்காதீர்கள்; ; கண்டியுங்கள் – அவசியமானால் தண்டியுங்கள் – கூடுமானால் அறிவுரை கூறுங்கள் – முடிந்தவரை மன்னியுங்கள் (Let not the anger preoccupied in your heart too long; reprove – punish – advice or forgive).

27. முடிந்தவரை சம்பாதியுங்கள் – முடிந்தவரை சேமியுங்கள் – முடிந்தவரை கொடுங்கள் (Earn all you can – save all you can – give all you can).

28. என்னுடைய வாழ்க்கைத் துணை சரியான நபரா என்று ஆராய்வதைவிட, நான் சரியான வாழ்க்கைத் துணையாக இருக்கிறேனா என்று உங்களை நீங்களே ஆராயுங்கள் (Being the right spouse is more important than searching for a right spouse).

29. குழந்தைகளை கண்டியுங்கள் – தண்டியுங்கள்; உங்கள் கோபத்திற்கு வடிகாலாக அல்ல – குழந்தை திருந்துவதற்காக. (Reprove or punish your child – not for ventilating your anger, but to discipline your child).

30. குழந்தைகளை இம்மைக்கு மட்டுமல்ல, மறுமைக்கும் ஆயத்தப் படுத்துவது பெற்றோர்களுடைய கடமை. பிள்ளைகளின் ஆவிக்குரிய ஜீவியத்தில் அக்கறை காட்டுங்கள்; நித்தியத் திற்கு அவர்களை வழிநடத்துங்கள் (Prepare your children for this life and the life beyond this earthly life; take cae of their Spiritual well being; lead them Life Eternal).

இயேசு தங்கும் இல்லம்
இன்பம் பொங்கும் இல்லம்

இந்நூலைப் பற்றி:

இந்தப் புத்தகத்திலுள்ள பெரும்பாலான ஆலோசனையுரைகள், 'கன்மலை' இதழில், "குடும்ப நலம்" என்ற தலைப்பில், ஏழு ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து வெளியானவைகள்.

'கன்மலை' இதழ் வாசகர்களின் கருத்துக்கள் சில:

"பொறுப்பான பெற்றோர்கள் எவ்வாறு இருக்கவேண்டும் என்றும், குழந்தைகள் உங்கள் கரங்களில் இறைவன் ஈந்துள்ள களிமண் போன்றவர்கள் என்றும், குயவனைப்போல் பிள்ளைகளை உருவாக்கவேண்டிய பொறுப்பு பெற்றோருக்கு உண்டு என்ற திருமறையின் மையப்பொருளை சிறப்பாக அமைத்திருந்தது பாராட்டத்தக்கது."

-**பி. யோசேப்பு**, கன்னங்குளம். (நவம்பர்-டிசம்பர் 2003).

"டாக்டர் டிபி. சாமுவேல் ஸ்டூவர்ட் அவர்கள் எழுதிவரும் "குடும்ப நலம்" ஆய்வுக் கட்டுரைகள் நல்வாழ்வுக்கு வழிகாட்டும் ஒளிக்கதிர்கள்! பாராட்டுக்குரியவைகள், கடந்த இதழில் இடம்பெற்றிருக்கும் வரவு-செலவு ஆய்வுக்கருத்துக்கள் மிக அருமையானவைகள். இக்காலத்திற்கு மிகவும் தேவையானவை. அவ்வழிகளைக் கடைப்பிடித்தால் வாழ்க்கை சிறந்துயரும் என்பதில் ஐயமில்லை. கட்டுரையாளரின் கருத்துக்கள் பிளஸ் 2 மற்றும் கல்லூரிப் பாடப்புத்தகங்களில் இடம்பெற்றிடத் தகுதியானவை - தேவையானவை."

-**சரணாலயம் வேதமணி**, ஓய்வுபெற்ற தலைமையாசிரியர், பூதப்பாண்டி (மார்ச்-ஏப்ரல் 2005).

"மே-ஜூன் 2006 இதழில், "குடும்பத் தலைவர்களுக்கு ஆலோசனைப் பகுதி" மிகவும் அருமையாக இருந்தது. குறிப்பாக மனைவியிடம் 'அன்பு செலுத்தப் பத்து வழிகள்' எனக்குப் பிரயோஜனமாக இருந்தது— அந்தக் கட்டுரை என்னை மாற்றி, என் மனைவியை நேசிக்கக் கற்றுக்கொடுத்தது."

-**வி.பி. பர்னபாஸ்**, ஜவ்வாது ஹில்ஸ், (செப்டம்பர்-அக்டோபர் 2006).

டாக்டர் *T.P.* சாமுவேல் ஸ்டூவர்ட் அவர்கள் கிறிஸ்தவ இலக்கிய உலகிற்கு ஏற்கனவே அறிமுகமானவர். இவர் பாரத ஸ்டேட் வங்கியில் 35 ஆண்டுகளுக்கும் மேலாக அதிகாரியாகப் பணியாற்றி, விருப்பு ஓய்வு பெற்றவர். மதுரை தமிழ்நாடு இறையியல் கல்லூரியின் வழியாக, சிராம்பூர் பல்கலை கழகத்தில் ***B.D. (Bachelor of Divinity)*** பட்டம் பெற்றவர். ***Indian Theological Institute, Chennai*** -யில் ***D.Min. (Doctor of Ministry)*** பட்டம் பெற்றவர். கடந்த ஏழு ஆண்டுகளுக்கும் மேலாக தூத்துக்குடியிலுள்ள ஆங்கில ***(Holy Trinity Church)*** ஆலயத்தில் இறைப்பணியாற்றுகிறார்.

ஆசிரியரின் பிற நூல்கள்:

1. **கிறிஸ்துவை ஏற்றவர்களும், இழந்தவர்களும்** - "WORD OF CHRIST" வெளியீடு.
2. **இறைமைந்தன் இயேசுவின் ஏழு இணையற்ற வார்த்தைகள்** - "WORD OF CHRIST" வெளியீடு.

Published by:
'Bible Faith Ministry,' 24G, Nandagopalapuram West, Tuticorin - 628002.
Phone : 0461-2329865; E-mail : tpsstuart@gmail.com